வங்கியச் சட்டமும் நடைமுறையும்

(Banking Law and Practice)

ஆசிரியர்
கு. ஆளுடையபிள்ளை

...ட்டுப் பாடநூல் நிறுவனம்

13508

த.பா.நி. (க.வெ.) வரிசை எண்—280

வங்கியச் சட்டமும் நடைமுறையும்

(Banking Law and Practice)

ஆசிரியர்
கு. ஆளுடையபிள்ளை,
பி.காம்.(ஹானர்ஸ்), எம்.காம்., பி.எல்.,
முதல்வர்,
கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி,
சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition — December, 1971

T.N.T.B.S. (C.P.) No. 280

© TAMIL NADU TEXT BOOK SOCIETY

MADRAS UNIVERSITY P. G. CENTRE COIMBATORE

BANKING LAW AND PRACTICE

K. ALUDIAPILLAI

13508

Net Price Rs. 4-75

(No discount)

VERIFIED 2002

'Published by The Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University Level, of Government of India in the Ministry of Education and Social Welfare.'

Bharathiar University Library
13508
K ALUDIAPPLLAI

Printed by

M/s. INIYAN PRINTERS,
9. Rundals Road,
MADRAS-7.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதின்மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் விஞ்ஞானப் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், கணிதம், பௌதிகம், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'வங்கியச் சட்டமும் நடைமுறையும்' என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 280 ஆவது வெளியீடாகும். இதுவரை 315 நூல்கள் வெளிவந்துள்ளன.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

இரா. நெடுஞ்செழியன்

முன்னுரை

பொருளாதார முன்னேற்றமடைந்து வரும் நாடுகளிடையே நம் தாயகம் முன்னணியில் இருந்து வருகிறது. உறுதியான, சீரான வங்கிய அமைப்பு பொருளாதார முன்னேற்றத்திற்கு இன்றியமையா அடித்தளமாகும். ஒவ்வொரு மனிதனும் ஒரு வங்கியில் கணக்கு வைத்திருக்கும் நிலையை இந்தியா அடைய வேண்டும். நூற்றுக்கு முப்பதின்மரே எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாகவுள்ள இன்றைய நிலையில் அவரவர் தாய்மொழிவழி வங்கியைப் பற்றியும், அங்கு நடக்கும் நடவடிக்கைகளைப் பற்றியும் அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுமானல் வங்கிப் பழக்கம் இன்னும் சற்றுப் பரவக்கூடும். இலட்சாதிபதிகளுக்கும் கோடீசுவரர்களுக்கும்தான் வங்கியில் வேலையுண்டு, மற்றச் சிறிய பேர்வழிகளும் பாமரரும் அங்குச் சாதித்துக்கொள்ளக்கூடியது ஏதும் இல்லை என்ற நிலைமை மாறி, இன்று பாமரர் முதல் பாரெங்கும் தொழில் தொடர்புள்ள வணிகர் வரை எல்லோரும் வங்கியால் பயனடையலாம் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. முதன் முறையாகத் தமிழில் வங்கியச் சட்டம், நடைமுறை பற்றி இந் நூல் எழுதப்பட்டுள்ளது. தமிழகச் சட்டத் துறை வெளியிட்டுள்ள சட்டச் சொல் அகராதியில் காணப்படும் கலைச்சொற்களே கையாளப்பட்டுள்ளன. வங்கியில் அன்றாடம் நடைபெறும் நடவடிக்கைகள் அனைத்தும் தக்க தலைப்புகளில் விளக்கப்பட்டுள்ளன. இந் நூலை எழுதும் வாய்ப்பினை அளித்த தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்தினருக்கு என் நன்றி உரித்தாகும்.

கு. ஆளுடைய பிள்ளை

பொருளடக்கம்

பக்கம்

1. வங்கியர் ... 1

வங்கியின் இலக்கணம் — வங்கித் தொழிலின் தனிச்சிறப்பு — வட்டிக்கடைக்காரர் வங்கியராவாரா? — வங்கித் தொழிலுடன் பிற தொழில்களை மேற்கொள்ளலாமா? — வங்கி மேற்கொள்ளக் கூடிய, மேற்கொள்ளக் கூடாத பணிகள் — வங்கி வகைகள் — இந்தியப் பங்கமைப்பு வங்கிகள் — நாட்டு வங்கிகள் — கூட்டுறவு வங்கிகள் — கூட்டுறவு நிலவள வங்கிகள் — நாணயமாற்று வங்கிகள் — தொழில் வளர்ச்சி வங்கிகள் — மைய வங்கி — பன்னாட்டுப் புனரமைப்பு, வளர்ச்சி வங்கி — வணிக வங்கிகளின் முக்கியப் பணிகள் — வைப்புத் தொகை ஏற்றுக் கொள்ளல் — கடன் கொடுத்தல் — பணத்தை இடமாற்றம் செய்தல் — காசோலைகளை வெளியிடல் — பிற சில்லறைப் பணிகள்.

2. வங்கியரும் சட்டமும் ... 18

வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம்; முக்கியப் பிரிவுகள் — வங்கி நிருவாகரின் தகுதிகள் — குறைந்த அளவு இருக்க வேண்டிய செலுத்திய முதல், காப்பு (நிதி) — முதல் வெளியீட்டு ஒழுங்குமுறையும், பங்குதாரர்களின் ஓட்டுரிமையும் — செலுத்தப்படா முதல்மீது பற்றுப் பொறுப்பு ஏற்படுத்தலாகாது — பிணைந்த இயக்குநர் ஒழிப்புமுறை — காப்பு நிதி — காப்பு ரொக்கம் — வங்கிக் கம்பெனிக்குத் துணைக் கம்பெனி — கடனளிப்பதன் மீதான கட்டுப்பாடுகள் — வங்கிக் கம்பெனிகளுக்கு உரிமம் அளிப்பது — புதுக்கிளை திறக்க, தொழிலிடத்தை மாற்றக் கட்டுப்பாடுகள் — மாற்றியல் சொத்துகள் — கணக்குகள், இருப்புநிலைக் குறிப்பு —

பக்கம்

தணிக்கை இரகசிய ஆவணங்களைக் காட்டுதல் — ஆய்வு — ரிசர்வு வங்கியின் பிற அதிகாரங்கள் — தலைமை நிருவாக அதிகாரிகளை நீக்கும் அதிகாரம்—வங்கி அலுவலகத்தில் செய்யக்கூடாதன— வங்கிக் கம்பெனிகளை ஏற்று நடத்துவதற்கான சூழ்நிலை — வங்கிக் கம்பெனிகள் தொழிலைத் தற்காலிகமாக நிறுத்திவைத்தலும் கலைத்தலும் — வங்கிக் கலைப்பு — காரணங்கள் — கடன்களைச் செலுத்த இயலாநிலை — கலைப்புப் பற்றிய ஏற்பாடுகள் — இணைப்பு — கடன் ஒத்திவைப்பு — கூட்டுறவுச் சங்கங்களும் வங்கிய ஒழுங்காற்றுச் சட்டமும்.

கூட்டுறவு வங்கிகள் ஆய்வு — வங்கிகளும் ரிசர்வு வங்கிச் சட்டமும் — ரிசர்வு வங்கி அளிக்கும் கடன் வசதிகள் — ரிசர்வு வங்கியிடம் ரொக்கக் காப்பு வைத்திருத்தல்.

3. வங்கியரும் வாடிக்கையரும் ... 56

வாடிக்கையரின் இலக்கணம் ; காலக் கோட்பாடு — இந்நாளைய கருத்து — வங்கியர் வாடிக்கையரிடையே நிலவும் உறவு — கடனாளர் கடனாளி உறவு — பொறுப்புரிமையர் ஆகும் நிலை — வாடிக்கையரின் முகவர்.

வங்கியரின் சட்டப்பிணைப்புகள்—காசோலைகளை மதிக்கும் சட்டப் பிணைப்பு — தவறான அவமதிப்பினால் உண்டாகும் விளைவுகள் — இழப்பீட்டுத் தொகை மதிப்பிடல்.

வாடிக்கையர் கணக்கை இரகசியமாக வைத்திருத்தல் — இரகசியம் கடைப்பிடிக்க இயலா நிலை – வங்கியர் ஏடுகள் சான்றுச் சட்டம்– வங்கியரின் பற்றுரிமைகள் : பொதுப்பற்றுரிமை, தனிப்பற்றுரிமை — பற்றுரிமை செலுத்தும் நிலை — பற்றுரிமை செலுத்த இயலா நிலை — வங்கியரின் ஈடுசெய் உரிமை — வட்டி விதிக்கும் உரிமை — கால வரையறைச் சட்டம்.

பக்கம்

4. வாடிக்கையரின் கணக்கு வகைகள் ... 77

வைப்பு வகைகள் — தவணை வைப்பு — தவணை முதிர்வடைந்த வைப்பின்மீது வட்டி — தவணை வைப்பு இரசீது ஒரு மாற்றுமுறை ஆவணமாகுமா? — இறக்கும் தறுவாய் நன்கொடை — சேமிப்பு வைப்பு — நடப்பு வைப்பு — நடப்புக் கணக்கினால் ஏற்படும் முக்கிய நன்மை, வசதிகள் — புதிய கணக்கு துவங்குதல் — அறிமுகம் பெறுவதன் இன்றியமையாமை — செல்லுப் புத்தகம் — செல்லுப் புத்தகத்திலுள்ள பதிவுகளின் சட்ட முறை நிலை — வாடிக்கையருக்குச் சாதகமான பதிவுகள் — வங்கியருக்குச் சாதகமான பதிவுகள்.

தொடரும் வைப்பு — அழைப்பு வைப்பு — பருவகால வைப்புக் கணக்கை முடிவு செய்தல்— காரணங்கள் — பற்றுகைப் பொருள் வைத்திருப்பவர் ஆணை — பற்றுகைச் குரிய வைப்புகள் — வைப்புடன் பிணைக்கப்பட்ட ஆயுள் காப்பீடு திட்டம் — வைப்புக் காப்பீடு கூட்டுரு.

5. வாடிக்கையர் வகைகள் ... 97

இளவர் — இளவரும் வங்கியரும் — பித்த நிலையர் — திருமணமான பெண்டிர் — குடி மயக்கத்திலுள்ளவர் — எழுத்தறிவற்றவர் — முகவர் — செயலுரிமை ஆணையும் பகர உரிமைப் பத்திரமும் — பொறுப்புரிமையர் — நிறைவேற்றுளர், நிர்வாகி—கூட்டுக் கணக்கு— எஞ்சுநர் உரிமை — கலைப்பாளர் — இந்துக் கூட்டுக் குடும்பம்.

கூட்டு நிறுவனம் — கணக்கு நடத்துமுறை — கடன் பெறும் அதிகாரம் — கூட்டாளியின் இறப்பு — கிளேடன் வழக்கு விதி (செலுத்துகையை ஒதுக்கீடு செய்யும் கோட்பாடு) — கூட்டாளி விலகுதல் — கூட்டாளியின் நொடிப்பு.

கூட்டுப் பங்குக் கம்பெனி — கம்பெனியும் கடன் வாங்கும் அதிகாரமும் — அடைமானம்,

பக்கம்

பற்றுப் பொறுப்பு பதிவு செய்தல் — தனிக் கம்பெனிகளுக்குக் கடனளிப்பதில் எச்சரிக்கை — பள்ளி, கல்லூரி, மன்றம், சங்கம், அறநிலையம் போன்ற வாடிக்கையர்.

6. காசோலை ... 121

காசோலையின் நன்மைகள் — காசோலைப் பழக்கம் வளராக் காரணம் — காசோலையின் இலக்கணம் — மாற்றுமுறை ஆவணத்தின் இலக்கணம் –காசோலையின் தன்மை – காசோலைகளை தேதியிடுதல் — காசோலை சட்டமுறைப் பணமாகுமா ? — உடையவர் — முறைப்படி உடையவர் — மேலெழுத்து — மேலெழுதலின் விளைவு — மேலெழுத்தின் வகைகள்.

காசோலைகளைக் கீறலிடல் — கீறல் வகைகள் — பொதுக்கீறல் — சிறப்புக் கீறல் — காசோலையை எவர் கீறலாம்? — சான்றளித்தல் அல்லது குறித்தல் — காணுமற் போன காசோலை.

7. காசோலை செலுத்தல் - வசூலித்தல் ... 143

வங்கியரின் இருதலைக் கொள்ளி எறும்பு நிலை — செலுத்து வங்கியர் கவனிக்க வேண்டியன — கீறிய காசோலையா ? — எழுதப்பெற்ற வங்கியர் யார் ? — சிதைந்த காசோலை — இலக்கணப்படி அமைதல் — நாட்பட்ட காசோலை — பின் தேதியிட்ட காசோலை — தேதியிடாக் காசோலை — தொகை குறித்தல்— கருநிலைத் திருத்தம் — கருநிலைத் திருத்த விளைவு — முறைப்படி செலுத்தம்.

பொய்யாவணம் புனைதலும், செலுத்தும் வங்கியரும் —மேலெழுத்தில் கவனிக்க வேண்டியது — ஒருமுறை கொணர்பவர் என்றுமே கொணர்பவர் — மேலெழுதும் முறை — அதிகாரப்படி செய்யப்படும் மேலெழுத்து—மேலெழுத்துக்கு எடுத்துக்காட்டு.

பக்கம்

செலுத்து வங்கியருக்குச் சட்டமளிக்கும் பாதுகாப்பு.

வங்கிப் பணவிடை செலுத்தம் — பணஞ் செலுத்த மறுத்தல் — தவருகச் செலுத்திய பணத்தைத் திருப்பிப் பெறல் — மறுக்கப்பட்ட காரணம் குறித்தல்.

வசூலிக்கும் வங்கியர் — முகவர் என்ற நிலை —மதிப்புக்காக உடையவர் — வங்கியருக்குச் சட்டமளிக்கும் பாதுகாப்பு — பாதுகாப்புப் பெற நிபந்தனைகள் — கவனமின்மை என்ருல் என்ன? — வசூலிக்கும் வங்கியரின் கடமை — மாற்றுச் சீட்டுகளை வசூலித்தல்.

8. வங்கியின் இருப்புநிலைக் குறிப்பு ... 173

முதல் - பொறுப்புகள் — வங்கியரும் ரொக்க நிலையும் — ரொக்க நிலை - ஆதாயத் தன்மை.

சொத்துகள் — ரொக்க இருப்பு — ரொக்க இருப்பை நிர்ணயிக்கும் காரணிகள் —அழைப்புக்கடனும் குறுந்தவணைக் கடனும் — முதலீடுகள் — பிணையங்களைத் தேர்ந்தெடுத்தல் — அரசினர் பிணையங்கள் — கருவூல மாற்றுச் சீட்டுகள்.

கடன்கள்—வங்கியர் தருவது குறுகிய காலக் கடனே — கடன் நோக்கம் — பிணையம் — கடனைப் பரவலாகக் கொடுத்தல் — மாற்றுச் சீட்டைத் தள்ளுபடி செய்தல்.

9. கடன் வகைகள் ... 190

பிணைக்கடன், பிணையிலலாக் கடன் — ரொக்கக் கடன் — மேல்வரைப்பற்று —தவணைக் கடன் — சேர்ந்தளி கடன் — வாடகைக் கொள் முறைக் கடன் — நுகர்வோர் கடன்.

10. கடன்பெறு தகுதி நிருணயம் ... 196

ஒழுக்கம் — நாணயம் — திறன் — முதல்— தகைமை அறிக்கைத் தயாரிப்பு — சொத்து — பொறுப்புகள் நிலையைப் பரிசீலனை செய்தல்.

பக்கம்

11. உத்தரவாதத்தின்மீது கடன் ... 201

உத்தரவாதத்தின் இலக்கணம் — ஈட்டுறுதி ஒப்பந்தம் — உத்தரவாதம் முழுநம்பிக்கை ஒப்பந்தமா? வங்கியர் கடைப்பிடிக்க வேண்டிய எச்சரிக்கை — பிணையாளின் உரிமைகள் — பிணையாள் பொறுப்பு நீக்கம் — உத்தரவாதப் பொறுப்பினை நிருணயிக்கும் நிகழ்ச்சிகள்—வங்கியருக்குள்ள சட்டப்பிணைப்புகள்.

12. மாற்றுச் சீட்டு நடவடிக்கைகள் ... 210

மாற்றுச் சீட்டின் தனிச் சிறப்பு — மாற்றுச் சீட்டுப் புழக்கம் வளராமைக்குக் காரணம்— மாற்றுச் சீட்டின் வகைகள் — மாற்றுச் சீட்டுச் சந்தைத் திட்டம்

13. துணைப் பிணையங்கள்மீதான கடன் ... 214

பலவகைப் பிணைகள் — பற்றுரிமை—அடகு — பொறுப்புரிமை ரசீது — அடகு வைக்க அருகதை உள்ளோர் — பிணைகளை மீட்டல்— இடைவெளி — பங்குமாற்றுப் பிணையங்கள் — வங்கியர் மேற்கொள்ளும் எச்சரிக்கை — வங்கியரின் தகைமை முறை உரிமைமூலம் — தனிக் கம்பெனி பங்குகள் நல்ல பிணைகளா?

14. சரக்குமீதான கடன் ... 224

கருத்தில் கொள்ளுதற்கான செய்திகள் — இப்பிணையின் நன்மை, குறைபாடுகள் — சரக்குரிமை ஆவணங்கள் — கப்பல் ரசீது — துறைமுகச் சீட்டு — பண்டகர் சான்றுறுதி — உடைமை ஒப்படைப்பு உத்தரவு — ரயில்வே ரசீது — வங்கியர் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு விதிகள்.

15. பிற பிணைகள்மீது கடன்தருதல் ... 235

நிலையியல் சொத்துகள்மீது கடன் —அடைமானம் — ஈட்டடைமானம் — விற்பனை அடைமானம் — ஒத்தி — இங்கிலீஷ் அடைமானம் — பத்திரவைப்பு அடைமானம்.

பக்கம்

ஆயுள் காப்பீட்டுப் பாலிசிமீது கடன் கொடுத்தல் — மேற்கொள்ள வேண்டிய எச்சரிக்கை — தவணைவைப்பு ரசீதுமீது கடன் — ஏட்டுக் கடன்கள்மீது கடனளித்தல்.

16. முந்துமைத் துறைகளுக்கு நிதியுதவி ... 246

சிறு தொழில்களுக்குக் கடன் வசதி — குறுகிய காலக் கடன்—மத்திய காலக் கடன்— ஏற்றுமதிக் கடன்–கடன் உத்தரவாதத் திட்டம் —திட்டச் செயல்முறை—வேளாண்மைக் கடன் — விவசாயத் தேவைகள் — பயிர்க்கடன் — குறுகிய காலக் கடன் — மத்தியகாலக் கடன் — மறைமுகக் கடன் வசதிகள் — விவசாய நிதிக் கூட்டுரு — விவசாய மறுநிதிக் கூட்டுரு — மறு நிதி பெறும் முறை.

17. வங்கியரின் பிற பணிகள் ... 255

பொதுப்பயன் பணிகள் — அனுப்புகை வசதிகள் — கேட்புப் பணவிடை — அஞ்சல் மாற்றம் — தந்தி வழி மாற்றம் — பயணக் காசோலை வெளியிடுதல் — நாணய அட்டை — பாதுகாப்பு வைப்பு — வங்கியரின் கடமைகள் — பாதுகாப்புப் பெட்டகம்.

வாணிக உறுதிக் கடிதம் — இக் கடிதத்தின் பயன் — ஆவணஞ் சேர்ந்த வாணிக உறுதிக் கடிதம் — வெற்று வாணிக உறுதிக் கடிதம் — சுழல் கடன் வசதி — வாடிக்கையர் நிதிநிலை பற்றிய மதிப்பீடு— வரிச் செலுத்தம் பற்றி அறிவுரை — அயல்நாட்டுச் செலாவணி நடவடிக்கைகள் — ஒப்புறுதிப் பணி.

முகவர் பணிகள் — பிணையங்கள் வாங்கல், விற்றல் — பொறுப்புரிமையர், நிறைவேற்றுளர் பணிகளை மேற்கொள்ளல் — நிருவாக உரிமைப் பத்திரம் — வக்காலத்தார் பணி.

18. வங்கிகளை நாட்டுடைமையாக்கல் ... 272

வங்கிகள் மீது சமுதாயக் கட்டுப்பாடு — நாட்டுடைமைத் திட்டம் — திட்டத்தைச்

பக்கம்

செயல்படுத்திய முறை — நாட்டுடைமைக்குப் பின் வங்கிகளின் வளர்ச்சி.

நாட்டுடைமையாக்கிய சட்டத்தின் முக்கியப் பிரிவுகள்.

பின் இணைப்பு I

இந் நூல் எழுதத் துணையாகவிருந்த பிற நூல்கள் ... 280

பின் இணைப்பு II

கலைச் சொற்கள் ... 281

1, வங்கியர்

(Banker)

வங்கியியல் (Banking) ஒரு கருத்தைக் கவரும் பாடமாகும். இதைப் பற்றி அறிந்துகொள்ளப் பலரும் விரும்புவது இயற்கையே. பணப் புழக்கமும், வியாபார வளர்ச்சியும் பேரளவில் பெருகி வரும் தற்காலத்தில் வங்கிகள் இல்லாத இடத்தைக் காண்பதரிது. புதியதோர் பழமொழியை நாம் புனைந்தால் அது 'வங்கியில்லா ஊரில் குடியிருக்க வேண்டா' என அமையக் கூடும். அந்த அளவுக்குச் சிறிய பெரிய ஊர்களிலும், நகர மாநகரங்களிலும் எங்கும் நாம் இன்று காணக்கிடப்பன வங்கிகளே. இந்த அளவு வளர்ச்சி கண்டுள்ள வங்கியத் துறையைப் பற்றி அறிந்து கொள்ளு முன் வங்கி என்பது எதனைக் குறிக்கிறது; அதன் இலக்கணம் யாது என்று உசாவ வேண்டியுள்ளோம்.

வங்கி, வங்கியியல், வங்கியர், வங்கிமுறை என்ற பல சொற்களும் வங்கி என்ற அடிப்படைச் சொல்லின் மாற்றுருவங்களே. இவற்றில் எந்த ஒரு சொல்லுக்கு இலக்கணம் வகுத்தாலும் அது வங்கிக்கு உண்டான சிறப்பியல்புகளைக் காட்டுவதாக அமையும். வங்கிக்கு இலக்கணம் வகுக்கப் பலப்பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும், இன்றுவரை எல்லோரும் ஒப்புக்கொள்ளும்படியானதொரு கூற்றுத் தென்படவில்லை என்றே கூறவேண்டும். இந்திய வங்கிமுறை பெரும்பாலும் ஆங்கிலேய முறையைப் பின்பற்றியே அமைந்துள்ளது. எனவே முதலில் ஆங்கில நாட்டில் வங்கியின் இலக்கணம் வகுக்கப்பட்டுள்ள வழியினைக் காண்போம். அங்குச் சட்டமுறையாக வங்கி என்ற சொல்லுக்கு இலக்கணம் அமையவில்லை. சட்டமுறையான இலக்கணம் இல்லாத நிலையில், வேறு இடங்களில் வங்கியைப்பற்றிக் குறிப்புக் காணப்படுகிறதா என்று ஆராய்வோம். இங்கிலாந்து நாட்டு வங்கிச் சட்ட

வல்லுநர் சிலர் தமது நூல்களில் வங்கியின் இலக்கணம் பற்றிப் பேசியுள்ளனர். அவர்களில் முதன்மையான பேராசிரியர் ஹார்ட் (Hart) என்பார் வங்கியியல் சட்டம் (Law of Banking) என்னும் தமது நூலில் ''எவரொருவர் பிற நபர்களிடமிருந்தும் அவர்கள் சார்பாகவும் நடப்புக் கணக்கில் பணம் பெற்றுக்கொண்டு, அவர்கள் தம்மீது விடுக்கும் காசோலைகளை மதிப்பதைத் தம் இயல் பான தொழிலாகக் கொண்டுள்ளாரோ அவரே வங்கியர் ஆவார்'' எனக் குறிப்பிட்டுள்ளார். ஆகவே, இக் கூற்றின்படி, வங்கியரின் முக்கியமான இருபணிகள் வைப்புத் தொகையை நடப்புக் கணக் கில் பெற்றுக் கொள்ளுவதும், அக்கணக்கின் பேரில் காசோலை விடுக்கப்பெற்ருல் அதை மாற்றித் தருவதும் என்பது புலனுகிறது. மேலும் பல நீதிமன்றத் தீர்ப்புரைகளில், வங்கி என்ற சொல்லின் பொருள் காணப்போந்த பொழுது, நடப்புக் கணக்கில் பெற்றுக் கொண்ட தொகையைக் காசோலைகள் எழுதித் திரும்பப் பெற்றுக் கொள்ளும் வகையில் தொழில் புரியும் நிலையமே வங்கி என்று கூறப் பட்டுள்ளதைக் காண்கிருேம்.

சர் ஜான் பேஜட் (Sir John Paget) என்னும் பேரறிஞர் பல் வேறு தீர்ப்புரைகளையும் ஆய்ந்து, வங்கியர் என்பவர் யார் என்று விளக்கியுள்ளார். வைப்புத் தொகை பெற்றுக்கொள்ளல், நடப்புக் கணக்கு வைத்துக் கொள்ளல், காசோலைகளை வெளியிடல்-பண மாக மாற்றல், தம் வாடிக்கையருக்காகக் கீருத காசோலைகளையும் கீறிய காசோலைகளையும் வசூலித்தல் ஆகிய பணிகளைச் செய்யும் நபர், நிறுமம் (கம்பெனி) அல்லது அமைப்பினை வங்கியர் (Banker) எனலாம். இதுமட்டும் போதாது. தம்மை வங்கியர் என்று வெளியுலகிற்கு அறிவித்துக் கொள்ள வேண்டும்; அங்ஙனம் அறிவித்துக் கொள்ளுபவரைப் பொதுமக்கள் வங்கியர் என ஏற்றுக் கொள்ள வேண்டும். மற்றும் அவர்தம் பிழைப்பு வங்கித் தொழில்வழி அமைய வேண்டும். மேற்காணும் இலக் கணம் வங்கியரின் முக்கியப் பணிகளை எடுத்துரைப்பதாக அமைந் துள்ளது. எனினும், இந்நாளைய வங்கியர் புரியும் பணிகள் மிகப் பல. அவற்றைத் தொகுப்பின் எஞ்சும், விரிப்பின் நீண்டுபோகும். குறிப்பாக வங்கியர் புரியும் முகவர் பணிகளும், பொதுப்பயன் பணிகளும் எண்ணிலடங்கா.

வேறுபல நாடுகளில் வங்கி என்ற சொல்லுக்கு இலக்கணம் தரப்பட்டுள்ளதா என்று ஆராயும்பொழுது ஜப்பான், சுவிட்சர் லாந்து ஆகிய நாடுகளில் வங்கியைக் குறித்துப் பேசப்படுவதைக் காண்போம். ஜப்பானிய வங்கிச் சட்டத்தில், கடன் கொடுக்கல் வாங்கல் பற்றிய செயல்களில் ஈடுபடும் நிலையம் வங்கி என்று

கூறப்பட்டுள்ளது. பணத்தை வைப்புத் தொகையாகத் தம்மிடம் வைத்திருக்கக்கோரி பொதுமக்களுக்கு அழைப்பு விடுக்கும் நிலையத்தை சுவிட்சர்லாந்து நாட்டில் வங்கி எனப் பேசுகின்றனர்.

அமெரிக்க நாட்டில் கடன்கள் பற்றிய நடவடிக்கைகளை மேற் கொள்ளுவதை வங்கியத் தொழில் என்றும்; பணஞ் செலுத்த, வசூலிக்க, கடன்தர, மாற்றுச் சீட்டுகளைத் தள்ளுபடி செய்துதர ஏற்பாடுள்ள நபர், நிறுவனம் அல்லது கம்பெனி வங்கி என்றும் அறியப்படுகிறது. கடன்களில் புழங்குவது வங்கியத் தொழில் எனுங் கூற்றுத் தெளிவானதாக அமையவில்லை. இனி, இந்தியா விலுள்ள சட்டங்களில் வங்கியைப் பற்றிய இலக்கணம் அமைந் துள்ள முறையைக் காண்போம்.

வங்கி ஒழுங்காற்றுச்சட்டம் (Banking Regulation Act, 1949) வங்கிக் கம்பெனியின் இலக்கணத்தைத் தரும் வகையான், வங்கி முறையின் இலக்கணத்தையும் வகுத்துத் தந்துளது. இந்தியாவில் வங்கித் தொழில் புரியும் கம்பெனி வங்கிக் கம்பெனி என்றறியப் படும். கேட்டவுடனே, அல்லது வேறெந்தக் காலத்திலோ திருப்பிச்செலுத்தும் நிபந்தனையுடன் பொதுமக்களின் வைப்புகளை ஏற்றுக் கொள்வதும், இந்த வைப்புகளைக் கடன் கொடுப்பது, முதலீடு செய்வது ஆகிய வினைகளில் ஈடுபடுத்துவதும், காசோலை, பணவிடை, ஆணை போன்றவை விடுத்தோ அல்லது பிறவகை களிலோ இந்த வைப்புகளை உரிய வாடிக்கையர் திரும்பப் பெறுமாறு செய்வதும் வங்கியத் தொழிலாகும். இத்தொழிலைச் செய்பவர் வங்கியர் எனப்படுவார். மேற்கண்ட பல இலக் கணங்கள் வங்கியின் இன்றியமையா அடிப்படைப் பணிகளை எடுத்துரைக்கின்றன. பொதுமக்களிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்வது; அப்பணத்தைத் தவணை வைப்பிலோ அல்லது நடப்பு வைப்பிலோ ஏற்றுக் கொள்ளுவது; செலுத்திய பணத்தைத் திருப்பிப் பெறக் காசோலை போன்ற ஆவணம் விடுக்க வேண்டுவது என்ற செய்திகள் வலியுறுத்தப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

வங்கித் தொழிலின் தனிச்சிறப்பு

'வங்கித் தொழில் என்பது என் மூளையும் உங்கள் பணமுமே யாகும்' என்ற பம்பாய் வங்கி விசாரணைக் குழுவின் விளக்கம் வங்கிகள் நம் பணத்தைக் கொண்டு தொழில் நடத்தி ஆதாயம் பெறுவதைச் சுட்டுகிறது. பொதுமக்களிடமிருந்து பெற்ற பணத்தை வங்கியர் என்ன செய்கிறார்? பத்திரமாக, பாது காப்பாக இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டிப் பூசனை செய்

கிறாரா? அன்று. ஏன்? இந்தப் பணத்தை வைத்துக் கொண்டு தானே அவர் தொழில் செய்ய வேண்டும். ஒரு மளிகை வியாபாரி மளிகைச் சரக்கு வாங்கி, தம்முடைய மேற் செலவுகள், பெற வேண்டிய இலாபம் எல்லாம் கணக்கிட்டு வாங்கிய விலையைக் காட்டிலும் சிறிது கூடுதலான விலைக்குச் சரக்கை விற்கின்றார். இதே போல வங்கியரும் பொதுமக்களிடமிருந்து நயமான வட்டிக்குப் பணம் பெற்று, அப் பணத்தைச் சற்று அதிகமான வட்டிக்குக் கடன் கொடுத்து இரு வட்டி விகிதங்களுக்கிடையே யுள்ள வேறுபாட்டைத் தம் வருமானமாகப் பெறுகிறார். மற்ற எல்லாத் தொழில்களிலும் பணம் முதலீடு செய்து சரக்கு வாங்கி விற்று இலாபம் ஈட்ட வேண்டும். ஆனால் வங்கித் தொழிலில் பணத்தை வாங்கி, பணத்தையே தற்காலிகமாக 'விற்று' அதனால் இலாபம் ஈட்ட வேண்டும். மற்றொரு தனிச் சிறப்பு—வாங்கிய பணத்தை வங்கியர் திருப்பித் தரும் பொறுப்புடையவர். இதே போன்று வங்கியரிடம் கடன் வாங்குபவரும் கடனைத் திருப்பித் தரும் பொறுப்புள்ளவர். வேறு எந்தத் தொழிலிலும் வாங்கிய சரக்கை அல்லது விற்ற சரக்கைத் திருப்பித் தரவேண்டிய நிலையை நாம் காண்பதில்லை. இதுவே வங்கித் தொழிலின் தனிச் சிறப்பு.

வட்டிக் கடைக்காரர் வங்கியராவாரா? கடன் வேண்டும் மக்களுக்கு உற்றுழி உதவுவோராக விளங்குபவர் வட்டிக் கடைக் காரர் என்றால் அது மிகையாகாது. கடன் கொடுக்கலும் வாங் கலும் தொன்றுதொட்டு இருந்து வரும் பழக்கமாகும். இதைத் தொழில் என்ற அளவில் நடத்தி வருபவர் லேவாதேவிக்காரர் என்றும் வட்டிக் கடைக்காரர் என்றும் அறியப்படுவர். இவர் செய்யும் தொழிலுக்கும் தற்கால வங்கியர் செய்யும் தொழி லுக்கும் வேறுபாடு ஏதும் உண்டா என்று நோக்கு வோம். வட்டிக் கடைக்காரர் தம் தொழிலுக்கு வேண்டிய முதலைத் தாமே போடுகிறார். மேலுந் தேவைப்பட்டால் தம் உறவினர் நண்பரிடம் பணம் பெற்று அதைத் தொழிலில் முதலீடு செய்கிறார். ஆனால் தற்கால வங்கியரோ, தம் தொழிலுக்குப் பொதுமக்கள் வைப்புத் தொகையை ஆதாரமாகக் கொண் டுள்ளார். எவ்விதப் பாகுபாடும், தடையுமின்றி எவரிடமிருந்தும் வைப்புகளைப் பெற்றுக் கொள்ளுகிறார். அப்படிப் பெற்ற வைப் புத் தொகையைத் திருப்பிப் பெற வைப்பாளர்கள் (Depositors) காசோலையைப் பயன்படுத்த வேண்டும். ஆனால் வட்டிக்கடைக் காரரிடம் பொதுமக்கள் பணத்தை வைப்பாகச் செலுத்துவது மில்லை; வட்டிக் கடைக்காரர்கள் தமது தொழிலில் காசோலையைப் பயன்படுத்தும் அவசியமுமில்லை. இது மட்டுமின்றி வட்டிக்கடைக்

காரர்கள் தங்களை வங்கியர் என்று அழைத்துக் கொள்ளலாகாது எனச் சட்டம் விதிக்கின்றது. வங்கி, வங்கியர் என்பன போன்ற சொற்களைச் சட்டமுறையாக வங்கித் தொழில்புரியும் கம்பெனிகள் மட்டுமே பயன்படுத்தலாம். எனவே வட்டிக் கடைக்காரர் வங்கியராகார்.

இந்திய வங்கி ஒழுங்காற்றுச்சட்டம் (Banking Regulation Act) வகுத்துள்ள இலக்கணத்தின்படி, வங்கி பொதுமக்களிடமிருந்து வைப்புத் தொகையைப் பெறுவதன் நோக்கங்கள் இரண்டு. அவை கடன் கொடுப்பது, முதலீடு (investment) செய்வது என்பன. இவ்விரண்டு தொழில்களைத் தவிர வேறொரு தொழிலும் வங்கித் தொழிலாகாது என்பது குறிப்பிடத் தக்கது. சரக்குத் தயாரிப்பு, வாணிகம் செய்வது போன்ற கம்பெனிகள் தமது தொழில் தேவைக்குப் பொதுமக்களிடமிருந்து வைப்புத் தொகை பெற்றாலும் அவை வங்கிகள் ஆகா. எடுத்துக்காட்டாக, பெரிய நூற்பு ஆலைகள், தமது நடைமுறை முதலுக்குப் பணம் தேவைப்படுகையில் பொதுமக்களிட மிருந்து வைப்புக் கோரி வேண்டுகோள் விடுப்பதைக் காண்கிறோம். வைப்புத் தொகை பெறுவதால் மட்டும் ஒரு கம்பெனி வங்கித் தொழில் புரிவதாக ஆகாது. சில நிலையங்கள் பணம் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டிருப்பினும் அவை வங்கிகள் எனக் கருதப்படுவதில்லை. எடுத்துக்காட்டாகத் தொழில் நிதியக் கூட்டுரு (Industrial Finance Corporation) போன்ற நிறுவனங்கள் உள்ளன.

வங்கித் தொழிலுடன் பிறதொழில்களை மேற்கொள்ளலாமா ?

வங்கித் தொழிலை ஏற்றுள்ள நிலையங்கள் மற்ற வியாபாரத் தொழிலில் ஈடுபடுவதைச் சட்டம் தடுக்கிறது. இதற்குக் காரணமுண்டு. வியாபாரத்தில் ஒரு நிறுவனத்திற்கு இலாப நட்டமேற்படலாம். ஒரு நேரம் நல்ல சுறுசுறுப்பான நிலையும், வளர்ச்சியும், நல்ல ஆதாயமும் இருக்கலாம்: மற்றொரு நேரம் மந்த நிலையும் நட்டமும் நேரலாம். ஒரே நிறுவனம் வங்கித் தொழிலையும் வியாபாரத்தையும் மேற்கொண்டிருக்குமானால், அதன் ஏற்றமும் தாழ்வும், வளர்ச்சியும் வீழ்ச்சியும் ஒன்றையொன்று பின்னிப் பிணைத்து அமையும். வியாபாரத்தில், வங்கித் தொழில்வழி பொதுமக்களிடமிருந்து பெற்ற பணமும் ஈடு செய்யப்பட்டிருக்கும். வியாபாரத்தில் நலிவு ஏற்பட்டால், பொதுமக்களிடமிருந்து வங்கித்தொழில் வழி திரட்டிய பணமும் அதில் சேர்க்கப்பட்டு வங்கித் தொழிலும் நட்டத்திற்குள்ளாகும். வைப்பாளர்கள் தமது பணத்தைத் திரும்பக் கோரும் நேரத்தில்

பணமில்லாமல் தவிக்க நேரும். இதனால் வங்கித் தொழிலுக்கே பேராபத்து விளைந்து வங்கி முறிவுகூட ஏற்படக்கூடும். வங்கி முறிவு பெருவாரியாக ஏற்பட்டால் மக்களுடைய சேமித்து முதலீடு செய்யும் ஆர்வம் குறைந்து நாட்டின் பொருளாதார வளர்ச்சி மிகவும் நலிவுற்று விடும். இவ் விளைவுகளையெல்லாம் தவிர்க்கும் பொருட்டுத்தான் வங்கித் தொழிலுடன் வேறெந்தத் தொழிலையும் சேர்த்து நடத்தக் கூடாது என்று சட்டம் பேசுகிறது. உலகெங்கும் உள்ள வங்கிமுறை வரலாற்றை அறிந்தோர் இந்த உண்மையை உணர்வர். இதனால்தான் நம் நாட்டுச் சட்டம் வங்கிகள் எந்தத் தொழிலைச் செய்யலாம்; எந்தத் தொழிலைச் செய்யக்கூடாது என்று வரையறுத்துப் பேசுகிறது.

வங்கிக் கம்பெனி மேற்கொள்ளக்கூடிய பணிகள் சில :

[அ] (i) பணம் திரட்டுதல், கடனைப் பெறுதல்.

(ii) பிணையங்கள் பேரிலோ அல்லது பிணையமில்லாமலோ கடன் தருதல்.

(iii) மாற்றுச் சீட்டு (Bill of Exchange), உண்டியல் (Hundi), கடனுறுதிச் சீட்டு (Promissory Note) முதலியவற்றை எழுதுதல், வாங்குதல், விற்றல், ஏற்றல், வசூலித்தல்; கப்பல் ரசீது (Bill of Lading), இரயில்வே இரசீது, கடனீட்டுப் பத்திரம் (Debenture) போன்ற மாற்று முறையுள்ளனவும் மாற்று முறை யில்லாதனவும் ஆகிய ஆவணங்களோடு தொடர்புற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

(iv) பயணக் காசோலை (Travellers cheques), சுற்றுமுறை நோட்டுகள் (Circular Notes), வாணிக உறுதிக் கடிதம் (Letter of credit) முதலியன வழங்கல்.

(v) தங்க உலோகத்தை வாங்கல், விற்றல்.

(vi) அயல்நாட்டுச் செலாவணி வாங்கல், விற்றல்.

(vii) பங்குகள், கடன் பத்திரங்கள் போன்ற பல்வேறு முதலீடுகளை வாங்கல், ஒப்புறுதியளித்தல் மற்றும் அவற்றைச் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

(viii) வாடிக்கையர், பிறர் சார்பாகப் பிணைகள், பத்திரங்கள் வாங்கல், விற்றல்.

(ix) கடன்களுக்கு ஏற்பாடு செய்தல்.

(x) பாதுகாப்பாக வைத்திருக்கும்பொருட்டு விலையுயர்ந்த பொருள்கள், ஆவணங்கள் முதலியன பெறுதல்.

(xi) பாதுகாப்புப் பெட்டகங்கள் அமைத்தல்.

(xii) பணம் பிணையங்களை வசூலித்தல், அனுப்புதல்.

[ஆ] அரசு, உள்ளாட்சி, பிற நபர் போன்றோரின் முகவராகப் (Agent) பணியாற்றுதல், கம்பெனியின் நிருவாக முகவராகவோ அல்லது செயலர் கருவூலராகவோ பணியேற்க முடியாது.

[இ] தனிப்பட்ட அல்லது பொதுக் கடன்களுக்கு ஒப்பந்தம் செய்யவும், வெளியீட்டை மேற்கொள்ளவும் அனுமதியுண்டு.

[ஈ] அரசு, உள்ளாட்சி போன்றவை வெளியிடும் கடன் பங்கு, கடனீட்டுப் பத்திரம் ஆகியவற்றை வெளியிட, உத்தரவாதமளிக்க, காப்புறுதியளிக்க, ஒப்புறுதி செய்ய, வாங்குவதற்குக் கடன் அளிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

[உ] உத்தரவாதம், இழப்பீடு (indemnity) தொடர்பான எல்லா நடவடிக்கைகளிலும் வங்கி ஈடுபடலாம்.

[ஊ] தனக்குச் சேரவேண்டிய பணத்திற்காகக் கிடைக்கும் எச் சொத்தையும் நிருவகிக்க, விற்க அனுமதியுண்டு.

[எ] கடனுக்குப் பிணையமாக வந்த எச் சொத்தையும் அதைச் சார்ந்த உரிமையையும் எடுத்துக் கொள்ளவும், வைத்திருக்கவும், தக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் செய்யலாம்.

[ஏ] பொறுப்புரிமை அமைப்பு (Trust). சொத்து ஆகியவற்றின் நிருவாகம் பற்றி நிறைவேற்றுளர் (Executor), பொறுப்புரிமையர் (Trustee) என்ற நிலைகளில் பணியாற்றல்.

[ஐ] தமது ஊழியர்கள் நலனுக்காகச் சங்கம், நிதியம் (Fund), பொறுப்புரிமை அமைப்பு (Trust) போன்றன அமைக்கவும், அவற்றிற்கு உதவி அளிக்கவும், அறச் செயல்களுக்குப் பணம் மானியமாக அளிக்கவும் செய்யலாம்.

[ஓ] தமது சொந்தப் பயனுக்காகக் கட்டடம் எடுக்க, கட்ட, கண்காணிக்க அனுமதியுண்டு.

[ஓ] தமது கம்பெனிக்குச் சொந்தமான எல்லாச் சொத்துகளையும் உரிமைகளையும் எவ்விதத்திலும் ஈடுபடுத்தும் உரிமையுண்டு.

[ஔ] மேற்கூறப்பட்ட தன்மையுள்ள நடவடிக்கை எதனையும் நடத்திவரும் கம்பெனி அல்லது மற்றவகை அமைப்புத் தொழிலை எடுத்துக் கொள்ளலாம்.

[ஃ] மத்திய அரசு குறிப்பிட்டுள்ள எந்தச் சட்டமுறையான வங்கித் தொழிலையும், மற்றும் தொழிலைச் சார்ந்த நடவடிக்கைகளையும், வங்கியின் தொழில் முன்னேற்றத்திற்குப் பயன் தருவதாக அமையும் எதனையும் வங்கி மேற்கொள்ளலாம்.

வங்கி மேற்கொள்ளக்கூடாத தொழில் யாது? வங்கி ஒழுங்காற்றுச் சட்டம், வங்கி என்ன தொழிலை மேற்கொள்ளக்கூடாது என்று குறிப்பிட்டுப் பேசுகிறது. நேராகவோ அல்லது மறைமுகமாகவோ வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. அதாவது சரக்கு வாங்கல், விற்றல், மாற்றுதல் ஆகிய நடவடிக்கைகளைத் தானும் செய்யக் கூடாது: பிறர் பொருட்டும் மேற்கொள்ளக்கூடாது. கொடுத்த கடன் திரும்பிவராத நிலையில், பிணையமாக வைத்த சரக்குகளைச் சார்ந்த நடவடிக்கைகளை மட்டுமே சட்டம் அனுமதிக்கிறது.

வங்கி வகைகள்

வங்கி என்ற சொல்லின் இலக்கணம் காணப் புகுந்த நாம், வங்கித் தொழிலின் பல்வேறு நடவடிக்கைகளைப் பற்றியும் கண்டோம். இனி, வங்கி என்பது, குறிப்பிட்ட ஒருவகைத் தொழில் நிலையத்தை மட்டும் சுட்டுமா அல்லது வங்கிகளில் பல வகைகள் உண்டா என்பதைச் சற்றுக் காண்போம். வங்கி என்ற சொல்லைத் தம் பெயருடன் சேர்த்து வழங்கும் நிலையங்கள் பலப்பல. இந்தியப் பங்கமைப்பு வங்கிகள் (Indian Joint Stock Banks) நாட்டு வங்கிகள் (Indigenous Banks), கூட்டுறவு வங்கிகள் (Co-operative Banks), நாணயமாற்று வங்கிகள் (Exchange Banks), தொழில் வளர்ச்சி வங்கிகள் (Industrial Development Banks), மைய வங்கி (Central Bank), பன்னாட்டுப் புனரமைப்பு, வளர்ச்சி வங்கி

(International Bank for Reconstruction and Development) எனப் பலதரப்பட்ட வங்கிகளைக் காண்கிறோம். இவற்றில் நாம் விரிவாகக் காணப்போகும் வகை வங்கிகள், வணிக வங்கிகள் (Commercial Banks) என்னும் பிரிவில் அடங்கக் கூடிய இந்தியப் பங்கமைப்பு வங்கிகளும், நாணயமாற்று வங்கிகளும் ஆகும் இன்னுங் குறிப்பாகக் கூற வேண்டுமானால், வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின்படி இயங்கும் வங்கிகள் நம் கவனத்திற்குரியனவாகும். இருப்பினும், மற்றவகை வங்கிகள் பற்றியும் சிறுவிளக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

இந்தியப் பங்கமைப்பு வங்கிகள்

இந்தியக் கம்பெனிச் சட்டத்தின்படி அமைக்கப்பட்டுள்ள வங்கிகளே இப்பெயரால் அறியப்படுகின்றன. தனக்கென்றுள்ள ஒரு சட்டப்படி அமைக்கப்பட்டுள்ள இந்திய ஸ்டேட் பாங்கும் ஒரு பங்கமைப்பு வங்கியேயாகும். ஸ்டேட் வங்கியும், பதினான்கு பெரிய பங்கமைப்பு வங்கிகளும் அரசினர் நிருவாகத்திலுள்ளன. பதினான்கு பெரிய வங்கிகள் முழுமையும் அரசுடைமையாக்கப்பட்டதிலிருந்து வணிக வங்கிகளின் பெரும்பாகம் அரசின் ஆதிக்கத்தின் கீழ் வந்து விட்டது எனலாம். ஸ்டேட் பாங்கின் பெரும்பான்மைப் பங்குகள் அரசின் வசம் உள்ளதால் அதன் நிருவாகமும் அரசின் கையில் அமைந்துள்ளது.

நாட்டு வங்கிகள் (Indigenous Banks)

தொன்றுதொட்டு லேவாதேவி செய்து வரும் சில வகுப்பினரை நம் நாட்டில் வங்கி வகுப்பினர் (Banking castes) என்று அழைக்கின்றனர். வைசியர் என அழைக்கப்படும் வகுப்பினர் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். ஜெயினர்கள், மார்வாரிகள், செட்டிமார்கள், மூல்தானிகள் போன்றோர் இன்றும் லேவாதேவியில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம். இவர்களில் பெரும்பாலோர் தமது சொந்த முதலீட்டின் பேரில் தொழில் நடத்துகின்றார்கள். ஒரு சிலர் பொதுமக்களிடமிருந்து வைப்புத்தொகை பெறுவதுமுண்டு. சிறு தொழில்கள் செய்வோர், சிறு வியாபாரிகள், வட்டிக் கடைக்காரர்கள் முதலானோர்க்கு இவர்கள் கடனளிக்கின்றனர். உண்டியல்கள் எழுதுவதும், தள்ளுபடி செய்து வாங்கிக் கொள்வதும் இவர்கள் தொழிலின் ஒரு முக்கிய அம்சமாகும். மற்ற வியாபாரத்துடன் லேவாதேவித் தொழிலை இவர்களில் பெரும்பாலோர் செய்துவருவதால், வங்கி ஒழுங்காற்றுச் சட்டத்தின்படி இவர்கள் வங்கித் தொழில் புரிவதில்லை. வணிக வங்கிகளும் கூட்டுறவு வங்கிகளும் பேரளவு வேகத்தில் முன்னேறி வந்து கொண்

டிருக்கும் இந்நாட்களில் நாட்டு வாங்கியரின் முக்கியத்துவம் குறைந்து வருகிறது.

கூட்டுறவு வங்கிகள்

நம் நாட்டில் கூட்டுறவுத் துறை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறது. பல்லாயிரக் கணக்கான கூட்டுறவு நாணயச் சங்கங்களும், விவசாய வங்கிகளும் பயிர்த் தொழிலுக்குக் குறுகிய, மத்தியகாலக் கடன் அளித்து வருகின்றன. இவையன்றி, கூட்டுறவு நகர்ப்புற வங்கிகள், கூட்டுறவு மத்திய வங்கிகள், மாநில வங்கிகள் நாடெங்கிலும் இயங்கி வருகின்றன. இவை வங்கி ஒழுங்காற்றுச் சட்டத்தின் வரம்பிற்குட்பட்டுச் செயலாற்றும் நிலை 1966 ஆம் ஆண்டிலிருந்து அமைந்துள்ளது. எனவே வங்கித் தொழிலுக்கான சட்டதிட்டங்களனைத்தையும் இவ்வங்கிகளும் வணிக வங்கி போல் கடைப்பிடிக்கின்றன. கூட்டுறவு நிலையங்கட்கே உள்ள தனிப் பண்பின் காரணமாக இங்குமங்கும் இவற்றிற்குச் சில சலுகைகள் தரப்பட்டுள்ளதைக் காணலாம்.

கூட்டுறவு நில வள வங்கிகள் (Cooperative Land Development Banks)

இவை அண்மையில் பெருமளவில் செயல்படத் தொடங்கியுள்ளதை நாமறிவோம். இவ் வங்கிகள் விவசாயிக்கு நீண்டகாலக் கடன் அளிக்கின்றன. நிலத்தைப்பண்படுத்தல், டிராக்டர் வாங்கல், நீர்ப்பாசன மோட்டார் வாங்கல், கிணறுகளைத் தோண்டல், அல்லது ஆழப்படுத்தல் என்பன போன்ற பல காரியங்களுக்கு நீண்டகாலக் கடன்கள் தரப்படுகின்றன. இவ்வங்கிகள் வணிக வங்கிகள் ஆகா. இவை வைப்புத் தொகை ஏதும் பெறுவதில்லை. வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்திற்கு இவை உட்பட்டனவல்ல.

நாணயமாற்று வங்கிகள் (Exchange Banks)

வெளிநாடுகளில் நிறுவப்பட்ட வங்கிகளின் கிளைகள் நம் நாட்டில் வங்கித் தொழில் செய்து வருகின்றன. இவ்வங்கிகளை நாணயமாற்று வங்கிகள் என்று அழைக்கிறோம். இந்தியா விடுதலை பெறுமுன், இவ்வங்கிகள் அயல்நாட்டு வணிகத்தில் வணிகருக்குத் தேவைப்பட்ட சேவைகளனைத்தையும் செய்து வந்தன. குறிப்பாக ஏற்றுமதி இறக்குமதித் துறைகளில் கடனுக்கு ஏற்பாடு செய்வது, அயல்நாட்டு மாற்றுச் சீட்டு (Foreign Bill of Exchange) களைத் தள்ளுபடி செய்வது, ஏற்பது, அயல்நாட்டுச் செலாவணி (Foreign Exchange) வாங்க, விற்க ஏற்பாடு செய்வது போன்ற செயல்களில்

சிறப்பாக ஈடுபட்டிருந்தன. இக் காரணங்கொண்டே இவை நாணயமாற்று வங்கிகள் எனப் பெயர் பெற்றன. நாட்டின் விடுதலைக்குப் பிறகு இந்தியப்பங்கமைப்பு வங்கிகளும் இத்துறையில் அனுபவம் பெற்று வணிகருக்குச் சேவை புரிகின்றன. நாணய மாற்று வங்கிகள், வங்கிய ஒழுங்காற்றுச் சட்டத்தின் கீழ் இயங்கி வரும் வணிக வங்கிகளில் ஒரு பகுதியாகச் செயல்படுகின்றன. பெருவங்கிகள் பதினுன்கு நாட்டுடைமையாக்கப் பெற்ற நேரத்திலும், இவ்வங்கிகள் தனியார் துறையிலேயே இருந்து வர அரசு வகை செய்துள்ளது. இவ்வங்கிகள் நம் நாட்டின் வணிக வளர்ச்சிக்குப் பாடுபடுகின்றன என்பதாலும், அயல் நாடுகள் நமது பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவும் சுமுக சூழ்நிலை தொடர்ந்து நிலவுதல் நன்று என்பதாலும் இவை நாட்டுடைமை யாக்கப் பெறவில்லை போலும்.

தொழில் வளர்ச்சி வங்கிகள் (Industrial Development Banks)

தொழில்களுக்குத் தேவைப்படும் நீண்ட காலக் கடன்களைத் தந்துதவ ஏற்படுத்தப்பட்ட நிலையங்கள் தொழில் வளர்ச்சி வங்கிகள் எனப்படும். இவற்றை முதலீட்டு வங்கிகள் (Investment Banks) என்றும் அழைப்பதுண்டு. நம் நாடு விடுதலை பெற்ற பின்னரே இவ்வகை வங்கிகள் பல நிறுவப்பட்டன. முதன் முதலாக 1948ஆம் ஆண்டு இந்தியத் தொழில் நிதிக் கூட்டுரு (Industrial Finance Corporation of India) ஏற்படுத்தப் பெற்றது.

இந்தியத் தொழில் நிதிக் கூட்டுரு (Industrial Finance Corporation of India)

இது தனியார் துறையிலுள்ள வரையறுக்கப்பெற்ற பொது நிறுமங்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மட்டுமே மத்திய, நீண்ட காலக் கடனுதவியளித்து வந்தது. பின்னர் சில நிபந்தனைகட்குட்பட்ட பொதுத் துறைத் தொழில்களுக்கும் இவ்வுதவியளிக்கப்பெறலாயிற்று. புதுத் தொழில்களையமைக்கவும், புனரமைப்புக்கும், பெருக்கம் செய்வதற்கும், விரிவுபடுத்துவதற்கும், புதுமையாக்கத் திற்கும் இக்கூட்டுரு உதவியளிக்கும். உதவியானது நீண்டகாலக் கடனாக அமையலாம்; சலுகைப் பங்குகள், கடன் பத்திரங்கள் வாங்கும் வகையில் அல்லது ஒப்புறுதியளிக்கும் வகையில் அமையலாம்; வெளிநாட்டு நிதிநிலையங்கள் தரும் கடன், இயந்திரம் முதலிய திருப்பித் தருதற்கு உத்தரவாதமளிக்கும் வகையிலும் அமையலாம். இக் கூட்டுருவின் பங்கு முதலில் 50 விழுக்காட்டிற்கு மேலான அளவு இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கிக்கு (Industrial Development Bank of India) மாற்றப்பட்டுள்ளது. இந்த

ஏற்பாட்டினால் இந்தியத் தொழில் நிதிக் கூட்டுருவின் நிருவாகம் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் பொறுப்பாக அமைந்துள்ளது.

மாநில நிதியக் கூட்டுருக்கள் (State Financial Corporations)

மாநில அளவிலே 17 மாநில நிதியக் கூட்டுருக்கள் தற்போது இயங்கி வருகின்றன. இவையன்றித் தமிழ் நாட்டில் பங்கமைப்பு நிறுமமாக (Joint - Stock Company) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கூட்டுரு (Tamilnadu Industrial Investment Corporation) இயங்கி வருகின்றது. இம் மாநில நிதியக் கூட்டுருக்கள் ரூ. 20 இலட்சத்திற்கு மிகாத கடன் விண்ணப்பங்களை ஏற்று உரியதைச் செய்கின்றன. இந்தியத் தொழில் நிதியக் கூட்டுரு இத் தொகைக்கு மேற்பட்ட கடன் விண்ணப்பங்களை ஏற்று உரியதைச் செய்கிறது.

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (Industrial Development Bank of India)

தனியார் துறை, பொதுத் துறை ஆகிய இரு துறைகளிலுமுள்ள தயாரிப்புத் தொழில், சுரங்கம், போக்குவரத்து, மின்விசை உற்பத்தி, அளிப்புத் தொழில்கள் போன்றவைகட்கு நிதியுதவி செய்ய 1964 ஆம் ஆண்டு இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி ஏற்படுத்தப்பட்டது. இவ்வுதவி நேரடியாகவும் அமையலாம்; மற்றும் வங்கிகள், பிற நிதிநிலையங்கள் வழியும் அமையலாம்.

மேற்கூறிய இ. தொ. வ. வ. பல மறுநிதி (Refinance) வசதிகளையும் ஏற்பாடு செய்துள்ளது. அவை தொழில் கடன்கள் மறுநிதித் திட்டம் (Scheme for Refinancing of Industrial Loans), மத்தியகால ஏற்றுமதிக் கடன் மறுநிதித் திட்டம் (Scheme for Refinancing of Medium Term Export Credits) என்பன. இவையன்றித் தொழில்கட்கு நேரடிக் கடனும், ஏற்றுமதிக் கடனும், மாற்றுச் சீட்டு மறுதள்ளுபடி (Rediscounting Bills of Exchange) உதவியும் இவ் வங்கி அளித்து வருகின்றது.

இந்தியத் தொழில், நாணய முதலீட்டுக் கூட்டுரு (Industrial Credit and Investment Corporation of India)

இந்நிலையம் தனியார் துறையில் 1955ஆம் ஆண்டு உலக வங்கி (World Bank), அயல்நாட்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியுடன் நிறுவப்பட்டது. தனியார் துறையில் புதுத் தொழில்களைத் துவக்கவும், நடந்துவரும் தொழில்களை விரிவுபடுத்தவும்

நவீனமயமாக்கவும், தொழில் நுட்ப நிருவாக அறிவுரைகளை வழங்கவும் இக் கூட்டுரு உதவும். தொழில் வளர்ச்சியின் அடித் தளத்தில் நிற்கும் நம் நாடு மேலும் வளர்ச்சியடைய அயல் நாட்டினர் முதலீடும், அவர்கள் தொழில்நுட்ப நிருவாக உதவியும் இன்றியமையாது வேண்டப்படுகிறது. மேற்கண்ட முதலீட்டுக் கூட்டுரு, இந்தியத் தொழில்களுக்கு அயல்நாட்டு முதல் கணிசமான அளவில் கிடைக்க வகை செய்கிறது

மேற்கண்ட நிலையங்கள் தவிர, நாட்டுச் சிறுதொழில்கள் கூட்டுரு (National Small Industries Corporation), தொழில் மறுநிதிக் கூட்டுரு (Refinance Corporation for Industry) போன்ற நிலையங்களும் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ கடன்கள் வழங்குகின்றன.

மைய வங்கி (Central Bank)

உலகிலுள்ள நாடுகள் எல்லாவற்றிலும் பணம் ஒரு மாற்றுச் சாதனமாகப் பயன்படுத்தப்படுவதை அறிவோம். இந்தப் பணம், உலோக நாணயங்களாகவும், தாள் நாணயமாகவும் வெளியிடப் படுகிறது. நாட்டிலுள்ள பொருளாதார நிலை, விலைவாசி, நாணயத்தின் மதிப்பு முதலிய அங்குள்ள பணப் புழக்கத்தின் அளவை யொட்டியுள்ளன என்பது யாவரும் அறிந்ததே. பணப் புழக்கத்தைக் கட்டுப்படுத்தவும், நாணய வெளியீட்டைச் சீரான முறையில் வைத்திருக்கவும் ஒவ்வொரு நாட்டிலும் ஒரு வங்கிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. அவ் வங்கியே அந் நாட்டின் மைய வங்கி என அழைக்கப்படுகிறது. அரசின்சார்பாகப் பணம் கொடுக்கல் வாங்கல் போன்ற செயல்களைக் கவனிப்பதும் மைய வங்கியின் பொறுப்பாக அமைந்திருக்கிறது. வங்கித் துறை வளர வளர் அதனைக் கட்டுப்படுத்த ஓர் உச்சி வங்கி (Apex Bank) தேவைப்பட்டது. அதற்கும் மைய வங்கி தக்க சாதனமாகத் திகழ்ந்தது. வங்கிகளுக்கு வங்கியாகவும், உற்றுழியுதவுவோனாகவும், நண்பனாகவும், வழிகாட்டியாகவும், நல்லாசிரியனாகவும் மைய பாங்கு பணியாற்றுகிறது.

நம் நாட்டில் மைய வங்கி ஒன்று நிறுவப்பட வேண்டுமென்று பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து பேச்சும் முயற்சிகளுமிருந்தும் 1934 வரை உருப்படியான நடவடிக்கை ஏதும் பயன்தரு முறையில் மேற்கொள்ளப்படவில்லை. இந்திய ரிசர்வு வங்கிச் சட்டம் 1934 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட பின்னரே நம் நாட்டிற்கு மைய வங்கி என்ற நிலையில் ரிசர்வு வங்கி அமைக்கப்பெற்று அது

1935ஆம் ஆண்டிலிருந்து செயல்படத் தொடங்கியது. துவக்கத்தில் தனியார் துறையிலிருந்த ரிசர்வு வங்கி 1949 சனவரி முதல் நாட்டுடைமையாக்கப் பெற்ற வங்கியாக மாறியது. தனி நபர்கள் இவ் வங்கியில் கணக்கு வைத்துக் கொள்ள முடியாது.

இவ் வங்கியின் முக்கியப் பணிகள் கீழ்க்கண்டவையாகும்:- நாணய வெளியீடு, அரசின் வங்கியர், நிதிநிலைமையை ஒழுங்குபடுத்துதல், வங்கிகளைக் கண்காணித்தல், கிராமப்புற நிதித் துறைக்கு உதவுவது, தொழில் நிதி வசதிக்கு உதவுவது, அயல் நாட்டுச் செலாவணி நிருவாகம், பொதுவாக நாட்டின் பொருளாதார நிலையைச் சீரான முறையில் காத்து ரூபாயின் மதிப்பைக் காப்பது என்பன.

வங்கி முறையைப் பற்றி இந் நூலில் ஆங்காங்கு ரிசர்வு வங்கியைப் பற்றிய குறிப்புக் காண நேரும். வங்கிகளின் கண்காணிப்பாளர் என்ற முறையில், ரிசர்வு வங்கிச் சட்டத்தின் பற்பல பிரிவுகள் வணிக வங்கிகள் செயல்பட வேண்டிய முறையினைக் குறிப்பிட்டு அம்முறைகள் வழுவாமல் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்று ஆயும் பொறுப்பை ரிசர்வு வங்கியிடம் ஒப்படைத்திருக்கிறது.

பன்னாட்டுப் புனரமைப்பு, வளர்ச்சி வங்கி (International Bank for Reconstruction and Development)

இப் பன்னாட்டுப் புனரமைப்பு, வளர்ச்சி வங்கியை உலக வங்கி (World Bank) என்று அழைப்பர். இவ் வங்கி உறுப்பு நாடுகளின் தொழில் வளர்ச்சிக்குப் பெருவகையில் உதவுகிறது. இரண்டாம் உலகப் போரினால் பொருளாதாரச் சீர்குலைவு ஏற்பட்ட நாடுகள் தமது நொடிந்த நிலையிலிருந்து மீளவும், பொருளாதார வளர்ச்சி குன்றிய நாடுகள் வளம் பெற்று முன்னேறவும் இவ்வங்கி உதவுகிறது. இவ் வங்கி 1944ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இதன் தலைமைச் செயலகம் அமெரிக்க நாட்டின் தலைநகரான வாஷிங்டனில் அமைந்துள்ளது. இது தனது உறுப்பு நாடுகட்கும், அந் நாடுகள் உத்தரவாதம் செய்யும் தொழில் நிலையங்கட்கும் நீண்ட கால நிதியுதவி அளிக்கிறது. வெளிநாட்டு முதலீட்டுப் பொருள்கள் (Capital goods) தேவைப்படும் பல தொழில்களுக்குக் கடன் அயல்நாட்டுச் செலாவணியில் தரப்படுவதால், அயல் நாட்டுச் செலாவணியைத் தேடிப்பிடிக்கும் தொல்லை தவிர்க்கப்படுகிறது. மேலும் வளர்ச்சியுற்று வரும் இந்தியா போன்ற நாடுகட்குத் தக்க தொழில் நுட்ப உதவி, திட்டம் தீட்டுவதில் வல்லுநர் அறிவுரை முதலியன கிடைக்க இவ்வங்கி வகை செய்கிறது.

மேற்கண்டவாறு வங்கிகள் பல தன்மையனவாக அமைந்துள்ளன. உலக வழக்கிலும், பொதுவாகப் பொருள் கொள்ளும் நிலையிலும் வங்கி எனக் குறிப்பிடப்படுவது வணிக வங்கியே ஆகும். இந்நூலில் பேசப்படும் வங்கி வணிக வங்கியே யாகும்.

வணிக வங்கிகளின் முக்கியப் பணிகள்

வணிக வங்கிகளின் முக்கியப் பணிகள் என்ன என்பதை வங்கி என்ற சொல்லின் இலக்கணம் காணப்போந்தபோது அறிந்தோம். பொதுவாக நோக்குமிடத்து வங்கியரின் சில பணிகள் இன்றியமையாதனவாகத் தோன்றுகின்றன. அவை:-

1. வைப்புத் தொகை ஏற்றுக் கொள்ளல்

தற்கால வங்கியர் வைப்புத் தொகை திரட்டுவதைத் தம் முக்கியப் பணியாகக் கருதுகிறார். வங்கியர், தாம் திரட்டும் வைப்புத் தொகையை அடிப்படையாகக் கொண்டுதான் தம் தொழிலை நடத்த வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்கு அளிக்கப்பட்ட வைப்புத் தொகையை (தவணை வைப்பு) வங்கியர் அக்காலம் முடியும்வரை தம் விருப்பப்படி பயன்படுத்தலாம். சேமிப்புக் கணக்கில் திரட்டும் தொகையில் கணிசமான அளவினை வங்கியர் தைரியமாகப் பயன்படுத்தலாம். ஏனெனில் சேமிப்புக் கணக்கிலிருந்து தொகை எடுப்பதற்குப் பற்பல நிபந்தனைகளுண்டு. சில வங்கிகள் ஒரே நேரத்தில் இவ்வளவு தொகைக்கு மேல் எடுக்கக்கூடாது என்றும், மற்றும் சில மாதமொன்றுக்கு இத்தனை முறைக்குமேல் பணம் எடுக்கலாகாதென்றும் தடைகளை விதித்துச் சேமிப்புத் தொகையை விரைவில் எடுத்து விரயம் செய்யக்கூடாமல் தடுக்கின்றன. நடப்புக் கணக்கில் செலுத்தப்படும் தொகையும் வங்கியர் தேவைக் கேற்பப் பயன்படுத்தப் படலாம். எனினும் வாடிக்கையர் தம் விருப்பப்படி நடப்பு வைப்பிலிருந்து பணத்தை எடுக்கலாம். அனுபவ வழியாக, வங்கியர், எவ்வளவு தொகை வாடிக்கையர் பலருக்கும் ஒரே நேரத்தில் தேவைப்படும் என்று கணக்கிட்டு உபரியாக இருக்கும் பணத்தையே தம் தொழிலில் பயன்படுத்துவார். நடப்பு வைப்பின் வழி வங்கியர் வாடிக்கையருக்கு ஆற்றும் சீரிய பணி, அவரது பணத்தைப் பாதுகாத்து அவர் செலுத்திய பணத்துக்கு ஈடாக வைப்புப் பணத்தை உண்டாக்குவதுதான். நடப்புக் கணக்கு நீங்கலாக மற்றக் கணக்கில் பெறும் வைப்புகள் அனைத்தின்மீதும் வங்கியர் வட்டி செலுத்துகிறார்.

2. கடன் கொடுத்தல்

வங்கியரின் பணிகளில் கடன் கொடுக்கும் பணியே மிக முக்கியமானதாகும். அவரது பிழைப்பே கடன் கொடுத்தலில் அமைந்துள்ளது என்று கூறினுல் அது மிகையாகாது. பொது மக்களிடமிருந்து பெறும் வைப்புத் தொகையை வங்கியர் பெட்டியில் பூட்டி வைப்பதில்லை. அப்படிப் பூட்டி வைத்தால் அவருக்கு அப்பணத்தின் வழி ஆதாயம் ஏதும் கிடைக்காது. அப்படிப்பட்ட நிலையில் வைப்பாளர் (Depositor) களுக்கும் அவர் வட்டி ஏதும் தர இயலாது. வங்கியில் பணத்தைப் போட்டு வைத்தால் பணம் பத்திரமாக இருப்பதுடன் வட்டி ஏதும் கிடைக்கும் என்பதுதானே வாடிக்கையரின் எண்ணம். எனவே வங்கியர் வைப்பாளர்கட்கு வட்டி கொடுக்கவும், தன் பிழைப்புக்குச் சம்பாதித்துக் கொள்ளவும் பொதுமக்களிடமிருந்து பெற்ற வைப்புத் தொகையை நிதிவேண்டுவோருக்குக் கடனுக அளிக்கிருர். இதற்கு இவர் பெறும் வட்டி வைப்பாளருக்குத் தரும் வட்டியைவிட அதிகமாக இருக்கிறது. பொதுமக்களிடமிருந்து பெறும் பணத்திற்கு வங்கியர் கொடுக்கும் வட்டி வீதத்திற்கும் கடன் கொடுக்கும்பொழுது வங்கியர் பெறும் வட்டி வீதத்திற்குமிடையேயுள்ள வேறுபாடே வங்கியரின் வருமானமாக அமைகிறது. வங்கியர் கடனளிப்பதன்மூலம் சமுதாயத்துக்கும் தொண்டு செய்தவராவார். எங்ஙனமெனில், தம்மிடமுள்ள முதல் போதா நிலையில் தொழில் நடத்துநர் வேறு வகையில் கடன் பெறக்கூடாவிடில், தொழில் நடப்புச் செயலற்றுப் போகும். வியாபாரத்தில் மந்தம் ஏற்பட்டு விடும். பொருளுற்பத்தி தடைப்பட்டு நிற்கும். வேலையின்மை தலைவிரித்தாடும். இம்மாதிரியான இடர்களிலிருந்து தொழிலை மீட்க, வங்கிக் கடன் பெரும் உதவியாக அமைகிறது.

3. பணத்தை இடமாற்றம் செய்தல்

வியாபாரம் அகில உலகளவில் நடைபெற்று வரும் தற்காலத்தில் பணத்தை நாடு விட்டு நாடு அனுப்ப வேண்டியிருக்கிறது; ஒரே நாட்டில் ஓர் ஊரிலிருந்து மற்ருேர் ஊருக்கு அனுப்ப வேண்டியுமிருக்கிறது. இந்த முக்கியமான பணியைத் தற்கால வங்கிகள் அனைத்தும் செய்கின்றன. பணவிடை (Draft) வெளியிட்டும், பயணக் காசோலைகள் (Travellers cheques) வெளியிட்டும் பணத்தை வேண்டிய இடத்தில் வேண்டிய அளவில் பெற வங்கிகள் வழி செய்கின்றன. வாணிக உறுதிக் கடிதம் (Letter of credit) வழங்கி உள்நாட்டு, வெளிநாட்டு வியாபாரம் தங்கு தடையின்றி நடைபெற உதவுகின்றன. அயல்நாட்டுச் செலாவணி நடவடிக்

கைகள் மேற்கொள்வதன் வழி தற்கால வங்கியர் ஏற்றுமதி இறக்குமதி வாணிகத்தைப் பெரிதும் விரிவுபடுத்தியுள்ளனர்.

4. காசோலைகளை வெளியிடல்

பணத்திற்குப் பதிலாகக் காசோலைகளை வணிகர்கள் பயன் படுத்துவது நாமறிந்ததே. ஏன், வணிகரல்லாத பொதுமக்கள் கூடத் தாம் செலுத்த வேண்டிய பணத் தொகைக்குப் பதிலாகக் காசோலை எழுதித் தருவதைக் காண்கிறோம். வணிக வளர்ச்சி மிகுந்த நாடுகளில் பணமும் காசோலையும் ஒன்றாக மதிக்கப்படுவதால், தமது பொறுப்பைத் தீர்க்க விரும்புபவர் எவரும் பெரும்பாலும் காசோலையைப் பயன்படுத்துகின்றனர். எனவே தான் காசோலை நாணயம் (Cheque currersy) என்ற சொற்றொடர் உருவாகிக் காசோலை பணமென்றே கருதப்படும் நிலையை நாம் காண்கிறோம்.

சில்லறைப் பணிகள்

மேற்கண்ட இன்றியமையாப் பணிகளுடன் வங்கிகள் தமது வாடிக்கையருக்குப் பல பயன்தரு பணிகளையும் செய்கின்றன. தமது வாடிக்கையரின் விலையுயர்ந்த பொருள்களையும், முக்கிய ஆவணங்களையும் பாதுகாப்பாக வைத்திருத்தல்; வாடிக்கையர் சார்பாக உத்தரவாதமளித்தல்; வாடிக்கையரின் வருமானவரிக் கணக்குத் தயாரித்தல்; வாடிக்கையரின் சொத்துக்குப் பொறுப் புரிமையராக அல்லது நிறைவேற்றுளராகச் செயலாற்றுதல்; வாணிக உறுதிக் கடிதங்கள், பயணக் காசோலைகள் போன்றன எழுதித்தரல்; வாடிக்கையருக்காக மாற்றுச் சீட்டுகளை ஏற்றல்; முதலீடு வெளியிடும் போது ஒப்புறுதியளித்தல்; அயல் நாட்டுச் செலாவணியில் நடவடிக்கை மேற்கொள்ளல் என்பன போன்ற பலப்பல பணிகள்வழிப் பொது மக்களைத் தம்மிடம் வங்கியர் ஈர்க்கின்றனர்.

வங்கி என்ற சொல்லின் இலக்கணத்தையும், வங்கியின் முக்கியப் பணிகளையும் பற்றிஇது காறும் பேசி வந்தோம். இனி, வங்கி எந்தச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுச் செயலாற்ற வேண்டும்; வங்கியின் அமைப்பு எவ்வண்ணம் இருக்க வேண்டும்; வங்கியின் செயல்முறை எங்ஙனம் கண்காணிக்கப்படுகிறது; வாடிக்கையரின் நலனைப் பாதுகாக்க என்ன ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன என்பன போன்ற பல செய்திகளைக் காண்போம்.

2. வங்கியரும் சட்டமும்

Banker and Law

வங்கிகள் பெரும்பாலும் பங்கமைப்பு நிறுமங்களாக (Joint stock companies) அமைக்கப் பட்டிருப்பதைக் காண்கிறோம். ஆகவே அவை இந்தியக் கம்பெனிச் சட்டத்திற்கு உட்பட்டு இயங்க வேண்டும் என்பதைச் சொல்லவும் வேண்டுவதில்லை. வங்கித் தொழிலும் மற்றத் தொழில்கள்போன்று ஒரு தொழிலாகக் கருதப்பட்டாலும், அதற்கு என்ற தனிச் சிறப்புகள் சில உண்டு. அவற்றில் மிக முக்கியமானது வங்கி தனது வைப்பாளர்களின் பணத்தைக் கொண்டே தன் தொழிலை நடத்துகிறது; ஆனால் வைப்பாளர்கள் (Depositors) வங்கியின் நிருவாகத்தில் பங்கு பெறுவதில்லை. ஆகவே வைப்பாளர்களின் நலனைப் பாதுகாக்கச் சிறப்புச் சட்டமொன்று தேவையாகத் தெரிந்தது. வங்கித் தொழிலைக் குறிப்பிட்ட சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடத்தினால் வைப்பாளர்களின் நலன் பாதுகாக்கப்படும் என்று கருதி வங்கிக் கம்பெனிச் சட்டம் (Banking Companies Act) *1949* ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. அதற்கு முன் கம்பெனிச் சட்டத்தில் ஒரு பகுதியாக வங்கிக் கம்பெனிகளைப் பற்றிய சட்டம் இருந்து வந்தது. கம்பெனி அமைப்பு மட்டுமல்லாமல் கூட்டுறவு அமைப்பிலுமுள்ள வங்கிகள் சட்டப்படி வங்கித் தொழில் புரியும் நிலையங்கள் என ஏற்கப்பட்டதால், தற்போது வங்கித் தொழில் பற்றிய சட்டத்தை 'வங்கிய ஒழுங்காற்றுச்சட்டம்' (Banking Regulation Act) என்று அழைக்கின்றனர். வங்கித் தொழிலுடன் தொடர் புற்ற பற்பல சட்டங்களுடன் இச் சட்டத்தினையும் வங்கியர் கடைப்பிடிக்க வேண்டிய நிலையிலிருக்கின்றனர். இந்திய ரிசர்வு வங்கிச் சட்டம், வங்கியர் ஏடு சான்றுச் சட்டம் (Bankers Book Evidence Act), இந்திய ஒப்பந்தச் சட்டம், மாற்றுமுறை யாவணச் சட்டம் (Negotiable Instruments Act) போன்ற சட்டங்கள் வங்கியரின் தொழிலுடன் நெருங்கிய தொடர்புள்ளவை. எனினும் முழுக்க முழுக்க வங்கித் தொழிலைப் பற்றியே

பேசும் ஒரே சட்டம் வங்கிய ஒழுங்காற்றுச் சட்டமாகும். இச் சட்டத்தை நாம் சிறப்பாகப் படிக்க முற்படுவோம்.

வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம்

வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம் 1949 ஆம் ஆண்டு இயற்றப் பட்டது. இச் சட்டத்திலுள்ள சரத்துக்கள், மற்றச் சட்டங் களோடுகூடச் செயல்படுத்தப்படும். அடித்தளத்தில் இயங்கும் விவசாயக் கூட்டுறவு நாணயச் சங்கம், கூட்டுறவு நிலவளவங்கி, மற்றும் வங்கி என இச்சட்டம் விதிக்காத கூட்டுறவுச் சங்கம் ஆகியவை வங்கி ஒழுங்காற்றுச் சட்டத்திற்கு உட்படமாட்டா. இச்சட்டம் வங்கி என்ற சொல்லுக்கு வகுத்துள்ள இலக்கணத்தை முன்னரே கண்டிருக்கிறோம். கீழ்வரும் விளக்கத்தில் வங்கிய ஒழுங்காற்றுச் சட்டத்தின் முக்கியப் பிரிவுகளைக் காண்போம்.

வங்கிக் கம்பெனிகள் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன (பிரிவு 6); வங்கி வியாபாரத்தில் ஈடுபடக்கூடாது (பி. 8); வங்கியை நிருவகிக்க நிருவாக முகவர் (Managing Agent) நியமிக்கப் படலாகாது; மேலும் சில வகை நிருவாக முறைகளையும் தடை செய்கிறது (பி. 10); இயக்குநர் அவையில் தொழில் தேர்ச்சி அல்லது பிற அனுபவம் பெற்றவர் இடம் பெறுவது கட்டாயமாக்கப் பட்டுள்ளது (பி. 10 A). வங் கியின் தலைவர் முழுநேர அலுவலராக இருத்தல் வேண்டும் (பி. 10 B); குறைந்த அளவு செலுத்தப்பட்ட முதல், காப்புநிதி எவ்வளவு இருத்தல் வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது (பி. 11); அனுமதித்த முதல், ஒப்பிய முதல், செலுத்திய முதல் ஆகியவற்றின் விகிதாசாரம், பங்குதாரர்களின் வாக்குரிமை பற்றிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. (பி. 12); வங்கிக் கம்பெனிப் பங்குகள் விற்பதற்குக் கழிவு, தரகு, தள்ளுபடி அல்லது ஊதியம் $2\frac{1}{2}\%$ க்கு மேல் போகக்கூடாது (பி. 13); செலுத்தா முதல் மீது பற்றுப் பொறுப்பு (charge) ஏற்படுத்த லாகாது (பி. 14); வங்கிக் கம்பெனியில் சொத்துக்கள் மீது இழைவுறு பற்றுப் பொறுப்பு (Floating charge) ஏற்படுத்தலாகாது (பி. 14 A); இலாப ஈவு அளிப்பதற்குள்ள கட்டுப்பாடுகள் முதலாக் கப்பட்ட செலவுகள் எடுத்துவிடப்பட வேண்டும்; தேய்மானம், வராக்கடன் இவற்றிற்குத் தக்க காப்பு ஏற்படுத்தியிருக்க வேண்டும் (பி. 15); பிணைந்த இயக்குநர் முறை (interlocking directorate) தடைசெய்யப்பட்டுள்ளது (பி. 16); காப்பு நிதி ஏற் படுத்தலை ஒட்டிய விதிகள் தரப்பட்டுள்ளன (பி. 17) ; ரொக்க இருப்பின் அளவு தவணை கேட்புப் பொறுப்புக்களின் மீது 3%க்குக்

குறையக்கூடாது என நிருணயிக்கப் பட்டுள்ளது (பி. 18); வங்கிக் கம்பெனியொன்று எவ்வகைத் தொழில்களுக்குத் துணைக் கம்பெனி ஏற்படுத்தலாம் (பி. 19); கடன் கொடுப்பதில் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் (பி. 20); கடன் கொடுப்பதில் கட்டுப் பாடுகளை விதிக்க ரிசர்வு வங்கிக்கு உள்ள அதிகாரம் (பி. 21); வங்கிக் கம்பெனிகளுக்கு உரிமம் (Licence) அளிப்பது (பி. 22); தொழில் நடத்துமிடத்தை மாற்றப், புதிதாக ஓரிடத்தில் தொழில் நடத்தக் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் (பி. 23); ரொக்கமாக எளிதில் மாற்றக்கூடிய சொத்துக்களின் விகிதம் தவணை, கேட்புப் பொறுப் புக்களுக்கு 28% க்குக் குறையாமலிருக்க வேண்டும் (பி. 24); மாதாந்திர அட்டவணைகளும் பிறபட்டியல்களும் ரிசர்வு வங்கிக்கு அனுப்புவது (பி. 27); கணக்கு, இருப்பு நிலைக்குறிப்பு (Balance Sheet) தயாரித்தளிக்கும் முறை (பி. 29) தணிக்கை ஏற்பாடு (பி. 30); ரிசர்வு வங்கி எந்த வங்கிக் கம்பெனியையும் ஆய்வு (Inspection) செய்ய உரிமை பெற்றுள்ளது (பி. 35); ரிசர்வு வங் கிக்குத் தரப்பட்டுள்ள மற்ற அதிகாரங்கள் (பி. 35 A, 35, 36).

வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம் வங்கியின் நிருவாகம் அமைய வேண்டிய முறை குறித்து விளக்கமாகப் பேசுகிறது. நிரு வாகத்தை நல்ல முறையில் நடத்த வேண்டி, ரிசர்வு வங்கி வங்கி யின் தலைவர்' இயக்குநர் போன்ற நிருவாக அதிகாரிகளைப் பதவி யிலிருந்து நீக்கலாம் (பி. 36 AA): கூடுதல் இயக்குநர்களை நியமிக் கலாம் (பி. 36 AB); வங்கிக்குள்ளிருந்து கொண்டு வங்கி நடவடிக் கைகளை நடக்கவொட்டாமல் ஆர்ப்பாட்டம் செய்வது, வங்கிக்குள் வரும் போகும் நபர்களைத் தடுப்பது, வைப்பாளர்களின் நம்பிக்கை யைக் குலைக்கும் வகையில் நடந்து கொள்வது போன்ற செயல்கள் தண்டனைக்குரியன (பி. 36 AD); சில சூழ்நிலைகளில் வங்கிக் கம்பெனிகளை எடுத்துக் கொள்ள மத்திய அரசிற்கு அதிகாரமுண்டு (பி. 36 AE). வங்கிக் கம்பெனிகளைக் கலைக்கும் முறை பற்றிய விதிகள் (பி. 37 முதல் 45 வரை) சட்டத்தின் விதிகளை மீறும் வங்கிகள் மீது தண்டம் விதித்தல் (பி. 46, 47A); காசோலை விடுத் துப் பணத்தைத் திரும்பப்பெறும் வகையில், வங்கிக் கம்பெனி யைத் தவிர எந்த நபரும் வைப்புத் தொகையை ஏற்றுக்கொள்ளக் கூடாது (பி. 49 A); சட்டத்தின் கீழ் விதிகளைச் செய்ய மத்திய அரசுக்கு அதிகாரமுண்டு (பி. 52)

கூட்டுறவு வங்கிகளுக்கு வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம் எந்த அளவில் பொருந்தும் என்பது பி. 56 இல் விளக்கப்பட்டுள்ளது. முதன் முதலாகக் கூட்டுறவு வங்கிகள் சட்டத்தின் எல்லைக்குள்

கொண்டுவரப்படுவதாலும், அவற்றின் அமைப்பு, நிருவாகம், செயல்படும் எல்லே, முதலிய தனித்தன்மை பெற்றிருப்பதாலும் சட்டம் இவ்வங்கிகளுக்குத் தனி விதிகளே வகுத்துள்ளது. இவற்றைப் பின்னர் காண்போம்.

வங்கி என்ற சொல்லின் இலக்கணத்தையும், வங்கி ஈடுபடக் கூடிய தொழில் வகைகளேயும் கடந்த அத்தியாயத்தில் கண்டோம் சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட தொழில்களேயன்றி வேறு எத் தொழிலிலும் வங்கி ஈடுபடலாகாது.

வங்கி, வங்கியர், வங்கியம் (Banking) போன்ற சொற்களே வங்கிக் கம்பெனியைத் தவிர்த்த வேறெருவரும் பயன்படுத்தக் கூடாது; வங்கிக் கம்பெனிகள் தம் பெயரின் ஒரு பகுதியாக வங்கி, வங்கியர், வங்கியம் என்ற சொற்களில் எதையாவது கட்டாயம் பயன்படுத்த வேண்டும் என்று சட்டம் பேசுகிறது. ஒரு தனி நபரோ, நிறுவனமோ (firm) அல்லது தனிநபர்களின் கூட்டோ எவ்வகைத் தொழிலேயும் நடத்த மேற்கண்ட சொற்கள் எவற்றையும் தம் பெயருடன் பயன்படுத்தலாகாது. (பிரிவு 7). இவ்வகையான சட்ட ஏற்பாட்டால் 'வங்கி' முதலான சொற்களேத் தாறுமாருகப் பயன்படுத்தல் தவிர்க்கப்படுகிறது. மேலும் மக்களே ஏமாற்றும் வகையில் எவரும் இச் சொற்களேப் பயன்படுத்துவதும் தடை செய்யப்படுகிறது.

வியாபார நடவடிக்கைகளே வங்கி மேற்கொள்வது வங்கித் தொழிலுக்கு உகந்ததல்ல; வியாபாரத்திற்குப் பாதகமான நிலே ஏற்படும் பொழுது அதைச் சார்ந்து நிற்கும் வங்கியும் பேரளவிற்குப் பாதிக்கப்படும். பொதுமக்கள் வங்கியின் மீது நம்பிக்கையிழந்து தமது வைப்புத்தொகையைத் திரும்பிப் பெற முற்படுவர். எல்லா வைப்பாளர்களும் தமது வைப்புகளே ஒரே நேரத்தில் திரும்பக் கேட்டால் எந்த வங்கியும் அவர்கள் பணத்தைக் கேட்டவுடன் திரும்பித் தர இயலாது. அப்படியிருக்க, வியாபாரத்தையும் வங்கித் தொழிலேயும் சேர்த்து நடத்தும் தொழில் நிறுவனம் பேரளவு பணத்தை வியாபாரத்தில் முடக்கி அது நட்டத்தில் போய்க் கொண்டிருந்தால் வங்கித் தொழில் பற்றிப் பெற்ற வைப்புத் தொகைகளே எங்ஙனம் திருப்பித்தர இயலும்? இயலாது. இதனுல் வங்கி முறிந்து போகும் நிலேமை வரக்கூடும். இந்தக் கேடான நிலேமை வராமலிருக்கவே தான் சட்டம், வியாபாரத்தில் வங்கி ஈடுபடக் கூடாது என்று விதித்துள்ளது. சரக்கினே வாங்கல் விற்றல், மாற்றல் போன்ற நடவடிக்கைகளே நேரடியாகவோ

பிறர் சார்பாகவோ மேற்கொள்ளக் கூடாது. ஆனால் பிணையாக வைத்த சரக்கு எதையும் விற்றுத் தமக்கு (வங்கியருக்கு) வர வேண்டிய கடன் தொகையை எடுத்துக் கொள்ளும் நடவடிக்கையைச் சட்டம் அனுமதிக்கிறது.

வங்கித் தொழிலுக்குத் தொடர்பற்ற சொத்துக்களை வங்கிகள் வாங்குவது விற்பது வங்கித் தொழிலுக்கு நன்மை பயக்காது. எனவே சட்டம், அசையாச் சொத்து எதனையும், தம் சொந்தப் பயனுக்காகவன்றி, அதைப் பெற்ற ஏழு ஆண்டுகட்குமேல் வைத்திருத்தலாகாது என்று கூறுகிறது (பிரிவு 9). இந்த ஏழாண்டுக் கால வரையறையை ரிசர்வு வங்கி, வைப்பாளர்களின் நலன் கருதி பன்னிரண்டு ஆண்டுகள் வரை நீட்டிக்கலாம்.

வங்கி நிருவாகரின் தகுதிகள்

வங்கியின் நிருவாகம், வங்கியின் பங்காளர்களின் பிரதிநிதிகளாகிய இயக்குநர்களிடம் அமைந்திருப்பது யாவரும் அறிந்ததே. நிருவாகத்தை மற்றொருவரிடம் ஒப்படைப்பதற்குச் சில தடைகளும் கட்டுப்பாடுகளும் வங்கிகளுக்கு விதிக்கப்பட்டுள்ளன. நிருவாக முகவர் (Managing Agent) ஒருவரை வங்கிக் கம்பெனி அமர்த்தலாகாது; அவரால் கம்பெனி நிருவகிக்கப்படவும் கூடாது. மேலும் நொடித்தவர் (insolvent) எனத் தீர்ப்பளிக்கப்பட்டவர், அல்லது கடன்களைச் செலுத்துவதை நிறுத்தி வைத்தவர், அல்லது கடன் கொடுத்தவர்களோடு கடன் தீர்வு உடன்பாடு செய்து கொண்டவர், அல்லது ஒழுக்கக் கேடான குற்றத்திற்குக் குற்ற நீதி மன்றத்தால் தண்டிக்கப்பட்டவர் எவரையும் வங்கி வேலைக்கு அமர்த்தலாகாது, அமர்ந்திருக்கவும் அனுமதிக்கலாகாது. நிறுமத்தின் (கம்பெனியின்) இலாபத்தில் ஒரு பங்கையோ அல்லது அதன்மீது ஒரு குறிப்பிட்ட கழிவுத் தொகையையோ ஊதியமாகவோ அல்லது ஊதியத்தில் ஒரு பங்காகவோ பெறும் எவரையும் வேலைக்கு அமர்த்தலாகாது; தொடர்ந்து அமர்ந்திருக்கவும் அனுமதிக்கலாகாது. மிக அதிகமான ஊதியம் பெறுபவர் என்று ரிசர்வு வங்கி கருதும் எவரையும் வங்கி வேலைக்கு வைத்துக் கொள்ளலாகாது. மற்ற எந்தக் கம்பெனியில் இயக்குநராக இருப்பவராலோ அல்லது மற்றத் தொழிலில் ஈடுபட்டிருப்பவராலோ அல்லது ஒரே சமயத்தில் ஐந்தாண்டுகட்கு மேலான பதவிக்காலத்திற்குக் கம்பெனியை நிருவாகம் செய்யும் ஏற்பாடு உடையவராலோ வங்கிக் கம்பெனி நிருவகிக்கப்படலாகாது. குறிப்பிட்ட நபருக்கு வங்கி கொடுக்கும் ஊதியம் மிகையானதா என்று தீர்மானிக்குமுன் ரிசர்வு வங்கி கீழ்க்கண்டவற்றைக்கருத்தில் கொள்ளும்:

(i) வங்கியின் நிதி நிலை, முந்தைய வரலாறு, அளவு, செயல் படும் எல்லை, நிதி வசதி, தொழிலின் அளவு, வருமானம் ஈட்டும் திறன்.

(ii) வங்கியின் கிளைகள் எண்ணிக்கை.

(iii) குறிப்பிட்ட நபரின் தகுதி, வயது, அனுபவம்.

(iv) இதே போன்ற மற்றவங்கிகளில் இதே நிலையிலுள்ள நபருக்குத் தரப்படும் ஊதியம்.

(v) வைப்பாளர்களின் நலன். (பிரிவு 10)

வங்கித் தொழிலிலும் அதைச் சார்ந்த தொழில்களிலும் சிறந்த தேர்ச்சி, அனுபவம் ஆற்றல் மிக்கோர் இயக்குநரவையில் இடம் பெற்றுல் அது வங்கி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும். இதைக் கருத்தில் கொண்டுதான் 1968 இல் கொண்டுவரப்பட்ட சட்டத்திருத்தம், இயக்குநரவையில் 51 விழுக்காட்டிற்குக் குறை யாமல் கீழ்க்காணும் துறைகளில் சிறந்த அறிவு அல்லது செய்முறை அனுபவம் பெற்றவர்களாக இருக்கவேண்டும் என்று இயம்புகிறது

(i) கணக்குப் பதிவியல்.

(ii) விவசாயமும் கிராமப் பொருளாதாரமும்.

(iii) வங்கியியல்.

(iv) கூட்டுறவு.

(v) பொருளாதாரம்.

(vi) நிதி.

(vii) சட்டம்.

(viii) சிறு தொழில்.

(ix) ரிசர்வு வங்கி பயனுள்ளது எனக்கருதும் வேறு துறை.

(பிரிவு 10 A)

வங்கியின் நிருவாகம் மிகச் சிக்கலானதாகும். தமது முழு நேரத்தையும் அதற்கே அர்ப்பணிப்பவர் தான் செவ்வையான நிருவாகம் மேற்கொள்ள முடியும். எனவே சட்டம், முழுநேரத் தலைவர் (Whole time Chairman) தான் வங்கியை நிருவகிக்க வேண்டும் என்று கூறுகிறது (பிரிவு 10 B).

குறைந்த அளவு இருக்கவேண்டிய செலுத்திய முதல், காப்பு (நிதி)

வெளிநாட்டில் அமைக்கப்பட்ட வங்கியானால் பதினைந்து இலட்சம் ரூபாய்க்குக் குறையாத அளவுக்கு அதன் செலுத்திய முதல், காப்பு (Reserve) இருத்தல் வேண்டும். பம்பாய் அல்லது கல்கத்தா அல்லது இவ்விரு நகரங்களிலும் வங்கித் தொழிலில் ஈடுபட்டிருப்பின் இத்தொகை இருபது இலட்சமாக இருத்தல் வேண்டும். மேற்கூறிய வகையைச் சேர்ந்த வங்கி முன்புகண்ட குறைந்தஅளவு தொகையை ரொக்கமாக அல்லது வில்லங்கமில்லா அங்கீகரிக்கப்பட்ட பிணையங்களாக அல்லது பகுதி ரொக்கமாகவும் மற்றது பிணையங்களாகவும் ரிசர்வு வங்கியிடம் வைத்திருக்க வேண்டும். மேலும் ஒவ்வொரு பட்டிகை ஆண்டு (Calendar Year) முடிவுற்றதும், அவ்வாண்டில் இந்தியாவிலுள்ள கிளைகளின் நடவடிக்கைகள் மூலம் கிடைத்த இலாபத்தில் 20 விழுக்காட்டை ரிசர்வு வங்கியிடம் ரொக்கமாகவோ பிணையங்களாகவோ வைத்திருக்க வேண்டும்.

இந்தியாவிலேயே அமைக்கப்பட்டுள்ள வங்கி நிறுமத்தின் (கம்பெனியின்) செலுத்திய முதலும் காப்பும் கீழ்க்காணும் தொகைக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

(i) பம்பாய் அல்லது கல்கத்தா அல்லது இவ்விரண்டு நகரங்களில் தொழில் செய்துகொண்டு ஒரு மாநிலத்திற்கு மேற்பட்ட இடங்களில் தொழில் செய்தால் ரூபாய் 10 இலட்சம்.

(ii) பம்பாய், கல்கத்தா நகரங்களில் இல்லாமல், எல்லாத் தொழில் செய்யும் இடங்களும் ஒரே மாநிலத்தில் அமையுமானால் முதன்மைத் தொழிலிடத்திற்கு ஒரு இலட்ச ரூபாயும் மற்றும் ஒரு மாவட்டத்தில் முதன்மைத் தொழிலிடமிருப்பின் அம்மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு தொழிலிடத்திற்கும் ரூபாய் பத்தாயிரம் வீதமும், மற்றும் அதே மாநிலத்தில் பிற மாவட்டங்களிலுள்ள தொழிலிடங்களுக்குத் தலையே இருபத்தைந்தாயிரரூபாய் வீதமும் இருத்தல் வேண்டும். மேற்கண்ட கணக்குப் படி எந்த வங்கிக் கம்பெனிக்கும் செலுத்திய முதலும் காப்பும் சேர்ந்து ஐந்து இலட்ச ரூபாய்க்கு மேல் இருக்க வேண்டுவதில்லை. ஒரே ஒரு இடத்தில் மட்டும் தொழில் செய்யும் வங்கி நிறுமத்தின் செலுத்திய முதல் காப்பு இரண்டும்

சேர்ந்து ஐம்பதாயிரம் ரூபாய்க்குமேல் இருக்க வேண்டுவதில்லை.

1962 ஆம்ஆண்டு வங்கிக் கம்பெனித் திருத்தச் சட்டத்திற்குப் பின் தொழில் துவக்கும் வங்கிக் கம்பெனியின் செலுத்திய முதல் ஐந்து இலட்சம் ரூபாய்க்குக் குறையக் கூடாது.

(iii) தொழில் நடத்தும் எல்லா இடங்களும் ஒரே மாநிலத்தில் உள்ள வங்கியின் ஒரு அல்லது பல தொழிலிடங்கள் பம்பாய் அல்லது கல்கத்தாவில் அமைந்திருப்பின், ஐந்து இலட்சம் ரூபாயும் மேலும் பம்பாய், அல்லது கல்கத்தாவைத் தவிர வேறு ஒவ்வொரு தொழிலிடத்திற்கு ரூபாய் இருப்பந்தையாயிரமும் இருத்தல் வேண்டும். இவ் வகை வங்கியின் செலுத்திய முதலும் காப்பும் சேர்ந்து பத்து இலட்சம் ரூபாய்க்குமேல் இருக்க வேண்டுவதில்லை. இந்தச் சட்டப்பிரிவின் கணக்குப்படி வங்கியின் முதன்மைத் தொழிலிடத்திலிருந்து 25 மைல் சுற்றளவில் உள்ள எந்த இடமும் ஒரே மாநிலத்தில் அமைந்துள்ளதாகக் கருதப்படும்.

இந்தியாவுக்கு வெளியில் நிறுவப்பட்ட வங்கி எக்காரணத்தை முன்னிட்டும் இந்தியாவில் தொழில் நடந்துவதை நிறுத்திவிட்டால், மேற்கூறியவாறு ரிசர்வு வங்கியிடம் செலுத்தப்பட்டுள்ள தொகை, இந்தியாவிலுள்ள கடன் கொடுத்தவர்களுடைய கோருரிமை (Claim)க்குப் பற்றுப் பொறுப்பு (Charge) ஆகும். (பிரிவு *11*). இந்தச் சட்டச் சரத்துக்களின் முக்கிய நோக்கம், தக்க அளவு முதல் இல்லாமல் வங்கிகள் துவக்கப்படலாகாது என்பதேயாகும். தக்க அளவு முதல் இல்லாத வங்கிகள் செயல்படும் போது நெருக்கடியேதும் ஏற்பட்டால் அவை விரைவில் நொடித்து வங்கிகள் மீதான பொது நம்பிக்கையைக் குலைக்கும்.

முதல் வெளியீட்டு ஒழுங்கு முறையும், பங்குதாரர்களின் ஓட்டுரிமையும்

இந்தியாவில் தொழில் நடத்தும் வங்கி கீழ்க்காணும் முதல் பற்றிய நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும்.

(i) கம்பெனியின் ஒப்பிய முதல் (Subscribed capital அனுமதித்த முதலில் (Authorized Capital) பாதிக்கு

குறையக்கூடாது; செலுத்திய முதல் (Paid-up Capital) ஒப்பிய முதலில் பாதிக்குக் குறையக் கூடாது. முதல் அதிகரிக்கப்பட்டால் ரிசர்வு வங்கியின் அனுமதியின் பேரில் இரண்டு ஆண்டுகளுக்குள் இந்த நிபந்தனையை நிறைவேற்ற வேண்டும்.

(ii) கம்பெனியின் முதல், சாதாரணப் பங்குகளாக மட்டும் அல்லது 1944 ஜூலை முதல் நாளுக்குமுன் வெளியிடப் பட்ட சலுகைப் பங்குகளும் சாதாரணப் பங்குகளும் மட்டு மாக இருத்தல் வேண்டும். 1937 சனவரி 15 ஆம் நாளுக்குமுன் அமைக்கப்பட்ட வங்கிக் கம்பெனிக்கு மேற்கூறிய நிபந்தனை செல்லாது.

எந்த ஒரு நபரும், வங்கிக் கம்பெனியின் மொத்த வாக் குரிமையில் வாக்கெடுப்பு நடக்கையில் ஒரு விழுக்காடு (One per cent)க்கு மேற்பட்டு வாக்குரிமை அளித்தலாகாது. (பிரிவு 12). இச் சரத்தின் நோக்கம் குறிப்பிட்ட எந்தப் பங்குதாரரும் வங்கி யின் நிருவாகத்தைக் கட்டுப்படுத்துவதைத் தவிர்ப்பதேயாகும்.

வங்கிக் கம்பெனி பங்குவெளியிடும்போது அதை விற்றுத் தருபவர்க்குக் கழிவு, தரகு, தள்ளுபடி அல்லது ஊதியம் தரப் படலாம். இத்தொகை அப்பங்குகளின் செலுத்திய மதிப்புக்கு இரண்டரை விழுக்காட்டிற்கு ($2\frac{1}{2}\%$) மிகக்கூடாது. (பிரிவு 13).

செலுத்தப்படா முதல்மீது பற்றுப்பொறுப்பு ஏற்படுத்தலாகாது

கம்பெனியொன்றின் செலுத்தப்படாத முதல் (unpaid Capital) அதன் வருங்காலச் சொத்தாகும். இச்சொத்து கடன் கொடுத்தவர் அனைவருக்கும் ஒருபிணையம் போல் அமைவதாகும். செலுத்தப்படாத முதலைக் குறிப்பிட்ட கடன் கொடுத்தோர்க்கு மட்டும் பிணையாக ஏற்பாடு செய்து விட்டால் மற்றவர்கட்கு அது மோசடி செய்வது போலாகும். எனவே சட்டம் வங்கிக் கம்பெனி செலுத்தப்படாத முதல் மீது எவ்விதப் பற்றுப் பொறுப்பும் ஏற்படுத்தலாகாது என விதிக்கிறது. (பிரிவு 14). ரிசர்வு வங்கி, வைப்பாளர்களின் நலனுக்கு இது குந்தகம் விளை விக்காது என எழுத்து வழிச் சான்று அளித்தாலன்றி, எந்த வங்கிக் கம்பெனியும் தனது சொத்தின் மீது இழைவுறுபற்றுப் பொறுப்பு (Floating Charge) ஏற்படுத்தலாகாது (பிரிவு 14 A).

வங்கிக் கம்பெனி இலாப ஈவு அளிப்பதற்கு முன், முதலாக்கச் செலவு (Capitalised expenditure) அனைத்தையும் சரிக்கட்ட

வேண்டும். அதாவது அத்தொகையை இலாபத்திலிருந்து எடுத்து விடவேண்டும். தொடக்கச் செலவுகள், அமைப்புச் செலவுகள், பங்கு விற்பனைக் கழிவு, தரகு, நட்டங்கள், புலனுகும்சொத்து ஏதும் பெறக்கூடாத செலவு ஆகிய முதலாக்கச் செலவில் அடங்கும் (பிரிவு 15).

பிணைந்த இயக்குநர் ஒழிப்பு முறை

ஒரே நபர் பல வங்கிகளில் இயக்குநராக இருப்பதும், பல கம்பெனிகளிலும் அவர் இயக்குநராக இருப்பதும் பல விரும்பத் தகாத செயல்களுக்கு இடந்தர ஏதுவாக அமைகிறது. தமக்கு ஈடுபாடுள்ள கம்பெனிகள் தாராளமாகக் கடன் வசதிகள் பெறவும் பணத்தை முதலீடு செய்வதில் முறையற்ற கொள்கைகளைக் கடைப்பிடிக்கவும் வாய்ப்புகள் ஏற்படுகின்றன. இந்தநிலை ஏற்படாமலிருக்க, வங்கியொன்றில் இயக்குநராக இருக்கும் நபர் வேருெரு வங்கியிலும் இயக்குநராக இருத்தலாகாது; அல்லது பங்குதாரர்களின் மொத்தவாக்குரிமையில் 20 விழுக்காட்டிற்கு மேல் வாக்குரிமை பெற்றுள்ள கம்பெனிகளில் இயக்குநராக இருத்தலாகாது (பிரிவு 16).

காப்பு நிதி

எந்த ஒரு கம்பெனிக்கும் முதல் அல்லாமல் வேறு வகையான நிதியும் அதன் தொழிலுக்குத் தேவைப்படுகிறது. எந்த அளவுக்குக் கம்பெனி தன் முயற்சிகொண்டே மேலும் தன் நிதிநிலையைப் பலப் படுத்திக் கொள்ளுகிறதோ அந்த அளவுக்கு அது தன்னம்பிக்கையுடன் வளர்ச்சிப்பாதையில் போய்க் கொண்டிருக்க முடியும். ஒரு நிறுமம் (கம்பெனி) பெறும் இலாபம் அதன் முயற்சியால் ஈட்டியதாகும். இலாபத்தில் கணிசமான ஒரு அளவு தொகையை ஆண்டுக்கு ஆண்டு ஒதுக்கி வந்தால் அப்பணமும் நாளடைவில் பெரிய தொகையாகித் தொழிலுக்கு ஊட்டமும் உறுதியும் தரும். குறிப்பாக வங்கித் தொழிலில் இவ்வகையான இலாப ஒதுக்கல் பெரும் பயனளிப்பதாயுள்ளது. வைப்பாளர்களின் நம்பிக்கையைப் பலப்படுத்தவும், வங்கியின் திடநிலையை உறுதிப்படுத்தவும், காப்பு நிதி உதவுகிறது. இந்தியாவில் நிறுவப்பட்ட வங்கிக் கம்பெனி ஒவ்வொன்றும் தனக்குக் கிடைக்கும் இலாபத்திலிருந்து இலாப ஈவு அளிக்குமுன், இலாபத்தின் 20 விழுக்காட்டிற்குக் குறையாத தொகையை காப்பு நிதியில் சேர்க்க வேண்டும். மத்திய அரசு, ரிசர்வு வங்கியின் பரிந்துரையின் பேரில், வைப்புப் பொறுப்புக்களோடு ஒப்பு நோக்கும் போது போதுமான அளவு செலுத்திய முதலும காப்பும் உள்ள வங்கிகளுக்கு இந்த விதி

யினின்று விலக்களிக்கலாம். காப்பு நிதியிலுள்ள தொகையும், பங்கு முனைமக் கணக்கில் (Share Premuim Account) உள்ள தொகையும் சேர்ந்து வங்கியின் செலுத்திய முதலுக்குக் குறையாமலிருந்தால் தான் மத்திய அரசு மேற்கூறிய விலக்களிக்கலாம். பங்கு முனைமக் கணக்கிலிருந்து அல்லது காப்புநிதியிலிருந்து வங்கி தொகை எதனையும் ஒதுக்கினால் அச் செய்தியை ஒதுக்கிய 21 நாட்களுக்குள் ரிசர்வு வங்கிக்கு அறிவித்தல் வேண்டும். தக்க காரணங்காட்டினால் ரிசர்வு வங்கி தனக்குக் காலத்தில் அறிக்கை அனுப்பாமையைப் பொறுத்தமையலாம் அல்லது காலத்தை நீட்டித் தரலாம் (பிரிவு 17).

காப்பு ரொக்கம் (Cash Reserve)

பின்னிணைப்புப் பட்டியலில் இல்லாத வங்கி (Non-scheduled bank) தனது தவணை, கேட்புப் பொறுப்புக்களில் குறைந்தது மூன்று விழுக்காடு அளவிற்கு காப்பு ரொக்கம் வைத்திருக்க வேண்டும். இந்தத் தொகை தன்னிடமோ அல்லது ரிசர்வு வங்கியிடமுள்ள கணக்கிலோ அல்லது இந்தய ஸ்டேட் வங்கி அல்லது மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட எந்த வங்கியிடமுள்ள கணக்கிலோ அல்லது இத்தொகையில் ஒருபகுதியைத் தன்னிடம் ரொக்கமாகவும் மற்றப் பகுதியை மேற்கண்ட வங்கிக் கணக்கிலும் வைத்திருக்க வேண்டும். எவ்வளவு தொகை காப்பு ரொக்கமாக வைக்கப்பட்டிருந்தது என்ற அறிக்கையை ஒவ்வொரு மாதமும் 15 தேதிக்கு முன் தாக்கல் செய்ய வேண்டும். அவ்வறிக்கையில் கடந்த மாதம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் இருந்த காப்பு ரொக்கம், தவணை கேட்புப் பொறுப்புக்கள் (Time and demand liabilities) ஆகியவை குறிக்கப் பட்டிருத்தல் வேண்டும். மாற்று முறையாவணச் சட்டப் (Negotiable Instruments Act) படி வெள்ளிக் கிழமை விடுமுறை நாளாக இருந்தால் அதற்கு முந்தைய வேலை நாள் இறுதியில் இருந்த நிலைமையைக் குறித்தல் வேண்டும் (பிரிவு 18).

வங்கிக் கம்பெனிக்குத் துணைக்கம்பெனி

எந்தவகையான நடவடிக்கைகளுக்கு வங்கிக் கம்பெனி துணைக் கம்பெனியொன்றை உருவாக்கலாம்? வங்கிக் கம்பெனி சில குறிப்பிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள மட்டுமே துணைக் கம்பெனிகளை உருவாக்கலாம். அவையாவன :- பொறுப்புரிமை அமைப்புக் (Trust)களை மேற்கொள்ளவும் நிறைவேற்றவும்: நிறைவேற்றுளர், பொறுப்புரிமையர் அல்லது மற்றப்படிச் சொத்து நிருவாகத்தை மேற்கொள்ளவும்; பாதுகாப்புப் பெட்டகம் ஏற்

படுத்தவும்; ரிசர்வு வங்கியிடம் எழுத்தால் முன் அனுமதி பெற்று இந்தியாவுக்கு வெளியில் மட்டும் வங்கித் தொழில் புரியவும் மற்றும் வங்கித் தொழிலைச் சார்ந்த நடவடிக்கை எதனையும் மேற் கொள்ளவும் மட்டுமே துணைக் கம்பெனி ஏற்படுத்தப் படலாம். மேற்கண்ட நடவடிக்கைகளுக்கன்றி, வங்கிக் கம்பெனி தனது செலுத்திய முதலும் காப்பும் சேர்ந்து 30 விழுக்காடு அல்லது மற்றொரு கம்பெனியில் செலுத்திய முதலில் 30 விழுக்காடு—இதில் எது குறைவானதோ அந்த அளவுக்கு மிகுதியாகப் பிணையராகவோ (Pledgee), அடைமானம் பெறுபவராகவோ (Mortgagee) அல்லது முழு உரிமையராகவோ மற்றக் கம்பெனியின் பங்குகளை வைத்திருத் தலாகாது. மற்றும் வங்கியின் நிருவாகர் அல்லது நிருவாக இயக்குநருக்குத் தொடர்புள்ள அல்லது அக்கறையுள்ள எந்தக் கம்பெனியின் பங்கையும வங்கிக் கம்பெனி வைத்திருத்தலாகாது. (பிரிவு 19).

கடனளிப்பதன் மீதான கட்டுப்பாடுகள்

தன்னுடைய பங்குகளைப் பிணையமாக ஏற்றுக் கொண்டு எந்த வங்கிக் கம்பெனியும் கடனளித்தல் கூடாது. தனது இயக்கு நருக்கோ ; கூட்டாளி, நிருவாகர், ஊழியர் அல்லது பொறுப் புறுதி அளிப்பவர் என்ற எந்த நிலையிலும் இயக்குநர் அக்கறை கொண்டுள்ள நிறுவனத்திற்கோ; இயக்குநர், நிருவாக முகவர், நிருவாகர், ஊழியர் அல்லது பொறுப்புறுதி அளிப்பவர் அல்லது பேரளவு அக்கறை கொண்டுள்ளவர் என்ற நிலையில் வங்கி இயக்கு நருள்ள மற்றொரு கம்பெனிக்கோ ; கூட்டாளி அல்லது பொறுப் புறுதி அளிப்பவர் என்று இயக்குநரோடு தொடர்புற்ற தனி ஆளுக்கோ அல்லது இவர்கள் சார்பாகவோ கடன் தருவதற்கு வங்கிக் கம்பெனி பொறுப்பு ஏற்றுக் கொள்ளலாகாது. 1968 ஆம் ஆண்டு வங்கிச் சட்டத்திருத்தம் அமுலுக்கு வருமுன் தவருதாக உறுதியளிக்கப்பட்ட கடன்களைக் கிரமப்படி தவணைத் தேதிக்குள் வசூலிக்க வேண்டும்; தவணை குறிக்கப்படாத கடன்களுக்கு ஓராண்டு தவணை எனக் கொள்ளப்படல் வேண்டும், சம்பந்தப் பட்ட இயக்குநர் வங்கியிலிருந்து எக்காரணம் பற்றி விலகி விட் டாலும் மேற்கண்ட கட்டுப்பாடுகள் அவர் விலகிய நாளிலிருந்து கடைப்பிடிக்கப்பட வேண்டுவதில்லை. மேற்கூறிய கடன் எதனையும் ரிசர்வு வங்கியின் அனுமதியில்லாமல் தள்ளுபடி செய்தலாகாது. அப்படித் தள்ளுபடி செய்தாலும் அது செல்லாது. மேற் குறிப் பிட்ட கடன் குறித்த தவணைக்குள் செலுத்தப் படாவிட்டால், தவணை கடந்த நாளிலிருந்து வங்கிக் கம்பெனியின் இயக்குநர், பதவியிலிருந்து விலகியவராகக் கொள்ளப்படுவார். (பிரிவு 20).

இயக்குநர் தரவேண்டிய கடனேயோ; இயக்குநர், கூட்டாளி, நிருவாக முகவர், பொறுப்புறுதி அளிப்பவர் என்ற முறையில் இயக்குநர் அக்கறை கொண்ட நிறுவனம் அல்லது கம்பெனி தர வேண்டிய கடனேயோ; தனது கூட்டாளி அல்லது தனக்குப் பொறுப்புறுதி அளிப்பவர் என்ற முறையில் இயக்குநருக்கு வேண்டிய தனி ஆள் தர வேண்டிய கடனேயோ எந்த வங்கிக் கம்பெனியும் ரிசர்வு வங்கியின் முன் அனுமதியின்றி தள்ளுபடி செய்தலாகாது. இச்சட்டத்தை மீறிச் செய்யும் தள்ளுபடி செல்லாது: இதனல் பயன் ஏதும் விளையாது (பிரிவு 20 A).

வங்கிக் கம்பெனிகள் அளிக்கும் கடன்கள் மீது கட்டுப்பாடு

பொது நலங்கருதி அல்லது வைப்பாளர் நலங்கருதி அல்லது வங்கிக் கொள்கை கருதி ரிசர்வு வங்கி, வங்கிக் கம்பெனிகள் கொடுக்கும் கடன் வசதி பற்றிய கொள்கைகளை வகுக்கலாம். அக்கொள்கையை ஒரு வங்கிக் கம்பெனியோ அல்லது எல்லா வங்கிகளுமோ கடைப்பிடிக்க வேண்டி வரலாம். அக்கொள்கையைச் சட்டப்படி குறிப்பிட்ட வங்கியோ அல்லது எல்லா வங்கிகளுமோ கடைப்பிடித்தே ஆக வேண்டும்.

இன்ன காரியங்களுக்குக் கடன் கொடுக்கலாம் அல்லது கொடுக்கக் கூடாது.

பிணைகளின் பேரில் கடன் தரும் போது இவ்வளவு விழுக்காட்டிற்குக் குறையாமல் பிணைகளின் மதிப்பு இருக்க வேண்டுமென நிருணயிப்பது;

குறிப்பிட்ட ஒரு கம்பெனி, நிறுவனம், நபர்களின் கூட்டு Association of persons) அல்லது தனி ஆளுக்கு உயர்ந்தளவு எனக் குறிப்பிட்ட தொகைக்கு மேல் கடன் வசதி அளிப்பதைத் தவிர்ப்பது;

குறிப்பிட்ட ஒரு கம்பெனி, நிறுவனம், நபர்களின் கூட்டு அல்லது தனி ஆள் சார்பாக வங்கி தரக்கூடிய உச்ச அளவு பொறுப்புறுதியை நிருணயிப்பது;

கடன் மீதான நிபந்தனை, வட்டி விகிதம் போன்றவைகளை நிருணயிப்பது; போன்ற அதிகாரங்களைச் செலுத்திக் குறிப்பிட்ட வங்கியையோ அல்லது வங்கிகளையோ அல்லது எல்லா வங்கிகளையுமோ ரிசர்வு வங்கி கட்டுப்படுத்தலாம். இச்சட்டப் பிரிவின்

படி இடப்படும் ஆணைப்படி ஒவ்வொரு வங்கியும் செயல்பட வேண்டும் (பிரிவு 21).

வங்கிக் கம்பெனிகளுக்கு உரிமம் அளிப்பது (Licensing of Banking Companies)

ரிசர்வு வங்கியிடமிருந்து உரிமம் பெறுமல் எந்த ஒரு கம்பெனியும் வங்கித் தொழில் நடத்தலாகாது. எல்லா வங்கிகளும் உரிமம் பெறுவதற்கு எழுத்து மூலம் விண்ணப்பம் ஒன்றை ரிசர்வு வங்கிக்கு அனுப்ப வேண்டும். உரிமம் தர இயலாது என்று ரிசர்வு வங்கி எழுத்தால் அறிவித்தாலன்றி, உரிமம் பெறும் வரை, சட்டம் அமுலுக்கு வருமுன் இருந்து வரும் எந்த வங்கியும் தன் தொழிலை நடத்தி வரலாம். புதிதாக ஏற்படுத்தப்படும் வங்கி உரிமம் பெற்ற பின்னரே தொழிலைத் துவங்கலாம்.

உரிமம் வழங்குமுன், வங்கியின் ஏடுகளை ஆய்ந்தோ அல்லது வேறு வகையிலோ கீழ்க்கண்ட நிபந்தனைகள் நிறைவேறியுள்ளனவா என்று ரிசர்வு வங்கி தெரிந்து கொள்ளும்:

(i) தற்போதுள்ள அல்லது இனிவரவுள்ள வைப்பாளர்களுடைய தொகையைத் திரும்பிப் பெறும் காலம் வரும் போது கம்பெனி அவற்றை முழுமையாகக் கொடுக்கும் திறனுள்ளது.

(ii) தற்போதுள்ள அல்லது இனிவரவுள்ள வைப்பாளர்களின் நலனுக்கு ஏதும் குந்தகம் ஏற்படாதவாறு கம்பெனியின் நடப்பு இருக்கிறது அல்லது இருந்து வரும் என்ற நிலை.

(iii) இந்தியாவுக்கு வெளியில் நிறுவப்பட்ட கம்பெனியாகுமேல்; யானல், அக் கம்பெனி இந்தியாவில் தொழில் புரிவது மக்கள் நலத்திற்காக அமைய வேண்டும்; மேலும் அக் கம்பெனி நிறுவப்பட்ட நாட்டின் அரசு அல்லது சட்டம் இந்தியாவில் நிறுவப்பட்ட வங்கிகள் மீது ஏதும் பாரபட்சம் காட்டக் கூடாது; மற்றும் அக்கம்பெனி இச் சட்டத்திலுள்ள விதிகளின்படி தொழில் புரிய வேண்டும்.

வழங்கிய உரிமத்தை ரத்துச் (cancel) செய்யும் உரிமை ரிசர்வு வங்கிக்கு உண்டு. கம்பெனி இந்தியாவில் வங்கித் தொழில் புரிவதை நிறுத்தி விட்டாலும் அல்லது அதன் மீது இடப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறினும் உரிமம் ரத்துச் செய்யப்படலாம். காலந் தாழ்த்துவது வங்கியின் வைப்பாளர்களின் நலனுக்குப் பாதகமாகக் கூடும் என ரிசர்வு வங்கி கருதினலன்றி

நிறைவேற்றத் தவறிய நிபந்தனை எதனையும் குறிப்பிட்ட முறையில் நிறைவேற்ற வங்கிக்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்படும். உரிமத்தை ரத்து செய்யும் முடிவினால் பாதிக்கப்பட்ட வங்கி, ரிசர்வு வங்கியின் ரத்து செய்யும் முடிவு கிடைக்கப் பெற்ற முப்பது நாட்களுக்குள் மத்திய அரசுக்கு மேன்முறையீடு (Appeal) செய்யலாம். உரிமம் ரத்துச் செய்யும் முடிவுகளில் மேன்முறையீடு ஏதும் இருப்பின் மத்திய அரசின் முடிவே முடிந்த முடிவாகும்; மேன்முறையீடு ஏதும் இல்லா நிலையில் ரிசர்வு வங்கியின் முடிவே முடிந்த முடிபாகும் (பிரிவு 22).

புது இடங்களில் தொழில் துவக்குவது இருந்துவரும் தொழிலிடத்தை மாற்றுவது பற்றிய கட்டுப்பாடுகள்

ரிசர்வு வங்கியின் முன் அனுமதியின்றி எந்த ஒரு வங்கியும் புது இடத்தில் தொழிலை ஆரம்பிக்கக் கூடாது; ஒரே மாநகரம், நகரம் அல்லது கிராமத்துக்குள்ளேயிருக்கும் தொழிலிடத்தைத் தவிர வேறு எந்த இடத்துக்கும் தொழிலிடத்தை மாற்றுவது கூடாது.

இந்தியாவில் நிறுவப்பட்ட எந்த வங்கிக் கம்பெனியும், இந்தியாவுக்கு வெளியில் புதியதொரு தொழிலிடம் ரிசர்வு வங்கியின் முன் அனுமதி பெறாமல், திறக்கலாகாது; அந்நாட்டில் முன்னரே இருக்கும் இடத்திலிருந்து தொழிலை மற்றோர் இடத்திற்கு மாற்றவும் கூடாது; ஒரே மாநகர், நகர் அல்லது கிராமத்து எல்லைக்குள் தொழிலிடத்தை மாற்றுவதற்கு ரிசர்வு வங்கியின் முன் அனுமதி வேண்டுவதில்லை.

முன்னரே தொழில் புரிந்து வரும் மாநகர், நகர் அல்லது கிராமம் அல்லது அவற்றைச் சுற்றியுள்ள இடங்களில், பொருட்காட்சி, மாநாடு அல்லது பெருவிழா எதனையும் ஒட்டிப் பொது மக்கள் வங்கி வசதிகள் பெறும் பொருட்டு, ஒரு மாதத்திற்கு மிகாத காலத்திற்குத் தற்காலிகத் தொழிலிடம் ஒன்றைத் திறப்பதற்கு ரிசர்வு வங்கியின் முன் அனுமதி தேவையில்லை.

இவ்வகையில் புதுஇடத்தில் தொழிலைத் துவக்கவோ அல்லது முன்பிருக்கும் தொழிலிடத்தை மாற்றவோ அனுமதிக்கு முன்னர், ரிசர்வு வங்கிக்கு இதனால் பொதுமக்களுக்கு நன்மை உண்டாகும் என்று தோன்ற வேண்டும். மற்றும் வங்கியின் நிதி நிலைமை, நிருவாகத் திறன், போதிய அளவு முதலீடு, வருமான வாய்ப்புப் போன்ற செய்திகளையும் கருத்தில் கொண்டுதான் ரிசர்வு வங்கி

அனுமதி வழங்கும். பல நிபந்தனைகட்கு உட்பட்டு அனுமதி வழங்கப்படலாம்; நிபந்தனைகளை நிறைவேற்றுவிடில் அனுமதி ரத்து செய்யப்படலாம்; அனுமதியை ரத்து செய்யுமுன், வங்கிக்குத் தரப்பட்ட அனுமதியை ஏன் ரத்து செய்யலாகாது என்ற அறிக்கையை விடுத்து அதற்கு விடைதரும் வாய்ப்பையும் அளிக்கலாம். (பிரிவு 23).

மாற்றியல் சொத்துகள் (Liquid Assets)

சொத்துகளில் குறிப்பிட்ட ஒரு விழுக்காட்டைக் குறிப்பிட்ட வகையில் வைத்திருத்தல்:-

தம்முடைய பொறுப்புக்களைத் தீர்க்க வங்கிகள் போதிய அளவு பணமும், விரைவில் ரொக்கமாக்கக் கூடிய சொத்துகளும் வைத்திருத்தல் அவசியம். இதுவே நல்ல வங்கிக் கொள்கையுங் கூட ஆகும். இக் கொள்கையைச் சட்டமே வற்புறுத்தும் வகையில் சில பிரிவுகள் அமைந்துள்ளன. வங்கி ஒழுங்காற்றுச் சட்டம் அமுலுக்கு வந்த இரண்கு ஆண்டுகள் கழித்த பின்னர் ஒவ்வொரு வங்கி நிறுமமும் தனது இந்தியாவிலுள்ள தவணை, கேட்பு பொறுப்புக்களில் நடப்புச் சந்தை விலைப்படி 20% விழுக்காட்டிற்குக் குறையா மதிப்புக்கு ரொக்கம், தங்கம் அல்லது வில்லங்கமற்ற அங்கீகரிக்கப்பட்ட பிணையங்கள் இந்தியாவில் வைத்திருக்க வேண்டும். 1962 ஆம் ஆண்டு வங்கிக் கம்பெனி திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்த இரண்டு ஆண்டுகட்குப் பின்னர் இந்த விழுக்காட்டு அளவு 25 ஆக உயர்த்தப்பட்டது. இந்த 25 விழுக்காடு ரொக்கக் காப்பான மூன்று விழுக்காட்டினின்றும் தனிப்பட்டது. இவ் விதியினை வங்கிகள் வழுவாமல் கடைப்பிடிப்பதைக் கண்காணிக்க, ரிசர்வு வங்கி மாதந்தோறும் 15 தேதிக்குள் முன் சென்ற மாதத்தில் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையன்றும் இருந்த சொத்துகளின் நிலையைப் பற்றி ஓர் அறிக்கை அனுப்ப வங்கிகளைக் கோருகிறது. (பிரிவு 24).

ஒவ்வொரு வங்கியின் இந்தியாவிலுள்ள தவணை, கேட்புப் பொறுப்புக்களில் 75 விழுக்காட்டிற்குக் குறையாத அளவுக்குச் சொத்துகள் இந்தியாவில் இருத்தல் வேண்டும். காலாண்டுக்கு ஒரு முறை இதைப் பற்றிய விவரம் ரிசர்வு வங்கிக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும். இந்தியாவிலுள்ள வைப்பாளர்களின் நலனைக் காக்கும் வகையில் இவ்விதிவகை அமைந்துள்ளது. (பிரிவு 25).

கடந்த பத்தாண்டுகளாக ஏதும் நடவடிக்கைகளே இல்லாத கணக்குகள் பற்றிய விவரங்களை ரிசர்வு வங்கிக்கு, வங்கிக்

கம்பெனிகள் குறிப்பிட்ட அட்டவணைப்படி அனுப்பவேண்டும் (பிரிவு 26).

ஒவ்வொரு மாத இறுதி வெள்ளிக் கிழமையிலும் இந்தியாவிலுள்ள சொத்துகள் பொறுப்புக்கள் நிலைபற்றிய அறிக்கை வங்கி ரிசர்வு வங்கிக்கு அடுத்தமாத முடிவுக்குள் அனுப்பவேண்டும். இஃதன்றி, வேண்டிய பொழுது வேண்டிய செய்திகளையும் அறிக்கைகளையும் வங்கிகளிடமிருந்து பெற ரிசர்வு வங்கிக்கு உரிமையுண்டு. இச்செய்தி, அறிக்கை எல்லாம் வங்கி ஈடுபட்டுள்ள தொழிலைப் பற்றியோ அல்லது அதனுடன் தொடர்புற்ற நடவடிக்கைகளைப் பற்றியோ இருக்கலாம். வங்கி செய்துள்ள முதலீடுகள்; தொழில்துறை, வணிகம், விவசாயம். இவற்றிற்குத் தரப்பட்டுள்ள கடன்கள் ஆகிய செய்திகள் பற்றி அரையாண்டுக்கு ஒரு முறை செய்திகள் கோரிப் பெறும் அதிகாரம் ரிசர்வு வங்கிக்கு உண்டு (பிரிவு 27).

இச்சட்டப்படி பெற்ற எந்தச் செய்தியையும் பொதுநலங்கருதி ரிசர்வு வங்கி வெளியிடலாம் (பிரிவு 28).

கணக்குகள், இருப்புநிலைக் குறிப்பு (Accounts and Balance Sheet)

ஒவ்வொரு பட்டிகை ஆண்டு (Calendar year) முடிவுற்றதும் வங்கிக் கம்பெனி தனது இலாப நட்டக்கணக்கையும், இருப்பு நிலைக் குறிப்பையும் தயார் செய்தல் வேண்டும். இந்தியாவில் நிறுவப்பட்ட வங்கிக் கம்பெனி தயாரிக்கும் கணக்கு, அதன் தொழில் அனைத்தையும் காட்டுவதாக இருக்க வேண்டும். வெளி நாட்டில் நிறுவப்பட்ட வங்கி தயாரிக்கும் கணக்கு இந்தியாவிலுள்ள தனது எல்லாக் கிளைகளிலும் மேற்கொள்ளப்பட்ட எல்லா நடவடிக்கைகளையும் கணக்கில் கொண்டு வந்ததாக அமைய வேண்டும். இந்தியாவில் அமைக்கப்பட்ட வங்கிக் கம்பெனியின் இலாப நட்டக்கணக்கு, இருப்பு நிலைக்குறிப்பு ஆகியவற்றில் அதன் நிருவாகர் அல்லது தலைமை அலுவலரும், மூன்றுக்கும் அதிகமான இயக்குநர்களிருப்பின் குறைந்தது மூன்று இயக்குநர்களும், மூன்றுக்குக் குறைவான இயக்குநர்களிருப்பின் எல்லா இயக்குநர்களும் கையொப்பமிடவேண்டும். வெளி நாட்டில் நிறுவப்பட்ட வங்கிக் கம்பெனியாக இருந்தால் இந்தியாவில் உள்ள தலைமை அலுவலக நிருவாகர் அல்லது முகவர் இக்கணக்குகளில் கையொப்பமிடவேண்டும் (பிரிவு 29).

இலாப நட்டக்கணக்கும் இருப்புநிலைக்குறிப்பும் அமைய வேண்டிய முறையும் உருவும் இச்சட்டத்தின் மூன்றும் பின் இணை

வில் குறிக்கப் பட்டுள்ளன. எல்லா வங்கிகளும் பட்டிகை ஆண்டு முடிவுறும் நாளிலுள்ளபடி கணக்குகளைத் தயாரிக்க வேண்டுமெனச் சட்டம் அமைந்தது வங்கிகளிடையே நடைபெறக் கூடிய தவறான பழக்கங்களைத் தவிர்க்கிறது.

தணிக்கை

வங்கியின் இலாபநட்டக் கணக்கு, இருப்புநிலைக்குறிப்பு ஆகியவற்றைக், கம்பெனிகளைத் தணிக்கை செய்யத் தகுதியுள்ள தணிக்கையாளர், தணிக்கை செய்யக் கடவர். வங்கிக் கம்பெனி தணிக்கையரை நியமனம், மறுநியமனம் அல்லது நீக்கல் செய்ய ரிசர்வு வங்கியின் முன் ஒப்புதலைப் பெறக் கடவது. பொது நலன் கருதியோ அல்லது வைப்பாளர் நலன்கருதியோ அல்லது வங்கியின் நலங்கருதியோ, ரிசர்வு வங்கி, தணிக்கையரைக் குறிப்பிட்ட ஒரு நடவடிக்கை அல்லது நடவடிக்கைகளைத் தணிக்கை செய்யுமாறு ஆணையிடலாம்; ஆணையின்படி செயல்புரிந்து அத்தணிக்கைபற்றிய அறிக்கையை ரிசர்வு வங்கிக்குத் தணிக்கையர் அனுப்பவேண்டும். ஒரு நகலைக் கம்பெனிக்கு அனுப்ப வேண்டும். ரிசர்வு வங்கியின் ஆணைப்படி செய்யப்பட்ட தணிக்கைச் செலவுகளை வங்கிக் கம்பெனி ஏற்கக் கடவது. கம்பெனிச் சட்டத்தில் தணிக்கையருக்குள்ள அதிகாரம், கடமை, பொறுப்பு, தண்டம் எல்லாம் வங்கித் தணிக்கையருக்குப் பொருந்தும்.

கம்பெனிச் சட்டத்தில் கண்டவாறு தணிக்கையர் தமது அறிக்கையில் குறிப்பிட வேண்டுவன எல்லாவற்றையும் குறிப்பிடுவதுடன், இந்தியாவில் நிறுவப்பட்ட வங்கிக் கம்பெனியைப் பற்றித் தம் அறிக்கையில் குறிப்பிட வேண்டுவன :

(i) தான் கேட்ட செய்திகளும் விளக்கங்களும் மனநிறை வளிக்கின்றனவா இல்லையா.

(ii) தம் கவனத்திற்கு வந்த கம்பெனியின் நடவடிக்கைகள் கம்பெனியின் அதிகாரவரம்பிற்குட்பட்டுள்ளனவா இல்லையா.

(iii) கம்பெனியின் கிளை அலுவலகங்களிலிருந்து பெற்ற விவரங்கள் தம் தணிக்கைக்குப் போதுமானதா இல்லையா.

(iv) குறிப்பிட்ட காலத்திற்குத் தயாரிக்கப் பட்டுள்ள இலாப நட்டக் கணக்கு உண்மையான இலாபம் அல்லது நட்டத்தைக் காட்டுகிறதா இல்லையா.

(v) கம்பெனியின் பங்குதாரர்களின் கவனத்துக்குக் கொண்டு வர வேண்டும் எனத்தணிக்கையர் கருதும் எச்செய்தியும். (பிரிவு 30)

வங்கியின் கணக்கு, இருப்புநிலைக்குறிப்பு ஆகியவற்றைத் தணிக்கையர் அறிக்கையுடன் குறிப்பிட்ட முறையில் வெளியிடுதல் வேண்டும். அதில் மூன்று படிகளை ரிசர்வு வங்கிக்கு அனுப்ப வேண்டும். கணக்கு எந்தக்காலத்திற்குத் தயாரிக்கப்பட்டுள்ளதோ அந்தக்காலம் முடிவுற்ற நாளிலிருந்து மூன்று திங்களுக்குள் ரிசர்வு வங்கிக்கு இவை அனுப்பப்படல் வேண்டும். இந்த மூன்று திங்கள் கால வரையறையை மேலும் மூன்று திங்களுக்கு ரிசர்வு வங்கி நீட்டித்துத் தரலாம். (பிரிவு 31). ரிசர்வு வங்கிக்குக் கணக்கு, இருப்புநிலைக் குறிப்பு, தணிக்கையர் அறிக்கை ஆகியவற்றை அனுப்பும் அதே சமயத்தில் மூன்று படிகளைக் கம்பெனிப் பதிவாளருக்கும் அனுப்ப வேண்டும். இதற்குப் பின் பொதுக் கம்பெனி இம்மூன்று ஆவணங்களையும் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டுவதில்லை; தனிக் கம்பெனி இருப்பு நிலைக்குறிப்பு, தணிக்கையர் அறிக்கை ஆகியவற்றைத் தாக்கல் செய்ய வேண்டுவதில்லை. (பிரிவு 32).

வெளிநாட்டில் அமைக்கப்பட்ட வங்கி ஒவ்வொன்றும் தனது இலாபநட்டக் கணக்கு, இருப்புநிலைக்குறிப்பு ஆகியவற்றை முன்பு கூறிய வகையில் தயார் செய்து அதன் முதன்மை அலுவலகத்திலும் ஒவ்வொருகிளை அலுவலகத்திலும் பொது மக்கள் பார்க்கக் கூடிய இடத்தில் பார்வைக்கு வைத்திருக்க வேண்டும். குறிப்பிட்ட ஆண்டின் கணக்குகளை மறு ஆண்டு ஆகஸ்டு முதல் திங்கட் கிழமைக்குள் இம்மாதிரி பார்வைக்கு வைத்திருக்க வேண்டும். மறு ஆண்டு கணக்குகள் தயாராகிப் பார்வைக்கு வைக்கப்படும் வரை இந்த ஆண்டு வைக்கப்பட்ட கணக்குகளைத் தொடர்ந்து வைத்திருக்க வேண்டும். மேலும் இவ்வகை வங்கி தனது வங்கித் தொழில் பற்றிய தணிக்கை செய்யப்பட்ட இலாப நட்டக்கணக்கு இருப்புநிலைக்குறிப்பு ஆகியவற்றையும் மேற் கண்டவாறு பார்வைக்கு வைத்திருத்தல் வேண்டும். (பிரிவு 33). இந்தியாவிலுள்ள வைப்பாளர்களுக்கு வெளிநாட்டு வங்கிகளின் நடவடிக்கைகள், அவற்றின் தொழில் நிலை முதலியன தெரிந்திருந்தால் தான் அவர்கள் வங்கியின் உறுதித்தன்மையை அறிந்து கொள்ள இயலும். தாம் கணக்கு வைத்திருக்கும் வெளிநாட்டு வங்கி எவ்வகையில் செயல்படுகிறது என்று வைப்பாளர் தெரிந்து கொள்ளவும் இவ்விதிவகை உதவுகிறது.

இரகசிய ஆவணங்களைக் காட்டுதல்

வங்கிக்கம்பெனிகள் தாம் வெளியிடும் இருப்பு நிலைக்குறிப்பில் காட்டாத வரா, ஐயக்கடன் ஒதுக்கு, மற்றவகை ஒதுக்குகள் (Reserves) முதலியன பற்றிய செய்திகளை இரகசியமாக வைத்திருப்பது மரபு. ஆகவே இவற்றைப் பற்றிய கணக்கு ஏடுகள், ஆவணங்கள் முதலியவற்றை ஆய்வுக்கோ அல்லது பார்வைக்கோ காட்டுவதிலிருந்து வங்கிக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. தொழில் தகராறுகள் சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் சம்பந்தமாகக் கூட இந்த விலக்கு செல்லுபடியாகும். எந்த ஆணையமாவது, குறிப்பிட்ட வங்கி ஒதுக்கியுள்ள ஒதுக்குத் தொகையைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமா என்று தீர்மானிக்க வேண்டியிருந்தால், அது ரிசர்வு வங்கியிடம் இக் கேள்வியைத் தந்து விடை கோரலாம். நல்ல திடமான வங்கிக் கொள்கையின் அடிப்படையில் இக்கேள்வியை ஆராய்ந்து குறிப்பிட்ட வங்கி ஏற்படுத்தியுள்ள ஒதுக்கினைக் கணக்கில் சேர்த்துக் கொள்ளலாம் அல்லது சேர்த்துக் கொள்ள வேண்டாம் என்று ரிசர்வு வங்கி சான்று வழங்கும். ரிசர்வு வங்கி அளிக்கும் சான்று முடிவானது. இரக்சிய ஆவணங்களைப் பார்வைக்குக் காட்டாதிருக்க அளிக்கப்படும் இவ்விதிவிலக்கு இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, ரிசர்வு வங்கி, இந்திய ஸ்டேட் வங்கி, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கி, மற்றும் துணைவங்கிகள் ஆகியவற்றிற்கும் பொருந்தும். (பிரிவு 34).

ஆய்வு (Inspection)

வங்கித் தொழில் இயங்கி வரும் அடிப்படையை ஒரு சொல்லில் கூறவேண்டுமானால் அச்சொல் 'நம்பிக்கை' ஆகும். உலகில் பற்பல தொழில்களும் நடவடிக்கைகளும் நம்பிக்கையின் அடிப்படையில் இயங்கி வந்தாலும் வங்கித் தொழிலைப்போன்ற அளவுக்கு எந்தத் தொழிலும் நம்பிக்கையைச் சார்ந்திருப்பதில்லை. பல்லாயிரக்கணக்கான மக்கள் தாம் வருந்தி ஈட்டிய பொருளனைத்தையும் ரொக்கமாக வங்கியில் செலுத்தி வைப்பதே இதற்குச் சான்றாகும். வங்கியில் தம் பணம் மிகவும் பாதுகாப்பாக இருக்கும்; சிலவகை வைப்புகள் மீது வட்டியும் கிடைக்கும்; வேண்டும்பொழுது வேண்டிய அளவு பணத்தைத் திரும்ப எடுத்துக் கொள்ளலாம் என்றெல்லாம் நம்பித்தானே மக்கள் வங்கியில் கணக்கு ஏற்படுத்திப் பணத்தைச் செலுத்திவருகின்றனர். அவர்களுடைய நலனைப் பாதுகாக்கும் வகையில், சட்டம் சில வழிவகைகளைச் செய்துள்ளது. அவற்றுள் முக்கியமானது ஆய்வு எனலாம் ரிசர்வு வங்கிதான் இந்த ஆய்வு நடத்தும். எப்போது விரும்

ணுலும் ரிசர்வு வங்கி ஆய்வு மேற்கொள்ளலாம். மத்திய அரசு ஆணையிட்டால் ரிசர்வு வங்கி ஆய்வு மேற்கொள்ள வேண்டுவது கட்டாயமாகிறது. தனது அலுவர்களைக் கொண்டு ரிசர்வு வங்கி ஆய்வு நடத்தும். ஆய்வுநடத்தற்கு வேண்டிய ஏடுகள், கணக்குகள் பிற ஆவணங்கள் ஆகியவற்றை ரிசர்வு வங்கியின் அலுவலருக்குக் கொடுக்கும் கடமை வங்கி இயக்குநர், அலுவலர், ஊழியருக்கு உண்டு. ஆய்வு அலுவலர் வங்கியின் இயக்குநர், அலுவலர், ஊழியர் எவரையும் பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்ய லாம். சுருங்கச் சொன்னுல், ஆய்வு அலுவலருக்கு மிக விரிவான அதிகாரம் தரப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஆணையின் பேரில் ஆய்வு நடத்தினுல் ஆய்வு அறிக்கையை ரிசர்வு வங்கி மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும். மற்றநேரங்களில் ஆய்வுஅறிக்கையை ரிசர்வுவங்கிமத்திய அரசுக்கு அனுப்பலாம். மத்திய அரசு அந்த அறிக்கையைப் பரிசீலித்தபின், வங்கியின் செயல்முறை வைப்பாளர் களின் நலனைப் பாதிக்கும் வகையில் நடந்து வருகிறது என நினைத் தால், எழுத்து மூலம்

(i) வங்கிக்கம்பெனி புதிதாக வைப்புகளைப் பெற்றுக் கொள்ளக் கூடாது எனத் தடை விதிக்கலாம்.

(ii) வங்கிக் கம்பெனியைக் கலைப்பதற்கு ரிசர்வு வங்கியை விண்ணப்பிக்குமாறு ஆணையிடலாம். இவ்வகை ஆணை யிடுமுன், வங்கிக் கம்பெனிக்கு அந்த அறிக்கைமீது ஏதும் கூற விரும்பினுல் அதற்கு ஒரு வாய்ப்பு மத்திய அரசு அளிக்கலாம். ரிசர்வு வங்கி பணிந்தளித்த அறிக்கையை மத்திய அரசு, வங்கிக் கம்பெனிக்குத் தக்க அறிவிப்பு அளித்துவிட்டு, வெளியிடலாம் (பிரிவு 35).

பொது நலங்கருதியோ அல்லது வங்கியக் கொள்கையின் சீர்மை கருதியோ அல்லது வைப்பாளர் நலனுக்குப் பாதகமாக வங்கி நடப்பதைத் தவிர்க்கவோ அல்லது வங்கிக் கம்பெனியின் நலனுக்குப் புறம்பாக வங்கி நடைபெற்று வருவதைத்தவிர்க்கவோ அல்லது பொதுவாக வங்கியின் நிருவாகம் சீராக நடைபெற வேண்டியோ, ரிசர்வு வங்கி, வங்கிக் கம்பெனிகளுக்குப் பொது வாகவோ அல்லது குறிப்பிட்ட ஓர் வங்கிக்கோ தக்க கட்டளைகளை இடலாம். அக்கட்டளைகள் கடைப்பிடிக்கப்பட்டேயாக வேண்டும். இட்ட கட்டளைகளை மாற்றும் அல்லது ரத்து செய்யும் உரிமை ரிசர்வு வங்கிக்கு உண்டு (பிரிவு 35A).

வங்கியின் தலைமை நிருவாக அதிகாரி, தலைவர், நிருவாக இயக்குநர், அல்லது இயக்குநர், நிருவாகர் எனப் பெயர்கொண்ட எந்தத் தலைமை நிருவாக அலுவலருடைய நியமனம், மறுநியமனம், நீக்கம், ஊதியம் பற்றிய எந்த உடன்பாடு, திருத்தம், தீர்மானம் ஆகிய ஏதும் ரிசர்வு வங்கியின் அங்கீகாரம் பெற்ற பின்னரே செல்லுபடியாகும்.

ரிசர்வு வங்கியின் முன் அனுமதியின்றிச் செய்யப்படும் தலைவர், நிருவாக அல்லது முழுநேர இயக்குநர், நிருவாகர் அல்லது தலைமை நிருவாக அதிகாரியின் நியமனம், மறுநியமனம், நியமன நீக்கம் ஏதும் நிறைவேற்றத்தகாததாகும் (பிரிவு 35B).

ரிசர்வு வங்கியின் பிற அதிகாரங்கள்

குறிப்பிட்ட ஒரு வங்கியையோ அல்லது பொதுவாக எல்லா வங்கிக் கம்பெனிகளையோ குறிப்பிட்ட ஒரு நடவடிக்கை அல்லது வகையான நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றி ரிசர்வு வங்கி எச்சரிக்கலாம் அல்லது தடை விதிக்கலாம். வங்கிக் கம்பெனிகள் ஏதும் இணைவதற்கான உத்தேசமிருப்பின், அக் கம்பெனிகள் கேட்டுக் கொண்டால் ரிசர்வு வங்கி இடைநிலையராகவோ அல்லது மற்றப்படியோ இருந்து அவற்றிற்கு உதவலாம். வங்கிக் கம்பெனி எதற்கும் கடன் அளித்து உதவலாம்.

பொது நலங் கருதி அல்லது வங்கியக் கொள்கை நலன் கருதி அல்லது வங்கிக் கம்பெனி அல்லது வைப்பாளர்களின் நலனுக்குப் புறம்பான முறையில் வங்கி செயல்படுவதைத் தவிர்க்கக் கருதி ரிசர்வு வங்கி:

வங்கிக் கம்பெனியை இயக்குநர்கள் கூட்ட மொன்றைக் கூட்டி வங்கி நடவடிக்கைகளைப் பற்றிய செய்தி எதனையும் பரிசீலனை செய்யக்கோரலாம்; அல்லது வங்கிக் கம்பெனியின் அலுவலர் ஒருவரை, அச்செய்தி குறித்து, ரிசர்வு வங்கி அலுவலரிடம் பேசித்தெளிய வேண்டலாம்;

தனது அலுவலர்களில் ஒருவரை அல்லது பலரை, வங்கிக் கம்பெனியின் இயக்குநர் அவைக் கூட்டம், அவை அமைத்த குழுவின் கூட்டம் அல்லது வேறு அமைப்பின் கூட்ட நடவடிக்கைகளைக் கவனித்து வர அனுப்பலாம்; அப்படி அனுப்பப்பட்ட அலுவலருக்குக் கூட்டத்தில் ஏதும்கூற வாய்ப்புத் தரும்படி கோரலாம்; கூட்ட நடவடிக்கைகளைப் பற்றிய குறிப்பை ரிசர்வு வங்கிக்கு அனுப்புமாறு அலுவலரைக் கோரலாம்;

மேற்கூறிய கூட்டங்களைப் பற்றிய எல்லா அறிவிப்புகள், தகவல்கள் பற்றியும் இயக்குநர் அவை அல்லது அந்த அவையினால் அமைக்கப்பட்ட குழு அல்லது வேறு அமைப்பு, ரிசர்வு வங்கியின் அலுவலருக்கு எழுத்தால் அவரது முகவரிக்குத் தெரிவிக்க வேண்டுமாறு கோரலாம்;

வங்கிக் கம்பெனியின் விவகாரங்கள், அதன் அலுவலகங்கள் அல்லது கிளைகளில், நடத்தப்படும் விதத்தைப் பார்வையிட்டு அதன்பேரில் அறிக்கை தருமாறு தனது அலுவலரில் ஒருவரை அல்லது பலரை நியமிக்கலாம்;

தனது ஆணையில் குறிப்பிட்ட காலத்திற்குள் ரிசர்வு வங்கிக்கு அவசியமாகத் தோன்றிய மாற்றங்களை நிருவாகத்தில் செய்யுமாறு வங்கியைக் கோரலாம்.

ரிசர்வு வங்கி, மத்திய அரசுக்கு நாட்டில் வங்கிய வளர்ச்சியும் போக்கும் பற்றிய ஆண்டறிக்கை ஒன்று தரவேண்டும். அவ்வறிக்கையில் நாட்டில் உள்ள வங்கித் தொழிலை உறுதிப்படுத்துவதற்கான யோசனைகளையும் தெரிவிக்கலாம். வங்கி ஒழுங்காற்றுச் சட்டத்தின் கீழான பணிகளைத் திறம்படச் செய்ய வேண்டி ரிசர்வு வங்கி வேண்டிய இடங்களில் தேவைப்பட்ட அளவுக்கு அலுவலர்களை நியமிக்கலாம் (பிரிவு 36).

தலைமை நிருவாக அதிகாரிகளை நீக்கும் அதிகாரம்

வங்கியின் தலைமை நிருவாக அதிகாரிகளை நீக்கும் அதிகாரம் ரிசர்வு வங்கிக்கு அளிக்கப்பட்டுள்ளது. வங்கித் தலைவர், இயக்குநர் அல்லது தலைமை நிருவாக அதிகாரியைப் பதவியை விட்டு நீக்குவதற்கான காரணங்களை எழுத்தால் குறித்து வைக்க வேண்டும். பொது நலம் கருதி அல்லது வைப்பாளர்களின் நலனைப் பாதிக்கும் வகையில் வங்கி நிருவாகம் நடைபெறுவதைத் தடுக்கக் கருதி அல்லது வங்கி நிருவாகம் சீரான முறையில் நடைபெற வேண்டி ரிசர்வு வங்கி இந்த நடவடிக்கையை மேற்கொள்ளலாம். வேலை நீக்க ஆணை பிறப்பிக்கு முன் ரிசர்வு வங்கி பாதிக்கப்படக் கூடிய நபருக்கு முறையீடு செய்து கொள்ள நியாயமான வாய்ப்பு அளிக்க வேண்டும். முறையீட்டைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கும் போது கூட, குறிப்பிட்ட அந்த நபர் பதவியில் இருக்கக் கூடாது என்றும் அவர் நிருவாகத்துடன் எந்தத் தொடர்பும் கொண்டிருக்கக் கூடாது என்றும் ரிசர்வு வங்கி கட்டளையிடலாம். பதவியிலிருந்து நீக்கப்பட்ட நபர், அந்த நீக்க ஆணை

கிடைத்ததிலிருந்து முப்பது நாட்களுக்குள் மத்திய அரசுக்கு மேன் முறையீடு (Appeal) செய்யலாம். மத்திய அரசின் முடிவு முடிந்த முடிவாகும். மேற் கூறிய முறைபில் பதவியிலிருந்து நீக்கப்பட்ட நபர் அவ்வங்கியில் பதவி ஏதும் வகிக்கக் கூடாது. மேலும் வேறு எந்த வங்கியின் நிருவாகத்திலும் அவர் ஐந்தாண்டு களுக்குத் தொடர்பு பெறக் கூடாது என்றும் சட்டம் விதிக்கிறது. இச்சட்ட விதிகளை மீறிச் செயலாற்றும் நபருக்கு நாளொன்றுக்கு இருநூற்றைம்பது ரூபாய் தண்டம் விதிக்கப்படும். பதவியி லிருந்து நீக்கப் பட்டவர் நட்டஈடு பெறுவதற்கு உரிமையற்றவர் (பிரிவு 36 A A).

பதவியிலிருந்து நீக்கப்பட்டவருடைய இடத்தில் வேறொரு வரை ரிசர்வு வங்கி நியமிக்கலாம். அவருடைய பதவிக் காலம் ரிசர்வு வங்கியின் விருப்பத்தைப் பொறுத்தது; ஆனல் அவர் மூன்றாண்டுகளுக்கு மேல் பதவியிலிருக்க முடியாது; மேலும் ஒரே சமயத்தில் மூன்றாண்டு காலத்திற்கு மிகாமல் அவர் பதவிக்காலம் நீட்டிக்கப்படலாம் (பிரிவு 36 A A).

பொது நலங்கருதி அல்லது வங்கியக் கொள்கையின் சீர்மை கருதி அல்லது வங்கியின் நலம் கருதி அல்லது வைப்பாளர்களின் நலங் கருதி, ரிசர்வு வங்கி கூடுதல் இயக்குநர் அல்லது இயக்கு நர்களை ஒரு வங்கியில் நியமிக்கலாம். அந்த வங்கியின் இயக்கு நர் அவையின் உச்ச அளவு எண்ணிக்கையில் மூன்றில் ஒருபங்கு அல்லது ஐந்து, இவற்றில் குறைவானது எதோ, அவ்வெண்ணிக் கைக்கு மிகாத கூடுதல் இயக்குநர்களையே ரிசர்வு வங்கி நியமிக்க லாம். இங்ஙனம் நியமிக்கப்பட்ட இயக்குநர் வங்கிக் கம்பெனி யில் தகுதிப் பங்குகள் வைத்திருக்க வேண்டியதில்லை. இவருடைய பதவிக் காலம் ரிசர்வு வங்கியின் விருப்பத்தைப் பொறுத்தது; ஆனல் மூன்றாண்டுக்கு மிகக் கூடாது; மறு நியமனம் ஏதும் ஒரே சமயத்தில் மூன்றாண்டுக்கு மிகக் கூடாது.

வங்கி அலுவலகத்தில் சிலவகைச் செயல்களைத் தடைசெய்தல்

வங்கி சட்டம் 1968 இல் திருத்தப்பட்ட பொழுது பிரிவு 36 A D புதிதாகச் சேர்க்கப்பட்டது. வங்கி ஊழியர் வங்கிக் குள்ளிருந்து கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தல், பொது மக்கள் வங்கிக்கு வந்து போவதைத் தடுத்தல் போன்ற செயல்களைத் தடை செய்வதே இதன் நோக்க மாகும். எந்த நபரும் சட்ட முறையாக வங்கிக்குள் வருவதை அல்லது வங்கியிலிருந்து செல் வதை அல்லது வங்கிக்குள் நடைபெறும் நடவடிக்கைகளைத் தடை

செய்யக் கூடாது; எந்த நபரும் வங்கிக்குள் இருந்து கொண்டு வங்கி நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில் வன்முறை ஆர்ப் பாட்டம் எதையும் செய்யக் கூடாது; வங்கியின் மீது வைப் பாளர்களுக்குள்ள நம்பிக்கையைக் குலைக்கும் எச்செயலையும் எந் நபரும் செய்யலாகாது. தக்க காரணமின்றி எவரும் மேற்கூறிய விதிகளை மீறினால் ஆறுமாத சிறைத் தண்டனையோ அல்லது ஓராயிரம் ரூபாய்க்கு மிகாத தண்டமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படலாம். 'தக்க காரணமின்றி' என்ற சொற்றொடரின் விளக்கமோ இலக்கணமோ சட்டத்தில் கூறப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

வங்கிக் கம்பெனிகளை ஏற்று நடத்துவதற்கான சூழ்நிலை

1968 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட வங்கியத் திருத்தச் சட் டம் வங்கிக் கம்பெனிகளை ஏற்று நடத்துவதற்கு வேண்டிய அதி காரங்களை ரிசர்வு வங்கிக்கும் மத்திய அரசுக்கும் அளிக்கிறது. பிரிவு *21* அல்லது பிரிவு *35* A இன் கீழ் ரிசர்வு வங்கி இட்ட வங்கி யக்கொள்கை பற்றிய கட்டளைகளை ஒரு முறைக்கு மேலாக நிறை வேற்றத் தவறினாலும், வைப்பாளர் நலனைப் பாதிக்கும் வகை யில் நிருவாகம் நடத்தி வந்தாலும், ரிசர்வு வங்கி தந்த அறிக் கையின் அடிப்படையில், மத்திய அரசு அந்த வங்கியை எடுத்துக் கொள்ளலாம். மேற் கூறிய காரணங்களோடு கூட, வங்கியின் வைப்பாளர்கள் நலனுக்காக, அல்லது வங்கியக் கொள்கை சீர்மைக்காக, அல்லது குறிப்பிட்ட இடத்தில் அல்லது குறிப் பிட்ட சமூகத்தில் கடன் வசதிகளை அல்லது பொதுவாகக் கடன் வசதிகளைச் செய்து தருவதற்காக வங்கியை எடுத்துக் கொள்வது பயனளிக்கும் எனமத்திய அரசு மனநிறைவு பெற்ற பின்னரே வங்கி எடுப்பு மேற் கொள்ளப்படும். எனவே மத்திய அரசு வங்கியை எடுத்துக் கொள்ளுவதற்கு இரு வகையான காரணங்கள் இருக்க லாம். ஒன்று வங்கியானது, ரிசர்வு வங்கி இட்ட கட்டளைகளை நிறை வேற்றாமலும் வங்கி நிருவாகத்தைச் சரி வரச் செய்யா மலும் இருத்தல்; மற்றொன்று சமூக நலனையொட்டிய ஏற்பாடு.

மத்திய அரசு ஏற்று நடத்துவதற்கான செயல் முறைகள் பற்றியும், ஏற்கப்பட்ட வங்கியின் பங்குதாரர்களுக்கு நட்ட ஈடு அளிப்பது பற்றியும் பிரிவு *36* A E முதல் பிரிவு *36* A J வரை காண லாம். எடுத்துக் கொள்ளப்பட்ட வங்கியின் தொழில் மத்திய அரசிடம் மாற்றப்பட்டு அதன் உரிமையாக அமையும். ஏதே னும் ஒரு திட்டப்படி அமைக்கப்பட்ட கம்பெனி அல்லது கூட்டுரு இவ்வங்கியை எடுத்து நடத்த மத்திய அரசு அனுமதிக்கலாம்.

வங்கியை எடுத்துக் கொண்ட நோக்கங்கள் நிறைவேற மத்திய அரசு திட்டம் தயாரிக்கலாம். ரிசர்வு வங்கியுடன் கலந்து ஆலோசனை செய்து தயாரிக்கப்பட்ட திட்டம் கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டிருக்கலாம் :-

(i) வங்கியை எடுத்துக் கொள்வதற்காக அமைக்கப்பட்ட கூட்டுரு அல்லது கம்பெனியைப்பற்றிய விவரங்கள்.

(ii) மாற்றிப் பெறும் (Trans feree) வங்கியின் முதல் நிருவாக அவை அமைப்பது பற்றியும் மற்றும் தொடர்புற்றவை பற்றியும் விவரங்கள்.

(iii) எடுத்துக் கொள்ளப்பட்ட வங்கியின் ஊழியர்களைத் தொடர்ந்து வைத்திருக்க ஏற்பாடு.

(iv) ஓய்வு ஊதியம் பெறும் உரிமை கொண்டவர்களுக்கு அதைத் தொடர்ந்து பெற உரிமை அளிப்பது.

(v) நட்டஈடு செலுத்தும் முறை.

(vi) அயல் நாட்டில் உள்ள சொத்து அல்லது பொறுப்பை மாற்றிப் பெறும் முறை.

(vii) மற்றும் தொடர்புற்ற செய்திகள்.

வங்கிக் கம்பெனிகள் தொழிலைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தலும் கலைத்தலும்

தனது பொறுப்புக்களைத் தற்காலிகமாக தீர்க்க முடியாத நிலையிலுள்ள வங்கிக் கம்பெனிக்கு உயர் நீதி மன்றம் ஆறுமாத காலத்துக்கு மிகாத நிறுத்தி வைப்பு (moratorium) ஆணை வழங்கலாம். இதற்கு விண்ணப்பிக்கும் வங்கிக் கம்பெனி, தன் விண்ணப்பத்துடன், 'இவ்விண்ணப்பம் அனுமதிக்கப்பட்டால் வங்கிக் கம்பெனி தனது கடன்களைச் செலுத்த முடியும்' என்று ரிசர்வு வங்கியிடம் ஓர் அறிக்கை பெற்று அதையும் இணைக்க வேண்டும். தக்க காரணங் கொண்டு, இவ்வகை அறிக்கை இணைக்கப்படாத விண்ணப்பத்தின் மீதும் ரிசர்வு வங்கி பரிகாரமளிக்கலாம். ஆனல் பரிகாரம் அளிக்கும் ஆணை பிறப்பித்ததும் உயர் நீதி மன்றம், ரிசர்வு வங்கியிடமிருந்து விண்ணப்பதாரர் வங்கியின் விவகாரங்களைப் பற்றிய அறிக்கை கோர வேண்டும். தொழிலைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க நீதி மன்றத்தின் முன் வங்கிக் கம்பெனி விண்ணப்பித்ததும், நீதி மன்றம் தனி அலுவலர் ஒருவரை நியமிக்கலாம்; அவர் வங்கிக் கம்பெனியின் சொத்து, ஏடுகள், ஆவணங்கள், வழக்குக்குரிய பாத்தியதைகள் முதலிய எல்லாவற்றையும் தமது பாதுகாப்பு அல்லது கட்டுப்பாட்டின்

கீழ்க் கொண்டு வர வேண்டும். உயர்நீதி மன்றம் தனி அலுவருக் குத் தக்க அதிகாரங்களை வழங்கலாம். வைப்பாளர்களின் நலனைக் கருத்தில் இருத்தி இவ்வதிகாரங்கள் தனி அலுவலருக்கு வழங்கப்படும்.

தொழிலைத் தற்காலிகமாக நிறுத்த ஆணைபெற்ற வங்கி தனது விவகாரங்களை வைப்பாளர்களின் நலனுக்குப் புறம்பான வகையில் நடத்தி வருகிறது என ரிசர்வு வங்கிக்குத் தோன்றினால், அது வங்கி யைக் கலைக்கக் கோரி உயர்நீதி மன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம். இவ்வகையான விண்ணப்பம் பெற்ற உயர்நீதி மன்றம், வங்கி மீதான நடவடிக்கைகளுக்கு அளித்த தடையுத்தரவு எதனையும் மேலும் நீட்டித்துத் தரலாகாது (பிரிவு 37).

வங்கிக்கலைப்பு - காரணங்கள்

ஒரு வங்கிக் கம்பெனி தனது கடன்களைச் செலுத்த முடியா விட்டால் அல்லது பிரிவு 37 அல்லது 38 இன் கீழ் ரிசர்வுவங்கி வங்கியைக் கலைக்கக்கோரி விண்ணப்பித்தால் உயர்நீதி மன்றம் கலைப்பு ஆணையிட வேண்டும். மத்திய அரசு, ஒருவங்கிக் கம்பெனி யைக் கலைக்க ரிசர்வு வங்கியைப் பிரிவுப் 35 (4) (b) படி விண்ணப் பிக்குமாறு கட்டளையிட்டால், ரிசர்வு வங்கி விண்ணப்பமிட்டேயாக வேண்டும்.

வங்கிக் கம்பெனியொன்று பிரிவு 11 இல் கண்டவாறு குறைந்த அளவு செலுத்திய முதல், காப்பு வைத்திருக்கத் தவறின லும் அல்லது பிரிவு 22 இன்படி உரிமம் பெறுக் காரணமாகத் தொழில் புரியும் உரிமை இழந்தாலோ அல்லது பிரிவுப் 35 (4) (a)படி புதியவைப்புத் தொகைகளைப் பெறக்கூடாது எனத் தடை விதிக்கப்பட்டால் அல்லது வங்கிய ஒழுங்காற்றுச் சட்டத்தின் பிற விதிவகைகளைக் கடைப்பிடிக்கத் தவறினல் ரிசர்வு வங்கி அதைக் கலைப்பதற்கு விண்ணப்பமிடலாம். (பிரிவு 38). மேலும் ரிசர்வு வங்கி, நீதிமன்றம் அனுமதித்த வங்கியைப் பற்றிய ஒத்திசைவு (Compromise) அல்லது ஏற்பாடு சரியான முறையில் செயல்படுத்த இயலாதது; அல்லது, சட்டப்படி வங்கி அனுப்பும் அறிக்கை, விவரம் அல்லது செய்தி அது தனது கடன்களைச் செலுத்த முடி யாது என்பதைக் காட்டுகிறது; அல்லது, வங்கிக் கம்பெனி தொடர்ந்து செயலாற்றுதல் வைப்பாளர் நலனுக்கு உகந்ததா காது, எனக்கருதினலும் வங்கியைக் கலைக்கக்கோரி உயர்நீதி மன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம் (பிரிவு 38).

கடன்களைச் செலுத்த இயலாநிலை

எந்த ஒரு நிலையில் வங்கிக் கம்பெனி தனது கடன்களைச் செலுத்த முடியாதுள்ளது எனக் கூறலாம்? பிரிவு 38 (4) இக் கேள்விக்கு விடையளிக்கிறது. ரிசர்வு வங்கியின் அலுவலகம், கிளை அல்லது முகமை (Agency) உள்ள இடத்தில் எந்த வங்கியோ அதன் கிளையோ தான் திருப்பித்தரவேண்டிய தொகையைக், கேட்கப்பட்ட இரண்டு நாட்களுக்குள் தரமுடியவில்லை என்றாலும், ரிசர்வு வங்கியின் அலுவலகம், கிளை அல்லது முகமை இல்லா இடங்களில் கேட்கப்பட்ட தொகையை வங்கி அல்லது அதன்கிளை ஐந்து நாட்களுக்குள் தர முடியவில்லை என்றாலும் மற்றும் ரிசர்வு வங்கி குறிப்பிட்டவங்கி தனது கடன்களைச் செலுத்த இயலாமலுள்ளது என எழுத்து வழிச் சான்றளித்தாலும், வங்கிக் கம்பெனி தனது கடன்களைச் செலுத்த முடியாத நிலையிலுள்ளது என்று கொள்ளப்படும் பிரிவு[38(4)].

கலைப்புப் பற்றிய ஏற்பாடுகள்

வங்கிக் கம்பெனிகளின் கலைப்புப் பற்றிய எல்லா நடவடிக்கைகளையும் நடத்தும் பொருட்டு மத்திய அரசு ஒவ்வொரு உயர்நீதி மன்றத்தைச் சார்ந்தும் ஒரு நீதி மன்றக் கலைப்பாளரை நியமிக்க வேண்டும். ரிசர்வு வங்கி, கலைப்புப்பற்றி நடவடிக்கைகளின் போது விண்ணப்பமிட்டால், உயர்நீதி மன்றம் ரிசர்வுவங்கி, இந்திய ஸ்டேட் வங்கி அல்லது மத்திய அரசால் குறிக்கப்பட்ட வங்கியை மட்டுமே கலைப்பாளராக நியமிக்க வேண்டும். இவ்வகையாகக் கலைப்பாளர் நியமனம் செய்யப்படுமுன் வேறெவரும் கலைப்பாளராகச் செயலாற்றி வந்தால், இந்நியமனமானதும் அவர் பதவியிலிருந்து விலகக்கடவர். கலைப்பு அதிகாரி என்ற சொற்கள் கலைப்பாளராக நியமிக்கப்பட்ட வங்கியர் அல்லது நீதிமன்றக் கலைப்பாளரைக் குறிக்கும்.(பிரிவு 39). வைப்பாளர்களின் பணம் முழுவதையும் அவர்கள் உரிமைப்படி கோரும்போது கொடுத்து விடக்கூடிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, என உயர்நீதி மன்றம் மனநிறைவு பெற்றாலன்றி, கலைப்பு தொடர்புற்ற எந்த நடவடிக்கைக்கும் உயர்நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பிக்கலாகாது (பிரிவு 40).

கலைப்பு ஆணை பிறப்பித்த இரண்டு மாதங்களுக்குள்ளாக கலைப்பு அதிகாரி முதன்நிலை அறிக்கை யொன்று தயார் செய்து நீதிமன்றத்திற்கு அளிக்க வேண்டும். அந்த அறிக்கையில் வங்கிக் கம்பெனியின் சொத்துகளில் எவ்வளவு ரொக்கம் தன்வசமுள்ளது; எவ்வளவு சொத்தைப் பணமாக இரண்டு மாத காலத்

திற்குள் வசூலிக்கலாம்; பணம் பெற முன்னுரிமையுள்ளவர்களுக்கு எந்த அளவில் ரொக்கம் செலுத்தலாம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.(பிரிவு 41). கலைப்பு ஆணை பிறப்பித்த பதினைந்து நாட்களுக்குள் கலைப்பு அதிகாரி முன்னுரிமைபற்றிப் பணம்பெறத்தகுதியுள்ளவர்களுக்கும், பிணைக் கட னுளர் (Secured Creditor)களுக்கும், பிணையிலாக் கடனுளர்களுக்கும் அறிவிப்பு அனுப்பி அவர்கள் தமக்குச் சேரவேண்டிய பணம் பற்றிய அறிக்கை ஒன்று அனுப்பச் செய்தல் வேண்டும். கடனுளர்கள் அல்லது வழங்கக் கடமைப் பட்டோர் (Contributory) களின் கூட்டம் கூட்டுவது அல்லது ஆய்வுக் குழு (Committee of Inspection) நியமிப்பது செலவையும் காலந்தாழ்த்தலையும் உண்டாக்குமேயன்றி அதற்கேற்ற பலன் ஏதும் அளிக்காது என்று தோன்றினல், உயர்நீதி மன்றம் இவ்வகைக் கூட்டம் அல்லது நியமனம் தேவையில்லை என்று முடிவு செய்யலாம். (பிரிவு 42). வங்கியின் ஏடுகளில் காணப்படும் தொகையளவுக்கு ஒவ்வொரு வைப்பாளரும் தனது உரிமையைச் சான்றுடன் தாக்கல் செய்துள்ளதாகக் கொள்ளப்படும். கலைப்பு அதிகாரி இந்தத் தொகை சரியன்று என்று ஐயப்பட்டால், வைப்பாளரை அவருக்குச் சேரவேண்டிய தொகை இன்னதென்று மெய்ப்பிக்கக் கோரலாம்.(பிரிவு 43). இந்தியக் கம்பெனிச் சட்டம் பிரிவு 530இன்படி முன்னுரிமைச் செலுத்துகைகளைச் செய்த பின்னர் அல்லது உயர்நீதி மன்றத்துக்கு மனநிறைவளிக்கும் வகையில் அச்செலுத்துகைக்கு வகை செய்த பின்னர், எல்லா வகைக் கடனுளர்களுக்கு முன்பாக, சேமிப்பு கணக்கு வைப்பாளர்களுக்கு இருநூற்றைம்பது ரூபாய் வரைக்குமுள்ள தொகை தரப்படல் வேண்டும். (பிரிவு 43A). பிரிவு22இன்படி உரிமம் பெற்றுள்ள வங்கி, தனது கடன்களைச் செலுத்தும் காலம் வரும்போது முழுமையாகச் செலுத்தும் வகையுள்ளது என்று ரிசர்வு வங்கியிடம் சான்று பெற்றிருந்தாலன்றி, தன் விருப்பப்படி கலைந்து விடமுடியாது.(பிரிவு 44). தன் விருப்பப்படி கலைக்கப்படும் வங்கியின் கலைப்பு நடந்து கொண்டிருக்கையில் உயர்நீதி மன்றம், கலைப்புத் தன் கண்காணிப்பின் கீழ் தொடர்ந்து நடைபெற வேண்டும் என ஆணையிடலாம். தன் விருப்பப்படி வங்கி கலைக்கப் பட்டுக் கொண்டிருக்கையில், அது தனது கடன்களைக் குறித்தவாறு தர இயலாது போனல்; அல்லது வைப்பாளர்களின் நலனுக்குக் குந்தகம் விளையாவகையில் தன்விருப்பக் கலைப்போ, உயர்நீதி மன்றத்தின் கண்காணிப்பில் நடைபெறும் கலைப்போ, மேற்கொண்டு நடக்கமுடியாது போனல்; உயர்நீதி மன்றம் தானகவே கலைப்பு உயர்நீதி மன்றத்தால் செய்யப்பட வேண்டுமென ஆணையிடலாம்; ரிசர்வு வங்கி விண்ணப்பித்தால்,

அவசியம் இவ்வகை ஆணையிடவேண்டும். (பிரிவு 44). செயலாக்க முடியாததல்ல, வைப்பாளர்களின் நலனைப் பாதிப்பதாக இருப்ப தல்ல என ரிசர்வு வங்கி எழுத்தால் சான்றளித்தாலன்றி, நீதி மன்றம், வங்கிக்கும் அதன் உறுப்பினர்கள் அல்லது கடனாளர் களுக்குமிடையே உண்டான ஒத்திசைவு (Compromise) அல்லது ஏற்பாட்டை அனுமதிக்காது. (பிரிவு 45). வங்கிக் கம்பெனியின் ஏற்பாட்டுத் திட்டத்தை யொட்டி உயர்நீதி மன்றம் தோற்றுவிப் பாளர்கள், இயக்குநர்கள் அல்லது தணிக்கையரைப் பொது விசாரணை செய்யலாம். ரிசர்வு வங்கியின் எழுத்தால் பெற்ற முன் அனுமதியின்றி எந்த வங்கிக் கம்பெனியும் மற்றொரு வங்கிக் கம்பெனியுடன் இணையக்கூடாது.

இணைப்பு (Amalgamation)

வங்கிக் கம்பெனியொன்று மற்றொரு வங்கிக் கம்பெனியுடன் இணைவதற்குச் சில நடைமுறைகள் உண்டு. முடிந்த வரையிலும் சட்டச் சடங்குகளைக் குறைத்தும், ஒருசில மறுக்கும் பங்குதாரர் களினால் இணைப்பு தடைப்படாமலிருக்கவும் வகை செய்யுமாறு சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இணைக்கப்படப் போகும் இரு கம்பெனிகளின் பங்குதாரர்கள் முன்னிலையிலும் இணைப்புத் திட்ட நகலை வைக்க வேண்டும். அத்திட்டத்தை ஒவ்வொரு வங்கி யினது மூன்றில் இருபங்குக்குக் குறையாத பங்குகளை வைத்திருக் கும் பங்குதாரர்கள், பெரும்பான்மைப் பலத்துடன் கூட்டத்தில் தீர்மான மொன்று நிறைவேற்றி அங்கீகரிக்க வேண்டும். பங்கு தாரர் ஒவ்வொருவருக்கும் கூட்ட அறிக்கை அனுப்பப்படல் வேண்டும். கூட்ட அறிக்கையில் கூட்டத்தின் நோககம், இடம், நேரம் முதலியன குறிக்கப்படவேண்டும். தொடர்ந்து மூன்று வாரங்களுக்கு, வாரம் ஒருமுறையேனும் அந்த வங்கி பதிவு செய்யப்பட்ட அலுவலகம் உள்ள ஊரில் வெளியாகும் இரண்டு பத்திரிகைகளிலாவது கூட்டம் பற்றிய அறிக்கையை வெளியிட வேண்டும். இவற்றில் ஒரு பத்திரிகை அந்த ஊரிலுள்ள மக்கள் புரிந்து கொள்ளும் மொழியில் வெளியாகும் பத்திரிகையாக இருக்க வேண்டும். இருவங்கிகளின் பங்குதாரர்களும் ஏற்றுக் கொண்ட திட்டம் ரிசர்வு வங்கிக்குப் பணிந்து அனுப்பப்படல் வேண்டும். ரிசர்வு வங்கி, இணைப்புத் திட்டத்தை எழுத்தால் அனுமதித்து இருவங்கிகளுக்கும் தெரியப்படுத்தும். அதுமுதல் அந்த இணைப்புத்திட்டம் வங்கிக் கம்பெனிகளையும் அதன் பங்கு தாரர்களையும் கட்டுப்படுத்தும். ரிசர்வு வங்கி திட்டத்தை அனு மதித்தது முதல் இணைக்கப்படும் கம்பெனியின் சொத்து, பொறுப் புக்கள் இணைக்கும் கம்பெனிக்கு மாற்றப் பட்டனவாகின்றன.

இணைப்புத் திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்காத பங்குதாரர் நிலை என்ன? தான் வைத்திருக்கும் பங்குகளுக்கான மதிப்பைத் தருமாறு அவர் கோரலாம். பங்குகளின் மதிப்பை ரிசர்வு வங்கி நிருணயம் செய்யும். அப்படி நிருணயிக்கப்பட்ட மதிப்பே முடிவானதாகும். மேற்கண்ட இணைப்பைப் பற்றிய விதிவகைகள், கம்பெனிச் சட்டம் பிரிவு 396 இன் கீழ் மத்திய அரசின் அதிகாரப்படி ஏற்பாடு செய்யப்படும் வங்கிக் கம்பெனிகளின் இணைப்புக்குப் பொருந்தா. ரிசர்வு வங்கியைக் கலந்து ஆலோசனை செய்த பின்னரே மத்திய அரசு தனது அதிகாரத்தைச் செயல்படுத்த வேண்டும்.

கடன் ஒத்திவைப்பு (moratorium)

தக்க காரணங்களிருப்பின், ரிசர்வு வங்கி, மத்திய அரசுக்கு, குறிப்பிட்ட ஒரு வங்கிக்குக் கடன் ஒத்திவைப்பு ஆணை வழங்குமாறு விண்ணப்பிக்கலாம். அவ் விண்ணப்பத்தின் பேரில் மத்திய அரசு கடன் ஒத்திவைப்பு ஆணை வழங்கலாம். கடன் ஒத்திவைப்புக் காலம் மொத்தம் ஆறு மாதங்களுக்கு மிகக்கூடாது. இந்த ஆறுமாத காலத்தில் வங்கிக் கம்பெனி மத்திய அரசின் உத்தரவின்றி வைப்பாளர் எவருக்கும் பணமேதும் செலுத்தலாகாது; மேலும் கடனாளர் எவருக்கும் பொறுப்புத் தீர்த்தலுமாகாது. இந்தக் காலத்தில் வங்கியைக் குறித்த புனரமைப்பு அல்லது இணைப்புத் திட்டத்தைத் தயாரிக்கும் அதிகாரம் ரிசர்வு வங்கி பெற்றுள்ளது. பொது நலங்கருதி அல்லது வைப்பாளர்களின் நலங்கருதி அல்லது வங்கிக் கம்பெனியின் நிருவாகம் சீரான முறையில் நடைபெறக் கருதி அல்லது நாடு முழுவதிலுமுள்ள வங்கிய அமைப்பின் நலங்கருதி ரிசர்வு வங்கி இவ்வகையான திட்டத்தைத் தயாரிக்கலாம் (பிரிவு 45).

கலைப்பு நடவடிக்கைகள் விரைவாக நடந்தேறுவதற்கான விதி வகைகள் பிரிவு 45 A முதல் பிரிவு 45 X வரையில் அடங்கியுள்ளன. உயர்நீதி மன்றத்திற்கு மிக விரிவான தனிமுறை அதிகாரவரம்பு (Exclusive jurisdiction) இப்பிரிவுகளின் கீழ் அளிக்கப்பட்டுள்ளது. கலைக்கப்படும் வங்கிக் கம்பெனி மீதுள்ள எல்லாக் கோருரிமைகள் (Claims) பற்றிய முடிவும் செய்வது கடனாளிகளின் பட்டியலை அறுதி செய்வது; வழங்கக் கடமைப்பட்டோரிடம் பணஞ் செலுத்தக் கோருவது; இயக்குநர், தணிக்கையர் முதலோரைப் பொது விசாரணை செயவது போன்ற பல அதிகாரங்களைப் பயன் படுத்திக் கலைப்பு நடவடிக்கைகளை விரைவில் நடத்தி முடிக்க வழி வகைகள் செய்யப் பட்டுள்ளன.

வங்கிய ஒழுங்காற்றுச் சட்டத்தின் கீழ் விதிகளை வகுக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு உண்டு. ரிசர்வு வங்கியுடன் கலந்தாலோசித்து மத்திய அரசு விதிகளை வகுக்கலாம்.

இதுகாறும் கண்டு வந்த சட்ட திட்டங்கள் பொதுவாக எல்லா வங்கிக் கம்பெனிகளுக்கும் பொருந்து மாயினும், கூட்டுறவு வங்கிகளுக்கு வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம் எந்த அளவுக்குப் பொருந்தும் என்பது தனியே குறிக்கப்பட்டுள்ளது. பிரிவு 56, இச் சட்டம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு எந்தெந்த மாறுதல்களோடு பொருந்தும் என்பது பற்றிப் பேசுகிறது. இனி அவற்றைக் காண்போம்.

கூட்டுறவுச் சங்கங்களும் வங்கிய ஒழுங்காற்றுச் சட்டமும்

கூட்டுறவு வங்கியைத்தவிர வேறு எந்தக் கூட்டுறவுச் சங்கமும் வங்கி, வங்கியர் அல்லது வங்கியம் என்ற சொற்களைத் தனது பெயரில் ஒரு பகுதியாகப் பயன் படுத்தலாகாது; இந்தியாவில் எந்தக் கூட்டுறவுச் சங்கமும் மேற்கண்ட சொற்களில் ஒன்றையேனும் தனது பெயரில் ஒரு பகுதியாகப் பயன் படுத்தாமல் வங்கித் தொழில் செய்யலாகாது. பிரதம நாணயச் சங்கம், கூட்டுறவு வங்கிகளுக்கிடையேயுள்ள பொது நலன்களைக் காக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட சங்கம், கூட்டுறவு நில அடமான வங்கி, வங்கி ஊழியர்கள் ஏற்படுத்தியுள்ள பிரதம நாணயச் சங்கமல்லாத எந்த ஒரு கூட்டுறவுச் சங்கம் 'கூட்டுறவு வங்கி' என்ற இலக்கணத்தில் சேராது.

கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தில் எப்படிக் காணப்பட்ட போதிலும், ஒரு இலட்சம் ரூபாய் அளவுக்குக் குறையாமல் செலுத்திய முதலும் காப்பும் கொண்டிருந்தாலன்றி எந்த கூட்டுறவு வங்கியும் இந்தியாவில் வங்கித் தொழிலை ஆரம்பிக்கவோ அல்லது தொடர்ந்து செய்யவோ கூடாது. இச் சட்டம் அமுலுக்கு வந்த போது வங்கித் தொழில் புரிந்து கொண்டிருக்கும் எந்த ஒரு வங்கியும் மேற் கண்ட அளவு செலுத்திய முதல் காப்பு அடைவதற்கு மூன்று ஆண்டு காலம் தரப்பட்டுள்ளது. பிரதம நாணயச் சங்கமொன்று பிரதமக் கூட்டுறவு வங்கியாக மாறினாலும் வங்கியாக மாறிய நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் மேற் குறிப்பிட்ட முதல், காப்பு நிலையை அடைய வேண்டும்; வைப்பாளர்கள் நலங்கருதி இந்த இரண்டாண்டுக் காலத்தை மேலும் ஓராண்டுக்கு ரிசர்வு வங்கி நீட்டித்துத் தரலாம்.

மாநில கூட்டுறவு வங்கியல்லாத ஒவ்வொரு கூட்டுறவு வங்கியும், ரொக்கக் காப்பாக இந்தியாவிலுள்ள தனது மொத்தத் தவணை கேட்புப் பொறுப்புக்களில் குறைந்தது மூன்று விழுக்காடு அளவுக்குத் தன்னிடமே ரொக்கமாகவோ அல்லது ரிசர்வு வங்கி, அல்லது இந்தியஸ்டேட் வங்கி அல்லது அந்தமாநிலத்தின் மாநிலக் கூட்டுறவு வங்கி அல்லது மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட எந்த ஒரு வங்கியில் திறக்கப்பட்ட நடப்புக் கணக்கிலோ வைத்திருத்தல் வேண்டும்; பிரதமக் கூட்டுறவு வங்கியாக இருப்பின், இம்மூன்று விழுக்காட்டுத் தொகையை அந்த மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிலோ, பகுதித் தொகையைத் தன்னிடம் ரொக்கமாகவும் மீதியை மாவட்ட மத்திய வங்கியிலுள்ள கணக்கிலும் ஆகவோ வைத்திருத்தல் வேண்டும். இந்தியாவிலுள்ள பொறுப்புக்கள் என்பது கீழ்க் கண்டவற்றைக் குறிக்காது :- கூட்டுறவு வங்கியின் செலுத்திய முதல், காப்பு, இலாப நட்டக் கணக்கிலுள்ள வரவு இருப்பு; மாநில அரசு, ரிசர்வு வங்கி, விவசாய மறுநிதிக் கூட்டுரு (Agricultural Refinance Corporation) அல்லது மத்திய அரசு அறிவித்துள்ள எந்த வங்கியிடமிருந்தும் பெற்ற கடன்; தனது நடவடிக்கை எல்லைக்குள்ளிருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முறையாக மாநிலக் கூட்டுறவு வங்கியில் வைத்திருக்க வேண்டிய காப்பு நிதி, மாவட்ட மத்திய வங்கியாக இருப்பின் மாநிலக் கூட்டுறவு வங்கியில் பெற்ற கடன்; பிரதமக் கூட்டுறவு வங்கியாகவிருப்பின் அந்த மாநிலத்தில் உள்ள மாநிலக் கூட்டுறவு வங்கியிடமோ அல்லது அந்த மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிடமோ பெற்ற கடன்.

பிற கூட்டுறவுச் சங்கங்களின் பங்குகள் வைத்திருப்பது பற்றிய கட்டுப்பாடுகள் :-

ரிசர்வு வங்கி விதிக்கக் கூடிய நிபந்தனைகட்கும் வரையறைகட்கும் உட்பட்டதன்றி, எந்த கூட்டுறவு வங்கியும் மற்றொரு கூட்டுறவுச் சங்கத்தின் பங்குகளை வைத்திருத்தலாகாது. மாநில அரசு பங்கு வாங்க அளித்த தொகையைக் கொண்டு வாங்கிய பங்குகள்; மத்தியக் கூட்டுறவு வங்கி தான் இணைந்துள்ள மாநிலக் கூட்டுறவு வங்கியில் வைத்திருக்கும் பங்குகள்; பிரதமகூட்டுறவு வங்கி தான் இணைந்துள்ள மத்தியக் கூட்டுறவு வங்கி அல்லது அது பதிவு செய்யப்பட்டுள்ள மாநிலத்திலுள்ள மாநில கூட்டுறவு வங்கியில் வைத்திருக்கும் பங்குகள் மேற் கண்டவிதிக்கு உட்படாதன. இச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன் மேற் கண்ட விதிகளுக்குப் புறம்பாக ஏதும் பங்குகளை ஒரு கூட்டுறவு வங்கி வைத்திருக்குமானல், அச்செய்தியை ரிசர்வு வங்கிக்கு

அறிவித்து, ரிசர்வு வங்கி இடும் நிபந்தனைகட்குட்பட்டு அப்பங்குகளை வைத்திருக்கும் உரிமையுண்டு.

கடனளிப்பதன் மீதான கட்டுப்பாடுகள்

தனது பங்குகளைப் பிணையமாகப் பெற்றுக்கொண்டு எந்தக் கூட்டுறவு வங்கியும் கடனளித்தல் கூடாது. இயக்குநர்கள் அல்லது அவர்கள் கூட்டாளி, நிருவாக முகவர் அல்லது பொறுப்புறுதி அளிப்பவர் என்ற நிலையில் தொடர்புற்ற நிறுவனம். தனிக் கம்பெனி அல்லது தனி நபர்களுக்குக் கொடுக்கும் கடன் பிணைக் கடனாக (Secured Loan) இருத்தல் வேண்டும். கூட்டுறவு வங்கியின் தலைவர் தொடர்புற்றிருக்கும் எந்தக்கம்பெனிக்கும் பிணையில்லாக் கடன் (Unsecured loan) தரலாகாது. இங்குத் தொடர்பு என்னும் சொல் அக்கம்பெனியில் தலைவர், நிருவாக இயக்குநர், நிருவாக முகவர் போன்ற ஈடுபாட்டைக் குறிக்கிறது. அரசுக்குச் செய்துள்ள பணி அல்லது விற்பனைக்குத் தரப்பட்டுள்ள சீட்டு அல்லது வியாபார நடவடிக்கையின் அடிப்படையில் உண்டான மாற்றுச் சீட்டு (Bill of Exchange) அல்லது தனக்குத் தரப்பட்டுள்ள நம்பிக்கை இரசீது (Trust Receipt) இவற்றின் பேரில் பிணையில்லாக் கடன் வழங்கக் கூட்டுறவு வங்கிகளுக்கு அனுமதி தரப்பட்டுள்ளது.

கூட்டுறவு வங்கிகளுக்கு உரிமம் வழங்குவது

பிரதம நாணயச் சங்கத்திற்கு உரிமம் வேண்டுவதில்லை. மற்ற எந்தக் கூட்டுறவுச் சங்கமும் வங்கித் தொழிலை நடத்துவதற்கு ரிசர்வு வங்கியிடமிருந்து உரிமம் பெறவேண்டும். வங்கித் தொழில் புரிந்து வரும் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் இச்சட்டம் அமுலுக்கு வந்த மூன்று மாதங்களுக்குள் உரிமம் வேண்டி ரிசர்வு வங்கிக்கு விண்ணப்பிக்க வேண்டும்; பிரதம நாணயச் சங்கம் ஒன்று கூட்டுறவு வங்கியாக மாறினால், மாற்றமடைந்த மூன்று மாதங்களுக்குள்ளும், பிரதம நாணயச் சங்கமில்லாத பிற கூட்டுறவுச் சங்கமேதும் வங்கித் தொழிலை ஆரம்பிக்கு முன்னர் உரிமம் பெற விண்ணப்பிக்க வேண்டும். இச் சட்டம் அமுலுக்கு வருமுன் இயங்கி வரும் கூட்டுறவு வங்கிகளுக்கு இந்த விதிகள் பொருந்தா. மற்றும் ஒரு கூட்டுறவுச் சங்கத்தைப் பிரித்தலாலோ அல்லது மற்ற சங்கங்களை இணைத்தலாலோ உண்டாகும் கூட்டுறவு வங்கிக்கும் இவ் விதிகள் பொருந்தா. இச் சட்டம் அமுலுக்கு வந்த பின் பிரதம நாணயச் சங்கம் ஒன்று கூட்டுறவு வங்கியாக மாறினால் ரிசர்வு வங்கி அதற்கு உரிமம் வழங்கும் வரை அல்லது உரிமம் வழங்க முடியாது என்று எழுத்தாலறிவிக்கும் வரை வங்கித் தொழில் புரிந்து வரலாம்.

கூட்டுறவு வங்கியொன்று புது ஒரு தொழிலிடம் (கிளை) திறப்பதற்கு, மற்ற வங்கிகளுக்குள்ள சட்டம் படியே, ரிசர்வு வங்கியின் முன் அனுமதி பெற வேண்டும். மத்திய கூட்டுறவு வங்கி தனது விவகார எல்லைக்குள் கிளைகள் திறப்பதற்கு ரிசர்வு வங்கியின் முன் அனுமதி பெற வேண்டுவதில்லை.

மாற்றியல் சொத்துக்களை வைத்திருக்க வேண்டிய ஏற்பாடு

ஒவ்வொரு கூட்டுறவு வங்கியும் தனது இந்தியாவிலுள்ள தவணை, கேட்பு பொறுப்புக்களில் இருபத்தைந்து விழுக்காட்டுக்குக் குறையா அளவுக்கு ரொக்கம், தங்கம் அல்லது வில்லங்கமில்லாத அனுமதிக்கப்பட பிணையல்களாக வைத்திருத்தல் வேண்டும். இந்தச் சட்டம் அமுலுக்கு வந்த முதல் இரண்டு ஆண்டுகள் வரை இந்த விழுக்காட்டு அளவு இருபதாக இருக்கச் சட்டம் வகை செய்திருந்தது. இந்தியாவிலுள்ள ரொக்கம் என்று குறிப்பிடப்படுவது ரிசர்வு வங்கி, இந்திய ஸ்டேட் வங்கி அல்லது மத்திய அரசு அறிவித்த எந்த வங்கியுடன் நடப்புக் கணக்கில் கூட்டுறவு வங்கி ஏதும் வைத்திருக்கும் தொகை; மாநில கூட்டுறவு வங்கி ரிசர்வு வங்கியுடன் வைத்திருக்கும் தொகை; மத்தியக் கூட்டுறவு வங்கி அந்த மாநிலத்திலுள்ள மாநில கூட்டுறவு வங்கியுடன் வைத்திருக்கும் இருப்பு; பிரதமக் கூட்டுறவு வங்கி தன் மாவட்டத்திலுள்ள மத்தியக் கூட்டுறவு வங்கி அல்லது மாநிலக் கூட்டுறவு வங்கியில் வைத்திருக்கும் இருப்புத் தொகை ஆகியன. இந்த விழுக்காட்டு அளவு தவிர, ரொக்கக்காப்பு வேறு சட்டப்படி வங்கி வைத்திருக்க வேண்டும்.

கூட்டுறவு வங்கிகள் ஆய்வு

ரிசர்வு வங்கி தானே அல்லது மத்திய அரசின் கட்டளைப்படி கூட்டுறவு வங்கியை ஆய்வு செய்யலாம். ரிசர்வு வங்கியின் அதிகாரிகள் ஆய்வு நடத்துவர். அவசியமேற்பட்டால் ரிசர்வு வங்கி, குறிப்பிட்ட மாநிலத்திலுள்ள பிரதமக் கூட்டுறவு வங்கியை, அம் மாநில கூட்டுறவு வங்கி அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு நடத்தலாம். மற்ற அதிகாரங்கள் பிற வங்கிகளை ஆய்வு செய்யும் போது செலுத்தக் கூடியவை போன்றன.

வங்கிகளைக் கலைப்பதற்கான விதி வகைகள் கூட்டுறவு வங்கிகளுக்குப் பொருந்தா. கலைப்பு நடந்துவரும் கூட்டுறவு வங்கியொன்றைக் கட்டுப் படுத்தும் அதிகாரம் ஏதும் ரிசர்வு வங்கிக்குக் கிடையாது.

சுருங்கக் கூறின், வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம் கீழ்க்காணும் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொருந்தும்

(i) எல்லா மாநில அல்லது உச்சக் கூட்டுறவு வங்கிகள்.

(ii) எல்லா மத்திய கூட்டுறவு வங்கிகள்;

(iii) ஒரு லட்சம் ரூபாய்க்கும் அதற்கு மேலும் செலுத்திய முதல், காப்பு கொண்டுள்ள வங்கித் தொழில் புரியும் நகரக் கூட்டுறவு வங்கிகள், விவசாயமில்லாத கடன் தரும் பிரதமச் சங்கங்கள்.

கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொருந்தும் வங்கியச் சட்டத்தின் பிரிவுகளையும், இந்திய ரிசர்வு வங்கிச் சட்டத்தின் பிரிவுகளையும் சேர்த்துப்படிக்கும் பொழுது எந்த வகைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம் பொருந்தாது என்பது புலனாகிறது. அஃதாவது :

(i) எல்லாப்பிரதம விவசாய நாணயச் சங்கங்கள் (செலுத்திய முதல், காப்பு எந்த அளவுக்கு இருந்தாலும் சரி).

(ii) செலுத்திய முதல், காப்பு ஒரு லட்சம் ரூபாய்க்குக் குறைவாக உள்ள எல்லா விவசாயமில்லாத பிரதம நாணயச் சங்கங்கள் (இவை வங்கித் தொழில் செய்து வந்தாலும், உறுப்பினரல்லாதாரிடமிருந்து வைப்புத் தொகை பெற்றாலும் சரி).

(iii) தமது உறுப்பினர்களுக்கு மட்டும் பணவசதியளிக்கும், உறுப்பினரல்லாதாரிடம் வைப்பு ஏதும் பெற்றுக் கொள்ளாதிருக்கும், வங்கியத் தொழிலைத் தனது முக்கியத் தொழிலாகக் கொள்ளாதிருக்கும் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்.

(iv) எந்த வகையான வங்கியத் தொழிலும் செய்யாத எல்லாக்கூட்டுறவுச் சங்கங்கள்; ஆகியவை இச்சட்டத்தின் கீழ் வரமாட்டா.

கீழ்க்காணும் சட்ட விதிகளும் கூட்டுறவு வங்கிகளுக்குப் பொருந்தா:– நிருவாக முகவர் நியமிப்பது, இயக்குநர் அவை அமைப்பது, முழுநேரத் தலைவர் நியமிப்பதும் அதையொட்டிய விதிகளும் (பிரிவுகள் 10, 10A, 10B, 10C, 10D); காப்பு நிதி வு 17); ரிசர்வு வங்கிக்கு நிருவாக அதிகாரிகளை நீக்க, கூடுதல்

இயக்குநர் நியமிக்கத் தரப்பட்டுள்ள அதிகாரம் (பிரிவு 36AA, 36AB); வங்கிகளை மத்திய அரசு எடுத்துக் கொள்ளல்; தொழில் நிறுத்தி வைப்பு, கலைப்புப் பற்றிய விதிகள்; கலைப்பை விரைவில் தீர்த்து முடிக்கச் செய்யப்பட்டுள்ள சட்ட விதிகள்.

வங்கிகளும் ரிசர்வு வங்கிச் சட்டமும்

வங்கிக் கம்பெனிகளைப் பற்றிய சட்டத்தைப் படிக்கும்போது தொடர்புற்ற சில இந்திய ரிசர்வு வங்கிச்சட்டத்தின் பிரிவுகளையும் காணவேண்டுவது அவசியமாகிறது. இந்திய ரிசர்வு வங்கிச் சட்டத்தின் பிரிவுகள் 17, 18. அது வங்கிகளுக்கு அளிக்கும் கடன், பிணைக்கடன் பற்றியும், பிரிவு 42 சட்டப்படி பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகள் வைத்திருக்க வேண்டிய காப்புப் பற்றியும், பிரிவு 45A முதல் 45G வரை கடன் வசதி பற்றி செய்திகளைச் சேகரித்தல், அனுப்பல் பற்றியும் பேசுகின்றன.

ரிசர்வு வங்கி அளிக்கும் கடன் வசதிகள்

ரிசர்வு வங்கி நம் நாட்டின் மைய வங்கியாகும். மைய வங்கிக்கு உள்ள சிறப்புகளில் ஒன்று அது வங்கிகளனைத்துக்கும் வங்கியாகப் பணியாற்றி மற்ற வங்கிகளுக்கு நெருக்கடி வந்தபோது உற்றுழி உதவுவோனுகச் செயல்படலாகும். ரிசர்வு வங்கி அவசிய மேற்படும் நிலைகளில் மற்ற வங்கிகளுக்கு கடன், பிணைக்கடன் (Advance) வழங்கச் சட்டம் வகை செய்துள்ளது. வணிக வங்கிகளுக்கு ரிசர்வு வங்கி கடனளிப்பது இரு வழிகளில் அமையலாம். ஒன்று, தகுதிபெற்றமாற்றுச் சீட்டு (Eligible Bill) களை மறு தள்ளுபடி (Re-discount) செய்தோ அல்லது அவற்றை விலைக்கு வாங்கிக் கொள்ளவோ செய்யலாம். குறிப்பிட்ட பிணையங்களின் பேரில் கடன் வழங்குவது மற்றொரு வழியாகும். சில நெருக்கடியான சூழ்நிலைகளில் ரிசர்வு வங்கி சிறப்புக் கடன்களை வழங்கி வணிக வங்கிகளுக்கு உதவச் சட்டம் ஏற்பாடு செய்துள்ளது. இந்திய நாட்டின் வியாபார, தொழில், வேளாண்மை நலங்கருதி கடன் வசதிகளை ஒழுங்காற்ற வேண்டி ரிசர்வு வங்கி இவ்வகை அவசரக் கடன்களை வழங்கலாம்.

ரிசர்வு வங்கியிடம் ரொக்கக் காப்பு வைத்திருத்தல்

பின்னிணைப்புப் பட்டியலில் உள்ள வங்கிகள் சட்டப்படி ரிசர்வு வங்கியிடம் ரொக்ககாப்பு அவசியம் வைத்திருக்கவேண்டும். இத்தொகை, வங்கியின் சராசரி நாள் இருப்பின் கேட்பு தவணைப் பொறுப்புக்களில் மூன்று விழுக்காட்டளவுக்கு இருக்க வேண்டும்.

இந்த விழுக்காட்டு அளவை மூன்றிலிருந்து பதினைந்துக்கு உயர்த்தும் அதிகாரம் ரிசர்வு வங்கிக்கு உண்டு. ரொக்கக் காப்பின் விழுக்காட்டு அளவை உயர்த்துவதன் வழி, வங்கி கடன்கள் அதிகமாக அளிப்பதைக் கட்டுப்படுத்துகிறது.

வங்கிக் கம்பெனிகளிடமிருந்து, கடன் வசதிகள் பற்றிய விவரங்களைச் சேகரிக்கவும், விவரங்கள் கோரும் வங்கிகளுக்குக் குறிப்பிட்ட கட்டணம் பெற்றுக் கொண்டு விவரங்களைத் தரவும் ரிசர்வு வங்கிக்கு அதிகாரம் உண்டு. கடன் வாங்கும் எவருக்கும் அளிக்கப்பட்டுள்ள கடன், பிணைக்கடன் அல்லது கடன் வசதியின் தன்மை, தொகை, எவ்வகையான பிணையின்மீது கடன் வசதி தரப்பட்டுள்ளது; வாடிக்கையருக்கு வங்கி அளித்துள்ள பொறுப்புறுதி (guarantee) போன்ற விவரங்களை ரிசர்வு வங்கி கேட்டுப்பெறலாம். இவ்விவரங்களனைத்தும் இரகசியமாகக் கருதப்படும்.

வங்கிய ஒழுங்காற்றுச் சட்டப்பிரிவுகள், ரிசர்வு வங்கிச் சட்டப் பிரிவுகள்படி வங்கிகள் அனுப்ப வேண்டிய அறிக்கைகள், விவரங்கள், இருப்புநிலைக் குறிப்பு முதலியவற்றில் பொய்யானவற்றைக் குறிப்பது, ஆய்வு நடத்தும் அதிகாரிக்கு வேண்டிய ஏடுகள், ஆவணங்கள், அறிக்கைகள் கொடுக்கத்தவறுவது போன்ற குற்றங்களுக்குச் சட்டம் தண்டனைகளைக் குறிப்பிட்டுள்ளது.

3. வங்கியரும் வாடிக்கையரும்

(Banker and Customer)

வாடிக்கையர் என்ற சொல் எவரைக் குறிக்கிறது? வாடிக்கையர் என்ற சொல் எவரைக் குறிக்கிறதென்று ஏன் அறிந்து கொள்ள வேண்டும்? வங்கியருக்கும் வாடிக்கையருக்குமிடையே யுள்ள தொடர்பு எங்ஙனம் அமைந்துள்ளது? இது போன்ற கேள்விகளுக்கு விடை காண்போம்.

வங்கி என்ற சொல்லுக்குச் சட்டம் இலக்கணம் வகுத்திருப்பது கண்டோம். ஆனல் அதே சட்டம் வாடிக்கையருக்கு இலக்கணம் வகுத்துத் தரக்காணும். இங்கிலாந்து நாட்டுச் சட்டத்திலும் இதற்கு இலக்கணம் வகுக்கப்படவில்லே. பொதுவாக நோக்குமிடத்து, வங்கியில் ஏதேனும் ஒரு கணக்கு வைத்திருக்கும் நபரை வாடிக்கையர் எனக்கூறலாம். இந்தக் கணக்கு நடப்புக் கணக்கும் சேமிப்புக் கணக்கு அல்லது தவணே வைப்புக் கணக்காக இருக்கலாம். இந்தக் கணக்கு வைத்திருப்பவருக்கும் வங்கியருக்குமிடையேயான நடவடிக்கைகள் வங்கித் தொழிலுக்குள்ள தன்மையுடன் அமைய வேண்டும். ஆகவே வங்கியுடன் கணக்கு வைத்திருப்பதுடன், வங்கித் தொழிலின் தன்மையுள்ள நடவடிக்கைகளே வங்கியுடன் மேற்கொள்பவரே வாடிக்கையர் ஆவார். ஒருவர் நூறு ரூபாய் நோட்டுக்குச் சில்லரை மாற்றுவதற்கு மட்டு வங்கியை அணுகினல் அவர் வாடிக்கையராக மாட்டார்; அல்லது பணவிடை (Draft) வாங்குவதற்கு வங்கியைப் பயன்படுத்தினல் வாடிக்கையராக மாட்டார்; அல்லது ஆயுள் காப்புக்கட்டணத்தைக் கட்ட வங்கியைப் பயன்படுத்தினல் வாடிக்கையராகிவிட மாட்டார். இந் நடவடிக்கைகளெல்லாம் வங்கி பொதுப் பயன் குறித்துச் செய்யும் பணிகளாகும். வங்கியில் கணக்கு ஏதும் வைத்திருக்காதவர்கூட இப்பணிகளேப் பெற்றுப் பயனடையலாம். வைப்புத்

தொகைகளைப் பெற்றுக்கொள்ளுதல், கடன்கள் அளித்தல் ஆகிய இரண்டுமே வங்கியத் தொழிலின் அடிப்படைத் தன்மையாகும்.

வாடிக்கையரின் இலக்கணம்

முன்காலத்தில் வாடிக்கையர் என்ற சொல்லுக்குத் தரப்பட்ட விளக்கத்தைக் காண்போம். வாடிக்கையர் என்று ஒருவரைக் கூறுவதற்கு, அவருக்கும் வங்கித் தொழில் வழி ஏதும் தொடர்பு அல்லது வழக்கமான வங்கி நடவடிக்கைகள் இருக்க வேண்டும். ஒரே ஒரு நடவடிக்கையைக் கொண்டு வாடிக்கை ஏற்பட்டதாகக் கொள்வது அரிது; வாடிக்கை என்ற சொல் குறைந்தது சில காலத்துக்குத் தொடர்ந்து வரும் ஒரு நிலையைக் குறிப்பிடுகிறது, அதே நேரத்தில் வாடிக்கை தனியொரு நடவடிக்கையினின்று வேறுபடுகின்றது என்றும் தெளிவுபடுத்துகிறது; வியாபாரிகள் வாடிக்கையரையும் ஏதோ ஒரு முறை பொருள் வாங்குபவரையும் ஒன்ருகக் கொள்ளாமல் வேறுபடுத்துகின்றனர். மேற்கண்டவாறு சர் ஜான் பேஜட் என்னும் அறிஞர் வாடிக்கையரைப் பற்றிப் பேசுகிருர். இந்த விளக்கப் படி ஒரு நபர் வாடிக்கையர் என்ற நிலையை யடைய வங்கியில் கணக்கு வைத்திருக்க வேண்டும். ஆனல் வங்கியில் கணக்கு ஆரம்பித்த உடனேயே வங்கியர் வாடிக்கையர் உறவு ஏற்பட்டு விடாது; சிறிது காலமாவது இந்தத் தொடர்பும் வழக்கமும் நீடிக்க வேண்டும். கால அடிப்படையில் இந்த விளக்கம் அமைந்துள்ளதால் இதனை 'காலக் கோட்பாடு' (Duration Theory) என்று குறிப்பிடுவர்.

இந்நாளைய கருத்து

நாளடைவில், காலக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த விளக்கம், கடுந்தாக்குதலுக்கு ஆளாயிற்று. 'முதன் முறையாகக் காசோலை செலுத்தப்பட்டு அதை வங்கியர் வசூலுக்கு ஏற்றுக் கொண்டவுடனேயே வங்கியர் வாடிக்கையர் உறவு ஆரம்பமாகி விடுகிறது; காசோலை செலுத்துவது மட்டும் போதாது' என்று Ladbroke V. Todd என்ற வழக்கில் கூறப்பட்டது. பிரிவி கௌன்சில் (Privy Council) வழக்கான Commissioner of Taxation V. English, Scottish and Australian Bank இந்த விளக்கத்தை உறுதி செய்யும் வகையில் முடிவு செய்தது. வாடிக்கையர் என்னும் சொல் குறிக்கும் உறவில் காலம் முக்கியமானதல்ல; எந்த ஒரு நபரின் கணக்கில் உள்ள தொகையளவுக்குக் காசோலைகள் மாற்றித் தரப்படும் என்ற அடிப்படையில் வங்கி அவரிடமிருந்து வைப்புத் தொகை ஏற்றுக்கொள்ளுகிறதோ அவர்,

வங்கியுடன் தொடர்பு கொண்ட கால அளவு எப்படி யிருப்பினும், வாடிக்கையர் ஆவார். மற்றும் G. M. Railway V. London and County Bank என்ற வழக்கில், வாடிக்கையர் என்பவர் வங்கியில் ஏதோ ஒரு கணக்கு, தவணை அல்லது நடப்புக் கணக்கு அல்லது அது போன்ற தொடர்பு வைத்திருப்பவராவர்' எனக் கூறப் பட்டது. வங்கியுடன் ஒரே ஒரு நடவடிக்கை மேற்கொண்ட ஒருவரை வாடிக்கையர் எனலாமா? ஆம், Savory & Co. V. Lloyds Bank Ltd என்ற வழக்கில் முடிவு செய்யப்பட்டபடி ஒருவர் வங்கியுடன் கொள்ளும் ஒரே நடவடிக்கையால் அதன் வாடிக் கையர் ஆகிவிடுகிறார். சட்டக் கண்ணோடு நோக்கினால் ஒரே நட வடிக்கையின் மூலம் ஒருவர் வாடிக்கையராகி விட்டாலும், அவர் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார் என எதிர்பார்க் கப்படுகிறது.

வாடிக்கையருக்காக நடவடிக்கைகளில் ஈடுபடும் வங்கியருக் குச் சட்டம் சில சூழ்நிலைகளில் பாதுகாப்பு அளிக்கின்றது. இப் பாதுகாப்பைப் பெற வங்கியர் தாம் ஈடுபட்ட நடவடிக்கை வாடிக கையர் பொருட்டுத்தான் என்று மெய்ப்பிக்க வேண்டும். இது போன்ற நிலைகளில், வாடிக்கையர் என்று எவரைக் குறிப்பிடலாம் என்று ஆய வேண்டியுள்ளது. எனவே வாடிக்கையர் என்ற சொல்லுக்கு விளக்கம் அவசியமாகிறது.

வங்கியர் வாடிக்கையரிடையே நிலவும் உறவு

வங்கியர் வாடிக்கையருடன் பலப்பல நிலைகளில் நடவடிக் கைகளை மேற்கொள்ளுகிறார். நடவடிக்கையைப் பொறுத்து அவர்களிடையே நிலவும் உறவை அறுதியிட்டுக் கூறலாம். பொது வாகக் கூறுமிடத்து, வாடிக்கையர் வங்கியில் கணக்கு ஆரம்பித்த தும் அவர்களிடையே உறவு பிறக்கிறது. இந்த உறவைக் கடனாளி கடனாளர் உறவு என்பர். யார் கடனாளி (Debtor) யார் கடனாளர் (Creditor) என்பது கணக்கு இருப்பு (balance of account) இருக்கும் நிலையைப் பொறுத்தது. கணக்கில் வாடிக்கையர் பணம் வங்கி யரிடமிருந்தால், வங்கியர் கடனாளியாகிறார், வாடிக்கையர் கடனாளர் (Creditor) ஆகிறார். வாடிக்கையர், வங்கியரிடமிருந்து கடன் பெற்று அவர் கணக்கில் பற்று இருப்பு (Debit balance) இருக்குமானால் வங்கியர் கடனாளராகிறார், வாடிக்கையர் கடனாளி யாகிறார்.

கடனாளர் கடனாளி உறவு

வங்கியரிடம் கணக்கு ஆரம்பித்தவுடன் அவர் கடனாளர் ஆகிறார். இந்த உறவிலுள்ள தனிச் சிறப்பு, வங்கியர் தாம்

பெற்ற வைப்புத் தொகையை தாம் விரும்பும் வகையில் எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்; ஆனால் வைப்புத் தொகையைத் திருப்பிப்பெற வாடிக்கையர் விடுக்கும் காசோலைகளை மதிக்கும் பொறுப்பு வங்கியருக்கு உண்டு. பணத்தை இரும்புப் பெட்டியில் பூட்டி பாதுகாப்பதற்குப் பதிலாக, தமக்கு நம்பிக்கையுள்ள வங்கியரிடம் வைப்பாகச் செலுத்துகிறார். அது முதல் அந்த தொகை வங்கியர் தரவேண்டிய கடன் என்றாகிறது. வாடிக்கையர் செலுத்தும் தொகை வங்கியர் தம் விருப்பப்படி பயன்படுத்தக்கூடிய சொத்தாகிறது. வங்கியர் பொதுமக்களிடமிருந்து வைப்புத் தொகையைத் தம்மிடம் வைத்திருக்கக் கோரி விடுக்கும் அழைப்பில் அவர் தரக்கூடிய வட்டியையும் அறிவிக்கிறார். வைப்பாகப் பெறும் தொகையைத் தம் விருப்பப்படி பயன்படுத்தப் போவதையும் உணர்த்துகிறார். வட்டி இல்லாத நடப்பு வைப்புக் கணக்காக இருந்தால் வங்கியர், கேட்டவுடன் வாடிக்கையருக்குத் தொகையைத் திருப்பித்தரும் பொறுப்பிலுள்ளதால், கடனாளி என்றுதான் கருதப்படுவார். வங்கியர் ஒப்படை பெறுபவர் (Bailee) ஆக மாட்டார். ஏனெனில், வாடிக்கையர் திருப்பிக் கேட்கும் போது அவர் கொடுத்த அதே பணத்தையும் நாணயத்தையும் வங்கியர் தருவதில்லை; வாடிக்கையர் செலுத்திய தொகைக்குச் சமமான பணத்தையே தருகிறார். திருப்பித் தரும் பணம் சட்டமுறைப்பணமாக இருக்க வேண்டும்.

வாடிக்கையர் பணம் வங்கியரிடம் இருக்கும் போது அவர் கடனாளர் (Creditor) என்ற நிலையிலுள்ளார் என முன்னர் கண்டோம். வாடிக்கையர் நிலைமை ஒரு சாதாரண கடனாளர் (Ordinary Creditor) என்ற அளவில் அமைகிறது. வங்கியரின் சொத்துக்களின் மீது பற்றுப்பொறுப்பு (Charge) ஏதும் இவர் செலுத்த முடியாது. வைப்புக் காப்புறுதிக் கூட்டுரு (Deposit Insurance Corporation) நிறுவியதிலிருந்து வைப்பாளர்களுடைய நலன் பேரளவுக்குக் காக்கப்படுகிறது.

உலகில் பொதுவாக கடனாளர் கடனாளிகளுக்கிடையேயுள்ள உறவுக்கும், வங்கியர் வாடிக்கையரிடையேயுள்ள கடனாளர் கடனாளி உறவுக்கும் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. அது, வாடிக்கையாளர் திருப்பிக் கேட்டால்தான் வங்கியர் பணத்தைக் கொடுக்க வேண்டும் என்ற சிறப்பு. பொதுவாகக், கடனாளர் கேட்காமலே கடனாளி தனது கடன் தொகையைத் திருப்பித்தர வேண்டுவது நியதி. ஆனால் கடனாளரான வாடிக்கையர் கேட்டாலன்றி கடனாளியான வங்கியர் பணத்தைச் செலுத்த வேண்டுவதில்லை. வாடிக்கையர் கேட்காமல் வங்கியரே வைப்புத் தொகை

Bharathiar University
Library
13508
K ALUDIAPPLLAI
1350

யைத் திருப்பித் தருவது நியதியானால் விபரீதமான விளைவுகள் ஏற்படக்கூடும். முன்னறிவுப்பு ஏதுமின்றித் தொகையைத் திருப்பிச் செலுத்தி கணக்கை மூடிவிட்டால் அவர் முன்னரே விடுத்த காசோலைகள் அவமதிக்கப்பட்டு அவரது நற்பெயருக்குத் தீங்கு ஏற்படக் கூடும். சுருங்கக் கூறின் வங்கியர் கடன் கேட்டால் தான் திருப்பித் தரப்படும். இந்த நிலையானது (Toachinson V. Swiss Banking Corporation) என்ற வழக்கில் தெளிவாக்கப் பட்டுள்ளது. மற்றும் (Clare & Co. V. Dresdner Bank) என்ற வழக்கில், வாடிக்கையர் எந்த வங்கியின் அலுவலகத்தில் (கிளையில்) வைப்புத் தொகை செலுத்தியுள்ளாரோ அந்த இடத்தில் தான் திருப்பிக் கேட்க வேண்டும் என்பது உறுதியாக்கப்பட்டுள்ளது (Hari Kishan V. Bharat Nidhi Ltd).

வாடிக்கையர் தம் பணத்தைத் திருப்பித் தருமாறு வங்கியரைக் கேட்பது குறித்த முறையில் அமைய வேண்டும். வாய் மொழியால் கேட்பது 'கேட்பு' ஆகாது. காசோலை வடிவிலோ அல்லது ஆணை வடிவிலோ எழுத்தால் கேட்பு (demand) அமைய வேண்டும். வங்கியின் அலுவலக நேரங்களில் மட்டுமே வாடிக்கையர் தம் வைப்புத் தொகையைத் திருப்பிக் கேட்கலாம்.

வங்கியர் பொறுப்புரிமையர் (Trustee) ஆகும் நிலை: தற்கால வங்கிகள் தமது வாடிக்கையருக்கும் பொதுமக்களுக்கும் பெரும் ஆரவாரத்துடன் செய்யும் பணி பாதுகாவல் பணி எனலாம். விலை மதிப்பு மிகுந்த நகை, ஆவணங்கள் போன்றவற்றைப் பாதுகாவலாக இருக்கும் பொருட்டு வாடிக்கையர் வங்கியரிடம் சேர்ப்பிக்கின்றனர். இவற்றைத் தன் பாதுகாப்புப் பெட்டகத்தில் பத்திரப்படுத்தி வைத்திருந்து வாடிக்கையர் மீண்டும் வேண்டும் போது திருப்பியளிக்க வேண்டும். இதில் குறிப்பிடத்தக்கது வாடிக்கையர் கொடுத்த பொருளை அவரிடம் அப்படியே ஒப்படைப்பது ஆகும். இந்தப் பொருளை வங்கியர் தன் விருப்பப்படி பயன்படுத்தலாகாது. வாடிக்கையர் சொத்தைக் காவலாக வங்கியர் வைத்திருக்கும்போது அவர் பொறுப்புரிமையர் (Trustee) ஆகிறார். சொத்தின் மீதான உரிமையனைத்தும் வாடிக்கையர் வசம் உள்ளது. வேறொரு வங்கியின் மீது எழுதப்பட்ட காசோலையைப் பெற்ற வாடிக்கையர் அதைத் தம் வங்கியரிடம் வசூல் செய்யும் பொருட்டு சேர்ப்பித்திருக்கும் போது தம் வங்கி வசூல் செய்யுமுன்னர் நொடித்துவிட்டால், அந்த காசோலை மீதான தொகையை அல்லது காசோலையை திரும்பப் பெறும் உரிமையுள்ளவர். அஃதாவது, அந்த காசோலை மீதான உரிமை வாடிக்கையரிடமே உள்ளது. ஆனால் குறிப்பிட்ட ஒரு

காரியத்திற்கென பணத்தை ஒதுக்கி, வங்கியரை அக்காரியத்திற்கு அத்தொகையைப் பயன்படுத்த ஆணையிட்டிருக்கும் போது வங்கி நொடித்து விட்டால், குறிப்பிட்ட காரியத்திற்கு அப்பணம் பயன் படுத்தப் படாவிட்டாலும் அதைத் திருப்பிப்பெறும் உரிமை வாடிக்கையருக்கு இல்லை. வாடிக்கையர் தானும் ஒரு பொது கடனாளர் (General Creditor) என்ற நிலையில்தான் அப்பணத்தைத் திருப்பிப்பெற உரிமையுள்ளவர். வங்கியை இந்நிலையில் பொறுப் புரிமையராகக் கருத முடியாது. வங்கியரிடம் ஒரு வாடிக்கையர் பணத்தைச் செலுத்தினால் பொதுவாக அந்நடவடிக்கையால் ஏற் படும் உறவு கடனாளர்-கடனாளி உறவு என்று கொள்ளப்படும். பணத்தைச் செலுத்துகையில், குறிப்பிட்ட காரியத்திற்காக அது பயன்படுத்தப்பட வேண்டும் என வாடிக்கையர் ஆணையிட்டிருந் தால் உறவுநிலை வேறு வகையாக அமையக்கூடும். எடுத்துக் காட்டாக, பணம் கட்டும்பொழுது பின்னர் உத்தரவு ஏதும் பெறும் வரை அதை வங்கியர் வைத்திருக்க வேண்டும் என்றபடி வைத்திருப்பது; அல்லது வங்கிக் கணக்கு இல்லாத ஒருவருக்குச் செலுத்தச் சொல்லி வாடிக்கையர் தொகை எதையும் வங்கி யரிடம் செலுத்தி அந்த நபரிடமிருந்து தகவல் எதிர்பார்த்துக் கொண்டு வங்கி காத்திருப்பது; அல்லது தன் கணக்கில் உள்ள பணத்தில் ஒரு பகுதியை, தான் ஏற்றுக்கொண்ட ஒரு மாற்றுச் சீட்டு (Bill of Exchange) முதிர்வடைந்ததும் செலுத்த மற்றொரு வங்கிக்கு அனுப்புமாறு இட்ட ஆணைப்படி வங்கியர் பணத்தை மற்ற வங்கியருக்கு அனுப்பியிருப்பது போன்ற நிலைகளில் வங்கியர் பொறுப்புரிமையராகக் கருதப்படுவார்.

வாடிக்கையரின் முகவர் (Agent)

வாடிக்கையர் சார்பாக பிணையங்கள் வாங்கல், விற்றல், காசோலை, இலாபஈவு, மாற்றுச் சீட்டு, கடனுறுதிச் சீட்டு முதலிய வசூலித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும்போது வங்கியர் முகவர் பணியைச் செய்கிறார். வாடிக்கையரைத் தம் பால் ஈர்க்கத் தற்கால வங்கியர் பலப்பல முகவர் பணிகளைச் செய்ய முன்வருவது யாவரும் அறிந்ததே. மற்றும் நிறை வேற்றாளர் (Executor), பொறுப்புரிமையர் (Trustee). வக்காலத் தார் (Attorney). பிரதிநிதி (Representative) போன்று செயல்படும் போதும் வங்கியர் முகவர் என்ற நிலையிலிருக்கிறார்.

வங்கியர் வாடிக்கையரிடையே நிலவும் கடனாளர் கடனாளி உறவு, அவர்களிடையே சில கடமைகளையும் உரிமைகளையும் தோற்றுவிக்கிறது. அவற்றை இனி காண்போம்:

வங்கியரின் சட்டப்பிணைப்புக்களை (Obligations) முதலில் எடுத்துக் கொள்வோம்.

I. காசோலைகளை மதிக்கும் சட்டப்பிணைப்பு (Obligations to honou Cheques)

வங்கியரிடம் நடப்புக் கணக்கில் பணஞ் செலுத்தும் வாடிக்கையர், தாம் விரும்புமளவு தொகையைக் காசோலை எழுதிப் பெறும் உரிமையைப் பெறுகிறூர். கணக்கில் உள்ள தொகையைப் பொறுத்து காசோலைகளை மதிக்கும் சட்டப்பிணைப்பு வங்கியருக்கு உண்டு. மாற்று முறையாவணச் சட்டம் (Negotiable Instruments Act, 1881) பிரிவு 31இன் படி வங்கியர் தம்மீது எழுதப்பட்ட காசோலைக்குப் பணம் செலுத்தவேண்டும், அப்படிச் செலுத்தத் தவறினுல் அதனுல் ஏற்படும் நட்டம் அல்லது தீங்கிற்கு அதை எழுதியவரிடம் நிறையீடு (Compensation) செய்ய வேண்டும். காசோலை எழுதியவருடைய பணம் போதுமான அளவுக்கு வங்கியரிடமிருக்க வேண்டும். மற்றும் அக்காசோலை விடுத்து குறிப்பிட்ட கணக்கிலிருந்து சட்டம் ஒப்பும் முறையில் வங்கியரிடம் பணங் கேட்கப்படவேண்டும், எனவே, பொதுவாகக் கூறுமிடத்து வாடிக்கையர் விடுக்கும் காசோலைகளை வங்கியர் மதிக்கக் கடமைப்பட்டிருக்கிறூர்; சட்டம் இதனை வலியுறுத்துகின்றது. வங்கியரின் இச்சட்டப்பிணைப்பு (Obligation) சில நிபந்தனைகட்குட்பட்டது. அவையாவன:

(i) பெயரவரிடம் (Drawee) வரைபவருடைய (Drawer) பணம் போதுமான அளவுக்கு இருத்தல் வேண்டும். போதுமான அளவு என்பது காசோலையில் குறிக்கப்பட்ட தொகையைப் பொறுத்தது. காசோலையில் குறிக்கப்பட்டுள்ள தொகையளவேனும் கணக்கில் பணம் இருத்தல் அவசியம். குறிப்பிட்ட வங்கிக் கணக்கில் இருக்கும் தொகைக்கும் மிகுதியான தொகை காசோலையில் குறிக்கப்பட்டிருந்தால் வங்கியர் அக்காசோலையை அவமதிப்பார். கணக்கிலுள்ள பகுதி பணத்தை மட்டுஞ் செலுத்தமாட்டார். எடுத்துக்காட்டாக கணக்கில் ரூ. 500/- இருக்கும்போது வரைபவர் (drawer) ரூ. 600/– குறித்து காசோலையை பெயரவர் (drawee) மீது விடுத்தால், பெயரவர் அக்காசோலையை அவமதிப்பார். அஃதாவது, காசோலையைப் பணமாக மாற்றித் தரமாட்டார். கணக்கிலிருக்குமளவு பணமான ரூ. 500/- ஐ பகுதிப் பணமாகவுஞ் செலுத்தமாட்டார்.

சில சமயங்களில் வாடிக்கையர் பிற வங்கிகள் மீது எழுதப்பெற்ற காசோலைகளைத் தம் வங்கியர் வழி வசூலுக்கு அனுப்பியிருப்பார். அந்த வங்கிகள் அக் காசோலைகளை மதித்த பின்னரே வாடிக்கையரின் கணக்கில் அவற்றின் தொகை வரவு வைக்கப்படும். அதுவரை வாடிக்கையர் அந்த தொகை தம் கணக்கில் வரவு வைக்கப்பட்டதாகக் கருதி அதன்பேரில் காசோலைகளை வரையக் கூடாது. காசோலைகளை வசூலுக்கு அனுப்பியதிலிருந்து அவற்றை மாற்றி கணக்கில் வரவு வைப்பதற்கு வங்கியருக்கு நியாயமான காலஅளவு தருதல் வேண்டும். காசோலைகள் வசூலாகி வருமுன், அத்தொகை மீது வாடிக்கையர் காசோலை வரைந்தால் வங்கியர் அதை அவமதித்து E. N. C. 'Effects not cleared' அதாவது பணம் இன்னும் வசூலாக வில்லை என்று குறித்து திருப்பி விடுவார்.

(ii) கணக்கிலுள்ள தொகையிலிருந்து விடுக்கப்பட்ட காசோலைக்குப், பணஞ் செலுத்துவது முறையானதாக இருக்க வேண்டும். ஒரே வாடிக்கையர் வங்கியில் பல கணக்குகளை வைத்திருக்கலாம்; பல நிலைகள் காரணத்தால் பல கணக்குகளை வைத்திருக்கலாம். குறிப்பிட்ட ஒரு கணக்கில் உள்ள பணம் முழுதையும் குறிப்பிட்ட ஒருகாரியத்திற்கு ஒதுக்குமாறு வங்கியரைப் பணித்து விட்டு, வாடிக்கையர் அக்கணக்கிலிருந்து வேறொரு காரியத்திற்குப் பணம் வேண்டிக் காசோலை விடுத்தால் வங்கியர் அதனை மறுக்க நேரிடலாம். தவணைக் கணக்கு மீது காசோலை விடுத்தாலும் அதனை அவமதிக்க நேரும்.

வாடிக்கையரின் நற்பெயர் காக்க வங்கியர், அவருடைய அனுமதியுடனோ அல்லது தானாகவோ அவருக்கு அதிகப்பற்று (Overdraft) அளித்து அவர் விடுக்கும் காசோலைகள் அவமதிப்பு ஆளாகாமல் கவனித்துக் கொள்ளுகிறார் என்று வைத்துக் கொள்வோம். இது நாளடைவில் ஒரு தொக்கிய ஒப்பந்தம் போலாகி, ஒவ்வொரு முறையும் கணக்கிலுள்ள தொகைக்குமேல் காசோலை விடுக்கும் போதும் வங்கியர் காசோலையை அவமதிக்காமல் மாற்றித் தரவேண்டும் என்ற நிலை வந்துவிடும். வங்கியர் தமது செயல்முறை யால் இந்தச் சட்டப் பிணைப்புக்கு உட்பட்டவராவர். ஏதேனும் ஒருமுறை போதிய அளவு கணக்கில் பண

மில்லாக் காரணத்தால் வாடிக்கையர் விடுத்த காசோலையை அவமதித்தால், வாடிக்கையர் முன்னர் பலப்பல நடவடிக்கைகளில் தானாகவே அதிகப்பற்று அளித்து காசோலைகளை மதித்த வங்கியர் இம்முறை மட்டும் ஏன் அவமதித்தார் என்று, அவர் மீது வழக்கிடவும் கூடும். இந்நிலை வராமலிருக்க வங்கியர் வாடிக்கையருக்குத் தக்க அறிவிப்பு கொடுத்து விட்டு கணக்கிலுள்ள தொகைக்குமேல் காசோலை எழுதினால் அது மறுக்கப்படும் என்பதைத் தெளிவாக அறிவித்து விட்டு - வருங்கால நடவடிக்கைகளுக்குத் தம் அறிவிப்பின் படியான செயல் முறையைக் கடைப்பிடிக்கலாம்.

(iii) வங்கியர் பணத்தைச் செலுத்துமாறு முறையாகக்கோரப் படுதல் வேண்டும். வங்கியர் மீது எழுதப்பட்ட காசோலை சட்டமுறையாக அமைந்திருத்தல் வேண்டும். மாற்று முறையாவணச் சட்டம் காசோலை என்ற சொல்லுக்கு இலக்கணம் வகுத்துள்ளது. அதன்படி காசோலை அமைய வேண்டும். தேதியிட்ட நாளிலிருந்து ஆறு திங்கள் வரை தான் அது செல்லும். அதன் பின் வங்கியரிடம் கொடுக்கப்பட்டால் அவர் அதனை நாட்பட்ட காசோலை (Stale Cheque) என்று திருப்பி விடுவார். அதே போன்று பின்தேதியிட்ட காசோலையை வங்கியரிடம் கொடுத்தாலும் அதையும் மதிக்க மாட்டார். குறிப்பிட்ட தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தான் அதற்குப் பணந் தரவேண்டும் என்பது வாடிக்கையர் எண்ணம் என வங்கியர் கூறிவிடுவார்.

தவறான அவமதிப்பினால் உண்டாகும் விளைவுகள்

வங்கியர் தம்மீது எழுதப்பட்ட காசோலையை மதிக்க வேண்டும்; தவறாக அவமதித்து விட்டால் வாடிக்கையருக்கு ஏற்படும் இழப்பு அல்லது தீங்கிற்குத் தக்க நிறையீடு செய்ய வேண்டும் என்று சட்டம் பேசுவதைக் கண்டோம். தக்க காரணமில்லாமல் வங்கியர் காசோலையை அவமதிக்கக் கூடாது. ஏனென்றால் வாடிக்கையரின் நற்பெயருக்குக் கேடும், நாணயத்துக்கு இழுக்கும் காசோலை அவமதிப்பால் ஏற்படலாம். ஈதன்றி வாடிக்கையருக்குப் பண நட்டமும் ஏற்படக்கூடும். உதாரணமாக வேண்டிய பணம் கணக்கிலிருக்கும்போது 'போதிய பணமில்லை' என்ற குறிப்புடன் வாடிக்கையர் எழுதிய காசோலையைத் திருப்பி விட்டால், தவறான அவமதிப்பு செய்த குற்றத்துக்கு வங்கியர்

ஆளாவார். இதனுல் பாதிக்கப்பட்ட வாடிக்கையர் வியாபாரி யாக இருந்தால், வங்கியர் நிலைமை மோசமாகிவிடும். காரணம் வியாபாரியின் நாணயத்தைப் பற்றி, அவர் தொழில் செய்து வரும் சமூகத்தில், தவருன எண்ணம் ஏற்படக் கூடும். காசோலை எவ்வளவுக்கெவ்வளவு சிறிய தொகையைக் கொண்டுள்ளதோ அவ்வளவுக்கவ்வளவு இழப்பீடு (Damage) அதிக தொகையாக அமையும். இவ்வளவு சிறிய தொகை கூட கணக்கில் இல்லாமலா இவர் வியாபாரம் செய்கிருர்? இவருடன் வியாபார தொடர்பில் பெருமளவு கடன் பேரில் சரக்கு அல்லது கடன் இனி கொடுப்பது உசிதமா? என்றெல்லாம் மற்ற வியாபாரிகள் எண்ணக்கூடு மல்லவா? இதனுல் வியாபாரம் பாதிக்கப்படுமல்லவா? எனவே, பண நட்டம் ஏதும் ஏற்படாவிட்டால் கூட காசோலை அவமதிப் பால் தன் நாணயத்திற்கு இழுக்கேற்பட்டது காரணமாக பேரளவு இழப்பீடு கோரும் உரிமையுண்டு. பேரளவு இழப்பீடு பெற தீங்கு ஏற்பட்டதென்று சான்று காட்டத் தேவையில்லை. (Rolin V. Steward). ஆனுல் வாடிக்கையர் வணிகரல்லாதாராக இருப் பின், அவர் பெருந்தீங்கு ஏற்பட்டது என்று மெய்ப்பித்தாலன்றி, பெயரளவு இழப்பீடு (Nominal damages) மட்டுமே அளிக்கப்படும் (Gibbons V. Westminster Bank Ltd.)

இழப்பீட்டுத் தொகை மதிப்பிடல்:

இழப்பீட்டுத் தொகையை மதிப்பிடுவதில் வாடிக்கையரது நிதிநிலை, வியாபார உலகில் அவருக்குள்ள மதிப்பு, அவர் ஈடுபட் டுள்ள தொழில் முதலிய பல விவரங்கள் கருத்தில் கொள்ளப்படும். Davidson V. Barclay's Bank Ltd என்ற வழக்கில் பந்தயம் வைப்பதைத் தொழிலாகக் கொண்ட ஒரு வாடிக்கையர் விடுத்த £2-15-8 காசோலையை வங்கியர் தவறுதலாக அவமதித்தற்கு £250 இழப்பீடாக அளிக்கப்பட்டது. இவ்வழக்கை விசாரித்த நீதிபதி, பந்தயம் வைத்துப் பிழைக்கும் தொழில் எவ்வளவு நாசுக் கானது என்பதைக் குறிப்பிட்டு இக்காசோலை அவமதிப்பால் வாடிக்கையருக்கு எவ்வளவு தீங்கு விளையக்கூடும் என்பதைத்தாம் நினைத்தும் பார்க்க முடியவில்லை என்ருர். வாடிக்கையர் பணம் வேண்டிய அளவு இருந்தபோதிலும் அவர் விடுத்த காசோலையைத் தவறுதலாக மதிக்கத் தவறிவிட்டாலும் கூட இழப்பீடு கோரி வழக்கிடும் உரிமை வாடிக்கையருக்கு உண்டு. (New Central Hall V. United Commercial Bank).

II. வாடிக்கையர் கணக்கை இரகசியமாக வைத்திருத்தல்

வாடிக்கையர் தம்மிடம் வைத்திருக்கும் கணக்குப் பற்றிய விவரங்களை வங்கியர் இரகசியமாக வைத்திருத்தல் வேண்டும்.

இந்த விவரங்களைப் பிறருக்குத் தெரிவிப்பதன் மூலம் வாடிக்கையரின் தொழிலுக்கும், நாணயமானவர் என்ற நற்பெயருக்கும் இழுக்கு ஏற்படலாம். வங்கியருக்கு எந்த அடிப்படையில் இந்த சட்டப்பிணைப்பு (Obligation) ஏற்படுகிறது? வாடிக்கையருடன் வங்கியர் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்த சட்டப்பிணைப்பு எழுகிறது. Tournier V. National Provincial and Union Bank of England என்ற வழக்கில் வங்கியருடைய இந்த சட்டப்பிணைப்பு பற்றி விரிவாக விளக்கப்பட்டது. வாடிக்கையருடைய கணக்குப் பற்றிய விவரங்களை இரகசியமாக வைத்திருக்கும் கடமை, அவர் கணக்கு வைத்திருக்குங்கால மட்டுமல்லாது அதன் பின்னுங்கூட தொடர்ந்து இருப்பதாகும். வாடிக்கையர் இறந்தபின்னுங்கூட அவரது கணக்குப் பற்றிய செய்திகளை இரகசியமாக வைத்திருக்க வேண்டும். கணக்கில் பணம் இருப்பாக உள்ளது அல்லது அதிகப்பற்று உள்ளது என்ற நிலை எவ்வகையிலும் இக்கடமையைப் பாதிக்காது.

இரகசியம் கடைப்பிடிக்க இயலாநிலை

வங்கியரின் இரகசியம் பாதுகாக்கும் கடமை சில சூழ்நிலைகளில் கடைப்பிடிக்க முடியாமற் போகலாம். நியாயமான, தக்க காரணங் கொண்டு வாடிக்கையர் கணக்குநிலை பற்றிப் பிறருக்கு அறிவிக்கலாம். சட்டம் வாடிக்கையரின் கணக்கு நிலையைத் தெரிவிக்கப் பணித்தாலும், வங்கியரிடையேயுள்ள செயல்முறைப் பழக்கங்கங்கள்படி வாடிக்கையரின் கணக்கு விவரங்களை அறிவித்தாலும், வங்கியர் கடமையிலிருந்து தவறியவராகார்.

வாடிக்கையரின் நாணயம் பற்றியும், நிதிநிலை பற்றியும் வங்கியரின் கருத்தை வேண்டுவது வணிகரின் வழக்கு. கருத்தைக் தரும் வங்கியர் மிகவும் உன்னிப்பாக, பொதுப்படையான முறையில் சொற்களைப் பயன்படுத்த வேண்டும். வாடிக்கையருக்கு அவ்வளவு சாதகமில்லாத கருத்தைத் தெரிவித்தால் அவர் அவதூறு வழக்குப் போடலாம்; மிகவும் சாதகமான கருத்தைத் தெரிவித்தாலும் வங்கி பொய்க் கூற்றளித்த குற்றத்திற்கு ஆளாக நேரலாம். பொதுப்படையான கருத்தைத் தனது சகவங்கியருக்கு மட்டுமே தெரிவிக்கலாம். வங்கியரல்லாத பிறருக்கு இவ்வகையாக கருத்தைத் தெரிவிக்க வாடிக்கையரின் அனுமதியைப் பெற வேண்டும். வங்கியர் தனக்குத் தெரிந்த அளவு வாடிக்கையர் கணக்கைப் பற்றியும் அவரது நடவடிக்கைகளைப் பற்றியும் செய்திகள் தரலாம்; பிறரிடமிருந்து விசாரணை செய்து விவரங்களறிந்து கொள்ளவேண்டுவதில்லை. (Parsons V. Barclays & Co., and another).

எந்த சூழ்நிலைகளில் தமது வாடிக்கையரின் கணக்குப் பற்றிய இரகசியம் காக்கும் கடமையிலிருந்து வங்கியர் விடுபடுகிறுர் என்பதைக் காண்போம் :–

1. வாடிக்கையரே தமது நிதிநிலை, நாணயம் பற்றி வேண்டிய செய்திகளைத் தெரிவிக்கும்படி வங்கியரை வேண்டிக் கொண்டால், வங்கியர் அச்சம் ஏதுமின்றி தமது கருத்தைத் தெரிவிக்கலாம். வாடிக்கையர் தான் வங்கியரிடம் கடன் பெற, மூன்றும் நபர் ஒருவரைப் பொறுப்புறுதி (guarantee) செய்யக் கோரலாம். அந்நபர் வாடிக்கையரின் நிதிநிலை பற்றி அறிய விரும்பலாம். அவருக்கு வங்கியர் தேவைப்பட்ட அளவுக்கு மட்டும் விவரங்களைத் தெரிவிக்கலாம்.

2. சட்டப்படி வாடிக்கையரின் கணக்கு விவரங்கள் தேவைப்பட்டால் வங்கியர் அவற்றைத் தெரிவிக்கக் கடமைப்பட்டவர்.

(i) நீதி மன்றம் ஆணையிட்டால் வங்கியர் அதற்குக் கீழ்ப்படிந்தேயாக வேண்டும்.

(ii) வருமான வரிச்சட்டம் வங்கியரைத் தேவைப்பட்ட கணக்கு ஏடுகளையும், அறிக்கைகளையும், பிற ஆவணங்களையும் வரி அலுவலர்களுக்கு அளிக்குமாறு பணிக்கிறது.

(iii) கம்பெனிச்சட்டப்படி, பரிசீலனை (investigation) நடக்கையில் கம்பெனி, அதன் செயலர்-கருவூலர் முதலானோர் பற்றிய எல்லாச் செய்திகளையும், ஏடுகளையும் தரும்படி அக் கம்பெனியின் வங்கியரையும் பணிக்கிறது.

(iv) வங்கியர் ஏடு சான்றுச் சட்டம் (Banker's Book Evidence Act, 1891) நீதிமன்ற நடவடிக்கைகளையொட்டி எந்த நபரையும் வங்கியின் ஏடுகளைப் பார்வையிடவோ அல்லது அதிலிருந்து படிகள் எடுக்கவோ அனுமதிக்க நீதிமன்றத்துக்கு அதிகாரமளிக்கிறது.

(v) புலன் விசாரணை மேற்கொண்ட காவல் துறை அதிகாரிகள் விசாரணையையொட்டி வங்கியரின் ஏடுகளைப்பார்வையிடலாம்.

(vi) நாணயமாற்றுக் கட்டுப்பாட்டுச் சட்ட (Exchange control Act) விதிகளை மீறியதாக நம்பப்படும் எந்த நபருடைய நடவடிக்கைகளையும் பற்றி உசாவி விவரங்கள் பெற அச் சட்டம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கியுள்ளது.

3. வியாபார நிமித்தமோ அல்லது தொழில் நிமித்தமோ பிற வணிகர்கள் தன் நிதிநிலை பற்றி அறிய விரும்பினுல் தேவைப் பட்ட விவரங்களைத் தருமாறு வங்கியரை வாடிக்கையர் அனுமதித் திருக்கலாம். அப்பொழுது வங்கியர் பொதுப்படையான முறை யில் செய்திகளை அறிவிக்கலாம்.

4. வங்கியர் தன் நலங்காக்க வேண்டியும் வாடிக்கையர் கணக்கு நிலையை வெளிப்படுத்தலாம். அதிகப்பற்று பெற்ற ஒரு வாடிக்கையர், பலப்பல முறை கேட்டும் தமது கடனைத் தீர்க்கா மல் வங்கியர் நீதிமன்றம் வரை செல்லுமாறு நடந்து கொண்டால், வங்கியர் இரகசியம் காக்கும் கடமையிலிருந்து தவறியவராகார்.

5. நாட்டு நலங்கருதியும் வாடிக்கையர் கணக்குப் பற்றிய நட வடிக்கைகளை வெளிப்படுத்தும் நிலை வங்கியருக்கு உண்டாகலாம். சட்ட விரோதமான செயல் அல்லது பகை நாட்டவருடன் வணிகம் போன்ற நாட்டுக்குத் தீங்கான நடவடிக்கைகளில் ஈடு பட்டுள்ள வாடிக்கையரைக் காட்டிக் கொடுப்பது வங்கியரின் கடமையாகும். இந்நிலையில் இரகசியம் காக்கும் கடமையைவிட நாட்டு நலனைக் காக்குங் கடமை முதன்மையிடம் பெறுகிறது.

எந்த விதமான சூழ்நிலையாயினும் வங்கியர் தம் வாடிக்கையர் கணக்கு, நிதிநிலை, நாணயம் பற்றிய விவரங்கள் தரும் போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும். வெறும் செய்திகளை உள்ள படி அளிக்க வேண்டும். அவற்றை இரகசியமாகத்தர வேண்டும்; தான் பொறுப்பு எதனையும் ஏற்கக் கூடாது. தகுந்த காரண மின்றி அல்லது உண்மை நிலைக்குப் புறம்பான செய்திகளை வெளி யிட்டால் வங்கியர் பல தொல்லைகளுக்கு ஆளாகலாம். வாடிக்கை யருக்கு இதனுல் நட்டமேற்பட்டால் அல்லது அவதூறு விளைந்தால் வங்கியரை இழப்பீடு செய்யக் கோரலாம். தெரிந்தும் தவருன செய்திகளை மூன்ரும் நபர்களுக்கு அறிவித்து, அதன்படி நடந்து அதனுல் நட்டமடைந்தால், மூன்ரும் நபர்கள் வங்கியர் மீது நட்ட ஈடு கோரி வழக்கிடலாம். வேண்டுமென்றே, கெட்ட எண்ணத் துடன் வங்கியர் தவருன அல்லது மிகைப்படுத்தி விவரங்களைத் தந்தார் என்று மெய்ப்பிக்கப்பட்டால் வங்கியர் நட்டஈடு தர வேண்டி வரும். ஆனுல் கவனமின்மை காரணமாக தவறு நேர்ந் தால் வங்கியர் பொறுப்பாக மாட்டார்; ஏனெனில் வங்கியருக் கும் மூன்ரும் நபருக்கும் ஒப்பந்தவகை உறவு ஏதும் கிடையாது.

வங்கியர் ஏடுகள் சான்றுச் சட்டம்
(Bankers Book Evidence Act, 1891)

நீதிமன்றத்தில் நடக்கும் வழக்குகளில், வழக்குதாரர்களில் எவரேனும் வேண்டினால், வங்கியர் தமது ஏடுகளை நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல வேண்டியிருந்தது. இதனால் வங்கிகளுக்குத் தொழில் செய்வதில் இடையூறுகள் ஏற்பட்டன. வங்கி வேலை நேரத்தில் எல்லா ஏடுகளும் தொடர்ந்து தேவைப்படக் கூடும். அவ்வமயம் ஏடு ஏதும் இல்லாவிட்டால் அதனால் தொழில் தடைப்படுவதுடன் வாடிக்கையருக்கும் இடைஞ்சல் ஏற்படும். இதைத் தவிர்ப்பதற்காக 1891ஆம் ஆண்டு வங்கியர் ஏடுகள் சான்றுச் சட்டம் இயற்றப்பெற்றது. இதன் படி, எல்லாச் சட்ட நடவடிக்கைகளிலும், வங்கியர் ஏடுகளிலுள்ள எந்தப்பதிவும் உண்மையொப்பு நகல் (Certified copy) வழி சான்றாக அமைய வகை செய்யப்பட்டுள்ளது. மூலப்பதிவு எந்த அளவுக்குச் சட்டத்தில் அனுமதிக்கப்படுமோ அந்த அளவுக்கு உண்மை யொப்பு நகல் எல்லாச் செய்திகள், நடவடிக்கைகள், கணக்குகள் முதலியன பதிவானமைக்கு மேலோட்டமாக (Prima facie) சான்றென அமையும். ஒரு பதிவுக்கு ஆதாரமாக விளங்கும் எல்லா நடவடிக்கைகளும், ஆவணங்களும், செய்திகளும் தனித்தனியே சான்றாகக் காட்டப்பட வேண்டுவதில்லை. பதிலின் உண்மை யொப்பு நகலொன்றே போதுமானது.

உண்மை யொப்பு நகலென்பது, வங்கி ஏடுகளின் பதிவு எதனையும் நகல் எடுத்து, அதன் அடிப்பகுதியில் அந்நகல் குறிப்பிடப்பட்ட பதிவின் உண்மை நகல் என்றும், அப்பதிவு வங்கியரின் சாதாரண ஏடுகளில் உள்ளது என்றும், வங்கியின் அன்றாட வழக்கமான நடவடிக்கைகளை யொட்டி உண்டானது என்றும், அந்த ஏடு வங்கியின் வசம் இருந்து வருகிறதென்றும் எழுதப்படுவதாகும். இந்த நகலில் தலைமைக் கணக்கர் அல்லது நிருவாகர் வங்கியின் முத்திரையுடன் தன் பெயரையும் பதவியையும் குறிப்பிட்டுத் தேதியுடன் கையொப்பமிட வேண்டும்.

இச் சட்டத்தில் உள்ளவாறு மெய்ப்பிக்கக் கூடிய எந்த வங்கியர் ஏட்டினையும் அல்லது அதில் பதிவாகியுள்ள செய்தி, நடவடிக்கை மற்றும் கணக்கினையும் அவசியம் கொண்டு வரும்படி நீதிமன்ற நடவடிக்கைகளில் வங்கிய அதிகாரி கட்டாயப்படுத்தப்பட மாட்டார். தக்கக் காரணமிருப்பின், நீதிமன்றமோ அல்லது நீதிபதியோ மேற்கண்ட விலக்கை அளிக்காமல் இருக்கலாம். இந்த சலுகை நீதிமன்றத்தின் முன் நடக்கும் நடவடிக்கைகளுக்குப்

பொருந்துமேயன்றி காவல்துறை நடவடிக்கைகளுக்குப் பொருந் தாது. (A. F. G. Price V. Emperor).

மேற் கண்ட சலுகை, வங்கியர் வழக்கொன்றில் நேரடியாகச் சம்பந்தப்படாமலிருந்தால்தான் கிடைக்கும். அதாவது வங்கியர் ஒரு வழக்குதாரராக இருத்தல் கூடாது. வழக்குதாரராக இருப் பின் வரவழைப்பாணை (Subpoena) மூலம் ஏடுகளை நீதிமன்றத்தின் முன் கொண்டுவருமாறு கட்டாயப்படுத்தப்படுவார்.

நீதிமன்றம் தன்முன் நடைபெறும் நடவடிக்கைகள் தொடர் பாக, சம்பந்தப்பட்ட எந்த வழக்குதாரரையும் வங்கியர் ஏடுகளை ஆய்வு செய்யவோ பதிவுகளை நகல் எடுக்கவோ அனுமதிக்கலாம்.

வங்கியருடைய சட்டப்பிணைப்பு அல்லது கடமைகளை இது காறும் கண்டோம். இனி வங்கியருக்குள்ள உரிமைகளைக் காண் போம்.

வங்கியரின் பற்றுரிமை (Banker's Lien)

வங்கியர், வாடிக்கையரிடையேயுள்ள உறவில் சிறப்பான இடம் பெற்றுள்ள வங்கியரின் உரிமை பற்றுரிமை (lien) ஆகும். தனக்குவர வெண்டிய பணம் செலுத்தப்படும் வரை, தன்னிட முள்ள கடனாளியின் சொத்தினைத் தம்மிடம் இருத்தி வைக்கும் உரிமையே பற்றுரிமையாகும். சொத்தை இருத்திவைக்கும் உரி மையே பற்றுரிமையென்று சுருக்கமாகவும் கூறலாம். வேறுவகை யான உடன்பாடு ஏதும் இல்லாவிடில்தான் வங்கியர் பற்றுரிமை செலுத்த முடியும். பற்றுரிமை இரண்டு வகைப்படும். ஒன்று பொதுப்பற்றுரிமை (General Lien) - அதாவது பொதுவாகக் கடனாளி செலுத்த வேண்டிய எல்லாக்கடன்களுக்கும் அவர் சொத்தின் மீது கடனாளர் (Creditor) செலுத்தும் பற்றுரிமை. இந்திய ஒப்பந்தச்சட்டம் பிரிவு 171 இன்படி வங்கியர், சரக் குடைப்பதிலாள் (Factor), கப்பல் துறையர் (Wharfinger), நீதி மன்ற அட்டர்னிகள் (Attorneys of High court), பாலிசிதரகர் கள் (Policy brokers) முதலியோர் தமக்குச்சேர வேண்டிய பணத் திற்குப் பிணையாகத் தம்மிடம் ஒப்படை செய்யப்பட்டுள்ள கடனாளியின் சரக்கு, பிணையங்களை இருத்தி வைக்கலாம். இதுவே பொதுப்பற்றுரிமையாகும்.

மற்றது தனிப்பற்றுரிமை (Particular Lien) எனப்படும். ஒருவர் தமது நேரம், உழைப்பு, பணம் ஏதும் பிறரது பொருள் மீது செலவழித்ததன் விளைவாக அதற்கு அவருக்குச் செலுத்தப்

படவேண்டிய தொகை தரப்படும்வரை அப்பொருளைத் தம்மிடம் இருத்திவைக்கலாம். ஒரு கட்டித்தங்கத்தைக் கொடுத்து ஒருவரைச் சங்கிலி செய்ய வேண்டுகிறோம்; அவர் அதைச்செய்வதற்குக் கூலி பெறும் உரிமையுள்ளவர். கூலி செலுத்தப்படும்வரை அச் சங்கிலியைத் தன்னிடம் அவர் இருத்தி வைக்கலாம். இதுவே அவர் அப்பொருள் மீது செலுத்தும் தனிப்பற்றுரிமை எனப்படும். தையல்காரர் தைத்த துணிமீதும், கெடிகாரம் பழுது பார்ப்பவர் கெடிகாரத்தின் மீதும் தனிப்பற்றுரிமை செலுத்தலாம்.

பற்றுரிமை ஏற்படுத்துவதற்கு உடன்பாடு எதும் தேவையில்லை. முன்பு கண்டபடி இந்திய ஒப்பந்தச் சட்டமே இதற்கு வகை செய்திருக்கிறது. வங்கியர் பற்றுரிமை செலுத்துவதற்கு கீழ்க்கண்ட நிலை அமைந்திருக்க வேண்டும்.

(i) வங்கியர் என்ற முறையில் தம்மிடம் அச்சொத்து வந்திருக்க வேண்டும்.

(ii) பற்றுரிமைக்குப் புறம்பாக ஏதும் உடன்பாடு இருத்தலாகாது.

(iii) சொத்து குறிப்பிட்ட ஒரு காரியத்துக்கு என ஒதுக்கப்பட்டு, பற்றுரிமைக்கு ஒவ்வாத முறையில் வங்கியரிடம் ஒப்படைக்கப் பட்டிருத்தலாகாது.

(iv) வங்கியர் என்ற முறையில் பெறப்பட்ட சொத்து சட்டம் ஒப்பும் முறையில் அவரிடம் வந்திருக்க வேண்டும்.

வங்கியரின் பற்றுரிமையை உட்கிடை அடகு (implied pledge) என்று கூறுவது சாலப் பொருந்தும். பற்றுரிமை என்ற சொல்லுக்குச்சொத்தை இருத்திவைக்கும் உரிமைஎன்றே விளக்கம் கண்டோம். பற்றுரிமை சொத்தை விற்கும் உரிமையாகாது. ஆனல் அடகு என்று கூறும் பொழுது, விற்கும் உரிமை கடனளருக்கு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது. வங்கியரின் பற்றுரிமை வெறும் பொதுப்பற்றுரிமை மட்டும் எனலாகாது; அதைவிட அதிக உரிமைகளை அவருக்குத் தருகிறது. வாடிக்கையர் குறித்தபடி கடன் தொகையைச் செலுத்தாவிட்டால், அவரது சரக்கு, பிணையங்களைவிற்கும் உரிமை வங்கியருக்கு உண்டு. இந்தப் பற்றுரிமை அடகு போன்று அமைவதால் இதனை 'உட்கிடை அடகு' என்பது வழக்கம். வாடிக்கையருக்குத் தக்க முன்னறிவிப்பு கொடுத்துவிட்டு, தன்வசமுள்ள பிணையங்களை விற்று விடலாம். தாவர சொத்துக்களின் ஆவணங்களாக (Title deeds to immovable property) இருப்பின் அவற்றை இருத்திக் கொள்ளலாமேயன்றி விற்கமுடியாது.

பற்றுரிமை செலுத்தும் நிலை

பிணையங்களை வங்கியரிடம் வாடிக்கையர் சேர்ப்பித்து அதிலுள்ள கூப்பன்களை (Coupon)த் தந்து பணத்தை வசூலிக்க

வங்கியருக்கு அனுமதி அளித்திருப்பாரானால், பிணையங்கள், கூப்பன்கள் ஆகியவை மீது வங்கியர், வசூலிக்கும் வங்கியர் என்ற உரிமை காரணமாக, பற்றுரிமை செலுத்தலாம். வங்கியர் என்ற தொடர்பின் வழி அவரிடம் சேர்க்கப்பட்ட அல்லது செலுத்தப் பட்ட மாற்றுச்சீட்டு, காசோலை, பணம், சரக்கு மீது பொதுப் பற்றுரிமை செலுத்தலாம் (Misa V. Currie).

குறிப்பிட்ட ஒரு கடனுக்குப் பிணையமாக சில பிணைகள் தரப்பட்டு, அக்கடன் தீர்க்கப்பட்ட பின்னும், மற்றக் கடன் இன்னும் செலுத்த வேண்டிய நிலையில், அப்பிணைகள் வங்கியர் வசமே இருந்தால் வங்கியர் அவை மீது பற்றுரிமை செலுத்த லாமா என்ற கேள்வி பலமுறை எழுந்தது. In Re London and Globe Finance Corporation எனக் குறிப்பிடப்படும் வழக்கில் இதற்கு அறுதியான விடையளிக்கப்பட்டது. பிணைக் கடன் தீர்க்கப்பட்ட பின்னரும் பிணைகள் வங்கியர் வசம் இருக்க அனு மதிக்கப்பட்டால், அவை மீண்டும் வங்கியரிடம் சேர்ப்பிக்கப் பட்டதாகக் கொள்ளப்படும்; பிறகடன்கள் தீரும் வரை வங்கியர் அவற்றின் மீது பொதுப் பற்றுரிமை செலுத்தலாம்.

வாடிக்கையர் பலதரப்பட்ட நிலைகளில் வங்கியரிடம் பல கணக்குகள் வைத்திருக்கலாம். எடுத்துக்காட்டாகக் கூட்டாளி என்ற முறையில் நிறுவன மொன்றின் கணக்கு வைத்திருக்க லாம். தனி நபர் என்ற முறையில் மற்றொரு கணக்கு வைத்திருக் கலாம். நிறுவனக் கணக்கு கடனில் இருக்கும்போது அதன் கூட்டாளி தனிநபர் என்ற முறையில் வைத்திருக்கும் கணக்கில் உள்ள பணத்தின் மீது பற்றுரிமை செலுத்த முடியாது. இதே போல தனிநபர் தரவேண்டிய கடனுக்கு அவர் கூட்டாளியாயுள்ள நிறுவனத்தின் பணத்தின் மீது பற்றுரிமை செலுத்த முடியாது.

பற்றுரிமை செலுத்த இயலா நிலை

குறிப்பிட்ட ஒரு காரியத்துக்கு ஒப்படைக்கப்பட்ட பொருள், பணம், காசோலை, மாற்றுச்சீட்டுப் போன்றவற்றின் மீது பற்றுரிமை செலுத்தலாகாது. மற்றும் வங்கியர் என்ற முறையி லன்றித் தம்மிடம் வந்தடைந்த பொருள் மீதும் பற்றுரிமை செலுத்தமுடியாது.

(i) பாதுகாப்புப் பெட்டகவைப்பு: விலையுயர்ந்த நகை, ஆவணங்கள், பிணையங்கள் முதலியவற்றைப் பாதுகாப் பாக வைத்திருக்கும் பொருட்டு வாடிக்கையர் அவற்றை வங்கியரிடம் ஒப்படைவு செய்யலாம். அந்நிலையில்

அப்பொருள்கள் கடன் ஏதுக்கும் பிணையாகத் தரப் படுவன அல்ல. ஆகவே குறிப்பிட்ட ஒரு காரியத்துக் காகவே அப்பொருள்கள் வங்கியரிடம் ஒப்படைக்கப் படுவதால் அவற்றின் மீது பற்றுரிமை செலுத்த முடியாது.

(ii) ஆவணங்கள் அல்லது மாற்றுச்சீட்டு குறிப்பிட்ட ஒரு காரியத்திற்காக வங்கியரிடம் வைக்கப்பட்டிருந்தால் வங்கியர் அவற்றின்மீது பற்றுரிமை செலுத்த முடியாது (Greenhalgh V. Union Bank of Manchester).

(iii) குறிப்பிட்ட ஒரு காரியத்திற்காக பணம் ஏதும் வங்கி யரிடம் ஒதுக்கி வைத்திருந்தால் அதன்மீது வங்கியருக்கு பற்றுரிமை கிடையாது. குறிப்பிட்ட சில கடன்களுக் காக மட்டும் சில பிணயங்களை பிணயாக அளித்திருந் தால் வேறு எந்த கடன்காரணமாக அப்பிணயங்கள் மீது பற்றுரிமை கொண்டாடமுடியாது,

(iv) கவனமின்மையாலோ அல்லது தவறுதலாகவோ ஆவணங்கள் அல்லது பிணயங்களை வங்கியர் வசம் சேர்ப்பித்திருந்தால் அவற்றின்மீது அவர் பற்றுரிமை செலுத்தலாகாது. கடன் ஏதும் பெற வேண்டி ஒருவர் பிணயமாக அளித்த மதிப்புள்ள பொருள்கள் (Valuables) மீது, பின்னர் கடன் அளிக்கப்படா நிலையில் பற்றுரிமை செலுத்த முடியாது.

(v) கடன் கொடுபடவேண்டிய நாள் வரும்வரை வங்கி யருக்குப் பற்றுரிமை கிடையாது. வருங்காலத்தில் ஏற்படக் கூடிய கடன்களுக்குத் தற்சமயம் கைவசமுள்ள பிணைகள் மீது பற்றுரிமை செலுத்த முடியாது.

(vi) பொறுப்புரிமை (Trust) கணக்கு மீது வங்கியருக்குப் பற்றுரிமை கிடையாது. வங்கியருக்கு, குறிப்பிட்ட ஒரு கணக்கு பொறுப்புரிமை பற்றியது எனத் தெரிந் திருப்பின் அவர் அக் கணக்கு மீது பற்றுரிமை செலுத்த முடியாது.

வங்கியரின் ஈடுசெய் (Set - off) உரிமை

இந்த உரிமையை, வாடிக்கையர் கணக்குகளை ஒன்று கூட்டும் வங்கியரின் உரிமை என்றும் கூறுவதுண்டு. வாடிக்கையர் ஒருவருக்கு வங்கியொன்றில் பல கணக்குகள் இருக்கலாம். அவற்றில் ஒன்றில் கடன்பாக்கியும் பிறகணக்குகளில் தொகை

இருப்பும் இருக்கும்போது வங்கியர் தமக்குச் சேரவேண்டிய கடனைத் தீர்த்துக்கொள்ள வேண்டி எல்லாக்கணக்குகளையும் ஒன்று கூட்டலாமா என்ற கேள்வியை ஆராய வேண்டும். வாடிக்கையருடன், ஒவ்வொரு கணக்கையும் தனித் தனியாக வைத்திருக்க ஒப்பந்தம் ஏதும் வங்கியர் செய்து கொண்டிருந்தால் அவற்றைத் தனியாகவே வைத்திருக்கும் சட்டப்பிணைப்பு வங்கியருக்கு உண்டு. ஆனால் மேற்கண்டவாறு ஒப்பம் ஏதும் செய்து கொள்ளவில்லையென்றால் வங்கியர் வாடிக்கையரின் கணக்குகளை ஒன்று கூட்டலாம் என்று பலகாலம் கருதப்பட்டு வந்தது. Garnett V. McKervan என்ற வழக்கில் ஒருநபர் ஒரு வங்கியில் தாம் வைத்திருந்த கணக்கில் கடன் வாங்கியிருந்தார். பல ஆண்டுகளாக அதைச் செலுத்தவில்லை; அந்த வங்கியிடம் நடவடிக்கைகளையும் நிறுத்திவிட்டார். சில ஆண்டுகளுக்குப்பின் அதே வங்கியின் மற்றொருகிளையில் புதியகணக்கு ஆரம்பித்தார். இப்புதிய கணக்கில் உள்ள பணத்திலிருந்து பழைய கணக்கில் உள்ள கடன் தொகையளவுக்கு பணத்தை முன்பு கணக்கு வைத்திருந்தகிளைக்கு மாற்றினர் வங்கியர். இவ் வழக்கில் பிற விவரங்கள் அடங்கியிருப்பினும், நம் கவனத்துக்குரிய முடிவு-வங்கியர், வேறு ஒப்பந்தம் அல்லது வழக்கம் இருந்தாலன்றி, தமது வாடிக்கையரின் கணக்குகளை ஒன்று கூட்டுவதன்முன் அவருக்கு அறிவிப்பது முறையாகுமென்றாலும், சட்டப்படி அறிவித்த பின்னர்தான் ஒன்று கூட்டலாம் என்ற சட்டப்பிணைப்பு இல்லாதவர் என்பதாகும். பின்னர் எழுந்த Greenhalgh V. Union Bank of Manchester என்ற வழக்கில் வங்கியர் வாடிக்கையரின் இசைவின்றிக் கணக்குகளை ஒன்று கூட்டக்கூடாது என்று கூறப்பட்டது. இரண்டு தனி கணக்குகளை ஆரபிக்கும் நிலையே அவை தனித்தனியாகக் கருதப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும்போது அவற்றை ஒன்று கூட்டுவது முறையாகாது என்று நீதிபதி சுட்டினர்.

வங்கியர் வாடிக்கையருடன் தக்க உடன்பாடு செய்துகொண்டு அவருடைய பல கணக்குகளை ஒன்று கூட்டலாம். உடன்பாடு இருக்கும் நிலையில் முன்னறிவிப்பும் தேவைப்படாது. ஒன்று கூட்டுவதால் ஏற்படும் எந்த நட்டத்திற்கோ, தொல்லைக்கோ வங்கியர் பொறுப்பாக மாட்டார்.

வங்கியர் வாடிக்கையரிடம் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தாலுங்கூட முன்னரேயுள்ள கடன்களை அடைக்கவே கணக்குகளை ஒன்று கூட்டும் உரிமையைப் பயன்படுத்தலாம். இனி எழக்கூடிய அல்லது சந்தேக நிலையிலுள்ள கடன்கள் பொருட்டு இந்த உரிமையைச் செலுத்தலாகாது. கடன்தொகை ஓர் அறுதியிட்ட

அளவாக இருத்தல், இவ்வுரிமையைப் பயன்படுத்துவதற்கு அவசியமானது.

வாடிக்கையர் வைத்திருக்கும் பல கணக்குகளும் ஒரே தன்மையின் அடிப்படையில் அமைய வேண்டும். அதாவது சட்டப்படி, அத்தனை கணக்குகளும் அவருக்குக் குறிப்பிட்டநிலையில் உரித்தாக இருத்தல் வேண்டும். ஒரு கணக்கு தனிநபர் என்ற முறையிலும், ஒரு கணக்கு பொறுப்புரிமையர் என்ற முறையிலும், ஒரு கணக்கு நிறைவேற்றுளர் என்ற முறையிலும் என்பது போன்று இருப்பின் அவற்றை ஒன்று கூட்ட முடியாது.

வாடிக்கையர் ஒருவர் தனிப்பட்ட முறையில் வைத்திருக்கும் கணக்கில் கடனும் மற்றொருவரோடு கூட்டாக வைத்திருக்கும் கணக்கில் இருப்புத் தொகையும் வைத்திருந்தால் இவ்விரு கணக்குகளையும் வங்கியர் ஒன்று கூட்ட முடியாது. ஏனெனில் இரு கணக்குகளும் ஒரே உரிமையின்பேரில் வைத்திருக்கப்படவில்லை.

கணக்குகளை ஒன்று கூட்டும் உரிமை சில சமயங்களில் வங்கியருக்குப் பெரும் நன்மையாக அமையலாம். தவணை வைப்பு வைத்திருக்கும் வாடிக்கையர், தமது நடப்புக்கணக்கிலுள்ள இருப்புத் தொகைக்குமதிகமாக காசோலை விடுக்க அனுமதிக்கப்படுவதுண்டு. இதற்குக் காரணம் வங்கியர் நடப்புக்கணக்கில் அதிகப்பற்றாகநிற்கும் தொகையைத் தவணை வைப்புப்பணத்துடன் ஒன்று கூட்டி தமது கடனைச் சரி செய்து கொள்ளலாம். பொதுவாக, வாடிக்கையர் வங்கியில் கணக்கு ஆரம்பிக்கும்பொழுது கணக்குகளை ஒன்றுகூட்டும் உரிமையை வங்கியருக்கு அளிக்க ஒப்புக்கொள்வதாக அமைந்துள்ள விதிகளைக் கையொப்பமிட்டு ஏற்றுக் கொள்கிறார். இதனால் வங்கியருக்கு ஆதாயம் பாதுகாப்பான வழியில் தமது பணத்தைத் திருப்பிப் பெறுவதாகும்.

வட்டி விதிக்கும் உரிமை

வங்கியருடைய தொழிலே குறைந்த வட்டிக்குப் பொது மக்களிடமிருந்து பணந்திரட்டி அதனைச் சிறிது அதிகமான வட்டிக்குப் பணம் தேவைப்படுவோருக்கு அளித்து அதன் வழி இலாபம் ஈட்டுவதாகும். எனவே வங்கியர் அளிக்கும் எவ்விதமான கடனுக்கும் வட்டி விதிக்கும் உரிமை அவருக்கு உண்டு. விதிப்பது தனிவட்டியா அல்லது கூட்டு வட்டியா என்பதும் அவரே நிருணயிப்பதுதான். அவர் இடும் நிபந்தனைக்கு இசைந்தவர்கட்குத் தான் கடன் வசதி கிடைக்கும். பொதுவாக அரையாண்டுக்கு ஒருமுறை வாடிக்கையர் தரவேண்டிய வட்டியை அவர் கணக்கில்

பற்று வைப்பது வழக்கம். அடுத்த அரையாண்டு கணக்கு காட்டும் பொழுது இத்தொகை இன்னமும் கொடுபடாமலிருப்பின் இதன் மீதும் வட்டி வசூலிக்கப்படும். இதுமட்டுமன்றி துணைச்செலவுகள் (Incidental Charges) என்ற இனத்திலும் ஆண்டுக்கு ஒரு அல்லது இருமுறை கட்டணம் வாடிக்கையர் கணக்கில் பற்று வைக்கப் படும்.

காலவரையறைச் சட்டம் (Limitation Act)

வங்கியர் வாடிக்கையரிடம் கடனுகப் பெற்றுள்ள வைப்புகளை அவர்கள் கேட்டாலன்றி திருப்பித்தர வேண்டுவதில்லை என்று முன்னரே கண்டோம். ஆகவே வாடிக்கையர் கேட்கும்வரை வங்கியருக்கு பணத்தைச் செலுத்தும் கடமையும், வாடிக்கை யருக்குப் பணத்தைத் திருப்பிப்பெறும் உரிமையும் எழுவதில்லை. காலவரையறைச் சட்டப்படி வாடிக்கையர் கேட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டு காலத்திற்குள் அத்தொகையைத் திருப்பிப்பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். மூன்று ஆண்டுகள் கழித்து இது குறித்து சட்டமுறை உரிமைகளை நிலைநாட்ட இயலாது.

4, வாடிக்கையரின் கணக்கு வகைகள்

(Types of Accounts of customers)

வங்கியர் பொதுமக்களிடமிருந்து பலவகை வைப்புகளைத் திரட்டி அந்தத் தொகையைக் கொண்டு தனது தொழிலை நடத்துகிருர். மற்றத் தொழில்களில் உரிமையாளர்கள் தமது பணத்தைப் பெருமளவுக்கு முதலீடு செய்யவேண்டிய நிலையிலுள்ளனர். ஆனுல் வங்கித் தொழிலில், வங்கியர் செய்யும் முதலீட்டுத் தொகையைவிடப் பன்மடங்கு தொகை பொதுமக்களிடமிருந்து வைப்புத்தொகையாகப் பெறப்படுகிறது. இந்தத் தொகையை ஆதாரமாகக் கொண்டுதான் வங்கியர் தொழிலை நடத்துகிருர். எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக வைப்புகளை வங்கியர் திரட்டுகிருரோ அவ்வளவுக்கவ்வளவு பெருக்கமாக அவர் தொழிலை நடத்த வாய்ப்பு ஏற்படுகிறது.

வாடிக்கையர் என்று நாம் பேசும்போது வங்கியில் கணக்கு வைத்திருக்கக் கூடிய எல்லோரையும் குறிக்கிருேம். வாடிக்கையர் ஒரு தனிநபராக, கூட்டு நிறுவனமாக, நிறுமமாக (கம்பெனியாக), கூட்டுருவாக (கார்ப்பொரேஷனுக), பொறுப்புரிமை (Trust)யாக, சட்டப்படி நிறுவப்பட்ட சங்கமாக, பள்ளி, கல்லூரி போன்ற நிலையங்களாக மற்றும் அரசு, நகராட்சி, பஞ்சாயத்து போன்ற உறுப்புக்களாக இருக்கலாம். பலவகைப்பட்ட வாடிக்கையருக்குப் பலவகைப்பட்ட கணக்குகள் தேவைப்படலாம். சில வகை வாடிக்கையர் பணத்தைப் பாதுகாவலாகவைத்து ஒழுங்கான, தவருது பெறக்கூடிய வட்டி வருமானம் பெறவிரும்பலாம். சிலர் தம் தொழிலுக்குப் பணம் போடவும் எடுக்கவும் வசதியுடன், வேண்டும்போது கடன் பெறவும் வேண்டிக் கணக்கு ஆரம்பிக்கலாம், நிரந்தர வருமானமுள்ளவர்களும், மாத ஊதியம் பெறுவோரும் வருவாயில் ஒருபங்கைச் சேமிக்க விரும்பிக் கணக்கு ஆரம்பிக்கலாம். குறிப்பிட்ட நோக்கத்துடன் குறிப்பிட்ட

காலத்துக்குப் படிப்படியாகப் பணஞ் சேமித்து வட்டியுடன் தொகையைத் திருப்பிப்பெறச் சிலர் விரும்பலாம். எடுத்துக் காட்டாகக் குழந்தைகள் படிப்புச்செலவுக்கு, திருமணச்செலவுக்கு, வீடுகட்டச்செலவுக்குச் சேமித்தல் போன்ற நோக்கங்களைக் கூற லாம். பலதரப்பட்ட வாடிக்கையருடைய தேவைகளை நிறை வேற்றும் வகையில் பலவகைக் கணக்குகளை வங்கியர் ஏற்றுக் கொள்ளுகின்றனர்.

பொதுவாக வங்கிகள் எல்லாம் மூன்றுவகைக் கணக்குகளில் தம்மிடம் பணம் வைத்திடக்கோரி விளம்பரம் செய்கின்றன. அவை சேமிப்பு வைப்பு, தவணை வைப்பு, நடப்பு வைப்பு என்பன. இவ்வகைக் கணக்குகளல்லாது தொடரும் வைப்பு (Recurring Deposit), அழைப்பு வைப்பு (Call Deposit), பருவகால வைப்பு (Seasonal Deposit) முதலிய வைப்புகளும் வங்கிகளில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

மக்களைத் தம்பால் ஈர்க்க வங்கிகள் இன்னவகைக் கணக்கு வைத்திருந்தால் இன்னவகை வசதிகளை வாடிக்கையர் பெறலாம் என்று விளம்பரம் செய்கின்றனர். மற்றும், தாம்தான் மற்ற வங்கியரைவிட அதிகமாக வட்டி அளிப்பதாகக் கூறலாம். ஒரு வருக்கொருவர் போட்டியிட்டுக் கொண்டு தமது ஆற்றலுக்கு அப்பாற்பட்ட வட்டி விகிதங்களை அளிப்பதாக அறிவித்து அதனால் விரும்பத்தகா விளைவுகளை ஏற்படுத்தலாம். இதையெல்லாம் ஓரளவுக்குக் கட்டுப்படுத்த ரிசர்வு வங்கி வங்கிகளிடையே உடன் பாடு ஒன்று ஏற்படுத்தி அதன்படி வட்டிவிகிதத்தை ஒரு சீராக வைத்திருந்தது. பெரும் வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப் பட்டது முதல், ரிசர்வு வங்கி தனது கட்டளையிடும் அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒருசீரான வட்டி விகிதத்தை நாடு முழுதும் உள்ள வங்கிகள் கடைப்பிடிக்கும்படி செய்துள்ளது. சிறிய சில வங்கி களும் சில கூட்டுறவு வங்கிகளும் இவ்விகிதத்தை விடச்சற்று அதிகவட்டி அளிக்க அனுமதிக்கப் பட்டுள்ளன. வங்கிகள் நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டு அவை தரக்கூடிய உயர்ந்த அளவு வட்டி வீதமும் ரிசர்வு வங்கியின் கட்டளையில் குறிப்பிடப் பட்டுள்ளன.

தவணை வைப்பு (Fixed Deposit)

குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு வங்கியரிடம் வைக்கப்படும் பணத்தைத் தவணை வைப்புக் கணக்கு என்று கூறுவர். நடை முறையில் தவணை வைப்பு என்ற சொற்றொடர் கையாளப்பட்

டாலும் சட்டத்தில் இப்பெயர் கொண்ட வைப்பை நாம் காண முடியாது. தவணைப் பொறுப்புக்கள் (Time Liabilities) எனப்படும் சொற்றொடர் தவணைவைப்பைக் குறிக்கிறது. தவணைப் பொறுப்புக்கள் என்பதில் தவணைவைப்புக்கள் மட்டுமே அடங்கியதாகக் கூறலாகாது. கேட்புப் பொறுப்பில் (Demand Libilities) அடங்காத எல்லா பொறுப்புக்களும் தவணைப் பொறுப்புக்கள் என்ற தலைப்பில் சேர்க்கப்படுகின்றன. இங்கிலாந்து நாட்டில், பத்து அல்லது பதினைந்து நாட்கள் முன்னறிவிப்பு கொடுத்துவிட்டு திருப்பிப்பெறும் ஏற்பாடுள்ள வைப்பினைத் தவணைப் பொறுப்பு என்று அல்லது தவணை வைப்பு (Time Deposit) என்று அழைக்கின்றனர். நம் நாட்டில் வங்கியரிடம் தொகை எவ்வளவு காலம் வைத்திருக்கப்படும் என்பது குறிக்கப்பட்ட வைப்பைத் தவணை வைப்பு என்று பேசுகிறோம்.

தவணை வைப்புக்களை வங்கியர் பெரிதும் வரவேற்கின்றனர். இதற்குக் காரணம் இந்த வைப்புத் தொகையை தவணைக்காலம் முடியும்வரை வாடிக்கையர் திருப்பிக் கேட்க முடியாது. ஆகவே வங்கியர் இந்தத் தொகையைத் தவணைக் காலத்திற்குத் தம் தேவைப்படி பயன்படுத்திக் கொள்ளலாம். பல வாடிக்கையர் தவணைக்காலம் முடிந்ததும் மீண்டும் அத்தொகையைத் தவணை வைப்பில் தொடர்ந்து வைத்திருப்பர். இதனால் வங்கியருக்கு தொடர்ந்து பணத்தை முதலீடு செய்ய வாய்ப்பு ஏற்படுகிறது.

வாடிக்கையரும் தமது பணத்தைத் தவணை வைப்பில் வைத்திருப்பதை விரும்புகின்றனர். ஏனெனில் இதற்குக் கணிசமான வட்டி அளிக்கப்படுகிறது. தம்மிடமுள்ள பணத்தைக் கொண்டு நிரந்தரமான, உறுதியான வருமானம் பெற விரும்புபவர் தவணை வைப்பில் பணத்தைச் செலுத்துகின்றனர். சுருங்கக் கூறின், தவணை வைப்பை ஒரு முதலீட்டுச் சாதனமாக மக்கள் கருதுகின்றனர்.

தவணை வைப்பைப் பெற்றுக்கொண்ட வங்கியர் தனது வாடிக்கையருக்குக் கடனாளியாகிறார். தவணைக்காலம் முடியுமுன் தவணைத் தொகையைத் திருப்பித் தரவேண்டுவதில்லை. சில வங்கிகள் தவணைக் காலம் முடியுமுன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் உரிமையைத் தம்மிடம் கொள்வதுண்டு. அந்நிலையில் வாடிக்கையருக்குத் தக்க அறிவிப்பு அளித்துவிட்டு வைப்பைத் திருப்பிச் செலுத்திவிடலாம். பிற நிலைகளில் வங்கியர் தவணைக் காலம் முடியுமுன் பணத்தைத் திருப்பிச் செலுத்தலாகாது. தவணைக் காலம் முடிந்த பின்னரும், வாடிக்கையர் பணத்தைத்

திருப்பிப் பெறவில்லையெனில், வங்கியர் அப்பணத்தின் மீது தவணை முடிந்தநாள் முதல்வட்டி அளிக்காமலிருக்கலாம்; ஆனால் சட்டப் படி வங்கியர் அப்போதும் கடனாளி என்ற நிலையில் இருப்பாரே யன்றி பொறுப்புரிமையர் (Trustee) என்று கருதப்படமாட்டார்.

தவணைக் காலம் முடியுமுன் வைப்பைத் திருப்பிப்பெற வங்கியர் அனுமதிக்க வேண்டுவதில்லை யென்றாலும், வாடிக்கையர் வேண்டுகோளுக்கு இணங்கும் பொருட்டு சில சமயம் வங்கியர் தவணை முதிருமுன் வைப்பைப் திருப்பிப்பெற அனுமதிப்பது முண்டு. இது விரும்பத்தக்க பழக்கமன்று. இப்படிச் செய்தால் வங்கியரின் ரொக்கநிலை பாதிக்கப்படும். மற்றும் பல வைப் பாளர்கள் இச் சலுகையை வேண்டினால், பிறர் வங்கியின் தொழில் முறையில் ஏதோ கேடு இருப்பதாக எண்ணி தமது வைப்புத் தொகையைத் திருப்பிக் கேட்கக்கூடும். இதனால் வங்கியில் நெருக்கடிநிலை ஏற்படக்கூடும். இச் சிக்கல்களில் சுழலாது, தவணை வைப்பாளர் எவருக்கும் அவசரமாகப் பணம் தேவைப்பட்டால், தவணை வைப்பின் பிணையின் பேரில் தொண்ணூறு விழுக்காடு அளவுவரை வங்கியர் கடன் வழங்குவது சிறந்தது. பெரும்பாலான வங்கியர் இம்முறையையே பின்பற்றுகின்றனர்.

தவணை வைப்பின்மீது காசோலை விடுக்கலாகாது. இவ்வைப் பிலுள்ள பணத்தைத் திருப்பிப்பெற காசோலை பயன்படுத்த வேண்டுவதில்லை. இதற்கு வங்கியர் காசோலை ஏடு (Cheque book) வழங்குவதுமில்லை. குறித்த வட்டி வீதம், வாடிக்கையருடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி, தவணை முதிர்ந்தவுடன் அல்லது அரை ஆண்டுக்கு ஒருமுறை அளிக்கப்படுகிறது.

தவணை வைப்புக் கணக்கில் ஒருவர் பணம் போட்டு வைக்க விரும்பினால், வங்கியை அணுகி அதற்கான விண்ணப்பத்தை நிரப்பி வைப்புத் தொகையுடன் அதை வங்கியரிடம் தருவார். வங்கியர் தொகையைப் பெற்றுக் கொண்டதற்கு ஆதாரமாக இரசீது ஒன்று வழங்குவார். இதைத்தவணை வைப்பு இரசீது என்பர். இந்த இரசீதில் வங்கியின் பெயர், முகவரி, இரசீது எண், வைப்பு செலுத்திய தேதி, செலுத்தியவர் பெயர், முகவரி, தொகை, காலம், வட்டி வீதம், வங்கி நிருவாகர், கணக்கர் கையொப்பம் முதலியன இடம்பெறும். வைப்புச் செலுத்தியவரின் மாதிரிக் கையெழுத்தை வங்கியர் பெற்றுக் கொள்வார்.

தவணை முதிர்வடைந்த வைப்பின்மீது வட்டி

குறிப்பிட்ட காலத்திற்கு வைக்கப்பட்ட வைப்பின்மீது, காலம் முடிந்த நாளிலிருந்து வட்டி தரப்படவேண்டுவதில்லை.

ஆனால் வங்கியர் விரும்பினால், வைப்பு மீண்டும் குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு புதுப்பிக்கப்படலாம். அதற்கு முறைப்படி வட்டி அளிக்கப்படும். தவணை முதிர்வடைந்தது முதல் வைப்பு மீண்டும் புதுப்பிக்கப்படும் வரையான காலத்திற்குத் தரக்கூடிய வட்டி வீதம், அதையொட்டிய செயல்முறை முதலிய ரிசர்வு வங்கியால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. தவணை முதிருமுன் திருப்பியளிக்கப்படும் வைப்புக்குத் தரப்பட வேண்டிய வட்டி வீதம், தவணை வைப்பை ஈடாக்கிக் கொண்டு தரப்படும் கடன் மீதான வட்டி வீதம் முதலியன ரிசர்வு வங்கியால் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளன.

தவணை வைப்பு இறசிது ஒரு மாற்றுமுறை ஆவணமா? (Negotiable Instrument)

தவணை வைப்பு இரசீதின் முகப்பில் 'ஆவண மாற்றுத்தன்மை கிடையாது' (Not Negotiable) அல்லது 'மாற்றுத் தன்மை கிடையாது' (Not transferable) என்ற சொற்களைக் காண்கிறோம். இதன் பொருள் என்ன? இந்த இரசீதை மேலெழுதுதல் (endorse) செய்து பிறருக்கு மாற்றித்தர முடியாது. இது ஒரு மாற்றுமுறை ஆவணம் ஆகாது (Abdul Rehman Haji Osman V. Central Bank of India and others). இதனை மற்றொருவருக்கு உரிமைமாற்றம் (Assignment) செய்துகொடுப்பதற்கு தனியொரு ஆவணம் எழுதப்பட்டு இதனுடன் இணைக்கப்படல் வேண்டும். உரிமைமாற்றம் பற்றி வங்கியருக்கு அறிவிக்க வேண்டும். மூன்றுமவருக்குப் பணத்தைச் செலுத்த வேண்டினால் தனியொரு, அனுமதி கடிதத்தோடு வைப்பு இரசீதை வாடிக்கையர் வங்கியருக்கு அனுப்ப வேண்டும். வைப்பாளர் இரசீதில் குறிப்பிட்ட இடங்களில் கையெழுத்திட்டு வங்கியருக்கு அனுப்பவேண்டும். வைப்பு இரசீது ஒரு மாற்றுமுறை ஆவணமல்லாததால் அதனைப் பெறுபவர் தாம் எவரிடமிருந்து பெற்றாரோ அவருக்குள்ள உரிமையைவிடச் சிறந்த உரிமையைப் பெற முடியாது.

தவணை வைப்பு இரசீது முத்திரை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. தவணை வைப்பு இரசீதைத் திருப்பிக் கொடுத்தால் தான் பணம் திருப்பித்தரப்படும் என்ற நிபந்தனை எல்லா இரசீதுகளிலும் அச்சிடப்பட்டிருப்பதைக் காணலாம். ஒருவர் தமது இரசீதைக் காணமற் போக்கி விடுவதாகக் கொள்வோம். அவர் வைப்புத் தொகையை எங்ஙனம் திருப்பிப்பெற முடியும்? இரசீது தொலைந்த ஒரே காரணத்துக்காக தொகையைத் திருப்பித்தர முடியாது என வங்கியர் கூறுதல் நியாயமாகாது; நீதிமன்றமும் அதை அனுமதிக்காது. சில வங்கிகள் இரசீது காணமற்போக்

விட்ட வைப்பாளரை நட்டஈடு பத்திரம் (Indemnity Bond) ஒன்று எழுதித்தரக் கோருகின்றன. இதனால் வங்கியர் நலன் பாதுகாக்கப் படுகிறது. இந்த நட்டஈடு பத்திரத்தை ஏற்றுக்கொண்டு வைப்பாளருக்குத் தொகையைத் திருப்பித்தந்து விடுவர் வங்கியர்.

இறக்கும் தருவாய் நன்கொடை

ஒருவர் தாம் இறந்தபின் தாம் தவணை வைப்பில் செலுத்திய பணத்தைக் குறிப்பிட்ட ஒரு நபருக்குக் கொடையாக வழங்க முன்னேற்பாடு செய்யலாம். தவணை வைப்பு இரசீது இவ்வகை 'இறக்கும் தருவாய் நன்கொடை' (Donation mortis causa)க்கு இலக்காகலாம். கொடைபெறும் உரிமையுள்ளவர் (Donee) அந்த வைப்புத் தொகையைப் பெற்றுக்கொள்ளுமாறு, இறந்தவருடைய சட்டமுறையான பிரதிநிதியை (Legal Representative), ஏற்பாடு செய்யக் கோரி நீதிமன்றம் ஆணையிடும்.

நீதிமன்றம் தவணை வைப்புத்தொகையைப் பற்றுகை (Attachment) செய்யலாம். இது பற்றிய விளக்கம் பின்னர்க் காணலாம்.

சேமிப்பு வைப்பு (Savings Deposit)

நிலையான வருமானமுள்ளவர்களும், நடுத்தர வகுப்பினரும் தம்முடைய வருமானத்தில் ஒருசிறிதேனும் சேமிக்கும் பழக்கத்தை உண்டாக்கத் தூண்டுகோலாக அமைவது சேமிப்பு வைப்பு. பள்ளி செல்லும் பாலர் முதல் ஓய்வு ஊதியம் பெறும் முதியோர்வரை தமது ஆற்றலுக்கேற்றவாறு சிறுகச்சிறுகச் சேமிக்க வகைசெய்வது சேமிப்பு வைப்பு. சிறுகச் சிறுக சேமித்தப் பணத்தைச் சீக்கிரமே செலவு செய்துவிடா வகையில், பணத்தைத் திருப்பிஎடுப்பதற்குப் பல நிபந்தனைகளும் கட்டுப்பாடுகளும் இவ்வைப்பாளர்கள்மீது விதிக்கப்பட்டுள்ளது. வாரம் ஒருமுறைதான் பணம் திருப்பிப் பெறலாம்; ஒரே நேரத்தில் ரூ 500 அல்லது ரூ 1,000 மட்டுமே திருப்பிப் பெறலாம் என்பது போன்ற கட்டுப்பாடுகளைக் காணலாம். இந்த வைப்பில் பணத்தைச் செலுத்துமாறு பொதுமக்களை ஈர்க்க நல்லதொரு வட்டி விகிதம் இதன்மீது அளிக்கப்படுகிறது. குறிப்பிட்ட தொகைக்குக் குறையாமல் எச் சமயமும் ஒரு அளவு இருப்பு வைத்திருப்பவர்கள் காசோலை பயன்படுத்தித் தமது பணத்தைத் திருப்பிப்பெற அனுமதிக்கப்படுகின்றனர். இதனால் தாம் நடப்புக்கணக்கொன்று வைத்திருப்பது போன்ற மன நிறைவை வாடிக்கையர் அடையலாம். மிகக் குறைந்த தொகையான ஐந்துரூபாயுடன் வங்கியில் கணக்கு ஆரம்பிக்க வகை செய்யும் கணக்கு சேமிப்புக் கணக்கே.

பொதுமக்களிடையே சேமிப்புப் பழக்கத்தை உண்டாக்கு வதும், வங்கியில் கணக்கு வைக்கும்படி அவர்களை ஈர்ப்பதும் சேமிப்பு வைப்பின் நோக்கங்களாகும். ஆகவே இக் கணக்கில் அதிகப்பற்று அல்லது கடன் தருவது போன்ற வசதிகளைப் பெற முடியாது.

அஞ்சல் துறையினரும் 1882ஆம் ஆண்டு முதல் தமது அலுவலகங்களில் சேமிப்புக் கணக்கில் பொதுமக்கள் பணத்தைப் பெற்று அதற்கு நல்லவட்டியும் அளித்து வருகின்றனர். மாநகரங் களில் உள்ள அஞ்சலக சேமிப்பு வங்கிகளிலிருந்து பணத்தைத் திருப்பிப் பெற காசோலைகளைப் பயன்படுத்தும் வசதி அண்மையில் ஏற்படுத்தப்பட்டது.

நடப்பு வைப்பு (Current Deposit)

பணத்தைச் செலுத்துவதிலும் அதைத் திருப்பிப்பெறுவதிலும் எவ்விதமான கட்டுப்பாடுமில்லாமல் அன்றாடம் நிகழும் பலப்பல நடவடிக்கைகளுக்கு வகை செய்வது நடப்புக் கணக்காகும். வங்கிய ரிடமிருந்து கடன் பெறவும், அவர் அளிக்கும் பல்பயன் பணிகளை பயன்படுத்திக் கொள்ளவும் வாடிக்கையர் நடப்புக் கணக்கு வைத்திருக்கவேண்டும். நடப்பு வைப்பில் செலுத்தப்படும் பணப் கேட்டவுடன் திருப்பித் தரப்பட வேண்டும். எனவே இப் பணத்தைக் கேட்பு வைப்பு (demand deposit) என்று கூறுவது முண்டு. வங்கிச் சட்டங்களில் கேட்புப் பொறுப்பு (demand liability) எனக் குறிப்பிடப்படுவதும் இந்த வைப்பே ஆகும். வாடிக்கையர் கேட்டதும் அவருடைய வைப்பிலிருந்து பணத்தைக் கொடுக்கவேண்டிய நிலை வங்கியருக்கு உள்ளதால் அவர் தன்வசம் கணிசமான அளவு ரொக்கம் வைத்திருத்தல் அவசியமாகிறது. தொழில் நிலையங்கள், தொழிலதிபர்கள், வியாபாரிகள், அரசினர், பொது ஆட்சியங்கள் (Public Authorities), சம்பெனிகள் போன்ற வாடிக்கையர் ஒவ்வொரு நாளும் நூற்றுக் கணக்கான வரவு செல வினங்களைச் செய்வர். இதற்கு ஏற்றக் கணக்கு நடப்புக் கணக்கு.

நடப்புக் கணக்கினுல் ஏற்படும் முக்கில் நன்மை, வசதிகள்

பல்லாயிரக்கணக்கான மதிப்புள்ள நாணயம், ரூபாய்நோட்டு ரொக்கமாக வைத்திருக்க வேண்டிய அவசியம் தவிர்க்கப்படுகிறது. பணத்தைப் பாதுகாப்பது, எண்ணிக் கொடுப்பது, எடுத்துச் செல்வது போன்ற எண்ணற்ற நடவடிக்கைகளில் ஏற்படக்கூடிய இடர்களில் பல, வங்கியில் நடப்புக் கணக்கு வைத்திருப்பதன்வழி குறைக்கப்படுகின்றன.

கீறலிடப்பட்ட காசோலைகளை வசூல்செய்யவும் உண்டியல்களை வசூல்செய்யவும் நடப்புக் கணக்கு தேவைப்படுகிறது. சேமிப்புக் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு அவர்கள் பெயரில் எழுதப்பட்டுள்ள கீறலிட்ட காசோலைகளைமட்டும் வசூல்செய்யும் வசதி உண்டு. ஆனால் மூன்றும் நபர்கள் மேலெழுத்துடன்கூடிய காசோலைகளை வசூல்செய்ய நடப்புக் கணக்கு தேவைப்படுகிறது.

முன்னரே குறித்த வண்ணம் கடன், மேல்வரைப்பற்று (overdraft) போன்ற வசதிகளை நடப்புக் கணக்குள்ளவர்கள் மட்டுமே பெறலாம்.

நடப்புக் கணக்கு, கேட்டவுடன் திருப்பித்தரும் வகையில் அமைந்திருப்பதால், வங்கியர் அதை எந்தச்சமயத்திலும் திருப்பித் தரும் நிலையில் தன் ரொக்க நிலையை வைத்திருக்க வேண்டும். ஆகவே குறிப்பிட்ட காலத்திற்கு இப்பணத்தைக் கடன் கொடுக்க ஈடுபடுத்துவதில் வங்கியர் எச்சரிக்கையாக இருத்தல் அவசியம். இருந்தாலும், அனுபவ அடிப்படையில் கேட்புப் பொறுப்புகளின் ஒரு பகுதியையே வங்கியர் ரொக்கமாக வைத்திருப்பார். இந்தச் சூழ்நிலையில் வங்கியர் நடப்புக் கணக்கின்மீது வட்டி ஏதும் தருவது கடினமாகிறது. பொதுவாக, நடப்புக் கணக்கின்மீது வங்கிகள் வட்டியளிக்கக் கூடாது என ஒப்புக்கொள்ளப்படுகிறது. ரிசர்வு வங்கியும் வங்கிகள் நடப்பு வைப்பின்மீது வட்டி வழங்கக் கூடாது என விதித்துள்ளது.

புதிய கணக்கு துவங்குதல்

வங்கியில் கணக்குத் துவங்க விரும்பும் நபர், வங்கியை அணுகி தம் விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும். வங்கியர் அவரைக் கணக்கு துவங்க அனுமதிப்பதன் முன் சில சட்டச் சடங்குகளை மேற்கொள்ளுவார். வங்கியில் ஏற்கனவே கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையர் அல்லது வங்கிக்குத் தெரிந்த ஒருநபர் புதிதாகக் கணக்குத் துவங்க விரும்புவரை அறிமுகம் செய்யவேண்டும். இந்த அறிமுகம் எழுத்தால் அமையவேண்டும். அறிமுகம் அமைந்துள்ள கடிதத்தை அறிமுகக் கடிதம் (Letter of introduction) என்று வழங்குவர். பெரும்பாலும் அறிமுகம்செய்பவரின் பெயர், முகவரி முதலிய் எழுதப்படவேண்டிய ஒரு அச்சிட்டதாள் அல்லது அட்டையை வங்கியரே தருவார். இதைச் சரியான முறையில் நிரப்பி, அறிமுகம் செய்பவரின் கையொப்பமும் பெற்று, வங்கியரிடம் சேர்ப்பிக்க வேண்டும். இதைப் பெற்ற பின்னரே வங்கியர் புதிய கணக்கைத் துவக்க மேற்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார்.

நேரடி அறிமுகம் அல்லது அறிமுகக் கடிதம் இல்லாத சூழ் நிலையில், புதிதாகக் கணக்குவைக்க விரும்புபவர் ஒரு நாணய முள்ள நபரையோ அல்லது பிறவங்கியரையோ பெயரிட்டு அவரிடம் தன்னைப் பற்றி விசாரித்துக் கொள்ளச்சொல்லுவார். விண்ணப்பதாரரின் நாணயம், நேர்மை, நிதிநிலை முதலிய பற்றி அந்நபர் அல்லது வங்கியரிடம் விசாரித்துச் செய்திகளை அறிந்து கொண்டு பின்னரே வங்கியர் கணக்கைத் துவங்குவார்.

அறிமுகம் பெறுவதன் இன்றியமையாமை

அறிமுகம் பெற்ற பின்னர்தான் புதிய ஒரு வங்கிக் கணக்கை ஆரம்பிப்பது என்ற நியதி ஏன் வற்புறுத்தப்படுகிறது. சட்டம் இதனைக் கட்டாயப்படுத்துகிறதா? இதனால் நம்மையேதும் உண்டா? முன்பின் தெரியாத ஒரு நபருக்குக் கணக்குத்திறப்ப தில் பல தொல்லைகள் ஏற்படலாம்.

(i) தெரிந்தோ தெரியாமலோ புதிதாகக் கணக்கு ஆரம்பித்த வருக்கு மேல்வரைப்பற்று (Overdraft) அளிக்கப்பட்டு விடுகிறது எனக் கொள்வோம். அத் தொகையை அவரிட மிருந்து திருப்பிப்பெறுவது அந்த வாடிக்கையரின் தன்மை யைப் பொறுத்தது. அறிமுகமில்லாத வாடிக்கையராக இருப்பின் அவரைக்கண்டு பிடிப்பதே பெரிய தொல்லை யாகி விடலாம். அறிமுகத்துடன் கணக்கு ஏற்படுத்திய வராக இருப்பின், அறிமுகம் செய்தவரின் உதவியை வங்கியர் நாடிப்பயன் பெறலாம்.

(ii) தக்க அறிமுகமில்லாமல் கணக்கு ஆரம்பித்த ஒருவர், வங்கியரிடமிருந்து தான் பெற்ற காசோலைகளைத் தன் கணக்கிலுள்ள தொகைக்கும் அதிகமாக விடுத்து மோசடி செய்யலாம்.

(iii) மாற்று முறை ஆவணச்சட்டம் (Negotiable Instruments Act) காசோலைகளை வசூலிக்கும் வங்கியருக்குப்பாது காப்பு அளிக்கிறது. வாடிக்கையர் தமக்கு உரிமை யில்லாத அல்லது குறையுரிமையுள்ள காசோலையை வங்கி யர் வழி வசூல் செய்யும்போது இதனால் ஏற்படும் கட்ட நட்டங்களுக்கு வங்கியர் பொறுப்பாகார். இப் பாது காப்பைப்பெற வங்கியர் நல்லெண்ணத்துடன் கவன மின்மை இல்லாமல் செயல்புரிய வேண்டும். தக்க அறி முகமில்லாமல் கணக்கு புதிதாகத் துவக்குவது கவன மின்மையாகும். எனவே சட்டமளிக்கும் பாதுகாப்பைப் பெற வங்கியர் தகுதியிழந்து விடுவார்.

(iv) நொடித்தவர் என்று தீர்ப்புப்பெரு நிலையிலுள்ள ஒருவர் அறிமுகமின்றி வங்கியில் கணக்கு ஆரம்பித்து அதில் பணத்தைச் செலுத்தியிருந்தால் அப்பணம் பற்றுகைக்கு உரியதாகும். தன் நிலையைப்பாதுகாக்க வங்கியர் அறிமுகம் பெற்ற பின்னரே புதிய கணக்கு ஆரம்பித்தல் வேண்டும்.

வங்கியருக்கு மனநிறைவு ஏற்படும் வகையில் அறிமுகமான ஒருவருக்கு, அவர் எவ்வகையான கணக்குத்துவங்க விரும்புகிறாரோ அதைப் பொறுத்து, வங்கியர் விண்ணப்பத்தாள் தந்து அதை நிரப்பித் தருமாறு வேண்டுவார். அதில் விண்ணப்பதாரரின் பெயர், முகவரி, தொழில், மாதிரிக் கையெழுத்து, அறிமுகம் செய்பவரின் கையொப்பம், முகவரி முதலியன அடங்கியிருக்கும். வங்கியில் கணக்குத்திறக்க விரும்புபவர் யாருக்கும் முதற்கண் இந்த விண்ணப்பத்தாளை அளிப்பது வங்கியர் வழக்கமாகும். மேற்கண்ட செய்திகளன்றி "நான் தற்போது நடைமுறையிலிருக்கும் வங்கி விதிகளையும் அவ்வப்போது அமுல் செய்யப்படும் விதிகளையும் கடைப்பிடிக்க இசைகிறேன்" என்ற ஒப்பந்த வாசகமும் அந்தத் தாளில் அச்சாகி இருக்கும். கணக்கு ஆரம்பிக்க விரும்புபவர் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதன் வழி, வங்கியருடன் ஒப்பந்த வழி உறவை ஏற்படுத்திக் கொள்ளுகிறார்.

விண்ணப்பதாரரின் மாதிரிக் கையொப்பம் குறிப்பிட்ட ஒரு தாளில் பெறப்பட்டு வங்கியரின் ஆவணங்களுடன் சேர்க்கப்படுகிறது. இதனை அகர வரிசைப்படி கோத்து வைப்பது வழக்கம். வாடிக்கையர் விடுத்த காசோலையில் காணப்படும் கையொப்பம் இத்துடன் ஒப்பு நோக்கப்படும். வேறுபாடு காணப்பட்டால் வங்கியர் காசோலையைக் "கையொப்பம் வேறுபடுகின்றது" என்ற குறிப்புடன் திருப்பிவிடுவார்.

முதன் முதலாகக் கணக்குத் துவக்கும்போது குறிப்பிட்ட அளவு ரொக்கம் செலுத்துமாறு விண்ணப்பதாரர் வேண்டப்படுகிறார். சேமிப்புக் கணக்காக இருப்பின் குறைந்தது ஐந்து அல்லது பத்து ரூபாய் செலுத்த வேண்டும். நடப்புக் கணக்காக இருந்தால் நூறு அல்லது இருநூறு ரூபாய் செலுத்த வேண்டும். புதிதாகக் கணக்கு ஆரம்பிப்பவர் எவரும் ஒரு காசோலையைத்தன் கணக்கில் செலுத்திக் கணக்கைத் துவங்க வங்கியர் அனுமதிப்பதில்லை. இதற்குக் காரணம் அக் காசோலை அவமதிக்கப்பட்டால் பணம் ஏதுமில்லாமல் கணக்கு துவங்கியதற்கு ஒப்பான நிலையுண்டாகும்.

கணக்குத் துவங்கிய நபருக்கு வங்கியர் பணஞ் செலுத்துச் சீட்டு (Paying-in-slip), காசோலை ஏடு (Cheque book), செல்லுப் புத்தகம் (Pass Book) ஆகியவற்றைத் தருவார். ரொக்கம் அல்லது காசோலை கணக்கில் செலுத்த விரும்பும்போது பணஞ் செலுத்தும் சீட்டில் உள்ள விவரங்களை எழுதி அத்துடன் ரொக்கம் அல்லது காசோலையை வங்கியரிடம் சேர்ப்பித்து விட்டால் அவர் அதை வாடிக்கையர் கணக்கில் வரவு வைத்து விடுவார். செலுத்தும் தேதி, செலுத்தும் கணக்கின் எண், செலுத்தும் தொகை, செலுத்து பவர் பெயர், முகவரி, கையொப்பம் முதலியன சீட்டின் இருபகுதி களிலும் குறிக்கப்படும். இரண்டு பகுதிகளிலும் வங்கியர் கையொப்பமும் முத்திரையுமிட்டுத் தன்னிடம் ஒரு பகுதியை இருத்திக் கொண்டு மறுபாதியை வாடிக்கையருக்கு அளிப்பார். இந்த மறுபாதியே பணஞ் செலுத்தியதற்குச் சான்ருக வாடிக்கையர் கொள்ளுவார். பின்னர் செல்லுப் புத்தகத்தில் வரவு பதிவு செய்யப்படும்.

வாடிக்கையர் அல்லது வாடிக்கையர் சார்பில் மூன்ருவது நபர் எவரும் அவருடைய கணக்கில் பணஞ் செலுத்தினுல், அந்தப் பணம் யாருடையது, வாடிக்கையருக்கு அந்தப் பணம்பெற உரிமை உண்டா என்றெல்லாம் வங்கியர் கேட்கவோ அல்லது தெரிந்து கொள்ளவோ வேண்டிய அவசியமில்லை.

செல்லுப் புத்தகம் (Pass Book)

வங்கியர் கணக்குத் துவங்கியதும் வாடிக்கையருக்குத் தரும் ஏடுகளில் மிக முக்கியமானது செல்லுப் புத்தகம் ஆகும். வாடிக்கையர் கணக்கில் ஏற்படும் நடவடிக்கைகள் அனைத்தையும் இப் புத்தகத்தில் வங்கியர் பதிந்து வைப்பார். வாடிக்கையருக்குத்தம் கணக்கின் நிலை தெரியும் பொருட்டு இப்புத்தகம் எழுதப்படுவதால் இது வங்கியருக்கும் வாடிக்கையருக்குமிடையே சென்று வந்து கொண்டிருக்கும். இதனுல்தான் இதைச் செல்லுப்புத்தகம் என்று அழைக்கிருேம். வங்கியர் தனது ஏடுகளில் வைத்திருக்கும் வாடிக்கையர் கணக்கின் நகலாகவே இது விளங்குகிறது.

பல வங்கிகள் தமது வாடிக்கையர் கணக்கில் ஏற்படும் நடவடிக்கைகளை மாதமொருமுறை இதற்கென்றே தயாரிக்கப்பட்ட விவர அறிக்கையில் பதிவுசெய்து அதனை வாடிக்கையருக்கு அனுப்பி வைக்கின்றனர்.

செல்லுப் புத்தகத்திலுள்ள பதிவுகளின் சட்டமுறையான நிலை என்ன?

செல்லுப் புத்தகத்தில் பதிவு அனைத்தும் செய்வது வங்கியர் தான். எனவே ஏதும் பிழை அல்லது தவறு நேர்ந்தால், அவர்

அதற்கு முழுப்பொறுப்பு ஏற்க வேண்டுமா? செல்லுப் புத்தகத்தி லுள்ள பதிவுகள் வாடிக்கையரை எந்த அளவுக்குக் கட்டுப்படுத் தும்? மேற்காணும் கேள்விகளுக்கு அறுதியான விடையளிக்கப் படவில்லை. நீதிமன்றத்தின் தீர்ப்புகளை ஆராய்ந்தால் ஒரு குழப்ப மான நிலையையே அடைகிறோம்.

வங்கியர் வாடிக்கையரிடையே நிகழும் நடவடிக்கைகளின் அதிகாரபூர்வமான, முடிவான, கேள்விக்கு இடமில்லாத குறிப்புப் புத்தகமாகத் திகழவேண்டியது செல்லுப் புத்தகம். புத்தகத்தில் செய்யப்பட்டுள்ள எல்லாப்பகுதிகளையும் சரிபார்க்க வாடிக்கை யருக்கு முழுவாய்ப்பளித்தபின் அவரது கடன்பற்றிய பதிவுகளை யேனும் முடிவானதாகக் கொள்ள வேண்டும்; வங்கியரைப் பாதிக்கும்முறையில் அந்தப்பதிவுகளை மீண்டும் திருத்தலாகாது என்றவாறு சர்ஜான் பேஜட் என்னும் வங்கியச்சட்ட மேதை கூறு கிறார். இவரது கருத்தைஒத்த நீதிமன்றத் தீர்ப்பு (Devaynes V. Noble) என்ற வழக்கில் காணலாம். வாடிக்கையர், பதிவு களில் ஏதும் தவறுஇருந்தால், அதைத்திருத்தக் கோரி புத்தகத்தை வங்கியருக்கு அனுப்பவேண்டும்; அப்படி அவர் ஏதும்செய்யாமல் இருந்தால் பதிவுகளெல்லாம் சரி என்று ஒப்புக் கொண்டதாகக் கொள்ளப்படும். இக் கருத்துக்குமாறாகப் பற்பல நீதிமன்றத் தீர்ப்புகள் இருப்பதால் நிலைமை குழப்பமாகவே இருந்துவருகிறது.

செல்லுப் புத்தகத்தை வங்கியரிடமிருந்து வாங்கிக்கொண்டு போய் அதிலுள்ள பதிவுகளைப்பற்றி ஏதும் குறைபாடு தெரிவிக்கா மல் அவரிடம் புத்தகத்தைத் திருப்பிக்கொடுத்தால், கணக்கில் கண்ட பதிவுகளெல்லாம் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டதாகக் கொண்டு விடுதலாகாது (Kepitigalla Rubber Estates Ltd. V. National Bank of India Ltd), மற்றும் (Chatterton V. London and County Bank) என்ற வழக்கில் செல்லுப் புத்தகத்தைப் பரி சீலித்துப்பார்க்கும் கடமையேதும் வாடிக்கையருக்குக் கிடையாது என்றும் அவர் பதிவுகளுக்கு நேரே சரியென்று காட்டும் குறிஏதும் குறித்திருந்தால்கூட அவர் பதிவுகளைப் பரிசீலனை செய்து ஒப்புக் கொண்டார் என்று ஊகம் செய்துகொள்ளக் கூடாது என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

வசூலுக்குக் கொடுத்த காசோலையை வசூலித்துப் பணம்பெறு முன்னர் வங்கியர் வாடிக்கையர் கணக்கில் காசோலையில் குறித்த தொகையை வரவுவைத்து, அதை நம்பி வாடிக்கையர் காசோலை ஏதும் விடுத்தார் என்றால் வசூலுக்குக் கொடுத்த காசோலை அவ மதிக்கப்பட்ட நிலையில் வங்கியர் தமது பதிவினால் உண்டான

பொறுப்பிலிருந்து தப்பமுடியாது. ஆனால் பதிவு தவருகச் செய்யப்பட்டது என்று வங்கியர் காட்ட அனுமதிக்கப்படுவார் (Mowji V. National Bank of India).

அமெரிக்க நாட்டில் Morgan V. United States Mortgage and Trust Co என்ற வழக்கில் கூறிய தீர்ப்பின்படி வாடிக்கையர் தாம் வங்கியரிடமிருந்து பெற்ற செல்லுப் புத்தகத்திலுள்ள பதிவுகளைச் சரிபார்த்து காலதாமமின்றி பிழைகள் ஏதும் காணப்பட்டால் அவற்றை வங்கியருக்கு அறிவிக்கவேண்டும். பொதுவாகக் தொழிலில் உள்ள பழக்கப்படியும் எச்சரிக்கையான நடவடிக்கைப் படியும் வாடிக்கையருக்கு இந்தக் கடமை உண்டு.

வாடிக்கையருக்குச் சாதகமான பதிவுகள்

முன்னர் கண்டபடி செல்லுப் புத்தகத்திலுள்ள பதிவுகளைச் செய்பவர் வங்கியர். ஆகவே அதை அவருக்குப் பாதகமான சான்ருகப் பயன்படுத்தலாம். தவருக வாடிக்கையர் கணக்கில் இருக்க வேண்டிய தொகைக்கும் அதிகமாக தொகை இருப்பதாகப் பதிவு செய்து, அதன் பேரில் வாடிக்கையர் காசோலை விடுத்து விட்டால் வங்கியர் அவற்றை மதித்தே ஆகவேண்டும். ஆனால், வாடிக்கையரது நிலையைப் பாதிக்காத வகையில், வங்கியர் தனது தவற்றைத் திருத்திக் கொள்ளலாம். வாடிக்கையர், வங்கியர் செய்துள்ள தவருன பதிவைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டால், தாம் அதை நல்லெண்ணத்துடன் நம்பியதாகச் சான்றளிக்க வேண்டும். தனி நபர்கள் ஒருவேளை இம்மாதிரி சான்றளிக்கலாம். ஆனால் தொழிலதிபர்கள், தொழில் நிலையங்கள் தாம் தனிப்பட்ட முறையில் கணக்கு வைத்திருப்பது இயல்பு. அவர்களிடமுள்ள கணக்கில் சரியான இருப்புத் தொகை காட்டப்பட்டபோது, வங்கியர் தவருக ஏதும் பதிவு செய்திருந்தால் தாம் அதை நம்பி நடந்ததாகக்கூற இயலாது.

வங்கியர் தமது தவறு தெரியவந்தவுடன் வாடிக்கையருக்கு அதை அறிவித்து திருத்தம் செய்து கொள்ளலாம். வங்கியரிடமிருந்து அறிவிப்பு கிடைத்ததும் வாடிக்கையர் தவருகக் காட்டப்பட்ட அதிகத்தொகை மீது காசோலை ஏதும் எழுதலாகாது. வங்கியர் தாம் தவருகச் செய்த பதிவை வெகு காலத்திற்குப் பின்பு கண்டுபிடித்து அதை வாடிக்கையருக்கு அறிவுக்கும்போது, வாடிக்கையர் அதைத் தவறு என்று தெரியாமல் அல்லது ஐயம் கூடப்படாமல் தனக்குச்சேர வேண்டிய தொகை என்று கருதி பணத்தை எடுத்து செலவுசெய்து விட்டிருந்தால், (வங்கியர்) அத்

தொகையைத் திருப்பிப் பெறமுடியாது (Skyring V. Greenwood; Holt V. Markham).

வங்கியருக்குச் சாதகமான பதிவுகள்

இதுவரை வெளிவந்த முக்கியமான நீதிமன்றத் தீர்ப்புகளில் செல்லுப் புத்தகத்தைப் பரிசீலனை செய்யும் கடமை வாடிக்கையருக்கு இல்லை என்றே காணப்படுகிறது. செல்லுப் புத்தகத்தை வங்கியரிடமிருந்து வாங்கிக் கொண்டுபோய் அதைத் திருப்பித் தருகையில் அதிலுள்ள பதிவுகள் தவறானது என்று குறையிடாமல் இருந்தால் தவற்றைப் பின்னர் சுட்டிக் காட்டும் உரிமையை வாடிக்கையர் இழக்க மாட்டார்.

தவற்றைச் சுட்டிக் காட்ட வேண்டிய நிலைமையில் உள்ள வாடிக்கையர், அறிந்தும் அதைச் செய்யத் தவறினால் வங்கியர் மேலும் நடக்கக்கூடிய தவறுகளுக்குப் பொறுப்பாக மாட்டார். எடுத்துக் காட்டாக கள்ளக்கையெழுத்திடப்பட்ட காசோலை விடுத்து வாடிக்கையர் கணக்கிலிருந்து பணமெடுக்கப்பட்டிருந்தால் இச்செய்தியைச் செல்லுப் புத்தக பதிவுகள் வழி அறிந்த உடனே வங்கியருக்குத் தெரிவித்து மோசடியைத் தவிர்க்க வாடிக்கையர் ஏற்பாடு செய்ய வேண்டும். இதைச் செய்யாமல் வாடிக்கையர் வாளாதிருந்தால் மேலும் பல கள்ளக் கையெழுத்திட்ட காசோலைகளை வங்கியர் மதித்து இன்னும் மிகுதியாக வாடிக்கையருக்கு நட்டம் ஏற்படலாம். ஆனால் இதற்கு வங்கியர் பொறுப்பாக மாட்டார்.

தற்காலத்தில், வங்கியர் தமது விதிகளில் செல்லுப் புத்தகத்திலுள்ள பதிவின் விளைவைப் பற்றி விளக்கமாகக் கூறுகிறார்கள். செல்லுப் புத்தகத்தை வாடிக்கையர் திருப்பித் தருகையில் ஏதும் குறையெழுப்பாவிடில் அதிலுள்ள பதிவுகள் சரியென முடிவாகக் கொள்ளப்படும் என்று சில வங்கிகள் விதிக்கின்றன. மற்றுஞ் சில, செல்லுப் புத்தகத்தில் பிழைகள் ஏதும் இருப்பின் அவற்றை உடனே வங்கிக்குத் தெரியப்படுத்த வேண்டும்; இதைச் செய்யாமையால் ஏற்படும் நட்டமெதற்கும் வங்கி பொறுப்பு ஏற்காது என்று விதித்துள்ளன. ஆண்டுக்கு ஒருமுறை வங்கிகள் தமது வாடிக்கையருக்கு இருப்பு உறுதி அறிக்கை (Balance Confirmation Statement) ஒன்று அனுப்பி அதை ஒரு மாதத்திற்குள் சரி பார்த்துக் கையொப்பமிட்டு அனுப்பக் கோருகிறார்கள். அந்தக் காலத்திற்குள் கையொப்பமிட்டு அனுப்பாவிட்டாலும் வேறு மறுப்பு ஏதும் தெரிவிக்காவிட்டாலும் வங்கி அனுப்பிய அறிக்கை

சரியெனக் கொள்ளப்படும் என்றும் அவ்வறிக்கையிலேயே குறித்து விடுகிருர்கள்.

இயந்திரங்கள் பெருமளவுக்குப் பயன்படுத்தப்படும் தற்காலத்தில், இயந்திரங்களால் தயாரிக்கப்பட்ட கணக்குப் பதிவுகளை திங்கள்தோறும் வாடிக்கையருக்கு அனுப்பி அதிலுள்ள சீட்டு ஒன்றில் அதைப் பெற்றுக் கொண்டதற்குச் சான்ருகக் கையொப்பமிட்டுத் தமக்கு அனுப்பி விடுமாறு வங்கியர் வேண்டுகின்றனர். வாடிக்கையர், தமது கணக்கை ஒப்புக்கொண்டு கையொப்பமிட வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட முடியாது.

வங்கியரும் வாடிக்கையரும் செல்லுப் புத்தகத்தைப் பொறுத்தவரையில் சில விதிகளைக் கடைப்பிடிப்பது நல்லது. வாடிக்கையருடைய செல்லுப் புத்தகத்தை உறையிட்ட அஞ்சலில் அனுப்ப வேண்டும். இதன்வழி வாடிக்கையர் கணக்கின் இரகசியம் பாதுகாக்கப் படலாம். பதிவுகளில் பிழையேதுமிருப்பின் அதை அவ்வப்போது வங்கியரின் கவனத்துக்குக் கொண்டுவந்து திருத்தங்களைச் செய்துகொள்ள வேண்டும். வங்கியர் தாம் செய்த பிழை எதனையும் திருத்த விரும்பினுல் வாடிக்கையருக்கு அதனை அறிவித்து விட்டுச் செய்தல் நன்று.

தொடரும் வைப்பு (Recurring Deposit)

மக்களிடையே தொடர்ந்து சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வங்கிகள் தொடரும் வைப்புக் கணக்கு வைத்துள்ளன. திங்களுக்கு ஒருமுறை ஐந்து அல்லது பத்து ரூபாயின் மடங்கு அளவில் ஓராண்டு முதல் ஏழாண்டுகள்வரை தொடர்ந்து செலுத்தி வந்தால் கால இறுதியில் இத்தொகை கூட்டு வட்டியுடன் திருப்பித்தரப் பெறும்.

இவ்வகைக் கணக்கில் தவணை வைப்பு போன்று கணிசமான வட்டி அளிக்கப்படுகிறது. மாதவாரியாகத் தொகை செலுத்துவதில் ஏதும் தாமதம் ஏற்பட்டால், வட்டியுடன் சேர்த்துச் செலுத்த அனுமதிக்கப்படுவதுண்டு. காலம் முடியுமுன் கணக்கை முடித்துக்கொள்ள விரும்புபவருக்கு, இதுவரை வைப்புச் செலுத்திய காலத்தையும் துவக்கத்தில் வைப்புத் தொகை செலுத்த ஒப்புக்கொண்ட காலத்தையும் கணக்கிட்டு அதற்கேற்ற வட்டியை மட்டும் கூட்டிப் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுவது வழக்கம்.

தொடரும் வைப்புக் கணக்கைத் துவங்குபவருக்கு ஒரு செல்லுப் புத்தகம் அளிக்கப்படும். திங்கள்தோறும் பணஞ் செலுத்தும்போது அப்புத்தகம் வங்கியரிடம் தரப்படும். பணஞ் செலுத்தியதற்குப் பதிவுகளைச் செய்து வங்கியர் புத்தகத்தை வாடிக்கையரிடம் திருப்பித்தந்து விடுவார். அஞ்சல் துறையினரும் இவ்வகை வைப்புகளைப் பெற்றுக் கொள்ளுகின்றனர். இவ் வைப்புகளை சேர்ப்பு வைப்பு (Cumulative Deposit) என்றும் குறிப்பிடுவதுண்டு.

அழைப்பு வைப்பு (Call Deposits)

நடப்புக் கணக்கில் வைத்திருக்கும் பணத்திற்கு வட்டி ஏதும் கிடைப்பதில்லையாகையால், குறிப்பிட்ட ஒரு காலத்திற்குப் பணம் தேவைப்படாது என்று வாடிக்கையருக்குத் தோன்றினால், நடப்புக் கணக்கிலிருந்து ஓர் தொகையை அழைப்பு வைப்பில் வைக்கக் கோரலாம். இதன்மீது வட்டி கிடைக்கும். மேலும் தேவைப்பட்டால் காசோலை விடுத்து இதிலுள்ள பணத்தைத் திருப்பிப் பெறவும் செய்யலாம். இந்த வகை வைப்பு வங்கியருக் கிடையேயுள்ள கணக்கில் மட்டுமே வைக்கப்படுகிறது,

பருவகால வைப்பு (Seasonal Deposits)

வியாபாரம் மிகவும் விறுவிறுப்பாக நடக்கும் நேரத்தில் பணச் சந்தை (Money Market)யில் போதுமான அளவு பணம் கிடைப்பது கடினமாக இருக்கும். அச்சமயம் நல்ல வட்டி தந்து பொதுமக்களிடமிருந்து வைப்புகளை வங்கியர் ஈர்ப்பதுண்டு. இதனைப் பருவ கால வைப்பு என்று வழங்குவர்.

கணக்கை முடிவு செய்தல்

இனி வங்கியர் எந்தச் சூழ்நிலைகளில் வாடிக்கையர் கணக்கை முடிவு கட்டலாம் அல்லது கணக்கில் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கலாம் என்று காண்போம்.

1. வாடிக்கையர் தமது கணக்கை முடிவுகட்டுமாறு வங்கியரிடம் வேண்டலாம். இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். வங்கியர் விதிக்கும் வட்டி அல்லது கட்டணம் அதிகமாக இருக்கிறது என்று வாடிக்கையர் எண்ணலாம்; அல்லது மற்றொரு வங்கியர் இவரைவிட அதிக வசதிகளைச் செய்து தரலாம்; அல்லது

தான் ஊரைவிட்டு வேறூர் செல்லலாம்; அல்லது கணக்கு வைத்திருக்கும் வங்கிமீது நம்பிக்கையிழக்கலாம். எந்தக் காரணமாக இருப்பினும் தமது எண்ணத்தை வங்கியருக்கு எழுத்தால் அறிவித்து வாடிக்கையர் எப்போது வேண்டுமானுலும் தமது கணக்கை முடித்துக் கொள்ளலாம்.

2. குறிப்பிட்ட வாடிக்கையர் விரும்பத்தகா நபர் என்று வங்கியருக்குத் தோன்றினுல் அவர் வாடிக்கையரின் கணக்கினை முடிவு கட்டலாம். ஆனுல் அப்படிச் செய்யுமுன் வாடிக்கையருக்குத்தக்க முன்னறிவிப்புச் செய்யவேண்டும். ஏனெனில் பற்பல நபர்களுக்கு வாடிக்கையர் முன்னரே காசோலை எழுதித் தந்திருக்கலாம். பற்பல தொழில் தொடர்புள்ளோரைத் தமக்குச் சேர வேண்டிய தொகையை வங்கியில் கட்டுமாறு பணித்திருக்கலாம். தக்க முன்னறிவிப்பு என்பது சூழ்நிலைக்குத் தக்கவாறும், தொழிலுக்குத் தக்கவாறும் நிருணயிக்கப்படும் (Prosperity Ltd V. Lloyds Bank Ltd). தக்க முன்னறிவுப்புக் கொடுத்த பின்னர் வங்கியர் வாடிக்கையரின் கணக்கை முடித்து அவருக்குச் சேரவேண்டிய தொகையைச்செலுத்தி அவரிடம் உள்ள காசோலைகளைத் திருப்பிக் கேட்க உரிமை உண்டு

3. வாடிக்கையர் இறந்துவிட்டால் அவர் வங்கியருடன்செய்து கொண்ட ஒப்பந்தம் முடிவுறும். அவர் இறக்குமுன் எழுதிய காசோலைகள் மீது வங்கியர் பணந்தர முடியாது; ஏனெனில் வாடிக்கையர் இறந்துவிட்ட செய்தி கேட்டதும் வங்கியர் அவர் கணக்கின் மீதான நடவடிக்கைகளை நிறுத்திவிட வேண்டும்.

4. வாடிக்கையர் பித்தநிலை (insanity) அடைந்துவிட்டார் என்று வங்கியருக்குத் தெரிந்தும் அவருடைய கணக்கின் மீதான நடவடிக்கைகளை வங்கியர் நிறுத்திவிட வேண்டும்.

5. வாடிக்கையர் நொடிப்புநிலை (insolvency) அடைந்துவிட்டால்—கூட்டுருவாக இருப்பின் கலைக்கப்பட்டுவிட்டால்-வங்கியருக்குத் தரப்பட்ட அதிகாரம் முடிவடைகிறது. [வங்கியர் வாடிக்கையரின் கணக்கில் தொகையேதுமிருப்பின் அதனை கலைப்பு அதிகாரி அல்லது கலைப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

6. தனது கணக்கில் இருப்பாக உள்ள தொகையை வாடிக்கையர் மற்றொருவருக்கு மாற்றுரிமை (assignment) செய்து வங்கியருக்கும் அதை அறிவித்துவிட்டால், மாற்றுரிமை பெற்றவருக்கே வங்கியர் பணத்தைச் செலுத்துவார். மாற்றுரிமை செய்தபின்

வாடிக்கையருக்கு அந்தப் பணத்தின்மீது உரிமையேதும் கிடையாது.

7. நீதிமன்றத்திலிருந்து பற்றுகைப்பொருள் வைத்திருப்பவர் ஆணை (Garnishee order) பெற்ற வங்கியர், குறிப்பிட்ட வாடிக்கையர் கணக்கிலிருந்து பணத்தை எக்காரணங்கொண்டும் எடுக்கலாகாது. இத்தருணத்தில் பற்றுகைப் பொருள் வைத்திருப்பவர் ஆணையைப்பற்றிய விளக்கம் தெரிவது அவசியமாகிறது.

பற்றுகைப் பொருள் ஆணை

தீர்ப்புக் கடனுளர் (judgement creditor) ஒருவர், மூன்றும் நபர்வசம் இருக்கும் கடனுளியின் தொகையைப் பற்றும் ஆணையே பற்றுகைப் பொருள் வைத்திருப்பவர் ஆணை எனப்படும். தீர்ப்புக் கடனுளி (judgement debtor) யின் கடனுளியே பற்றுகைப் பொருள் வைத்திருப்பவர் (garnishee) எனப்படுகிறுர். நமது விளக்கத்தில் தீர்ப்புக் கடனுளி வாடிக்கையராவார்; வங்கியர் வாடிக்கையருக்குக் கடனுளியாவதால் தீர்ப்புக் கடனுளிக்குக் கடனுளியாகிறுர். பற்றுகை செய்யப்படும் கடன் பற்றுகைப் பொருள் வைத்திருப்பவரிடமிருந்து கொடுபடவேண்டிய நிலையிலிருக்க வேண்டும். இந்த ஆணைவழி பற்றுகை செய்யக்கூடிய கடன் கொடுபடவேண்டியதாக அல்லது உறுதியான, குறிப்பிட்ட நாளன்று கொடுபடவேண்டியதாக இருக்க வேண்டும். தற்போதுள்ள கடன் பின்னர் செலுத்தப்பட வேண்டியதாயிருப்பினும் பற்றுகைக்குரியதாகலாம்.

கீழ்க்காணும் வகையான வைப்புகள் பற்றுகைக்கு உரியன

(i) கேட்டவுடன் செலுத்தப்படவேண்டிய வைப்பு.

(ii) குறிப்பிட்ட அறிவிப்புத் தந்தபின் செலுத்தப்படவேண்டிய வைப்பைப் பெற வேண்டி அறிவிப்பு தரப்பட்டிருக்கும் வைப்பு.

(iii) குறிப்பிட்ட நாளன்று அல்லது குறிப்பிட்ட காலங்கழித்து திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய வைப்பு.

முடிவான ஆணை பிறக்குமுன் நீதிமன்றம் இடைக்கால ஆணை (Order nisi) பிறப்பிக்கலாம். இடைக்கால ஆணையை ஏன் முடிவான ஆணையாக்கக் கூடாது என்று வங்கியர் காரணங் காட்ட வேண்டும். தக்க காரணங்காட்டாவிடில் ஆணை முடிவானதாக உத்தரவிடப்படும். உத்தரவு இடப்பட்ட நாளன்று வாடிக்கையர் கணக்கில் உள்ள பணமே பற்றுகைக்குரியது. அதற்குப்பின் செலுத்

த்ப்படும் தொகையைத் தனிக்கணக்கில் வங்கியர் வைக்கவேண்டும். இத் தொகைமீது வாடிக்கையர் காசோலே எழுதலாம்.

நீதிமன்ற ஆணை குறிப்பிட்ட ஒரு தொகையை மட்டும் பற்றுகை செய்கிறதா அல்லது கணக்கிலுள்ள முழுத்தொகையையும் பற்றுகை செய்கிறதா என்பது ஆணையின் வாசகத்திலிருந்து அறியப்பட வேண்டும். தொகை ஏதும் குறிப்பிடப்படா நிலையில் மொத்தத் தொகையும் பற்றுகை செய்யப்படும். இந் நிலையில் வங்கியர் தீர்ப்புக் கடனாளியாகிய வாடிக்கையர் விடுக்கும் எந்தக் காசோலையையும் மதித்தலாகாது,

வைப்புடன் பிணைக்கப்பட்ட ஆயுள் காப்பீடு திட்டம் (Deposit linked life Insurance Scheme)

சேமிப்பு வைப்பை மக்களிடம் பரப்பவும், ஆயுள் காப்பீட்டின் நன்மையை விரிவுப்படுத்தவும் கருதி 1971ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் வங்கிகள் பல மேற்கண்ட திட்டத்தைத்துவக்கியுள்ளன சேமிப்பு வைப்பில் குறைந்தது ஆயிரம் ரூபாய் (நகரமல்லாத இடங்களில் ஐந்நூறு ரூபாய்) வைத்திருக்கும் நபர் 18க்குமேலும் 40க்குள்ளும் ஆன வயதினராய் இருப்பின் அவரது உயிர்மீது, அவர் சராசரி வைத்திருக்கும் இருப்புத் தொகையைப் போல இரண்டு மடங்குக்கு காப்பீடு அளிக்கப்படும். வயது 41 முதல் 49 வரையுள்ள நபராக இருப்பின், காப்பீட்டுத்தொகை அவர் கணக்கில் வைத்திருக்கும் சராசரி இருப்பு அளவேயாகும். இந்த காப்பீடு பெறுவதற்கு வைப்பாளர் தனிக்கட்டணம் ஏதும் செலுத்த வேண்டுவதில்லை.

வைப்பு காப்பீடு கூட்டுரு (Deposit Insurance Corporation)

வங்கிகளில் பணம் செலுத்திவைக்கும் பழக்கம் இன்னும் பலப் பல மடங்கு பெருக வேண்டிய நம் நாட்டில், வங்கியில் ஏற்கனவே வைப்புத் தொகையைச் செலுத்தியவருடைய நலனையும் நம்பிக்கையையும் காக்க ரிசர்வு வங்கி வைப்பு காப்பீடு கூட்டுருவை ஏற்படுத்தியது. இக்கூட்டுரு (Corporation) வணிக வங்கியிலுள்ள வைப்புகளைக் காப்பீடு செய்கிறது.

வைப்புக் காப்புத் திட்டம் வணிக வங்கிகளனைத்தையும் தன் எல்லைக்குள் அடக்குகிறது. காப்பீடு கட்டணம் (insurance premium) காப்பீடுபெறும் வங்கிகளே கட்டும்படி ஏற்பாடு அமைந்துள்ளது. காப்பீடு செய்யப்பட்ட வைப்புத்தொகையின் மீது ஆண்டடொன்றுக்கு நூறு ரூபாய்க்கு ஐந்து பைசா கட்டணம் விதிக்கப்படுகிறது.

ஒரு வங்கியில் ஒரே உரிமையின்பால் வைப்பாளருக்குக் கொடுபடவேண்டிய ரூ. 10,000 அளவுவரை காப்பீடு உண்டு. கூட்டுரு ஆரம்பிக்கப்பட்ட 1962ஆம் ஆண்டு காப்பீடு ரூ. 1,500 அளவாக இருந்தது. இது 1968இல் ரூ. 5,000 ஆக உயர்த்தப்பட்டது. 1970 முதல் காப்பளிக்கப்படும் தொகை ரூ. 10,000 ஆக இருந்து வருகிறது. இதன் பொருள், வங்கிக்கு என்ன நேர்ந்தாலும் வாடிக்கையருக்குத் தரப்படவேண்டிய வைப்புத் தொகை ரூ. 10,000 வரை முழுமையாகத் தரப்படும். வைப்புத் தொகை ரூ. 10,000 அல்லது அதற்குக்குறைவாக இருப்பின் அதை முழுதும் காக்கப்பட்ட கணக்கு என்பர். செப்டம்பர் 1970இல் 2.32 கோடி கணக்குகள் முழுதும் காக்கப்பட்ட கணக்குகள் (Fully Protected Accounts) என்ற நிலையிலிருந்தன.

வங்கிகளிடையேயிருந்த மொத்தக் கணக்குகளில் 96%முழுதும் காக்கப்பட்ட கணக்குகளாக 1970 செப்டம்பர் முடிவில் திகழ்ந்தன. வைப்புகளாக இருந்த மொத்தத்தொகையில் 70% காப்பீடு செய்யப்பட்ட வைப்புத்தொகையாக மேற்கண்ட தேதியிலிருந்தது. அதாவது காப்பீட்டுக் கட்டணம் விதிக்கக்கூடிய ரூ 4,670 கோடி வைப்புகளில் ரூ 2,374 கோடி காப்பீட்டுத் திட்டப்படி பாதுகாக்கப்பட்ட தொகையாக அமைந்தது.

கூட்டுருவின் முதல் ஒன்பதாண்டு அனுபவம் நல்லமுறையிலே இருந்து வந்துள்ளது. ரூ 1.13 கோடி பெறுமான பொறுப்புக்களை 14வங்கியர்கள் பொருட்டு கூட்டுரு ஏற்க வேண்டியிருந்தது. இதில் கூட்டுருவுக்குச் சேரவேண்டிய தொகையைக் கழித்தபின்னர் ரூ 75.58 இலட்சம் மட்டுமே அது செலுத்திய தொகையாக அமைந்தது.

மகாராட்டிரம், மத்தியப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம், யூனியன் பிரதேசமான கோவா, டாமன், டய்யூ ஆகிய இடங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின்சட்டம் திருத்தம் செய்யப்பட்டதால் வைப்பு காப்பீட்டுக் கூட்டுருச்சட்டத்தின் நன்மைகள் அங்குள்ள கூட்டுறவு வங்கிகளுக்கும் கிட்டியுள்ளன.

5. வாடிக்கையர் வகைகள்

(Types of Customers)

வியாபாரமனைத்தும் வாடிக்கையரை நம்பியே நடைபெறுகிறது என்று பொதுப்படையாகக் கூறலாம். வங்கித்தொழிலைப் பொறுத்தவரை இக் கூற்று மிகமிக உண்மையானதாகும். வாடிக்கையரில்லையேல் வங்கியில்லை. வாடிக்கையர் செலுத்தும் வைப்புத் தொகையை நம்பியே வங்கியர் தொழிலாற்றுகிறார். ஆகவே வைப்புச் செலுத்த வரும் எவரையும் வங்கியர் வரவேற்பது இயல்பு. வாடிக்கையராகச் சேர்பவர் அனைவரும் ஒரே தன்மையராக இருப்பதில்லை. தனிநபர்மட்டும்தான் வாடிக்கையராக இருக்க வேண்டுமென்பதில்லை. நிறுவனங்களும், தொழிற்சாலைகளும், நிறுமங்களும், கூட்டுருக்களும், சங்கங்களும், அரசும், பொது ஆட்சியங்களும் வங்கியரிடம் கணக்கு வைத்திருக்கும்போது வாடிக்கையர் என்ற நிலையிலுள்ளன.

ஒவ்வொரு வகையான வாடிக்கையருடனும் வங்கியர் நடவடிக்கைகள் மேற்கொள்ளும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டியநிலை ஏற்படுகிறது. சிலர் முகவர் என்ற நிலையிலிருக்கலாம்; இளவர் (உரிமை வயது வராதோர்) என்ற நிலையிலிருக்கலாம்; மற்றும் மணமான பெண்டிர், கூட்டாளி, பித்தநிலையிலுள்ளவர் போன்ற நிலையிலுமிருக்கலாம். ஒப்பந்தம் செய்யும்தகுதி பெற்றவருக்கு வங்கியர் கணக்குத்துவங்க இசைந்தால் தொல்லை ஏதும் ஏற்படாது. வங்கியருடன் செய்துகொள்ளும் ஒப்பந்தப்படி நடக்க வாடிக்கையர் கடமைப்பட்டவர். மற்ற வாடிக்கையருடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளும்போது அவரவர் தன்மை நோக்கிச்சில எச்சரிக்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் முக்கியமான சிலவகை வாடிக்கையரைப்பற்றி வங்கியர் கடைப்பிடிக்கவேண்டிய எச்சரிக்கை நடவடிக்கைகளைக் கீழே காண்போம்.

இளவர் (Minor) அல்லது உரிமைவயது வராதோர்

பதினெட்டு ஆண்டுகள் முடிவுறு ஒருநபர் இளவர் எனப்படுவார். இவரது சொத்தையோ அல்லது இவரையோ பாதுகாக்க வேண்டி பதினெட்டு ஆண்டுகள் முடியுமுன் ஒரு பாதுகாப்பாளர் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டிருந்தால் இளவர் நிலை இருபத்தொரு ஆண்டுகள்வரை நீட்டிக்கும். இது இந்தியச் சட்டப்படியான நிலை. இங்கிலாந்து நாட்டுச் சட்டப்படி இருபத்தொரு முடிவுறு எவரும் இளவர் (infant) எனப்படுவார். இளவர் முதிர்ந்த மனநிலையுடையவரல்லர். தனக்கு எது நல்லது எது கெட்டது என்று ஆராய்ந்தறியும் வினவு பெற்றவரல்லர். இந்த நிலையில் அவர் ஒப்பந்தம் ஏதும் செய்துகொள்வது அவருடைய நலனுக்குப் புறம்பாக அமையலாம். சமூக விரோதிகள் இளவருடைய முதிரா மனநிலையைப் பயன்படுத்திக் கொண்டு அவருக்குத் தீங்குபல விளைவிக்கலாம். எனவே இந்திய ஒப்பந்தச்சட்டம் இளவருக்கு ஒப்பந்தம் செய்துகொள்ளும் தகுதி கிடையாது என்று கூறுகிறது. இளவர் பிறருடன் செய்துகொள்ளும் ஒப்பந்தம் இல்லா நிலையது (Void). அவர் பிறருடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மறுக்கலாம். சில சூழ்நிலைகளில் மட்டும், தன்வாழ்வுக்கு மிக அவசியமானவற்றைப் பெறுவதற்கு இளவர் செய்துகொண்ட ஒப்பந்தம் செல்லுநிலையது (valid).

இளவரும் வங்கியரும்

வங்கியரைப் பொறுத்தவரையில் இளவரை வாடிக்கையராகக் கொள்வதில் தவறு ஒன்றுமில்லை. அவருடைய கணக்கில் மேல்வரைப்பற்று (overdraft) ஏற்படாதவரை வங்கியருக்குத் தொல்லை ஏதுமில்லை. இருப்பினும், இளவருடன் செய்து கொள்ளும் ஒப்பந்தம் செல்லாநிலையது ஆனபடியால் அவருடைய காப்பாளரின் பெயரில் நடப்புக்கணக்கைத் துவங்குவது நல்லதாகும். தப்பித் தவறி மேல்வரைப்பற்று ஏதும் அளித்து விட்டால்அதைத் திருப்பிப் பெற ஏதுவாக இருக்கும். இல்லையெனில், இளவரிடமிருந்து கடனைத் திருப்பிப்பெற முடியாத நிலையோடல்லாமல் அவர் பிணையாக வைத்துள்ள பிணையங்களையும் திருப்பித் தந்துவிட வேண்டும்.

இளவர் ஒப்பந்தத் தகுதி பெற்றவரல்லரேனும், ஒரு காசோலை எழுதவோ அல்லது மாற்றுச் சீட்டு எழுதவோ அல்லது மேலெழுதவோ செய்யலாம். அங்ஙனம் எழுதப்பெற்ற அல்லது மேலெழுதப்பெற்ற மாற்றுச் சீட்டு அல்லது காசோலை, இளவரைத் தவிர, மற்ற எல்லாச் சம்பந்தப்பட்ட நபர்களைப் பொறுத்தவரை செல்லு நிலையது (valid).

ஒப்பந்தத் தகுதியுள்ள ஒருவரின் முகவராக இளவர் செயலாற்றலாம். தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்துக்கு உட்பட்டு இள்வர், முகவர் என்றமுறையில், செய்யும் செயல்களனைத்தும் முதல்வரைக் கட்டுப்படுத்தும். என்ன அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது என்பதை எழுத்தில் பெற்று வைத்திருந்தால், பின்னர் தொல்லைகளுக்கு ஆளாகும் நிலை நேராது.

மற்றக் கூட்டாளிகள் இசைந்தால் இளவர் ஒருவர் கூட்டு வணிகத்தில் சேர்த்துக் கொள்ளப்படலாம். அவ் வணிகத்தில் ஏற்படும் நற்பயன்கள் மட்டுமே இளவருக்குச் சேரும். தான் இளவராக இருந்தபோது கூட்டுநிறுவனம் பட்ட கடன்களுக்கு இவர் பொறுப்பாக மாட்டார். ஆனால் வயதடைந்த ஆறு திங்களுக்குள் தான் கூட்டாளியாகவிருக்க விரும்பவில்லை என்று அறிவிக்காவிடில், கூட்டு ஒப்பந்தப்படி தான் கூட்டாளியாகச் சேர்ந்த நாளிலிருந்து ஏற்பட்ட கடன்களுக்கும் பொறுப்பாவார்.

தான் வயதுவந்தவர் என்று பொய்யுரை புனைந்து இளவர் ஒருவர் பிறரிடமிருந்து கடன்வாங்கியிருந்தால் கூட அக் கடனைத் திருப்பிச் செலுத்தும்படி இளவரைக் கட்டாயப்படுத்த முடியாது.

மற்றும் இளவர் ஒருவருக்குக் கடன்தருவதற்கு மூன்றுமவர் பொறுப்புறுதியாகப் பிணையங்களைத் தந்தால், கடனைத் தீர்க்காமல் பொறுப்புறுதியளித்தவர் தமது பிணையங்களைத் திருப்பித்தருமாறு கோரலாம்.

பித்த நிலையர் (Lunatics)

மனச் சமநிலையற்றவரைச் சட்டம் பித்த நிலையர் என்று குறிப்பிடுகிறது. பித்த நிலையிலிருக்கும்போது ஒருவர் ஒப்பந்தம் ஏதும் செய்து கொண்டால் அது இல்லா நிலையது (void) ஆகும். இதற்குக் காரணம் அவர் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தின் தன்மை, விளைவுகளைப் புரிந்துகொண்டு தனது நலனையொட்டிய முடிவினை எடுக்கும் திறன் பித்த நிலையிலுள்ளவருக்குக் கிடையாது. பித்த நிலையில்லாது நல்ல நிலையிலிருக்கும்போது இவர் செய்துகொள்ளும் ஒப்பந்தம் செல்லுநிலையது (valid). பித்தநிலையர் என்று தெரிந்திருந்தும் அவருக்குக் கணக்குத் துவங்க வங்கியர் இசையமாட்டார். ஏனெனில், அவர் எழுதும் காசோலை நல்ல நிலையிலிருந்தபோது எழுதப்பட்டதா அல்லது பித்தநிலையிலிருந்தபோது எழுதப்பட்டதா என்று அறியும் வாய்ப்புக் கிடைப்பது அரிது. நல்ல நிலையிலிருந்தபோது எழுதிய காசோலையை மறுத்தாலும், பித்த நிலையிலிருந்தபோது எழுதிய காசோலையை மதித்தாலும் வங்கியர்

தொல்லைக்கு ஆளாவார். தமது வாடிக்கையரின் பித்தநிலையைப் பற்றி அறியவந்ததும் அவரது கணக்கின் மீதான நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கவேண்டும். நீதிமன்றத்திலிருந்து ஆணைபெற்ற பிறகு அல்லது வாடிக்கையர் நல்ல நிலையிலுள்ளார் என்று உறுதியான சான்று கிடைத்த பிறகுதான் அவர் கணக்கில் நடவடிக்கைகளை அனுமதிக்க வேண்டும்.

திருமணமான பெண்டிர் (Married Women)

திருமணமான பெண்டிர் ஒப்பந்தம் செய்து கொள்ளும் தகுதியுள்ளவர்களாகையால் வங்கியர் அவர்கள் பெயரில் நடப்புக் கணக்குத்துவங்கலாம். இந்து இறங்குரிமைச்சட்டப் (Hindu Succession Act, 1956) படி பெண்கள் தமது சொத்தின்மீது முழு உரிமை கொண்டவராவர். நடப்புக் கணக்கில் இவ்வகை வாடிக்கையருக்கு ஏதும் மேல்வரைப்பற்று (Overdraft) வங்கியர் அளிக்கு முன், இவருக்குத் தனி சொத்து உள்ளதா என்று அறிந்து அதைப் பிணையமாகக் கொள்ளுதல் நன்று. வங்கியருடன் துவக்கப்பட்ட கணக்கு மணமான பெண்டிரின் சொத்துக்களில் ஒரு பகுதியாகும். இக் கணக்கின் மீது மாற்றுச் சீட்டு, காசோலை முதலிய எழுதும் உரிமை இவருக்கு உண்டு.

தான் பட்ட கடன்களுக்கு மணமான பெண் தனது கணவனைப் பொறுப்பாளியாக்க முடியாது. ஆனால் கணவனின் முகவராகச் செயலாற்றும் பொழுது அல்லது தன் வாழ்க்கைக்கு அவசியமான தேவைகளுக்கு அல்லது அவசிய வீட்டுச் செலவுக்களுக்கு கடன் வாங்கும் பொழுது கணவன் மீது பொறுப்புச் சாட்டலாம். அந்நிலையிலும், வாழ்க்கைக்கு அவசியமான தேவைகள் அளிக்கப்பட்டிருந்தன அல்லது தன் பெயரைப் பயன்படுத்திக் கடன் ஏதும் பெறலாகாது என எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது எனக் கணவன் சான்று அளிப்பின், அக் கடன்களுக்கு கணவன் பொறுப்பாகமாட்டார்.

குடி மயக்கத்தில் உள்ளவர்

குடி மயக்கத்திலுள்ளவர், தாம் மேற்கொள்ளும் ஒப்பந்தத்தின் விளைவைப் புரிந்து கொள்ளும் நிலையில் இல்லாவிடில், அதற்கான சான்றளித்து அந்த ஒப்பந்தத்தைத் தள்ளிவிடும்படி கோரி நீதிமன்றத்தை வேண்டலாம். ஆனால், பொதுவாக, போதை நிலையிலுள்ளவரின் ஒப்பந்தம் செய்து கொள்ளும் தகுதி (Capacity to enter into a contract) பாதிக்கப் படுவதில்லை. போதை நிலையிலுள்ளவர் தன் பெயரில் உள்ள காசோலையை மாற்றவேண்டி

வங்கியரை அணுகினுல், பணஞ் செலுத்தும் வங்கியர், பணஞ் செலுத்தியமைக்கும், பணம் பெற்றவர் கையொப்பத்திற்கும் தக்க ஒரு சாட்சியின் கையொப்பம் பெறுவர்.

எழுத்தறிவற்றவர்

எழுதப் படிக்கத் தெரியாதவர் வங்கியருடன் கணக்குத் துவங்கலாம். தமது கையொப்பத்திற்குப் பதில் இடதுகைப் பெருவிரல் குறியையிட இவர்களை அனுமதிப்பதுண்டு. மோசடி ஏதும் நிகழாமல் தவிர்க்கும் பொருட்டு, இக்குறியைச் சாட்சி ஒருவர் கையொப்பமிட்டு சான்றளிக்கும்படி வேண்டுவதுண்டு.

முகவர் (Agent)

வாடிக்கையர் துவங்கிய கணக்கின் மீது ஏற்படும் நடவடிக்கை களனைத்தும் வாடிக்கையரே மேற்கொள்வது இயல்பு என்றுலும் பற்பல சூழ்நிலைகளில் வணிக வழக்கின்படியும் அல்லது சிறப்பாக அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும் முகவர் (Agent) ஒருவர் வாடிக்கையரின் கணக்கைப் பற்றிய நடவடிக்கைகளை மேற் கொள்ளலாம். கம்பெனியொன்றின் இயக்குநர், செயலர், நிருவாகர் அல்லது கருவூலர் (Treasurer) தம் நிறுமத்தின் சார்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம் அவரது நியமிப் பிலேயே தொக்கி நிற்கிறது. அந்நிறுமத்தின் கிளையொன்றின் மேலாளராகச் செயலாற்றுபவருக்குக் கிளையின் சார்பாகத் தொழிலுக்கு வேண்டியநடவடிக்கைகளைமேற்கொள்ளும் அதிகாரம் தொக்கி நிற்கிறது. பொதுவாக, வாடிக்கையர் ஒருவர் தமது கணக்கின் மீதான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒரு முகவரை நியமிக்கலாம். முகவருக்கு அளிக்கப்படும் அதிகாரம்செயலுரிமை ஆணை (Mandate) அல்லது பகர உரிமைப்பத்திரம் (Power of Attorney) வழி அமையலாம்.

செயலுரிமை ஆணையும் பகர உரிமைப்பத்திரமும்

செயலுரிமை ஆணை (Mandate)க்கும் பகர உரிமைப்பத்திரத் துக்கும் (Power of Attorney) வேறுபாடு உண்டு. ஒருவருக்குச் சில செயல்களை மேற்கொள்ள அதிகாரம் தரப்பட்டுள்ளது என்பதை அறிவிப்பது செயலுரிமை ஆணை. இந்த ஆணை வழி வங்கியருக்குத் தெரிவிக்கப்படும் செய்தி, குறிப்பிட்டவருக்கு இன்ன அதிகாரங்கள் வழங்கப்பட்டது என்பதாகும். ஆனல் அதிகாரத்தை வழங்கும் பத்திரம் பகர உரிமைப்பத்திரம் எனப்படும். வங்கியர் பகர உரிமைப்பத்திரத்தை நன்கு கவனித்துப் படித்தறிய வேண்டும். முகவருக்கு என்ன அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளது என்று

கூர்ந்து நோக்கவேண்டும். பகர உரிமைப்பத்திரம் அளிப்பது பொது அல்லது சிறப்பு அதிகாரமாக இருக்கலாம். சிறப்பு அதிகாரம் குறிப்பிட்ட ஒரு நடவடிக்கைக்காக மட்டும் அளிக்கப் படலாம். உதாரணமாக, ஒருவர் தனது வெளியூரிலுள்ள நிலத்தை விற்பதற்கு நேரே போய் பதிவு அலுவலகத்தின் கையொப்பமிடா நிலையிலிருந்தால், சிறப்பு அதிகாரம் வழங்கி மற்றொருவரை அவர் சார்பாக விற்பனைப்பத்திரத்தில் கையெழுத் திட ஏற்பாடு செய்யலாம். பொது அதிகாரமாக இருந்தால் தொழிலைத் தம் சார்பாக நடத்த எல்லா அதிகாரங்களையும் தருவ தாக அமையலாம். தனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்துக்கு உட்பட்டு முகவர் செய்யும் செயல்களுக்கே முதல்வர் (Principal) பொறுப்பாவார். எனவே வங்கியர், அதிகார எல்லைக்குட்பட்ட செயல்களைத்தான் முகவர் செய்திருக்கிறார் என்று உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். காசோலைகளை மேலெழுதும் (endorse) அதிகாரம் பெற்றவர் அவற்றை மாற்றவோ அல்லது தனது சொந்தக் கணக்கில் செலுத்திக்கொள்வதற்கோ அதிகாரம் பெற்ற வரல்லர்.

பகர உரிமைப்பத்திரத்தில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய செய்திகள்: சரியானபடி முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா என்றும், அதிகாரம் அளிக்கப்பட்ட காலவரையறை முடிந்துவிட்டதா அல்லவா என்றும், சரியான முறையில் கையொப்பமிடப் பட்டுள்ளதா என்றும் கவனிக்க வேண்டும். பத்திரத்தின் ஒரு நகலை வங்கியர் இருத்திக் கொள்வது அவசியம். பகர உரிமைப் பத்திரமல்லாது ஒரு செயலுரிமை ஆணை (mandate) யிலும் வாடிக்கையர் கையெழுத்திட்டு வங்கியரிடம் தரும்படி கோரப் படுவதுண்டு. பகர உரிமைப்பத்திரத்தில் குறைபாடுகள் ஏதும் இருந்தாலும் அதனால் தொல்லைகள் நேராமலிருக்க செயலுரிமை ஆணை பயன்படுகிறது.

முகவர் ஒரு ஆவணத்தில் கையொப்பமிடும்போது, தான் அந்த நிலையில் கையொப்பமிடுகிறார் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். இல்லாவிடில் முகவர் சொந்த முறையில் பொறுப் பேற்கவேண்டி நேரலாம். பெரும்பாலும் "per pro" அல்லது "Per Procuration" அல்லது "Per-Procurationem" என்று குறிப் பிட்டு முகவர் கையெழுத்திடுவார். இதன் பொருள் "அதிகாரம் பெற்றபடி" என்பதாகும். சில இடங்களில் 'P' என்று மட்டும் குறிப்பிடப்படுவதையும் காண்கிறோம். இம்மாதிரி குறிப்புடன் கையொப்பமிடப்பட்ட நிலையில் வங்கியர் உன்னிப்பாக இருக்க வேண்டும். கையொப்பமிட்ட முகவர் தக்க அதிகாரத்துடன் செயலாற்றுகிறாரா என்று சரி பார்க்கவேண்டும்.

Bharathiar University Library
13508
K ALUDIAPPLLAI

பொறுப்புரிமையர் (Trustees)

சொத்துரிமையுடன் இணைந்துள்ள கடப்பாடு 'பொறுப்புரிமை அமைப்பு' (Trust) எனப்படும். சொத்தின் சொந்தக்காரர் மீது நம்பிக்கை வைக்கப் பெற்று அதை அவர் ஏற்பதனுலோ, சொந்தக்காரரே அதைச் சாற்றி ஏற்றுக்கொண்டதாலோ, இது எழுகிறது. இக்கடப்பாடு மற்றொருவர் நன்மை கருதி அல்லது சொந்தக்காரர் நன்மையுடன் மற்றொருவர் நன்மையுங்கருதி இருக்கலாம். இந்த நம்பிக்கையை வைத்தவர் அல்லது சாற்றியவர் ''பொறுப்புரிமை அமைப்பாளர்'' (Author of the Trust or Settlor) எனப்படுவார்; இந்த நம்பிக்கையை ஏற்பவர் பொறுப்புரிமையர் (Trustee) ஆவர். எவருடைய நலன் கருதி நம்பிக்கை ஏற்கப்படுகிறதோ, அவர் ''பொறுப்புரிமைப் பயனுளி'' (Beneficiary) எனப்பெறுவர். பொறுப்புரிமையைச் சாற்றும் ஆவணம், ''பொறுப்புரிமை ஆவணம்'' (Trust Deed) எனப்படும். பொறுப்புரிமையருக்காகக் கணக்குத் துவங்குமுன் வங்கியர் சில எச்சரிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்,

பொறுப்புமுறை ஆவணத்தை ஆராய்ந்து, அதில் வங்கிக் கணக்குத் திறக்க விரும்பி விண்ணப்பித்திருப்பவர் பொறுப்புரிமையராக நியமிக்கப்பட்டுள்ளனரா என்று நோக்க வேண்டும். பொறுப்புரிமையருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், பொறுப்புரிமைச் சொத்து நிருவகிக்கப்படவேண்டிய முறை முதலிய செய்திகள் பற்றி வங்கியர் தெளிவுபெற வேண்டும்.

பொறுப்புரிமையர் கூட்டாகச் செயலாற்ற வேண்டி பொறுப்புரிமை ஆவணம் பணித்திருந்தால் அங்ஙனமே அவர்கள் செயலாற்ற வேண்டும். தம்முடைய அதிகாரத்தை அவர் மற்றவருக்கு அளிக்க முடியாது.

குறிப்பிட்ட கணக்கு பொறுப்புரிமைக் கணக்கு என்று அறிய வந்தது முதல் வங்கியர் எச்சரிக்கையாக இருத்தல் நன்று. பொறுப்புரிமையர் தமது நடவடிக்கை வழி 'பொறுப்புரிமை அமைப்பு மீறல்' என்ற குற்றத்துக்கு ஆளாக நேர்ந்தாலும் வங்கியரும் அதற்கு உடந்தையாக இருந்தார் என்ற பழிவராமல் பாதுகாப்பாக இருக்க வேண்டுமல்லவா?

ஒரே நபர் தம்முடைய சொந்தமுறையில் ஒரு கணக்கும், பொறுப்புரிமையர் என்ற முறையில் மற்றொரு கணக்கும் வைத்திருக்கும்போது பொறுப்புரிமை அமைப்புக் கணக்கிலிருக்கும் பணத்தைச் சொந்தக் கணக்குக்கு மாற்ற வங்கியரை அணுகினுல்,

வங்கியர் இதற்குக் காரணத்தைத் தீர விசாரிக்க வேண்டும். முக்கியமாக சொந்தக் கணக்கில் நிற்கும் கடனை அடைக்க வேண்டி இவ்வகையாகப் பணத்தைப் பொறுப்புரிமைக் கணக்கிலிருந்து மாற்றினால் வங்கியர் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தனது கடன் தொகையைத் திருப்பிப்பெற வங்கியர் வாடிக்கையருடன் உடந்தையாயிருந்து பொறுப்புரிமை அமைப்பு மீறலில் ஈடுபட்டார் என்ற குற்றத்திற்கு ஆளாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

பொறுப்புரிமை அமைப்புக்காகப் பொறுப்புரிமையர் கடன் வாங்கலாமா? பொறுப்புரிமை ஆவணம் அளிக்கும் அதிகாரத்திற்குட்பட்டு பொறுப்புரிமையர் கடன் வாங்கலாம். பொறுப்புரிமைச் சொத்தை விற்க அல்லது அடைமானம் வைக்க ஆவணத்தில் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தால் நீதிமன்றத்தின் அனுமதி பெறாமலே பொறுப்புரிமையர் இவற்றைச் செய்யலாம்.

பொறுப்புரிமையர் இறந்துவிட்டால் என்ன முறையில் நிருவாகம் நடக்கவேண்டும் என்பதற்குப் பொறுப்புரிமை ஆவணம் வழிகாட்டும். எல்லா பொறுப்புரிமையரும் இறந்துவிட்டால் நீதிமன்றம் புதிய பொறுப்புரிமையரை நியமிக்கும். பொறுப்புரிமையர் நொடித்துவிட்டால் அது பொறுப்புரிமைச் சொத்தைப் பாதிக்காது.

பொறுப்புரிமை அமைப்பின் பணம் வங்கியரிடம் வைப்பாகச் செலுத்தப்படுவதால் வங்கியர் பொறுப்புரிமையராக மாட்டார். வைப்புச் செலுத்தும் பொறுப்புரிமையருக்கும் வங்கியருக்குமிடையேயுள்ள உறவு கடனுளர் கடனாளி (Creditor, debtor) உறவாகும்.

நிறைவேற்றுளர், நிர்வாகி (Executor, Administrator)

இறந்து பட்ட ஒரு நபரின் சொத்துக்களை நிர்வாகிக்கும் பொருட்டு நியமிக்கப்படும் நபரை நிறைவேற்றுளர் அல்லது நிர்வாகர் என்பர். உயிருடன் இருக்கும்பொழுதே உயில் ஏற்படுத்தி அதை நிறைவேற்ற ஒரு நபரைக் குறித்திருந்தால் அவர் நிறைவேற்றுளர் என அறியப்படுவார். மற்றபடி இறந்தவர் சொத்தை நிருவாகம் செய்ய நீதிமன்றத்தால் நியமிக்கப்படுபவர் நிர்வாகி எனப்படுவார். இவர் நியமனமானதும் சொத்தை நிர்வகிக்கும் அதிகாரம் இவருக்கு நிர்வாகப் பத்திரம் (Letters of Administration) மூலம் வழங்கப்படும். இதன்வழி இவர் நிர்வாகிக்குரிய அதிகாரங்களையும் கடமைகளையும் பெறுகிறார்.

உயில் (Will) எழுதிவைத்த ஒருவர் இறந்தபின், அதன் நிறை வேற்றுளர் (Executor) ஒரு உயில் மெய்ப்பிதழ் (probate) பெற வேண்டும். ஒருவர் எழுதிவைத்த உயில் மெய்ப்பிக்கப்பட்ட தென்றும், அதில் கண்டவருக்குச் சொத்தை நிர்வகிப்பதற்கான அதிகாரம் அளிக்கப்பட்டது என்றும் உரிய நீதிமன்றம் அளிக்கும் சான்றிதழே உயில் மெய்ப்பிதழ் ஆகும்.

நிறைவேற்றுளர் அல்லது நிர்வாகி வங்கியரிடம் கணக்கு ஆரம்பிக்க விரும்பினுல் முதலில் வங்கியர் அவரிடமிருந்து உயில் மெய்ப்பிதழ் அல்லது நிர்வாகப் பத்திரத்தைப் பெற்று அதிலுள்ள விவரங்களைக் கவனமாகப் படித்தறிய வேண்டும். மேற்கூறிய ஆவணங்கள் பெறுவதற்கு, நிறைவேற்றுளர் கடன் அல்லது மேல் வரைப் பற்று வேண்டினுல் அவரது சொந்தப் பொறுப்பில் வங்கியர் கடன் வழங்கலாம். நிறைவேற்றுளர் அனைவரும் தனித் தனியாகவும் கூட்டமாகவும் இக்கடனுக்குப் பொறுப்பாவர். உயில் மெய்ப்பிதழ் தரப்படவில்லையெனில் நிறைவேற்றுளரின் சொந்தச் சொத்திலிருந்து கடனை அடைக்க வேண்டும்.

வாடிக்கையர் இறந்த செய்தியைக் கேள்விப்பட்டவுடன் வங்கியர் அவரது கணக்கின்மீது விடுக்கப்பட்ட காசோலைகளுக்குப் பணஞ் செலுத்துவதை நிறுத்திவிடுவார். உயில் மெய்ப்பிதழ் அல்லது நிர்வாகப் பத்திரம் பெற்று நிறைவேற்றுளர் அல்லது நிர்வாகி என்று உரிமை கொண்டாடுபவரின் பெயருக்கு இறந்த வாடிக்கையரின் கணக்கு மாற்றித் தரப்படும். உயில் எழுதப் பட்டநாள், உயில் மெய்ப்பிதழ் பெற்றநாள், உயில் மெய்ப்பிதழில் கண்டவாறு சொத்தின் மதிப்பு, நிறைவேற்றுளர் அல்லது நிர்வாகியின் பெயர், அதிகாரங்கள் முதலிய செய்திகளை வங்கியர் படித்தறிய வேண்டும். இறந்தவருடைய தொழிலைத் தொடர்ந்து நடத்தும் அதிகாரம் நிறைவேற்றுளர்களுக்கு அளிக்கப்பட்டிருந் தால் அதையொட்டி கடன் வாங்க, அடைமானம் செய்ய, மாற்றுச் சீட்டு எழுத, மேலெழுத, காசோலை எழுத எவ்வகை யான அதிகாரம் தரப்பட்டுள்ளது என்பதைப் பார்க்க வேண்டும்.

கூட்டுக் கணக்கு (Joint Account)

இருவரோ அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையினரோ தம்பெயரில் கூட்டாக ஒரு கணக்குத் துவங்கக் கோரி வங்கியரிடம் விண்ணப்பித்தாலன்றி வங்கியர் கூட்டுக்கணக்கு ஒன்றை ஆரம் பிக்கமாட்டார்.

கூட்டுக்கணக்கின் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளும் முறைபற்றிய எல்லாச் செய்திகள் குறித்தும் வங்கியர் தெளிவான

கட்டளைகளைக் கூட்டுக் கணக்குதாரர்களிடமிருந்து பெறல் வேண்டும். கணக்கின் மீது யார் நடவடிக்கைகளை மேற்கொள்வது; அவருக்கு அல்லது அவர்களுக்குத் தரப்பட்டுள்ள அதிகாரம்; அக் கணக்கில் கடன் வாங்குவது; சொத்துக்களை அடகுவைப்பது; மாற்றுமுறை ஆவணங்களை எழுதல்; மேலெழுதல்; ஏற்றல் குறித்த அதிகாரம் முதலிய குறித்து வங்கியர் எல்லாச் செய்திகளையும் அறிந்திருத்தல் அவசியம்.

பொதுவாக, வேறுவகையான ஏற்பாடு இருந்தாலன்றி, கூட்டாக ஏற்படுத்திய கணக்கிலிருந்து பணத்தை எடுக்கவும், கணக்கை வைத்திருக்கும் முறைபற்றிய கட்டளைகளைத்தரவும் சம்பந்தப்பட்ட எல்லா நபர்களும் சேர்ந்தே செயல்படவேண்டும். குறிப்பிட்ட ஒருவர் அல்லது சிலர் மட்டும் அக்கணக்கின் மீது நடவடிக்கைகளை மேற்கொள்ள எல்லா நபர்களும் ஒப்புக்கொண்டால், அவர்கள் ஒப்புதல் எழுத்தில் இருக்கவேண்டும். அனைவரும் அதில் கையொப்பமிட்டிருக்க வேண்டும்.

கூட்டுக் கணக்குதாரர் (joint account holder) களில் ஒருவர் நொடித்த நிலையராகி விட்டால் கூட்டுக் கணக்கின் மீதான நடவடிக்கைகளை வங்கியர் உடனே நிறுத்திவிடுவார். பின்னர் நொடித்த கணக்குதாரரின் பொறுப்புரிமையரும் பிறசெல்லும் புள்ளி (solvent) களாயுள்ள கணக்குதாரரும் கூட்டாக இடும் ஆணையின் பேரில் தான் பணஞ் செலுத்துவார். கூட்டுக் கணக்கின் மீது காசோலை எழுதப் பிறநபருக்கு அதிகாரமளித்த நபர் இறந்தாலோ, நொடித்துப் போனாலோ அல்லது பித்தநிலையரானாலோ அவர் அளித்த அதிகாரம் தானாகவே முற்றுப்பெறும். அதிகாரத்தை அளித்த நபர் அதைப் பின்னழிப்புச் (revoke) செய்யலாம்.

எஞ்சுநர் உரிமை (Survivorship)

கூட்டுக் கணக்குதாரர்களில்ஒருவர் இறந்துவிட்டால், கணக்கில் எஞ்சி நிற்கும் பணம் முழுவதையும் எஞ்சுநர் (survivor)களைத் திருப்பி எடுத்துக் கொள்ளச்சொல்லி, எஞ்சுநர்களின் பெயரில் புதிய கணக்கொன்று திறந்து அதில் இத்தொகையைக் கட்டுமாறு சொல்வது வங்கியர் வழக்கம்.

கூட்டுக் கணக்கில் மேல்வரைப்பற்று (overdraft) அளிப்பதில் வங்கியர் எச்சரிக்கையாக இருத்தல் நன்று. காசோலை எழுத அதிகாரம் பெற்றவர்களே மேல்வரைப்பற்றும் ஏற்படுத்தலாமா என்று நோக்கவேண்டும். கடன் கொடுத்தால் கூட்டுக் கணக்குதாரர்கள் பொறுப்பு கூட்டுத் தனித்தனிப் பொறுப்பாக (joint

and several liability) அமையும்படி ஏற்பாடு செய்யவேண்டும். கூட்டுக் கணக்குதாரர்கள் அனைவரும் சேர்ந்து கையெழுத்திட்டு ஒரு கூட்டுத் தனித்தனி கடனுறுதிச் சீட்டு (joint and several promissory note) தரும்படி கோரவேண்டும். இவ்வகையான பொறுப்புள்ள நிலையில் கடனைத் திருப்பிப்பெற, வங்கியர் கணக்கு தாரர்கள் அனைவரையும் அல்லது கணக்குதாரர்களில் எவர் ஒருவரையும் சாட்டலாம். கணக்குதாரர் ஒவ்வொருவர் மீதும் வழக்குத் தொடரலாம். வெறும் கூட்டுப் பொறுப்பு மட்டும் இருந்தால், எல்லாக் கூட்டுக் கணக்குதாரர்கள் மீதும் ஒரு வழக்குத் தொடரலாம்; அவர்களில் எவரேனும் இறந்துவிட்டால் அவரது சட்டமுறை மரபுரிமையர் (legal representative) கடனுக்குப் பொறுப்பாக மாட்டார். கூட்டுக் கணக்குதாரர்களின் தனிக் கணக்குகளில் உள்ள இருப்புத் தொகையைத் தமக்குச் சேர வேண்டிய கடனுக்கு ஈடுசெய்ய அக் கணக்குதாரர்களின் தனித் தனிப் பொறுப்பு நிலைநாட்டப் படவேண்டும். எப்படி இருந் தாலும், கூட்டுக் கணக்கின் மீது மேல்வரைப்பற்று (overdraft) வேண்டினல் வங்கியர் எல்லாக் கூட்டுக் கணக்குதாரர்களிடமிருந் தும் தக்க அதிகாரம் பெற்ற பின்னரே கடனையளிக்க வேண்டும்; இல்லாவிடில் கடனுக்கு ஏற்பாடு செய்த நபர்கள் மட்டுமே கடனுக்குப் பொறுப்பாவர்.

கணவனும் மனைவியும் சேர்ந்து கூட்டுக்கணக்கு துவங்குவ துண்டு. தனது வசதிக்காக கணவன் இக்கூட்டுக் கணக்கைத் துவங்கியிருந்தால் அவர் இறந்தபின் கணக்கிலுள்ள பணம் அவருடைய சொத்துக்களோடு சேர்க்கப்படும்; அவர் மனைவி அப் பணத்தின் மீது உரிமைகோர இயலாது (Marshall V. Crutwell). ஆனல் தான் திடீரென்று இறந்துவிட்டால் தன்மனைவிக்கு ஏதும் வழிசெய்யவேண்டும் என்ற நோக்குடன் கணவன் கூட்டுக்கணக்கு ஆரம்பித்திருப்பின், அவர் இறந்தபின் அப்பணம் அவர் விதவை யைச் சேரும் (Foley V. Foley).

கலைப்பாளர் (Liquidator) :

நிறுமங்களின் (கம்பெனிகளின்) கலைப்பாளர் வங்கியில் கணக் குத் துவங்க வங்கியரை அணுகலாம். கலைப்பாளருடைய முக்கிய வேலை நிறுமத்தின் சொத்துக்களை விற்றுப் பணமாக்குவதும் பங்கு தாரர் கடனாளிகளிடமிருந்து கம்பெனிக்கு வரவேண்டிய தொகையை வசூல் செய்வதும் ஆகும். இப் பணத்தைக் கொண்டு கம்பெனி செலுத்தவேண்டிய கடன்களை அடைத்து மீதம் ஏதும் இருப்பின் பங்குதாரர்களிடையே அதைப் பகிர்ந்தளிக்க வேண்டும்

நிறுமத்தின் சார்பாக, நிறுமத்தின் சொத்துக்களின் பேரில் கடன் வாங்கவும், காசோலை, மாற்றுச்சீட்டு, கடனுறுதிச் சீட்டு முதலியவற்றை எழுத, மேலெழுத, ஏற்கவும் அவருக்கு அதிகாரமுண்டு. கலைப்பாளர் பணி முடியுந்தருணத்தில் உரிமை கோராத இலாப ஈவு, பகிர்ந்தளிக்கப்படாத சொத்துகள் ஏதும் அவர் வசமிருப்பின், ''கம்பெனிகளின் கலைப்புக் கணக்கு'' (Companies Liquidation Account) என்ற தலைப்பில் இந்திய ரிசர்வு வங்கியின் பொதுக்கணக்கில், செலுத்தப் படவேண்டிய நாளிலிருந்து ஆறுமாதங்களாகியும் கேட்கப்படாத மேற்கூறிய பணத்தைச் செலுத்தவேண்டும்.

இந்துக் கூட்டுக்குடும்பம் (Hindu Joint Family)

இந்துக் கூட்டுக்குடும்பம் என்பது பொது மூதாதை ஒருவரின் நேர்வழி ஆண்தோன்றல்களையும் அவர்களின் மனைவியரையும் மணமாகாப் பெண்மக்களையும் கொண்டது. இதன் தலைவர் 'கர்த்தா, (Kartha) எனப்படுவார் கூட்டுக் குடும்பச்சொத்தை நிருவகிக்கும் பொறுப்பு இவருடையது. பெரும்பாலும் குடும்பத்திலுள்ள மூத்த ஆண்தான் கர்த்தாவாகச் செயலாற்றுவார். குடும்பச் சொத்தின் நிர்வாகி (Manager) என்றமுறையில், கர்த்தா குடும்பத்தின் அவசிய செலவுகளுக்காக வாங்கும் கடன் குடும்பச் சொத்திலிருந்து அடைக்கப் படவேண்டும். வங்கியர் கடன் அளிக்குமுன் குடும்பத்தின் நன்மைகருதி அக் கடன் வாங்கப்படுகிறதா என்று அறிந்து கொள்ள வேண்டும். பாதுகாப்பாக இருக்கும் பொருட்டு, வயது வந்த குடும்ப உறுப்பினர் அனைவரும் கடன் பற்றிய பத்திரங்களில் கையொப்பமிடுமாறு வங்கியர் வேண்டுவர். சில வங்கியர் கணக்கை ஆரம்பிக்கும்போதே, கணக்கில் செலுத்தப்படும் தொகை தன்னுடைய சொத்து அல்லது தானே சம்பாதித்த சொத்து என்று ஒரு அறிக்கையில் கையொப்பமிடக் கோருவர்.

கூட்டுக்குடும்பம் தொழில் ஏதும் நடத்திவந்தால் அதைத் தொடர்ந்து நடத்திவர குடும்பத்தலைவர் (கர்த்தா) நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். தொழில் நடத்துவதையொட்டி கடன் வாங்க அவருக்கு உரிமையுண்டு. தொழிலின் நன்மை கருதி வாங்கப்பட்ட கடனுக்குமட்டுமே கூட்டுக் குடும்பச் சொத்து பிணையமாக அமையும். பிற கடன்களும் குடும்ப நலனுக்காக வாங்கப் பட்டிருந்தால் மட்டுமே குடும்பச் சொத்தின்மீது பற்றுப்பொறுப்பு உண்டாகும். உதாரணமாக குடும்பச் சொத்திலிருந்து அரசினர்க்குச்செலுத்த வேண்டியவரி; குடும்ப உறுப்பினர்களைப் பராமரிக்க ஆகும் செலவு; ஆண்தோன்றல், அவர் வழித்தோன்றிய பெண்கள் ஆகியோரின் திருமணச் செலவு; இறந்த உறுப்பினரை அடக்கம்செய்ய மற்றும் குடும்பச் சடங்குகளுக்கான செலவு; குடும்பச்

சொத்தைக்காக்க, மீட்க ஆகும் வழக்காடல் செலவு போன்றவை அவசியமான குடும்பச் செலவுகள் எனக் கருதப்படுகின்றன.

மூதாதையர் நடத்திவந்த தொழிலை நடத்த வாங்கும் கடன்களுக்குக் குடும்பத்தலைவர் சொந்தமுறையிலும் பொறுப்பாவார். அதாவது சொத்தில் அவருக்குள்ள பங்குமட்டுமன்றி, குடும்பச் சொத்து கடனை அடைக்கப் போதாமற்போன நிலையில், அவருடைய சொந்தச் சொத்தும் கடனுக்குப் பொறுப்பாக அமையும். இதற்குக் காரணம் கடன்வாங்கும் பொழுது ஒப்பந்தத்தில் குடும்பத்தலைவர் தன்மீது பொறுப்பேற்பதாகும். குடும்பத்திலுள்ள மற்ற உறுப்பினர்களின் சொத்துப்பங்கு கடனுக்குப் பொறுப்பாக அமையுமேயன்றி, அவர்கள் தனிப்பட்டமுறையில் பொறுப்பாகார். ஆனால் வயதுவந்த குடும்ப உறுப்பினர் குடும்பத் தலைவருடன்கூட தனித்தனியே ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு கடன்பெற்றால் அல்லது பொறுப்பேற்றால், அங்ஙனம் கையொப்பமிட்டவர்கள் தனிப்பட்ட முறையிலும் பொறுப்பாவர்.

இந்து இறங்குரிமைச் சட்டம் (Hindu Succession Act 1956)

இந்துக் கூட்டுக் குடும்பத்தைப்பற்றிய சட்டநிலையைப் பெருமளவுக்கு மாற்றியமைத்துள்ளது. பெண் வாரிசுகளுக்கும் குடும்பச் சொத்தில் உரிமை அளிக்கப்பட்டுள்ளது. வங்கியர் கூட்டுக் குடும்பத்தலைவருக்குக் கடன் அளிக்கும்போது எச்சரிக்கையாக இருப்பது நன்று,

கூட்டு நிறுவனம் (Partnership Firm)

தொழில் செய்யும்பொருட்டு சிலர் ஒன்று சேர்ந்து கூட்டாகச் செயல்படலாம். அங்ஙனம் செயல்படும்நிலையில் உண்டாகக்கூடிய அமைப்பு கூட்டு நிறுவனமாகும். ''அனைவரும் அல்லது அனைவர் சார்பில் அவருள் எவரேனும் நடத்தும் ஒரு தொழிலில்வரும் ஆதாயத்தை அனைவரும் பங்கிட்டுக்கொள்வது என்று உடன்பட்டவர்களிடை எழும் தொடர்பு கூட்டாண்மை ஆகும்'' (இந்தியக் கூட்டாண்மைச் சட்டம், 4ஆம் பிரிவு). கூட்டு வணிகம் செய்யக் குறைந்தது இருவர் வேண்டும்; உயர்ந்த அளவு இருபதுக்கு மேல் இருக்கக்கூடாது. வங்கித்தொழில் செய்யும் கூட்டாக இருப்பின் உயர்ந்த அளவு பத்துபேருக்கு மிகக் கூடாது. கூட்டு நிறுவனத்தைச் சட்டம் ஒரு தனி ஆளாகக் கருதுவதில்லை; கூட்டாளிகளினின்றும் தனித்த ஒரு இயக்கம் கூட்டு நிறுவனத்துக்குக்கிடையாது. நிறுவனத்தின் தலைமை அலுவலகம் உள்ள மாநிலத்தில், அம்மாநில நிறுவனப் பதிவாளரிடம் கூட்டு

நிறுவனம் பதிவு செய்யப்படவேண்டும். பதிவு செய்யப்படாத நிறுவனம், ஒப்பந்தத்தால் ஏற்பட்ட உரிமையை நிலைநாட்ட வெளியார் (outsider) எவர் மீதும் வழக்குத் தொடர இயலாது. இந்தியக் கூட்டாண்மைச் சட்டத்தின் விதிகளை வங்கியர் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். கூட்டாளிகள் அனைவரும் சேர்ந்து கையெழுத்திட்ட விண்ணப்பத்தின்பேரில் வங்கியர் கூட்டு நிறுவனக் கணக்குத் துவங்கலாம். கூட்டாளிகளின் அதிகாரம், கணக்கின்மீதான நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றியவிவரம் முதலிய குறித்து வங்கியர் விளக்கம் பெறவேண்டும். கூட்டாண்மைச் சட்டம் பிரிவு 19 (2) கூட்டாளி ஒருவர் கூட்டாண்மையின் சார்பாகத் தன் சொந்தப்பெயரில் வங்கிக் கணக்கு துவக்கக் கூடாது என்று கூறுகிறது. ஒரு கூட்டாளியோ அல்லது சில கூட்டாளிகளோ வேண்டினுலும்கூட கூட்டாண்மையின் பெயரில் வங்கியர் கணக்கு ஆரம்பிப்பதற்குச் சட்டம் ஏதும் தடைவிதிக்க வில்லை. கூட்டாண்மைப் பத்திரம் (Partnership Deed) இருந்தால் வங்கியர் அதை ஆராய்ந்து வங்கிக் கணக்கு ஆரம்பிக்க கூட்டாளி களின் அதிகாரம் எங்ஙனம் அமைந்துள்ளது என்றறிய வேண்டும்.

கணக்கு நடத்துமுறை

கூட்டாளிகளில் எவர் காசோலை எழுதுவது; மேலெழுதுவது மாற்றுச் சீட்டு ஏற்பது போன்ற ஏற்பாடுகளைத் தெளிவாக வங்கி யருக்குத் தெரிவிக்கவேண்டும். கூட்டாளி ஒருவருக்குத்தரப்பட்ட அதிகாரத்தை நீக்கிவிட்டதாக மற்றக் கூட்டாளி ஒருவரோ அல்லது பலரோ வங்கியருக்கு அறிவித்தால், வங்கியர் அவ் வறிப்பைத் தனக்கு இடப்பட்ட கட்டளையாகக் கொண்டு நடக்க வேண்டும். இதேபோன்று, கூட்டாளியொருவர் கூட்டுநிறுவனக் கணக்கின்மீது எழுதிய காசோலைக்குப் பணஞ் செலுத்த வேண் டாம் என்று மற்ெருரு கூட்டாளி வங்கியருக்கு அறிவித்தால் வங்கியர் அந்த அறிவிப்புக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

கூட்டாளி ஒருவர் கூட்டு நிறுவனம் கணக்குவைத்துள்ள அதே வங்கியரிடம் தன் சொந்தக் கணக்கையும் வைத்திருக்கலாம். அந் நிலையில், நிறுவனத்திற்குச் சேரவேண்டிய காசோலைகளை இவர் தன் சொந்தக் கணக்கில் செலுத்தினுல் வங்கியர் மற்றக்கூட்டாளி களிடம் இதுபற்றி உசாவவேண்டும். உசாவத் தவறினுல், சட்டம் தரும் பாதுகாப்பு (மாற்றுமுறையாவணச்சட்டம் 1881, பிரிவு 131) இவருக்குக் கிடைக்காமற் போகலாம். கூட்டு நிறுவனத்தின் பேரில் எழுதப்பட்ட காசோலைகளைத் தனது சொந்தக் கணக்கில் செலுத்தக் கூட்டாளிக்கு அதிகாரம் கிடையாது (Bevan Vs. Nati-

onal Bank Ltd.,) கூட்டாளி தனிப்பட்ட முறையில் சொந்தக் கணக்கில் கடன் வாங்கியிருக்கும் நிலையில், அக்கடனை அடைக்கு மாறு வங்கியர் வற்புறுத்தும்போது, அவர் கூட்டுநிறுவனக் கணக்கின்மீது காசோலை விடுத்து அதைத்தன் சொந்தக் கணக்கி லுள்ள கடனை அடைக்கப் பயன்படுத்துமாறு வேண்டினல் வங்கியர் அவசியம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

கடன் பெறும் அதிகாரம்

கூட்டு நிறுவனத் தொழிலை நடத்தக் கூட்டாளிக்குத் தரப் பட்டுள்ள அதிகாரத்தில், அவர் தொழிலின் தேவையையொட்டி எவ்வளவு கடன்வாங்கலாம், எம்முறையில் வாங்கலாம்; எந்தச் சொத்துகளைப் பிணையமாகக் காட்டலாம். என்றெல்லாம் குறிப் பிடப்பட்டிருக்கும். இங்கிலாந்து நாட்டுச் சட்டப்படி கூட்டாளி நிலையியல் சொத்து (immovable property) களை அடைமானமாகக் கொடுத்துக் கடன் பெறமுடியாது. இந்த விதி இந்தியாவுக்குப் பொருந்தாது (Asan Kam Ravuttar V. Somasundaram Chettiar). கூட்டு நிறுவனத்தை நிர்வாகம் செய்யும் முழு அதிகாரம் பெற்ற கூட்டாளி நிறுவனத்தின் நிலையியல் சொத்தை அடைமானம் வைத்துக் கடன் பெறலாம். தக்க அதிகாரம் இல்லாமல் தரும் அடைமானம் தகைமைமுறை பற்றுப்பொறுப்பு (equitable charge) என்ற முறையில் அமையும்.

இந்தியக் கூட்டாண்மைச் சட்டப்படி ஒவ்வொரு கூட்டாளி யும், நிறுவனத்தில் தொழிலைப் பொறுத்தவரை, அதன் முகவர் (agent) ஆவார். எனவே, நிறுவனத்தின் பொருட்டு வழக்கப்படி அவர் மேற்கொள்ளும் செயல்களனைத்தும் நிறுவனத்தைக் கட்டுப் படுத்தும்.

கூட்டாளிகளின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. எனவே கூட்டாண்மையின் கடன்களையும் பொறுப்புக்களையும் தீர்க்க ஒவ் வொரு கூட்டாளியும் வரையறையின்றிப் பொறுப்பாவார். கூட்டாண்மைச் சட்டப்படி, நிறுவனத்தின் கடன்களை அடைக்க நிறுவனச் சொத்துக்களை முதலில் பயன்படுத்த வேண்டும். கடனை அடைத்த பின்னர் உபரியாக உள்ள பணத்தில் ஒவ்வொரு கூட்டாளியின் பங்கைக் கொண்டும் அவரவருடைய தனிப்பட்ட முறைக் கடன்களை அடைக்கலாம். இதே போன்று, கூட்டாளியின் சொந்தச் சொத்துகளிலிருந்து அவரது தனிப்பட்ட கடன்களை அடைக்க வேண்டும். அடைத்தபின், மீதியுள்ள பணத்திலிருந்து நிறுவனத்தின் கடன்களை அடைக்கலாம். கடன் பத்திரத்தில்

கூட்டாளிகள் தனித்தும், கூட்டாகவும் பொறுப்பேற்கும் முறையில் ஆவணங்களில் கையெழுத்திட்டிருந்தால், வங்கியர் அவர்களது தனித்த முறைக்கணக்கில் உள்ள இருப்பைக் கூட்டுக்கணக்கிலுள்ள கடனுக்கு ஈடுசெய்யப் பயன்படுத்தலாம். இங்ஙனம் ஈடுசெய்யும் அனுமதியளிக்கும் கூற்றை, கூட்டு நிறுவனக்கணக்கு ஆரம்பிக்கும் பொழுதே கூட்டாளிகள் கையொப்பமிடும்படி வங்கியர் வேண்டுவர்.

கூட்டாளியின் இறப்பு

கூட்டாளியொருவர் இறந்ததும் நிறுவனம் கலைந்து போகும். அவருடைய சட்டமுறையான பிரதிநிதி (Legal Representative) இறந்தவருக்குப் பதிலாக கூட்டாளியாகும் உரிமை கிடையாது. நிறுவனத்தின் நிர்வாகத்திலும் அவர் பங்குபெற முடியாது. நிறுவனச் சொத்துக்களில் இறந்தவருக்குரிய பங்கினை மட்டுமே கோரும் உரிமை அவருக்குண்டு நிறுவனத்தைக் கலைக்கும் பொருட்டு வேண்டிய நடவடிக்கைகளை மற்றக் கூட்டாளிகள் மேற்கொள்ள உரிமை பெற்றவராவர். எனவே நிறுவனத்தின் கணக்கைத் தொடர்ந்து வங்கியர் நடத்தி வரலாம். ஆனால் கணக்கில் கடன் ஏதும் ஏற்பட்டிருந்தால், இறந்த கூட்டாளியின் பொறுப்பினை நிர்ணயிக்கும் பொருட்டும், கிளேடன் வழக்கின் விதி (Rule in Claytons' Case) அமுலாக்கப்படாமலிருக்கும் பொருட்டும் கணக்கை உடனே நிறுத்திவைக்க வேண்டும்.

கிளேடன் வழக்கு விதி (Rule in Claytons' Case)

கடனாளி ஒருவர் கடனாளர் ஒருவரிடம் பல கடன்கள் வாங்கியுள்ளதாக வைத்துக்கொள்வோம். பணத்தைச் செலுத்துகையில் எந்தக்கடனை அடைப்பதற்கு அது செலுத்தப்படுகிறது எனக்கூறும் உரிமை கடனாளிக்கு உண்டு. வெளிப்படையாகவோ அல்லது சூழ்நிலையில் ஊகிக்கும் படியாகவோ கடனாளி ஒதுக்கீடு செய்யாவிட்டால், கடனாளர் (Creditor) தம் விருப்பப்படி காலாவதியான கடனைக்கூட அடைப்பதற்குச் செலுத்தியதாக ஒதுக்கீடு செய்து கொள்ளலாம். கடனாளர் தாம் செய்த ஒதுக்கீடு பற்றிக்கடனாளிக்குத் தெரிவித்ததும் ஒதுக்கீடு மாற்ற முடியாததாகிறது. கடனாளியோ, கடனாளரோ ஒதுக்கீடு செய்யா நிலையில், முதலில் செலுத்தப்பட்ட தொகை வரிசைக்கிரமப்படி முதலில் ஏற்பட்ட கடனை அடைப்பதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதாகச் சட்டம் கொள்ளும். இவ்விதியின்படி, முதலில் கணக்கில் செலுத்தப்படும் பணமே முதலில் எடுக்கவும் படுகிறது. தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் கணக்குக்கு மட்டுமே இவ்விதி பொருந்தும்

பழைய கணக்கு நிறுத்தப்பட்டு புதியதொரு கணக்கு துவக்கப் பட்ட நிலையில், இவ்விதி பொருந்தாது. கிளேடன் விதி அமுலாகாமலிருக்கும் பொருட்டுக் கடன் உள்ள கணக்கை நிறுத்திவிட்டு, வாடிக்கையர் இசைவுடன் புதிய கணக்கை வங்கியர் திறக்க வேண்டும் (Deeley V. Lloyds Bank Ltd). செலுத்துகையை ஒதுக்கீடு செய்யும் கோட்பாடு (Doctrine of Appropriation of Payments) என்றும் இவ்விதி அறியப்படும்.

கூட்டாளி விலகுதல் (Retirement of Partner)

கூட்டாண்மையிலிருந்து கூட்டாளியொருவர் விலகினால், அவர் விலகிய நாளுக்குப்பின் ஏற்பட்ட நடவடிக்கைகளுக்கு அவர் பொறுப்பாகமாட்டார். ஆனால் அவர் கூட்டிலிருந்து விலகிய செய்தி வங்கியருக்கு அறிவிக்கப்படாநிலையில், விலகிய நாளுக்குப் பின்னர் தரப்பட்ட கடன்களுக்கும் அவர் தொடர்ந்து பொறுப்பாவார். கூட்டாளி விலகியபின் புதிதாக அமைக்கப்பட்ட நிறுவனத்தைத் தனது கடனாளியாக வங்கியர் ஏற்றுக்கொள்வது வழக்கம். விலகிய கூட்டாளி மீது தனது உரிமையைத் துறக்க விரும்பா வங்கியர் பழைய கணக்கை முடித்துவிட்டு புதியதொரு கணக்கைத் துவங்குவார். இதனால், கிளேடன் வழக்கு விதி இக் கணக்குக்குப் பொருந்தாமல் போகும்.

கூட்டாளியின் நொடிப்பு (Insolvency of Partner)

கூட்டாண்மைப் பத்திரத்தில் வேறு வகையாக உடன்பாடு இருந்தாலன்றி, கூட்டாளி எவரும் நொடித்த நிலையரானால் சட்டப்படி நிறுவனம் கலைந்து போகும். நொடித்த நிலையரான பின் கூட்டு நிறுவனம்பெறும் கடன்களுக்கு இவர் பொறுப்பாகமாட்டார். கூட்டு நிறுவனத்தின் சார்பாகச் செயலாற்றும் அதிகாரத்தை இவர் இழந்துவிடுகிறார். இவர் எழுதிய காசோலை ஏதும் நொடித்த நிலை ஏற்பட்டபின் வங்கியரிடம் தரப்பட்டால், மற்றக் கூட்டாளிகள் அக் காசோலையை உறுதியாக்கம் (confirmation) செய்யுமாறு வங்கியர் வேண்டுவர். நொடித்தவரின் பொறுப்பை நிர்ணயிக்கும் பொருட்டு வங்கியர் கணக்கை முடித்து விட்டு புதிய நிறுவனத்தின் பெயரில் புதுக்கணக்குத் துவங்குவார். கணக்கில் பணம் இருப்பாக இருந்தால் அதை வகையுள்ள (solvent) கூட்டாளிகளிடம் செலுத்திவிடலாம். நொடித்தவரின் பொறுப்புரிமையரிடம் அவருடைய பங்கினைத்தரும் பொறுப்பு மற்றக் கூட்டாளிகளைச்சாரும்.

கூட்டுப் பங்குக் கம்பெனி (Joint Stock Company)

வங்கியருக்கு நல்ல ஆதாயம் கொடுக்கக் கூடிய வாடிக்கையரில் மிக முக்கியமான இடம் பெறுவது கம்பெனி (நிறுமம்) என்று கூற

லாம். இவற்றிற்கு பற்பல பணிகளைச் செய்வதற்குக் கிடைக்கும் கட்டணமும், நல்ல ஈட்டின் பேரில் கொடுக்கும் கடனுக்கு நல்ல வட்டியும், கணிசமான அளவுக்கு நடவடிக்கைகளும் கிடைப்பதால் கம்பெனிக்குக் கணக்குத்துவக்குவதை வங்கியர் வரவேற்கின்றனர்.

கம்பெனி என்பது சட்டத்தால் உருவாக்கப்பட்ட ஒரு புனைவு நபர் (artificial person). அதற்கு வரையிலா உரிமை இறக்கமும் (perpetual succession) பொது முத்திரை (common seal) ஒன்றும் உண்டு. கம்பெனியின் உறுப்பினர்களினின்றும் தனித்த ஒரு ஆளாக அது கருதப்படுகிறது. ஆகவே அதற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளும் தகுதி உண்டு. அது பிறர் மீது வழக்குத் தொடரவும், பிறர் அதன் மீது வழக்குத் தொடரவும் முடியும். கம்பெனி யொன்றின் பெயரில் கணக்குத் துவங்குமுன் வங்கியர் சில செய்திகளைக் கூர்ந்து நோக்குதல் அவசியமாகிறது.

முதலில் கணக்குத் துவங்க விரும்பும் நிறுமம் (கம்பெனி) வரையறுத்த பொதுக்கம்பெனியா அல்லது வரையறுத்த தனிக் கம்பெனி ((Privatc Limited Company)யா என்று நோக்க வேண்டும். தனிக் கம்பெனியாக இருந்தால் வங்கியர் கூடுதலான எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இதற்குக் காரணங்களைப் பின்னர் காண்போம். பொதுவாக, கம்பெனியின் பெயரில் கணக்குத் துவங்குமுன் அதைப் பற்றிய ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்ய வேண்டும்.

எந்தச் சட்டத்தின் அடிப்படையில் நிறுமம் ஏற்படுத்தப் பட்டது என்று வங்கியர் நோக்க வேண்டும். தனியாக ஏற்படுத்தப்பட்ட சாசனம், அல்லது சட்டம் அல்லது கம்பெனிச் சட்டத்தின் அடிப்படையில் கூட்டுரு (Corporation) உருவாகியிருக்கக் கூடும். கம்பெனிகளின் பதிவாளர் அளித்துள்ள கூட்டுருவாக்கச் சான்றிதழ் (Certificate of incorporation). கம்பெனி நிறுவப்பட்டதற்கு அறுதியான சான்றுறுதி (Conclusive proof)யாக அமைகின்றது. எனவே, துவக்கம் பற்றிய சட்டச் சடங்குகளனைத்தும் குறித்த முறையில் நிறைவேற்றப்பட்டன என்று வங்கியர் ஊகித்துக் கொள்ளலாம், கம்பெனி பதிவு செய்யப்பட்டது முதல் குறிப்பிட்ட பெயரையுடைய ஒரு ஆள் எனவே அது சட்டத்தால் கருதப்படுகிறது.

அமைப்பு முறையேடு (Memorandum of Association)

கம்பெனியொன்றின் அமைப்பு முறையேட்டை அதன் சாசனம் என்று அழைப்பர். கம்பெனியின் பெயர், முதல், பதிவலுவலகம்

நோக்கம், உறுப்பினர் பொறுப்புபோன்ற எல்லா இன்றியமையாத செய்திகளையும் கொண்டது அமைப்பு முறையேடு. இதிற்குறிப்பிட்டுள்ள அதிகார வரம்பிற்குட்பட்டே கம்பெனி செயலாற்ற வேண்டும். வரம்பிற்கு அப்பாற்பட்ட நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டுக் கடனேதும் கம்பெனி பெற்றால் அது சட்டப்படி செல்லுபடியாகாது; மேலும் அச் செயல் வரம்பிகந்த (ultra vires) தாகும்.

செயல்முறை விதிகள் (Articles of Associatian)

கம்பெனி உள் நிருவாகத்தைப்பற்றிய ஒழுங்குமுறை, விதிகள் கொண்ட ஆணவமே செயல்முறை விதிகள் என அறியப்படும். நாள்தோறும் ஈடுபடும்செயல், நடவடிக்கைகள் அமையவேண்டிய முறையை விளக்குவன இவ்விதிகள். முக்கியமாக இயக்குநர், நிருவாகர் முதலியோர் பெயர், முகவரி, அவர்கள் நியமனமுறை, ஊதியம், அதிகாரம், கூட்டங்கள் நடைபெற வேண்டிய முறை முதலிய பற்பல இன்றியமையாச் செய்திகளை இதில் காணலாம். வங்கியர் அமைப்பு முறையேட்டினையும், செயல்முறை விதிகளையும் நன்கு படித்தறிதல் மிகமிக அவசியம். அண்மையில் செய்யப்பட்ட திருத்தங்களேதுமிருப்பின் அவற்றையும் வங்கியர் பெற வேண்டும். திருத்தங்கள் நிகழும்போது தமக்கும் அவசியம் அறிவிக்க வேண்டுமென்பதை வலியுறுத்த வேண்டும். ஏனெனில் திருத்தம் வங்கியரது நடவடிக்கைகளைப் பாதிக்கக்கூடியதாக இருக்கலாம். அமைப்பு முறையேடும், செயல்முறை விதிகளும் பொது ஆவணங்கள் (Public documents) எனப் பாகுபடுத்தப் பட்டிருப்பதால் கம்பெனியுடன் தொடர்பு கொள்ளும் எவரும் அதைப் படித்து அறிந்தவர்களாகக் கருதப்படுவர். கம்பெனிப் பதிவாளர் அலுவலகத்தில் எவர்வேண்டுமானாலும் இந்த ஆவணங்களைப் பார்வையிடலாம். குறிப்பிட்ட தொகை செலுத்தி நகல்களையும் பெறலாம். வங்கியருக்கு கம்பெனி அளிக்கும் ஏடுகளின் மீது ஐயமேதும் ஏற்பட்டால் கம்பெனிப் பதிவாளரிடமிருந்து சான்றுறுதியளிக்கப்பட்ட நகல்களைப் பெறலாம். இயக்குநரின் அதிகாரங்கள், கடன்வாங்கும் முறை, வரையறை, கம்பெனியின் சொத்துகளை அடைமானம் செய்யும் அதிகாரம், காசோலை மாற்றுச் சீட்டு முதலியன எழுத, மேலெழுத ஏற்க இயக்குநர் அல்லது பிறருக்குத் தரப்பட்டுள்ள அதிகாரம் முதலிய செய்திகளை விவரமாகப் படித்தறிய வேண்டும்.

தம்மை வங்கியராக நியமிக்க இயக்குநர் அவைக் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தை வங்கியர் பார்க்கவேண்டும். தீர்மான

நகல் ஒன்றைச் சான்றுறுதிபெற்று அதில் தமக்கு இடப்பெறும் கட்டளை என்னவென்று தெளிவுபெற வேண்டும். கம்பெனிக் கணக்கின்மீது யார்யார் காசோலை எழுதுவது, மேலெழுவது; கடன் பெறுவது; பிணையக்கடன் பெறுவது; அடைமானங்காட்டிக் கடன் பெறுவது; ஆவணங்களில் கையொப்பமிடுவது என்ற செய்திகள் பற்றி விவரங்களைப் பெறவேண்டும். கணக்கின்மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளுபவர்களின் மாதிரிக்கையெழுத்தைப் பெற வேண்டும். பலகாலமாக இயங்கி வரும் கம்பெனியாக இருப்பின் அதன் நிதிநிலையைப் பற்றிப் பொதுவாக அறிந்து கொள்ளக் கடந்த சில ஆண்டுகளின் வியாபார இலாப நட்டக் கணக்கு, இருப்புநிலைக்குறிப்பு ஆகியவற்றைக் கேட்டுப்பெற்று ஆராய வேண்டும். பொதுக் கம்பெனியாக இருப்பின் தொழில் தொடக்கச் சான்று (Certificate of Commencement of business) என்ற ஆவணத்தையும் பரிசீலிக்க வேண்டும்.

கம்பெனியும் கடன்வாங்கும் அதிகாரமும்

அமைப்பு முறையேடு, செயல்முறை விதிகள் ஆகியவற்றில் கம்பெனியின் கடன் வாங்கும் அதிகாரம்பற்றிய செய்திகளைக் காணலாம். வியாபாரம் அல்லது தொழிலில், ஈடுபட்டுள்ள கம்பெனிக்குக் கடன்வாங்கும் அதிகாரம் அதன் தலைமையிலேயே தொக்கி நிற்கிறது. கம்பெனிச் சட்டத்தின் பிரிவு 293 (1) (d) பொதுக் கம்பெனியொன்று தனது பொதுக் கூட்டத்தில் இசைவு பெற்றாலன்றித் தன் செலுத்திய முதல், வேறு நோக்கமெதற்கும் ஒதுக்கப்படாத காப்பு (Free Reserves) ஆகியவற்றின் கூட்டுத் தொகையைவிட அதிகமாகக் கடன்பெறலாகாது என்று விதித்துள்ளது. இதிற் குறிப்பிடப்பட்ட கடன் ஆறுமாதத்திற்கு மிகாத தற்காலிகக் கடன்களைச் சுட்டாது. மேற்கூறிய பிரிவில் குறிப்பிட்ட தொகைக்குமேல் கம்பெனி கடன்வாங்கினால் அத் தொகை மீறிய அளவுக்குக் கடன் செல்லாததாகும். கடன் கொடுத்தவர் தான் நல்லெண்ணத்துடன் அந்த எல்லைமீறியது அறியாதநிலையில் கடன் கொடுத்ததாகச் சான்றளித்தால் மட்டுமே கடன் செல்லுபடியாகும்.

கம்பெனியின் இயக்குநர் அவை தீர்மானம் இயற்றிக் கடன் பெறுவது சாதரணமாகக் கடைப்பிடிக்கப்படும் முறையாகும். ஒவ்வொரு முறையும் கடன்வாங்கும் பொழுது தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். இயக்குநர் அவை கடன்வாங்கும் அதிகாரத்தை இயக்குநர் குழு (Committee of Directors) வினர்க்கு வழங்கலாம். கடன்வாங்கக்கூடிய தொகையின் உச்சவரம்பு, பிணையாகக் கொடுக்கக்கூடிய சொத்து முதலிய செய்திகளும் தீர்மானத்தில்

குறிப்பிடப்படவேண்டும். கம்பெனி வாங்கவிருக்கும் கடன், சட்டம் குறித்த வரம்பிற்குள் அமைந்துள்ளது என்ற சான்றிதழையும் இயக்குநரிடமிருந்து வங்கியர் பெறுவார். இயக்குநர் தமக்குத் தரப்பட்டுள்ள அதிகார வரம்புமீறி கடன் வாங்கினுல், அதைக் கம்பெனி பொதுக்கூட்டம் சிறப்புத்தீர்மானம் இயற்றி அனுமதித்து அக்கடனே முறையாகப் பெற்றதாக ஆக்கலாம், ஆனுல் கம்பெனியின் வரம்புக்கும் மீறி வாங்கியக் கடன்களைக் கம்பெனி பொதுக்கூட்டம் ஆமோதித்தால்கூட முறையான கடனுக ஆக்கமுடியாது. ஏனெனில் அக்கடன் துவக்கத்திலிருந்தே செல்லாநிலேயது (void) ஆகிறது.

அடைமானம், பற்றுப் பொறுப்பு பதிவுசெய்தல் (Registration of Mortgages and Charges)

இந்தியக் கம்பெனிச்சட்டம் பிரிவு 125இன்படி குறிப்பிட்ட சிலவகை அடைமானம், பற்றுப் பொறுப்பு கம்பெனிப் பதிவாளரிடம் பதிவுசெய்யப்படுதல் வேண்டும். உண்டாக்கிய முப்பது நாட்களுக்குள் இவை பதிவு செய்யப்படாவிட்டால் கடனுளர், கலேப்பாளரைப் பொறுத்தவரையில் இந்த அடைமானம் அல்லது பற்றுப்பொறுப்பு செல்லா நிலேயது (void) ஆகும். இந்நிலேயில் கடன் பிணேயிலா தனிப்பட்ட கடன் போன்ற தன்மையதாகும். பதிவுமுறைச் சட்டப்படியும் நிலேயியல் சொத்து (immovable property) மீதான அடைமானம் அல்லது பற்றுப்பொறுப்பு பதிவு செய்யப்படவேண்டும். பதிவு செய்யாவிடில், பின்னர் வில்லங்கம் ஏற்படுத்தும் நபர் செய்யும் பதிவின் விளேவாக முதலில்வில்லங்கம் ஏற்படுத்தியவருடைய உரிமைக்கு முன் இரண்டாமவர் உரிமை பெறுவார். எனவே வங்கியர் அடைமானம், பற்றுப் பொறுப்பின் மீது கடனளித்தால் அதை அவசியம் கம்பெனிப் பதிவாளரிடம் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்ரும் நபர்கள் இந்த வில்லங்கம் இருப்பதை அறிவதாகச் சட்டம் கருதும்.

கீழ்க்காணும் பற்றுப்பொறுப்பு அவசியம் பதிவு செய்யப்பட வேண்டும்.

(i) கடன்பத்திர வெளியீட்டுக்கு ஈடாக அமையும் பற்றுப் பொறுப்பு.

(ii) கம்பெனியின் அழையாப்பங்கு முதல் மீதான பற்றுப் பொறுப்பு.

(iii) எங்கு அமைந்திருப்பினும் நிலேயியல் சொத்தின் மீதான பற்றுப்பொறுப்பு'

(iv) கம்பெனியின் ஏட்டுக் கடன்கள் (book debts) மீதான பற்றுப்பொறுப்பு.

(v) கம்பெனியின் அசையும் சொத்தின் மீதான அடுகு அல்லாத பற்றுப்பொறுப்பு

(vi) கம்பெனியின் வணிகச்சரக்கு இருப்பையுஞ் சேர்த்துப்பிற சொத்தின்மீதான இழைவுறு பற்றுப்பொறுப்பு (Floating Charge)

(vii) அழைக்கப்பட்ட ஆனுல் செலுத்தப்படாத் தொகை மீதான பற்றுப் பொறுப்பு.

(viii) கப்பல் அல்லது கப்பலில் ஒரு பங்கின் மீதான பற்றுப் பொறுப்பு.

(ix) தொழில் நன்மதிப்பு, காப்புரிமை, உரிமம், வணிகக்குறி நூலுரிமை மீதான பற்றுப் பொறுப்பு.

வங்கியர் அளிக்கும் கடனுக்குப் பிணையாகப் பெறுவது இழைவுறு பற்றுப் பொறுப்பாகவோ அல்லது நிலேத்த பற்றுப் பொறுப் பாகவோ அமையலாம். கம்பெனியின் எல்லாச் சொத்துகள் மீதும் சாட்டப்படும் பொறுப்பு இழைவுறு பற்றுப் பொறுப்பு (Floating charge) ஆகும். இந்நிலேயில் அச் சொத்துகளேக் கம்பெனி விருப்பம் போல் பயன்படுத்திக் கொள்ளலாம்; விற்கவும் செய்யலாம்; அடைமானமாகக் கொடுக்கலாம். ஆனுல் கம்பெனி முறிந்து போனுலோ அல்லது பற்றுப் பொறுப்பு நிலேத்த பற்றுப் பொறுப்பாக (Fixed charge) மாறினுலோ இச் சொத்துகளேக் கம்பெனி விருப்பம் போல் கையாள முடியாது. பற்றுப் பொறுப்பு தாரர்களின் உரிமைகள் முதலில் நிறைவேற்றப்பட வேண்டும். கம்பெனியின் சொத்துகள் மீது முன்னரே பற்றுப் பொறுப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்று தெரிந்து கொள்ளல் அவசியம். அப்படியிருந்தால் வங்கியர் உண்டாக்கும் பற்றுப் பொறுப்பு இரண்டாம் நிலேயில்தான் நிற்கும்.

தனிக் கம்பெனிகளுக்குக் கடனளிப்பதில் எச்சரிக்கை

தனிக் கம்பெனிகளுக்குக் கடன் அளிக்கும் வங்கியர் பொதுக் கம்பெனிக்கும் கடன் அளிக்கும்போது இருப்பதைவிடக் கூடுத லான எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று பேசினேம். இதற்குக் காரணம், பெரும்பாலும் தனிநபர் வணிகம் செய்யும் போது ஏற்படும் வரையறுப் பொறுப்பிலிருந்து தப்பவே, தனிக் கம்பெனிகளாகத் தொழிலமைப்பை மாற்றியமைக்கின்றனர் இங்ஙனம் தனிவணிகர் தனிக் கம்பெனியொன்று துவங்கினுல் தனி

வணிகச் சொத்து முழுவதும் தனிக் கம்பெனிக்கு விற்கப்பட்ட தாகச் சட்டம் கொள்ளும். கடனுளர்களை மோசடி செய்யச் சில தனிவணிகர்கள் இந்த தொழிலமைப்பு மாற்றத்தைச் செய்வ துண்டு. இம்மாற்றமே நொடிப்பு நிலைச்செயல் (Act of insolvency) எனக்கருதப்பட்டு, அந்நபர் மீது நொடிப்புநிலை நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடும். பின்னர் அந்நபர் நொடித்தவர் எனத் தீர்ப்பளிக்கப்பட்டால் அவர் கடந்த இரு ஆண்டுகளில் தமது சொத்துக்களை மாற்றம் செய்தது அனைத்தும் சொத்தாட்சி அதிகாரியைப் பொறுத்தவரை செல்லா நிலையது ஆகும். நொடிப்பு நிலைச்செயல் புரிந்த நாள் முதல் அந்நபர் செய்த எல்லா நட வடிக்கைகளும் செல்லா நிலையது ஆகி, அத்தேதியில் அந்நபர் பெயரில் இருந்த சொத்தனைத்தும் சொத்தாட்சி அதிகாரிவசம் சட்டமுறையாக வந்தடையும். இம்மாதிரி நபர் ஏற்படுத்தியுள்ள தனிக் கம்பெனிக்கு வங்கியர் கடனேதும் தந்திருந்தால் அதைத் திருப்பிப்பெறுவது கடினம். ஏனெனில் பிணையமாகக் கொடுக்கப் பட்ட சொத்து சொத்தாட்சி அதிகாரிவ்சம் சேர்ந்துவிடும். இவ் வகைக் கம்பெனிகளுடன் வங்கியர் தொடர்பு கொள்ளுவதை எச்சரிக்கைசெய்யும் வகையில் அமைந்த அண்டர்வுட் (Underwood) வழக்கையொட்டி வங்கியர் உலகில் இதை அண்டர்வுட் அபாயம் (Underwood Danger) என்று வழங்குவர்.

பள்ளி, கல்லூரி, மன்றம், சங்கம், அறநிலையம் போன்ற வியாபாரத்தில் ஈடுபடாத 'நபர்' களும் வங்கியரிடம் கணக்குத் துவங்க விரும்பலாம். இவை கூட்டுருவாக்கப்படாமலிருப்பின் சட்டமுறையாகத் தனியாக 'ஆள்' என்று கருதப்படமாட்டா. எனவே இவற்றிற்கு ஒப்பந்தம் செய்துகொள்ளும் தகுதி கிடை யாது. ஆனுல் இவை கூட்டுருவாக்கப்பட்டால் சட்டமுறையாகத் தனித்த ஒரு ஆள் போன்று கருதப்படும். ஒப்பந்தத் தகுதியும் பெறும். பிறர் இவற்றின் மீது வழக்குத் தொடரவும், இவை பிறர் மீது வழக்குத் தொடரவும் முடியும். எனவே, கணக்கு ஆரம்பிக்கு முன் இவை பதிவுசெய்யப் பட்டிருக்கின்றனவா என்று வங்கியர் நோக்க வேண்டும்.

கூட்டுருவாக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட சங்கம் செயல்முறை விதிகள்படியே செயல் படவேண்டும். ஆகவே வங்கி யர் கணக்குத் துவங்க வரும்பும் சங்கத்தின் செயல்முறை விதிகளை நன்கு படித்தறிய வேண்டும்.

தம்மை வங்கியராக நியமிக்க இயற்றப்பட்ட நிருவாகக் குழுவின் தீர்மானத்தைப் பெற்று, செயல்முறை விதிகளின்படி தம் நியமனம் அமைந்துள்ளதா என்றறிய வேண்டும். செயல்முறை

விதிகளின் சான்றுறுதியளிக்கப்பட்ட நகலொன்றைத் தம்து தக் வலுக்கு வைத்துக் கொள்ளவேண்டும். யார் யார் கணக்கின் மீதான நடவடிக்கைகளை மேற்கொள்வர் என்று தெரிந்துகொள்ள வேண்டும். அவர்களுக்குத் தரப்பட்டுள்ள அதிகாரத்தின் எல்லை என்ன என்பதைத் திட்டவட்டமாக அறிதல் அவசியம். அதிகாரம் பெற்ற நபர் பதவியிலிருந்து விலகிவிட்டால் அல்லது இறந்துவிட்டால் கணக்கை யார் தொடர்ந்து நடத்தி வருவது என்ற செய்தி பற்றியும் தெளிவுபெற வேண்டும்.

இவ்வகை வாடிக்கையர் வணிகத்தில் ஈடுபடுவதில்லையாதலால், சங்கத்தின் தேவைக்காக கடன் வாங்கும் அதிகாரம் செயல்முறை விதிகளில் வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டாலன்றி, கடன் வாங்க முடியாது. கடன் வாங்கும் அதிகாரம் சங்கத்திற்கு அளிக்கப்பட்டிருந்தால் வாங்கக் கூடிய அளவு, சொத்துக்களைப் பிணையம் வைக்கும் முறை, கடன் பெறுவதன் நோக்கம் முதலியவற்றை ஆராய்ந்து, நிருவாகக் குழுவின் கடன்கோரும் தீர்மானம் முறையாக உள்ளதா என்றும் ஆராய்ந்து பின்னரே கடன் அளிக்கவேண்டும்.

சங்கக் கணக்கினை நடத்திவரும் அதிகாரம் பெற்றநபர் தமது, சொந்தக் கணக்கினையும் அதே வங்கியரிடம் வைத்திருந்தால் சங்கத்தின் பணம் சொந்தக் கணக்கில் செலுத்தப்படாமல் வங்கியர் பார்த்துக் கொள்ளவேண்டும்.

தன்னாட்சி ஆட்சியங்கள் (Local Authorities) நகராண்மைக் கழகம் (Municipal Corporation), பஞ்சாயத்து ஒன்றியம், துறைமுக நிருவாக ஆணையம் போன்ற அமைப்புக்கள் வங்கியரிடம் கணக்கு வைக்கக் கோரலாம். பெரும்பாலும் தனிச் சட்டங்களால் இவ்வகை அமைப்புகள் உருவாக்கப் பெறுவதால், வங்கியர் அச்சட்டங்களை நுட்பமாக ஆய்ந்து இவற்றின் செயல் முறைபற்றி அறிய வேண்டும். இவற்றிற்கு மேல்வரைப்பற்று (Overdraft) அளிப்பதில் மட்டும் வங்கியர் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இவற்றின் கடன்பெறும் அதிகாரம் சட்டத்திலேயே எழுதப்பட்டிருந்தாலும், சட்டத்தையொட்டிச் செய்யப்படும் விதிகளனைத்தையும் வங்கியர் அறிந்திருந்தால்தான் சட்டம் குறித்த எல்லைக்குள் இக்கடன் வருமா என்று உறுதியாக அறிந்துகொள்ள முடியும். இவ்வகை அமைப்புகள் தமது கணக்கில் கணிசமான இருப்பு வைத்திருக்கக் கூடிய வாய்ப்பைப் பெற்றிருப்பதால் வங்கியர் இவற்றை வாடிக்கையராக ஏற்றுக் கொள்வர். மற்றும் பெரிய அமைப்புகளை வாடிக்கையராகப் பெறுவதே வங்கியருக்கு ஒரு விளம்பரமாகவும் அவரது திடநிலைக்குச் சான்றாகவும் அமைகிறது.

6. காசோலை

(Cheque)

வங்கி என்ற சொல்லைக் கேட்டதும் பலருக்கு மனக்கண்முன் தோன்றக்கூடிய பொருள் காசோலை தான். இதற்குக் காரணம் வங்கியில் செலுத்தும் பணத்தைத் திருப்பிப்பெற காசோலை எழுத வேண்டியிருக்கிறது. வங்கியின் இலக்கணம் பற்றிப் பேசியபோது நாம், செலுத்திய பணத்தைக் காசோலை விடுத்துத் திருப்பிப்பெற வகை செய்யும் நிலையம் வங்கி என்றும் கண்டோம். எனவே வங்கிக்கும் காசோலைக்கும் எவ்வளவு நெருங்கிய தொடர்பு உள்ளது என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

காசோலை அல்லது செக் என்பது யாது? அதன் தன்மை யாது? அது எங்ஙனம் பழக்கத்தில் வரலாயிற்று? அதன் பயன் என்ன? என்பன போன்ற கேள்விகளுக்கு விடை காண்போம்.

பல நூற்றுண்டுகளுக்கு முன் இங்கிலாந்து நாட்டில், அரசு அலுவல் குறித்து செலுத்தப்பட வேண்டிய பணத்தை அரசின் கருவூலத்திலிருந்து பெற்றுக் கொள்ள பண ஆணைகள் வழங்கப்பட்டு வந்தன. இந்த ஆணையைக் கருவூலத்தில் கொடுத்தால் அதிற் குறித்த பணத்தைக் கருவூல அதிகாரி தருவார். எனவே அக்கால பொற்கொல்ல வங்கியர் (goldsmith bankers), இந்த ஆணையைத் தாராளமாக ஏற்றுக்கொண்டு உடனே தள்ளுபடி செய்து பணத்தை அளித்துவந்தனர். பின்னர் தாம் அந்த ஆணையைக் கருவூலத்தில் சேர்ப்பித்து உரிய பணத்தைப் பெற்றுக் கொண்டனர். இந் நடவடிக்கை பல மாறுதல்களுக்கு உள்ளாகி இன்று காசோலை முறை வடிவமாக அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

காசோலையின் நன்மைகள்

பணத்தைச் செலுத்துவதற்கு மிக எளிதான சாதனமாக அமைவது காசோலை. பெருந் தொகையாக இருப்பினுஞ் சரி, மிகச்

சிறிய தொகையாக இருப்பினுஞ் சரி, குறிப்பிட்ட அளவு தொகைக்கு ஒரே காசோலை எழுதிச் செலுத்துகை செய்யலாம். காசோலையைக் கீறுவதன் வழி செலுத்துகை மேலும் பாதுகாப்பாகச் செய்யப்படுகிறது. பணத்தைச் செலுத்தும்போது ஏற்படக் கூடிய நட்டங்களும், ஆபத்தும் பேரளவுக்குத் தவிர்க்கப்படுகிறது. செலுத்திய பணத்துக்குச் சான்று வங்கியர் கணக்கு ஏடுகளில் அமைவதால் தனியாக இரசீது தேவைப்படுவதில்லை. இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் வாடிக்கையர் விடுத்த காசோலை செலுத்தப்பட்டபின் அவரிடமே திருப்பியளிக்கப்படும். செலுத்து கைக்குச் சான்றாக அவர் அதனைப் பயன்படுத்தலாம். காசோலை திருட்டுப் போய்விட்டால் அல்லது காணமற் போய்விட்டால் வங்கியருக்கிச் செலுத்துகை நிறுத்தலாணை (Stop payment order) அனுப்பி உரிமையற்றவர் அதன்மீது பணம்பெருமல் பாதுகாக்க லாம். பணம் காணமற் போனல் அதைக் கண்டுபிடிப்பது எளிதல்ல.

காசோலைப் பழக்கம் வளராக் காரணம்

இவ்வளவு நன்மைகளிருந்தும் நம் நாட்டில் காசோலைப் பழக்கம் (Cheque habit) அதிகமாகப் பரவவில்லை. இதற்குப் பல காரணங்களுண்டு. அண்மைக் காலம்வரை நம் நாட்டில் வங்கி களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்து வந்தது. நகர்ப் புறங்கள்லாத இடங்களில் வங்கிகள் மிகக் குறைவாக இருந்தன. கடந்த சில ஆண்டுகளாக, குறிப்பாகப் பதினன்கு பெரும் வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப் பெற்றது முதல் வங்கி வசதியற்ற பல்லாயிரக்கணக்கான கிராமங்களில் வங்கிகளின் கிளைகள் திறக்கப் பெற்று வருகின்றன. இன்றும் வங்கிகள் பெரும்பாலும் ஆங்கிலத் திலேயே தமது நடவடிக்கைகளைச் செய்து வருகின்றன. முப்பது விழுக்காடு அளவே எழுதப் படிக்கத் தெரிந்த மக்கள் உள்ள நம் நாட்டில் இந்த மொழிச் சிக்கலினலும் வங்கியைப் பயன்படுத்து வோர் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. வங்கியில் செலுத் தினல் பணம் பாதுகாப்பாக இருக்கும் என்ற எண்ணம் அண்மைக் காலம்வரை வேரூன்றவில்லை. வைப்புக் காப்பீட்டுக் கூட்டுரு (Deposit Insurance Corporation) அமைக்கப் பெற்றதிலிருந்து இந்த அச்சம் நீங்கி வருகிறது. மக்கள் இன்னமும் காசோலையின் நன்மைகளை முழுதாக உணரக்காணேம். பெரிய நிறுவனங்கள் கூட சில நேரங்களில் காசோலையைப் பணத்திற்குச் சமமாக ஏற்கத் தயங்குகின்றன. மற்றும் பல வங்கிகளில் காசோலையை மாற்ற நீண்ட நேரம் காத்துக் கிடக்க வேண்டியுள்ளது. வங்கிமுறை வளர்ந்துள்ள மேற்கு நாடுகளில், சில நொடிகளில் காசோலையை மாற்றும் வசதியுண்டு.

காசோலைப் பழக்கத்தை மக்களிடையே பரப்பப் பல திட்டங்களை மேற்கொள்ளலாம். குறிப்பிட்ட அளவுக்கு மேற்பட்ட தொகையைச் செலுத்தவும், பெறவும் அரசினர் காசோலையைப் பயன்படுத்த வேண்டும் என்று விதிக்கலாம். காசோலையைச் சில நொடிகளில் மாற்றிக் கொடுக்க வங்கிகளில் வகை செய்யலாம். மக்களுக்கு வசதியான நேரத்தையொட்டி வங்கி வேலை நேரத்தை அமைக்கலாம். சேமிப்புக் கணக்கின்மீது காசோலை விடுக்க அனுமதி தரலாம். நாடெங்கும் முக்கிய ஊர்களில் தீர்வக (Clearing House) ங்களை ஏற்படுத்தி விரைவாகக் காசோலையை வசூல் செய்ய வசதி உண்டாக்கலாம். வசூல் கட்டணங்களை முடிந்த அளவு குறைவாக வைத்திருக்கலாம். வட்டாரத்திலுள்ள முக்கிய மொழிகளில் காசோலைகளை அச்சிட்டு, மக்கள் அம்மொழிகளில் எதனையும் காசோலை எழுத அனுமதிக்கப் பெறலாம். வங்கியின் நடவடிக்கைகள் முடிந்தவரை மக்களுக்குப் புரியும் மொழியில் அமைந்திருப்பது வங்கிப்பழக்க (banking habit)த்திற்கும் ஆக்கமளிக்கும்.

காசோலையின் இலக்கணம்

மாற்று முறையாவணச் சட்டம் (Negotiable Instruments Act) *1881*, பிரிவு 6 காசோலையின் இலக்கணம் தருகிறது. கோரிலன்றிச் செலுத்தப்படாத முறையில், குறிப்பிட்ட ஒரு வங்கியர் மீது எழுதப்பட்ட மாற்றுச்சீட்டு (Bill of Exchange) காசோலை எனப்படும். அதாவது குறிப்பிட்ட ஒரு வங்கியருக்கு வரையப்படுவதும், காட்டிக் கோரும்போது அந்த வங்கியர் பணங்கொடுக்க வேண்டியதாகவும் உள்ள மாற்றுச்சீட்டு காசோலை என்று அறியப்படும். இந்த இலக்கணத்தைத் தெளிந்து அறிவதற்கு மாற்றுச் சீட்டு என்றால் என்ன என்பதைக் காணவேண்டியிருக்கிறது. மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 5 இல் மாற்றுச்சீட்டின் இலக்கணம் தரப்பட்டுள்ளது.

குறித்த நபருக்கு அல்லது அவரது உத்தரவுப்படிக்கு அல்லது கொணர்பவருக்கு குறித்த தொகையைக் கொடுக்குமாறு ஒரு நபருக்கு எழுதும் நிபந்தனையற்ற உத்தரவைக் கொண்டதும் எழுதிக் கொடுப்பவரால் கையொப்பமிட்டுள்ளதுமான முறையாவணம் மாற்றுச்சீட்டு எனப்படும். மாற்றுச்சீட்டின் இலக்கணத்தை இணைத்துக் காசோலையின் இலக்கணத்தைப் புனைந்தால் கீழ்க்கண்டவாறு அமையலாம். குறித்த நபருக்கு அல்லது அவரது உத்தரவுப்படிக்கு அல்லது கொணர்பவருக்கு, காட்டிக் கோரும் போது குறித்த தொகையைக் கொடுக்குமாறு, குறிப்பிட்ட ஒரு

வங்கியருக்கு எழுதும் நிபந்தனையற்ற உத்தரவைக் கொண்டதும் எழுதிக்கொடுப்பவரால் கையொப்பமிட்டுள்ளதுமான முறையாவணம் காசோலை எனப்படும்.

காசோலை, மாற்றுச்சீட்டு, கடனுறுதிச்சீட்டு ஆகிய மூன்றும் மாற்றுமுறையாவணங்கள் (Negotiable Instruments) என்று அழைக்கப்படுகின்றன. மாற்றுமுறையாவணம் என்றால் என்ன என்பதை இத்தருணத்தில் அறிந்து கொள்ளுதல் நன்று.

எந்த சட்டத்திலும் மாற்றுமுறையாவணத்தின் இலக்கணம் தரப்படவில்லை. கொணர்பவருக்கு அல்லது உத்தரவுபெற்றவருக்குத் தொகையைச் செலுத்தவேண்டிய கடனுறுதிச் சீட்டு (promissory note), மாற்றுச் சீட்டு (Bill of Exchange)அல்லது காசோலையே மாற்று முறையாவணம் எனப்படும் என்று மாற்று முறையாவணச் சட்டம் பேசுகிறது. இதன் வழி இம்மூன்று முறையாவணங்களும் இயற்றிய சட்டப்படி மாற்று முறையாவணங்களாகும் என்பது மட்டும் புலனாகிறது. வியாபார வழக்கில் அரசினர் கடனுறுதிச் சீட்டு (Government Promissory Note), பட்டுவாடா ஆணை (Delivery Order), இரயில்வே இரசீது (Rail Way Receipt), இலாபஈவுச் சீட்டு (Dividend Warrant) முதலியனவும் மாற்றுமுறையாவணங்களாகக் கருதப்படுகின்றன.

மாற்றுமுறையாவணத்தின் இலக்கணம்

நல்லெண்ணத்துடன் மறுபயன் (value) பெறும் பொருட்டு, கொடுப்பவருடைய உரிமையில் குறைபாடு இருந்திருப்பினும், அதைப் பெறுபவருக்கு முழு உரிமையளிப்பது மாற்று முறையாவணமாகும். எந்த ஒரு முறையாவ்ணம் (instrument) ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு மாற்றித்தரக் கூடியதாகவும், மாற்றித் தருபவருடைய உரிமையைவிட மாற்றிப் பெறுபவருக்குச் சிறந்த உரிமையை அளிக்கக் கூடியதாகவும் அமைகிறதோ அது மாற்று முறையாவ்ணமாகும். அதாவது, மாற்று முறையாவணத்திற்கு இரண்டு தனித் தன்மைகளுண்டு. ஒன்று, அதனை உரிமை மாற்றித் தரமுடியும் - குறிப்பிட்டவரிடம் சேர்ப்பித்தோ அல்லது மேலெழுதி சேர்ப்பித்தோ உரிமை மாற்றம் செய்யலாம். இரண்டு, நல்லெண்ணத்துடன் முறையாவணத்தைப் பெற்றவர் முழு உரிமை பெறுகிறார். தமக்கு முன் முறையாவணத்தை வைத்திருந்தவர் உரிமையற்றவராயிருந்தால் கூட, அச் செய்தி அறியாமல், மறுபயனுக்காக, நல்லெண்ணத்துடன், முறையாவணம் முதிர்வடையுமுன் ஒருவர் அதைப் பெற்றால், பெற்றவர் முழு உரிமையடைகிறார்.

இங்ஙனம் முறையாவணத்தைப் பெற்றவரை 'முறைப்படி உடைய வர்' (Holder in due course) என்று அழைப்பர்.

ஒருவகையில் கூறினால், மாற்று முறையாவணம் பொதுச் சட்ட விதிக்கு விலக்காக அமைகிறது எனலாம். பொதுவாக, ஒருவர் தனக்குள்ள உரிமையைத்தான் பிறருக்கு மாற்றித் தரமுடியும்; தனக்குள்ள உரிமையை விடச்சிறந்த உரிமையைப் பிறருக்கு மாற்றித்தர இயலாது. எடுத்துக் காட்டாக 'அ' என்பவர் ஒரு மோதிரம் வைத்திருப்பதாகக் கொள்ளுவோம். அவரே அம் மோதிரத்தின் உண்மையான உரிமையாளர் என்றும் கொள்ளுவோம். அம் மோதிரத்தை 'இ' என்பவர் திருடிவிடுகிறார். அவருக்கு மோதிரம் உரிமையாகிவிடுமா? ஆகாது. ஏனெனில் உரிமையாளரின் இசைவின்றிக் கள்ளத்தனமாய் பொருளைக் கவர்ந்துள்ளார். திருடிய மோதிரத்தை 'இ' 'உ' என்பவருக்கு விற்று விடுகிறார் என்று கொள்வோம். 'உ' மோதிரத்திற்கு உரிமையாளர் ஆவாரா? ஆகமாட்டார். 'அ' என்னும் உண்மை உரிமையாளர் எந்தத் தருணத்திலும் 'உ' என்பவரிடமிருந்து தம் மோதிரத்தை திருப்பிப் பெறலாம். பொருளைத் திருடிய 'இ' என்பவருக்குப் பொருள் மீது உரிமை ஏதும் கிடையாது. ஆகையால் அவர் 'உ' என்பவருக்கு உரிமை ஏதும் தரமுடியாது. இதுதான் சட்டத்தின் பொது விதியாகும். மாற்று முறையாவணம் இப்பொது விதிக்கு விலக்காகும். மேற்கண்ட எடுத்துக் காட்டில் 'உ' என்பவர் நல்லெண்ணத்துடன், மறுபயன் கருதி, முறையாவணம் முதிருமுன், 'இ' என்பவர் உரிமையற்றவர் என்று அறியாமல், ஒரு மாற்று முறையாவணத்தைப் பெற்றிருந்தால் அவர் ('உ' என்பவர்) சட்டப்படி முழு உரிமை பெறுகிறார். இந்த வேறுபாடுதான் மாற்று முறையாவணத்தைப் பிற அசைவியல் சொத்துகளினின்று பிரித்துக் காட்டுகின்றது. முறைப்படி உடையவர், தன் பெயரிலேயே முறையாவணத்தின் உரிமைபற்றி வழக்குத் தொடுத்து செலுத்தும் பொறுப்பு உடையவர்களிடமிருந்து தொகையைப் பெறும் உரிமை யுள்ளவராவார்.

இனி காசோலையின் தன்மையை நோக்குவோம்.

காசோலை எழுத்தால் அமையும் ஆவணமாகும். எனவே வாய்மொழியால் அமையும் ஆணை ஏதும் காசோலை என்றநிலையைப் பெற முடியாது. எதைக் கொண்டு எழுதுவது? பேனாவால் எழுதப் படுதல் அவசியமா? பென்சிலால் எழுதக் கூடாதா? என்ற கேள்விகள் எழலாம். வங்கியர் தமது நன்மை கருதியும், வாடிக்கையர் நன்மை கருதியும், காசோலைகளைப் பென்சிலால் எழுதஅனுமதிப்பதில்லை. பென்சிலால் எழுதப்பட்டதை எளிதாகத்

திருத்த முடியுமாதலால் மோசடிகள்நேர வாய்ப்புள்ளது. எனவே காசோலை அச்சில் அமையலாம்; தட்டெழுத்தில் அமையலாம்; அல்லது பேனாவில் எழுதப்படலாம் என்று வங்கியர் விதிக்கின்றனர். இவ்வாறு அமைந்த காசோலையில் திருத்தம் ஏதும் செய்யப்பட்டிருந்தால் அதை எளிதில் கண்டுபிடித்துவிடலாம்.

காசோலை அல்லது மாற்றுச்சீட்டில் நிபந்தனையற்ற உத்தரவு (unconditional order) ஒன்று இருக்கவேண்டும் என்று சட்டம் பேசுகிறது. நிபந்தனையற்ற உத்தரவு என்றால் என்ன? காசோலை மீதான தொகையைத் தருவதுடன் கூட வேறு எந்தச் செயலையும் வங்கியர் செய்யவேண்டும் என்று வரைபவர் (Drawer) குறிப்பிட்டால் உத்தரவு நிபந்தனையற்றதாக அமையாது. உதாரணமாக இத்துடன் இணைக்கப்பட்ட இரசீதைக் கையொப்பமிட்டுப் பெற்றுக்கொண்ட பின்னரே இக் காசோலைமீது பணஞ் செலுத்த வேண்டும் என்று உத்தரவில் கண்டிருந்தால், உத்தரவு நிபந்தனையற்றதாக அமையாது. ஆனால் குறிப்பிட்ட ஒரு கணக்கிலிருந்து பணஞ் செலுத்தப்படவேண்டும்; அல்லது எந்த நடவடிக்கையின் பொருட்டு காசோலை எழுதப்பெற்றது என்ற அறிவிப்பு போன்ற செய்திகளைக் காசோலை கொண்டிருந்தாலும் அது நிபந்தனையற்ற உத்தரவாகவே அமையும்.

குறிப்பிட்ட ஒரு வங்கியர்மீது எழுதப்படுவது

காசோலை எப்பொழுதும் வங்கியர்மீது தான் எழுதப்படும். எந்த வங்கியில் வரைபவர் (drawer) பணம் வைத்திருக்கிறாரோ அந்த வங்கியின்மீது மட்டுமே காசோலை எழுதலாம். காசோலை மீது வங்கியின் முகவரியும் எழுதுதல் மிக நன்று.

காசோலையில் செலுத்தப்படவேண்டிய தொகை எவ்வளவு என்று திட்டவட்டமாகக் குறிக்க வேண்டும். குறிப்பிடப்பட்ட தொகை அயல்நாட்டுச் செலாவணியில் இருந்தால் வங்கியர் வழக்கப்படி, அத்தொகைக்கு ஈடான நம்நாட்டுச் செலாவணி தரப்படலாம். செலாவணி மாற்று விகிதம் அயல்நாட்டுச் செலாவணிச்சந்தை நிலையைப் பொறுத்து அமையும். செலுத்தப்பட வேண்டிய தொகை எண்ணாலும் எழுத்தாலும் குறிக்கப்பட வேண்டும். பிழைகளைத் தவிர்ப்பதற்கு இது உதவியாக இருக்கும். தொகையை எண்ணாலும் எழுத்தாலும் குறிக்கும்போது முன்னும் பின்னும் வெற்றிடம் விடாமல் கவனித்துக்கொள்ள வேண்டும். வெற்றிடம் விட்டால் '500' என்பதை '3,500' என்று எண்ணாலும் 'ஐந்நூறு' என்பதை 'மூவாயிரத்து ஐந்நூறு' என்று எழுத்தாலும் பிறர் மாற்றக்கூடும்.

பெறுபவர் (Payee) குறிப்பிட்ட ஒரு ஆளாக இருக்க வேண்டும். 'ஆள்' என்னுஞ் சொல் தனிநபர், கம்பெனி, கூட்டுரு, சங்கம் போன்ற சட்டம் ஒப்பும் எவரையும் குறிக்கும். சிலருடைய அலுவல்நிலை குறித்து எழுதப்பட்ட காசோலையும் குறிப்பிட்ட ஒருவருக்கு வரையப்பட்டதாகவே கருதப்படும். எடுத்துக்காட்டாக பஞ்சாயத்து ஒன்றிய ஆணையர், மாநகராட்சி ஆணையர், சங்கத்தின் பொருளாளர், மன்றச் செயலர் போன்றன.

கோரியதும் தொகை செலுத்த வேண்டி உத்தரவு அமைய வேண்டும். காசோலையின் இலக்கணத்தில், கோரினுலன்றி செலுத்தப்பட மாட்டதா முறையாவணமாக அது குறிக்கப்பட்டுள்ளது. கோரியதும் (on demand) என்ற சொற்களை உத்தரவில் அவசியம் சேர்க்க வேண்டுமென்பதில்லை. வரைபவர் (drawer) முறையாவணத்தை எழுதும்போது பெயரவரை (drawee)ச் செலுத்தும்படி உத்தரவிட்டாலே அது கோரியதும் செலுத்தும்படியானதாகக் கொள்ளப்படும். காசோலை கோரியதும் செலுத்துவதாக எப்பொழுதும் அமைகிறது.

உத்தரவில், வரைபவர் (drawer) தன் கையொப்பத்தை இட வேண்டும். வங்கியரிடம் தந்துள்ள மாதிரிக் கையெழுத்து (specimen signature) போன்றே காசோலையில் இடும் கையெழுத்தும் அமைய வேண்டும்.

வாடிக்கையர் தமது வங்கியர்மீது காசோலை வரையுமுன், கணக்கில் போதுமான பணம் உள்ளதா என்று கவனிக்க வேண்டும். கணக்கில் உள்ள இருப்புக்குமேல் காசோலையில் குறிப்பிடும் தொகை இருந்தால், வாடிக்கையர் ஏமாற்றிய குற்றத்திற்கு ஆளாகலாம். எனவே மேல்வரைப்பற்று (overdraft) அல்லது கடன் எதற்கும் ஏற்பாடு செய்தபின்னரே வாடிக்கையர் தாம் கணக்கில் செலுத்திய தொகைக்கும் அதிகமான தொகைக்கு காசோலை எழுதலாம்.

காசோலையை வங்கியர் தமது வாடிக்கையருக்குத் தந்து, பணத்தை எடுப்பதற்கு அக்காசோலைகளை மட்டுமே பயன்படுத்தும்படி வேண்டுகிருர், இதனுல், வாடிக்கையர் தம் விருப்பப்படி ஒரு வெற்றுத்தாளைக் காசோலையாகப் பயன்படுத்த முடிவதில்லை. சட்டமுறையாக நோக்கினுல், இலக்கணப்படி வரையப்பெற்ற எந்த ஒரு காசோலையையும் வங்கியர் மதிக்கத்தான் வேண்டும் அதை மறுத்தால் தொல்லைக்கு ஆளாகலாம். இருந்தாலும், வங்கியருடன் கணக்குத் துவங்கும்போது வாடிக்கையர் செய்து

கொள்ளும் சிறப்பு ஒப்பந்தப்படி வங்கியர் தரும் காசோலை இதழ்களை மட்டுமே வாடிக்கையர் பயன்படுத்தலாம்.

வங்கியர் தரும் காசோலை இதழ் அச்சிடப்பட்டிருக்கிறது. இதைப் பயன்படுத்துவதில் பல நன்மைகளுண்டு. தனியாகத் தயாரிக்கப்பட்ட தாளில் இது அச்சிடப்படுவதால் கருநிலைத்திருத்தம் (material alteration) ஏதும் செய்யப்பட்டால் அதை எளிதில் கண்டுபிடித்துவிடலாம். வாடிக்கையருக்கு மட்டுமே இது தரப்படுவதால் பிறர் கையில், சிறப்பாக, மோசடி செய்யக்கூடியவர் கையில் இது கிடைப்பது அரிதாகிறது. காசோலையின் இலக்கணப்படி முறையாவணம் எழுதப்படவேண்டும். வாடிக்கையர் தாமே ஒரு தாளில் எழுதும்போது முக்கிய செய்திகளைச் சட்ட முறையாகக் குறிக்காமல் விட்டுவிடக்கூடும். அச்சிட்ட காசோலையில், எல்லாச் செய்திகளுக்கும் இடம் ஒதுக்கி அவற்றை நிரப்பும் வேலை மட்டுமே வாடிக்கையருக்குத் தரப்படுகிறது. வங்கியர் தரும் காசோலை அச்சிடப்பட்டு, ஒவ்வொரு இதழுக்கும் ஒவ்வொரு எண்ணும் தரப்பட்டு இருப்பதால், காணமற்போன காசோலைபற்றி வங்கியருக்கு அறிவிக்கும்போது மிக எளிதாகக் காசோலையின் எண்ணை அறிவித்துப் பணஞ் செலுத்துவதை நிறுத்தலாம். மற்றும் வாடிக்கையரின் கையொப்பம் தெளிவாக இல்லா நிலையில், காசோலையை வரைந்தவர் யார் என்று எளிதில் கண்டுபிடிக்க அவருக்குத் தந்துள்ள காசோலை இதழ் எண்கள் வழி காசோலையை எழுதியவர் யார் என்று விரைவில் கண்டுபிடித்து விடலாம்.

காசோலைகளைத் தேதியிடுதல்

காசோலை வரைபவர் அதைத் தேதியிட வேண்டும். அதை எழுதி எத்தனை நாளாயிற்று என்று அறியத் தேதியிடுதல் உதவுகிறது. வரைபவர் தேதியிடத் தவறிவிட்டால், உடையவர் (Holder) எவரும் தேதியிடலாம். யாருமே தேதியிடாமல் ஒரு காசோலை வங்கியரிடம் மாற்றும் பொருட்டுத் தரப்பட்டால் அவர் அதைத் தேதியிடலாம் என்றாலும் பெரும்பாலும் தேதியிடாக் காசோலையை வங்கியர் மதிக்காமல் திருப்பி விடுவர். வரைபவர் குறிக்கும் தேதி அக் காசோலையை எழுதும் தேதிக்கு முன்சென்ற தேதியாகவோ அல்லது பின்வரப் போகும் தேதியாகவோ இருக்கலாம். எழுதும் தேதிக்கு முன்சென்ற தேதியைக் கொண்ட காசோலையை முன் தேதியிட்ட (ante - dated) காசோலையென்பர்; எழுதும் தேதிக்குப் பின்வரப் போகும் தேதியைக் கொண்ட காசோலையைப் பின்தேதியிட்ட (post - dated) காசோலை யென்பர். காசோலையில் காணும் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு மேற்

பட்ட காசோலையை நாட்பட்ட காசோலை (stale cheque) என்பர். சில வங்கிகள் ஆறு மாதங்கழிந்த காசோலையை நாட்பட்ட காசோலை எனக் கூறுகின்றனர். பின் தேதியிட்ட காசோலை மாற்றுச் சீட்டு (Bill of Exchange) போன்ற நிலையுடையது. குறிப்பிட்ட தேதியன்று அல்லது அதற்குப்பின் வங்கியரிடம் கொடுக்கப்பட்டால் அவர் அதன்மீது பணஞ் செலுத்துவார்.

காசோலையில் தொடர்புற்ற நபர்கள்

காசோலையை எழுதுபவர் வரைபவர் (drawer) எனப்படுகிறார். இவர் வங்கியில் கணக்கு வைத்திருப்பவர். இவரே வாடிக்கையர் என்று அறியப்படுகிறார். காசோலை எப்பொழுதும் வங்கியர் மீது எழுதப்படுகிறது. எவர் மீது எழுதப்படுகிறதோ அவர் பெயரவர் (drawee) எனப்படுகிறார். ஆகவே காசோலையைப் பொறுத்த வரையில் வங்கியர் பெயரவராக இருப்பார். எவரொருவருக்குப் பணம் தரப்பட வேண்டிக் காசோலை வரையப்படுகிறதோ அவர் பெறுபவர் (Payee) எனப்படுகிறார்.

காசோலை வரைபவர் தனது உத்தரவுக்கு அல்லது தனது உத்தரவு பெற்றவருக்குப் பணம் கொடுக்கப்படுமாறு எழுதலாம்; அல்லது குறித்த நபர் அல்லது கொணர்பவருக்கு(bearer)க் கொடுக்கப்படுமாறு எழுதலாம். பெறுபவர் எனக் குறிக்கப்படுவது ஆள்சாராப் (impersonal) பெயராக - உதாரணம்: ரொக்கம், வாடகை அமைந்தால், அக் காசோலையைக் கொடுக்கும் நபருக்குப் பணஞ் செலுத்துமாறு வங்கியருக்குக் கட்டளையிடப்பட்டதாகக் கருதப்படும். 'குறிப்பிட்ட ஆளுக்கு மட்டும்' என்று பெறுபவரை அறுதியிட்டு வரையப்பட்ட காசோலையை, மேலும் ஆவணமாற்றம் (negotiable) செய்யலாம்.

எழுத்தறிவற்ற நபர்கள் காசோலையைக் கையொப்பமிட அல்லது மேலெழுத வேண்டியிருந்தால், அவர்களது பெருவிரற்குறியைப் பெறவேண்டும்; அதை வங்கியர் முன்னிலையில் மற்றொரு நபர் சான்றுறுதி அளிக்கவேண்டும். சான்றுறுதி அளிப்பவரின் பெயர், முகவரி முதலியன தெளிவாகக் குறிக்கப்படுதல் வேண்டும். சாட்சியாக இருப்பவர் வங்கியில் பணிபுரிவரல்லாதவராக இருத்தல்நன்று.

காசோலை எழுதுவதில் பிழைகள் நேர்ந்திருப்பது வெளிப்படையாகப் புலனாகுமிடத்து அதன் செல்லுடைமை (validity) பாதிக்கப்படுவதில்லை. 'ரூபாய்கள்' என்பதற்குப் பதில் 'ரூபாய்' என்றும், வேறு எழுத்துப் பிழைகள் ஏதும் இருந்தாலும், வரைபவரின்

கருத்துத் தெளிவாக அறிந்துகொள்ளும் வகையில் காசோலை அமைந்திருந்தால் அது செல்லு நிலையது.

காசோலை சட்டமுறைப்பணம் (Legal Tender) ஆகுமா? காசோலை சட்டமுறைப் பணமாகாது. கடனுளர் (Creditor) ஒருவருக்குச் செலுத்தவேண்டிய கடனுக்குக் காசோலையை அளித்தால் அவர் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கட்டாயமில்லை (Cubitt V. Gamble). ஆனல் கடனுளர் காசோலை பெற்றுக் கொள்ள ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தால், ஒப்பந்தப்படி அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். கடனுளர் தன்தவறு அல்லது தாமதம் காரணமாக காசோலையை மாற்றத் தவறினுல் அதற்குக் கடனுளி பொறுப்பாகமாட்டார். கடனுளர் காசோலையைத் தொலைத்துவிட்ட நிலையில், வேருெருவர் அதை வங்கியரிடம் கொடுத்து, வங்கியரும் அதை 'முறைப்படி செலுத்தி'யிருந்தால், கடனுளர் பொறுப்பு சரியானமுறையில் தீர்க்கப்பட்டதாகவே கருதப்படும்.

காசோலையைப்பற்றிப் பேசும்பொழுது நாம் அடிக்கடி 'உடையவர்' (Holder), முறைப்படி உடையர் (Holder in due course) என்ற சொற்களைப் பயன்படுத்துகிறேம். இவற்றின் பொருளை அறிய முற்படுவோம்.

உடையவர்

மாற்றுமுறையாவணச் சட்டத்தின் பிரிவு 8, உடையவர் என்ற சொல்லின் இலக்கணம் தருகிறது. கடனுறுதிச் சீட்டு, மாற்றுச் சீட்டு அல்லது காசோலையொன்றைத் தன்வசம் வைத்திருக்கும் உரிமையுள்ளவரும், அதன்மீது கொடுபடவேண்டிய தொகையை உரியநபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள அல்லது மீட்டுக்கொள்ள உரிமையுள்ளவருமானவரே உடையவர் எனப்படுவார். பெரும் பாலும் இவர் பெறுபவர் (Payee) அல்லது மேலெழுத்துப் பெறுபவர் (indorsee) அல்லது கொணர்பவராக (bearer) இருப்பார். மாற்று முறையாவணம் தொலைந்தோ அல்லது அழிந்தோ போய்விட்டால் அது தொலைந்த அல்லது அழிந்த சமயம் எவருக்கு உரிமை இருந்ததோ அவரே உடையவர் ஆவார். எனவே உடையவர் எனப்படுபவர் மாற்றுமுறையாவணத்தைத் தன்வசம் வைத்திருந் தால் மட்டும் போதாது; தன்பெயரால் அதிற் குறிப்பிட்ட தொகையைப் பெறும் உரிமையும் பெற்றிருக்க வேண்டும். உதாரணமாக, தொலைந்துபோன முறையாவணத்தைக் கண் டெடுத்தவர், திருடர், பணத்தைப் பெற்றுக்கொள்வதை நீதி மன்றத்தால் தடுக்கப்பட்டவர், மேலெழுத்து (endorsement)

பொய்யாவணம் புனையப் (Forgery) பட்டிருக்கையில் அதைப் பெற்றவர் முதலியோர் வசம் முறையாவணம் இருந்தாலும் இவர்கள் உடையவர் என்ற இலக்கணத்தில் சேரமாட்டார்கள். மற்றும் முறையாவணத்தில் பெயர் காணப்படாத எவரும் உடையவராக இருக்கமுடியாது. பெயரிரவல் நடவடிக்கை (Benami transaction)கள் பற்றிய சட்டம் மாற்றுமுறையாவணங்களுக்குப் பொருந்தாது. சட்டமுறைப்படி உரிமை பெறுபவரை உடையவர் என்றே கூறவேண்டும். உடையவர் இறந்து விட்டால் அவரது சட்டமுறைப் பிரதிநிதி, நொடித்த நிலையராகி விட்டால் சொத்தாட்சி அதிகாரி (Official Receiver) ஆகியோர் உடையவர் என்று கருதப்படுவர்.

முறைப்படி உடையவர் (Holder in due Course)

முறைப்படி உடையவர் கையில் உள்ள எந்த முறையாவணமும் கள்ளக் கையெழுத்துவழி அதைப் பெற்றிருந்தாலன்றி அவருக்கு முழுஉரிமையைத் தரும். எவரிடமிருந்து முறையாவணத்தைப் பெற்றுரோ அவரது உரிமை குறைபாடு கொண்டதாக இருந்தாலும், முறைப்படி உடையவர் அதைப் பெற்றதும் அவருக்குக் குறைபாடு நீங்கிய முழுஉரிமை கிடைக்கிறது. மாற்றுமுறையாவணச் சட்டம் பிரிவு 9, முறைப்படி உடையவரின் இலக்கணத்தைத் தருகிறது. முறையாவணத்தில் குறிக்கப்பட்ட தொகை செலுத்தப்பட வேண்டியதற்கு முன், எவரிடமிருந்து அதைப்பெற்றுரோ அவருடைய உரிமை குறைபாடுள்ளது என்று நம்பக்காரணமில்லாமல், மறுபயனுக்காகக், கொணர்வருக்குச் செலுத்தப்பட வேண்டியதாக இருப்பின் அதை (கடனுறுதிச் சீட்டு, மாற்றுச்சீட்டு காசோலை) வைத்திருப்பவர், உத்தரவுக்குச் செலுத்தப்பட வேண்டியதாக இருப்பின், பெறுபவர் அல்லது மேலெழுத்துப் பெறுபவர் முறைப்படி உடையவர் ஆவார். தனக்கு முன்னதாக உள்ள நபர்களின் உரிமையிலுள்ள எல்லாக் குறைபாடுகளிலிருந்தும் முறைப்படி உடையவர் காக்கப்படுகிறுர். முறைப்படி உடையவர் என்ற நிலையைப் பெற ஒருநபர் முறையாவணம் முதிருமுன் அதன் உடையவர் ஆகியிருக்க வேண்டும்; அவர் மறுபயனுக்காக உடையவர் ஆகியிருக்க வேண்டும்; எவரிடமிருந்து தாம் அதைப் பெற்றுரோ அவர் குறைபாடுடைய உரிமையுள்ளவர் என்று அறிந்திருக்கக்கூடாது. முறைப்படி உடையவர் மேலெழுதி, ஒருவர் முறையாவணத்தை உடையவர் என்ற நிலையில் பெற்றுல் அவரும் முறைப்படி உடையவரின் உரிமைகளைப் பெறுகிறுர் (மாற்றுமுறையாவணச் சட்டம், பிரிவு 53).

மேலெழுத்து (Endorsement)

மாற்று முறையாவணத்தின் தனிச் சிறப்பில் ஒன்று எளிதில் உரிமை மாற்றம் செய்யும் வசதி பெற்றிருப்பதாகும். வணிக நடவடிக்கைகள் விரைவாக நடைபெற இவ்வசதி பெரிதும் உதவுகிறது. உரிமை மாற்றம் எங்ஙனம் செய்யவேண்டும் என்பது முறையாவணத்தின் தன்மையைப் பொறுத்தது. காசோலையை எடுத்துக் காட்டாக நோக்கினுல், அது கொணர்பவர் (bearer) காசோலையாக அல்லது உத்தரவு (order) காசோலையாக இருக்கலாம். கொணர்பவர் காசோலையாக விருப்பின் எவருக்கு உரிமை மாற்றம் செய்ய வேண்டியுள்ளதோ அவரிடம் சேர்ப்பித்த மாத்திரத்தில் அவர் (பெறுபவர்) உரிமையாளராகிறுர். உத்தரவு காசோலையாக இருப்பின், மேலெழுத்து (Endorsement)ச் செய்து குறிப்பிட்ட நபரிடம் சேர்ப்பித்தால் பெறுபவர் உரிமையாளராகிறுர். மாற்றுமுறையாவணச் சட்டம், பிரிவு 15 மேலேழுத்தின் இலக்கணம் தருகிறது. மாற்றுமுறையாவணத்தை எழுதியவர் அல்லது உடையவர், ஆவண மாற்றம் (Negotiation) செய்ய வேண்டி, எழுதியவர் என்றல்லாத நிலையில், அதன் முன்புறமோ அல்லது பின்புறமோ அல்லது அத்துடன் இணைக்கப்பட்ட ஒரு தாளிலோ கையெழுத்திடுவதை மேலெழுதுதல் என்பர்; கையெழுத்திடுபவர் மேலெழுதுபவர் எனப்படுவார். இதே நோக்கத்துடன் முத்திரையிட்ட பத்திரம் (Stamped paper) ஒன்றை மாற்று முறையாவணமாக நிறைவு செய்யப்படவேண்டும் என்ற எண்ணத்துடன் கையெழுத்திட்டாலும் அது மேலெழுதுதல் எனப்படும். பலமுறை மேலெழுதப்பட்டு மேலும் மேலெழுத முறையாவணத்தில் இடமில்லாவிடில் ஒட்டுத்தாள் (Allonge) ஒன்றைக் கூட சேர்த்து அதில் மேலெழுத்திடலாம்.

மேலெழுதலின் விளைவு

முறையாவணத்தை மேலெழுதி மேலெழுத்துப் பெறுபவரிடம் சேர்ப்பிப்பது சில சட்ட விளைவுகளையுண்டாக்கிறது. அவையாவன:

(i) மேலெழுத்துப் பெறுபவருக்கு (endorsee) முறையாவணத்தின் மீதான உரிமையும், நலனும் மாற்றித்தரப்படுகிறது.

(ii) முறையாவணம் உண்மையானது என்றும் அவருடைய மேலெழுத்துக்குமுன் அமைந்துள்ள கையொப்பங்களும் உண்மையானவை என்று மேலெழுதுபவர் உத்தரவாதமளிக்கிறுர்.

(iii) பணங் கொடுக்கும் பொருட்டு முறையாவணம் காட்டப்பட்ட போது அது அவமதிக்கப் பட்டால்தான் அந்த நட்டத்தை ஈடுசெய்ய மேலெழுதுபவர் உறுதியளிக்கிறுர்.

மேலெழுத்தின் வகைகள்

(i) வெற்று மேலெழுத்து (Endorsement in Blank)

மேலெழுதுபவர், தனது கையொப்பத்தை மட்டும் முறையாவணத்தில் இடுவாரானால் அது வெற்று மேலெழுத்து எனப்படும். எவருக்கு மேலெழுதப்படுகிறது என்று குறிக்கப்படுவதில்லை. வெற்று மேலெழுத்து செய்யப்பட்ட முறையாவணம், கொணர்பவருக்குச் செலுத்தவேண்டிய (payable to bearer) ஒன்றாக ஆகிவிடுவதால், அதை மேலும் ஆவண மாற்றம் செய்ய விரும்பினால் உரியவரிடம் ஒப்படைப்பது போதும்.

(ii) சிறப்பு மேலெழுத்து (Special endorsement)

எவர்பெயருக்கு மேலெழுத்து செய்யப்படுகிறதோ அவர் பெயர் அல்லது உத்தரவுப்படி என்று குறிப்பிட்டு அதன் கீழ் மேலெழுதுபவர் கையொப்பமிட்டால் அது சிறப்பு மேலெழுத்து எனப்படும். மணியன் என்பவர் கண்ணனுக்கு மேலெழுத விரும்புவதாக வைத்துக் கொள்வோம்.

''கண்ணன் அல்லது உத்தரவுப்படிக்கு செலுத்துக'
(ஒப்பம்) மணியன்.

சிறப்பு மேலெழுத்தை முழு மேலெழுத்து (Endorsement in full) என்றும் கூறுவதுண்டு.

'கண்ணனுக்குச் செலுத்துக''
(ஒப்பம்) மணியன்

(iii) அரைகுறை மேலெழுத்து (Partial Endorsement)

முறையாவணத்தில் குறிக்கப்பட்டுள்ள தொகையில் ஒரு பகுதி மட்டும் செலுத்தக்கோரி மாற்றம் செய்வது அரைகுறை மேலெழுத்துக்கு எடுத்துக் காட்டாகும். இது முறையாவணத்தை ஆவணமாற்றம் செய்வதாக ஆகாது; ஆனால் மேலெழுத்துப் பெறுபவருக்கு குறிப்பிட்ட தொகை மட்டும் பெற்றுக்கொள்ள அதிகாரமளிக்கிறது. சட்டப்படி, மேலெழுத்து முறையாவணத் தொகை முழுமைக்கும் இருக்கவேண்டும்.

(iv) தன் பொறுப்பில்லா மேலெழுத்து (Sans Recourse Endorsement):

முறையாவணத்தின் மீது பொறுப்பேற்க விரும்பாத மேலெழுதுபவர் (endorser), தம் மேலெழுத்துடன் ''என்னைச் சாட்டுவிக்காது'' (without recourse to me) என்ற சொற்களைச் சேர்த்து விடுவார். இதன் விளைவு, முறையாவணம் மறுக்கப்பட்டால், மேலெழுத்துப் பெறுபவரும் அவருக்குப்பின் உடையவர்களும், இவரைப்பணஞ் செலுத்தக் கோரமுடியாது. அதாவது இங்ஙனம் மேலெழுதுபவர் அம் முறையாவணத்தின் மீது பொறுப் பேற்கமாட்டார்; தொகை செலுத்தக் கோரி இவர் மீது வழக்குத் தொடர முடியாது.

(v) வரையறை மேலெழுத்து (Restrictive Endorsement)

மேலும் ஆவண மாற்றத்தைத் தவிர்க்கச் செய்யப் படும் மேலெழுத்து வரையுறை மேலெழுத்து எனப்படும். மேலெழுத்தில் கையாளப்படும் சொற்கள் மேலெழுத்துப் பெறுபவரின் மேலெழுதும் உரிமையை வரையறுப்பதாக அல்லது இல்லாமற் செய்வதாக அமையவேண்டும். எடுத்துக் காட்டாக ''முருகனுக்கு மட்டும் செலுத்துக'' அல்லது ''முருகன் அல்லது உத்தரவுப்படி வசூலுக்குச் செலுத்துக'' என்று மேலெழுத்து அமையும்.

(vi) செலவு தவிர் (Sans Frais) மேலெழுத்து

முறையாவணத்தின் மீது ஆகக்கூடிய எந்தவிதச் செலவுக்கும் பொறுப்பு ஏற்க விரும்பாதவர் செய்யும் மேலெழுத்து இது.

(vii) கடமை தவிர் (Facultative) மேலெழுத்து

உடையவர் கடமைப்படி செய்ய வேண்டியதை உரிமை விடுப்பு (Waive)ச் செய்து எழுதும் மேலெழுத்து இங்ஙனம் குறிப்பிடப்படுகிறது. உதாரணமாக, முறை யாவணம் அவமதிக்கப்பட்டால், தொடர்புற்ற நபர்கள் கிரமப்படி தம்முன் உடையவராயிருந்தவருக்கு 'அவ மதிப்பு அறிவிப்பு' (Notice of dishonour) அனுப்ப வேண்டும். கடமை தவிர் மேலெழுத்து செய்தவர், தமக்கு அவமதிப்பு அறிவிப்பு தரவேண்டுவதில்லை என்று குறித்து மேலெழுதலாம். இந்த கையில் மேலெழுத்துச் செய்த வரும் பின் உரிமை பெற்ற நபர், அவமதிப்பு ஏற்பட்ட இவருக்கு அவமதிப்பு அறிவிப்பு தரவேண்டுவதில்லை.

(viii) நிபந்தனை (conditional) மேலெழுத்து

இதனை வரை நிலை(qualified) மேலெழுத்து என்றும் குறிப்பிடுவதுண்டு. குறிப்பிட்ட நிபந்தனை நிறைவேறிய பின் காசோலை மீதான தொகை செலுத்தப்பட வேண்டும் என்று எழுதி மேலெழுத்துச் செய்தால், அந் நிபந்தனை நிறைவேறிய பின்னரே தொகைபெறும் உரிமை உண்டாகிறது. உதாரணமாக ''சென்னைச் செல்வம் கப்பல் வந்ததும் அழகன் அல்லது உத்தரவுப்படி செலுத்துக'' என்று மேலெழுத்து இருந்தால் 'சென்னைச்செல்வம்' என்ற கப்பல் வந்த பின்னரே அழகன் அல்லது அவர் உத்தரவு பெற்றவர் காசோலையைக் கொடுத்து பணம் பெற முடியும். நிபந்தனை மேலெழுத்து முறையாவணத்தின் ஆவணமாற்றுத் தன்மையை (feature of negotibility)ப் பாதிக்காது. மேலெழுதுபவர் மேலெழுத்துப் பெறுபவரின் தொகைபெறு உரிமையை நிபந்தனைக்குள்ளாக்குகிறார்.

காசோலைகளைக் கீறலிடல்

(Crossing of cheques) see IA & NI Act

பணஞ் செலுத்துமுறையை அடிப்படையாகக் கொண்டு காசோலைகளை இரு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று கீறாக் காசோலை (open cheque), மற்றொன்று கீறிய காசோலை (Crossed cheque). கீறாக்காசோலையை வங்கியர் மதிக்க முடிவு செய்தால் கல்லாப் பெட்டியிலிருந்து உடனே பணம் எடுத்துத் தருவார். ஆனால் காசோலை கீறப்பட்டிருந்தால், வங்கியர் பணத்தை வாடிக்கையருக்கு நேரடியாகச் செலுத்தமாட்டார். வாடிக்கையர் கணக்கில் பணம் வரவு வைக்கப்படும். கீறப்பட்டுள்ள காசோலை பெற்றவருக்கு வங்கியில் கணக்கு இல்லாவிடில், அவர் வங்கியில் கணக்குள்ள நபர் ஒருவரை அணுகி, அந்த நபர் பெயருக்குக் காசோலையை மேலெழுத்துச் செய்து, அந்த நபர் வைத்திருக்கும் வங்கிக் கணக்கில் காசோலையை வசூல் செய்து வரவு வைக்க ஏற்படு செய்யலாம். பின்னர் அந்த நபரிடமிருந்து காசோலைக்கு உரிய தொகையைப் பெற்றுக் கொள்ளலாம். வங்கியில் கணக்கு இல்லாத நபர், கீறிய காசோலையை எழுதியவரிடம் தந்து கீறலை ரத்து செய்யும்படி வேண்டலாம். கீறலை ரத்து செய்வதற்கு ''கீறல் நீக்கப்பட்டது'' என்று எழுதி முழுக்கையொப்பமிட வேண்டும். கீறல் நீக்கப்பட்ட காசோலை கீறாக் காசோலை (Open chaque) ஆகிவிடும். முன்பே

கண்டபடி கீறாக் காசோலையை நேரடியாக வங்கியிடம் கொடுத்துப் பணம் பெறலாம்.

கீறாக் காசோலை மோசடி, பொய்யாவணம் புனைதல் (forgery) போன்ற தீய செயல்களைப் புரிய வாய்ப்பளிக்கிறது. இவ்வகையான தீமை நேராமலிருக்கவும், உரிமையரைப் பாதுகாக்கவும் காசோலை கீறப்படுகிறது. எப்படியெனில், கீறிய காசோலையை எவரும் நேரடியாக வங்கியிடம் கொடுத்து ரொக்கம் பெறமுடியாது. மேலும், வங்கிக் கணக்குள்ள நபர் மட்டுமே கீறிய காசோலை மீதான பணத்தைத் தம் கணக்கு மூலம் வசூலிக்க முடியுமாதலால் எவரும் மோசடி செய்திருந்தால் சம்பந்தப்பட்ட நபர்களை எளிதில் கண்டுபிடித்து விடலாம். எவர் கணக்கில் மோசடிக்கு உள்ளான காசோலை வசூலிக்கப்பட்டது என்று அறிந்து, அந்த வாடிக்கையர் வழி தொடர்புற்ற பிற நபர்களைத் தெரிந்து கொண்டு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

கீறல் வகைகள்

கீறல் இருவகைப்படும். ஒன்று பொதுக் கீறல், மற்றது சிறப்புக் கீறல்.

பொதுக் கீறல் (General Crossing)

சாய்ந்த இரு இணைகோடுகளை மட்டுமோ, 'அண்டு கம்பெனி' அல்லது அச்சொற்களின் சுருக்கத்தை ஊடே கொண்ட சாய்ந்த இரு இணைகோடுகளையோ ஒரு காசோலையின் முகப்பில் சேர்த்தால், அது சேர்ப்புக் கீறல் எனப்படும்; 'மாற்றுத் தன்மையற்றது' என்ற சொற்கள் இக்கீறலின் ஒரு பகுதியாக காணப்படலாம் அல்லது இல்லாதுமிருக்கலாம். இவ்வாறு கீறப்பட்ட காசோலை, பொதுக் கீறலைக்கொண்ட காசோலையாகக் கருதப்படும்.

(i)



(ii)



(iii) & Co.

(iv) Not Negotiable

(v) Account Payee

மேற்கண்ட எடுத்துக் காட்டிலிருந்து புலனாகக் கூடியது: பொதுக் கீறலில் இரண்டு சாய்ந்த நேர் கோடுகள் அவசியம் இருக்க வேண்டும். அந்நேர் கோடுகளுக்கிடையே ‘அண்டு கம்பெனி’ அல்லது அதன் சுருக்கம், மாற்றுத் தன்மையற்றது என்ற சொற்கள், பெறுபவர் கணக்கு (Payee's Account) என்ற சொற்கள் இருந்தாலும் இருக்கலாம்; ஆனால் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

பொதுக் கீறலில் ‘மாற்றுத் தன்மையற்றது’ (Not Negotiable (எடுத்துக்காட்டு iv) என்ற சொற்கள் சேர்க்கப்பட்டிருந்தால், அக்காசோலையைப் பெறுபவர், தாம் எவரிடமிருந்து அதைப் பெற்றாரோ அவருக்குள்ள உரிமையைவிடச் சிறந்த உரிமையைப் பெறமாட்டார்; மற்றும் அவர் பிறருக்கு அக்காசோலையை மாற்றித் தருகையில் தனக்குள்ள உரிமையைக் காட்டிலும் சிறந்த உரிமையைப் பிறருக்குத் தரமுடியாது. (மாற்றுமுறையாவணச் சட்டம், பிரிவு 130). ஆகவே மாற்றுத் தன்மையற்றது எனக் கீறப்பட்ட காசோலை ஒரு சாதாரண அசையும் பொருள் போன்றது. பொருள்மீது உரிமையற்றவர் பிறருக்கு உரிமை மாற்றித் தரமுடியாது. இதே அடிப்படையில், இங்ஙனம் கீறப்பட்ட காசோலை உரிமையற்றவர் வசம் சேர்ந்து அவர் அதைப் பிறருக்கு மாற்றித் தந்தால், மாற்றிப் பெற்றவருக்கு உரிமை ஏதும் இருக்காது. இவ்வகைக் கீறல் கொண்ட காசோலையை மேலும் மாற்றம் செய்வது தடை செய்யப்படுகிறது என்று நினைப்பது தவறு. இதை மாற்றம் (Transfer) செய்வதற்குத் தடை கிடையாது. சுருங்கக்

கூறின் இத்தகைய கீறல் கொண்ட காசோலை மாற்றுமுறையாவணத்தின் தனிச் சிறப்பான ஆவணமாற்றுத் தன்மையை (feature of negotiability) இழந்து விடுகிறது. இதைப் பெறுபவர், தமக்கு முன் வைத்திருந்தவர் என்ன உரிமை பெற்றிருந்தாரோ, அந்த உரிமை மட்டுமே பெறமுடியும்.

'பெறுபவர் கணக்கு' (Payee's Account or Payee's A/c or Account Payee) என்ற சொற்கள் பொதுக் கீறலில் காணப்பட்டால் அக்காசோலையை வசூலிக்கும் வங்கியர் பெறுபவர் என்று காசோலையில் கூறப்பட்டிருப்பவரும், அதை வசூலிக்க ஒப்படைக்கும் தமது வாடிக்கையரும் ஒரே நபர் தானா என்று கண்டறிந்த பிறகே பெறுபவரான தமது வாடிக்கையரின் கணக்கில், வசூல் செய்து பெற்ற பணத்தை, வரவு வைக்க வேண்டும். இவ்வகைக் கீறல் சட்டமுறையாக ஏற்படுவதில்லையென்றாலும் பெருவாரியாக வழக்கில் இருந்து வருகிறது. நடைமுறையில், இவ்வகைக் கீறலின் விளைவு, இதை மேலும் ஆவணமாற்றம் செய்வது இயலாமற் போவதாகும். ஏனெனில் இதை வசூல் செய்யும் வங்கியர் பெறுபவர் (Payee) பொருட்டு மட்டுமே வசூலிப்பதை மேற்கொள்ள வேண்டும். பெறுபவரல்லாத ஒருவர் பொருட்டு வசூல் செய்து பின்னர் அந்த காசோலைமீது வாடிக்கையருக்கு உரிமையில்லை என்றால், வசூல் செய்யும் வங்கியருக்குச் சட்டம் அளிக்கும் பாதுகாப்பு கிட்டாமற் போகும்.

சிறப்புக் கீறல் (Special Crossing)

மாற்றுத் தன்மையற்றது (Not Negotiable) என்ற சொற்களுடனோ அல்லது இல்லாமலோ காசோலையொன்றின் முகப்பில் வங்கியர் ஒருவர் பெயர் சேர்க்கப்பட்டிருந்தால் அந்தச் சேர்ப்பு, கீறல் எனக்கருதப்படும்; அந்த வங்கியருக்குச் சிறப்பாகக் கீறப்பட்டதாகக் கருதப்படும்.

சிறப்புக் கீறலுக்கு எடுத்துக்காட்டு

(i) இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, சென்னை.

(ii) மாற்றுத் தன்மையற்றது.
ஸ்டேட் பாங்கு, ஆப் இந்தியா
சென்னை.

(iii) இந்தியன் வங்கி, சென்னை.

(iv) பஞ்சாப் நேஷனல் வங்கி, சென்னை
மாற்றுத் தன்மையற்றது.

எடுத்துக் காட்டுக்களைக் கூர்ந்து நோக்கினால் கீழ்க்காணும் செய்திகளைத் தெரிந்து கொள்ளலாம். சிறப்புக் கீறலில் ஒரு வங்கியின் பெயர் அவசியம் அமைந்திருக்க வேண்டும். வங்கியின் பெயருடன் 'மாற்றுத் தன்மையற்றது' என்ற சொற்கள் இருந்தாலும் இருக்கலாம்; ஆனால் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. மற்றும் இரு இணைகோடுகளிடையே தான் வங்கியின் பெயர் எழுதப்பட வேண்டும் என்பதில்லை. இணைகோடுகள் எதுவுமில்லாமல் வங்கியின் பெயர் மட்டும் முகப்பில் குறித்தாலே கீறல் சிறப்புக் கீறலாகக் கருதப்படும்.

சிறப்புக் கீறலின் விளைவு

சிறப்புக் கீறலில் எந்த வங்கியர் பெயர் குறிக்கப்பட்டிருக்கிறதோ அவருக்கு மட்டுமே அக் காசோலையில் எழுதப்பட்டுள்ள தொகை கொடுக்கப்படும். பணஞ் செலுத்தும் வங்கியர் (Paying banker) கீறலில் குறிக்கப்பட்ட வங்கியரைத் தவிர வேறெந்த நபரிடமும் அக் காசோலைக்கான பணத்தைத் தரமாட்டார். எனவே, இக்கீறல் கொண்ட காசோலையைப் பெறுபவர் உறுதியாகக் கீறலில் பெயர் கண்ட வங்கியரிடம் கணக்கு வைத்திருப்பார். எவர் பொருட்டு வங்கியர் தொகையைப் பெறுகிறாரோ அவர் தமது வாடிக்கையராக இருந்தே ஆகவேண்டும். இக்காரணத்தால் சிறப்புக் கீறலிட்ட காசோலை மிகப் பாதுகாப்பான முறையாவணமாகத் திகழ்கிறது. இதை மேலும்பாதுகாப்பாக்க 'ஆவணமாற்றம் கிடையாது' என்ற சொற்களையும் சேர்த்துவிட வேண்டும்.

காசோலையை எவர் கீறலாம்? காசோலையை வரைபவர் (drawer) அதைக் கீறலாம். அவர் கீறாவிடில், அதை உடையவர் பொதுவாக அல்லது சிறப்பாகக் கீறலாம். பொதுவாகக் கீறப்பட்ட காசோலையை, உடையவர் சிறப்புக் கீறல் செய்யலாம். பொது அல்லது சிறப்புக் கீறல் செய்யப்பட்ட காசோலையில், உடையவர் 'ஆவணமாற்றம் கிடையாது' (Not negotiable) என்ற சொற்களைச் சேர்க்கலாம். சிறப்புக் கீறல் செய்யப்பட்ட காசோலையை, எந்த வங்கியருக்கு கீறப்பட்டுள்ளதோ, அவர், வசூல் செய்யும் பொருட்டுத் தனது முகவராகிய மற்றொரு வங்கியருக்கு மீண்டும் சிறப்புக் கீறல் செய்யலாம். முன்பே கண்டபடி காசோலையை எழுதியவர் விரும்பினால் அவர் செய்த கீறலை அவரே

நீக்கம் செய்து ''ரொக்கம் செலுத்துக'' என்ற சொற்களை எழுதி முழுக் கையொப்பமிட்டு அதைத் 'திறந்த காசோலை' (open cheque)யாக மாற்றலாம்.

காசோலைமீது சான்றளித்தல் அல்லது குறித்தல் (Certification or Marking of cheques) : சில சமயங்களில் தம்மீது எழுதப் பெற்ற காசோலைகளை வங்கியர் சான்றளிப்பது அல்லது குறிப்ப துண்டு. இங்ஙனம் செய்வதால் வங்கியர் காசோலை ஏற்பாளர் ஆகிவிடமாட்டார்; அவர்மீது பொறுப்பேதும் சுமத்தவும் முடியாது. ஆனால் நியாயமான காலத்துக்குள், வரையப் பட்டவாறு காசோலை தம்மிடம் கொடுக்கப்பட்டால் தாம் அதன்மீது பணந் தருவதாக வங்கியர் எடுத்துரைப்பதாகக் கருதப்படும். இங்ஙனம் சான்றளிக்கப்பட்ட அல்லது குறிக்கப்பட்ட காசோலை நல்லெண்ணத்துடன் எழுதப்பட்டது; அதைச் செலுத்துவதற்கு வேண்டிய பணம் எழுதியவர் கணக்கில் இருக்கிறது; எழுதியவருடைய நாணயத்துடன் வங்கியருடைய நாணயமும் சேர்கிறது என்ற காரணங்களால் காசோலை மேலும் உறுதி பெறுகிறது.

மூன்று வகையான சூழ்நிலைகளில் காசோலை சான்றளிக்கப் படலாம். ஒன்று வாடிக்கையர் வேண்டுகோளின் பேரில், மற்றொன்று வங்கியருக்கும் வங்கியருக்குமிடையேயுள்ள தொடர்பின் பேரில், மூன்றாவது பெறுபவர் அல்லது உடையவர் வேண்டுகோளின் பேரில் இது நிகழலாம். இக்காசோலைகளைக் 'குறிக்கப் பட்ட காசோலை' அல்லது 'சான்றளிக்கப்பட்ட காசோலை' என்பர். ''செலுத்துகை நடந்தேறுமென குறிக்கப்பட்டது' (Marked good for payment) அல்லது 'ஒப்பப்பட்டது' (Approved) அல்லது 'நல்லது' (Good) என்பது போன்ற சொற்கள் எதையும் எழுதி வங்கியர் அதன்கீழ் கையொப்பமிடுவதையே சான்றளித்தல் அல்லது குறித்தல் என வழங்குகிறோம்.

வாடிக்கையருக்காகக் குறித்தல்

காசோலை வரைபவர் அதிற்குறிப்பிட்ட தொகையளவு பணத்தை அவர் கணக்கில் வைத்திருக்கிறார் என்று தெரிந்து கொள்ளக் 'குறித்தல்' பயன்படுகிறது. காசோலையைக் 'குறிக்க' வேண்டி வங்கியரை அணுகும் வாடிக்கையர், அதைக் குறித்துப் பெற்ற பின்னர், அதைச் செலுத்தலாகாது என்று வங்கியரைத் தடை செய்ய முடியாது. குறித்தளித்த காசோலைக்கான தொகையை வங்கியர் வாடிக்கையர் கணக்கிலிருந்து ஒதுக்கி வைத்துவிட்டு மீதமுள்ள பணத்தின்மீது மட்டுமே நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். ஒதுக்கிய பின்னர் மீதமுள்ள பணம் வாடிக்

கையர் எழுதியுள்ள பிற காசோலைகளுக்குக் கொடுப்பதற்குப் போதவில்லையென்றால் அவற்றை (பிற காசோலைகளை) அவர் அவமதிக்கலாம். ஒதுக்கிய பணத்தைக் கொண்டு குறித்தளித்த காசோலைக்குப் பணம்செலுத்த வேண்டும்.

வங்கியரிடையே குறித்தல்

வங்கியரிடையே ஒரு வங்கியர் மற்றொரு வங்கியருக்குக் காசோலையொன்றைக் குறித்தளித்தால் தாம் அக்காசோலை மீது பணஞ் செலுத்த உறுதியளிப்பதாகக் கருதப்படும். இப்பழக்கம் சட்டமுறையாக இங்கிலாந்து நாட்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

உடையவருக்காகக் குறித்தல்

பெறுபவர் (payee) அல்லது உடையவர் (holder) வங்கியரிடம் காசோலையைக் காட்டி அதில் சான்றளிப்புப் பெறுவது நம் நாட்டிலும் அமெரிக்காவிலும் காணப்படுகிறது. குறிப்பு அல்லது சான்றளிப்பு செய்யப்பட்டபோது வாடிக்கையர் கணக்கில் அக்காசோலையைச் செலுத்துவதற்கு வேண்டிய பணம் இருந்தது என்பதை மட்டுமே 'குறித்தல்' அறிவிக்கிறது.

Punjab National Bank V. Bank of Baroda என்ற வழக்கில் வங்கியர் பின் தேதியிட்ட காசோலையொன்றைச் சான்றளித்திருந்தார். மேலும் வாடிக்கையர் கணக்கில் வேண்டிய அளவு பணமில்லாதபோது வங்கியர் சான்றளித்திருந்தார். எனவே சான்றளித்தது செல்லாது எனத்தீர்ப்பளிக்கப்பட்டது. காசோலை பின் தேதியிடப்படாமல் சரியான தேதியிடப்பட்டு சான்றளிக்கப்பட்டிருந்தால், அது (சான்றளிப்பு) செல்லும் தகையதாக அமைந்திருக்கும். பின்வரும் தேதியிட்ட காசோலையைச் சான்றளிப்பது ஒரு உறுதியுரை (promise) தருவதாகும்; இதற்கு மறுபயன் (consideration) அவசியம் இருக்க வேண்டும். மறுபயன் (consideration) கருதாமல் ஏற்பட்ட ஒப்பந்தம் செல்லாது. எனவே அவ்வழக்கில் சான்றளிப்பு செல்லாது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

காணுமற்போன காசோலை (Lost cheque)

காசோலையொன்று காணுமற் போய்விட்டால் அதைத் தொலைத்தவரின் நிலை என்ன? காசோலை காணுமற்போன சமயம் எவருக்கு அதன்மீது உரிமை இருந்ததோ அவர் அதன் உடையவர் (holder) ஆவார். இவர், காணுமற்போன காசோலையை வரைந்தவரை மாற்றுக் காசோலை ஒன்று எழுதித்தரும்படி கோரும் உரிமையுள்ளவர். காணுமற்போன காசோலை குற்றமற்றவரிடம் சேர்ந்த

காரணத்தால் வரைந்தவருக்கு ஏற்படக்கூடிய எந்த நட்டத்தையும் ஈடுசெய்ய இவர் ஒப்புக்கொள்ளுவார். மாற்றுக்காசோலை ஒன்றை எழுதித்தர மறுத்தால், இவர் வரைந்தவர்மீது வழக்குத்தொடுத்து அவரை எழுதித்தருமாறு பணிக்கலாம்.

அஞ்சல்வழி அனுப்பப்பட்ட காசோலை காணமற் போனால், கடனாளரின் உத்தரவுப்படி அனுப்பியிருந்தாலன்றி, அதை அனுப்பியவர் அதனால் ஏற்படும் நட்டத்தை ஏற்கவேண்டும். ஏனெனில், அஞ்சல் துறையினர் அனுப்புபவரின் முகவராகச் செயலாற்றுகின்றனர். கடனாளர் (creditor) உத்தரவுப்படி காசோலை அஞ்சல் வழி அனுப்பப்பட்டு அதனால் ஏதும் நட்டம் உண்டானால் அதைக் கடனாளர் ஏற்கவேண்டும்; ஏனெனில் இங்கு அஞ்சல் துறையினர் கடனாளரின் முகவர் (agent) என்ற நிலையில் செயலாற்றுகின்றனர்.

7. காசோலை செலுத்தல்-வசூலித்தல்

(Payment & Collection of Cheques)

வங்கியர் வாடிக்கையரிடையே நிலவும் தொடர்பை ஆராயும் போது, வங்கியரது சட்டப்பிணைப்புக்களில் முக்கியமானது வாடிக்கையர் எழுதிய காசோலைகளுக்கு வங்கியர் பணங்கொடுப்பது என்று கண்டோம். காசோலை - உரியமுறையில் எழுதப்பட வேண்டும்; வாடிக்கையர் கணக்கில் போதுமான அளவு பணம் இருக்க வேண்டும்; அந்தப் பணத்தைக்கொண்டு காசோலைமீது பணஞ் செலுத்துவது முறையாக அமைய வேண்டும். மேற்கண்ட நிலையில் வங்கியர் முறையாக எழுதப்பட்ட காசோலையை மதிக்கத் தவறினால் அதன்வழி வாடிக்கையருக்கு ஏற்படும் நட்டத்தை ஈடு செய்ய வேண்டும்.

வங்கியரின் இருதலைக்கொள்ளி எறும்பு நிலை

காசோலை எவர்மீது எழுதப்படுகிறதோ அவரைப் பெயரவர் (drawee) வங்கியர் என்பர். இவ்வங்கியர் காசோலை மீதான பணத்தைச் செலுத்தவேண்டிய நிலையிலுள்ள காரணத்தால் இவரைச் செலுத்து வங்கியர் என்றழைப்பதுண்டு. காசோலை ஒன்றைச் செலுத்து வங்கியர் (Paying banker) பெற்றதும் அவர் அதை மதிக்க வேண்டும் அல்லது மறுக்க வேண்டும். ஏதேனும் ஐயம் எழுந்தால் கூட ஒருநொடியில் முடிவு எடுத்து காசோலையை மதிக்க அல்லது மறுக்கவேண்டும். கணக்கில் போதிய பணமில்லாதபோது காசோலையை மதித்தாலும், பணமிருக்கும்போது கவனக்குறைவால் காசோலையை அவமதித்தாலும் நட்டத்திற்கு ஆளாவார். முந்திய நிலையில் வங்கியர் தம் பணத்தை இழக்க நேரும்; பிந்திய நிலையில் நட்டஈடு செய்ய நேரும். எனவே வங்கியரின் நிலையை இருதலைக்கொள்ளி எறும்பு நிலை என்று கூறலாம். காசோலைமீது பணஞ் செலுத்துகையில் வங்கியர் மிகவும் எச்சரிக்

கையாக இருக்கவேண்டும். வசூல்செய்யும் பொருட்டு மற்ற வங்கியர் கொடுத்த காசோலையை அவமதித்தால், உடனே அக் காசோலையை வசூலிக்கும் வங்கியரிடம் திருப்பித் தந்துவிட வேண்டும். தவறினுல் அவ்வங்கிக்கு காசோலை மீதான தொகையைச் செலுத்தவேண்டும் (Hyderabad State Bank V. Rangnath Rathi). செலுத்து வங்கியர் மிகவும் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய அடிப்படைச் செய்தி தக்க அறிமுகத்துடன் மட்டுமே எவருக்கும் கணக்கைத் துவங்குவதாகும்.

செலுத்து வங்கியர் கவனிக்க வேண்டியன

கீறிய காசோலையா? காசோலையொன்று வங்கியரிடம் பணம் செலுத்தக் கோரி தரப்பட்டதும், முதலில் அவர் நோக்க வேண்டியது காசோலை கீறப்பட்டுள்ளதா அல்லவா என்பதாகும். கீறப் படாத காசோலைக்குமட்டுமே நேரடியாக வங்கியர் கல்லாப் பெட்டியிலிருந்து பணங்கொடுப்பார் என்று முன்பு கண்டது நினைவிருக்கலாம். கீறிய காசோலையாக இருந்தால் கீறல் பொதுவானதா அல்லது சிறப்பானதா என்று வங்கியர் நோக்கவேண்டும். சிறப்புக் கீறல் அமைந்துள்ள காசோலையாக இருப்பின், அக்கீறலில் கண்டுள்ள வங்கியருக்கு மட்டுமே செலுத்து வங்கியர் பணத்தைக் கொடுக்கலாம். பொதுவான கீறல் இருந்தால் வங்கியருக்குத் தான் செலுத்துவார். கீறிய காசோலை மீதான பணத்தை மற்ருெரு வங்கியருக்குச் செலுத்தாமல், நேரடியாகதமது கல்லாவிலிருந்து செலுத்தினுல், அங்ஙனம் செலுத்தியதால் உண்மை உரிமையாளருக்கு ஏற்பட்ட நட்டத்தை வங்கியர் ஈடுசெய்ய வேண்டும் (மாற்று முறையாவணச் சட்டம், பிரிவு 129).

பொதுக் கீறல் உள்ள காசோலை மீதான பணத்தை மற்ற ஒரு வங்கியருக்கு மட்டுமே செலுத்து வங்கியர் தரவேண்டும். சிறப்புக் கீறல் செய்யப்பட்ட காசோலையாக இருப்பின் கீறலில் குறிக்கப் பட்ட வங்கியருக்குமட்டுமே பணத்தைத்தரவேண்டும். இங்ஙனம் செய்யாமையால் வங்கியர், வரைபவருக்கு நட்டமேற்படுத்தினுல் வாடிக்கையர் கணக்கைப் பற்றுவைக்க முடியாது. மற்றும் வங்கியர் செலுத்தியமுறை மாற்றுமுறையாவணச் சட்டம் பிரிவு 10இன்படி செலுத்தம் (Payment in due course) ஆகாது. முன்னர் கண்டவாறு உண்மை உரிமையாளருக்கு இதனுல் ஏற்படும் நட்டத்தை வங்கியர் ஈடுசெய்ய வேண்டும். சிறப்புக் கீறலில் ஒரு வங்கியருக்கு மேற்பட்ட பல வங்கியரின் பெயர்கள் காணப்பட்டால், எந்த வங்கியர் மீது எழுதப்பட்டுள்ளதோ அவர் அக் காசோலைமீது பணஞ் செலுத்த மறுத்துவிட வேண்டும். ஆனுல்

வசூல் செய்யும் பொருட்டு, முகவர் என்ற நிலையில் மற்றொரு வங்கியர் பெயரும் சிறப்புக் கீறலில் சேர்க்கப்பட்டிருந்தால் காசோலைமீதான தொகை முகவர்-வங்கியருக்குச் செலுத்தப்படும்.

நாம் முன்னர் கண்டபடி "ஆவணமாற்றம் கிடையாது" (Not Negotiable) என்ற சொற்கள் கொண்ட கீறல், அக் காசோலை மேலும் மாற்றப்படுவதைத் தடைசெய்வதாகாது. செலுத்து வங்கியர் இக்கீறலைப்பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. மற்றும் 'பெறுபவர் கணக்கு' (Payee's Account) என்ற சொற்கள் கொண்ட கீறலும் செலுத்தும் வங்கியருக்குக் கடமைஏதும் விதிப்ப தில்லை. பெறுபவர் கணக்கு கீறலுள்ள காசோலையில் பெறுபவரல் லாத மற்றவர்களது மேலெழுத்து (endorsement) காணப்பட்டால் நம் நாட்டிலுள்ள செலுத்து வங்கியர் "பெறுபவர் கணக்கு மட்டும் எனக் குறிக்கப்பட்டுள்ளது" என்ற குறிப்புடன் காசோலையைத் திருப்பி விடுவர்.

கீறலில் "தங்களுக்கு" (Yourselves) என்ற சொல் சேர்க்கப்பட் டால், அக்காசோலை சிறப்புக் கீறல் செய்யப்பட்டதாகக் கருதப் படும். சிறப்புக் கீறலிடப்பட்ட காசோலை மறுக்கப்பட்ட பின் மறு படியும் வேறொரு வங்கியர் வழி கொடுக்கப்பட்டால், முன்னர் செய்யப்பட்ட கீறல் நீக்கப்பட்டுள்ளதா என செலுத்து வங்கியர் கவனிக்க வேண்டும். கீறலை நீக்குவதற்கு, வங்கியர் தமது முத்தி ரையை அடித்துவிட்டு 'எங்கள் முத்திரை நீக்கப்பட்டது' என எழுதிக் கையொப்பமிட வேண்டும்.

எழுதப்பெற்ற வங்கியர் யார்?

காசோலை தம்மீது எழுதப்பட்டுள்ளதா என்று வங்கியர் கவனிக்க வேண்டும். வாடிக்கையர் தமது கணக்கை எந்த வங்கி யில் வைத்திருக்கிறாரோ அந்த வங்கியர் மட்டுமே அவர் எழுதும் காசோலைகளை மதிக்கும் கடமையுள்ளவர். வாடிக்கையர் வசதி கருதி, வங்கியர் தமது பிற கிளை அல்லது முகவர் அலுவலகத்தில் அவர் எழுதும் காசோலைகளை மாற்றித்தர முன்னேற்பாடு செய்து கொண்டால் ஏற்பாட்டின்படி காசோலைக்குத் தொகை செலுத்த வேண்டும்.

சிதைந்த காசோலை

காசோலை கிழிக்கப்பட்டு அல்லது கசக்கப்பட்டிருந்தால் வங்கி யர் அது இரத்து செய்யும் பொட்டு அங்ஙனம் சிதைக்கப்பட்டதா என்று ஐயுறுதல் இயல்பு. கிழிக்கப்பட்ட காசோலையை செலுத்து

வங்கியர் ''சிதைந்துள்ள காசோலே'' என்ற குறிப்புடன் திருப்பி விடுவர். கீறலே மறைக்கும் பொருட்டு அல்லது வேறு முக்கிய செய்தியை மறைக்கும் பொருட்டு காசோலே கிழிக்கப்பட்டதா என்று வங்கியர் உற்றுநோக்க வேண்டும். Hongkong and Shanghai Banking Corporation V. Lo Lee Shi என்ற வழக்கில் எதிர்பாராவிதமாக சிதைவுற்ற காசோலே யொன்றின் எண் இல்லாமற் போனலும் அதை அடையாளங் கண்டு கொள்ளும் நிலேயிலிருந்தபடியால் செலுத்து வங்கியர் அதன்மீது பணஞ் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

இலக்கணப்படி அமைதல்

சட்டமுறையாக அமைந்த இலக்கணத்தின்படி காசோலே எழுதப்பட்டுள்ளதா என்று வங்கியர் கவனிக்க வேண்டும். இல்லேயெனில் செலுத்தும் வங்கியருக்கு மாற்று முறையாவணச் சட்டம் அளிக்கும் பாதுகாப்பு இவருக்குக் கிட்டாமற் போகும்.

நாட்பட்ட காசோலே

செலுத்து வங்கியர் காசோலேயிலுள்ள தேதியைக் கவனிக்க வேண்டும். நெடுங்காலத்திற்குப் பழக்கத்திலிருந்த காசோலே 'நாட்பட்ட காசோலே' (Stale cheque) எனப்படும். இந்தியாவிலுள்ள வங்கியர் ஆறுமாதங்களுக்கு மேல் புழக்கத்திலுள்ள காசோலேயை நாட்பட்டதாகக் கருதுகின்றனர். சில வங்கியர் மூன்று மாதகாலத்திற்கு மட்டும் செல்லும் என்று காசோலே மீதே குறிப்பதுமுண்டு. நாட்பட்ட காசோலேயை, எழுதியவர் உறுதியளித்தால் பெயரவர் வங்கியர் (drawee banker) அதனே மதிக்கலாம்.

பின் தேதியிட்ட காசோலே

காசோலே பின்தேதியிட்டதாக இருப்பின், அதிற்குறிப்பிட்ட தேதி வரும்வரை அதன்மீது வங்கியர் பணஞ் செலுத்தலாகாது. இதற்குக் காரணம், காசோலேயிற் குறிப்பிட்ட நாள் வருமுன் வாடிக்கையர் அக் காசோலே மீது பணந்தரலாகாது என்று 'நிறுத்தலாணே' (Countermand order) பிறப்பித்தால் வங்கியர் அதன்மீது பணஞ் செலுத்தக் கூடாது. தேதியைக் கவனியாமல் பணத்தைச் செலுத்தியிருந்தால், வங்கியர் தமது பணத்தை இழக்க நேரும்; வாடிக்கையர் கணக்கைப் பற்றுவைக்க முடியாது. பின்தேதியிட்ட காசோலேயின் மீது குறிப்பிட்ட நாளுக்கு முன்னரே வங்கியர் பணஞ் செலுத்தியிருக்கும் நிலேயில் அதை எழுதிய வாடிக்கையர் இறந்து விட்டால் அல்லது நொடித்த நிலேயராகி விட்டால் வங்கியர் அவரது கணக்கைப் பற்றுவைக்க முடி

யாது. வாடிக்கையர் பித்தநிலையராகி விட்டாலும் மேற்கண்ட விளைவு ஏற்படும். செலுத்து வங்கியர் காசோலையிற் குறித்த நாளுக்கு முன்னர் அதற்குப் பணஞ் செலுத்தி அதனால் வாடிக்கையர் கணக்கில் பண இருப்பு குறைந்திருக்கும் நேரத்தில் சரியான தேதியிட்ட காசோலை யொன்றை மதிக்கக் கணக்கில் பணமில்லாமல் அதை வங்கியர் அவமதிக்க நேரலாம். உதாரணமாக, ஆகஸ்டு 14, 1971 தேதியில் தமது கணக்கில் ரூ 3,500 இருப்புள்ள வாடிக்கையர் ஒரு காசோலையை ரூ 3,200 க்கு எழுதி அதை 24 ஆகஸ்டு 1971 என்று தேதியிடுவதாகக் கொள்வோம். தேதியைக் கவனியாமல் 16 ஆகஸ்டு அன்று வங்கியர் இக் காசோலையை மதித்து விடுகிறார் என்றும் கொள்வோம். இதனால் வாடிக்கையர் கணக்கில் இருப்பு ரூ 300 ஆகக் குறைந்து விடுகிறது. வாடிக்கையர் மறுபடியும் 18 ஆகஸ்டு 1971 தேதியன்று அதே தேதியிட்டு ரூ 2,000 க்கு ஒரு காசோலை எழுதுகிறார் என்று கொள்வோம். இக் காசோலை 19-8-71 இல் வங்கியரிடம் கொடுக்கப்பட்டால், வங்கியர் இதைச் செலுத்தக் கணக்கில் பணமில்லை என்று காண்பார்; எனவே காசோலையை அவமதித்து விடுவார். இதன் விளைவு எவ்வளவு தீயது என்பதை நோக்க வேண்டும். சரியான கணக்குப்படி ரூ 3,500 வாடிக்கையர் பேரில் இருப்பாக இருக்க வேண்டிய 19-8-1971 இல் ரூ 2,000 பெறுமான காசோலை அவமதிக்கப்பட்டு விடுகிறது. இதனால் வாடிக்கையருக்கு ஏற்படும் நட்டத்தை வங்கியர் ஈடுசெய்ய வேண்டும். மற்றும் 20-8-1971 இல் வாடிக்கையர் தான் 24 ஆகஸ்டு 1971 நாளிட்டு ரூ 3,200 க்கு எழுதிய காசோலையை மதிக்க வேண்டாம் என்று வங்கியருக்குத் தெரிவித்தால், தவறாக 16–8-71 இல் இக் காசோலைமீது பணஞ் செலுத்திய வங்கியர் தமது வாடிக்கையர் கணக்கில் பற்று வைக்கவும் முடியாமல் தமது பணத்தை இழக்க நேரும். காசோலையில் குறிப்பிட்ட நாளுக்குமுன் பணத்தைச் செலுத்தும் வங்கியருக்குச் சட்டமளிக்கும் பாதுகாப்பு ஏதும் கிடைக்காது. இதற்குக் காரணம் வங்கியர் செலுத்தியது சட்டமுறைச் செலுத்தம் (Payment in due course) ஆகாது.

தேதியிடாக் காசோலை

தேதியிடாக் காசோலையை வங்கியர் திருப்பிவிடுவது வழக்கம். அக் காசோலையைக் கட்டாயம் மதிக்கவேண்டும் என்ற கடமையேதும் வங்கியருக்கு இல்லை (Griffiths V. Dalton).

தொகை குறித்தல்

காசோலை மீது செலுத்தவேண்டிய தொகை எண்ணாலும் எழுத்தாலும் குறிப்பது வழக்கம். எண்ணால் குறித்தது ஒரு

தொகையும் எழுத்தால் குறித்தது வேறொரு தொகையுமாக இருந்தால் என் செய்வது. சில வங்கியர் "எண்ணாலும் எழுத்தாலும் குறிக்கப்பட்ட தொகை வேறுபடுகிறது" (Amount in words and figures differ) என்று குறித்து காசோலையைத் திருப்பி விடுவர்; மற்றுஞ் சிலர் எந்தத்தொகை குறைவானதோ அதைச் செலுத்துகின்றனர். மாற்று முறையாவணச் சட்டம், பிரிவு 18 இன்படி எண்ணாலும் எழுத்தாலும் குறிக்கப்பட்ட தொகையில் வேறுபாடு ஏதுமிருப்பின் எழுத்தால் குறிக்கப்பட்ட தொகையே செலுத்தப்படவேண்டிய தொகையாகும். தொகை எண்ணால் குறிக்கப்படாமல் எழுத்தால் மட்டும் குறிக்கப்பட்டிருந்தால் வங்கியர் அதைச் செலுத்தவேண்டும். ஆனால் எண்ணால் மட்டும் குறிக்கப்பட்டு எழுத்தால் குறிக்கப்படாவிடில் "தொகை எழுத்தால் குறிக்கப்படவேண்டும்" (Amount required to be stated in words) என்று குறிப்பிட்டு வங்கியர் காசோலையைத் திருப்பிவிடுவர்.

வங்கிகள் தமது வாடிக்கையர் வசதியையும் தம் வசதியையும் கருத்தில் கொண்டு அலுவல் நேரத்தை நிருணயிக்கின்றனர். அலுவல் நாட்களில் அலுவல் நேரத்தில் கொடுக்கப்படும் முறையான காசோலைகளுக்கு மட்டுமே பணஞ் செலுத்தும் சட்டப்பிணைப்பு (legal obligation) வங்கியருக்கு உண்டு. குறிப்பிட்ட நேரப்படி மணியடித்த உடனேயே வங்கியர் தமது நடவடிக்கையை நிறுத்திவிடவேண்டுமென்று கொள்ளக் கூடாது (Baines V. National Provincial Bank). அலுவல் நேரத்தில் கொடுக்கப்பட்ட காசோலைக்கு, அலுவல் நேரம் முடிந்தவுடன்கூட தொகை செலுத்தும் வங்கியர் பழக்கத்தை ஈண்டு நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

வங்கியர் தம்மிடம் கொடுக்கப்பட்ட காசோலையில் ஏதும் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறதா என்று நன்கு கவனிக்க வேண்டும். திருத்தம் முறையாகச் செய்திருக்கப்படலாம்; அல்லது மோசடி செய்யும் எண்ணத்துடன் செய்திருக்கப்படலாம். முறையாகச் செய்யப்பட்ட திருத்தத்தைச் சான்றளிக்கும் வகையில் எழுதியவர் கையொப்பமிட்டிருக்க வேண்டும்; அங்ஙனம் அமைந்த திருத்தமே செல்லும். மோசடி செய்யும் எண்ணத்துடன் செய்யப்பட்ட திருத்தம் பல விளைவுகளை உண்டாக்குகிறது. திருத்தங்களைக் கண்டுபிடிக்கவும், கள்ளக் கையெழுத்தைக் கண்டுபிடிக்கவும் பலவகைச் சாதனங்களைக் கையாளுகின்றனர்.

கருநிலைத் திருத்தம் (Material Alteration)

காசோலை என்பது வாடிக்கையர் வங்கியர் மீது எழுதும் நிபந்தனையற்ற ஆணை என்பதை முன்னரே கண்டோம். வாடிக்கையர்

கருத்தை அந்த ஆணை தெரிவிப்பதாக அமைந்துள்ளது. ஆணையில் திருத்தம் ஏதும், எழுதுபவரின் இசைவில்லாமல், செய்யப்பட்டால் அது எழுதியவரின் கருத்தைக் கொண்டதாகக் கருதப்படமாட்டாது.

முறையாவணத்தின் செயல்படு நிலையைப் பெருமளவுக்கு மாற்றி அதன்மீது தொடர்புற்ற நபர்களின் பொறுப்புக்களையும் மாற்றுந் தன்மை வாய்ந்த திருத்தத்தைக் கருநிலைத் திருத்தம் (Material Alteration) என்று கூறுவர். வணிக நோக்கத்திற்குப் பயன்படுத்தப் படும்போது முறையாவணம், குறித்தவாறன்றி பிற திருத்திய விளைவை உண்டாக்குமானல் அத் திருத்தம் கருநிலைத் திருத்தமாகும். முறையாவணத்தில் செய்யப்பட்ட திருத்தம், ஆவணம் திருத்தத்திற்கு முன் எந்த செய்திகளைக் காட்டியதோ அச் செய்திகள் திருத்தத்திற்குப் பின் வேறுவகையாக அமைந்திருப்பதைக் குறித்தால், கருநிலைத் திருத்தம் எனப்படும். இதனல் முறையாவணத்தின் சட்டமுறையான தன்மை மாறிவிடுகிறது; சம்பந்தப்பட்ட நபர்களின் பொறுப்புநிலை பாதிக்கப்படுகிறது. (Gourchandra Das V. Prasanna Kumara Chandra). இங்ஙனம் திருத்தப்பட்ட முறையாவணம் காசோலை ஆகாது. (Slingsby and Others V. The Westminster Bank Ltd).

கீழ்க்காணும் திருத்தங்களைக் கருநிலைத் திருத்தத்திற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம்

(i) முறையாவணத்தின் மீது பணஞ் செலுத்தப்படுவதை விரைவு படுத்தும் பொருட்டு அல்லது தள்ளிப்போடும் பொருட்டு தேதியை மாற்றுதல்.

(ii) பணஞ் செலுத்தப்பட வேண்டிய இடத்தை மாற்றுதல்

(iii) செலுத்தத் தொகையைத் திருத்துதல்.

(iv) தொடர்புற்ற நபர்களின் சட்டமுறையான நிலையைத் திருத்துவது.

(v) புதிய ஓர் நபரைச் சம்பந்தப்படுத்துமாறு காசோலையைத் திருத்தல்.

(vi) வட்டி வீதத்தைத் திருத்துவது.

சில வகைத் திருத்தங்கள் வாடிக்கையர் எழுதியுள்ள ஆணையைப் பெருமளவுக்கு மாற்ருமல் அமையலாம். அவை கருநிலைத் திருத்தங்களாகா. எடுத்துக் காட்டாக, வெற்று மேலெழுத்தினை முழு மேலெழுத்தாகத் திருத்தல்; கொணர்பவர் காசோலையை

உத்தரவு காசோலையாகத் திருத்தல்; காசோலையை உடையவர் அதைக் கீறல் கருநிலைத் திருத்தங்கள் எனக் கருதப்படமாட்டார்.

கருநிலைத் திருத்த விளைவு

கருநிலைத் திருத்தம் எவர் செய்தாரோ, அனுமதித்தாரோ அல்லது செய்ய அதிகாரமளித்தாரோ அவர் நீங்கலாக மற்ற வரைப் பொறுத்த மட்டில் முறையாவணம் செல்லா நிலையது (void) ஆகும். கருநிலைத் திருத்தம் கொண்ட காசோலையைப் பொறுத்தவரை வங்கியர் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். காசோலையை எழுதியவர் மிகவும் கவனமாகத் திருத்தம் செய்வதற்கு வாய்ப்பு ஏதும் இல்லாவகையில், வரைந்திருந்தால் வங்கியர், மோசடி எதனுலும் திருத்தம் செய்யப்பட்டு எழுதியவர் முதலில் குறிப்பிட்டிருந்த தொகையைவிட அதிகமான தொகை செலுத்தியிருந்தாலும், வாடிக்கையர் முதலில் குறிப்பிட்டிருந்த தொகையளவுக்கு மேல் அவரது கணக்கில் பற்றுவைக்க முடியாது. மோசடியாகச் செய்யப்பட்ட திருத்தத்தைக் கவனியாமல் வங்கியர் பணஞ் செலுத்தியிருந்தால் நட்டத்தை அவர் ஏற்க வேண்டும். காசோலையை வரைபவர் (வாடிக்கையர்) வேண்டுமென்றே அல்லது கவனமின்மையினுலோ எண்ணுலும் எழுத்தாலும் குறிக்கும் தொகை அல்லது பெயர் முன்னும் பின்னும் வெற்று இடம் விட்டிருந்து அதனுல் மோசடி செய்ய வாய்ப்பு ஏற்பட்டிருந்தால் வாடிக்கையர் கணக்கில் செலுத்தப்பட்ட தொகையைப் பற்று வைக்கலாம். குற்றமனம் ஏதுமின்றி ஆனுல் கவனக்குறைவால் காசோலை எழுதும்போது தொகை, பெயர் முதலியன குறிக்கையில் முன்னும் பின்னும் இடம் விட்டு அதனுல் மோசடித் திருத்தம் நிகழ்ந்து, வங்கியர் அதைக் கண்டுபிடிக்காமல் அதிகத் தொகையைச் செலுத்துகிறுர் என்ற நிலையில் வாடிக்கையர்தான் நட்டத்தை ஏற்கவேண்டும் என்று கருதப்பட்டு வந்தது (Young V. Grote). இக் கருத்து மீண்டும் (The London Joint Stock Bank V. MacMillan and Arthur) என்ற வழக்கில் வலியுறுத்தப்பட்டது. வாடிக்கையர் காசோலை எழுதும்போது மோசடித்திருத்தம் நிகழ ஏதும் வாய்ப்பின்றி எழுத்து, சொற்கள் முதலியவற்றின் முன்னும் பின்னும் வெற்றிடம் விடாமல் நியாயமான கவனத்துடன் எழுதவேண்டும் என்று வங்கியருடன் தொக்கிய ஒப்பந்தம் கொண்டுள்ளார். அவ் வொப்பந்தத்தை மீறும் வகையில் வாடிக்கையர் நடந்து கொண்டால் அதனுல் ஏற்படும் நட்டத்திற்கு வங்கியர் பொறுப்பாக மாட்டார். கருநிலைத் திருத்தம் கொண்ட காசோலைமீது பணஞ் செலுத்தும் வங்கியர் சில சூழ்நிலைகளில் பாதுகாக்கப்படுகிறுர். 'மாற்று முறையாவணச் சட்டத்தின் பிரிவு

89 ஐயும் பிரிவு 10 ஐயும் சேர்த்துப் படித்தால் இது புலனுகும். திருத்தம் பார்வைக்குப் புலனுகாமல் அமைந்திருந்தாலும், பணங் கொடுக்க வேண்டி காணப்பட்ட காசோலை கீறல் இல்லாமல் அல்லது முன்பே கீறப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது எனத் தோற்றம் தராமல் அமைந்திருந்தாலும், முறைப்படி பணஞ் செலுத்தம் செய்த வங்கியர் எல்லாப் பொறுப்பிலிருந்தும் விடுவிக்கப்படுகிருர். ஆகவே, திருத்தம் பார்வைக்குத் தெரியாமல் இருக்க வேண்டும்; செலுத்தம் முறைப்படி செலுத்தமாக, அதாவது, பார்வைக்குத் தென்படும் தன்மைப்படி நல்லெண்ணத்துடன் கவனமின்மை யின்றி செய்யப்படும் செலுத்தமாக இருக்க வேண்டும். இந்த நிலையில் வங்கியர் சட்டமுறையாக காப்பளிக்கப்படுகிருர்.

முறைப்படி செலுத்தம் (Payment in due course) என்ருல் என்ன? மாற்றுமுறையாவணச்சட்டம், பிரிவு 10 இதன் இலக்கணம் தருகிறது.

(i) பார்வைக்குக் காணப்படும் தன்மைப்படி;

(ii) நல்லெண்ணத்துடன்;

(iii) கவனமின்மையின்றி;

(iv) தம்வசம் வைத்திருந்த எந்த நபருக்கும்;

(v) அந்தச் சூழ்நிலையில் முறையாவணத்தில் குறிக்கப்பட்ட பணத்தைப் பெறுவதற்கு அவர் உரிமையுள்ளவராக மாட்டார் என்று நம்பத்தக்க காரணமில்லாமல் செலுத் தப்படும் செலுத்துகையே முறைப்படி செலுத்தம் எனப் படும். கீறல் செய்யப்பட்ட காசோலையொன்று பணம் பெறும் பொருட்டு வங்கியரிடம் கொடுக்கப்படுகின்ற தென்று கொள்வோம். வங்கியர் அக்காசோலைக்குத் தம் கல்லாவிலிருந்து பணம் எடுத்து நேரடியாக அந்தக் காசோலை தந்தவருக்குச் செலுத்திஞல் அது முறைப்படி செலுத்தமாகாது. காரணம் கீறல் செய்யப்பட்ட காசோலை மற்ருெரு வங்கியர் வழியே செலுத்தப்பட வேண்டும். நேரடியாகச் செலுத்தப்படக் கூடாது,

பொய்யாவணம் புனேதலும் செலுத்தும் வங்கியரும் (Paying Banker and Forgery):

செலுத்தும் வங்கியர், காசோலையை எழுதும் தம் வாடிக்கையர் கையொப்பத்தைச் சரிபார்க்கத் தம்மிடமுள்ள மாதிரிக் கையொப்பத்துடன் அதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். காசோலையிலுள்ள கையொப்பமும், மாதிரிக்கையொப்பமும் வேறு

பட்டால் ''கையொப்பம் வேறுபடுகின்றது'' (Signature differs) என்ற குறிப்புடன் காசோலையைத் திருப்பிவிடுவார். கூட்டுக் கணக்காக இருப்பின் காசோலையைக் கூட்டுக் கணக்குதாரர்கள் அனைவரும் கையொப்பமிட்டிருக்க வேண்டும். ஆனால் வங்கியருடன் முன்னேற்பாடு செய்து கொண்டு, கூட்டுக்கணக்குதாரர்களில் ஒருவரோ அல்லது சிலரோ மற்றவர் சார்பாகக் காசோலை எழுத அதிகாரம் பெற்றிருந்தால், அதிகாரம் பெற்றவர்கள் மட்டும் எழுதிய காசோலையை வங்கியர் மதிக்க வேண்டும். மற்றும் வாடிக்கையர் தம் சார்பாகத், தம் பெயரைக் கையொப்பமிட குறிப்பிட்ட வேறு நபருக்கு அதிகாரமளிக்கலாம். அந்நிலையில் அந்நபர் வாடிக்கையர் பெயரை எவ்வண்ணம் கையொப்பமிடுவார் என்று தெரிந்து கொள்ள வங்கியர் மாதிரி கையொப்பம் பெற்றுக் கொள்ளுவார். இதன் படியே அந்நபர் கையொப்பமிட்ட காசோலையையே வங்கியர் மதிப்பார்.

வாடிக்கையரின் கையொப்பம் போன்றே மோசடிப் பேர்வழி ஒருவர் பொய்க் கையொப்பமிட்டு வங்கியரிடம் காசோலையை மாற்றி விடுகிறார் என்று வைத்துக் கொள்வோம். வாடிக்கையர் இந்த நட்டத்தை ஏற்பதா அல்லது வங்கியர் இந்த நட்டத்தை ஏற்பதா என்று ஆராய வேண்டும். வங்கியரும் வாடிக்கையரும் கணக்குத் துவங்கும்போது செய்து கொள்ளும் ஒப்பந்தப்படி, வாடிக்கையர் உத்தரவின்படிதான் வங்கியர் அவர் கணக்கு மீது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். வாடிக்கையர் கையொப்பமிடாக் காசோலை அவர் அளிக்கும் உத்தரவு ஆகுமா? ஆகாது. ஆகவே வாடிக்கையர் கையொப்பத்தைப் போலவே எவ்வளவு ஒற்றுமையாக பொய்க் கையொப்பம் அமைந்தாலும் அது வாடிக்கையரின் கட்டளையாகாது. வாடிக்கையரின் உத்தரவின்றி வங்கியர் அவர்கள் கணக்கை பற்று வைக்கலாகாது. வங்கியர் தான் இந்நட்டத்தை ஏற்கவேண்டும்.

வாடிக்கையரும், காசோலை ஏதும் காணமற் போய்விட்டது; அதன் மீது பொய்க் கையொப்பமிட்டு மோசடி எவரும் செய்யக் கூடும் என்று அறிந்தவுடன் வங்கியருக்குச் செய்தி அறிவித்துக் குறிப்பிட்ட காசோலையை மதிக்கவேண்டாம் என்று உத்தரவிட வேண்டும். பொய்யாவணம் புனையப்பட்டுத் தம் கணக்கிலிருந்து பணஞ் செலுத்தப்படக் கூடும் என்றறிந்தும் வாடிக்கையர் வாளாவிருந்தால் அவர் தம் கடமையிலிருந்து தவறியவராகிறார். ஒப்பந்தப்படி எங்ஙனம் வங்கியர் கவனமாகவும் எச்சரிகையுடனும் நடந்து கொள்ள வேண்டுமோ அங்ஙனமே வாடிக்கையரும் கவனமாகவும் எச்சரிக்கையுடனும் நடந்து கொள்ள வேண்டும். வாடிக்

கையர் நடத்தையாலும், கவனமின்மையாலும் வங்கியருக்கு நட்ட மேற்படின் அவர் கணக்கை வங்கியர் பற்று வைக்கலாம்.

பொய்யாவணம் புனைந்த காசோலை செல்லுபடியாகாது. ஏனெனில் பொய்யாவணம் புனைவது உரிமை ஏதும் தராது (Forgery conveys no title). பொய்க் கையொப்பம் கொண்ட ஆவணம் காசோலையாகாது. காசோலையை எழுதும் அதிகாரம் பெற்ற இருநபர்களில் ஒருவர் கையொப்பம் பொய்க் கையொப்ப மாக அமைந்தாலும் அக் காசோலை வங்கியருக்கு இடப்பட்ட உத்தரவாகாது. அதிகாரமில்லாமல் காசோலை மீது இடப்பட்ட கையொப்பம் காசோலை என்றே கருதப்படமாட்டாது; அது இல்லா நிலையது (Null and void) ஆகும். காசோலை ஏடு கவன மில்லாமல் வைக்கப்பட்டிருந்த காரணத்தால், அதிகாரம் பெருத ஆள் அதை மோசடிக்குப் பயன்படுத்த நேர்ந்தது என்ற வாதம் வங்கியருக்குப் பலனளிக்காது (Behta Cooperative Development and Cane Marketing Union Limited and Another V. Bank of Bihar).

மேலெழுத்தில் கவனிக்க வேண்டியது

செலுத்து வங்கியர் கவனிக்கவேண்டிய மற்ருெரு செய்தி மேலெழுத்துக்களைப் பற்றியதாகும். தம்மிடம் கொடுக்கப்பட்ட காசோலை மேலெழுதப் படவேண்டுமா என்று முதலில் நோக்க வேண்டும். உத்தரவு காசோலைகள் (Order Cheques) மேலெழுதப் படவேண்டுமென்று முன்னரே கண்டோம். மேலெழுத்து முறை யாக அமைந்துள்ளதா என்றும் வங்கியர் பரிசீலிக்க வேண்டும்.

சட்டமுறையாகக் கொணர்பவர் காசோலையை மேலெழுத வேண்டுவதில்லை. இங்கிலாந்தில் கொணர்பவர் காசோலை மீது பணஞ் செலுத்த பெறுபவர் மேலெழுத்தம் செய்ய வேண்டி வற்புறுத்தப்படுவதில்லை. ஆனல் இந்தியாவிலுள்ள வங்கியர் கொணர்பவர் காசோலையிலும், அதைக் கொடுப்பவர் மேலெழுத் தம் செய்ய வேண்டுமென்று வற்புறுத்து கின்றனர். பணம் பெறு பவரும் மேலெழுத்திட்டு வங்கியரிடம் காசோலையை அளிக்கிருர். சட்டம் பேசி மேலெழுத்திட கொணர்பவர் மறுத்தால் வங்கியர் அவரைப் பணம் பெற்றதற்குச் சான்ருக முத்திரையிட்ட இரசீது எழுதிக் கையொப்பமிடும்படி வேண்டலாம். இந்தத் தொல்லைக்கு ஆளாக விரும்பாமல் கொணர்பவர் காசோலையை மேலெழுதி பணம் பெறுகிருர்.

ஒருமுறை கொணர்பவர் என்றுமே கொணர்பவர்

முதன் முதலில் வரையப்படும்போது கொணர்பவர் காசோலை (bearer cheque)யாக அமைந்த காசோலை எப்பொழுதும் கொணர்

பவர் காசோலையாகவே கருதப்படும். அதில் வெற்று மேலெழுத்து அல்லது ஆவணமாற்றத்தைக் கட்டுப்படுத்தும் சிறப்பு மேலெழுத்து ஏதும் இருந்தாலும் கூட அது கொணர்பவர் காசோலையென்றே சட்டம் கருதும். இங்ஙனம் மேலெழுத்து அமைந்த, முதலில் கொணர்பவருக்குச் செலுத்தும்படி எழுதப் பட்ட, காசோலையை, கொணர்பவருக்கு முறைப்படி செலுத்தம் செய்த பெயரவர் (drawee), பொறுப்பு தீர்ந்தவராவார் [மாற்று முறையாவணச் சட்டம், பிரிவு 85 (2)]. இந்த நிலையை ஒரு விதி யாக ''ஒருமுறை கொணர்பவர் என்றுமே கொணர்பவர்'' (Once a bearer always a bearer) என்று குறிப்பிடுவதுண்டு.

உத்தரவு காசோலை (order cheque) யைப் பெறுபவரே வங்கி யரிடம் கொடுத்தால், அவரது மேலெழுத்து தேவைப்படாது; ஆனால் பிறர் கொடுத்தால் அதை மேலெழுத்திட்டுக் கொடுக்க வேண்டும். இந்திய வங்கியர், உத்தரவு காசோலையை எவர் கொடுத்தாலும் மேலெழுத்து செய்து கொடுக்கும்படி வற்புறுத்து கின்றனர். செலுத்து வங்கியர் உத்தரவு காசோலை மீதான மேலெழுத்து முறையாக அமைந்துள்ளதா என்று கவனிக்க வேண்டும். இல்லாவிடில் அவர் பணஞ் செலுத்துவது முறைப்படி செலுத்தமாகாது.

பெறுவோர் பெயர் கற்பனை நபராக இருந்தால் வங்கியர் அக் காசோலையைக் கொணர்பவர் காசோலையாகக் கருதுவர். தமிழ்த் தாய் அல்லது உத்தரவுப்படி, முருகக் கடவுள் அல்லது உத்தரவுப் படி என்பது போன்ற நபருக்குச் செலுத்தும்படி எழுதப்பட்டிருக் கும் காசோலையை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

'சென்னைப் பல்கலைக்கழகம் அல்லது உத்தரவுப்படி', 'சென்னை உயர்நீதிமன்றம் அல்லது உத்தரவுப்படி', போன்றமைந்த காசோலைகளை முறையே அதிகாரம் பெற்ற பதிவாளர் (Registrar) மேலெழுத வேண்டும்.

மேலெழுதும் முறை

மேலெழுத்து செய்வதற்குக் குறிப்பிட்டமுறை ஏதும் வகுக்கப் படவில்லை யெனினும் வங்கியர் பழக்கப்படி அமைந்த முறையில் மேலெழுத்து இருக்க வேண்டும். பேனாவினால் மேலெழுத்து அமைவது நல்லது; பென்சிலில் எழுதியது திருத்துவதற்கு வாய்ப் பாக அமையக் கூடும். ரப்பர் முத்திரையால் மேலெழுத்து அமைய லாமெனினும் அது சரியான அதிகாரத்துடன் பயன்படுத்தப் படுகிறதா என்று வங்கியர் மனநிறைவடைய வேண்டும்.

மரியாதை, கௌரவ பட்டங்கள் மேலெழுத்தில் சேர்க்கப்பட வேண்டுமா? பெறுபவர் அல்லது மேலெழுத்துப் பெறுபவர் தாம் சாதாரணமாக எப்படி கையொப்பமிடுவாரோ அதே போன்று மேலெழுத்தும் அமைய வேண்டும். திரு. திருவாளர், அவர்கள், போன்ற சிறப்புச் சொற்கள் மேலெழுத்தில் இடம் பெறலாகாது. டாக்டர் க. சு. மணி என்பவருக்குச் செலுத்துமாறு எழுதப்பட்ட காசோலையை க. சு. மணி, M. D. என்று மேலெழுத்திடலாம்.

பெயர் எங்ஙனம் எழுதப்பட்டுள்ளதோ அதே போன்று மேலெழுத்திலும் குறிக்கப்படவேண்டும். உதாரணமாக முனுசாமி என்ற பெயரை முனுசுவாமி என்று காசோலையில் குறிப்பிட்டிருந்தால் மேலெழுதும் போது முனுசுவாமி என்றே தம் கையொப்பத்தை இடவேண்டும். அவர் விரும்பினுல், தமது பெயரைச் சரியாக எழுதும் முறையை அடைப்புக் கோடுகளிடையே சேர்க்கலாம்.

பெண்டிர் மேலெழுதும் போது, திருமணமானதால் தம் பெயரில் மாற்றம் ஏதும் நிகழ்ந்திருப்பின், அதைக் குறிப்பிடும் வகையில் மேலெழுத்து அமைய வேண்டும். எடுத்துக் காட்டாக செல்வி மங்கையர்க்கரசி ஆறுமுகம் என்பருக்குச் செலுத்தப்பட வேண்டி எழுதப்பட்ட காசோலை, அவர் திரு. மதனன் என்பவரைத் திருமணம் செய்து கொண்டபின், மேலெழுதப்பட்டால் மங்கையர்க்கரசி மதனன் முன்னுள் ஆறுமுகம் என்று கையொப்பம் அமைய வேண்டும். சாதாரணமாக, திருமதி மஙகை மதனன் என்பவருக்கு எழுதப்பட்ட காசோலையாக இருப்பின், 'மங்கை மதனன், மதனனின் மனைவி' என்று மேலெழுத்திடவேண்டும். திருமணமாகாத நிலையில் செல்வி, மங்கை ஆறுமுகம் என்பவர் பெயருக்கு வரையப்பட்ட காசோலையை 'மங்கை ஆறுமுகம்' என்று மேலெழுத்திட வேண்டும்.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்குச் செலுத்தப்படவேண்டிய காசோலையை, குறிப்பிடப்பட்ட அத்தனை நபர்களும் தனித்தனியே மேலெழுத வேண்டும். ஒரே நபர் எல்லாருடைய கையொப்பத்தையும் இட்டிருக்கிறுர் என்று வங்கியருக்குக் காசோலையைப் பார்த்ததும் புலனுனல், உறுதி பெறவேண்டி காசோலையைத் திருப்பி விடலாம்.

எழுதப்படிக்கத் தெரியாதவர் மேலெழுத்துச் செய்ய வேண்டியிருந்தால், அவர் தமது இடது கைப்பெருவிரற் குறியிட்டு அதைச் சாட்சி ஒருவர் நம் முகவரியுடன் கையொப்பமிடும்படி செய்ய வேண்டும்.

கூட்டு நிறுவனங்கள் சார்பாக மேலெழுதுகையில், அதிகாரம் பெற்றவர் தம் நிலையைத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். உதாரணமாக வீரன், வேலன் & கம்பெனி என்ற நிறுவனத்தின் சார்பாகச் செய்யப்படும் மேலெழுத்து 'வீரன்' வேலன் & கம்பெனிக்காக ச. வேலன், கூட்டாளி' என்று அமையவேண்டும்.

சங்கம், மன்றம் போன்றவைக்குக் காசோலை எழுதப்பட்டால், அதை மேலெழுத்துச் செய்யும் போது எவர் எந்த அலுவல் நிலையிலிருந்து செய்கிறார் என்று குறிப்பிடுவது முறையாகும். எடுத்துக் காட்டாக "செயலர், தமிழ் வளர்ச்சி மன்றம்" என்று பெறுபவர் பெயரமைந்த காசோலையை மேலெழுதும் போது அம் மன்றத்தின் செயலர் தம் கையொப்பமிட்டு, செயலர் தமிழ் வளர்ச்சி மன்றம் என்று குறிப்பிடவேண்டும்.

கம்பெனிகள் சார்பாகச் செய்யப்படும் மேலெழுத்து, அதிகாரம் பெற்ற மேலாளர், செயலர் அல்லது இயக்குநரால் செய்யப்படவேண்டும். கம்பெனி முத்திரையும், அதிகாரம் பெற்றவர் கையொப்பத்துடன், சேர்க்கப்பட வேண்டும்.

அதிகாரப்படி செய்யப்படும் மேலெழுத்து

செலுத்தும் வங்கியரும் உத்தரவுப்படி செய்யப்படும் மேலெழுத்தும் : வாடிக்கையர் அளித்துள்ள அதிகாரப்படி பிறர் கையொப்பமிட்டால், வங்கியர் கையொப்பமிட்டவருக்கு அதிகாரம் தரப்பட்டுள்ளதா என்று உறுதி செய்துகொள்ள வேண்டும். முறைப்படி அதிகாரம் பெற்ற பெறுபவரின் முகவர் மேலெழுதியது புலனாகும் வகையில் மேலெழுத்து அமைந்திருந்தால், செலுத்தும் வங்கியர் அஞ்சாமல் அதன்மீது பணஞ் செலுத்தலாம்.

காசோலைமீது பணம்பெற வேண்டிய ஒருவர் இறந்துவிட்டால் அவரது சட்டப்பிரதிநிதி (legal representative) அந்தக் காசோலையை மேலெழுத்துச் செய்யவேண்டும். இறந்தவர் சொத்தை ஆட்சி செய்ய நிறைவேற்றாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தால், தக்க அதிகாரம் பெற்ற ஒரு நிறைவேற்றாளர் பிறநிறைவேற்றாளர்களின் சார்பாகவும் தன்சார்பாகவும் கையொப்பமிடலாம்.

மேலெழுத்து முறையாவணம் முழுமைக்குமாக அமைய வேண்டும். முறையாவணத்தில் குறிக்கப்பட்ட தொகையில் ஒரு பகுதிமட்டும் மாற்றம் செய்யும் வகையில் அமையும் மேலெழுத்து செல்லாது. ஆனால் பகுதித்தொகை முன்னரே செலுத்தப்பட்ட நிலையில் எஞ்சிய பகுதிக்கு மட்டும் மேலெழுத்து செய்யப்படலாம்.

மேலெழுத்துக்கு எடுத்துக்காட்டு

பல்வகை மேலெழுத்துக்களுக்கு எடுத்துக்காட்டுகளை இனிக் காணலாம்.

பெறுபவர்	முறையான மேலெழுத்து	தவறான மேலெழுத்து
தனிநபர்		
திரு. முருகன்	முருகன்	திரு. முருகன்
டாக்டர் ப. வடிவேலு	ப. வடிவேல், M. D.	டாக்டர் வடிவேல்
கண்ணன் அவர்கள்	கண்ணன்	கண்ணன் அவர்கள்
சுப்பிரமணியம்	சுப்பிரமணியம்	சுப்பிரமணியன்
முகவர்		
சுந்தர நாராயணன்	உத்தரவுப்படி. சுந்தர நாராயணன் (கை-ம்) சிவன்	உத்தரவுப்படி. சுந்தர நாராயணன் உ.த்தரவுப்படி. சிவன் (கை-ம்) சிங்காரம்
	சுந்தர நாராயணன் அவரது வக்காலத்தார் (கை-ம்) சிவன்	சுந்தர நாராயணன் உத்தரவுப்படி, (கை-ம்) சிவன்
	சுந்தர நாராயணனுக்காக (கை-ம்) சிவன் முகவர்	சுந்தர நாராயணனுக்காக (கை-ம்) சிவன்
மணமான பெண்டிர்		
திருமதி வாசுகி	வாசுகி (கோபாலனின் மனைவி)	திருமதி வாசுகி
திருமதி ச. மூர்த்தி	மங்களம் மூர்த்தி (திருமதி) ச. மூர்த்தி	திருமதி ச. மூர்த்தி
செல்வி மீனாட்சி	மீனாட்சி ஆறுமுகம்	செல்வி மீனாட்சி
செல்வி ஆ. சுந்தர் (இப்பொழுது திருமணமானவர்)	ஆ. சேகர் (முன்னாள் சுந்தர்)	திருமதி ஆ. சுந்தர்
பொறுப்புரிமையர்		
ம. மாணிக்கம் (இறந்தவர்)	எ. அரசன் ந. எழிலன் காலஞ்சென்ற மாணிக்கத்தின் பொறுப்புரிமையர்	என் சார்பாகவும் காலஞ்சென்ற மாணிக்கத்தின் பிறபொறுப்புரிமையர் சார்பாகவும் (கை-ம்) எ. அரசன்
காலஞ்சென்ற மாணிக்க மூர்த்தியின் பொறுப்புரிமையர்	ச. கோவிந்தன், காலஞ்சென்ற மாணிக்க மூர்த்தியின் தனிப் பொறுப்புரிமையர்	காலஞ்சென்ற மாணிக்க மூர்த்தியின் அதிகாரம் பெற்ற பொறுப்புரிமையர் ச. கோவிந்தன்

பெறுபவர்	முறையான மேலெழுத்து	தவறான மேலெழுத்து
நிறைவேற்றாளர்		
க. கேசவன் (இறந்தவர்)	இ. சோமன் உ. அழகன் இறந்த கேசவனின் நிறைவேற்றாளர்கள்	கே. மல்லிகை கேசவனின் விதவை
,,	இறந்த கேசவனின சக நிறைவேற்றாளர், என் சார்பாக (கை-ம்) இ. சோமன்	அதிகாரப்படி. இறந்தகேசவனின் நிறைவேற்றாளர் இ. சோமன் உத்தரவுப்படி. (கை-ம்) உ. அழகன்
நிறுவனங்கள்		
திருவாளர்கள் ஈசன்	ஈசன் சகோதரர்கள் அல்லது ஈசன் & மகன்	ஈசன் & கம்பெனி
,,	உத்தரவுப்படி ஈசன் சகோதரர்கள் (கை-ம்) கணபதி	ஈசன் சகோதரர் களுக்காக (கை-ம்) கணபதி
,,	ஈசன் & ஈசன்	
ம. ஈசன் & கம்பெனி	ம. ஈசன் & கம்பெனி	ஈசன் & கம்பெனி
ம. ஈசன் & சகோத ரர்கள்	ம. ஈசன் & சகோதரர்கள்	ம. ஈசன் & கம்பெனி
செல்விகள் சுந்தரம்	சுந்தரம் சகோதரிகள்	செல்விகள் சுந்தரம்
திருவாளர்கள் ஈசன் & வாசன்	ஈசன் & வாசன்	ம. ஈசன்
அமீன் துணி வியா பாரம்	உத்தரவுப்படி. அமீன் துணி வியாபாரம் மு. நபி கூட்டாளி	
கூட்டுப் பங்கு நிறுமம் (கம்பெனி)		
நீலமலை வியாபாரக் கம்பெனி வரையறுக் கப்பட்டது	நீலமலை வியாபாரக் கம் பெனி வரையறுக்கப்பட்டது சார்பாக, ஆலன் செயலர்.	நீலமலை வியாபாரக் கம்பெனிக்காக ஆலன்
,,	நீலமலை வியாபாரக் கம்பெனி வரையறுக்கப் பட்டது. உத்தரவுப்படி ஆலன் செயலர்	நீலமலை வியாபாரக் கம்பெனி வரையறுக்கப் பட்டது சார்பாக ஆலன் உத்தரவுப்படி செயலர்
திருமகள் ஆலை வரையறு	திருமகள் ஆலை வரை யறு. சார்பாக ஏழுமலை நிருவாக இயக்குநர்	
,,	திருமகள் ஆலை வரையறு. சார்பாக ஏழுமலை மேலாளர்	ஏழுமலை திருமகள் ஆலைக்காக

செலுத்து வங்கியருக்குச் சட்டம் அளிக்கும் பாதுகாப்பு

செலுத்து வங்கியரும் பொய்யாவணம் புனைந்த மேலெழுத்தும் (Paying Banker and Forged Endorsement)

செலுத்து வங்கியருக்குக் காசோலையை எழுதியவரின் கையொப்பம் அவசியம் தெரிந்திருக்க வேண்டும். ஏனெனில் காசோலையை எழுதுபவர் வாடிக்கையர். அவர் கணக்குத் துவங்கு கையில் வங்கியரிடம் மாதிரிக் கையொப்பம் தருகிறார். காசோலையிலுள்ள கையொப்பத்தையும் மாதிரிக் கையொப்பத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து, அது வாடிக்கையர் கையொப்பம்தான் என்று திடமாக நம்பக்கூடிய நிலையில் வங்கியர் காசோலைக்குப் பணம் கொடுக்கிறார். வாடிக்கையர் கையொப்பம் பொய்யாகப் புனையப்பட்டால் வங்கியர் அதனை வாடிக்கையர் உத்தரவெனக் கருதமுடியாது. தவறிப் பணஞ் செலுத்திவிட்டாலும் வாடிக்கையர் கணக்கில் பற்று வைக்க முடியாது. காசோலையில் மேலெழுத்திடுபவர்கள் பலப்பல நபர்களாக இருப்பர். வங்கியருக்கு அத்தனை நபர்களுடைய கையொப்பமும் தெரிந்திருக்க முடியாது. இந்நிலையில் மேலெழுத்தில் அடங்கியுள்ள கையொப்பங்களில் ஏதும் பொய்க் கையொப்பம் இருந்து அதனைச் செலுத்து வங்கியர் அறியாமல் காசோலைமீது பணங் கொடுத்துவிட்டால், வங்கியர்மீது பொறுப்போ நட்டமோ சுமத்துவது முறையாகாது. எனவே தான் பொய்யாவணம் புனைந்த மேலெழுத்துக்கொண்ட காசோலைமீது செலுத்து வங்கியர் பணஞ் செலுத்தினால் அவரைக் காப்பதற்குச் சட்டம் வழி வகுத்திருக்கிறது. இதன்படி பெறுவோரால் அல்லது அவர் சார்பாக மேலெழுத்து செய்யப்பட்ட உத்தரவு காசோலையை முறைப்படி செலுத்தம் செய்த வங்கியர் பொறுப்புத் தீர்ந்தவராவார்.

மாற்று முறையாவணச் சட்டப் பிரிவு 85 (1)

இதன்படி சட்டம் அளிக்கும் காப்பைப்பெற இரு நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும். ஒன்று, மேலெழுதுக்கள் முறையாக அமைந்திருக்க வேண்டும். அதாவது மேலெழுத்துக்களைப் பற்றிய முறைகள் பிறழாமல் கடைப்பிடிக்கப் பட்டுள்ளனவா என்று கவனிக்க வேண்டும். முறையாக அமைந்திருப்பது என்றால் உண்மையாகவும், செல்லு நிலையில் அமைந்திருப்பது என்று பொருள் படாது. எனவே பெறுபவர் அல்லது அவர் அதிகாரம் பெற்ற பிறர் முறைப்படி மேலெழுத்துச் செய்துள்ளாரா என வங்கியர் கவனிக்க வேண்டும். இரண்டு, வங்கியர் காசோலையை

முறைப்படி செலுத்தம் (Payment in due course)செய்ய வேண்டும். இரு நிபந்தனைகளும் ஒருங்கே நிறைவேற்றப்பட்டால், மேலெழுத்துக்களில் ஏதும் பொய்யாவணம் புனைந்திருந்தாலும், பெயரவர் (drawee) தமது பொறுப்புத் தீர்ந்தவராகிறார். சட்டமுறையான இந்தப் பாதுகாப்பைப் பெறும் வங்கியர் மட்டுமல்லாமல், காசோலையை எழுதுபவரும் பொறுப்புத் தீர்ந்தவராகிறார், முறைப்படி செலுத்தம் என்ற தொடரின் பொருளை முன்னரே கண்டோம்.

கொணர்பவருக்குப் பணங் கொடுக்குமாறு உத்தரவிட்டு எழுதப்பட்ட காசோலையை, அதன்மீது வெற்று அல்லது சிறப்பு மேலெழுத்துக் காணப்படினும், அதைக் கொணர்பவருக்கு வங்கியர் முறைப்படி செலுத்தம் செய்தால் அவருடைய பொறுப்புத் தீர்ந்ததாகும் என்று மாற்று முறையாவணச் சட்டம் பிரிவு 85 (2) விதிக்கிறது. இதன் முக்கிய நோக்கம் கொணர்பவர் காசோலை மீது செய்யப்பட்டுள்ள மேலெழுத்தைப்பற்றி வங்கியர் கவலைப்பட வேண்டுவதில்லை என்பதாகும்.

கீறிய காசோலையைச் செலுத்தும் வங்கியருக்கும் சட்டம் பாதுகாப்பளிக்கிறது. கீறல் எந்த முறையில் பணஞ் செலுத்தப் படவேண்டுமென்று குறிக்கிறதோ அதன்படி செலுத்து வங்கியர் முறைப்படி செலுத்தம் செய்தால் அவர் மாற்று முறையாவணச் சட்டம், பிரிவு 128 இன்படி காக்கப்படுகிறார். உண்மையான உரிமையருக்குச் காசோலை செலுத்தப்பட்டால் என்ன உரிமை கோர முடியுமோ, என்ன நிலையில் வைக்கப்படுவரோ அதே உரிமையும் நிலையும் உள்ளவர்களாக செலுத்து வங்கியரும், காசோலை எழுதியவரும் கருதப்படுவர். இந்தப் பிரிவின்படி எழுதியவர் பாதுகாப்புப் பெறுவதற்குக் காசோலை பெறுபவர் உடைமையில் இருக்கவேண்டும்.

வங்கிப் பணவிடை செலுத்தம்

வங்கிப் பணவிடை (Bank draft) களுக்குப் பணஞ் செலுத்தும் வங்கியருக்கும் சட்டம் பாதுகாப்பு அளிக்கிறது. வங்கியொன்று தன் தலைமை அலுவலகத்தின்மீது அல்லது வேறு எந்தக் கிளை அலுவலகத்தின்மீது பணஞ் செலுத்துமாறு எழுதும் உத்தரவு வங்கிப் பணவிடை எனப்படும். எல்லா வகையிலும் இது காசோலை போன்றே அமைவதால் வணிக நடவடிக்கைகளில் பேரளவுக்குப் புழக்கத்திலிருந்து வருகிறது. காசோலைக்கும் பணவிடைக்குமுள்ள முக்கிய வேறுபாடு பணவிடையை எழுதுவதும் செலுத்துவதும் வங்கியரே. மற்றும் முதலில் பணத்தைச் செலுத்திப்

பின்னர் தான் பணவிடை பெறமுடியும். மேலும் வாடிக்கையரல்லாதார்கூட வங்கியொன்றை அணுகி பணவிடை பெறலாம். மாற்றுமுறையாவணச் சட்டம் பிரிவு 85 (1)இல் காசோலையைச் செலுத்தும் வங்கியருக்கு அளிக்கும் பாதுகாப்பை, பிரிவு 85 (2)இல் பணவிடையைச் செலுத்தும் வங்கியருக்கும் அளிக்கிறது. வங்கியொன்றின் ஓர் அலுவலகம் தனது பிறிதொருஅலுவலகத்தின் மீது கோரியதும் பணஞ் செலுத்துமாறு உத்தரவிட்டு எழுதிய பணவிடை, பெறுபவர் அல்லது அவர் சார்பாக மேலெழுத்துச் செய்யப்பட்டதாகக் காணப்பட்டால், அதனை முறைப்படி செலுத்தம் செய்யும் வங்கியர் பொறுப்புத் தீர்ந்தவராகிறார்.

பணஞ் செலுத்த மறுத்தல்

தன்மீது எழுதப்பட்ட காசோலைமீது பணஞ் செலுத்த மறுக்கும் சூழ்நிலைகளும் வங்கியருக்கு ஏற்படுவதுண்டு. அவற்றை இனி காண்போம்.

1. வாடிக்கையர் பணஞ்செலுத்துவதை நிறுத்த உத்தரவிடல்

தாம் எழுதிய காசோலை ஒன்று மீது பணஞ் செலுத்த வேண்டாம் என்று வாடிக்கையர் வங்கியருக்கு அறிவித்தவுடன், வங்கியர் அந்த உத்தரவைத் தம் ஏடுகளில் குறித்துவைத்து குறிப்பிட்ட காசோலை தம்மிடம் கொடுக்கப்பட்டால் அதன்மீது பணஞ் செலுத்த மறுத்துவிடுவார். பணஞ் செலுத்துகை நிறுத்தப்பட்ட காசோலையை எளிதில் அடையாளங்கண்டு கொள்ள காசோலையின் எண், தொகை, பெறுபவர் பெயர் போன்ற செய்திகளை வங்கியருக்குத் தெரிவிக்கவேண்டும். தந்தி அல்லது தொலைபேசி வழி நிறுத்தும் உத்தரவு அளித்திருந்தால், உடனே எழுத்து வழியாகவும் நிறுத்து உத்தரவை வங்கியருக்கு அனுப்பவேண்டும். செலுத்து வங்கியருக்கு நிறுத்து உத்தரவு எந்தக் காசோலையைக் குறித்து அனுப்பப்படுகிறதோ, அந்தக் காசோலை எழுதப்படாதது போன்றே கருதப்படும். Weanhold V. Spitta என்ற வழக்கில், நிறுத்தப்பட்ட காசோலைபெறுபவர் கையில் ஒரு பயனற்ற தாளாக ஆகிவிடுகிறது என்று கூறப்பட்டது.

காசோலையொன்றை பலர் கூட்டாக எழுதியுள்ளார்கள் எனக் கொள்வோம். இவர்களில் எவரேனும் ஒருவர் பணஞ் செலுத்தலை நிறுத்தும் உத்தரவை வங்கியருக்கு அளித்தால் வங்கியர் அதை ஏற்க வேண்டுமா? ஆம், எழுதியவர்களில் எவரொருவர் உத்தரவிட்டாலும் பணஞ் செலுத்தலை நிறுத்தி வைக்க வேண்டும்.

பணஞ் செலுத்துகை நிறுத்தலாணை வங்கியர் கையில் கிடைக்கு முன், குறிப்பிட்ட காசோலைமீது பணஞ் செலுத்தப்பட்டுவிட்டால் வங்கியர் அதற்கு பொறுப்பாக மாட்டார். ஆனால் உத்தரவு வங்கியரிடம் கொடுக்கப்பட்டபின் வங்கியர் அக்காசோலைமீது பணங்கொடுத்துவிட்டால் அவர் வாடிக்கையர் கணக்கைப் பற்று வைக்க முடியாது. தவருகப் பணஞ் செலுத்தியதால் மீதி இருப்பு குறைந்து அதன் காரணமாக முறையாக எழுதப்பட்ட காசோலை தவருக அவமதிக்கப்பட்டால் அதனுல் வாடிக்கையருக்கு ஏற்படும் நட்டத்தையும் வங்கியர் ஈடுசெய்ய வேண்டும்.

நிறுத்தப்பட்ட காசோலையைத் திருப்பிவிடும் வங்கியர் அதன் மீது "செலுத்தக்கூடாது என உத்தரவு" அல்லது "எழுதியவர் செலுத்துகையை நிறுத்தியுள்ளார்" என்று குறிப்பது வழக்கம்.

செலுத்துகை நிறுத்த ஏடு (Stop Payment Register) என்னும் ஏட்டில், நிறுத்தப்பட்ட காசோலைபற்றி உத்தரவை எழுதிவைத்து, குறிப்பிட்ட வாடிக்கையர் கணக்கு எழுதப்பட்ட பக்கத்திலும் சிகப்பு எழுத்துக்களில் இவ்வுத்தரவைச் செலுத்து வங்கியர் குறித்து வைத்திருப்பார். நிறுத்த உத்தரவு பின்னர் நீக்கப்படலாம். அங்ஙனம் செய்யப்பட்டால் அதையும் வங்கியர் சரியானமுறையில் அமைந்துள்ளதா என்று கவனித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. வாடிக்கையர் பித்துநிலையர் ஆகிவிட்டால், வங்கியர் அவர் அந்நிலையில் வரைந்த காசோலைகளுக்குப் பணங்கொடுக்க மறுப்பார். சட்டப்படி நோக்கினுல், வாடிக்கையர் தமது அலுவல்களைத் தாமேசெய்யும் நிலையை இழந்துவிட்டார் என்று சான்றுறுதி அளிக்கப்படும் வரை, வங்கியர் அவர் எழுதிய காசோலைகளை மதிக்கலாம். பித்துநிலையராகிவிட்டார் என்று அறிவிப்பு கிடைத்ததும் அவர் எழுதிய காசோலைகளை வங்கியர் 'எழுதியவரை நாடுக, (Refer to drawer) என்று குறித்து திருப்பிவிடுவார். பித்துநிலையாணை (Lunacy Order) கிடைத்ததும் அதிற் குறித்தபடி கணக்கினை வங்கியர் நடத்தி வரவேண்டும். பித்துநிலை நீங்கப்பெற்றது என்று மறுபடியும் நீதிமன்றம் சான்றுறுதி அளிக்கும்வரை, வங்கியர், அந்த வாடிக்கையரை கணக்கின்மீது நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதிக்கலாகாது.

3. வாடிக்கையர் நொடிப்பு நிலையடைந்தவர் எனக் கோரி நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கப்பிக்கப்பட்டுள்ளது என்ற செய்தியறிந்ததும் வங்கியர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். செய்தி

ஏதும் தமக்குத் தெரியாதவரை வாடிக்கையர் எழுதிய காசோலைகளை வங்கியர் மதிக்கலாம். ஆனால் வாடிக்கையர் நொடித்தவர் என்று தீர்ப்பளிக்கப்பட்டதும் அவருடைய சொத்தின் மீது நடவடிக்கைகளேதும் மேற்கொள்ளும் உரிமையை இழந்து விடுகிறார். அது முதல் அவர் எழுதிய காசோலைகளை வங்கியர் மறுத்துவிடுவார்.

4. வாடிக்கையர் இறந்துவிட்டால் அவரது சட்டமுறைப் பிரதிநிதியை, அவர் கணக்கிலுள்ள இருப்பு, சேரும். இறந்த செய்தி தெரியாமல் வங்கியர், அவர் உயிருடனிருக்கும்போது எழுதிய காசோலைகள்மீது இறந்தபின் பணஞ்செலுத்தியிருந்தாலும் வாடிக்கையர் கணக்கைப் பற்று வைக்கலாம்.

5. நீதிமன்றம் வாடிக்கையர் கணக்கிலிருந்து பணஞ் செலுத்தலாகாது என வங்கியருக்கு உத்தரவிட்டால் அவர் அதற்குக் கீழ்ப்படிந்தே ஆகவேண்டும். மாற்று உத்தரவு வரும்வரை வங்கியர் நீதிமன்றத்தின் கட்டளையில்லாமல் கணக்கின் மீது ஏதும் நடவடிக்கை மேற்கொள்ளலாகாது. நீதிமன்ற ஆணை பற்றுகைப் பொருள் வைத்திருப்பவர் மீதான உத்தரவாக (Garnishee Ordcr) வும் இருக்கலாம். இது குறித்து முன்னரே விளக்கமாக படித்துள்ளோம். Foster vs Manchester District Banking Co.

6. தனது கணக்கிலுள்ள இருப்பை வேறொருவருக்கு உரிமை மாற்றம் (assignment) செய்துவிட்டுப் பிறகு தன் கணக்குமீது வாடிக்கையர் காசோலை எழுதினால் வங்கியர் அதன்மீது பணங் கொடுக்க மறுப்பார்.

7. பொறுப்புரிமைக் கணக்கு (Trust Account) ஒன்றிலிருந்து பொறுப்புரிமையர் பணத்தை எடுத்துப் 'பொறுப்புரிமையர் அமைப்பு மீறல்' செயலுக்குப்பயன்படுத்த எத்தனித்தால் வங்கியர் அதைத் தடுக்கும் வகையில், பொறுப்புரிமையர் என்ற முறையில் அவர் எழுதிய காசோலையைச் செலுத்த மறுக்கலாம்.

8. காசோலையைக் கொடுக்கும் நபருக்கு உரிமை ஏதும் இருக்க முடியாது அல்லது குறைபாடுள்ள உரிமைதான் இருக்கக் கூடும் என்று வங்கியருக்குத் தெரியவந்தால் அவர் அக் காசோலையை மறுக்கலாம்.

தவறாகச் செலுத்திய பணத்தைத் திருப்பிப்பெறல்

தவறாக வங்கியர் பணஞ் செலுத்தி விட்டால் அதை திருப்பிப் பெறமுடியுமா என்ற கேள்வி கவனத்திற்குரியது. வங்கியரிட

மிருந்து பணத்தைப் பெறுபவர், தமக்கு அதைப்பெற உரிமை கிடையாது என்று தெரிந்தும் பெற்றுக்கொண்டார் என்றால் வங்கியர் பணத்தைத் திருப்பிப் பெறலாம். பணத்தைச் செலுத்துபவர் சரியான தொகையைக் கணக்கிட்டுச் செலுத்தும் கடமையுள்ளவராக இருப்பின், பணம் பெற்றவர் அதைத்திருப்பிக் கொடுக்க இயலா நிலையில் தம்நிலையை மாற்றிக் கொண்டுவிட்டால், தவருகச் செலுத்திய பணத்தைத் திருப்பிப் பெறமுடியாது (Skyring V. Greenwood, Holt V. Marhkam). பணஞ் செலுத்தப்பட்டது பொருண்மைத் தவறு (Mistake of fact) என அமைந்தால், அதைத் திருப்பிப்பெறலாம். பெருமாள் என்பவருக்குச் செலுத்த வேண்டிய தொகையைத் தவருகப் பெருமான் என்பவருக்குச் செலுத்திவிட்டால் அது பொருண்மைத் தவருகும். ஆனால் காலாவதியான கடனைச் செலுத்தல் சட்டத்தவறு (Mistake of Law) ஆகும். சட்டத்தவறு காரணமாகச் செலுத்தப்பட்ட தொகையைத் திருப்பிப் பெறமுடியாது. மற்றும், தவறு பணஞ் செலுத்தும் நபருக்கும் பணம் பெறும் நபருக்குமிடையே நிகழ்ந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் தவருகச் செலுத்திய பணத்தைத் திருப்பிப் பெறமுடியும். கீழ்க்காணும் நிலை இப்பொது விதிக்கு விலக்காகும் :-

(i) தவருகச் செலுத்தப்பட்ட மாற்றுமுறையாவணத்தின் மீதான பணத்தைத் திருப்பிப் பெறமுடியாது.

(ii) மற்றும் பணத்தைப் பெற்றவர், தான் முதல்வர் என்ற நிலையிலில்லாமல் முகவர் என்ற நிலையில் பணத்தைப் பெற்று, தவறைப் பற்றிய அறிவிப்பு பெறுமுன் அப்பணத்தை முதல்வரிடம் கொடுத்து விட்டாலோ அல்லது தன்னைப் பாதிக்கும் வகையில் தன் நிலையை மாற்றிக் கொண்டாலோ தவருகச் செலுத்தப்பட்ட பணத்தைத் திருப்பிப் பெறமுடியாது.

மறுக்கப்பட்ட காரணம் குறித்தல்

வங்கியர் பல காரணங்களினல் தமது வாடிக்கையர் எழுதிய காசோலை மீது பணஞ் செலுத்த மறுக்கலாம். ஆனல் எந்தக் காரணத்தால் காசோலையை மறுக்கிருர் என்று தெரிவிக்கும்படி சட்டப்படி கடமை ஏதும் கிடையாது. தீர்வக (Clearing House) விதிகளின்படி வங்கியர் காசோலையை மறுத்தால், அதற்குக் காரணம் குறித்தாலன்றி காசோலையைத் திருப்பிப் பிற வங்கியர் ஏற்கமாட்டார். ஆகவே, சட்டமுறையாகத் தேவைப்படாவிட்டாலும், வங்கியர் தாம் காசோலையை அவமதித்தால் அதற்குக்

காரணத்தையும் ஒருதாளில் குறித்து மறுக்கப்பட்ட காசோலை யுடன் திருப்பிவிடுவர். காரணத்தைக் குறிப்பதில் வங்கியர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பொருத்தமற்ற சொற்களை அல்லது தவறான சொற்களைப் பயன்படுத்தினால் வாடிக்கையர் அவதூறு வழக்குப்போட நேரலாம். எனவே மிகச் சுருக்கமான முறையில் வங்கியர் அவமதித்ததற்கான காரணத்தைக் குறிப்பது வழக்கம். எடுத்துக் காட்டாக கீழ்க்காணும் குறிப்புக்களை வங்கியர் பயன் படுத்துகின்றனர்.

(i) E. I. (Endorsement Irregular)— மேலெழுத்து ஒழுங்கற்றுள்ளது–பெறுபவர் பெயரும் மேலெழுத்தில் அமைந்த பெயரும் ஒத்துவரவில்லை.

(ii) E. N. C. (Effects Not Cleared)— எழுதுபவர் காசோலை, மாற்றுச்சீட்டு முதலிய வங்கியரிடம் தந்து வசூல் செய்து பணம் பெற்று அதைக் கணக்கில் வரவு வைக்குமுன் அப் பணத்தை எதிர்நோக்கிக் காசோலை எழுதப்பட்டிருப் பின், இந்தக் குறிப்புடன் வங்கியர் காசோலையை அவ மதித்துத் திருப்புவார்.

(iii) D. D. (Drawer Deceased) — எழுதியவர் இறந்து விட் டார்.

(iv) W. &. F. D. (Words and Figures Differ)— செலுத்த வேண்டிய தொகை குறிக்கப்பட்டது எண்ணிலும் எழுத் தாலும் ஒற்றுமையாக இல்லாது வேறு பட்டால் இக் குறிப்புடன் வங்கியர் காசோலையைத் திருப்பி விடுவார்.

(v) N. S. (Not Sufficient); N. E. (No Effects); N. F. (No Funds) — போதுமான பணமில்லை—கணக்கில் போது மான பணமில்லாதபோது இந்த விடையளிக்கப்படும்.

(vi) R. D. (Refer to Drawer) — எழுதியவரை நாடுக–இந்த விடையைப் பயன்படுத்துவதில் வங்கியர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இவ்விடை நிலைவடிவ அவதூறு (libel) என்று கொள்ளப்பட்டு, வாடிக்கையர் வழக்குத் தொடர வும் கூடும். காசோலையை மோசடித் திருத்தம் செய்திருக் கின்றனர் என்று வங்கியர் நினைக்க இடமிருக்கும் போது இக்குறிப்பைப் பயன்படுத்தி உண்மையை அறியலாம்.

(vii) Signature differs — எழுதியவர் கையொப்பமும் மாதிரிக் கையொப்பமும் வேறுபட்டால் இக்குறிப்பு பயன் படுத்தப்படும்.

(viii) Irregularly drawn — முறையாக எழுதப்படவில்லை.

(ix) Not Arranged For — ஏற்பாடு செய்யப்படவில்லை-போதுமான பணமில்லாமலும், மேல்வரைப் பற்றுக்கு ஏற்பாடு செய்யாமலும் வாடிக்கையர் தம் கணக்கிலுள்ள இருப்புக்கும் அதிகமான தொகைக்கு காசோலை எழுதியிருந்தால் இவ்விடையுடன் காசோலை திருப்பப்படும்.

(x) N. A. (No Account) — கணக்கு இல்லை. கணக்கு இல்லாமல் ஒருவர் காசோலை எழுதினுல் அவர் ஏமாற்று ஆள் ஆவார். ஆகவே, இந்தக் குறிப்பை எழுதும்போது மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தவருக இப்படிக் குறித்து விட்டால் வங்கியர்பாடு வருந்தத் தக்கதாகி விடும்.

வசூலிக்கும் வங்கியர் (Collecting Banker)

காசோலைகளை வசூல் செய்ய வேண்டுமென்ற கட்டாயம் ஏதும் வங்கியருக்கு இல்லையென்ருலும் எல்லா வங்கியர்களும், தம் பணிகளில், வசூல் பணியை மிக முக்கியமானதாகக் கருதுகின்றனர். மேலும், கீறிய காசோலைகளை வங்கியர் வழிதான் மாற்ற முடியுமாதலால், வாடிக்கையர் அனைவரும் தம் வங்கியர் வழியே காசோலைகளை வசூல் செய்து கொள்ளுகின்றனர். வாடிக்கையரின் காசோலையை வசூல் செய்யும் வங்கியர், அவரது முகவர் என்ற நிலையிலோ அல்லது மதிப்புக்காக உடையவர் (Holder for value) என்ற நிலையிலோ செயலாற்றலாம்.

முகவர் என்ற நிலை

வசூலிக்கும் வங்கியர், காசோலை மீது பணம் பெற்று அதற்குப் பின் தமது வாடிக்கையர் கணக்கில் வரவு வைத்தால், வாடிக்கையரது முகவர் என்ற நிலையில் செயலாற்றுகிருர். வசூலுக்குக் கொடுக்கப்பட்ட காசோலைகள்மீது பணம்பெற்று அதை வாடிக்கையர் கணக்கில் வரவு வைத்தபின்னரே அப்பணத்தை எடுக்க வாடிக்கையர் உரிமை பெறுகிருர். வாடிக்கையரின் முகவராகச் செயலாற்றும் வங்கியர் தமது வாடிக்கையரைவிடச் சிறந்த உரிமை பெறமாட்டார். வாடிக்கையருக்குக் காசோலை மீது உரிமையில்லாவிடில் அதை வசூலிக்கும் வங்கியருக்கும் ஏதும் உரிமை இருக்காது. ஆகவே பிறருக்கு உரிமையான காசோலையொன்றை வாடிக்கையர் சார்பாக வசூலிக்கும் வங்கியர், கையாடல் தீங்கு (Conver

ion) என்ற குற்றத்திற்கு ஆளாக நேரும். இக்குற்றத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள வங்கியர் நல்லெண்ணத்துடனும், கவனமின்மையின்றியும், த ன் கை யி ல் கொடுக்கப்பட்டபோது இருந்த காசோலையை வசூலித்தாக மெய்ப்பிக்க வேண்டும்.

மதிப்புக்காக உடையவர்

எந்த நிலையில் வசூலிக்கும் வங்கியர் மதிப்புக்காக உடையவர் (Holder for value) என்று கருதப்படுவார்? வசூல் செய்யப்படும் பொருட்டுக் கொடுக்கப்பட்ட காசோலை மீது பணம் பெறுமுன் வங்கியர், தமது வாடிக்கையருக்குப் பணங் கொடுத்தாலும் அல்லது அவர் கணக்கில் அக் காசோலையில் குறிக்கப்பட்ட தொகையை வரவு வைத்து அவரை அத்தொகையை எடுக்க அனுமதித்தாலும், அந்த வசூலிக்கும் வங்கியர் மதிப்புக்காக உடையவர் என்று கருதப் படுவார். காசோலையின் மதிப்பு அதிற்குறிப்பிட்ட தொகை யாகும். வசூலாவதற்குமுன் அத்தொகையை வாடிக்கையருக்குக் கொடுப்பதால் வங்கியர் மதிப்புக்காக உடையவர் எனப்படுகிறார். வாடிக்கையருக்குக் காசோலைமதிப்பைக் கீ ழ் க் கா ணு ம் எவ் வகையில் கொடுத்தாலும் வங்கியர் மதிப்புக்காக உடையவ ராவார்:—

(i) வசூலுக்குத் தரப்பட்ட காசோலையிற் குறிக்கப்பட்ட தொகையை ரொக்கமாகக் கருதிக் கணக்கில் வரவு வைக் கலாம்.

(ii) அக்காசோலையின் பேரில் கடன் அளிக்கலாம்.

(iii) வசூலுக்கு அக்காசோலையைச் செலுத்தியவுடன் அதிற் குறிப்பிட்ட தொகையை நேரடியாகக் கல்லாவிலிருந்து கொடுப்பது.

(iv) இருந்து வரும் மேல்வரைப் பற்று குறைக்க வேண்டி அக் காசோலையை ஏற்றுக் கொள்ளலாம்.

(v) காசோலை வ சூ ல் செய்யப்படுமுன் அதிற்குறித்த தொகையை எடுக்க வாடிக்கையரை அனுமதிப்பது.

மதிப்புக்காக உடையவர் என்ற நிலையிலுள்ள வங்கியர், முறைப்படி உடையவர் (Holder in due corse) என்றும் ஆவது குறிப்பிடத்தக்கது.

வசூலிக்கும் வங்கியர் மதிப்புக்காக உடையவர் என்ற நிலையில் செயலாற்றுகையில், அவர் வசூலிக்கும் காசோலையில் கடைசியாக

வுள்ள மேலெழுத்துக்குமுன் உள்ள மேலெழுத்து பொய்க் கையொப்பமாகவிருந்தால், காசோலையின் உண்மையான உரிமையருக்கு அவர் பொறுப்பாவார். கடைசியாக மேலெழுத்துச் செய்தவர் வாடிக்கையராக இருப்பதால், வங்கியர் அந்தத்தொகையை அவரிடமிருந்து திருப்பிப் பெறலாம். வாடிக்கையர் பணத்தைத் திருப்பித் தரும் வகையற்றவராயிருந்தால் நட்டத்தை வங்கியரே ஏற்க வேண்டும். வசூலுக்கு அனுப்பிய காசோலை அவமதிக்கப் பட்டால், வசூலிக்கும் வங்கியர் சம்பந்தப்பட்ட நபர்கள் மீது அவமதிப்பு அறிக்கை விடுத்துப் பின்னர் வழக்கு தொடரலாம். மேற்கண்ட நிலைகளில் வசூலிக்கும் வங்கியர் நல்லெண்ணத்துடன் தமது வாடிக்கையருக்குத் தொகையை செலுத்தியிருக்க வேண்டும்.

வங்கியருக்குச் சட்டமளிக்கும் பாதுகாப்பு

வசூலிக்கும் வங்கியர் நிலை, மதிப்புக்காக உடையவர் என்ற நிலையா அல்லது முகவர் என்ற நிலையா என்பதை நிருணயிக்க வேண்டிய அவசியம் என்ன? மதிப்புக்காக உடையவர் என்ற நிலையில் வங்கியர் தனது உரிமைகளுக்குத்தானே போராட வேண்டும். ஏனெனில் வசூலுக்குத் தரப்பட்ட காசோலை மீது அவருக்குத் தனியுரிமையும் உண்டாகிவிடுகிறது. ஆனுல் முகவர் என்ற நிலையில் செயலாற்றும் வசூலிக்கும் வங்கியருக்கு வாடிக்கையருக்கு இல்லாத எந்த உரிமையும் கிடையாது. வாடிக்கையருக்கு உரிமையில்லாத காசோலையைச் செய்தியறியாமல் வசூலித்தால் கையாடல் தீங்குசெய்த குற்றத்திற்கு வங்கியர் ஆளாவர். எனவே அவருடைய நலனைப் பாதுகாக்க வேண்டி, மாற்று முறையாவணச் சட்டம் சில ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது.

பாதுகாப்பு பெற நிபந்தனைகள்

மாற்று முறையாவணச் சட்டம், பிரிவு 131 வசூலிக்கும் வங்கியருக்குப் பாதுகாப்பு அளிக்கிறது. அதன்படி, பொது அல்லது சிறப்புக் கீறலுள்ள காசோலை மீது வாடிக்கையர் சார்பாக, நல்லெண்ணத்துடனும் கவனமின்மையின்றியும், பணம் பெற்ற காரணத்துக்காக மட்டும், காசோலை மீதான உரிமை குறைபாட்டால் உண்மையான உரிமையருக்கு வசூலிக்கும் வங்கியர் பொறுப்பாக மாட்டார். இந்த விதியை ஊன்றிப்படித்தால், எந்த நிபந்தனைகட்கு உட்பட்டு இந்தப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது என்று புலனுகும். முதலாவதாக, கீறிய காசோலையை வசூலிக்கும் வங்கியருக்குத்தான் பாதுகாப்பு அளிக்கப்படும். வங்கியர் கைவசம் வருமுன் காசோலை கீறலிடப்பட்டிருக்க வேண்டும். வங்கியர் கீறப்பட்ட பணவிடை (Draft) யை வசூலிக்கும் போதும் இப் பாதுகாப்பைப் பெறுகிருர்.

இரண்டாவதாக, வசூலிக்கும் வங்கியர் முகவர் என்ற நிலையில் காசோலையை வசூல்செய்ய வேண்டும். பணத்தைப் பெறுமுன் வாடிக்கையர் கணக்கில் தொகையை வரவு வைத்த நிலையிலும், சட்டப்படி, வங்கியர் கீறிய காசோலைமீது வாடிக்கையர் சார் பாகப் பணம் பெறுகிறார் என்று விளக்கம் தரப்பட்டுள்ளது.

மூன்றாவதாக, பாதுகாப்பைப்பெற வங்கியர் தமது வாடிக்கையர் சார்பாக காசோலையை வசூலிக்க வேண்டும். வாடிக்கையர் என்பது எவரைக் குறிக்கும் என்ற விளக்கத்தை முன்னரே கண்டுள்ளோம்.

நான்காவதாக, வசூலிக்கும் வங்கியர் பணத்தை நல்லெண்ணத்துடனும், கவனமின்மையின்றியும் பெறவேண்டும்.

கவனமின்மை (Negligence) என்றால் என்ன ?

கவனமின்மைக்கு எடுத்துக்காட்டாக கீழ்க் காண்பனவற்றைக் கூறலாம்.

(i) தக்க அறிமுகமில்லாமல் கணக்கு துவங்குவது (Guardians of St. John Hampstead V. Barclays Bank Ltd).

(ii) தமது வாடிக்கையருக்கு என்ன உரிமையிருக்கிறது என விசாரிக்காமல், அவரது பணியாண்மையர் (employer) மூன்றாம் நபர் அல்லது கொணர்பவருக்கு எழுதிய காசோலை மீது பணம் பெறுவது (Lloyds Bank V. E. B Savory & Co).

(iii) மேலெழுத்தில் உள்ள கையொப்பத்திற்கும், பெறுபவர் பெயருக்குமுள்ள வேறுபாட்டைக் கவனிக்காமல் பணம் பெறுதல் (Babins Junior and Sims V. London and South Western Bank Ltd).

(iv) தமது அதிகார உரிமைப்படி எழுதிய காசோலையை வசூலித்துத் தமது சொந்தக் கணக்கில் பணஞ் செலுத்துமாறு வாடிக்கையர் வேண்டிக் கொள்ள, விசாரணை ஏதுமின்றி வங்கியரும் அதற்கிசைந்து வாடிக்கையர் சார்பாகப் பணம் பெறுவது (Midland Bank Ltd. V. Reckitt).

(v) வாடிக்கையர், மூன்றாம் நபர் ஒருவரின் முகவராக தன் பெயருக்கே எழுதிக் கொண்ட காசோலை மீது வாடிக்கையருக்கு அக்காசோலை மீது உரிமையுண்டாவென விசாரணை ஏதுமில்லாமல், அவர் சார்பாகப் பணம் பெறுவது (Lloyds Bank V. Chartered Bank of India Ltd).

(vi) கம்பெனிக்கு மூன்றும் நபர்கள் அளித்த காசோலைகளை, அதன் ஒரே இயக்குநர் என்ற முறையில் மேலெழுத்திட்டு, அவற்றை வசூலித்துத் தன் கணக்கில் செலுத்துமாறு வாடிக்கையர் வேண்டிக் கொண்டால் கம்பெனியின் பணம் கையாடல் செய்யப்படுவதை வங்கியர் ஊகிக்க லாம் (Underwood V. Bank of Liverpool).

(vii) கூட்டு நிறுவனத்திற்குச் சேரவேண்டிய காசோலையை, நிறுவனத்தின் சார்பாக மேலெழுதி தமது தனிப்பட்ட கணக்கில் செலுத்தி அதை வசூலித்துத் தருமாறு கோரு வது (Bevan V. National Bank Ltd).

(viii) 'பெறுபவர் கணக்கு' எனக் குறிக்கப்பட்ட காசோலை மீதான பணத்தைப் பெறுபவரல்லாத வேறொரு வாடிக் கையருக்கு வசூல்செய்து பெறுவது.

(ix) எளிய நிலையிலுள்ள ஒரு வாடிக்கையர் கணக்கில் மிகப் பெரிய தொகைகளுக்குப் பணவிடைகள் (drafts) வசூல் செய்யப்படும் பொருட்டு அளிக்கப்பட்டால் வங்கியர் விசாரணை செய்யாமல் அவற்றை ஏற்றுக் கொள்வது சில சூழ்நிலைகளில் கவனமின்மையைக் காட்டும் (Lloyds Bank Ltd. V. Chartered Bank of India, Australia and China Ltd).

வசூலிக்கும் வங்கியரின் கடமை

தக்க கவனத்துடனும், விழிப்புடனும் வசூலிக்கும் வங்கியர் செயலாற்ற வேண்டும். வாடிக்கையர் தந்த காசோலைகளை நியாய மான காலவரையறைக்குள் வசூல் செய்ய வேண்டும். காசோலை ஏதும் அவமதிக்கப்பட்டால் உடனே வாடிக்கையருக்கு அதுபற்றி அறிவிக்க வேண்டும். பெரும்பாலும் காசோலை கொடுக்கப்பட்ட நாளன்றே வசூலுக்கு அனுப்பப்படும். நேரங்கழித்துக் கொடுக்கப் பட்டால் மறுநாள் வசூல் செய்யப்படும் பொருட்டு தீர்வகத்துக்கு அனுப்பப்படும். அவமதிப்பு ஏதும் நேர்ந்தாலும் அன்றைய அஞ்ச லில் வாடிக்கையருக்கு செய்தி அனுப்பப்படும். அஞ்சல் நேரம் தவறிவிட்டால் மறுநாள் செய்தி தெரிவிக்கப்பட வேண்டும்.

மாற்றுச் சிட்டுகளை வசூலித்தல் (Collection of Bills of Exchange)

மாற்றுச் சீட்டுகளை வசூலிப்பது வங்கியரின் சட்டமுறையான கடமையல்லவென்றாலும் தற்கால வங்கியரனைவரும் தம் வாடிக் கையரின் வசதி கருதி இப்பணியை மேற்கொள்ளுகின்றனர். மாற்

றுச் சீட்டுகளையொட்டிய நடவடிக்கைகளுக்கு வங்கியருக்குச் சட்டம் ஏதும் பாதுகாப்பு அளிக்கவில்லை.

மாற்றுச் சீட்டு முன்னரே ஏற்கப்பட வில்லையெனில் வங்கியர் அதை ஏற்பு (acceptance) பெறும் பொருட்டு பெயரவரிடம் (drawee) காட்ட வேண்டும். பெயரவர் நியாயமான வகையில் தேடப்பட்டும் காணப்படவில்லையெனில் மாற்றுச் சீட்டு அவமதிக் கப்படுகிறது.

கோரியதும் செலுத்தப்பட வேண்டிய மாற்றுச் சீட்டு, பெயர வர், புனைவுநபர் அல்லது ஒப்பந்தத் தகுதியற்றவராக இருத்தல், எவ்வளவோ முயன்றும் மாற்றுச் சீட்டைக் காட்டமுடியாமை, காட்டியதில் ஏதும் குறைபாடு இருப்பினும் பெயரவர் வேறு காரணம்பற்றி ஏற்பு செய்ய மறுப்பது போன்ற நிலைகளில், ஏற்பு செய்யவேண்டி மாற்றுச் சீட்டைக் காட்டாமை மன்னிக்கப்படும். ஏற்பு மாற்றுச் சீட்டின்மீது அமைதல் வேண்டும். ஏற்க மறுத்த தால் உண்டியல் அவமதிக்கப்பட்டால், வங்கியர் அவமதிப்பை வாடிக்கையருக்கு அறிவித்து மாற்றுச் சீட்டைத் திருப்பியனுப்ப வேண்டும்.

பணஞ் செலுத்தக் கோரி, வங்கியர் தம் வாடிக்கையர் தந் துள்ள மாற்றுச் சீட்டை, அதை எழுதியவர், ஏற்றவர் அல்லது பெயரவருக்குக் காட்ட வேண்டும். காட்டத் தவறினுல் உடைய வருக்கு மற்ற நபர்கள் பொறுப்பாகார். மாற்றுச் சீட்டை ஏற் பவர் தலைக்கடனுளி (Principal debtor) என்ற நிலையிலிருப்பதால், பணஞ் செலுத்தக் கோரி மாற்றுச் சீட்டை அவருக்குக் காட்ட வேண்டுவதில்லை. ஆனுல் பின்னர் ஏற்படும் வழக்கு எதிலும் தம் நிலைமை பாதிக்கப்படாமலிருக்கும் பொருட்டு ஏற்பவரிடம்கூட மாற்றுச் சீட்டைக் காட்டிப் பணஞ் செலுத்தக் கோரல் நன்று.

உடையவர் அல்லது உத்தரவு பெற்றவர், பெயரவர் தொழில் செய்யுமிடத்தில் வேலை நேரத்தில் மாற்றுச் சீட்டைப் பணஞ் செலுத்தக் கோரி காட்ட வேண்டும். மாற்றுச் சீட்டு முதிர் வடைந்த நாளன்று செலுத்தல் வேண்டிக் காட்டப்பட வேண்டும். உண்டியல் முதிர்வு நாள் சட்டப்படி கணக்கிடப்பட வேண்டும். கோரியவுடன், கண்டவுடன் அல்லது காட்டியவுடன் செலுத்த வேண்டும் என்றமைந்த மாற்றுச் சீட்டுகளல்லாத பிற மாற்றுச் சீட்டுகளுக்கு மூன்று சலுகை நாட்கள் (Days of Grace) தரப் படும். தவணை முதிர்ந்ததிலிருந்து இந்த மூன்று நாட்கள் கணக் கிடப்படும். மூன்ரும் நாள் பணம் செலுத்தப்பட வேண்டும்.

மாற்றுச் சீட்டு மறுக்கப்பட்டால் அம்மறுப்பினைச் சான்றுறுதி அதிகாரியால் சான்றுக் குறிப்பெழுதச் செய்வது வழக்கம். வாடிக்கையர் உத்தரவிட்டிருந்தாலன்றி வங்கியர் மறுப்புக் குறிப்பு பெறுவதில்லை.

பணஞ் செலுத்தாமையால் அவமதிக்கப்பட்ட மாற்றுச் சீட்டை வங்கியர் தமது வாடிக்கையருக்குத் திருப்பியனுப்பி விடுவார். முன்னரே அந்த மாற்றுச் சீட்டைத் தள்ளுபடி செய்து வாடிக்கையருக்குப் பணம் தந்திருந்தால், வங்கியர் அவமதிக்கப்பட்ட அந்த மாற்றுச் சீட்டை வாடிக்கையருக்குத் திருப்பிவிட்டு, வாடிக்கையரை அந்த மாற்றுச் சீட்டின் தொகை, வட்டி, பிற கட்டணங்கள் முதலியவற்றைச் செலுத்தக் கோருவார். தம் வாடிக்கையரிடமிருந்து பணத்தைப் பெறுவதில் ஏதும் ஐயமிருந்தால் வங்கியர், மாற்றுச் சீட்டின் மீது பொறுப்புள்ள நபர்களுக்கு அவமதிப்பு அறிவிப்பு (Notice of dishonour) அனுப்ப வேண்டும்.

8. வங்கியின் இருப்பு நிலைக்குறிப்பு
(Bank's Balance Sheet)

பொதுமக்களிடமிருந்து வைப்புக்கள் மூலம் பணத்தைத் திரட்டி, திரட்டிய பணத்தை ஆதாயந்தரும் வகையில் பயன் படுத்துவதே வங்கியர் தொழில் என முன்பு கண்டோம். தமது நடைமுறை முதலுக்கு, பொதுமக்களின் வைப்புக்கள் மட்டுமல் லாது, வேறு சில வழிகளிலும் வங்கியர் பணம் திரட்டுகின்றனர் திரட்டிய பணத்தை எவ்வெவ்வகையாக முதலீடு செய்கின்றனர் என்பதும் விளக்கமாக அறிதற்குரிய செய்தியாகும். இந்த செய்திகள் பற்றி உணர்த்தும் அறிக்கை வங்கியின் இருப்பு நிலைக் குறிப்பு என்று கூறினல் மிகையாகாது. வங்கியின் சொத்துக்களை யும் பொறுப்புக்களையும் எடுத்துரைக்கும் இப்பட்டியல் சட்டம் விதித்துள்ள படிவத்தில் அமைய வேண்டும்.

முதல்—பொறுப்புக்கள்

முதலில் வங்கியர் தமது தொழிலுக்கு எந்த முறையில் பணந் திரட்டுகிருர் என்பதை ஆராய்வோம். இருப்பு நிலைக்குறிப்பின் ''முதலும் பொறுப்புக்களும்'' (Capital and Liabilities) என்ற பக்கத் திலுள்ள இனங்களை நோக்கினல் எங்கிருந்து வங்கியருக்குப் பணங் கிடைக்கிறதென்று புலப்படும். முதலில் காணப்படுவது முதல் (Capital) என்னும் இனம். பங்குகளை வெளியிட்டுப் பெறும் பணமே முதல் ஆகும். இரண்டாவதாகக் காணப்படுவது காப்பு நிதியும் இதர பிற ஒதுக்குகளுமாகும். ஆண்டுதோறும் தனக்குக் கிடைக்கும் இலாபத்திலிருந்து குறிப்பிட்ட ஒரு விழுக்காடு அளவு தொகையைக் காப்புநிதிக்கு ஒதுக்க வேண்டும் என்று முன்னர் கண்டோம். வங்கி, காப்புநிதி மட்டுமல்லாது பிற ஒதுக்குகளும் ஏற்படுத்தி தனது இலாபத்திலிருந்து பணத்தை அவற்றிற்கு ஒதுக்குவதுண்டு. ஆக, காப்புநிதியும் பிற ஒதுக்குகளும் வங்கியின் இலாபத்திலிருந்து ஏற்படுத்தப்பட்டவையாகும். சுருங்கக்கூறின் செலுத்திய முதல், காப்புநிதி, பிற ஒதுக்குகள் ஆகியவையே

வங்கியரின் சொந்த பணமாகும். பல்வகை வைப்புக்களும், பிற வங்கியரிடமிருந்து பெறும் கடன்களும் வெளி நபர்களிடமிருந்து பெற்ற பணமாகும். வங்கித் தொழிலில் உள்ள சிறப்பு என்ன வெனில் பிறர் பணத்தையே பெரும்பான்மை முதலாக வைத்து நடத்தப்படும் தொழில் அது. இதையொட்டித்தான் வங்கித் தொழில் என்பது 'எனது மூளையும் உங்கள் பணமும்' என விளக்கப்பட்டது போலும். பிறர் பணம் என்பது பெரும்பாலும் வைப்புப் பணமாக இருக்கிறது. வைப்புப் பணத்திற்கும், வங்கியர் சொந்தப் பணத்திற்குமுள்ள விகிதம், வங்கியர் சொந்தப் பணம் எவ்வளவு குறைவாயுள்ளது என்பதைக் காட்டுகிறது. சொந்தப் பணத்திற்கும், வைப்புப் பணத்திற்குமுள்ள விகிதம் 1951-ஆம் ஆண்டு 8.7% ஆக இருந்தது. வைப்புப் பணம் மேலும் மேலும் அதிகரித்ததால் 1961ஆம் ஆண்டு இவ்விகிதம் 4.8% ஆகக் குறைந்தது. 1971ஆம் ஆண்டு இவ்விகிதம் 2.0% ஆகமேலும் குறைந்தது.

இதனுல் தமது தொழில் நடத்துவதற்கு வங்கிகள் எந்த அள விற்குப் பொதுமக்களிடமிருந்து பெறும் வைப்புக்களை நம்பியிருக் கின்றன என்பது புலனுகும். இருப்பு நிலைக்குறிப்பில் காணப்படும் பிற பொறுப்புக்கள் வங்கியருக்குக் குறிப்பிடத்தக்கத் தொகை யைத் திரட்டித்தருவன அல்ல. பிற வங்கியரிடமிருந்து கடன் பெறுவது மிகக் குறைவாக அமையும். சொத்துக்கள் பக்கத்தி லுள்ள இனங்கள் பற்றி வங்கியர் நிலையை ஆராயுமுன் அவரது தொழிலைச் சார்ந்த சில பொதுக் கருத்துக்களை நினைவுபடுத்திக் கொள்ளுதல் நன்று.

குறைந்த வட்டிக்கோ அல்லது வட்டி கொடுக்காமலோ பொதுமக்களிடமிருந்து திரட்டும் பணத்தை, சற்று அதிக வட்டிக் குப் பணம் தேவைப்படும் தக்க நபர்களுக்குக் கடன் அளித்து அதனுல் கிடைக்கும் ஆதாயத்தை நம்பித் தொழில் நடத்துபவரே வங்கியர் என்று கண்டோம். வங்கியருக்குள்ள மிக முக்கியமான சட்டப் பிணைப்பு (legal obligation) தமது வைப்பாளர்கள் பணத்தைக், கேட்டவுடன் அல்லது தவணைக்காலம் முடிந்தவுடன் திருப்பித் தருவதேயாகும். அடுத்தபடியாக, நடப்பு வைப்பல் லாத பிற வைப்புக்களின் மீது வட்டிதரும் பொறுப்பும் வங்கிய ருக்கு உண்டு.

நடப்பு வைப்பில் உள்ள தொகை எந்த நேரத்திலும் திருப்பிக் கோரப்படலாம். ஆகவே அந்த வைப்பில் உள்ள தொகையைத் திருப்பித் தருவதற்கு வேண்டிய பணம் வங்கியரிடம் அவசியம்

வங்கி இருப்புநிலைக் குறிப்பு

முதல் & பொறுப்புக்கள்

1. முதல் : அனுமதித்த முதல்
   வெளியிட்ட முதல்
   ஒப்பிய முதல்
   அழைக்கப்பட்ட முதல்
2. காப்புநிதியும் பிற ஒதுக்குகளும்
3. வைப்புக்களும் பிற கணக்குகளும்
   தவணை வைப்பு
   சேமிப்பு வைப்பு
   நடப்பு வைப்பு
4. பிற வங்கியரிடமிருந்து கடன்கள்
5. செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு
6. வசூலுக்குரிய மாற்றுச்சீட்டு-வரவுக்குரிய மாற்றுச்சீட்டு-எதிர்ப்பதிவு
7. பிற பொறுப்புக்கள்
8. ஏற்புக்கள், மேலெழுத்துக்கள், பிற சட்டப்பிணைப்புக்கள்-எதிர்ப்பதிவு
9. இலாப நட்டக் கணக்கு
10. நிகழ்வடைவான பொறுப்புக்கள் (Contingent Liabilities)

சொத்துக்கள்

1. ரொக்கம் : கையிருப்பு, ரிசர்வு வங்கி, ஸ்டேட் வங்கியிடமுள்ளது (அயல்நாட்டு செலாவணித் தாள் உட்பட)
2. மற்ற வங்கிகளுடன் உள்ள இருப்பு
3. அழைப்பு, குறுந்தவணைப் பணம் (Money at Call and Short Notice)
4. முதலீடுகள்:
   அரசு பிணையங்கள், பங்குகள், கடன் பத்திரங்கள் பிற பிணையங்கள், தங்கம்.
5. கடன்கள் (Advances) :
   கடன், ரொக்கக் கடன், மேல்வரைப்பற்று, தள்ளுபடி செய்யப்பட்ட, வாங்கப்பட்ட மாற்றுச் சீட்டு
6. வசூலுக்குரிய மாற்றுச்சீட்டு-வரவுக்குரிய மாற்றுச்சீட்டு எதிர்ப்பதிவு
7. ஏற்புக்கள், மேலெழுத்துக்கள், பிறசட்டப்பிணைப்புக்கள் முதலியவற்றிற்கு வாடிக்கையரின் பொறுப்புக்கள்-எதிர்ப்பதிவு
8. கட்டிடம் மனை-தேய்மானம் கழித்து
9. மனையணியங்களும், பொருத்தியவைகளும்-தேய்மானம் கழித்து
10. பிற சொத்துக்கள், வெள்ளி உற்பட
11. வங்கியச் சார்பற்ற சொத்துக்கள்
12. இலாப நட்டக் கணக்கு

இருக்க வேண்டும். ஆனால் நடப்பு வைப்பில் பெறும் அவ்வளவு பணத்தையும் வங்கியர் தம்மிடம் ரொக்கமாக வைத்திருக்க இயலுமா ? எவ்வளவுக்கெவ்வளவு பணத்தை வெளியில் முதலீடு செய்து வட்டி ஈட்டுகிறாரோ அவ்வளவுக்கவ்வளவு தொழிலில் ஆதாயம் கிடைக்கும். அதே நேரத்தில் கோரிய நபர்களுக்குப் பணத்தைத் திருப்பித்தர ஓரளவு ரொக்கமும் வைத்திருக்க வேண்டும். இந்த இரு செய்திகளையும் கருத்தில் கொண்டே வங்கியர் தம்மிடமுள்ள வைப்புப் பணத்தைப் பயன்படுத்தும் முறையை நிர்ணயிக்கிறார். தவணை வைப்புக்களைப் பற்றி வங்கியருக்குக் கவலை அதிகமில்லை. ஏனெனில் எத்தனைக்காலங் கழித்து அதைத் திருப்பித்தர வேண்டும் என்பது உறுதியாக நிருணயிக்கப் பட்டுள்ளது. அந்த காலம் முடியும் வரை வைப்பைத் திருப்பிப் பெறும் உரிமை வாடிக்கையருக்குக் கிடையாதாகையால், வங்கியர் அதைத் தம் விருப்பம்போல் பயன்படுத்தலாம். வாடிக்கையருக்கு அளிக்கும் வட்டியைவிட அதிகமான வட்டிக்குப் பணத்தைக் கடன்கொடுத்து ஆதாயமடையலாம். தம்மிடமுள்ள மொத்த வைப்புத் தொகையில், எவ்வளவு பணம் நடப்பு வைப்பிலும் எவ்வளவு பணம் தவணை வைப்பிலும் உள்ளது என்பதைப் பொறுத்து வங்கியர் எவ்வளவு பணத்தை ரொக்கமாகவும்' எளிதில் பணமாக மாற்றக் கூடிய சொத்தாகவும், பிற சொத்துக்களாகவும் வைத்திருக்க வேண்டும் என்று நிருணயிப்பார்.

வங்கியரும் ரொக்கநிலையும் (Banker and Liquidity)

வங்கித் தொழிலில் முக்கிய இடம்பெறும் கருத்து ரொக்கநிலை என்பதாகும். வைப்பாளர்கள் தமது வைப்பைத் திருப்பித் தருமாறு வங்கியரைக் கோரும்போது அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும் திறனையே ரொக்கநிலை எனுஞ்சொல் குறிக்கிறது. கோரியதும் பணத்தைத் திருப்பித்தர இயலாது போனால், வங்கியர் தம் வாடிக்கையரின் நம்பிக்கையை இழக்க நேரலாம். வாடிக்கையரின் நம்பிக்கையை இழந்துவிட்டால் வங்கியர் தமது தொழிலை நடத்த முடியாது. வங்கியர் மீது நம்பிக்கையில்லாவிடில் எவராவது அவரிடம் சென்று பணத்தை வைப்பாகச் செலுத்துவாரா ? பணம் பாதுகாப்பாக இருக்கும் ; கோரியபோது திருப்பித் தரப்படும்; தவணைவைப்பாக இருந்தால் பணம் பாதுகாப்பாக இருப்பதுடன் வட்டியும் கிடைக்கும் என்றெல்லாம் நம்பித்தானே பொதுமக்கள் வங்கியரிடம் வைப்புத் தொகை செலுத்துகின்றனர். அந்த நம்பிக்கை ஆட்டங்கண்டு விட்டால் வங்கிக்கு எங்கிருந்து வைப்புத் தொகை கிடைக்கும்? ஆகவேதான் ஒவ்வொரு வங்கியும் தனது வாடிக்கையரின் நம்பிக்

கையை முழுமையாகப் பெற்றிருக்க நடவடிக்கைகளை மேற்கொள்வர். வாடிக்கையர் கோரியதும் கொடுப்பதற்கு வேண்டிய பணம் எப்பொழுதும் தயாராக வைத்திருப்பர். தம்மிடமுள்ள பணம் மட்டுமல்லாமல் பிறவங்கிகளிலும் கோரியவுடன் பெற்றுக் கொள்ளும் வகையில் பணஞ் செலுத்தி வைத்திருப்பர். இதுமட்டுமல்லாமல் எளிதில் ரொக்கமாக மாற்றக்கூடிய சொத்துக்களிலும் பணத்தை முதலீடு செய்து வைத்திருப்பர். இந்த சொத்துக்களை மாற்றியல் சொத்து அல்லது எளிவரல் சொத்து (Liquid Assets) எனக்குறிப்பிடுவர். ரொக்கம், அழைப்பு, குறுந்தவணைக்கடன் (Money at Call and Short Notice); அரசினர் அல்லது அரசினர் போல்வுப் பத்திரங்களில் செய்யும் முதலீடு ஆகிய சொத்துக்களே மாற்றியல் சொத்து எனப்படும். வாடிக்கையர் கோரிக்கையை மதிக்க வேண்டி வங்கியருக்குப் பணம் தேவைப்பட்டால் இந்த மாற்றியல் சொத்துக்களை ரொக்கமாக்கி அவர் கோரிக்கையை நிறைவேற்றித் தம்மீதுள்ள நம்பிக்கை குலையாமலும், குறையாமலும் காத்துக் கொள்ளலாம். வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம், பிரிவு 24 இன்படி எல்லா வங்கிக் கம்பெனிகளும் தமது வைப்புப் பொறுப்பில் 25% அளவேனும் மாற்றியல் சொத்தாக வைத்திருக்கவேண்டும். அண்மையில் இது 28 % ஆக உயர்த்தப்பட்டது. இது மட்டுமல்லாமல், ரிசர்வு வங்கிச் சட்டப்படி எல்லா பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகளும், ரிசர்வு வங்கியுடன் தனது மொத்த வைப்புக்களில் 3% அளவுக்குக் குறையாமல் ரொக்க இருப்பு வைத்திருக்க வேண்டும். மற்ற வங்கிகள் இந்த 3% ரொக்க இருப்பைத் தம்மிடமோ அல்லது நடப்புக்கணக்கொன்றில் ரிசர்வு வங்கி, ஸ்டேட் வங்கி அல்லது அதன் துணை வங்கிகளுடன் அல்லது பகுதிப் பணத்தைத் தம்மிடமும் மற்றப் பகுதியை மேற்கூறிய வங்கிகளிடமும் வைத்திருக்க வேண்டும்.

ரொக்கநிலை - ஆதாயத்தன்மை

வாடிக்கையரின் நம்பிக்கையைத் தொடர்ந்து பெற்றிருக்க வேண்டி வங்கியர் எல்லா வைப்புத் தொகையையும் ரொக்கமாக வைத்திருக்க முடியாது. ரொக்கமாகக் கல்லாவில் வைத்திருக்கும் பணம் எவ்வித ஆதாயத்தையும் தராது. ஆனல் வாடிக்கையர் கோரும்போது பணஞ் கொடுப்பதற்கு ரொக்கம் தேவைப்படுகிறது. மற்றொரு புறம் தவணை வைப்புக்களின் மீது வட்டி தருவதற்கு வங்கியர் தம்மிடமுள்ள வைப்புத் தொகையைப் பல வகையாக முதலீடு செய்ய வேண்டிய நிலையிலுமுள்ளார். எனவே முரணுகத் தோன்றும் இரு கருத்துக்களை — ஒன்று ரொக்கநிலை, மற்றது ஆதாயத்தன்மை (profitability) — சிந்தித்துச் சீர்தூக்கி

இவற்றிற்கிடையே ஒற்றுமையுண்டாகும் முறையில் வங்கியர் தமது பணத்தைத் தக்கவாறு பயன்படுத்த வேண்டும். கோரிய போது வாடிக்கையருக்குத் தருவதற்கு வேண்டிய ரொக்கம் இருக்க வேண்டும். அதே நேரத்தில் நல்ல ஆதாயம் பெறும் வகையில் பணத்தை முதலீடு செய்து அதன்வழி கிடைக்கக் கூடிய வருமானத்தைக் கொண்டு தனது தொழிலை நடத்தும் நிலையில் இருக்க வேண்டும். இனி, வங்கியர் தம் வசமுள்ள பணத்தை முதலீடு செய்யும் முறையை ஆராய்வோம். இதற்கு நாம் வங்கியின் இருப்பு நிலைக்குறிப்பின் வலப்புறமுள்ள சொத்துக்கள் என்ற இனங்களைக் காணவேண்டும்.

சொத்துக்கள்

ரொக்க இருப்பு

எல்லாவித ரொக்கநிலைச் சொத்துக்களிலும் முதலிடம் பெறுவது ரொக்கமே. வாடிக்கையர் தமது பணத்தைக் கோரும் போது திருப்பித்தர பயன்படுவது ரொக்கம்தான். எனவே ரொக்க இருப்பை வங்கியரின் முதல்நிலைப் பாதுகாப்பு அணி (First Line of Defence) என்று குடுப்பிடுவது வழக்கம். தம்மிடமுள்ள மொத்த வைப்புத்தொகையில் எந்த அளவு ரொக்க இருப்பு வைத்திருக்க வேண்டும் என்று நிருணயிப்பது வங்கியரின் சிக்கலான பிரச்சனைகளுள் ஒன்றாகும். சட்டம் வகுத்தபடி ரொக்க இருப்பு வங்கியர் வைத்திருக்க வேண்டுவது ஒருபுறமிருக்க, அனுபவத்தின் வாயிலாக இவ்வளவு ரொக்க இருப்பு அவசியம் வைத்திருக்க வேண்டும் என்று வங்கியர் அறிவார். உதாரணமாக, கூலிவேலைக்கு ஆட்களை அமர்த்தித் தொழில் புரிபவர் வாராந்திர கூலி பட்டுவாடா செய்ய சனிக்கிழமைகளில் பெருந்தொகைத் தம் கணக்கிலிருந்து எடுப்பர். பொங்கல், தீபாவளி போன்ற திருநாட்களையொட்டித் தம் ஊழியர்களுக்குப் பரிசு, மேலூதியம் (bonus) தர வேண்டி தொழில் நிலையங்கள் நிறைய பணம் எடுப்பர். இதையெல்லாம் வங்கியர் கணக்கில் கொண்டு ரொக்க இருப்புத் தொகையை நிருணயிப்பார்.

ரொக்க இருப்பை நிர்ணயிக்கும் காரணிகள்

(i) வாடிக்கையர் தன்மையும் சுற்றுப்புறத்திலுள்ள தொழில் வகையும் இருப்பை நிருணயிக்க உதவும் முக்கிய காரணிகளாகும். நிலையான வருமானமுள்ள நடுத்தரவாழ்க்கை நிலையிலுள்ள மக்கள் நிறைந்த இடமானால் அளவான

இருப்பு போதும். ஆனால் தொழில் செழித்து விரைவாக இயங்கிவரும் இடமானால் பேரளவுக்கு நடவடிக்கைகள் இருக்கும். கணிசமான தொகை இருப்பாக வைத்திருக்க வேண்டும். பயிர்த் தொழில் வளர்ச்சிமிக்க இடமானால், குறிப்பிட்ட சில நேரங்களில் மட்டுமே எடுப்பு அதிகமாக இருக்கும்.

காசோலைப் பழக்கம்

(ii) மக்கள் தம்மிடையே நிகழும் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளைக் காசோலை எழுதியும் பெற்றும் நடத்தி வந்தால் ரொக்கம் அன்றாட நடவடிக்கைகளுக்கு அதிகம் தேவைப்படாது. இப்பழக்கம் பெருமளவுக்கு இருந்து வருமிடங்களில் இருப்பு அதிகம் தேவைப்படாது.

(iii) வங்கித் தீர்வகம் (Clearing House) செயலுற்று வருமிடங்களில் காசோலைகள் மீது செலுத்தப்பட வேண்டிய தொகை குறைவாகவே இருக்கும். வசூலிக்க வேண்டிய காசோலைகள் குறித்து ஒவ்வொரு வங்கியும் பிற வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய தொகையும், பிற வங்கிகள் அவ்வங்கிக்குச் செலுத்த வேண்டிய தொகையும் கணக்கிட்டு மிகுதியாகச் செலுத்த அல்லது பெற வேண்டிய தொகையை மட்டுமே ரொக்கம் கொடுத்து அல்லது பெற்று கணக்கைச் சரிக்கட்டி விடலாம். தீர்வக வசதியில்லாவிட்டால் ஒவ்வொரு வங்கியும் தன் மீது எழுதப்பட்ட அத்தனை காசோலைகளுக்கும் பணஞ் செலுத்த ரொக்கம் வைத்திருக்க வேண்டும்.

(iv) வங்கியர் வைத்திருக்கும் இருப்பின் அளவு அவர் முதலீடு செய்துள்ள ஈட்டுக்கடன்களின் தன்மையையும் பொறுத்திருக்கிறது. சில வகைக் கடன்கள் மீது வங்கி, ரிசர்வு வங்கியிடமிருந்து மறுநிதி (Refinance) வசதி பெறலாம். மற்றும் மாற்றுச் சீட்டுகளைத் தள்ளுபடி செய்திருந்தால் குறிப்பிட்ட நாளன்று மாற்றுச் சீட்டிற்குப் பணம் கிடைக்கும். மேலும், தள்ளுபடி செய்த மாற்றுச்சீட்டுக்களை அவசியம் ஏற்படும்போது மைய வங்கியிடம் மறு தள்ளுபடி (Rediscount) செய்து பணம் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்ட ரொக்க இருப்பு மட்டுமல்லாமல், ரிசர்வு வங்கிச் சட்டப்படி, பின்னிணைப்புப்

பட்டியலிலுள்ள வங்கிகள் (Scheduled banks) அனைத்தும் தமது மொத்தகேட்பு, தவணைப் பொறுப்புக்களில் குறைந்தது 3% அளவு ரொக்கமாக ரிசர்வு வங்கியிடம் வைத்திருக்கவேண்டும். இந்த 3% வங்கியின் அன்றாடசராசரி இருப்பை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படும். இந்த ரொக்க விகிதத்தை 3% இலிருந்து 15% வரை உயர்த்த ரிசர்வு வங்கிக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. நடைமுறையில் எல்லா பின்னிணைப்புப்பட்டியலிலுள்ள வங்கிகளும் ரிசர்வு வங்கியிடம் சட்டப்படி வைத்திருக்க வேண்டிய குறைந்த அளவு ரொக்கத்திற்கும் அதிகமாகவே வைத்திருக்கின்றனர். இத்த சட்டமுறையான ரொக்க இருப்பு மட்டுமின்றி, பின்னிணைப் புப்பட்டியலிலுள்ள வங்கிகள் பிற வங்கிகளுடன் நடப்புக் கணக்கில் பணம் வைத்திருக்கின்றன. இப்பணமும் கையிலுள்ள ரொக்க மெனக் கருதப்படும். பின்னிணைப்புப்பட்டியலில் சேர்க்கப்படாத வங்கிகள் வங்கிய ஒழுங்காற்றுச்சட்டப்படி தமது மொத்த கேட்பு, தவணை பொறுப்புக்களில் 3% அளவுக்கு ரொக்கத்தைத் தம் மிடமோ அல்லது ரிசர்வு வங்கி, ஸ்டேட் வங்கி அல்லது அதன் துணை வங்கிகளிடம் நடப்புக்கணக்கிலோ அல்லது பகுதி தம்மிடமும், மற்றதை அம்மாதிரி நடப்புக் கணக்கிலோ வைத்திருக்க வேண்டும். இவையல்லாது பிற வங்கிகளுடன் நடப்புக் கணக்கில் வைத் திருக்கும் பணமும் ரொக்க இருப்பு என்றே கருதப்பட வேண்டும். ஏனெனில் தேவையேற்படும் போது பணத்தை எடுக்கும் வசதி இதில் உண்டு.

இதுவரை கண்ட ஏற்பாடுகளல்லாது வங்கி ஒழுங்காற்றுச் சட்டம் எல்லா வங்கிகளையும் தமது கேட்பு, தவணைப் பொறுப்புக் களில் 25% அளவு தொகைக்கு ரொக்கநிலைச்சொத்துக்களாக, அதா வது ரொக்கம், தங்கம் அல்லது வில்லங்கமில்லாத அனுமதிக்கப் பட்ட பிணையங்களாக, வைத்திருக்க வேண்டும் என விதித்துள்ளது.

அழைப்புக் கடனும் குறுந்தவணைக் கடனும்

கோரியவுடன் திருப்பித் தரவேண்டிய கடனை அழைப்புக்கடன் என்பர். கோரிய நேரத்திலிருந்து இருபத்து நான்கு அல்லது நாற்பத்தெட்டுமணி நேரத்தில் திருப்பித்தர வேண்டிய கடனைக் குறுந்தவணைக்கடன் என்பர். இவ்வகைக் கடன்களைக் கொடுப்பது வங்கியருக்கு இரண்டுவிதத்தில் நன்மை பயக்கிறது. ஒன்று, வங்கி யருக்கு அவசரமாகப் பணம் தேவைப்படும்போது கொடுத்த கடனை விரைவில் திருப்பிப் பெறலாம். மற்றொன்று, மற்றபடி ஆதாயம் ஏதும் தரக்கூடவல்லாத ரொக்கத்தை, குறுந்தவணைக் கடன்தர பயன்படுத்தினல் அதன்வழி வங்கியருக்குச் சிறிதள வேனும் வருமானம் கிடைக்கும். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்

வீழ்த்துவது போல, இக்கடன்கள் ரொக்கநிலைக்கு ஆதரவாக விளங்குகின்றன; அதே நேரத்தில் வங்கியருக்கு வருமானத்தையும் தேடித்தருகின்றன. உபரியாகப் பணம் வைத்திருக்கும் வங்கிகள் அவசரமாக ஓரிரு நாட்களுக்கு அல்லது மிகக்குறுகிய காலத்திற்குப் பணம் தேவைப்படும் வங்கியருக்குக் கடன் கொடுத்து உதவவும் இக்கடன்முறை கையாளப்படுகிறது. பணச் சந்தையில் இக்கடன் மீதான வட்டி தேவை-அளிப்பு நிலைகளையொட்டி நிலவும். 1960-61இல் 4.25% ஆக இருந்த அழைப்புக்கடன் வட்டி 1970-71இல் 6.50% ஆக உயர்ந்தது. 1971 ஏப்ரல் முதல் வாரத்தில் இது 10.00%க்கும் அதிகாரமாக நிலவியது. பணச் சந்தையில் நிலவரம் எளிதாக இருக்கும்போது வட்டி குறைவாகவும், பணத்தேவை மிகுந்து பணங் கிடைப்பது அரிதாக இருக்கும்போது வட்டி அதிகமாகவும் இருக்கும். நம் நாட்டின் பணச் சந்தை இன்னமும் திட்டவட்டமாக அமையாத நிலையில் இந்த இனத்தில் முதலீடு செய்யப்பட்ட தொகை மொத்த வைப்புத்தொகையில் 0.70% அளவாகவே 1971 ஏப்ரல் மாதத்தில் இருந்தது. வைப்புத்தொகை ரூ. 6,000 கோடிக்கும் சற்று அதிகமாக இருந்த அச்சமயம் அழைப்புக்கடனில் ரூ. 42 கோடியளவே முதலீடு செய்யப்பட்டிருந்தது.

பங்குச் சந்தை (Stock Market)யும், மாற்று உண்டியல் சந்தை (Bill Market)யும் நன்கு வளர்ந்துள்ள நாடுகளில், வங்கிகள் அழைப்புக் கடனில் செய்யும் முதலீடு கணிசமான தொகையாக இருப்பதைக் காணலாம்.

அழைப்புக்கடன், ரொக்கத்திற்கு அடுத்தபடியாக மிக எளிதாக ரொக்கமாகக்கூடிய தன்மைபெற்றிருப்பதால் அதை இரண்டாம்நிலை பாதுகாப்புஅணி (Second line of defence) என்பது வழக்கம்.

முதலீடுகள் (Investments)

தம் வசமுள்ள பணத்தில் கணிசமான ஒரு அளவை வங்கியர் முதலீடுகள் வாங்குவதில் பயன்படுத்திவருகின்றனர். பெரும்பாலும் அரசினர் பிணையங்களிலும், அரசினரது போன்ற பிணையங்களிலும், பங்குமாற்றுப் பிணையங்களிலும் வங்கியர் முதலீடு செய்வர். அரசினர் பிணையங்களும், அரசினரதுபோன்ற பிணையங்களும் மிகவும் நம்பிக்கை வாய்ந்தவையாதலால் வங்கியர் முதலீடுகளில் ஈடுபடுத்தும் தொகையில் பேரளவை இப்பிணையங்கள் வாங்குவதில் பயன்படுத்துகின்றனர். இப்பிணையங்களில் செய்யும் முதலீடு நூற்றுக்குநூறு பாதுகாப்பாக அமைவதால் இவற்றைச் சிறப்பீட்டுப் பத்திரங்கள் (gilt edged securities) என்று குறிப்பிடுவ

துண்டு. பின்னிணைப்புப்பட்டியலிலுள்ள வங்கிகள் தமது மொத்த வைப்புத் தொகையில் 24% அளவு, 1971ஆம் ஆண்டில், அரசினர் பிணையங்களில் (Government Securities)மட்டும் முதலீடு செய்திருந் தனர். இதற்கு இரண்டு காரணங்களுண்டு. தற்பொழுது அமுலிலுள்ள சட்டப்படி எல்லாவங்கிகளும் தம்மிடமுள்ள மொத்த வைப்புத் தொகையில் 28% அளவேனும் ரொக்கநிலைச் சொத்துக் களாக (Liquid Assests) வைத்திருக்க வேண்டும். அரசினர் பிணை யங்கள் ரொக்கநிலைச் சொத்தாகக் கருதப்படுவதால் வங்கியர் இவற்றில் முதலீடு செய்வது சட்டப்படியான விதிகளையொட்டி நடக்கவும் துணைசெய்கிறது. இரண்டாவதாக, வியாபாரநிலை மந்தமாக இருக்குங் காலங்களில் தம்மிடமுள்ள உபரிப் பணத்தை முதலீடு செய்ய நல்லதொரு சாதனமாக அரசினர் பிணையங்கள் அமைகின்றன. கடந்தசில ஆண்டுகளாக அரசினர் அவ்வப்போது வெளியிடும் கடன் பத்திரங்களை வங்கிகள் பெருமளவில் வாங்கு கின்றன. குறிப்பாக, ஐந்தாண்டுத் திட்டங்களைச் செயல்படுத்த அரசு கடன்பத்திரங்களை வெளியிட்டுப் பணந்திரட்டும்போது வங்கிகள் அவற்றைப் பெருமளவில் வாங்குகின்றன. நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வங்கிகள் இவ்வகையாகவும் உதவுவது அவசியம் தானே! பெரும் வணிக வங்கிகள் நாட்டுடை மையாக்கப்பட்டது (ஜுலை 1969) முதல், நாட்டின் முன்னேற்றத் திட்டங்களுக்குக் கைகொடுத்து உதவ மேலும் பெரியதொரு பொறுப்பு ஏற்பட்டநிலையில் அரசினர் பிணையங்களில் வங்கிகள் முதலீடு செய்வது இயற்கையே.

பங்குமாற்றுப் பிணையங்களில் வங்கியர் முதலீடு செய்வதில் அவருக்கு பல நன்மைகளுண்டு. அவசரமாகப் பணம் தேவைப் படும்போது இவற்றை ஈடாகவைத்து நியாயமான வட்டிக்குக் கடன் வாங்க முடியும். தேவைப்பட்டால் இவற்றை விற்பதும் எளிதே. இதனால் இவற்றை மூன்றும்நிலை பாதுகாப்புஅணி (Third line of defence) என்றும் குறிப்பிடுவதுண்டு. மற்றும் இவ்வகை முதலீடுகள் வங்கியருக்கு நியாயமான, நிலையான வருமானத்தைத் தருகின்றன. மேலும், வங்கியர் நல்ல வகையான முதலீடுகளில் தான் பணத்தைப் போட்டிருக்கிறார் என்று பொதுமக்கள் இருப்பு நிலைக்குறிப்பின்வழி அறிந்துகொள்ளும் போது வங்கியரின் மீதான நம்பிக்கை உறுதிப்படுகிறது.

பிணையங்களைத் தேர்ந்தெடுத்தல்

எந்த அடிப்படையின்பேரில் வங்கியர்தாம் முதலீடு செய்யும் பிணையங்களைத் தேர்ந்தெடுக்கிறார்.

1. தமதுபணம் பாதுகாப்பாக இருப்பதையே முதல் செய்தியாக வங்கியர் கருத்தில் கொள்வார். நாம் அடிக்கடி நினைவு படுத்திக் கொள்ள வேண்டிய செய்தி வங்கியர் பிறருடைய பணத்தைக் கொண்டு தம் தொழிலை நடத்துகிறார். ஆகவே அந்தப் பணம் மிகவும் உன்னிப்பாகப் பாதுகாக்கப்பட வேண்டும். பணத்தை முதலீடு செய்யும் எந்த நபரும் தமது முதல்பத்திரமாக இருக்க வேண்டுமென விரும்புவது இயல்பே. முதலீடு செய்யப் படும் பிணையத்தை வெளியிடுபவர் யார் என்று ஆராய வேண்டும். ஒரு தனிநபர் அல்லது கம்பெனி வெளியிடும் பிணையத்தைவிட, அரசினர் வெளியிடும் பிணையம் மக்கள் முழு நம்பிக்கைக்குப் பாத்திரமாவது எதிர்பார்க்கக் கூடியதே. பொறுப்புள்ள எந்த அரசும் தான் வெளியிட்ட பிணையங்கள் மீதான பணத்தைக் குறித்த காலம் வந்ததும் திருப்பித்தர மறுக்காது. ஆனால் கம்பெனிகள் வெளியிடும் பிணையங்களைப் பற்றி இந்த அளவு உறுதியாகப் பேசமுடியாது. கம்பெனியின் தொழில், நிருவாகத்திறமை எதிர்காலத் திட்டங்கள், கடந்த ஆண்டுகளில் இருந்தநிலை முதலிய பற்பல செய்திகளின் அடிப்படையிலேதான் அது வெளியிடும் பிணையம் மதிப்பிடப்படும். பிணையத்தின் விலையில் ஏற்றத்தாழ்வு மிகுதியாக இல்லாமல் ஓரளவுக்கு நிலையான முறையில் அமைந்திருத்தல் நன்று.

2. முதலீடு செய்யக்கூடிய பிணையங்கள் எளிதில் விற்கக்கூடிய தன்மையுள்ளனவாக இருக்க வேண்டும். வங்கியரின் பொறுப்புக்கள் பெரும்பாலும் கோரியதும் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டியனவாகும். ஆகவே அவருக்கு அவசரமாகப் பணம் தேவைப் படும் நேரத்தில் முதலீடுகளை விற்றுப் பணமாக்க நேரலாம். நட்டமேதுமின்றி, எளிதாக விற்கக்கூடிய பிணையங்களையேவங்கியர் விரும்பி வாங்குவர். அரசினர் பிணையங்களையும் அரசினரது போன்ற பிணையங்களையும் பெருமளவுகளில் எளிதாகவும் நட்டமில்லாமலும் விற்கமுடியும். ஆனால் பெரிய கம்பெனிகளின் பங்குகளை பெருமளவில் பங்குச் சந்தையில் விற்க முன்வரும் போது விலைச் சரிவு ஏற்படக்கூடும். சிலவகைக் கம்பெனிகளின் பிணையங்களை விற்பது பெரும்பாடாகவும் இருக்கக்கூடும். சுருங்கக் கூறின், எளிதில் ரொக்கமாக மாற்றக்கூடிய தன்மையுடைய பிணையங்களே வங்கியர் முதலீடு செய்யத் தகுந்தவையாகும்.

3. செய்துள்ள முதலீடு நியாயமான வருமானம் தருவதாக அமையவேண்டும். அதிகமாக வருமானம் வரவேண்டுமென்ற பேராசையில் முதலீடு பாதுகாப்பானதா என்பதை மறந்துவிடக் கூடாது. முதலீடு பாதுகாப்பாக இருக்கும் என்று உறுதியாக

நம்பக்கூடிய பிணையத்தில்தான் வங்கியர் முதலீடுசெய்வார். தாம் முதலீடு செய்ய விரும்பும் தொகைக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கும் என்று கணக்கிட்டுப் பிறகுதான் பிணையத்தை வாங்கு வார். சந்தையில் பிணையத்தின் விலை என்ன என்பதுதான் வருமான விகிதத்தை நிருணயிக்கிறது. தள்ளுபடி செய்து விற்கப் படும் விலைகொண்ட பிணையம், வெளியிட்ட சமயத்தில் உறுதி செய்த வருமானத்தைவிட அதிக வருமானத்தைத் தரும்.

மேற்கண்ட மூன்று சிறப்பியல்புகளேயும், அதாவது பாது காப்பு, ரொக்கநிலை, நியாயமான வருமானம்-அரசினர் பிணையங் கள் (Government Securities) தம்முள் கொண்டிருக்கின்றன. 1971ஆம் ஆண்டு, மே மாத இறுதியில். வணிக வங்கிகள் ரூ. 1,364 கோடி அரசினர் பிணையங்களில் முதலீடு செய்திருந்தன. மொத்த வைப்புக்கள் ரூ. 6,079 கோடியாக இருந்தபோது, மேற்கண்ட அளவு முதலீடு செய்யப்பட்டது என்பதை விகிதக் கணக்கில் கூறினால், 22.45°/。 வைப்புக்கள் அரசினர் பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டன எனலாம். பத்து ஆண்டுகட்கு முன்பு வைப்புத் தொகை ரூ. 1, 746 கோடியாக இருந்தபோது, ரூ. 558 கோடி அதாவது, 31-99°/。 அரசினர் பிணையங்களில் ஈடுசெய்யப்பட் டிருந்தது.

அரசினர் பிணையங்கள் மிகவும் பாதுகாப்பான முதலீடுகளாக இருப்பதுடன், அவற்றின் விலையிலும் ஏற்றத் தாழ்வு மிகுதியாக இருப்பதில்லை. விரைவில் முதிர்வடையப் போகும் அரசினர் பிணை யங்களுக்கு நல்ல சந்தையிருப்பதால் வங்கியர் அவற்றில் முதலீடு செய்வதை விரும்புவர். நீண்ட காலங்கழித்து முதிர்வடையும் பிணையங்களைவிட விரைவில் முதிர்வடையக் கூடிய பிணையங்களின் விலைகளில் ஏற்றத்தாழ்வு மிகக் குறைவாக இருக்கும். மற்றும் வங்கி வீதம் (Bank Rate) உயர்த்தப்பட்டால் நீண்டகால முதிர் வுடைய பிணையங்களின் மதிப்பு குறையுமளவிற்கு விரைவில் முதிர விருக்கும் பிணையங்களின் மதிப்பு குறைவதில்லை. இப் பிணையங் கள் மீது கிடைக்கும் வருமானம் குறைவாகவே இருந்தாலும் நிலையானதாக இருக்கிறது. அவசரமாக வங்கியருக்குப் பணந் தேவைப்படும் போது, இப் பிணையங்களை ரிசர்வு வங்கியிடம் பிணை யாக வைத்துக் கடன் பெறலாம். இவ்வளவு நன்மைகள் இருப்ப தால்தான் வங்கிகள் தமது மொத்த வைப்புக்களில் கணிசமான ஓர் அளவை அரசினர் பிணையங்களில் முதலீடு செய்கின்றனர்.

கருவூல மாற்றுச் சீட்டுகள் (Treasury Bills)

அரசினருக்குக் குறுகிய கால நிதியளிக்கும் பொருட்டும், பணச் சந்தையிலுள்ள உபரி ரொக்கத்தை உறிஞ்சியெடுக்கும் பொருட்

டும் மத்திய அரசின் சார்பாக ரிசர்வு வங்கி கருவூல மாற்றுச் சீட்டை வெளியிடுகிறது. இவற்றை வணிக வங்கிகள் பெரு மளவில் வாங்குகின்றனர். இந்த மாற்றுச் சீட்டுகள் 91 நாட்களில் முதிர்வடைவன. எனவே நல்லதொரு குறுகிய காலப் பிணைய மாக அமைகின்றன. இதற்கு 3.50% வட்டி தற்போது (1971 மே) அளிக்கப்பட்டு வருகிறது. 91 நாள் முடிவடைந்ததும் இதைப் பணமாக மாற்றிக் கொள்ளலாம். அவசியமேற்படும் போது இம் மாற்றுச் சீட்டுகளை ரிசர்வு வங்கியிடம் தள்ளுபடி செய்து கொண்டு பணம் பெறலாம். வியாபாரம் மந்தமாக இருக்கும் காலங்களில் வங்கியரிடம் உள்ள உபரிப் பணத்தை முதலீடு செய்ய இது ஒரு நல்ல வாய்ப்பாக உள்ளது. இது வாரம் முழுவதும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பதால், வங்கிகள் தம்மிடமுள்ள உபரித் தொகையை முதலீடு செய்ய விரும்பும் எந்த நேரத்திலும் இவற்றை வாங்கிக் கொள்ளலாம்.

இதுவரை கண்ட தன்மைகளுடன் நல்லதோர் பிணையம் மேலுஞ்சில சிறப்புக்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். முதலீட்டின் மதிப்பு உயர்ந்திடும் வாய்ப்பு இருக்க வேண்டும்; அதன்மீது மிகுதியான வரிச்சுமை இருத்தலாகாது; அதன் காலம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

நல்ல பிணையங்களைத் தேர்ந்தெடுக்க வங்கியர் என்ன முறை யில் செயல்படுவார்? முதலீடு செய்பவர்களுக்கு யோசனை கூற வும் அவர்களது முகவராகச் செயலாற்றவும் பற்பல நிலையங்கள் இருப்பதை மேற்கத்திய நாடுகளில் காணலாம். இந்தியாவில் இவ் வகை வசதி குறைவே. பங்குச் சந்தை அவ்வப்போது வெளியிடும் அறிக்கைகளும், Economic Times, Financial Express போன்ற நாளிதழ்கள் அளிக்கும் வணிக, பொருளாதார நிலை மதிப்பீடுகளும் ஆய்வறிக்கைகளும் முதலீடு செய்பவர்களுக்கு ஓர் வழிகாட்டிபோல் செயலாற்றி வருகின்றன.

கடன்கள்

தாம் தொழிலில் ஈடுபடுத்தியிருக்கும் தொகையில் மிகப் பெரும் அளவைக் கடன்கள் கொடுப்பதற்கே வங்கிகள் பயன் படுத்துகின்றன. மே 28, 1971 ஆம் ஆண்டில் இந்தியாவிலுள்ள பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வணிக வங்கிகளனைத்தும் தாம் திரட்டிய ரூ 6,079 கோடியில் ரூ 4,687 கோடி அதாவது 77.10% கடன்கள் கொடுப்பதில் ஈடுபடுத்தியிருந்தன. இஃதொன்றே கடன்கள் கொடுப்பது வங்கியருக்கு எவ்வளவு முக்கியமான நட

வடிக்கையாக அமைகிறது என்பதை விளக்குகிறது. கடன்கள் கொடுத்து அவற்றின் மீது பெறும் வட்டியே வங்கியின் வருமானத்தில் மிகப்பெருந் தொகையாக அமைகிறது. கடன்கொடுக்கும் வங்கியர் பொதுவாகக் கருத்தில் கொள்ளவேண்டிய முக்கிய செய்திகளைக் காண்போம்.

கொடுக்கப்படும் கடன் உறுதியாகத் திருப்பித்தரப்படும் என்று வங்கியருக்குத் தோன்றினால்தான் கடன் கொடுக்கவேண்டும். அதிக வட்டி கிடைக்கும் என்ற அவாவில் அசலின் முக்கியத்துவத்தை மறந்துவிடக் கூடாது. அசல் பாதுகாப்பாக இருக்க வேண்டுவதே வங்கியருக்கு முதன்மையான கருத்தாக, எண்ணமாக அமைய வேண்டும்.

வங்கியர் தருவது குறுகிய காலக் கடனே

வங்கியரது பொறுப்புக்களனைத்தும் கோரியதும் கொடுக்கப்பட வேண்டியுள்ளன அல்லது குறுகிய காலங்கழிந்தவுடன் கொடுக்கப்பட வேண்டியுள்ளன. ஆகவே இவர் கொடுக்கும் கடன்களும் கோரியதும் அல்லது குறுகிய காலங்கழிந்ததும் திருப்பித்தரப்படுவனவாக இருக்க வேண்டுவது அவசியமாகிறது. பெரும்பாலும் நடைமுறை முதலுக்குத் தேவைப்படும் கடன்களையே வணிக வங்கிகள் தொழில் நிலையங்களுக்கு அளிக்கின்றன. நிலையான சொத்துக்களை வாங்கவும், நீண்ட காலத்திற்குத் தேவைப்படும் காரணங்களுக்காகவும் வணிக வங்கிகள் கடன் தரமுடியாது. வங்கியிடமிருந்து பெற்ற கடன்களை நிலையான சொத்துக்கள் வாங்கப் பயன்படுத்தினால், வங்கி கடனைத் திருப்பிக் கேட்கும்போது உடனே திருப்பித்தருவது கடினமாகும். நிலையான சொத்துக்களில் ஈடு செய்ய நீண்டகாலக் கடன் தேவைப்படுகிறது. நீண்டகாலக் கடன் வழங்க பலவகையான தொழில் வளர்ச்சி வங்கிகளும், கூட்டுருக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வணிக வங்கிகள் நீண்டகாலக் கடன் அளிக்க முடியாது.

'அடைமானத்திற்கும் மாற்றுச்சீட்டுக்கு மிடையேயுள்ள வேறுபாட்டை அறிந்து கொள்வதில்தான் வங்கியக்கலை அமைந்துள்ளது' (The art of banking consists in knowing the difference between a mortgage and a bill of exchange) என்று கூறுவதுண்டு. இதன் பொருள் என்ன? அடைமானத்தின்மீது தருவது நீண்டகாலக் கடன்; ஆனால் மாற்றுச் சீட்டின்மீது தரப்படும் கடன் குறுகிய காலக் கடன். மாற்றுச்சீட்டு விரைவில் முதிர்வடைந்து அதன் மீதான பணம் உரியகாலத்தில் செலுத்தப்படுவ்து உறுதி

யான நிகழ்ச்சியாகும். மேலும் அவசிய மேற்பட்டால் தள்ளுபடி செய்யப்பட்ட மாற்றுச்சீட்டை நாட்டின் மையவங்கியிடம் மறு தள்ளுபடி செய்து பணம்பெற வசதியுண்டு. எனவே, மாற்றுச் சீட்டு போன்ற குறுகிய காலத்தில் ரொக்கம் பெறக்கூடிய சொத்தின்மீது கடன்தரும் வங்கியரே திறமையும், செயலறிவும் பெற்ற வங்கியராவர்.

கடன் நோக்கம்

பாதுகாப்பு, ரொக்கநிலை ஆகிய இருமுக்கிய கோட்பாடுகளுடன் கடன் கொடுப்பதற்கு முக்கியமானதாகக் கருதப்படும் கோட்பாடு கடன்பெறுவதன் நோக்கம் ஆகும். கொடுக்கப்படும் கடன் உற்பத்திவளர்ச்சிக்கல்லாமல் அல்லது ஊக வணிகத்திற்குப் பயன்படுத்தப்பட்டால் குறித்தபடி திருப்பிச் செலுத்தப்படுவதில் ஐயப்பாடு உண்டாகும். சரக்குகளை முடக்கும்பொருட்டு அல்லது சந்தையில் அளிப்புநிலை நெருக்கடி ஏற்படும் பொருட்டு வணிகர் தம்மிடமுள்ள சரக்கைப் பிணையமாக வைத்துக்கடன் கோரினல் வங்கியர், தம்மைப் பொறுத்தவரை அது நல்ல கடனுக அமைந்தாலும், அந்த சூழ்நிலையில் கடன் கொடுக்கமாட்டார். நாட்டின் பொருளாதாரநிலை, சமுதாய நலன் முதலிய செய்திகள் இன்று அரசுக் கொள்கைகளில் மிகமுக்கியமான இடம் பெறுகின்றன. இவற்றிற்குப் பாதகமாக வங்கியர் செயல்படக் கூடாது; அரசும் தன்னிடமுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, சமூக நலனுக்குக் கேடுவிளைவிக்கும் செயல்களைத் தடுக்கும். நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் வங்கிகளுக்கு முக்கியமான தொருபங்குண்டு. அரசு மக்களுடைய நலனைக் கருத்தில் கொண்டு தீட்டும் பலப்பல திட்டங்களை நிறைவேற்றும் வகையான் வங்கிகளும் தமது கொள்கைகளையும், செயல் முறைகளையும் மாற்றியமைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. விவசாயத்துறையில் முன்னேற்றம், சிறு தொழில்கள் வளர்ச்சி, ஏற்றுமதிப் பெருக்கம் போன்ற பல முனைகளில் திட்டங்கள் தீட்டப்பட்டு வறுமைப்பிணியையும், வேலையின்மை நிலையையும் களைந்தெறிய அரசு பெருமுயற்சி மேற்கொண்டுள்ள இந்த நேரத்தில் வங்கிகளனைத்தும் அரசின் முயற்சிகளுக்கு உறுதுணையாக நின்று செயலாற்றக் கடமைப்பட்டிருக்கின்றன.

பிணையம்

வங்கியர் கொடுக்கும் கடனுக்குப் பற்பல வகையான சொத்துக்கள் பிணையாக அளிக்கப்படுவதுண்டு. சில நேரங்களில் கடனளியின் நாணயம் மட்டுமே பிணையாக அமையலாம். ஆனல்

பெரும்பாலும் புல்லுகும் சொத்துக்கள் ஏதேனும் பிணையாகத் தரப்படுவதை நடைமுறையில் காணலாம். எவ்விதமான சொத்துக்கள் பிணையாகத் தரப்படுகின்றன என்பதைப் பின்னர்வரும் அத்தியாயங்களில் காண்போம். எந்த வகையான பிணையாக இருந்தாலும், தேவை ஏற்பட்ட காலத்தில்தான் அதைப் பணமாக மாற்றக்கூடிய அவசியம் நேரும் என்று வங்கியர் அறிவார். பிணையத்தின் தன்மையை மட்டுமே முக்கியமாகக் கருதி கடன் கொடுப்பதில்லை. மற்ற செய்திகளையும், சூழ் நிலைகளையும் கருத்தில் கொண்டே வங்கியர் கடன் கொடுக்கத் தீர்மானம் செய்வார்.

கடனைப் பரவலாகக் கொடுத்தல்

பொதுவாக வங்கியர் ஒரேவகையான தொழிலுக்கோ அல்லது தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு மட்டுமோ தமது பெரும்பான்மையான கடன்களை அளிக்கக் கூடாது. அத் தொழிலில் நெருக்கடி ஏதும் ஏற்பட்டால் வங்கியர் கடனைத் திருப்பிப் பெறுவது பெரும்பாடாகப் போகலாம். எனவே குறிப்பிட்ட ஒரு இடத்தில் மட்டுமோ அல்லது குறிப்பிட்ட வகைப் பிணையத்தின் பேரிலோ வங்கியர் தமது கடன்களை அளிக்காமல், பரவலாக பல்வேறு இடங்களில், பல்வகைப் பிணையங்கள் மீது கடனளிக்க வேண்டும். மற்றும் ஒருசில நபர்களுக்குப் பெருந் தொகைகள் கடனாகக் கொடுப்பதைவிட பற்பல நபர்களுக்கு மிதமான அளவு கடன் கொடுத்தல் நன்று. எல்லா முட்டைகளையும் ஒரே கூடையில் வைப்பதனுலுண்டாகக் கூடியவிளைவை நினைவிலிருத்த வேண்டிய அவசியத்தை மிகைப்படுத்திக் கூற வேண்டுவதில்லை.

ரிசர்வு வங்கி, மற்ற வணிக வங்கிகள் கொடுக்கக் கூடிய கடன்கள், அவற்றிற்குத் தரப்படக் கூடிய பிணைகள், மற்ற நிபந்தனைகள் எதையும் ஒழுங்குபடுத்தும் அதிகாரம் பெற்றுள்ளது. நாட்டு நலனை மேம்படுத்தும் பொருட்டு ரிசர்வு வங்கி வணிக வங்கிகள் மீது பிறப்பிக்கும் ஆணைகளை வணிக வங்கிகள் கடைப்பிடித்தே ஆகவேண்டும்.

மாற்றுச் சீட்டைத் தள்ளுபடி செய்தல்

வங்கியின் இருப்பு நிலைக்குறிப்பில் சொத்துக்கள் பகுதியில் உள்ள முக்கிய இனங்களில் நாம் காணவேண்டிய மற்றொரு இனம் மாற்றுச்சீட்டு (Bill of Exchange) — தள்ளுபடி செய்யப்பட்டதும் வாங்கப்பட்டதும் ஆகும். இவை வங்கியரின் குறுகியகால முதலீடுகள் என்ற நிலையில் அமைகின்றன. மாற்றுச் சீட்டின் காலம் முடிவுற்றதும் அது பணமாக மாறுவதால், மாற்றுச் சீட்டைத்

ானே முறிந்துபோகும் சொத்து (Self-liquidating asset) என்று குறிப்பிடுவர். இதில் பணத்தை முதலீடு செய்யுமுன் வங்கியர் மேற் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பின்வரும் அத்தியா யங்களில் காண்போம்.

9. கடன் வகைகள்

(Forms of Advances)

எந்த வகையான கடன் வாடிக்கையர் வேண்டுகிறார் என்பது, எந்த நோக்கத்திற்காக அவர் கடன் திரட்டுகிறார் என்பதைப் பொறுத்தது. நிலம் கட்டிடம், இயந்திரம் போன்ற நிலையான சொத்துக்களை வாங்கத் தேவைப்படும் பணத்தைத் தம்மிடமுள்ள முதல், சேர்த்து வைத்துள்ள இலாபம், பொது மக்களிடமிருந்து பெற்ற வைப்பு, நிதி நிலையங்களிடமிருந்து பெற்ற தவணைக் கடன் (Term Loan) முதலிய இனங்களிலிருந்து பெறுவர். அன்றாடச் செலவு, கச்சாப்பொருள் கொள்முதல் செய்தல், தயாரிப்பு மற்றும் நிருவாகச்செலவு போன்ற நடைமுறைச் செலவுகளுக்கு வணிக வங்கிகளிடமிருந்து கடன் திரட்டுவர்.

பிணைக்கடன், பிணையில்லாக்கடன்

கடன்களை இருபெரும் கூறுகளாகப் பிரிக்கலாம். ஒன்று பிணைக்கடன் (Secured Loan); மற்றொன்று பிணையில்லாக்கடன் (unsecured Loan). வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம், பிரிவு 5 (n) பிணைக்கடன் என்றால் என்ன என்பதை விளக்குகிறது. பிணையமாகக் கொடுக்கப்பட்ட சொத்தின் சந்தை மதிப்பு (market value) கடன் அளவுக்குக் குறையாமலிருந்தால் அக் கடன் பிணைக்கடன் எனப்படும். அங்ஙனம் பிணை தரப்படாக் கடன் பிணையில்லாக் கடன் எனப்படும். பிணையில்லாக்கடனை வெற்றுக்கடன் (Clean loan) என்று பொதுவாகக் கூறலாம். பிணைக்கடனை நிபந்தனைப் படித் திருப்பிச் செலுத்தத் தவறினால், நீதிமன்றத்தின் வழியோ அல்லது தக்க முன்னறிவிப்பு அளித்து விட்டோ பிணையை விற்கும் உரிமை வங்கியருக்கு உண்டு. பிணையில்லாக்கடன் அளிக்கும் வங்கியருக்கு இந்த உரிமை ஏதும் கிடையாது. ஏனெனில் அவர் தரும் கடனுக்குப் பிணையாகச் சொத்து எதனையும் பெறுவதில்லை.

கடன் வாங்குபவரின் ஒழுக்கம், திறன், முதல் முதலியன நல்ல முறையில் அமைந்திருந்தால்தான் வங்கியர் பிணையில்லாக்கடன் தருவார். தனிப்பட்ட ஒருநபருக்கு உத்தரவாதத்தின் பேரில் கடன் தருவதைவிட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்குக் கூட்டாக பிணையில்லாக்கடன் தருவதையே வங்கியர் விரும்புவார். பிணையில்லாக்கடன் மிகக்குறுகிய காலத்திற்கு மட்டுமே தரப்படும்; உறுதியாகப் பயனளிக்கக் கூடிய நடவடிக்கைகளுக்கு மட்டுமே இவ்வகைக் கடனளிக்கப்படும். வெற்றுக்கடன் அளிக்கும் போது வங்கியர் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளை ரிசர்வு வங்கி வகுத்திருக்கின்றது. வங்கி அளிக்கும் மொத்தக் கடன்களில் இது ஒரு மிகச்சிறிய பகுதியாகவே அமைய வேண்டும்.

ரொக்கக்கடன் (Cash Credit)

பிணையாள் (Surety) தரும் நாணயப் பத்திரத்தின் பேரிலோ அல்லது பிறபிணையங்களின் பேரிலோ தமது வாடிக்கையரைக் குறிப்பிட்ட ஒரு தொகைவரைக் கடன்பெற அனுமதிக்கும் ஏற்பாடு ரொக்கக்கடன் எனப்படும். தமது நடைமுறை முதல் பற்றிய தேவைகளுக்கு நம் வியாபாரிகள், தொழிலதிபர்கள் வணிகர்கள் கடன்பெற இம்முறையைக் கடைப்பிடிக்கின்றனர். ரொக்கக் கடன் கணக்கு என்பது ஒருதனிக் கணக்காகும். தமது தேவைக்கேற்ப வங்கியர் இக்கணக்கிலிருந்து எடுத்துக் கொள்ளலாம். தமக்குப் பணம் கிடைக்கும் போது இக்கணக்கில் அப்பணத்தைச் செலுத்தலாம். தாம் ஒப்பந்தம் செய்து கொண்டபடி குறிப்பிட்ட அளவு தொகைக்கு மேல் எந்த நாளிலும் பற்று இருப்பு மீறிவிடாமல் வாடிக்கையர் பார்த்துக் கொள்ளவேண்டும். அன்றாடம் கணக்கில் பற்று இருப்பு எவ்வளவு உள்ளதோ அதன் மீது வட்டி கொடுக்கப் படவேண்டும். பருத்தி, கோதுமை, அரிசி, சர்க்கரை, சணல், துணி போன்ற வணிகப் பொருள்களைப் பிணையாகப் பெற்றுக் கொண்டு வங்கியர் ரொக்கக்கடன் வசதியளிப்பார்.

மேல்வரைப்பற்று (Overdraft)

முன்பே நடப்புக் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையர், தம் கணக்கில் இருப்பாக உள்ள தொகைக்கும் மேல் குறிப்பிட்ட அளவு தொகையை மேலெடுக்க (overdraw) வங்கியரிடம் உடன்பாடு செய்து கொண்டு அதன்படி பெறும் கடன் வசதியை மேல் வரைப் பற்று என்பர். குறிப்பிட்ட அளவுத் தொகைக்கு மிகாமல் வாடிக்கையர் காசோலைகளை எழுதலாம். துணைப் பிணையங்களை (Collateral Securities) ஈடாகப் பெற்றுக்கொண்டு வங்கியர் மேல்

வரைப்பற்று வசதியளிப்பர். வாடிக்கையர் மேலெடுத்த தொகை மீது மட்டுமே வட்டி செலுத்த வேண்டும். தவணைவைப்பின் பேரிலும், ஆயுள் காப்பு பாலிசியின் பேரிலும் மேல்வரைப்பற்று அளிக்கப்படுவதுமுண்டு.

மேல்வரைப்பற்றும் ரொக்கக்கடனும்

வேறுபாடுகள்

மேல்வரைப்பற்று எப்போதாவது பயன்படுத்தப்படும் கடன் வசதியாகும். ரொக்கக்கடன் வசதி தொழில் நிலையங்களால் நீண்டகால அளவிற்கு பயன்படுத்தப்படுகிறது. முன்னரே நடப்புக் கணக்கு வைத்திருப்பவர் அக்கணக்கின் மீது மேல்வரைப் பற்று வசதிகளைப் பெறலாம். ரொக்கக் கடன்கணக்கு தனியொரு கணக்காகும். இதன் பொருட்டு நடப்புக் கணக்கொன்று துவங்கப் படவேண்டுவதில்லை. இரண்டு கணக்குகளுக்குமுள்ள ஒற்றுமை கடன்வசதி பயன்படுத்தப்பட்ட அளவிற்கே வட்டி செலுத்த வேண்டுவதாகும். கடன்வசதி எந்த அளவிற்குத் தரப் படுமென்பது முன்னரே நிருணயிக்கப்படுகிறது. அந்த அளவிற் குட்பட்டே வாடிக்கையர் கடன் வசதியைப் பயன்படுத்த வேண்டும். இதனால் வங்கியருக்கு ஏற்படும் நிலையை ஆராய்வோம். வாடிக்கையர் பெற்றுள்ள கடன்வசதி அளவுக்கு அவர் கடன் பெறுமலிருக்கலாம். ஆனால் வங்கியர் உச்ச அளவாக எவ்வளவு கடனளிக்க ஒப்பியுள்ளாரோ அந்த அளவுக்குக் கடன் தர எந்த நேரத்திலும் தயாராக இருக்க வேண்டும். கோரிய கடன்வசதி அளவில் மிகச்சிறிய அளவே வாடிக்கையர் பயன்படுத்தினாலும், வங்கியர் ஒப்பிய அளவுத் தொகையைத்தர ஏற்பாடாக இருக்க வேண்டும். எனவே, வங்கியர் இதன் பொருட்டு ஏதும் நட்ட மடையாமலிருக்க, கடன்வசதியைப் பயன் படுத்தினாலும், பயன் படுத்தாவிட்டாலும் கடன்வசதித் தொகையில் கால்பங்கு அல்லது மூன்றில் ஒரு பங்களவு தொகை மீது வட்டி செலுத்தியாக வேண்டும் என்று வாடிக்கையரோடு உடன்பாடு செய்து கொள்ளு கிறார்.

கடன்கள் (Loans)

மொத்தத் தொகையொன்றை ஒரே முறையில் கடனாக அளித்து அதைத் திருப்பித்தருவதும் ஒரே முறையில் மொத்த தொகையாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையமைந்த நடவடிக் கையைக் கடன் என்பர். மேலும் அதிகத் தொகை கடனாக வேண் டினால், அதை மற்றொரு புதிய கடனாகப் பாவித்து வங்கியர் கடன

ளிப்பார். இக் கடன்கள் மீது வங்கியருக்கு ஏற்படும் நடைமுறைச் செலவு (operating cost) மற்ற ரொக்கக்கடன், மேல்வரைப்பற்று போன்ற கடன் மீது ஏற்படும் செலவைவிடக் குறைவாக இருப்ப தால் இதன் மீது விதிக்கப்படும் வட்டியும் குறைவாகவே உள்ளது.

தவணைக்கடன் (Term Loan)

ஓராண்டு காலத்திற்கு மேற்பட்டு, குறிப்பிட்ட தவணைக் காலத்திற்கு, குறிப்பிட்ட தவணைகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டுமென்ற நிபந்தனையில் கொடுக்கப்படும் கடனே தவணைக் கடன் என்பதாகும். ஓராண்டுக்கு மேலாக, ஆனால் ஐந்தாண்டு காலத்திற்குட்பட்டு அளிக்கப்படும் தவணைக்கடனை மத்திய காலக் கடன் என்று கூறுவர். சில நேரங்களில் மத்திய காலக்கடன் ஏழு ஆண்டுவரை தரப்படுவதுமுண்டு. ஏழு ஆண்டுகட்கு மேலான தவணை உள்ள கடன் நீண்டகாலக் கடன் எனப்படும். நிலையான முதல் தேவைப்படும்போது, தொழில் நிலையங்கள் நீண்ட அல்லது மத்தியகாலக் கடன் திரட்டுகின்றன. விவசாயத்திலும் நிலத்தைப் பண்படுத்த, விவசாய இயந்திரங்கள் வாங்க, பாசன வசதிகளை ஏற்படுத்தத் தவணைக் கடன்கள் தேவைப்படுகின்றன. இக்கடன் களைக் கொண்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளால் கடன் வாங்கியவரின் வருமானம் உயர வகையேற்படுகிறது. கடன் கொடுக்கப்பட்ட சில ஆண்டுகள் கழித்தே வருமான உயர்வு கிட்டும் வகையான தொழிலாக இருப்பின் கடனைத் திருப்பிக் கொடுப்பதும் சில ஆண்டுகள் கழித்தே துவங்கும். இவ் வகைக் கடன்களுக்கு நிலையான சொத்துக்கள் பிணையாக அமை யும். குறிப்பிட்ட நிபந்தனைப்படி தரப்படும் மத்திய காலக்கடன் களுக்கு இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (Industrial Development Bank of India) யும், விவசாய மறுநிதிக் கூட்டுரு (Agricultural Refinance Corporation) வும் மறுநிதி (Refinance) வழங்குகின்றன.

சேர்ந்தளி கடன் (Participation Loan)

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வங்கிகள் சேர்ந்து கொடுக்கும் ஒரே கடனைக் சேர்ந்தளிகடன் என்பர். இவ்வகைக் கடனை, இரண்டு அல்லது பல வங்கியர் கூட்டாகச் சேர்ந்து கொடுப்பதால் கூட்டுக் கடன் என்றும் குறிப்பிடுவதுண்டு. அமெரிக்க நாட்டில் இவ்வகைக் கடன் நன்கு பரவியுள்ளது. அங் குள்ள வங்கியமுறை, சட்டக் கட்டுப்பாடுகள், நிலபுலச் சொத்து வியாபாரத்திற்கு வங்கியர் நிதியுதவுதல் போன்ற சில காரணங் களால் சேர்ந்தளி கடன்முறை பரவலாயிற்று. இந்தியாவிலு

இவ்வகைக் கடன்முறை விரைவாகப் பரவிவருகிறது. குறிப்பாக, வளர்ச்சி பொருட்டு அளிக்கப்படும் நிதியுதவி பேரளவில் அமைவதால் பல நிலையங்கள் சேர்ந்து கடன் வசதியளிக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. கடன் தரும் வங்கிகள் ஒவ்வொன்றுடனும் கடன் பெறும் வாடிக்கையர் தக்க கடனுறுதிச் சீட்டுக்களை எழுதித்தர வேண்டும். அடைமானம் அல்லது அடகு ஏற்படுத்தினால் எல்லாக் கடனுளர் வங்கிகளுக்கும் உரிமை தரும் வகையில் எழுதித்தர வேண்டும்.

வாடகைக் கொள்முறைக் கடன் (Hire Punchase finance)

வாடகைக் கொள்முறைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் வானொலிப்பெட்டி, குளிர்ச்சாதனப்பெட்டி, மோட்டார் கார், மின்விசிறி போன்று பற்பல பொருள்களைத் தவணை முறையில் மக்களுக்கு விற்கின்றனர். இவர்களுக்குத் தேவைப்படும் பணத்தை வங்கியரிடமிருந்து கடனாகப் பெறுவதுண்டு. இத்தொழிலுக்கு நிதிவசதியளிப்பவர்களுக்கும் வங்கி கடனளிப்பதுண்டு. தவணை முறையில் பொருளை வாங்குவோர்க்கும் வங்கிகள் கடனளிக்கின்றனர். இக்கடன்களைச் சொந்தக் கடன் (Personal Loan) என்பர். சொந்தப் பயனுக்காகப் பொருள்களை வாங்க இக்கடன் அளிக்கப்படுவதால் இப்பெயர் பெற்றது போலும். இதனை நுகர்வோர் கடன் (Consumer Loan) என்று குறிப்பிடுவதும் உண்டு.

நுகர்வோர் கடன்

நுகர்வோர் கடன்பெற விரும்புபவர் கீழ்க்கண்ட நிபந்தனைக் குட்பட்டே கடன்பெற முடியும்.

1. கடன் திருப்பிச் செலுத்தப்படும்வரை வாழக்கூடிய வயதினராகவும், உடல் நிலையுள்ளவராகவும், உறுதியான வருமான நிலையுள்ளவராகவும் இருக்க வேண்டும்.
2. வாங்கப்படும் பொருள் உத்தரவாதம் பெற்ற புதுப் பொருளாக இருத்தல் வேண்டும்.
3. பெரும்பாலும் ரூ. 1,000 முதல் ரூ, 5,000 வரை மட்டுமே இவ்வகைக் கடனுக்கு அளிக்கப்படுகிறது. சில நேரத்தில் அதிக தொகையும் அளிக்கப்படலாம்.
4. பொருளின் விலையில் 10 அல்லது 15% கடன் கோருபவரே செலுத்த வேண்டும். விலையுயர்ந்த மோட்டார் கார், மோட்டார் சைகிள் போன்ற பொருளாக இருந்தால் 25% முதல் 30% வரை விலையைக் கடன் கோருபவர் முதலில் செலுத்த வேண்டும்.

5. கடன் கோருபவரின் ஊதியம் போன்று மூன்று அல்லது நான்கு மடங்கு தொகை அல்லது வாங்கப்படும் பொருளின் மதிப்பில் 75% இவற்றில் எது குறைவோ அத்தொகை மட்டுமே கடனாகத் தரப்படும்.

6. வாங்கப்பட்ட பொருள் வங்கியரிடம் அடைமானமாக வைக்கப்பட வேண்டும்.

7. கடனுக்கு உத்தரவாதமும் பெறவேண்டும்.

8. பொருள் தக்க முறையில் காப்புறுதி (insure) செய்யப்பட வேண்டும்.

9. இக்கடன்மீது வட்டி $9\frac{1}{2}$ முதல் 10% ஆக இருப்பது வழக்கம். குறித்தபடி செலுத்தத் தவறினால் தண்ட வட்டி 12% ஆக வசூலிக்கப்படும். வட்டியன்றி கடன் மீது பணிக்கட்டணம் (Service Charge) 2% வசூலிக்கப் படுகிறது.

10. கடன் மாதத் தவணைகளில் திருப்பிச் செலுத்தப் பட வேண்டும்.

11. கடன் 24 முதல் 30 மாதங்களில் அடைபட வேண்டும்.

12. ஆறு திங்களுக்கொருமுறை வாங்கப்பட்ட பொருள் தம் வசமேயுள்ளது என்று எழுத்தால் உறுதி அளிக்க வேண்டும்.

13. தவணை தவறாமல் கடனைத் திருப்பிச் செலுத்தும் வாடிக்கையருக்கு 0.5% வட்டி தள்ளிக் கொடுக்கும் வங்கிகளும் உள.

மேற்கண்ட கடன்முறை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பயன்படுகிறது. ஒரே சமயம் பெருந்தொகை செலுத்திப் பெறமுடியாத பொருள்களை இத்திட்டத்தின்படி பெற முடிகிறது. மற்றுமொரு வகை மக்களைத் தம்பால் வாடிக்கையராக ஈர்க்க வங்கியருக்கு இக்கடன் திட்டம் உதவுகிறது.

10. கடன் பெறு தகுதி நிருணயம்

வாடிக்கையர் தமது வங்கியரிடம் கடன் கோருவது அன்றாட வணிக நிகழ்ச்சிகளில் ஒன்றாகும். எவ்வளவு பெரிய தொழில்நிலைய மாக இருந்தாலும் எத்தனை இலட்சக்கணக்கில் முதலீடுசெய்து தொழில் நடத்தி வந்தாலும் அவ்வப்போது வங்கியிடம் பணம் கடன் கோரும்நிலைதொழில்நிலையங்களுக்கு ஏற்படுகின்றது. இதற்கு பற்பல காரணங்களிலிருக்கலாம். பேரளவு முதல்நிலையான சொத் துக்களில் ஈடுசெய்யப்பட்டிருக்கலாம்; அல்லது கச்சாப்பொருள் களை அதிகமாகக் கொள்முதல் செய்திருக்கலாம். அல்லது கடன் பேரில் பெருமளவு சரக்குகளை விற்பனை செய்திருக்கலாம். எனவே, நடைமுறைச் செலவுகட்கு வங்கியரிடம் குறுகிய காலக்கடன் கோர வேண்டிய நிலை ஏற்படுவது இயல்பே. கடன் தருமுன் வங்கியர் பிணையங்களைச் சோதித்து, அவை ஏற்றுக் கொள்ளத் தக்கனவா என்று நோக்குவார். தக்கப்பிணையம் தந்தவருக்குத் தயக்கம் ஏதுமின்றிக் கடன் கொடுத்துவிட வேண்டுமென்று நினைப்பது தவறு. மற்ற சில முக்கிய செய்திகளையும் வங்கியர் கவனிக்க வேண்டும். கடன் பெறுபவருடைய ஒழுக்கம், திறன், முதல் (Character, Capacity, Capital-referred to as Threc C's)முதலிய பண்பு களை ஆராய வேண்டும்.

கடன் கோரும் வாடிக்கையர் பலவகைச் சொத்துக்களைப் பிணையாகத் தரலாம். இவற்றைத் தீவிரமாகப் பரிசீலனை செய் வது இயலாத காரியமாகும். எடுத்துக்காட்டாகப் பல்லாயிரக்கணக் கான அரிசி மூட்டைகள் பிணையாகத்தரப்படுகின்றன என்று கொள் வோம். ஒவ்வொரு மூட்டையிலும் உள்ள சரக்கு அரிசிதானு என்று பரிசீலனை செய்ய முடியாது. அங்குமிங்கும் ஏதோ சில மூட்டைகளை மட்டுமேசோதித்துப் பார்க்க முடியும். செயல்முறை யில் வங்கியர் பல வகையில நல்லொழுக்கமற்ற வாடிக்கையரால் ஏமாற்றப்படுவதுண்டு. பொய்யாவணம் புனையப்பட்ட பங்குச்

சான்று பிணையாக அளிக்கப்படலாம்; ஒரே கிடங்கில் உள்ள சரக்கு இரண்டு வங்கியருக்குப் பிணையாகக் காட்டப்படலாம். இரண்டு பக்கங்களில் இரு தனிவழிகள் இருக்குமிடத்து முதல்வழியே ஒரு வங்கியரையழைத்து வந்து அவருக்கே கிடங்கிலுள்ள சரக்கனைத்தையும் பிணையாக வைப்பதாகக் காட்டலாம். பின்னர் வேறுவழியாக மற்றொரு வங்கியரையழைத்து வந்து அவருக்கும் இதே கிடங்கிலுள்ள சரக்கைப் பிணையாகக்காட்டலாம். இவ்வகையாகப் பற்பல நிகழ்ச்சிகள் ஏற்பட வாய்ப்பு இருப்பினும், வாடிக்கையர் நல்லொழுக்கம் உள்ளவராக இருந்தால் மேற்கண்ட வகை மோசடி நடவடிக்கைகளில் அவர் ஈடுபடமாட்டார் என நம்பி வங்கியர் அச்சமேதுமின்றி கடன் வழங்கலாம்.

ஒழுக்கம்

ஒருவருக்குள்ள பண்புகளில் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவது ஒழுக்கம். திருவள்ளுவர் தமது நூலில், ஒழுக்கம் உயிரினும் சிறந்ததாகப் போற்றப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.''

வாடிக்கையர் நல்லொழுக்கமுள்ளவராக இருப்பின் தாம் வங்கியரிடம் கடன் பெறுவதன் நோக்கம், திருப்பிச் செலுத்தும் ஏற்பாடு முதலிய பற்றி உண்மைச் செய்திகளைக் கூறிக்கடன் பெற்று அதன்படி செயலாற்றுவார். வாடிக்கையரைப் பற்றி அறிந்து கொள்ள வங்கியர் பல செய்திகளை நோக்க வேண்டும். வாடிக்கையரின் பரம்பரை, அவருடைய தொழில் துறையிலுள்ள நண்பர், போட்டியாளர் முதலியோர் இவர் மீது கொண்டுள்ள மதிப்பு, மற்ற வணிகரிடம் நாணயமாக நடந்து கொள்ளுவது, அவருடைய ஊழியர்கள் அவரைப்பற்றி மதிப்பீடு செய்வது, அவர் ஊக வணிகத்தில் ஈடுபடுகிருரா என்பது, எப்பொழுதாவது தமது பொறுப்பை நிறைவேற்றத் தவறியதுண்டா என்பது பற்றியெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

நாணயம்

ஒரு மனிதரை நாம் நாணயமானவர் என்று குறிப்பிடும் போது அவர் நம்பத்தகுந்தவர் என்று கருதுகிறோம். நாணயத்தின் அடிப்படை நம்பிக்கை. வணிக உலகில் நாணயம் என்ற சொல் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. நாணயத்தின் பேரில்தான் கடன் அளிக்கப்படுகிறது என்று கூறினல் அது மிகையாகாது.

நாணயமுள்ள வாடிக்கையருக்கே வணிகர்கள் சரக்குகளைக் கடன் பேரில் விற்பர். இதற்குக் காரணம் வாடிக்கையர் சரக்குக்கான பணத்தை உறுதியாகத் தந்து விடுவார் என்ற நம்பிக்கையுடன், அவருக்குப் பணத்தைச் செலுத்தும் திறனும், நல்லெண்ணமும் உண்டு என்று கடன் தருபவர் உறுதியாக நம்புகிறார். இந்த அடிப்படையிலேதான் நாணயம் என்ற சொல்லுக்கு இலக்கணம் வகுக்க முயன்றவர்கள் ''பின்னர் திரும்பப் பெறக்கூடிய அதே அளவுக்கு இன்று சரக்குகளைக் கொடுப்பது''; ஒரு நபர் இன்று ''செய்யும் பணிக்கு மாற்றாகப் பின்னர் மற்றொருவர் திருப்பிச் செய்வது''; ''பின்னர் பெறப்போகும் மாற்றுப் பொருளுக்கு இன்று சரக்கினைக் கொடுப்பது''; ''கடனாகவோ அல்லது நுகரும் பொருட்டோ ஒருவர் சொத்தை மற்றொருவருக்குக் கொடுக்க அடிப்படையாக விளங்கும் நம்பிக்கை — வாங்கிய கடனையோ பொருளையோ திருப்பிக் கொடுக்க இவருக்கு வகையுண்டு என்ற நம்பிக்கை''; ''பின்னர் பணம் செலுத்துவதற்கு இப்பொழுது பெறும் உரிமை'' என்று பலவாறாகக் கூறியுள்ளார்கள்.

திறன்

திறன் என்ற இரண்டாவ்தாகக் கூறப்பட்ட பண்பு இருவகையான திறமைகளைச் சுட்டும். வாங்கிய கடனை ஆதாயங் கிடைக்கும் வகையில் பயன்படுத்துவது ஒருவகைத் திறமை; மற்றது வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தும்திறன். இதையறிய வங்கியர் கடன் கோரப்படும் நோக்கத்தையும், தொழிலின் தன்மையையும், வாடிக்கையருக்கு உள்ள தொழிலனுபவம், முன்னரே நிறுவப்பட்டு நடந்துவரும் தொழிலானால் அது செயல்பட்டுவந்த விவரம் முதலிய பற்பல செய்திகளை ஆராய்ந்தறிய வேண்டும்.

முதல்

தொழிலில் எந்த அளவு பணம் வாடிக்கையர் முதலீடு செய்துள்ளார் என்று வங்கியர் நோக்க வேண்டும். வங்கியர் தாம் கொடுக்கும் கடனைத் திருப்பிப்பெற எந்த அளவுக்கு வாடிக்கையரின் முதலீட்டை எதிர் நோக்கலாம் என்று நிதானம் செய்து கொள்ள இச்செய்தி உதவும். பொதுவாக, தொழிலில் அதன் உரிமையாளர்கள் முதலீடு செய்துள்ள அளவுக்கு மேலாக எந்த வங்கியரும் கடன் தரக்கூடாது.

மேற்கண்ட மூன்று பண்புகளல்லாது, வாடிக்கையர் என்ன பிணைகளை அளிக்கிறார், என்ன நிபந்தனைகட்கு உட்பட்டு கடன் பெறுகிறார் என்பதும் கூர்ந்து கவனிக்கத் தக்கது. எல்லா வாடிக்கையர்களிடம் எல்லாப் பண்புகளும் ஒருங்கே பொருந்தியிருப்பது

அரிது. எனவே வங்கியர், ஒழுக்கத்துடன்கூட மற்ற பண்புகளில் ஒன்றேனும் இருக்கிறதா என்று நோக்கி, பின்னரே கடன்தர ஒப்பு வார். இம்மூன்று பண்புகளைப் பொறுப்பு, நம்பிக்கை, வகை (Responsibility, Reliability, Resources-Three R's) என்றும் குறிப் பிடுவதுண்டு.

தகைமை அறிக்கை

வாடிக்கையரின் பண்புகளைப் பற்றிய செய்திகளைச் சேகரித்து வங்கியர் தகைமை அறிக்கை (Status Report) ஒன்றைத் தயாரிக்க வேண்டும். அவருடைய சொத்துக்கள், பொறுப்புக்கள் தொழி லனுபவம், நடவடிக்கைகள் முதலிய பற்றிய செய்திகளைப் பல்வேறு இடங்களிலிருந்து பெறவேண்டும். அவருடைய நிதிநிலையறிக்கை, வருமானவரி, செல்வவரி, விற்பனைவரி விவரங்கள் முதலியவற்றைப் பெற்று ஆராயவேண்டும். அவர் கணக்கு வைத்திருக்கும் பிற வங்கியரிடமிருந்தும் அவரது நாணயத்தைப் பற்றி உசாவியறிய வேண்டும். வணிக வட்டாரங்களில் அவரைப்பற்றிய மதிப்பு எப்படியிருக்கிறது என்றும் காணவேண்டும்.

வங்கியர் கடன் விண்ணப்பத்தைப் பெற்றதும் அதைத் தீர ஆராய வேண்டும். அதில் கடன்கோரும் நபர் எல்லா விவரங் களையும் எழுதியிருக்க வேண்டும். கடன்கோரும் நபருடைய தொழில், அதன் அமைப்பு, கடன் வாங்குபவரின் தொழிலனுபவம், கடன் கோருவதன் நோக்கம், கடன் தொகை, பிணையாக அளிக்கப் பட்டச் சொத்து, திருப்பிச் செலுத்தும் ஏற்பாடு போன்ற பற்பல விவரங்களை இதன்வழி தெரிந்து கொள்ளலாம்.

சொத்து—பொறுப்புக்கள் நிலையைப் பரிசீலனை செய்தல்

முன்னர் குறிப்பிட்ட செய்திகளைச் சேகரிப்பதுடன், வங்கியர் செய்தித்தாள் அறிக்கை, வருவாய்த்துறை, மாநகராட்சி ஆவணங் கள் முதலியவற்றை ஆராய்ந்து கடன்கோருபவருக்குள்ள சொத் துக்கள், அவற்றின் மீதான வில்லங்கம் எல்லாம் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும். வங்கியர், கடன்கோருபவரை நேரேவரும்படி அழைத்துத் தெளிவுபெற வேண்டிய செய்திகளனைத்தையும் கேட்டு விளக்கம் பெறவேண்டும். நடந்துவரும் தொழிலுக்குக் கடன் கேட்டிருந்தால், அத்தொழிலின் கடந்த சில ஆண்டுகளின் இலாப நட்டக் கணக்கு, இருப்புநிலைக் குறிப்பு முதலியவற்றைப் பெற்று அவற்றைத்தீர ஆராய வேண்டும். முக்கியமாகச் சொத்துக்களில் எவ்வளவு மாற்றியல் சொத்துக்களாக (liquid assets) இருக்கிறது என்று பார்க்க வேண்டும். குறுகியகாலப் பொறுப்புக்களை

தீர்க்கப்போதுமான மாற்றியல் சொத்துக்கள் தேவைப்படும். சரக்குக் கடனுக்கு விற்கப்பட்டிருந்தால், கடனாளிகள் கணக்கைப் பரிசீலனை செய்து எவ்வளவு காலம் கடன் அளிக்கப்பட்டிருக்கிறது, கடன்பல திருப்பித்தரப்படாமல் இருக்கின்றனவா, கடன் நல்லதாகத்தெரிகிறதா அல்லது வராக்கடனாகிவிடுமா, ஐயக்கடனுக்குத் தக்க ஒதுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்றெல்லாம் கவனிக்க வேண்டும். வியாபாரச் சரக்கிருப்பு (Stock-in-trade) தேவைக்கு மதிகமான அளவுக்கு மேலிருத்தலாகாது.

பொறுப்புக்கள் பக்கத்தைப் பரிசீலிக்கும்போது, தொழிலுக்குப் போதுமான முதல் இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். கடன்கோருபவர் ஏற்பு செய்துள்ள உண்டியல்கள் கொள்முதல் செய்யப்பட்ட சரக்குப் பொருட்டு ஏற்கப்பட்டிருக்க வேண்டும். பிறகாரணங்களுக்காக ஏற்கப்பட்டிருந்தால் அது கடன்கோருபவரின் நிலையைப் பாதிக்கும். மற்றும் கடன்பேரில் சரக்கு வாங்கியிருந்தால் எவ்வளவு பணம் தரப்பட வேண்டியுள்ளது, வாங்கப்பட்ட சரக்கின் அளவு சாதாரணமாக விற்பனையாகும் அளவை ஒட்டியுள்ளதா என்று பார்க்க வேண்டும். பிறவங்கிகளிடமிருந்து பெற்ற கடன், கொடுபடவேண்டிய இனங்கள் முதலியவற்றையும் காண வேண்டும்.

இனி, பிணையம் ஏதும் பெறுமல் வங்கியர் அளிக்கும் கடன் வகைகளைக் காண்போம். இவற்றில் முக்கியமானவை உத்தரவாதத்தின் பேரில் தரப்படும் கடன்களும், வெற்று உண்டியல்களைத் தள்ளுபடி செய்து தரும் வசதியுமாகும்.

11. உத்தரவாதத்தின்மீது கடன்
(Loan on Guarantee)

கடன் வேண்டுபவர் தக்க பிணையங்களை ஈடாகத் தரமுடியா நிலையிலும், கடன்வேண்டுபவருடைய சொந்தபிணை போதா நிலையிலும் உத்தரவாதத்தின் அடிப்படையில் வங்கியர் கடன் வழங்குவது வழக்கம். கடனை முழுதும் திருப்பிப் பெறுவதில் ஐயநிலையேதும் ஏற்பட்டாலும், பிணையாகத் தரப்பட்டச் சொத்தின் மதிப்புக் குறைந்தாலும், தமது நிலையைப் பலப்படுத்திக் கொள்ள வங்கியர் பிறிதொரு நபரின் உத்தரவாதத்தைக் கோருவதுண்டு. முக்கியமாக வெற்றுக் கடன்கள் (Clean advances) கொடுக்கும் பொழுதும், சிலசமயங்களில் தவணைக்கடன் அளிக்கும் பொழுதும் வங்கியர் உத்தரவாதம் வேண்டுவர்.

உத்தரவாதத்தின் இலக்கணம்

உத்தரவாதம் என்பது ஒப்பந்தமொன்றின் அடிப்படையில் எழுகின்றது. மூன்றும் பேர் தம் வாக்குறுதியைச் செயல்படுத்தவோ, பொறுப்பை நிறைவேற்றவோ தவறினால், தாம் அவற்றை நிறைவேற்றுவதாக ஒப்பந்தம் செய்து கொள்வது உத்தரவாத ஒப்பந்தமாகும். (இந்திய ஒப்பந்தச் சட்டம், பிரிவு *126*). இந்த ஒப்பந்தம் வாய்மொழியாக அல்லது எழுத்தால் அமையலாம். உத்தரவாதமளிப்பவரை உத்தரவாதி அல்லது பொறுப்புறுதி அளிப்பவர் (guarantor) அல்லது பிணையாள் (Surety) என்பர்.

ஈட்டுறுதி ஒப்பந்தம் (Contract of indemnity)

உத்தரவாத ஒப்பந்தம் போன்றே அமையும் மற்றொரு ஒப்பந்தம் ஈட்டுறுதி ஒப்பந்தம். இவையிரண்டிற்கும் பல வேறுபாடுகளுண்டு. முதலில் ஈட்டுறுதி ஒப்பந்தத்தின் இலக்கணத்தை ஆராய்வோம். இந்திய ஒப்பந்தச் சட்டம், பிரிவு *124* இன்படி

தமது அல்லது மற்றவர் நடத்தையால் விளையும் இழப்பிற்கு ஈடு செய்வதாக ஒருவர் வாக்குறுதி, அளிக்கும் ஒப்பந்தம் ஈட்டுறுதி ஒப்பந்தமாகும். இந்த இருவகையான ஒப்பந்தங்களிடையேயுள்ள வேறுபாட்டை ஒரு எடுத்துக் காட்டால் விளக்கலாம். அருண் என்பார் இனியன் என்பவரைக் கடைக்கு அழைத்துச் சென்று கடைக்காரரிடம்'' இவருக்கு வேண்டிய பொருள்களனைத்தையும் தருக. உங்களுக்குப் பணஞ் செலுத்தப்படுவது என் பொறுப்பு'' என்று சொன்னால் அது ஈட்டுறுதியாகும். மேற்கண்டவாறல்லாமல் ''இவருக்கு வேண்டிய பொருளனைத்தையும் தருக. இவர் பணஞ் செலுத்தத் தவறினால் நான் செலுத்துகிறேன்'' என்று கூறினால் அது உத்தரவாதமாகும். மேலெழுந்தவாறு பார்த்தால் இவ்விரண்டிற்கும் வேறுபாடு தோன்றாவிடினும் உண்மையில் கீழ்க் கண்ட வேறுபாடுகள் உண்டு.

1. உத்தரவாத ஒப்பந்தத்தில் மூன்று நபர்கள் தொடர் புற்றவர்களாயுள்ளனர். அவர்கள், கடனாளி, கடனாளர் (Creditor), பிணையாள் (Surety). ஈட்டுறுதி ஒப்பந்தத்தில் இரண்டு பேர்வழிகளே தொடர்புள்ளவர்களாய் அமைகின்றனர். ஒருவர் ஈட்டுறுதியளிப்பவர் (indeminfier), மற்றவர் ஈட்டுறுதிபெறுபவர் (indeminfied).

2. நட்டமேற்பட்டால் ஈட்டுறுதியில் முதல் நிலைப் பொறுப்பும், தனிப்பட்ட பொறுப்பும் ஈட்டுறுதியளிப்பவரையே சாரும். ஆனால் உத்தரவாத ஒப்பந்தத்தில் இரு ஒப்பந்தங்கள் அடங்கியுள்ளன. கடனாளி, கடனாளர் ஆகியோரிடையே ஏற்பட்டுள்ள முதன்மை ஒப்பந்தம் ஒன்று. கடனாளர், பிணையாள் ஆகியோரிடையே ஏற்பட்டுள்ள இரண்டாம் நிலை ஒப்பந்தம் மற்றொன்று. உத்தரவாதத்தில் முதன்மை நிலைப்பொறுப்பு (primary liability) தலைக்கடனாளி (Principal debtor)யையே சார்ந்து நிற்கிறது. தலைக் கடனாளி தம் பொறுப்பை நிறைவேற்றத் தவறினால் பிணையாள் பொறுப்பாவார்.

3. உத்தரவாத ஒப்பந்தத்தில், கடனாளியின் வேண்டுகோளின் பேரில் பிணையாள் பொறுப்பேற்க ஒப்புகிறார். ஈட்டுறுதியில் இம்மாதிரியான வேண்டுகோள் தேவைப்படுவதில்லை.

4. தலைக்கடனாளி ஏற்ற பொறுப்பை அவர் செய்யத் தவறிய நிலையில் பிணையாள் செய்து முடித்தால், பின்னர் அவர் தலைக் கடனாளிமீது வழக்குத் தொடர முடியும். ஈட்டுறுதி ஒப்பந்தத்தில் இந்த உரிமை பிணையாளுக்குக் கிடையாது.

வங்கியர் தமது வாடிக்கையருக்குத்தரும் கடனுக்குக் கோரும் உத்தரவாத ஒப்பந்தம் எழுத்தால் அமைய வேண்டும். சட்டம் வாய்மொழி ஒப்பந்தத்தையும், எழுத்தால் அமைந்த ஒப்பந்தத் தையும் ஒன்றுகக் கருதினுலும், பின்னர் சிக்கல்கள் ஏதும் ஏற்படு வதைத் தவிர்க்க ஒப்பந்தத்தை வங்கியர் எழுதி வாங்கிக் கொள் வார். வாடிக்கையர் திடீரென்று இறந்து விட்டால் அல்லது பிணையாளுக்கும் வங்கியருக்குமிடையே கருத்து வேற்றுமையேதும் ஏற்பட்டால் வாய்மொழியால் அமைந்த ஒப்பந்தத்தை மெய்ப் பிப்பது கடினமாகும்.

வங்கியர் உத்தரவாதத்தின்மீது கடனளிக்குமுன் உத்தர வாதம் கொடுப்பவரின் ஒழுக்கம், நிதிநிலை முதலியவைகளைப்பற்றி விசாரணை செய்யவேண்டும். உத்தரவாதம் கொடுப்பவரைப்பற்றி வங்கியருக்கு ஒன்றும் தெரியாத நிலையில் உத்தரவாதம் பொரு ளற்றதாகப் போகக்கூடும். மற்றும் உத்தரவாதம் பயன் தருவ தாக இருக்க, எவ்விதமான சூழ்நிலையிலும் பிணையாள் தன் பொறுப்பைத் தட்டிக்கழிக்காத வகையில் உத்தரவாதப்பத்திரம் (Guarantee Form) எழுதப்பட்டிருக்க வேண்டும்.

உத்தரவாதம் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைவதால், அது ஒரு செல்லும் நிலையுள்ள ஒப்பந்தத்திற்குள்ள இலக்கணப்படி, மறுபயன் (consideration) கருதிச் செய்யப்பட்டிருக்க வேண்டும். தலைக்கடனுளியின் நன்மைக்காக அளிக்கும் உறுதியுரை (Promise) அல்லது செய்யப்படும் எதுவும், பிணையாள் உத்தரவாதம் தரு வதற்குப் போதுமான மறுபயனுக அமையலாம்.

உத்தரவாதம் முழுநம்பிக்கை ஒப்பந்தமா?

உத்தரவாத ஒப்பந்தம் முழுநம்பிக்கையில் எழுகிற (Uberrimae Fidei) ஒப்பந்தமாகுமா என்ற கேள்விக்கு அறுதியான விடையளிக் கப்படவில்லை. தலைக்கடனுளி முன்னுளில் கடன்பட்டிருந்த செய்தி பற்றி பிணையாள் ஏதும் கேட்காத நிலையில் வங்கியர் அதுபற்றித் தெரிவிக்கும் கடமையுடையவரல்லர் (Imperial Bank of India V. Avanasi Chettiar). ஆனுல் பிணையாள் கோரும் தகவல் எதை யும் நல்லெண்ணத்துடன் தன்னுல் இயன்ற அளவுக்குத்தர வேண்டும். சொல்ல வேண்டியதில் ஒருசிறிது சொல்லத் தவறினு லும், சொல்லக் கூடாததைச் சிறிதளவு சொல்லி விட்டாலும், ஒப்பந்தம் மறுக்கப்பட்டு விடக்கூடும். எனவே வங்கியர், பிணை யாளிடம் தமது வாடிக்கையர் பற்றிய தகவலைத் தருகையில் மிக எச்சரிக்கையாக இருத்தல் அவசியம். இந்திய ஒப்பந்தச் சட்டப் படி, கடனுளர் முக்கியச் செய்திகள் குறித்து மௌனம் சாதித்துப்

பெற்ற உத்தரவாதம் செல்லாது (பிரிவு 143). நடவடிக்கையின் முக்கியப் பகுதிபற்றி கடனுளர் அல்லது அவருக்குத் தெரிந்து அவர் அனுமதியுடன் பொய்க்கூற்று (misrepresentation) ஏதும் கூறிப்பெற்ற உத்தரவாதம் செல்லாது (பிரிவு 142). தகவல் தர வேண்டிய இடத்தில் பேசாமலிருப்பது மோசடி எண்ணத்துடன் செயல்படுவதைக் குறிக்கிறது.

சுருங்கக் கூறின், வாடிக்கையரின் இசைவு பெற்று, வங்கியர் உண்மையான, தேவைப்பட்ட தகவலைமட்டுமே உத்தரவாதமளிப் பவருக்குத் தரவேண்டும். தலைக்கடனுளியின் அதிகாரத்திற்குட் பட்ட ஒருநபர் உத்தரவாதம் தந்தால் சட்டம் அந்நடவடிக்கையில் தகாநிலை வற்புறுத்தம் (undue influence) இருப்பதாக அனுமானம் செய்து கொள்ளும். தகாநிலை வற்புறுத்தம் ஏதுமின்றி ஒப்பந்தம் செய்யப்பட்டது என்பதை மெய்ப்பிப்பது வங்கியர் பொறுப்பாக அமையும்.

வங்கியர் கடைப்பிடிக்க வேண்டிய எச்சரிக்கை

உத்தரவாதத்தின்மீது கடனளிப்பதில் வங்கியர் சில எச்சரிக் கைகளை மேற்கொள்ள வேண்டும். பிணையாள் நாணயமான நபராக இருக்கவேண்டும். கடனைச் செலுத்தும்படிக் கோரினுல் அதன்படி செய்யும் வகையுள்ள நபராக பிணையாள் அமைந்தால் உத்தரவாத ஒப்பந்தத்தினுல் பயனுண்டு. பிணையாளின் நிதிநிலை யைப்பற்றி அவ்வப்போது தகவல் சேகரிக்கவேண்டும். கடன் தீரும்வரை உத்தரவாதத்தின் மதிப்பு கடனளவுக்குக் குறைந்து விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். கடன்கோருபவர் உத்தர வாதம் தருபவரை அணுகித் தம்கடனுக்கு உத்தரவாதம் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். வங்கியர் எவரையும் இதுபற்றி அணு கக்கூடாது. இதற்கெனத் தயாரிக்கப்பட்டப் படிவத்தில் உத்தர வாதம் பெறவேண்டும். பலநபர்கள் உத்தரவாதம் செய்ய ஒப்பி, கடன் கொடுக்கப்படுகையில் அந்நபர்களனைவரும் கடன் தரப்படு முன் உத்தரவாதப் பத்திரத்தில் கையொப்பமிடவேண்டும். ஒப்பி யவர்களில் ஒருசிலர் மட்டும் கையொப்பமிட்டுப் பிறர் கையொப்ப மிடாவிட்டால், கையொப்பமிட்டவர்களும் தமது பொறுப்பைத் தட்டிக்கழித்து விடக்கூடும். உத்தரவாதம் காலாவதியாகாம லிருக்கும் பொருட்டுக் குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை உறுதி பெறும் கடிதத்தைப் பிணையாட்களிடம் பெற்று அதனை, கடனுளி தான் கொடுக்க வேண்டிய கடன்தொகையை உறுதிசெய்த கடிதத் துடன் இணைத்து வைக்கவேண்டும். வங்கியர் உத்தரவாத ஒப்பந்

தத்தைத் தம் முன்னிலையில் பிணையாள் கையொப்பமிடவேண்டும் என்று வற்புறுத்துதல் நன்று. இதனால் இரண்டு வகையான நன்மைகள் உண்டு. பிணையாள் கையொப்பம் பொய்யாகப் புனையப்பட்டது என்று கூறுவது தவிர்க்கப்படுகிறது. மற்றும் பத்திரத்தில் என்ன கண்டிருக்கிறது என்று தெரியாமல் கையொப்பமிட்டதாகப் பிணையாள் கூறமுடியாது. மேலும் பிணையாளைப் பணம் செலுத்தும்படி வங்கியர் கோரும் நிலையில், வங்கியர் தமது (பிணையாளது) கையொப்பம் பெற வேண்டிப் பத்திரத்தைக் கொடுத்தனுப்பிய நபர் ஏதோ பொய்க்கூற்று மொழிந்து கையொப்பம் வாங்கிவிட்டார் என்று கூறவும் முடியாது.

பிணையாளின் உரிமைகள்

(i) தாம் உத்தரவாதம் தந்த நடவடிக்கையின் காரணமாகச் செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத்திய, அல்லது காரியத்தைச் செய்துமுடித்த பிணையாள், கடனாளருக்குக் கடனாளி மீது எவ்வெவ் வுரிமைகளுண்டோ, அவையனைத்தையும் பெறுகிறார். தலைக் கடனாளி வங்கியரிடம் அக்கடன் பெறும் பொருட்டுப் பிணையங்களேதும் தந்திருந்தால் அவற்றை உத்தரவாதப்படி பொறுப்பைத் தீர்த்த பிணையாளிடம் வங்கியர் கொடுத்துவிட வேண்டும்.

(ii) உத்தரவாத ஒப்பந்தப்படி கடனைச் செலுத்துமாறு கடனாளர் கோரி வழக்குத் தொடர்ந்தால், பிணையாள் கடனாளருக்கு உள்ள மாற்றுமர் அடைமான உரிமை (Subrogation)ப்படி வேறு எந்தப் பணத்தையும் ஈடுகட்டிக் கொள்ளும் உரிமையிருப்பின், அந்த உரிமையைத் தாமும் கோரலாம். அப்படி வேறு எந்தத் தொகையையும் ஈடு கட்டிய பின்னும் தரவேண்டிய கடன் தொகையிருந்தால் அதை மட்டும் பிணையாள் தரவேண்டும்.

(iii) எந்த நேரத்திலும் உத்தரவாதத்தின் மீது தம்பொறுப்பு எந்த அளவுக்கு இருக்கிறது என்று பிணையாள் தெரிந்து கொள்ளும் உரிமை கொண்டவர். இதுபற்றிய தகவலைப் பிணையாளுக்குத் தெரிவிக்கும்போது வங்கியர் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தமது வாடிக்கையரின் கணக்கைப் பிணையாளுக்குக் காட்டவேண்டுவதில்லை; இரகசியத் தன்மை பொருந்திய செய்திகளைத் தெரிவிக்க வேண்டுவதுமில்லை. கணக்கிலுள்ள இருப்பு இவ்வளவு என்று கூறினால் போதும்.

(iv) குறிப்பிட்ட கால அறிவிப்பு வங்கியருக்குத் தந்துவிட்டு பிணையாள் தமது ஒப்பந்தத்தைப் பின்னழிப்பு (revocation)ச் செய்யலாம். ஆனால் அந்த காலவரையறைக்கு உட்பட்டு உத்தரவாதத்தின்மீது மேற்கொள்ளப்பட்ட எல்லா நடவடிக்கைகள் பற்றிய பொறுப்பைப் பிணையாள் ஏற்றேயாக வேண்டும்.

(v) ஒரு கடனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பிணையாட்களிருப்பின், ஒப்பந்தப்படி ஒவ்வொரு பிணையாளும் குறிப்பிட்ட அளவு தொகைக்குப் பொறுப்பாவர். ஒரு பிணையாள் மொத்தத் தொகையையும் செலுத்த நேர்ந்தால், பிற பிணையாட்களிடமிருந்து அவரவர் பொறுப்பேற்ற விகிதப்படி தொகையைப்பெற அவருக்கு உரிமையுண்டு. உத்தரவாதம் அளிக்கும்போது பொறுப்பின் விகிதத்தை நிருணயிக்காவிடில், பொறுப்பைச் சமமாக ஏற்கவேண்டும்.

பிணையாள் பொறுப்பு நீக்கம்

பிணையாள் கீழ்க்கண்ட நிலைகளில் தமது பொறுப்பினின்று விடுபடுகிறார் :-

(i) பிணையாளின் இசைவின்றிக் கடனாளரும் தலைக் கடனாளியும் உத்தரவாத ஒப்பந்த நிபந்தனைகளை மாற்றினால் பிணையாள் பொறுப்பு தீர்ந்து போகும்.

(ii) தலைக் கடனாளியைப் பொறுப்பிலிருந்து விடுவித்தாலோ அல்லது அவர் பொறுப்பைத் தீர்த்துவிடும் வகையில் எதையும் செய்தாலோ பிணையாள் பொறுப்பு தீர்ந்தவராகிவிடுவார். இதற்குக் காரணம், உத்தரவாத ஒப்பந்தத்தில் முதன்மையான ஒப்பந்தம் தலைக்கடனாளிக்கும் கடனாளருக்குமிடையே ஏற்படுகின்றது. கடனாளர் செய்கையால் முதன்மையான ஒப்பந்தமே தீர்ந்துபோகும் போது, கடனாளருக்கும் பிணையாளுக்குமிடையேயான ஒப்பந்தம் தானாகவே அழிந்து போகிறது.

(iii) பிணையாளின் இசைவு இல்லாமல், கடனாளர் (அ) கடனாளி மீது வழக்குத் தொடரமாட்டாது என்று உறுதியளித்தாலும் அல்லது (ஆ) கடனைத் திருப்பித்தர காலத்தை நீட்டித்தர உறுதியளித்தாலும் அல்லது (இ) கடனாளியுடன் வேறு கடனடைவு ஏற்பாடு செய்து கொண்டாலும் பிணையாளர் பொறுப்பு தீர்ந்ததாகும்.

(iv) பிணையாளின் உரிமைக்கு முரணுன செயல் எதையும் கடனுளர் செய்தாலோ அல்லது பிணையாள் கோரிய கடமை எதையும் கடனுளர் செய்யத் தவறினுலோ, அதன் காரணமாகத் தலைக் கடனுளிமீது பிணையாளுக் குள்ள உரிமை, பாதிக்கப்பட்டால், பிணையாள் பொறுப்பு தீர்ந்து போகும்.

உத்தரவாதப் பொறுப்பினை நிருணயிக்கும் நிகழ்ச்சிகள்

உத்தரவாத ஒப்பந்தப்படிப் பிணையாள் பொறுப்பு ஏற்றுலும், சில நிகழ்ச்சிகள் காரணமாக குறிப்பிட்ட பொறுப்பு இவ்வளவு தான் எனத் தீர்மானிக்கப்பட்டு அந் நிகழ்ச்சிக்குப்பின் கொடுக்கப் படும் கடன்களுக்கு உத்தரவாதம் செய்பவர் பொறுப்பாக மாட் டார். அவை :—

(i) பிணையாள் இறந்து போனுல், அவர் இறப்புக்குப் பிறகு தரப்படும் கடன்களுக்கு அவர் அளித்திருந்த உத்தர வாதம் பொருந்தாது. இருந்தாலும் ஒப்பந்தத்தில், பிணையாள் இறந்த செய்தி வங்கியருக்கு அவரது சட்டப் பிரதிநிதிகளால் அறிவிக்கப்பட்ட நாள் முதல் மூன்று மாதங்கள்வரை உத்தரவாதம் பிணையாள் சொத்தைக் கட்டுப்படுத்தும் என்று கண்டிருந்தால் அதன்படி பொறுப்பு தொடர்ந்து நிற்கும்.

(ii) தலைக் கடனுளி இறந்துவிட்டார் என்ற செய்தி வங்கி யருக்குக் கிடைத்தபின் அவரது கணக்கில் ஏற்படும் பற்றுத் தொகைக்குப் பிணையாள் பொறுப்பாக மாட் டார். கிளேடன் வழக்கின் விதி (Rule in Clayton's case) வங்கியரைப் பாதிக்காமலிருக்க கடனுளியின் கணக்கை அத்துடன் முடிவுசெய்து விடல் வேண்டும்.

(iii) பிணையாள் நொடித்த நிலையரானபின் தலைக் கடனுளிக் குத் தரப்படும் கடனுக்கு அவர் பொறுப்பாக மாட்டார். நொடித்த நிலையேற்படுமுன் அவர் பொறுப்பு எவ்வள வாக உள்ளது என்று கணக்கிட்டு அவருடைய சொத்ததி காரி (Official Receiver) யிடம் உரிமையைக் கோரவேண் டும்.

(iv) உத்தரவாத ஒப்பந்த நிபந்தனைகளின்படி பிணையாள் கடனுளருக்குத்தான் அளித்துள்ள உத்தரவாதத்தை முடிவுசெய்து கொள்ளும்படி அறிவித்தால், உத்தர வாதம், அறிவிப்பு கொடுக்கும்வரை கொடுத்த கடன்களை

மட்டுமே கட்டுப்படுத்தும். இருப்பினும், குறிப்பிட்டக் காலம் முடியும்வரை உத்தரவாத ஒப்பந்தம் தொடர்ந்து அமுலிலிருக்கும்.

(v) கடனாளர், பிணையாள்மீது கோரிக்கை விடுத்தவுடன், அவரது உத்தரவாதப் பொறுப்பு குறைந்து போகாத வகையில் கணக்கை முடிவுசெய்து கொள்வது நல்லது. இல்லாவிடில் கிளேடன் வழக்கு விதிப்படி, பணம் கடனாளி யின் கணக்கில் செலுத்தப்பட்டால், அது பிணையாளின் பொறுப்பை அந்த அளவுக்குக் குறைப்பதாக அமையக் கூடும்.

வங்கியருக்குள்ள சட்டப்பிணைப்புகள்

முன்னர் கண்டவாறு கடனாளர் என்ற நிலையிலுள்ள வங்கியர், தமக்கும் தலைக் கடனாளிக்குமிடையேயுள்ள உத்தரவாத ஒப்பந்த விதிகளை அவர் இசைவின்றி மாற்றக் கூடாது. நடைமுறையில், வங்கியர் உத்தரவாத ஒப்பந்தம் செய்துகொள்ளும் பொழுதே தலைக் கடனாளியிடம் ஒப்பந்த நிபந்தனைகளைத் தேவைக் கேற்ப மாற்றிக்கொள்ள அவர் இசைவைப் பெற்றுவிடுகிறார்.

வங்கியர் தலைக் கடனாளியை அவர் பொறுப்பிலிருந்து விடு வித்தலாகாது. சகபிணையாட்கள் உள்ள நிலையில் ஒருவரை மட்டும் வங்கியர் பொறுப்பிலிருந்து விடுவித்தால், மற்ற பிணை யாட்கள் பொறுப்பு தீர்ந்ததாகாது; அங்ஙனம் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டவர் தனது சகபிணையாட்களுக்குத் தாம்பட்ட பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுவதில்லை. தம் நிலையைப் பாது காக்கவேண்டி, வங்கியர் இரண்டு அல்லது மேற்பட்ட பிணையாட் கள் உள்ளபோது உத்தரவாதப் பொறுப்பைக் கூட்டாகவும் தனித்தும் செல்லும்படி ஒப்பந்தம் செய்து கொள்வர்.

உத்தரவாத ஒப்பந்தத்தில் வேறு வகையாகக் கண்டிருந்தா லன்றி, கடனாளியின் பிணையங்களை வங்கியர் கவனக்குறைவாகக் கையாண்டு அதனால் பிணையங்களின் மதிப்பு குறைந்து போனால், பிணையங்களின் மதிப்பு குறைந்த அளவுக்குப் பிணையாளின் பொறுப்பு குறைந்து விடும். மற்றும், பிணையாளின் ஒப்புதலன்றி வங்கியர் கடனாளிக்கு எவ்விதச் சலுகையும் அளித்தலாகாது. கடனைத் திருப்பிச் செலுத்த கடனாளிக்குக் காலத்தை நீட்டித்துத் தந்தால், அவரது நிதிநிலைமை மேலும் மோசமாகிப் பின்னர் பிணையாள் அவரிடமிருந்து தாம் அவர் (கடனாளி) சார்பாகச் செலுத்திய தொகையைப் பெறுவது கடினமாகலாம் அல்லது முடி

யாமலும் போகலாம். தலைக்கடனாளி இறந்து போனாலும் போக லாம் அல்லது பித்தநிலையராயும் விடலாம். கடனைத் திருப்பிப் பெறத் தலைக் கடனாளிமீது வழக்குத் தொடராமலிருக்க இணங்கு வது மட்டும் பிணையாளைப் பொறுப்பினின்று விடுவிக்காது. Bank of Bihar Ltd. V. Dr. Damodar Prasad & Another என்ற வழக் கில் வங்கியர் தலைக் கடனாளிமீது எடுக்கக் கூடிய நடவடிக்கை களனைத்தையும் எடுத்த பின்னரே பிணையாளிடமிருந்து பணம் செலுத்தக் கோர வேண்டுமென்பதில்லை; உத்தரவாதத்தின்படி பணம்பெற, தலைக் கடனாளியிடம் பணஞ் செலுத்தக் கோருவது மட்டும் நிபந்தனையாக இருந்தால், கோரியவுடன் பிணையாளிட மிருந்து பணத்தைப்பெற நடவடிக்கை எடுக்கலாம் என்று தீர்ப் பளிக்கப்பட்டது.

கூட்டு நிறுவனம் ஒரு கடனுக்கு உத்தரவாதமளித்தால், உத்தரவாதப் பத்திரத்தை எல்லா கூட்டாளிகளும் கையொப்ப மிடுதல் வேண்டும். கூட்டு நிறுவனத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் கூட்டாளிக்குத் தரப்பட்டுள்ள தொக்கிய அதிகாரம், உத்தரவாதம் அளிப்பதற்கும் பொருந்தும் என்று நினைத்துவிடக் கூடாது

வரையறுக்கப்பட்ட நிறுமங்கள் (கம்பெனிகள்) கடன் கோரு மிடத்து வங்கியர் அவற்றின் அமைப்பு முறையேடு, செயல்முறை விதிகள் ஆகியவற்றை உன்னிப்பாகப் படித்து, நிறுமத்திற்கு உத்தரவாதம் கொடுக்கும் அதிகாரம் தரப்பட்டுள்ளதா என்று பார்க்க வேண்டும். அப்படி அதிகாரம் தரப்பட்டிருந்தால் இயக்குநர் அவை தீர்மானம் ஒன்று இயற்றி குறிப்பிட்ட உத்தர வாதமளிக்க நிறுமத்திற்கு அதிகாரமளிக்கலாம். தீர்மானத்தின் சான்றுறுதி செய்யப்பட்ட நகலுடன் உத்தரவாதப் பத்திரத்தின் நகலொன்றையும் நிறும அதிகாரி கையொப்பமிட்டு அதை இணைத்து வங்கியருக்கு அனுப்ப வேண்டும்.

இறுதியாகக் கூறுமிடத்து, உத்தரவாதம் ஒன்றை மட்டுமே நம்பி வங்கியர் கடனளிப்பது அவ்வளவு நல்லதல்ல. மற்ற வகைப் பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் உத்தரவாதம் பெற்றுக்கொள் வதும் ஒருவகைப் பாதுகாப்பாகக் கருதப்படுதல் நன்று.

12. மாற்றுச் சீட்டு நடவடிக்கைகள்
(Transactions in Bills of Exchange)

மாற்றுச் சிட்டின் தனிச் சிறப்பு

குறுகிய காலத்திற்குப் பணத்தை ஆதாயந் தருவகையில் பயன் படுத்த வங்கியருக்குச் சிறந்த சாதனமாக விளங்குவது மாற்றுச் சீட்டை வாங்கும், தள்ளுபடி செய்யும் நடவடிக்கைகளாகும். மாற்றுச் சீட்டு குறிப்பிட்ட நாளன்று முதிர்வடையும் இயல் புள்ளது. எனவே குறிப்பிட்ட நாளன்று அதன் மீதான பணஞ் செலுத்தப்படும் என வங்கியர் உறுதியாக நம்பலாம். இதனால் மாற்றுச் சீட்டு ரொக்கநிலைத் தன்மையுள்ள பிணையமாகத் திகழ் வது புலனாகும். தள்ளுபடியாகக் கிடைக்கும் தொகையும் வங்கிய ருக்கு நல்ல ஆதாயமாக அமைகிறது. மேலும் மற்ற பங்கு மாற்றுச் சந்தை பிணையங்களை நோக்குமிடத்து மாற்றுச் சீட்டின் விலையில் ஏற்றத்தாழ்வு ஏதும் இருப்பதில்லை. தொழில்துறையில் உள்ளவர்கள் மாற்றுச் சீட்டைத் தம் நடவடிக்கைகளில் பயன்படுத் துவதால், அதைத் தள்ளுபடி செய்யும் அல்லது வாங்கிக் கொள்ளும் வசதியளிக்கும் வங்கியரிடமே கணக்கு வைத்துக் கொள்ள விரும்புவர். ஆகவே புது நபர்களைக் கணக்கு வைத்துக் கொள்ளும்படி தம்பால் ஈர்க்க வங்கியர் இந்த வசதிகளை அவசியம் செய்து தருதல் வேண்டும். இல்வளவு நன்மைகளும் வசதிகளும் இருந்தும் நம் நாட்டில் மாற்றுச் சீட்டு பெரு வகையில் பயன்படுத் தப்படுவதில்லை. இதற்கான காரணங்களைக் காண்போம்,

மாற்றுச் சிட்டுப் புழக்கம் வளராமைக்குக் காரணம்

முதலாவதாக நமது வணிகர்கள் தமது கடன் நடவடிக்கைகளை ரொக்கக் கடன் (Cash credit) கணக்கு வழியாகவும், தொடர்ந்த கணக்கு (running account) வழியாகவும் நடத்துகின்றனர், இக் கணக்குகளில், பயன்படுத்தப்படும் தொகையளவுக்கு மட்டும்

வட்டி கட்டினால் போதும். கடனாளியின் நிலை சீர்கேடுற்றால் வங்கியர் கடன் வசதிகளை உடனே நிறுத்தி விடுவார். கடன் பேரில் சரக்கு வாங்கும் வணிகர், மாற்றுச்சீட்டுகளை ஏற்பதை விரும்புவதில்லை.

தள்ளுபடி செய்யப்பட்ட மாற்றுச்சீட்டுகளை நாட்டின் மைய வங்கியிடம் அவசியம் ஏற்படும் போது மறுதள்ளுபடி செய்யும்படி கோருவது எல்லா நாடுகளிலுமுள்ள வணிக வங்கியரின் பழக்கமாகும். நம் நாட்டில், ரிசர்வு வங்கி மறுதள்ளுபடி வசதியைப் பெருமளவில் வணிக வங்கியருக்கு அளிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டும், கணிசமான அளவுக்கு இதில் முன்னேற்றம் ஏற்படவில்லை.

ஆங்காங்கு நடைமுறையிலிருக்கும் வணிகப் பழக்கப்படி உண்டியல்கள் எழுதப்படுவதால் நாடு முழுவதும் ஒரே வகைச் சட்டநிலை உண்டியல்களைப் பொறுத்தவரை இல்லை. மாற்றுச் சீட்டு என்ற முறையில் அமைந்தால் மாற்று முறையாவணச் சட்டம் அதற்குப் பொருந்தும்.

ஆவணங்கள் சேர்ந்த மாற்றுச்சீட்டு (Documentary Bills) பரவலாகப் புழக்கத்திலிருக்க நாடுமுழுவதும் நல்ல கிடங்குகளும், பண்டகங்களும் அமைந்திருக்க வேண்டும். அண்மைக்காலம் வரை இவ்வசதிகள் மிகமிகக் குறைவாக இருந்தன.

மாற்றுச் சீட்டின்மீது முத்திரை வரி செலுத்தப்பட வேண்டும் வரிச்சுமை பெருமளவில் இருப்பதாலும் வணிக மக்கள் மாற்றுச் சீட்டைப் பயன்படுத்தத் தயங்குகின்றனர்.

மாற்றுச் சீட்டின் வகைகள்

மாற்றுச்சீட்டு, வெற்று மாற்றுச் சீட்டாக அல்லது ஆவணஞ் சேர்ந்த மாற்றுச் சீட்டாக இருக்கலாம். உண்டியல் (Hundi) காசோலை, இலாப ஈவுச்சீட்டு (Dividend warrant) முதலிய வெற்று மாற்றுச் சீட்டு (Clean bill)களாகும். ரயில்வே ரசீது, கப்பல் ரசீது (Bill of Lading) போன்ற சரக்குரிமை ஆவணங்கள் சேர்ந்த மாற்றுச் சீட்டை ஆவணஞ் சேர்ந்த மாற்றுச்சீட்டு என்பர். பெரும்பாலும் கடனுக்குப் பிணையாகவே மாற்றுச்சீட்டை வங்கியர் வைத்திருப்பர்.

மாற்றுச் சீட்டைத் தள்ளுபடி செய்வதில் வங்கியர் எச்சரிக்கையாக இருத்தல் அவசியம். தள்ளுபடி செய்யப்பட வேண்டி

கொடுக்கப்பட்ட மாற்றுச்சீட்டு, வணிக நடவடிக்கையை அடிப் படியாகக் கொண்டு எழுதப்பட்டதா அல்லது கடன்வசதி (Accommodation) பெறும் பொருட்டு எழுதப்பட்டதா என்று ஆராய வேண்டும். மாற்றுச் சீட்டில் தொடர்புற்ற நபர்களின் பெயர், தொழில், முகவரி போன்ற செய்திகளைக் கவனமாக ஆராய்ந்தால் உண்மை புலப்படும். வணிக மாற்றுச் சீட்டாக இருந்தால் அதற்கு ஈடாக சரக்கு இருக்கும். கடன்வசதி மாற்றுச் சீட்டிற்கு (Accommodation Bill) அடிப்படையாக உருப்படியான சொத்து ஏதும் அமைவதில்லை. மற்றும் ஆவணஞ் சேர்ந்த மாற் றுச்சீட்டைப் பெறும்போது எவ்வகைச் சரக்குகளைப்பற்றி நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று நோக்க வேண்டும்.

மாற்றுச் சீட்டுடன் தொடர்புற்ற நபர்கள் நாணயமுள்ளவர் களா என்று கவனிக்க வேண்டும். அதை எழுதியவர், ஏற்றவர், மேலெழுதியவர் எல்லோரும் ஒழுக்கம், திறமை, வகை உள்ளவர் களாக இருத்தல் வேண்டும்.

மாற்றுச் சீட்டு குறைபாடு ஏதுமின்றி இருக்க வேண்டும். சட்டம் வகுத்தவாறு முத்திரை வரி செலுத்தப்பட்டிருக்க வேண் டும். கூட இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் சரியான முறையில் அமைந்திருக்க வேண்டும். லாரி ரசீதாக இருத்தால் அது ஒப்பு தலளிக்கப்பட்ட போக்கு வரத்துக்கம்பெனி அல்லது நிறுவனம் அளித்துள்ள ரசீதா என்று நோக்க வேண்டும்.

மாற்றுச்சிட்டு சந்தைத் திட்டம் (Bill Market Scheme)

ரிசர்வு வங்கி 1952ஆம் ஆண்டு மாற்றுச்சீட்டுச் சந்தைத் திட் டம் ஒன்றை ஏற்படுத்தியது. இத்திட்டப்படி ரிசர்வு வங்கி மாற்றுச் சீட்டுக்களை மறு தள்ளுபடி செய்வதில்லை. வணிக வங்கிகளின் வாடிக்கையர் தமது கடன்களுக்கு எழுதித்தந்துள்ள கடனுறுதிச் சீட்டுகளை 90நாட்களில் முதிர்வடையும் தவணைக் கடனுறுதிச் சீட்டுகளாக மாற்றி அறற்றைப் பிணையமாக வைத்து ரிசர்வு வங்கி யிடமிருந்து வணிகவங்கிகள் கடன் பெறலாம். இத்திட்டம் துவங் கிய காலத்தில், வணிகவங்கிகளிடம் இதைப்பரப்பும் நோக்குடன் ரிசர்வு வங்கி சில சலுகைகளை அளித்தது. கடன் மீதான வட்டி 3% என்றும், முத்திரைவரியில் ஒரு பங்கு ரிசர்வு வங்கி ஏற்குமென் றும் நிருணயிக்கப்பட்டது. பணச்சந்தையில் உள்ள கடின நிலையைக்களைவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஏற்றுமதி யாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு 1958இல் ஏற்றுமதி மாற்றுச் சீட்டுகள் பேரிலும் ரிசர்வு வங்கி இக்கடன் வசதிகளை அளிக்கலா யிற்று. 1963ஆம் ஆண்டு ஏற்றுமதி மாற்றுச்சீட்டுக்கடன் திட்டம்

மேலும்சீரிய முறையில் திருத்தி அமைக்கப்பட்டது. ரொக்கக் கடன் (Cash Credit) வசதி அதிகமாகப் பயன்படுத்தப்படுவதால்தான் மாற்றுச்சீட்டு பெறுமளவுக்குப் புழக்கத்துக்கு வரவில்லை என்பதை யுணர்ந்த ரிசர்வு வங்கி 1970ஆம் ஆண்டு, ரொக்கக் கடன் மீது உறுதிக்கட்டணம் விதிக்குமாறு வணிக வங்கிகளுக்கு அறிவுரை யளித்தது. படிப்படியாக ரொக்க கடன் மூலம் பெறும் கடன் வசதியை, மாற்றுச்சீட்டின் வழி பெற, ரிசர்வு வங்கி வழிவகைகளை ஏற்பாடு செய்துள்ளது. பெப்ரவரி1971முதல், மாற்றுச்சீட்டு சந்தைத்திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டு வணிகவங்கியருக்குப் பயனளிப்பதாக அமைக்கப்பட்டுள்ளது. மாற்றுச்சீட்டின் தவணை 90நாட்களுக்கு மிகக்கூடாது; மாற்றுச்சீட்டுக் சரக்கு விற்பனை யின் பேரில் எழுதப்பெற்றிருக்க வேண்டும்என்பது போன்ற அடிப் படை நிபந்தனைகள் இன்னமும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

13. துணைப் பிணையங்கள் மீதான கடன்

(Advances against Collateral Securities)

வங்கியர் கொடுக்கும் பிணையிலாக்கடன் (uusecured loan பற்றிய செய்திகளை முன் அத்தியாயங்களில் கண்டோம். பிறர் பணத்தைக்கொண்டு தமது தொழிலை நடத்தும் வங்கியர் பெரும் பாலும் பிணையிலாக்கடன் கொடுப்பதை விரும்ப மாட்டார் எனவே உத்தரவாதக்கடன் கோருபவர்களையும், மாற்றுச்சீட்டைத் தள்ளுபடி செய்து தரும்படிக் கோருபவர்களையும், தக்கப்பிணையங் களைத் துணைஈடாகத் தர வங்கியர் கோருவார். இந்நிலையில் அக் கடன் பிணைக்கடனாய்விடுகிறது. இனி எவ்வகைப் பிணையங்கள் மீது வங்கியர் கடன் கொடுக்க வேண்டியிருக்கிறது என்பதைக் கவனிப்போம்.

பலவகைப் பிணைகள்

வாடிக்கையரின் தொழில், வங்கியமைந்துள்ள இடம் போன்ற பல காரணிகளையொட்டி பிணையம் அமையும். பங்கு மாற்றுச் சந்தை பிணையங்கள், பொன், கச்சாப்பொருள், சரக்கு, சரக்குரி மைப் பத்திரம், நிலையியல் சொத்து போன்றவை பிணையாக அளிக் கப்படுவதுண்டு. ஒரே வகையான பிணைமீது பெருவாரியான கடன் களைத் தருவதைவிட, பலப்பலவகைப் பிணைகள்மீது பரவலாகக் கடன் தருவதே வங்கியருக்கு நல்லது.

பிணையங்களை ஈடாகக் கொடுத்துக் கடன் கோருபவர் மூன்று வழிகளில் கடன் பெறலாம். ஒன்று பிணையங்கள் மீது வங்கிய ருக்குப் பற்றுரிமை அளிப்பது; இண்டாவது பிணையங்களை வங்கிய ரிடம் அடகுவைப்பது; மூன்றுவது பிணையங்களை அடைமானம் செய்வது ஆகும்.

பற்றுரிமை

முன்னொரு அத்தியாயத்தில் பற்றுரிமை என்பதன் பொருளை விளக்கமாகக் கண்டோம். பொருளை உடையவர் தான் பற்றுரிமை செலுத்த முடியுமாகையால், பற்றுரிமை கொண்டாட உடைமை (possession) அவசியம் தேவைப்படுகிறது. சட்டமுறையாகவும் வணிகவழக்கு முறையாகவும் வங்கியரின் பற்றுரிமை தொக்கிய அடகு என்ற நிலைபெறுகிறது. எனவே வங்கியரைப் பொறுத்த வரையில் பற்றுரிமையும் அடகும் ஒரே நிலையன.

அடகு

கடனுக்கு அல்லது வாக்குறுதி நிறைவேற்றத்திற்குப் பிணைய மாகப் பொருளை ஒப்படை செய்தல் அடகு எனப்படும். அப் பொருள் மீதான சொத்துரிமை அடகு வைப்பவரிடமே தங்கி யிருக்கும். அடகு வைக்கப்படும் சொத்து அடகு பெறுபவரிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அடகு பெறுபவர் அந்த சொத்தைக் குறிப்பிட்ட ஒரு காரியத்திற்காக அடகு வைத்தவரிடம் திருப்பிக் கொடுத்தால் அச்செய்கை அடகைப் பாதிக்காது. ரயில்வே ரசீதை அடகு வைத்துக் கடன்பெற்ற ஒருநபர், சரக்கை ரயிலடியி லிருந்து கொண்டுவந்து கிடங்கில் சேர்க்கும் பொருட்டு அடகு பெறுபவரிடமிருந்து அந்த ரசீதைப் பெற்றால், அடகுபெறுபவர் அந்த ரசீதைத் திரும்ப அடகு வைத்தவரிடம் கொடுத்த ஒரு காரணத்தால், அடகு பாதிக்கப்படாது (Mercantile Bank of India V. Central Bank of India). குறித்தபடி கடனாளி கடனை அடைக்கத் தவறினால் வங்கியர் அடகுச் சொத்தைப் பிணையாக இருத்திக் கொண்டு கடனைத் திருப்பிப்பெற வழக்கு தொடரலாம் அல்லது தக்க அறிவிப்பு கொடுத்துவிட்டுச் சொத்தை விற்றுவிடலாம். சொத்தை விற்றும் கடன் அடைபடவில்லையெனில் மீதிபணத்தைக் கடனாளியிடமிருந்து கோரிப்பெறலாம். கடனை அடைத்தபிறகு மிகுதிப்பணம் ஏதுமிருந்தால் அதனை அடகு வைத்தவரிடம் தந்து விடல் வேண்டும்.

பொறுப்புரிமை ரசீது (Trust Receipt)

சரக்குரிமைப்பத்திரங்களை வங்கியரிடமிருந்து பெற விரும்பும் கடனாளி, சரக்குகளை வங்கியர் சார்பாகப் பொறுப்புரிமைபற்றிப் பெற்று, அவற்றை விற்றுக் கிடைக்கும் தொகையையும் வங்கியர் சார்பாக வைத்திருப்பதாக எழுதித்தரும் ஆவணமே பொறுப் புரிமை ரசீது எனப்படும். இங்ஙனம் ரசீது எழுதித்தந்த கடனாளி நொடித்த நிலையராகிவிட்டாலும் சொத்ததிகாரி அவர் சரக்கு களைக் கோரமுடியாது. ஆனால் கல்கத்தா உயர்நீதிமன்றம் In re

Nripendra Kumar Bose; In Re Summermull Singana; The Chartered Bank of India V. The Imperial Bank of India என்ற வழக்குகளில் அளித்துள்ள தீர்ப்புகளின்படி பொறுப்புரிமை ரசீது ஒரு பயனற்ற ஆவணமாகக் கருதப்படுகிறது. ஏனெனில் கடன்பெற்ற நபர், பிறகடனுளர்களை வஞ்சித்து குறிப்பிட்ட ஒரு கடனுளருக்கு மட்டும் ஓரவஞ்சகக் கடனடைப்பு செய்யும் வகையால் இவ்வகைப் பொறுப்புரிமை ரசீது எழுதித்தருவது ஒரு நொடிப்புநிலை தருவினை (Act of insolvency) எனக் கருதப்பட்டு சொத்து சொத்ததிகாரி வசம் போய்ச்சேரும்.

அடகுவைக்கும் அருகதை உள்ளோர்

சட்டமுறையாக உடைமைபெற்றுள்ள எவரும் சரக்கை அடகு வைக்கலாம். சரக்கு உரிமையாளரல்லாமல் பிற சில நபர்களும் செல்லும்படியாகக் கூடிய அடகு ஏற்படுத்தலாம்.

(i) உரிமையாளரின் ஒப்புதல் பெற்று, சரக்கு அல்லது சரக்குரிமைப் பத்திரங்கள் வைத்திருக்கும் வணிக முகவர் (mercantile agent) தமது தொழில் நடப்பில் செயலாற்றுகையில் அடகு ஏற்படுத்தலாம். அடகு பெறுபவர் நல்லெண்ணத்துடன், வணிக முகவருக்கு அடகுவைக்கும் அதிகாரம் கிடையாது என்ற செய்தி தெரியாதநிலையில் செயலாற்ற வேண்டும்.

(ii) தவிர்தகு (voidable) ஒப்பந்தத்தின் அடிப்படையில் சரக்கு உடைமை பெற்றவர், மோசடி, திரித்துக்காட்டல், வலுக்கட்டாயம் அல்லது தகாநிலை வற்புறுத்தம் காரணமாக உண்மை உரிமையாளர் ஒப்பந்தத்தைத் தவிர்க்குமுன் அடகு வைத்திருந்தால் அது செல்லும் தகையது. அடகு பெறுபவர் நல்லெண்ணெத்துடன், அடகு தருபவருடைய உரிமை குறைபாடுடையது என அறியாமல் செயல்பட வேண்டும்.

(iii) சரக்கை விற்றபின்னும், விற்றவர் உடைமையில் அது இருக்கும்போது விற்கப்பட்டசெய்தி தெரியாது நல்லெண்ணத்துடன் அதை அடகாகப் பெற்றுக் கொண்டவர் கையில் உண்டாகும் அடகு செல்லுந்தகையது.

(iv) மேற்கூறிய அதேநிலையில் சரக்கை வாங்கியவர் தமக்கு இன்னமும் உரிமை மாற்றுத்தரப்படாநிலையில், விற்றவர் ஒப்புதலுடன் சரக்கை அல்லது சரக்குரிமைப் பத்திரத்தைத் தம்வசம் வைத்திருந்தால் அதை அடகுவைக்கலாம்.

(v) அடகு பெறுபவர் தமக்கு அச்சரக்கின்பாலுள்ள உரிமை யளவுக்கு அதை மீண்டும் அடகு வைக்கலாம்.

பிணைகளை மீட்டல்

கடனைத்திருப்பித்தந்தவுடன் அடகு வைத்தவர் பிணையத்தை மீட்டுக் கொள்ளலாம். பிணையத்தை அடகுபெற்றவர்விற்று, அதிற்கிடைத்த தொகை கடனளவைவிட அதிகமாக இருப்பின் மிகுதிப்பணத்தை அடகு வைத்தவரிடம் கொடுத்துவிட வேண்டும். அடகு வைக்கும்போது சரக்கிலுள்ள முக்கியக் குறைபாடுகள்பற்றி அடகு பெறுபவருக்குத் தெரிவிக்க வேண்டும். சரக்கைப் பாதுகாக்கச் செய்யப்படும் செலவை அடகுவைப்பவரே ஏற்றுக் கொள்ள வேண்டும். தமது உரிமையிலுள்ள குறைபாடுகளினால் அடகு பெறுபவருக்கு ஏற்படும் நட்டத்திற்குப் பொறுப்பேற்க வேண்டும். சரக்கு விற்றும் கடன் அடைபடாவிடில் மீதிக் கடனை அடைக்கும் பொறுப்பு அடகு வைத்தவருக்குண்டு.

அடகுபெறுபவரின் உரிமைகளை முன்னரே கண்டோம். அவர் அடகு ஒப்பந்தப்படி செயலாற்றவேண்டும். தன் பொருளைப் பொதுவாக ஒரு நபர் எவ்வளவு கவனமாகப் பாதுகாத்து அதன் மீது அக்கறை காட்டுவாரோ அதே அளவுக்குக் கவனத்துடன் பொருளைக் காக்கவேண்டும். அடகுப் பொருள்மீது வருமானம் ஏதும் கிடைத்தால் அது அடகுவைத்தவருக்கு உரிமையாகும். கடன் அடைக்கப்பட்டதும் பிணையத்தைத் திருப்பித்தந்துவிட வேண்டும்.

இடைவெளி (Margin)

வாடிக்கையரின் நாணயம், தொழில், பணத்தேவை முதலியவற்றைப்பொறுத்தும், அவர் அளிக்கும் பிணையத்தைப்பொறுத்தும் வங்கியர் எவ்வளவு கடனளிப்பது என்று முடிவு செய்வார். பிணையத்தின் சந்தை மதிப்புக்கும் கொடுக்கக்கூடிய கடன் தொகைக்கும் இடையே உள்ள வேறுபாட்டை இடைவெளி (Margin) என்பர்.

பிணையத்தின் தன்மையைப்பொறுத்து இடைவெளி அமையும். முதல்தர பிணையங்கள், பொன் முதலியவற்றிற்கு 10 முதல் 15 விழுக்காடு இடைவெளிபோதுமானதாகக் கருதப்படுகிறது. நல்ல பங்குமாற்றுச் சந்தைப் பிணையங்களுக்கு 25 முதல் 40 விழுக்காடு இடைவெளி இருத்தல் நல்லது என்பர். சரக்குகளாக இருப்பின், வாழ்க்கைக்கு இன்றியமையாததாக இருந்தால் 25 விழுக்காடு இடைவெளி போதுமானது. மற்றபடி ஆடம்பரச் சரக்குகள்மீது 60 விழுக்காடு இடைவெளி எதிர்பார்ப்பது வழக்கம்.

அடகு எழுத்தால் அமையவேண்டுவதில்லையெனினும் வங்கியர் அதற்கு ஒரு பத்திரம் தயாரித்து வைத்திருக்கின்றனர். எந்த நிபந்தனைகளின் பேரில் அடகு வைக்கப்படுகின்றது; எவ்வளவு இடைவெளி வைத்திருக்கப்படவேண்டும்; கணக்கை முடிவு செய்தால் அதில் நிற்கும் கடனுக்கு இப்பிணை அடகாக அமையும்; அடகு வைப்பவருக்குப் பிணையத்தின்மீது சொத்துரிமையுண்டு என்றுபல செய்திகள் அதில் குறிக்கப்பட்டிருக்கும்.

பங்குமாற்றுப் பிணையங்கள் (Stock Exchange Securities)

பங்குமாற்றுப் பிணையங்கள்மீது வங்கியர் கடன் தருவதிலுள்ள நன்மை தீமைகளை ஆராய்வோம். அரசினர் கடன், நகராட்சி துறைமுக ஆட்சி, வளர்ச்சிப் பொறுப்புரிமைக் கடன் பத்திரங்கள் போன்றவைகளும், வணிக, தொழில்நிலையங்கள் வெளியிடும் பங்கு கடன்பத்திரங்கள் போன்றவைகளும் பங்குமாற்றுப்பிணையங்களாகும். முதலாவதாக, பங்குமாற்றுப்பிணையங்கள் புலனாகும் சொத்துக்களாகும். நெருக்கடி ஏற்பட்ட நேரத்தில் விற்றுக் கடனை அடைக்கக்கூடிய ஒரு சொத்து என்ற முறையில் உத்தரவாதத்தைவிடச் சிறந்த ஒரு பிணையாக இது திகழ்கிறது.

இரண்டாவதாக, நல்ல பிணையங்களுக்கு எப்போதும் சந்தை உண்டு. எளிதாக இவற்றை விற்றுவிடலாம். மூன்றாவதாக முதல்தர பிணையங்களின் விலையில் ஏற்றத் தாழ்வு அதிகம் காணப்படுவதில்லை. நான்காவதாக, கடன்கோருபவர் அந்தப் பிணையத்தின் உரிமையாளரா என்பதை எளிதில் கண்டுபிடித்துவிடலாம்; பிணையத்தை வெளியிட்ட நிறுமத்திடம் விசாரித்தால் உண்மை புலனாகும். ஐந்தாவதாக, பிணையங்களின் மதிப்பை அன்றாட பங்குச் சந்தை விலைகோரல் பட்டியல்வழி அறிந்து கொள்ளலாம். ஆறாவதாக, பிணையங்களை மாற்றிக்கொடுப்பதும் எளிதே. மாற்று முறைத்தன்மையுள்ள பிணையங்களைச் சேர்ப்பிப்பதன்வழி அல்லது மேலெழுதிச் சேர்ப்பிப்பதன்வழி பிறருக்கு உரிமைமாற்றம் செய்து தரலாம். ஏழாவதாக, பிணையங்களைக் கடன் அடைபட்டவுடன் மீட்பதற்குச் செலவு ஏதும் அதிகம் செய்ய வேண்டுவதில்லை; தொல்லையான சட்டச் சடங்குகளும் கிடையாது. எட்டாவதாக வங்கியர் தமக்கு ஏதும் அவசியமேற்பட்டால் பிற வங்கியரிடம் பிணையங்களை அடகு வைத்துப் பணம்பெறலாம். கடைசியாக, பிணையங்கள்மீது கிடைக்கும் வட்டி இலாபஈவு முதலானவை கடனளவைக் குறைக்கப் பயன்படுகின்றன.

குறைபாடுகள்

பங்குமாற்றுப் பிணையங்கள் பலவகைகளில் நல்லதொரு ஈடாக அமைந்தாலும் அவற்றிற் சில குறைபாடுகளுமுள்ளன. முதலாவ

தாகப் பங்குச் சான்று பொய்யாவணம்புனையப்பட்டதாக (forged) இருக்கலாம். மோசடிசெய்யும் பேர்வழிகள் பங்குச் சீட்டைப் பொய்யாவணம்புனைந்து (forge) அதைப் பிணையாகத் தந்து கடன் பெற முயல்வதுண்டு. இதனல் பிணையம்பெறுவது பயனற்றதாகப் போகலாம். இரண்டாவதாக, நிருமத்தின் செயல்முறை விதிகளின்படி பங்குகளின் மீது அழைப்புப்பணம் அல்லது வேறு தொகை பங்குதாரர் செலுத்தவேண்டியிருக்கும் போது அவர் அங்ஙனம் செலுத்தும்வரை நிறுமம், பங்குகள் மீது பற்றுரிமை செலுத்தும் உரிமை பெற்றிருக்கக்கூடும். தனக்குள்ள உரிமை பற்றி வங்கியர் நிறுமத்திற்கு அறிவிக்கத் தவறினல் பங்குகளைப் பிணையமாகப் பெற்றிருப்பது வங்கியருக்கு ஏதும் பயன்தராமல் போகக்கூடும். மூன்றாவதாக, பிணையாகத் தரப்பட்ட பங்குகள் மீது பகுதிப்பணம் மட்டுமே செலுத்தப்பட்டிருந்தால், அப்பங்குகள் மீதான அழைக்கப்படாத் தொகை (uncalled capital)யை வங்கியர் செலுத்தவேண்டிய கட்டாயம் ஏற்படலாம். பங்குகள் வங்கியர் பெயரில் உரிமைமாற்றம் செய்யப்பட்டிருந்தால் இந்த நிலைமை ஏற்படும். அழைக்கப்படாத் தொகையைக் கட்டும்படி கோரிய சில நாட்களுக்குள் பணம் செலுத்தாவிட்டால் பங்கு ஒறுப்பிழைப்பு (forfeiture) செய்யப்படலாம். அந்நிலையில் பிணையாகக் கிடைத்தப் பங்குக்கு மதிப்பு ஏதும் இல்லாமற் போகலாம். நான்காவதாகப் பங்குகள் வங்கியர் பெயருக்கு மாற்றபடவேண்டி மாற்றுப்பத்திரத்தின்மீது இடப்பட்ட கையொப்பம் பொய்யாக அமைந்தால், கம்பெனிக்கு அதனலேற்படும் நட்டத்தை மாற்றிப் பெறுவோர் என்ற முறையில் வங்கியர் ஏற்கவேண்டும். இம்மாதிரியான நிலைவராமலிருக்க வங்கியர் மாற்றுப்பத்திரத்தைத் தம் முன்னர் வாடிக்கையர் கையொப்பமிடவேண்டுமென்று வற்புறுத்துவார். ஐந்தாவதாக, சில பங்குகளின் விலை பெருமளவு ஏற்றத்தாழ்வுகளுக்கு ஆளாகலாம். விலைச் சரிவினல் வங்கியருக்கு நட்டமேற்படலாம். இதைத் தவிர்க்க வங்கியர், கடன்பெற்ற வாடிக்கையர் செய்துகொண்ட ஒப்பந்தப்படி இடைவெளி (margin) வைத்துள்ளாரா என்று நோக்கி, இடைவெளி பங்குவிலைச் சரிவினல் குறையும்பொழுது மேலும் சொத்துக்களைப் பிணையாகத் தரும்படி அல்லது கடன் தொகையினைக் குறைத்துக் கொள்ளும்படி வேண்டுவர். கடைசியாக, பிணையங்கள் ஆவணமாற்றத் தன்மையற்றனவாக இருந்தால் மாற்றித்தருபவர் தமக்குள்ள உரிமையைவிடச் சிறந்த உரிமையை மாற்றிப்பெறுபவருக்குத்தர முடியாது.

வங்கியர் மேற்கொள்ளும் எச்சரிக்கை

பங்குமாற்றுப் பிணையங்கள்மீது கடன் கொடுக்குமுன் வங்கியர் பல எச்சரிக்கைகளை மேற்கொள்ளுவார். பிணையங்கள் பங்கு

களாகவோ அல்லது கடன்பத்திரங்களாகவோ இருக்கலாம். சிறப்பீட்டுப் பிணையங்களாக அல்லது முதல்தரமான கம்பெனி களின் பிணையங்களாக இருக்கலாம். நல்ல நிருவாகம், திறமை, ஆதாயந்தருவகையில் செயலுறுதல் போன்ற பண்புகளுடைய நிருமங்களின் பிணையங்களையே ஈடாக வங்கியர் ஏற்க வேண்டும். பிணையங்கள் விலை, பங்குச் சந்தையில் கோரப்படுவதாக இருக்க வேண்டும்; அவற்றை எளிதாக விற்கும் வசதியிருக்க வேண்டும். ஆவணமாற்றம் (Negotiable) செய்யக்கூடிய பிணையங்களைமாற்றித் தருவது எளிது. கொணர்பவர் பிணையத்தைச் சேர்ப்பித்த மாத் திரத்திலே உரிமைமாற்றம் ஏற்படும். உத்தரவுப் பிணையத்தை மேலெழுதிச் சேர்ப்பித்தவுடன் உரிமைமாற்றம் ஏற்படும். நல்லெண்ணத்துடன், மறுபயன் கருதி, வங்கியர் பிணையங்களைப் பெற்றால் அவர் அப்பிணையங்கள் மீது முழு உரிமை பெறுகிறார். ஆவணமாற்றுத் தன்மை சட்டப்படியோ அல்லது வணிக வழக்குப் படியோ அல்லது முரண்தடைக் கோட்பாட்டின் படியோ அமைய லாம். சட்டப்படி மாற்றுச் சீட்டு, காசோலை, கடனுறுதிச் சீட்டு முதலியன ஆவணமாற்றுத் தன்மை கொண்டன. வணிக வழக்குப் படிக் கொணர்பவர் (Bearer) பத்திரங்கள், கொணர்பவர் பங்குச் சீட்டு (Scrip), கொணர்பவர் பங்கு அல்லது பங்குத் தொகுப்பு உரிமைச் சீட்டு (warrant), கொணர்பவர் கடன்பத்திரங்கள் ஆகியவை ஆவணமாற்றுத் தன்மைபொருந்தியனவாகக் கருதப்படு கின்றன.

ஆவணமாற்றுத் தன்மையுடைய பிணையங்கள்மீது கடன்தரு முன், அவை வாடிக்கையருக்குச் சொந்தமானவையா என்று கவனிக்க வேண்டும். பிணையங்களைத் தம் பெயருக்கு வங்கியர் மாற்றிப்பெற வேண்டும். மேலெழுத்து சரியாக அமைந்துள்ளதா என்றும் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். ஆவணமாற்றத் தன்மையற்ற பிணையங்கள் பெயர்ப்பதிவுத் தொகுதிப்பங்கு (Inscribed Stock) அல்லது பதிவுசெய்யப்பட்ட பங்காக இருக்கலாம். வங்கியர் தமது பெயரை உரிமையாளர் என்று பதிவுசெய்து கொண்டால்தான் இவ்வகைப் பிணையங்கள் மீது உரிமையேதும் செலுத்தலாம். எனவே பிணையங்களின் தன்மையறிந்து வங்கியர் செயல்பட வேண்டும்.

வங்கியர் பெயருக்குப் பிணையங்களை மாற்றிக் கொடுக்காமல், அவரிடம் கடன்பெறும் பொருட்டு அப்பிணையங்கள் ஈடாகக் கொடுக்கப்படுகின்றன என்ற உடன்பாட்டின்பேரில் வாடிக்கையர் கடன் பெறலாம். இந்நிலையில் வங்கியர் பெறும் உரிமைமூலம் (Title) தகைமைமுறை உரிமை மூலம் (Equitable Title) எனப்படும்.

வங்கியர் தகைமைமுறை உரிமைமூலம் பெறும் வகையில் பிணைகளைப் பெற்றுக்கொண்டு கடனளிக்கலாம். இதிலுள்ள குறைபாடு முன்னரே தகைமைமுறை உரிமைமூலம் எவரும் பெற்றிருந்தாலும் அல்லது பின்னர் சட்டமுறை உரிமைமூலம் (legal title) எவரும் பெற்றாலும் வங்கியரது உரிமைமூலம் செல்லாமற்போகும். தகைமை முறை, சட்டமுறை ஆகிய இரண்டினிடையே சட்ட முறையே சிறந்து நிற்கும்; தகைமை முறை பலவாக இருப்பின் காலவரிசைப்படி அவை உரிமை பெறும்.

வங்கியரின் தகைமை முறை உரிமைமூலம் (Bankers Equitable Title)

பிணையங்கள் மீது வங்கியர் தகைமை முறை உரிமை மூலம் கீழ்க்கண்ட முறைகளில் பெறலாம்:

(i) பிணைகள் வங்கியரிடம் அடைவு (deposit) செய்யப் படலாம்;

(ii) பத்திரம் ஒன்றெழுதி அத்துடன் பிணைகளை வங்கியரிடம் அடைவு செய்யலாம்;

(iii) பத்திரத்துடன் பிணைகளை அடைவு செய்து மாற்று ஆவணங்களில் வெற்றுக் கையொப்பமிட்டுத் தரலாம்;

(iv) கடனைக் குறித்தவாறு திருப்பிச் செலுத்தாவிடில் பிணைகளை விற்கும் அதிகாரம் வங்கியருக்கு அளிக்கும் வகையில் பகர அதிகாரப் பத்திரம் (Powe1 of Attorney) எழுதி அத்துடன் பிணைகளை வங்கியரிடம் அடைவு செய்யலாம்.

பிணையங்களை வங்கியரிடம் அடைவு செய்யும் முறை மிக எளிதாக இருந்தாலும், வங்கியர் இதற்கு ஒப்புவதில்லை. கடன் பெறும் பொருட்டு அடைவு செய்யப்பட்டது, இவ்வளவு இடைவெளி வைத்திருத்தல் வேண்டும், இன்ன வட்டி தரவேண்டும் என்பது போன்ற செய்திகளுக்கு எழுத்தில் வேறு ஆதாரம் இல்லாத இவ்வகைத் தகைமைமுறை உரிமை மூலம் வங்கியருக்கு நன்மை பயக்காமற் போகலாம்.

பத்திரத்துடன் கூடிய பிணைகள் அடைவு (Deposit of securitie with a Memorandum)வங்கியர் ஏற்றுக்கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. கடன் கோருபவர் நாணயமானவராக இருந்து, கடனும் தற்காலிகத் தேவைகட்கு மட்டுமாக இருப்பின் வங்கியர்

தகைமைமுறை அடைமானத்தை ஏற்றுக் கொண்டு கடன் வழங்குவார். பத்திரத்தில் வங்கியருக்குச் சாதகமான செய்திகளும், கடன் விதிகளும் அச்சிடப்பட்டிருக்கும். ஆகவே எந்தச் சூழ்நிலையிலும் வங்கியர் நலன் பாதுகாக்கப்படும் முறையில் இந்த வகைக் கடன் அமைகிறது.

உரிமைமாற்றுப் பத்திரத்தில் வெற்றுக் கையொப்பமிட்டுப் பங்குகளை வங்கியரிடம் அடைவு செய்வதும் வங்கியருக்குத் தகைமைமுறை உரிமை மூலம் தருவதாக அமைகிறது. கடனாளி உரியகாலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்தாவிட்டால், வங்கியர் உரிமை மாற்றப்பத்திரத்தை உரியமுறையில் நிரப்பித் தேதியிட்டு, முத்திரை வரி செலுத்தி, தேதியிட்ட ஆறு திங்களுக்குள் தம் பெயரில் பங்குகளைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். அப்பொழுது சட்டமுறையாக அப்பங்குகளின் உரிமையராக வங்கியராவார். முத்திரை வரிச் செலவை மிச்சப்படுத்தவும், எளிதாக மாற்றம் செய்யும் வசதி தொடர்ந்து இருக்கவும் வங்கியர் வெற்று மாற்றப்பத்திரங்களில் வாடிக்கையர் கையொப்பம் பெற்று அவற்றின் மீது கடன் தருகின்றனர்.

கடனாளியிடம் பிணையங்களை விற்கும் பகர அதிகாரப் பத்திரம் பெற்றுக் கொண்டு கடனளிக்கும் வங்கியர், வாடிக்கையரின் முகவர் என்ற நிலையில் செயலாற்றுகின்றார். இந்த முறையில் கடனளிப்பது வங்கியரைப் பெரிதும் பாதுகாக்கிறது.

பொதுவாகக் கூறினல், வங்கியர் பங்கு மாற்றுப் பிணையங்கள் மீது கடன் கொடுக்கும் போது பிணையங்கள் வாடிக்கையாளருடையனவா என்று நோக்க வேண்டும். பிறர் பெயரிலுள்ள பிணையங்கள்மீது வாடிக்கையாளருக்குக் கடனளிப்பதில் வங்கியர் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தமக்குக் குறிப்பிட்ட பிணையங்கள்மீது பற்றுப்பொறுப்பு (Charge) இருக்கிறதென்று அப்பிணையங்களை வெளியிட்ட கம்பெனிகளுக்கு வங்கியர் அறிவிக்க வேண்டும். இந்த அறிவிப்பு பல வகையில் நன்மை தருவதாயுள்ளது. முன்னரே அப்பிணையங்கள்மீது பற்றுப்பொறுப்பு ஏதுமிருப்பின் அது தெரியவரும். மற்றும் பங்குதாரருக்குக் கம்பெனி ஏதும் கடனளிக்க விருப்பின் வங்கியர் கடனளித்திருப்பது பற்றிக் கம்பெனிக்குத் தெரிந்துவிடும். மேலும், பங்குச் சான்று காணுமற் போய்விட்டதாகக் கூறி மாற்றுப்படி (Duplicate) கோரி பிறருக்குச் சட்டமுறை உரிமைமூலம் வழங்குவதும் தவிர்க்கப்படுகிறது. எக்காரணங் கொண்டும் வங்கியர் பங்குச் சான்றைத் தம்கையை விட்டுப் போய்விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். வங்கியர்

நல்லெண்ணத்துடனும் கவனமாகவும் நடந்து கொள்ளவேண்டும். பிணையத்துடன் தரப்படும் பத்திரத்தில், தமக்கு விற்கும் உரிமை அளிக்கும் வகையில் சரத்துக்களைச் சேர்த்திருக்க வேண்டும்.

தனிக்கம்பெனி பங்குகள் நல்ல பிணைகளா?

சில நேரங்களில் வங்கியரிடம் தனிக்கம்பெனி (Private Company) யின் பங்குகள் கடனுக்குப் பிணையாக அளிக்கப்படலாம். முடிந்தவரை இந்த வகைப்பிணையை வங்கியர் தவிர்க்க வேண்டும். தனிக்கம்பெனிகளின் பங்குகளை மாற்றித்தருவது, விற்பது, மதிப்பிடுவது முதலிய காரியங்கள் மிகச்சிக்கலானவையாகும். இந்த பிணையை ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பெருமளவு இடைவெளி கோருதல் நல்லது. அக்கம்பெனிச் செயலரையணுகி பங்கின் மதிப்பைக் கண்டுபிடிக்க வேண்டும். வங்கியருக்குப் பங்குகள் மீதுள்ள உரிமை ஒப்பபடை வேண்டும்.

கருவூலச் சேமிப்பு வைப்புச்சான்று (Treasury Savings Deposit Certificate), அஞ்சலகச் சேமிப்புச்சான்று (Post Office Savings Certificate) முதலானவைமீது கடன் தருமாறு வாடிக்கையர் வங்கியரைக் கோரலாம். இந்தச்சான்று ஆவணங்களின் பின்புறம் மாற்றம் செய்யும் படிவம் காணப்படும். கடனளிக்கும் வங்கியருக்கு இச்சான்றுவணத்தைக் கடனுக்குப் பிணையாக மாற்றித் தரலாம். கடனை அடைத்தபின் வங்கியர் சான்றுவணத்தை மறுமுறை மாற்றம் செய்து உரியவருக்குக் கொடுத்து விடுவார். கடன் அடைபட்டு சான்றுவணம் வாடிக்கையர் பெயருக்கு மறுமுறை மாற்றம் செய்யப்படும்வரை வங்கியர் அதன் உடையவராகக் கருதப்படுவார். இது போன்ற பிணைகள்மீது கடன் கொடுப்பதில் வங்கியருக்குத் தயக்கம் ஏதும் இருப்பதில்லை. காரணம், இவை அரசினரால் வெளியிடப்படுவனவாகும். அண்மையில் ஏற்படுத்தப்பட்ட யூனிட் டிரஸ்டு (Unit Trust) வெளியிடும் யூனிட் சான்றுகள் பேரிலும் வங்கியர் கடன் கொடுக்கின்றனர்.

14. சரக்குமீதான கடன்

(Advances against goods)

வணிகர் கடன்பெற வேண்டி அளிக்கும் பிணைகளில் சரக்கு மிகமுக்கியமானதாகும். இந்தியாவிலுள்ள வங்கிகள் வழங்கும் பிணைக்கடன்களில் சற்றேறப்ப மூன்றில் இரண்டு பங்கு அளவுக்கு பிணைகளாக அளிக்கப்படுவது சரக்கு என்பது குறிப்பிடத்தக்கது. சரக்கு என்னும் சொல் விளைபொருள், கச்சாப்பொருள் (Raw material) தோட்டக்கால் விளைபொருள் (Plantation products). பண்டங்கள், பலசரக்குப் பொருள் (general merchandise) முதலியவற்றைக் குறிக்கும்.

கருத்தில் கொள்ளுதற்கான செய்திகள்

சரக்குகளின்மீது கடன் கொடுப்பது வங்கியருக்குப் பாதுகாப்பளிப்பதாக இருப்பினும் அவர் சரக்குகளைப் பிணையாக ஏற்குமுன் பற்பல செய்திகளைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

(i) முதலாவதாகக் கடன்வேண்டும் வாடிக்கையர் மிகவும் நாணயமான, திறமைமிக்க, அனுபவம் நிறைந்த பேர்வழியா என்று கவனிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக ஆயிரக்கணக்கான மூட்டைச் சரக்குகளைப் பிணையாக அளிக்கும் போது வங்கியர் ஒவ்வொரு மூட்டையையும் பிரித்து அதில் குறிப்பிட்ட சரக்கு உள்ளதா என்று சரிபார்க்க முடியாது. தமது சரக்கைக் காலமறிந்து, தமக்கு நல்லவிலை கிடைக்கக்கூடிய நேரத்தில் விற்று நன்மையடையக்கூடிய திறமையிருக்க வேண்டும். எந்தவகைச் சரக்கு வியாபாரம் செய்கிறாரோ அதைக் கெடாமல் பாதுகாக்கும் முறை, எளிதாக விற்கக்கூடிய இடம் முதலியன குறித்து அனுபவம் அவசியம் இருப்பது நல்லது.

(ii) எந்தச்சரக்கைப் பிணையாக ஏற்றுக் கொள்ளுகிருரோ அதைப்பற்றி வங்கியருக்கு நிறைய்த் தெரிந்திருக்க வேண்டும். சரக்கு வாழ்க்கைக்கு அவசியமான பொருளா அல்லது ஆடம்பரப் பொருளா; தேவைநிலை நெகிழ்ச்சியுள்ளதா அல்லது மாருத்தன்மையுடையதா அல்லது பருவநிலையைப் பற்றியதா என்றெல்லாம் கவனிக்க வேண்டும்.

வாழ்க்கைக்கு அவசியமான அரிசி, கோதுமை, சர்க்கரை போன்ற பொருள்கள்மீது கடன் கொடுத்தால், கடனை அடைக்க வேண்டியபோது எளிதாக இவ்வகைச் சரக்குகளை விற்று விடலாம். இவற்றின் தேவைநிலையும் பெரும்பாலும் மாருத்தன்மை பெற்றது.

(iii) சரக்கின் தன்மை என்ன? நீண்ட நாட்கள் வைத்திருந்தால் கெட்டுப் போகுமா? அரிசி போன்ற விளை பொருள்கள் நீண்டநாள் வைத்திருந்தால் அதன் விலை மதிப்பு உயரும். மற்றப் பொருள்களை நீண்டநாள் வைத்திருந்தால் அவை சேதமடையக்கூடும். வங்கியர் இச்செய்தியைக் கருத்திலிருத்தல் வேண்டும்.

(iv) சரக்குக்கு உள்ள சந்தை எப்படி என்று வங்கியர் கவனிக்க வேண்டும். உதாரணமாக பருத்திமீது கடனளித்தால், பருத்திச் சந்தையில் நிலவரம் எப்படியிருக்கிறது; விலைவாசி என்ன முகமாயிருக்கிறது என்று அறிந்து கொண்டு அதன்படி தக்க இடைவெளி வைத்திருக்குமாறு வாடிக்கையரைக் கோரவேண்டும்.

(v) கடன் அளிக்குமுன் வங்கியர் சரக்கைத் தம்மிடம் சேர்ப்பிக்கும்படி ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். அதாவது சரக்கின் உடைமை வங்கியரிடம் ஒப்படைக்கப்படவேண்டும். ஒப்படைப்பு உண்மையாகவே செய்யப்படலாம் அல்லது அடையாள ஒப்படைப்பு (constructive delivery) என்றும் அமையலாம். சரக்கு வைக்கப்பட்டிருக்கும் கிடங்கின் சாவியை வங்கியரிடம் ஒப்படைப்பது அல்லது கிடங்குக்காவல்காரர் வங்கியரின் பணியாளராகச்செயல்படுவது போன்ற முறைகளில் உடைமை ஒப்படைப்பது அடையாள ஒப்படைப்பாகும். அடையாள ஒப்படைப்பு கூட செய்ய இயலாநிலையில் வாடிக்கையர் தமது சரக்கினை அடகுவைக்க உறுதியளித்து, ஒப்பந்தம் செய்து கொடுத்துக் கடன் பெறுவதுமுண்டு. இவ்வொப்

பந்தப்படி, அச்சரக்குகளின்மீது வங்கியருக்குத் தகைமை உரிமை மூலம் (equitable title) மட்டுமே கிடைக்கும். இவ்வொப்பந்தம் செய்து தந்தபின், வாடிக்கையர் வேறொருவருக்குச் சட்டமுறையாகச் சரக்கை உரிமை மாற்றம் செய்தால் வங்கியருடைய பிணை பயனற்றதாகி விடும். Cooperative Bank Ltd V. Surendranath De என்ற வழக்கில், சரக்கு அடகுவைக்க ஒப்பந்தம் எழுதி யளித்தபின், மற்றொரு பேர்வழியிடம் அதே சரக்கை அடகு வைத்துவிட்டால், இரண்டாவதாக அடகுபெற்ற வருக்கே சரக்கின்மீது முதலுரிமை உண்டு என்று தீர்ப் பளிக்கப்பட்டது. வங்கியரிடம் அடகு வைக்கப்பட்டச் சரக்கைப் பயன்படுத்தும் வகையிலும் கடனுளிக்கு வசதி யளிப்பதுண்டு. சரக்கின்மீது வங்கியரது பற்றுப் பொறுப்பை அறிவிக்கும் வகையில், கடனுளியின் சரக்கு கள் வைத்திருக்கப்பட்டிருக்கும் எல்லா இடங்களிலும் பார்வையான இடங்களில் சரக்கு வங்கியரிடம் அடகு வைக்கப்பட்டுள்ளது என்று வங்கியரது பெயர்ப்பலகை யில் எழுதி வைக்கவேண்டும்.

(vi) சரக்குகளை மதிப்பிடுவதில் வங்கியர் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். சரக்கின் அளவு, தரம், சந்தைவிலை முதலிய விவரங்களை நோக்க வேண்டும். குறிப்பிட்டச் சரக்குக்குச் சந்தையில் என்ன விலை நிலவுகிறது என்பதை யறிய வங்கியர் தரகர்களை அணுகித் தெரிந்து கொள்ள வேண்டும். அனுப்பிய சரக்கு பட்டியலிலுள்ள விலை (In voice price) யை மட்டும் ஆதாரமாகக் கருதக்கூடாது அவ்விலைக்கும், விற்பனை விலைக்கும் வேறுபாடுகள் நிறைய இருக்கலாம். பட்டியல் விலையை அதிகக்கடன் பெறும் நோக்கத்துடன் உயர்த்தி எழுதியிருக்கலாம். எல்லாச் செய்திகளையும் கருத்திலிருத்தியே சரக்கு மதிப்பீடு செய் தல் நல்லது.

(vii) கடனுக்குப் பிணையாகச் சரக்குகள் தரப்பட்டால், அவற் றைத் தக்கமுறையில் பாதுகாத்து வைக்க வேண்டுவது மிக அவசியம். கிடங்கு சரியான இடத்தில் அமைந் திருக்க வேண்டும். வெள்ளம், ஓதம், தீ முதலிய கேடுகளி லுல் பாதிக்கப்படாத வகையில் ஏற்பாடுகளிருப்பது நல் லது. கிடங்குகளில் கொள்ளளவு, வரிசை எண் முதலிய விவரங்களை வங்கியர் கவனிக்க வேண்டும்.

(viii) கிடங்குகளில் பிணையாக அமைந்துள்ள சரக்குகளை வங்கி யர் காப்பீடு (insure) செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

காப்பீட்டு ஒப்பந்தத்தில் சராசரி சரத்து (Average clause) இருப்பது வழக்கம். காப்பீட்டு ஒப்பந்தம் கிடங்கிலுள்ள மொத்தச் சரக்கின் மதிப்புப்படி அமைய வேண்டும். அப்படியல்லாமல் சரக்கின் மதிப்பில் கடனளவுப் பகுதிக்கு மட்டுமே காப்பீடு செய்து தீவிபத்து ஏதும் நேர்ந்தால், காப்பீடு அளிப்பவர் அளிக்கும் இழப்பீடு மொத்த மதிப்புக்குக் காப்பீடு செய்யப்பட்ட மதிப்பு எவ்விகிதத்தில் அமைந்ததோ அதே விகிதத்துக்கு மட்டுமே கிடைக்கும். காவல்காரனின் ஊதியம், காப்பீடு கட்டணம், கிடங்கு வாடகை முதலான செலவுகள் கடனில் ஒரு பகுதியாகக் கருதப்பட்டு அதன்மீது வட்டியும் வசூலிக்கப்படும்.

(ix) கடனை அடைக்க அடைக்க சரக்கைக் கடனடைபட்ட அளவுக்கு விடுவிக்குமாறு வாடிக்கையர் வங்கியரை வேண்டுவர். வங்கியர் இது குறித்து மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். விடுவிக்கப்படும் சரக்கின் அளவு, திருப்பித்தரப்பட்ட கடனளவுக்கு மேல் போய்விடாமல் கவனித்துக் கொள்வது அவசியம். குறிப்பிட்ட காலத்திற்கொருமுறையும், முன்னறிவிப்பின்றித் திடீரென்றும் கிடங்கிலுள்ள சரக்கின் அளவைச் சரிபார்க்க வேண்டும். சரக்குகளை விடுவிக்க வங்கியர் உடைமை ஒப்படைப்பு உத்தரவு (Delivery Order) எழுதித் தரவேண்டும். அந்த உத்தரவில் விடுவிக்கப் படவேண்டிய சரக்கின் அளவு, எண்ணிக்கை, எடை போன்ற விவரங்கள் குறிக்க வேண்டும். பொறுப்பு வாய்ந்த அலுவலர் இந்தவகைப் பணிக்கு அமர்த்தப்பட வேண்டும். இல்லாவிடில் வாடிக்கையர் வங்கி ஊழியர்களுடன் வஞ்சக்கூட்டு சேர்ந்து கொண்டு அடைக்கப்பட்ட கடன் அளவைவிடப் பன்மடங்கு மதிப்புள்ள சரக்குகளை வெளியில் எடுத்துச் செல்லக் கூடும்.

மேற்கூறிய விவரங்களைக் குறித்து வங்கியர் வேண்டிய எச்சரிக்கை மேற்கொண்டால் சரக்கைப் பிணையாக ஏற்பதில் தொல்லை அல்லது நட்டம் ஏற்படாது.

இப்பிணையின் நன்மை குறைபாடுகள்

சரக்குகளைப் பிணையாக ஏற்பதில் உள்ள நன்மை, குறைபாடுகளையும் சுருக்கமாகக் காண்போம்.

சரக்குகள் பேரில் கொடுக்கும் கடன் பிணையிலாக் கடனைவிடப் பலவகைகளில் மேலானது. கடன் திரும்பச் செலுத்தப்படாவிட்

டால் சரக்கை விற்றுத் தமக்குச் சேரவேண்டிய தொகையை வங்கியர் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இங்குண்டு.

பொதுவாக நோக்குமிடத்து, சந்தையில் சரக்குகளின் விலையில் பெருமளவு ஏற்றத் தாழ்வு ஏற்படுவதில்லை. குறிப்பாக வாழ்க்கைக்கு இன்றியமையாப் பொருள்கள் விலை ஓரளவுக்கு நிலையாக இருக்கும்.

அவசியமேற்படும் போது பிணைகளை விற்பது எளிதாக இருக்க வேண்டும். எளிதாக விற்பனை செய்யக் கூடிய சரக்குகளை வங்கியர் பிணையாகப் பெற்றால் காலதாமதமின்றி, நட்டமின்றி, செலவும் அதிகமின்றி அவற்றை விற்றுவிடலாம்.

வங்கியர் கொடுக்கும் கடன் குறுகிய காலத்திற்கு மட்டுமே இருப்பதால், தமது பணத்தை நீண்ட நாட்களுக்கு ஒரே நபரிடம் முடக்கிப் போட்டிருக்க வேண்டுவதில்லை. தாவர சொத்துக்களின் மீது கடனளித்தால் கடன் காலம் நீட்டித்துப் போகக் கூடும்.

கடன் தொகையை நிருணயிக்க வங்கியர் சரக்கினை மதிப்பிட வேண்டியிருக்கிறது. சரக்குகளுக்கு சந்தையில் எப்பொழுதும் விலை நிலவரம் தெரிந்து கொள்ளுவது எளிது. நிலையியல் சொத்துக்களின் விலையை நிருணயிப்பது அவ்வளவு எளிதல்ல.

வங்கியர் சரக்குகளைப் பிணையாக ஏற்றுக்கொண்டு வாடிக்கையருக்குக் கடனளிப்பது சமுதாயத்திற்கும் நன்மைபயக்கிறது. பணவசதி அதிகம் பெற்றால் வணிகர் பெருக்கமாக தொழில்செய்ய முடிகிறது. பலவகைச் சரக்குகளை நுகர்வோர் விருப்புகளுக்கேற்ப வாங்கிக் கையிருப்பில் வைத்து வேண்டும் பொழுது விற்க முடிகிறது. வியாபாரச் சக்கரங்கள் ஓயாமல் சுழன்று கொண்டிருக்கப் பணம் தேவைப்படுகிறது. எவ்வளவு பெரிய தொழிலிலும் தேவைப்பட்ட பணமத்தனையையும், தொழில் நடத்துபவர்களே முதலீடு செய்வது என்பது இயலாத காரியம். முக்கியமாக, நடைமுறை முதலுக்கு அவ்வப்போது வங்கியரிடம் குறுகிய காலக்கடன் பெறுவது எல்லாத் தொழில்களிலும் காணக்கூடும் நிகழ்ச்சியாகும்.

சரக்குகளின்மீது கடனளிப்பதில் சில தீமைகளும் உண்டு. தக்கமுறையில் பாதுகாப்பாக வைத்திருக்காவிடில் சரக்குக் கெட்டுவிடக்கூடும். பழம், காய்கறி முதலிய பொருள்கள் விரைவில் அழுகிவிடுந் தன்மையன. ரப்பர் போன்ற சில பொருட்களை அதிக நாட்களுக்கு வைத்திருந்தால் எடை குறைந்து சுருங்கிப் போகும்.

சோளம் மற்ற விளைபொருள்களைவிட வியர்க்கும் தன்மைவாய்ந் தது. வெல்லம் மழைகாலத்தில் உருகிப்போகும். பஞ்சு நாட் பட்டால் வண்ணம் மாறும். சில வகைச் சரக்குகளைக் கறையான் அரித்துவிடும்.

சரக்கின் விலையும் சீராக இருப்பது சரக்கின் தன்மையைப் பொறுத்தது. நாகரிகபாணி மாறினாலும், மாற்றுப் பொருள் களின் விலைநிலையினாலும் சில சரக்குகளுக்குள்ள தேவைநிலை திடு மென மாறலாம். இதனால் அச்சரக்கைப் பிணையாக ஏற்றுள்ள வங்கியர் பாதிக்கப்படலாம்.

மோசடி செய்யும் வாய்ப்பு இவ்வகைப் பிணையில் நிறைய உண்டு. தரக்குறைவான சரக்குகளைப் பிணை வைப்பது, நல்ல சரக்குகளுடன் பயனற்ற சரக்குகளைக் கலந்து வைப்பது, எடையில் மோசடி செய்வது போன்றபல நிகழ்ச்சிகளை வங்கியர் அனுபவிப்ப துண்டு. கட்டுதல் (packing) செய்யப்பட்ட சரக்காக இருப்பின் நற்பெயர் பெற்ற கட்டுனர் (packer) எவரும் அளித்த சான்றுறுதி யைக் கடன் கோருபவர் கட்டாயம் பெறவேண்டுமென வங்கியர் வற்புறுத்த வேண்டும்.

நம் நாட்டிலுள்ள கிடங்கு வசதிகள் இன்னும் பன்மடங்கு பெருக வேண்டும். தக்க கிடங்கு வசதிகள் இருக்கும் இடங்களில் மட்டுமே வங்கியர் சரக்குகளின்மீது கடனளிக்க முடியும். மேலும் பொதுப்பண்டகங்களும் (Public warehouses) நம் நாட்டில் மிகக் குறைவாகவே இருக்கின்றன. இந்த குறையைப் போக்க மத்தியப் பண்டகக் கூட்டுரு (Central Warehousing Corporation) ஏற்படுத் தப்பட்டுள்ளது. இக் கூட்டுரு நாடெங்கிலும் பண்டகங்கள் கட்டி வருகின்றன. பண்டகங்கள் தம்மிடம் வைக்கப்பட்ட சரக்குகளுக் குச் சான்றாக பண்டகர் சான்றுறுதி (Warehouse Keeper's Certificate) வழங்கும். இவற்றின்மீது கடன் வழங்குவதற்கு வங்கி யர் தயங்க வேண்டுவதில்லை. உரிமம் பெற்ற பண்டகங்கள் (Licensed Warehouses) இன்றும் இத்தகைய ஆவணத்தை வழங்கு கின்றன. ரிசர்வு வங்கியும் பண்டக இரசீதின் பிணையின் பேரில் கடன் வழங்குவதை ஊக்குவிக்கிறது.

சரக்குரிமை ஆவணங்கள்
(Documents of Title to Goods)

சரக்குகளை வாங்கிய வணிகர் அது தம் கைவசம் வந்து சேரு முன் பற்பல இனங்களுக்குச் செலவுசெய்ய வேண்டியிருக்கிறது.

இதற்குப் பணம் தேவைப்படும்போது வங்கியரிடம் கடன் கோருகிறார். கடனுக்குப் பிணையாகச் சரக்குரிமை ஆவணங்களை அளிக்கிறார். சரக்குரிமை ஆவணம் என்று எவ்வகை ஆவணங்களைக் கூறலாம்? இரண்டு முக்கிய தன்மைகளைக் கொண்ட ஆவணமே சரக்குரிமை ஆவணமாகும். அவையாவன : சட்டப்படியாகவோ அல்லது வணிக வழக்குப்படியாகவோ அந்த ஆவணம் எவருடைய உடைமையில் உள்ளதோ அவர் தான் அதிற் குறிப்பிடப்பட்டுள்ள சரக்குக்கும் உரிமையாளர் என்று அமைய வேண்டும். இரண்டாவதாக அந்த ஆவணத்தை வேறெவரிடமும் சேர்ப்பித்தால் அல்லது மேலெழுதி (endorse) சேர்ப்பித்தால் அவர் தமக்கேயுள்ள உரிமை வழி அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட சரக்கினைப் பெற்றுக் கொள்ளும் வகையிருக்க வேண்டும்.

கப்பல் ரசீது (Bill of Lading), துறைமுகச் சீட்டு (Dock warrant), பண்டசர் சான்றுறுதி (Warehouse-keeper's certi ficate) உடைமைஒப்படைப்பு உத்தரவு (Delivery order), ரயில்வே ரசீது (Rsilway Receipt)ஆகியவை முக்கியச்சரக்குரிமை ஆவணங்களாகும். இவற்றைப்பற்றிய சிறு விளக்கம் காண்போம்.

கப்பல் ரசிது

கப்பல் ரசீது என்பது கப்பல் தலைவன் அளிக்கும் ஓர் ஆவணமாகும். குறிப்பிட்ட சரக்கு இன்னாரால், இன்னாருக்கு, இன்ன சத்தத்திற்கு, இன்னதுறைமுகத்திலிருந்து இன்னதுறைமுகத்திற்கு எடுத்துச் செல்லப்படும் பொருட்டு கப்பலில் ஏற்றப்பட்டது என்று விவரிக்கப்பட்டிருக்கும். எந்த நிபந்தனைகளின்பேரில் சரக்கேற்றிச் செல்லப்படுகிறது என்பதும் அதிற் காணப்படும். சரக்கு கட்டப்பட்டு அல்லது பெட்டிகளில் அடைக்கப்பட்டிருப்பதால் கப்பல் தலைவர் தாம் என்னவகைச் சரக்கை ஏற்றிச் செல்லுகிறோம் என்று உறுதிகூற இயலாது. சரக்கு அனுப்புபவர் கூற்றை நம்பியே சரக்கு ஏற்றிக்கொள்ளப்படுவதால், கப்பல் தலைவன் இதற்கு ஏதும் பொறுப்பு ஏற்றுக் கொள்வதில்லை. ஆகவே நாணயமான வாடிக்கையர் அளிக்கும் கப்பல் ரசீதை மட்டுமே வங்கியர் பிணையாக ஏற்றுக் கொள்ளவேண்டும்.

கப்பல் ரசீது எப்பொழுதும் மூன்று படிவங்களாகத் தயாரிக்கப்படும். ஒன்று முதல் அஞ்சலில் அனுப்பப்படும்; இரண்டாவது மறு அஞ்சலில் அனுப்பப்படும்; மூன்றும் படிவம் சரக்கு அனுப்புபவர் தம்வசம் வைத்திருப்பார். ஒரு படிவம் காணாமற்போனாலும் மற்றதைக் கொண்டு சரக்கைப் பெற்றுக்கொள்ள வகை செய்யவே இந்த ஏற்பாடு கடைப்பிடிக்கப்படுகிறது. எந்தப்படியைக் காட்டி

யும் சரக்கைப் பெற்றுக்கொள்ளும் உரிமை சரக்குப் பெறுபவருக்கு இருப்பதால், வங்கியர் மூன்றுபடிகளையும் தம்மிடம் தருமாறு வாடிக்கையரை வற்புறுத்த வேண்டும்.

கப்பல் ரசிது அதிற் குறிக்கப்பட்ட சரக்குக்கு அடையாளமாக விளங்குகின்றது. மிதந்துகொண்டு அல்லது குறிப்பிட்ட இடத்தில் நிலையாக இருக்கும் பண்டகச்சாலையின் கதவுகளை அச்சரக்குகளின் உண்மையான உரிமையாளர் திறக்கும் திறவுகோலாகக் கப்பல் ரசிது அமைகிறது என்பர். கப்பல் ரசிதை மேலெழுதிச் சேர்ப்பிப்பு தன் மூலம் பிறருக்கு உரிமை மாற்றம் செய்யலாம். ஆனால் கப்பல் ரசிது ஒரு மாற்றுமுறை ஆவணமாகாது (not a negotiable instrument) ஆகவே அதை மாற்றித் தருபவருக்குள்ள உரிமையை விடச் சிறந்த உரிமையை மாற்றிப் பெறுபவர் பெறமுடியாது. தக்க அதிகாரத்துடன், நல்லெண்ணத்துடன் மறுபயன் கருதி மாற்றிப் பெறுபவர் கையில் அது சேர்ந்தால், கொடுபடா விற்பனையாளர் தமது நடுவழி நிறுத்த (Stoppage in transit) உரிமையை இழந்து விடுவார். இந்த ஒருநிலை தவிர, மாற்றிப் பெறுபவர், மாற்றித் தந்தவருக்குள்ள உரிமை மட்டுமே பெறுவார்.

துறைமுகச் சீட்டு (Dock Warrant)

துறை அதிகாரி அல்லது பண்டகர், குறிப்பிடப்பட்டச் சரக்கு பெற்றமைக்குச் சான்றளித்து, அச்சரக்குகளை ஆவணத்தை மேலெழுதிக் கொண்டுவருபவருக்குச் சேர்ப்பிக்க ஒப்பும் ஆவணமே துறைமுகச்சீட்டு எனப்படும். கப்பல் ரசிது போன்றே இதுவும் ஒரு சரக்குரிமை ஆவணமாகும்.

பண்டகர் சான்றுறுதி (Warehouse-keeper's certificate)

சான்றுறுதியில் குறிக்கப்பட்ட சரக்குகளைத் தாம் வைத்திருப்பதாகவும் அதைக் குறித்து உத்தரவுகளுக்குக் காத்திருப்பதாகவும் பண்டகர் ஒருநபருக்கு எழுதும் ஆவணம் பண்டகர் சான்றுறுதி எனப்படும். இது ஒரு அடைவு ரசிது மட்டுமே ஆகும், எனவே இதை மாற்றித் தரமுடியாது. உரிமையாளர் சரக்கைப் பண்டகத்திலிருந்து எடுக்க பண்டகரிடமிருந்து சீட்டு (Warrant) பெற வேண்டும். வங்கியர் தமது நிலையை உறுதிப் படுத்திக்கொள்ளப் பிணையாக அளிக்கப்படும் சரக்கைப் பற்றிய பண்டகர் சான்றுறுதியை அவர் பெயரில் எழுதித் தரும்படி கோரவேண்டும்.

உடைமை ஒப்படைப்பு உத்தரவு (Delivery Order)

சரக்கு உரிமையாளர் பண்டக உரிமையாளருக்கு உடைமை ஒப்படைப்பைப்பற்றிய உத்தரவுகளை எழுதிவிடுக்கும் ஆவணமே

உடைமை ஒப்படைப்பு உத்தரவு எனப்படும். உடைமை ஒப்படைப்பு உத்தரவு மேலெழுத்துச் செய்து சேர்ப்பிப்பதன் வழி பிறருக்குமாற்றித் தரப்படலாம். சரக்குகளைத் தம்பெயருக்கு மாற்றிக் கொள்வது வங்கியருக்கு நல்லது.

ரயில்வே ரசீது

சரக்குகளை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு ஏற்றிச் செல்லும் பொருட்டு சரக்குகளைப் பெற்றுக் கொண்டதற்குச் சான்றாக ரயில்வே துறையினர் எழுதித்தரும் ரசீது ரயில்வே ரசீது எனப்படும். என்ன நிபந்தனைகட்கு உட்பட்டு சரக்கு ஏற்றிச் செல்லப்படுகிறது என்பது ரசீதின் பின்புறம் குறிக்கப்பட்டிருக்கும். இதை மேலெழுத்துச் செய்து சேர்ப்பிப்பதன் வழி பிறருக்கு உரிமைமாற்றம் செய்து கொடுக்கலாம். ரயில்வே ரசீது மாற்றிக் கொடுக்கப்படலாமெனினும் அது ஓர் மாற்றுமுறையாவணமாகாது. ரசீதை ரயில்வே அதிகாரிகளிடம் ஒப்படைத்தால்தான் சரக்கை விடுவிப்பர். எனவே ரயில்வே ரசீதின் பேரில் கோரப்படும் கடன் மிகக்குறுகிய காலத்திற்கு மட்டுமாக இருக்கும். சரக்கு அனுப்புபவர் மாற்றுச்சீட்டு ஒன்று எழுதி அதைத் தள்ளுபடி செய்து கொள்ளுவார். அந்த மாற்றுச்சீட்டுடன் ரயில்வே ரசீதைச் சேர்த்தனுப்புகையில், அம்மாற்றுச்சீட்டு ஆவணஞ் சேர்ந்த மாற்றுச்சீட்டு எனப்பெறும். மாற்றுச்சீட்டை ஏற்றபின் அல்லது மாற்றுச்சீட்டின் மதிப்பளவு பணத்தைச் செலுத்தியபின் வங்கியர் ரயில்வே ரசீதைச் சரக்குப் பெறுபவருக்கு அளிப்பார்.

வங்கியர் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்புவிதிகள்

வாடிக்கையர் நம்பக்கூடிய தன்மையராகவும், நாணயமான வராகவும் அவசியம் இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் அவர் பிணையாகத்தரும் சரக்குரிமை ஆவணம் மெய்யானதாக இருக்கும்.

கட்டுச் சரக்குகளாக இருப்பின், சரக்கைக் கட்டும்போது வங்கியரின் பிரதிநிதி மேற்பார்வை செய்யவேண்டும். அல்லது நற்பெயருள்ள கட்டுனர் சான்றுறுதியைப் பெற்றளிக்குமாறு வங்கியர் வாடிக்கையரைக் கேட்கவேண்டும்.

ஆவணத்தின் எல்லாப்படிகளையும் வங்கியர் கேட்டுப் பெறுவது மிக அவசியம். ஏதாவது ஒருபடியைக்காட்டி சரக்குகளை விடுவித்துக் கொள்ளும் வாய்ப்பு எவருக்கும் இருப்பதால் தமது நிலையைப் பாதுகாத்துக் கொள்ள வங்கியர் கப்பல் இரசீதின் மூன்றுபடிகளையும் கேட்டு வாங்கிக் கொள்ள வேண்டும்.

சரக்குரிமை ஆவணங்களில் கடுமையான நிபந்தனைகள் ஏதும் உள்ளனவா என்று பார்க்க வேண்டும். வங்கியர், கப்பலரசினை பெற்று மேலெழுத்துச் செய்து தம்மிடம் வைத்துக் கொள்ள வேண்டும். இதனால் கப்பற்சத்தம் கட்டும் பொறுப்பு வாடிக்கை யரைச் சாரும். சரக்குரிமை ஆவணம் குறிக்கும் சரக்கு களனைத்தும் முழுமதிப்புக்குக் காப்பீடு செய்யப்பட வேண்டும்.

சரக்கு சரியாகக் கட்டப்படவில்லை, பீப்பாய் ஒழுகுகின்றன என்பது போன்ற குறிப்புகள் சரக்குரிமை ஆவணத்தின்மீது எழுதப்பட்டிருந்தால் வங்கியர் அதன்மீது கடனளிப்பது நல்ல தல்ல.

ரயில்வே ரசீது காணமற்போய் விட்டதாகக்கூறி ஈட்டுறுதிப் பத்திரம் (indemnity bond) எழுதியளித்து, ரயில்வே சரக்கு நிலை யத்திலிருந்து சரக்குகளை வாடிக்கையர் விடுவித்துக் கொள்ளக் கூடும். இதைத் தடுக்க வங்கியர் ரயில்வே அதிகாரிக்குக் குறிப் பிட்ட ரயில்வே ரசீது தம்மிடம் பிணையாக வைக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்க வேண்டும், மேலும் ரயில்வே ரசீதைக் கொடுக்கா விட்டால் சரக்கைக் கொடுக்க வேண்டாமென்றும் கோரவேண்டும்.

சில மாநிலங்களில் பண்டகர் சான்றுறுதி சட்டமுறையாக மாற்றிக் கொடுக்கும் தன்மை பெற்றுள்ளன. அத்தன்மை சட்ட முறையாக அளிக்கப்படா மாநிலங்களில் வங்கியர் தம்பெயரில் பண்டகர் ரசீதை எழுதப்பெற்ற பின்னரே கடன் அளிக்க வேண்டும்.

சரக்குரிமை ஆவணங்கள் மீது கடன் தருமுன் வங்கியர் தக்க பற்றுப்பொறுப்புப் பத்திரம் (memorandum of charge) ஒன்றையும் எழுதி வாங்கிக் கொள்ள வேண்டும். அதன்படி வாடிக்கையர் குறித்தவாறு கடனைச் செலுத்தத் தவறினால், சரக்குகளை விற்று கடனை அளிக்கும் அதிகாரம் வங்கியருக்குத் தரப்பட வேண்டும்.

பண்டகர், சரக்கேற்றி (Carrier) முதலானோரும் நாணயமான வர்களாக இருக்க வேண்டும். நூறுமூட்டை சர்க்கரை என்று ஆவணத்தில் குறித்து விட்டு முப்பது மூட்டை சர்க்கரையும் எழுபது மூட்டை மணலும் உண்மையில் பண்டகத்தில் சேர்ப்பித் தால் அதைப் பிணையாகப் பெறும் வங்கியர் பரிதாப நிலையடை வார். ரயில்வே ரசீதில், சரக்குகளின் தன்மை பற்றி குறிக்கப் படுவதில்லை.

இதுவரை கண்ட எச்சரிக்கைகளன்றி, சரக்குகள் மீது கடன் தரும்போது வங்கியர் என்ன எச்சரிக்கைகளைக் கடைப்பிடிப்பாரோ

அவற்றையும் சரக்குரிமை ஆவணங்கள்மீது கடன்தரும் போது கருத்தில் கொள்ள வேண்டும். இதற்குக் காரணம் சரக்குரிமை ஆவணத்தின்மீது தரப்படும் கடன் உண்மையில் சரக்கின்மீது தரப் படும் கடனாகவே விளங்குகிறது.

15. பிறபிணைகள்மீது கடன்தருதல்

முன் அத்தியாயங்களில் கண்ட பிணைகளல்லாமல் வாடிக்கையர், கடன் பெறுவதற்கு வேறுவகைப் பிணைகளை அளிப்பதும் உண்டு அவற்றில் முக்கியமான சிலவற்றைக் காண்போம்.

நிலையியல் சொத்துக்கள்மீது கடன்

நிலம், கட்டிடம் போன்ற தாவர சொத்துக்களைப் பிணையாகத் தந்து கடன் கோருவதுண்டு. ஆனால் வங்கியர் இவ்வகையான சொத்தைப் பிணையாக ஏற்க விரும்புவதில்லை. இதற்குப் பல காரணங்கள் உண்டு. அவையாவன:

முதலாவதாக, சொத்தை மாற்றித் தருவதிலுள்ள சட்டச் சிக்கல்கள். பல மாநிலங்களிலுள்ள சட்டப்படி நிலம் போன்ற சொத்துக்களை உரிமை மாற்றித்தருவது பல கட்டுப்பாடுகட்குட் பட்டது. மற்றும் இந்து, முகமதிய உரிமை இறக்கச் சட்டங்கள் படி சொத்தை உரிமைமாற்றித் தருவதில் பலப்பல சிக்கல்கள் உள்ளன.

இரண்டாவதாக, வாடிக்கையர்தான் அச்சொத்தின் உரிமையாளரா என்று வங்கியர் கவனிக்க வேண்டும். இது எளிதான செய்தியல்ல. சொத்தின்மீது வில்லங்கம் ஏதுமிருக்கிறதா என்றும் ஆவணப்பதிவாளரிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டும். உரிமைமூல ஆவணங்கள் (documents of title) வைத்திருப்பவர் தான் சொத்தின் உரிமையாளர் என்று கொண்டு விடலாகாது. வங்கியர் தமது வழக்கறிஞர்களைக் கொண்டு ஆவணங்களை ஆராய்ந்து, சொத்தின் உரிமையாளர் யார் என்று அறிந்து கொள்ள வேண்டும். நில உரிமை பற்றிய சட்டம், நிலச் சீர் திருத்தச்சட்டம் போன்ற பற்பல சட்டங்கள் சிக்கல்கள் மிகுந்த ஒரு நிலையையுண்டாக்கியிருக்கின்றன. குத்தகை எடுத்துப் பயிர்

செய்பவர்களின் உரிமை என்ன என்பதை அறிந்து கொள்ளத்தக்க ஆவணங்கள் இருப்பதில்லை.

மற்றும் விவசாயிகளை வட்டிகடைக்காரர்களின் கொடுமையி லிருத்தும், பிடியிலிருந்தும் விடுவிக்கக் கொண்டுவரப்பட்ட சட்டங் கள் வங்கிகளையும் பாதிக்கின்றன. கடன் கொடுத்தவர் என்ற நிலையில் வங்கியர் இருப்பதால் அவருடைய உரிமைகளும் பாதிக்கப் படுகின்றன.

மூன்ருவதாக, தாவரசொத்தின் மீது கடன் தருமுன் வாடிக் கையர் சொத்தை அடைமானம் (mortgage) செய்து தரவேண்டி யிருக்கிறது. இதற்குப் பெருஞ்செலவு ஆகிறது. முத்திரைவரி ஏராளமாகச் செலுத்த வேண்டியிருக்கிறது.

நான்காவதாக, தாவரச்சொத்தை அவசரத்திற்கு விற்பது எளிதல்ல. வங்கியரது பொறுப்புக்களெல்லாம் பெரும்பாலும் குறுகிய காலத்தில் தீர்க்கப்பட இருப்பதால், நீண்ட நாட்களுக்கு அவர் கடன் வழங்க இயலாது.

ஐந்தாவதாக, இவ்வகைச் சொத்துக்களை மதிப்பிடுதல் எளி தன்று. இத்துறையில் அனுபவமிக்க மதிப்பீட்டாளர், கட்டிடக் கலைஞர் போன்ருேரைக் கேட்டே சொத்தின் மதிப்பை நிருணயிக்க வேண்டும்.

கடைசியாக வாடிக்கையர் குறித்தபடி கடனைத் திருப்பித்தரா நிலையில், சொத்தை விற்க வங்கியர் பற்பல சட்டச்சடங்குகளை மேற்கொள்ள வேண்டும். இதனுல் காலம் கடந்து செல்லும். சில சமயம் அடைமானச் சொத்தை விற்றுக் கடனை அடைத்துக் கொள்ளப் பலப்பல மாதங்களாவதுண்டு.

அடைமானம் (Mortgage) Sec 58 (a)

அடைமானத்தின்மீது கடன் கொடுக்குமுன் வங்கியர் அதைப் பதிவு செய்ய வேண்டும். கடன் தொகை ரூபாய் நூறு அல்லது அதற்குமேல் இருந்தால், அடைமானப் பத்திரம் சட்டப்படி பதிவு செய்யப்பட வேண்டும். சொத்து மாற்றுச்சட்டம் 58பிரிவு அடை மானத்திற்கு இலக்கணம் தருகிறது. கடனுதவியாகக் கொடுக்கப் பட்ட அல்லது கொடுக்கப்பட வேண்டிய பணத்தைத் திரும்பச் செலுத்துவதற்கோ, நிகழ்கால அல்லது எதிர்காலக் கடனுக்கோ, பணிப்பொறுப்புடைய ஒரு பணிக்கடனை நிறைவேற்றுவதற்கோ உறுதி ஈடாக ஒரு குறிப்பிட்ட நிலைச் சொத்திலுள்ள பாத்தியத்தை

மாற்றுதல் "அடைமானம்" எனப்படும். ஒரு கடன் அல்லது சட்டப்பிணைப்புக்காக குறிப்பிட்ட நிலச் சொத்திலுள்ள பாத்தியதையின மாற்றலே அடைமானத்தின் சிறப்புக்கூறு எனலாம்.

ஈட்டடைமானம் (Simple Mortgage)

அடைமானத்தில் பலவகையுண்டு. அடைமானம் செய்பவர் அடைமானச் சொத்தின் உடைமையை மாற்றிக் கொடுக்காது; தனிப்பட்ட முறையில் தாமே அடைமானப் பணத்தைத் திருப்பிக் கொடுப்பதாகத் தம்மைக் கட்டுப்படுத்துகிறார். அதன்படி அடைமானப் பணத்தை அவர் கொடுக்கத் தவறினால், அடைமானம் பெறுபவர் அடைமானச் சொத்தை விற்பனைக்குக் கொண்டு வந்து தமக்குச் சேரவேண்டிய அடைமானக் கடன் தொகையை எடுத்துக் கொள்ளலாம். இதற்கு வகைசெய்யும் அடைமானம், "ஈட்டடைமானம்" (Simple mortgage) எனப்படும். இந்த அடைமான நடவடிக்கையில் இரு ஒப்பந்தங்கள் உள்ளன. ஒன்று அடைமானம் வைப்பவர் கடனைச் செலுத்த ஏற்றுக்கொள்ளும் சட்டப்பிணைப்பு; மற்றொன்று அடைமானக் கடன் தொகையைப்பெற அடைமானம் பெறுபவருக்கு அடைமானச் சொத்தை நீதிமன்றத்தின் உத்தரவு பெற்று விற்க அளிக்கப்படும் அதிகாரம் ஆகும்.

விற்பனை அடைமானம் (Mortgage by Conditional Sale) Sec 58(b)

அடைமானம் செய்பவர் அடைமானச் சொத்தின் பாத்தியத்தை அடைமானம் பெறுபவர் பெயருக்கு விற்பனையாகப் புலப்படும் வகையில் மாற்றுகிறார்; ஆனால், குறிப்பிட்டத் தேதியில் அடைமானக் கடன் தொகை செலுத்தப்படவில்லையெனில், அந்த விற்பனை உறுதியாகிவிடும். அவ்வாறு செலுத்திவிடின் விற்பனை இல்லாததாகி விடும்; அவ்வாறு செலுத்தியவுடன் சொத்தை வாங்கியவர் விற்றவர் பெயருக்குச் சொத்தை மாற்றிக் கொடுக்க வேண்டும்; இம்மூன்று நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்றுக்கு உட்படுத்திச் செய்யப்படும் அடைமானம் 'விற்பனை அடைமானம்' எனப்படும். இவ்வகை அடைமானத்தில் வெளித்தோற்றத்திற்கு சொத்து விற்கப்படுகிறது; அடைமானம் வைப்பவர் சில நிபந்தனைக்கட்குட்பட்டு சொத்தை மீட்கும் உரிமையுடையவர். அடைமானம் பெறுபவர் 'மீட்புரிமை அடைப்பு' (foreclosure)க்கு வழக்கிடலாமேயன்றி விற்பனை கோரமுடியாது.

ஒத்தி (Usufructuary Mortgage) Sec 58 (c)

மேலும் ஒருவகை அடைமானம் 'ஒத்தி' அல்லது 'சுவாதீன அடைமானம்' எனப்படும். அதாவது, அடைமானம் செய்பவர்

அடைமானச் சொத்தை அடைமானம் பெறுபவரின் உடைமையில் விட்டுவிடுகிறார் அல்லது அவ்வாறு விடுவதாக வெளிப்படையாகவோ குறிப்பாகவோ தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்கிறார். அடைமானக் கடன் தொகையைத் திருப்பித்தரும் வரை, அச் சொத்தின் உடைமையை அடைமானம் பெறுபவர் தம்மிடமே வைத்திருந்து, அச் சொத்திலிருந்து வரும் வாடகை வருமானங்களையோ, அவற்றில் ஒரு பகுதியையோ, அடைமானக் கடன் தொகைக்கு அல்லது வட்டிக்கு அல்லது இவ்விரண்டில் ஒரு பகுதிக்கு அடைத்துக் கொள்வதற்கு உரிமை பெறுகிறார். இத் தகைய அடைமானமே 'சுவாதீன அடைமானம்' அல்லது 'ஒத்தி' எனப்படும் (Usufructuary mortgage). இந்த அடைமானத்தில் சொத்து அடைமானம் பெறுபவரிடம் ஒப்படைக்கப்படும். இதன் நோக்கம் இதிலிருந்து கிடைக்கும் வருமானத்தை வட்டி அல்லது அசல் அல்லது பகுதிவட்டிப்பகுதி அசல் தொகையை அடைக்கப் பயன்படுத்துவதாகும்.

58(d) இங்கிலீஷ் அடைமானம் (English Mortgage) என்றொரு வகை அடைமானமுண்டு. அதில் அடைமானம் செய்பவர், அடைமானக் கடன் தொகையைக் குறித்த தேதியில் திருப்பிக் கொடுப்பதாகத் தம்மைக் கட்டுப்படுத்தி அதன்படி பணம் கொடுத்துவிட்டால் சொத்தைத் திருப்பி மாற்றிக்கொடுக்க வேண்டுமென்ற முன் நிபந்தனையுடன், அடைமானச் சொத்தை முற்றிலுமாக அடைமானம் பெறுபவருக்கு மாற்றிக் கொடுக்கிறார். இந்த அடைமானத்தில் குறிப்பிட்ட நாளன்று அடைமானத் தொகையைத் திருப்பிச் செலுத்த அடைமானம் வைப்பவர் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்கிறார்; அடைமானம் பெறுபவருக்கு அடைமானச் சொத்து முற்றிலுமாக மாற்றித் தரப்பட வேண்டும்; குறிப்பிட்ட நாளன்று அடைமானம் வைத்தவர் பணத்தைச் செலுத்திவிட்டால் அடைமானம் பெறுபவர் சொத்தைத் திருப்பி அடைமானம் வைத்தவருக்கு மாற்றிக் கொடுக்கவேண்டும். இதில் அடைமானம் பெறுபவர் விற்பனை கோரி வழக்கிடலாம்.

பத்திரவைப்பு அடைமானம் 58(e)

வங்கியர் நடைமுறையில் அதிகமாக மேற்கொள்ளக்கூடிய அடைமான வகை பத்திர வைப்பு அடைமானம் (Mortgage by deposit of title deeds) எனப்படும். சட்டத்தில் குறிக்கப்பட்ட சில நகரங்களில் மட்டும், நிலையியல் சொத்தைக் கடனுக்குப் பிணையாக்கும் கருத்துடன் ஒருவர் தமக்குக் கடன் கொடுத்தவரிடம் அதன் உரிமைமூல ஆவணங்களை ஒப்படைத்தால் ஏற்படுவது பத்திர வைப்பு அடைமானமாகும். இந்த அடைமானத்தில்,

அடைமானம் பெறுபவர் ஈட்டடைமானத்தில் பெறும் அதே உரிமைகளைப் பெறுகிறார். தமிழ் நாட்டில் சென்னை, வேலூர், கோயமுத்தூர், தூத்துக்குடி, மதுரை ஆகிய இடங்களில் மட்டுமே இந்த வகை அடைமானம் செய்யப்படலாம். அடைமானம் பெறும் கடனாளர் அல்லது அவர் முகவர் இந்நகரங்களில் இருக்க வேண்டும். அடைமானம் செய்யப்படும் சொத்து எந்த ஊரிலும் அமைந்திருக்கலாம். கடன் பெறும் பொருட்டு பிணையாக உரிமை மூல ஆவணங்கள் கடனாளரிடம் வைக்கப்பட்டால்தான் இந்த அடைமானம் ஏற்படும்.

எந்தவகை அடைமானமாக இருந்தாலும் வங்கியர் அடைமானச் சொத்தைக் காப்பீடு செய்யும்படி வற்புறுத்த வேண்டும். சொத்தின் மதிப்புக்கும் கடன் தொகைக்கும் 35°/ₒ முதல் 50°/ₒ வரை இடைவெளி வேண்டுமென்று வங்கியர் கோருவர்.

ஆயுள் காப்பீட்டு பாலிசி (Life Insurance Policy)மீது கடன் கொடுத்தல்

ஆயுள் பாலிசி என்பது காப்பீடு அளிப்பவருக்கும் காப்பீடு பெறுபவருக்குமிடையே ஏற்படும் ஒப்பந்தத்தைக் குறிக்கும். இதன்படி காப்பீடு பெறுபவர் இறந்துபோனால் அல்லது குறிப்பிட்டக் காலவரையறை கடந்து போனால், காப்பீடு அளிப்பவர் குறிப்பிட்ட தொகையைக் கொடுப்பதாக உறுதியளிக்கிறார். ஆயுள் காப்பீட்டுப் பாலிசியின் பேரில் வங்கியர் கடன் தருவதுண்டு. பாலிசியின் மதிப்பு அதன் விடுமதிப்பை (Surrender value)ப் பொறுத்தது. விடுமதிப்பு என்பது காப்பீட்டுப் பத்திரத்தைத் திருப்பியளித்து அதன் வழியான பாத்தியங்களனைத்தையும் காப்பு பெறுபவர் விட்டுக் கொடுத்தால் காப்புறுதிக் கூட்டுரு (Insurance Corporation) அதற்கென அளிக்கும் தொகையாகும். முனைமம் (Premium) தவறாது செலுத்தப்பட்டு வந்தால் விடுமதிப்பு (Surrender value) படிப்படியாக உயர்ந்து கொண்டு போகும். கடன் வாங்கியவர் இறந்து போனால், பாலிசி தொகையிலிருந்து கடன் தொகையை எடுத்துக் கொள்ளலாம். பாலிசி வங்கியர் வசமிருப்பதால் பிணையைக் கண்காணிக்கும் வேலை எளிதாகிறது. அவசிய மேற்பட்டால் வங்கியர் பாலிசியை உரிமை விடுப்புச் செய்து அதனால் கிடைக்கும் விடுமதிப்பைக் கொண்டு தமது கடனை அடைத்துக் கொள்ளலாம்.

காப்பீட்டு ஒப்பந்தம் முழு நம்பிக்கையில் எழுகிற (uberrimae fidei) ஒப்பந்தமாகும். ஓர் ஒப்பந்தம் செய்து கொள்வதா, வேண்டாவா என்பதுபற்றி முடிவு செய்வதற்குமுன் தெரியவேண்டிய எல்லாப் பொருண்மை (fact)களையும் சூழ்நிலைகளையும் உறுதியுரை

ஏற்பவர் உறுதியுரை அளிப்பவரிடம் தெரிவிப்பது கட்டாயமானது என்ற நிலையில் உள்ள ஒப்பந்தத்தை 'முழு நம்பிக்கையிலெழும் ஒப்பந்தம்' என்பர். எனவே ஒப்பந்தத்தில் பொய்க்கூற்று ஏது மிருப்பின் பாலிசி செல்லா நிலையதாகும். நாணயமான நபர் களுக்கு மட்டுமே காப்பீட்டுப் பாலிசிமீது கடன்தருவது நல்லது. பாலிசியில் பல நிபந்தனைகள் இருப்பதுண்டு. அவற்றில் ஒன்று 'தற்கொலைச் சரத்து' (Suicide clause). பாலிசிதாரர் குறிப்பிட்ட காலத்திற்குள் தற்கொலை செய்துகொண்டால் பாலிசி செல்லா நிலையதாகும். முனைமம் (Premium) தவறாது கட்டி வந்தால்தான் பாலிசி அமுலிலிருக்கும்.

மேற்கொள்ள வேண்டிய எச்சரிக்கை

வங்கியர் கீழ்க்காணும் எச்சரிக்கைகளைக் கடைப்பிடித்தால் ஆயுள் காப்புறுதி பாலிசி மீது கடன் கொடுப்பதில் நட்டமேதும் ஏற்பட இடமில்லை.

(i) நன்கு தெரிந்த நாணயமான நபர்களுக்கு மட்டுமே இப் பிணைமீது கடனளிப்பது நல்லது.

(ii) ஆயுள் பாலிசி இருவகைப்படும். ஒன்று முழு ஆயுள் பாலிசி; மற்றது காலவரையறைப் பாலிசி (Endowment Policy) முழு ஆயுள் பாலிசி மீதான தொகை காப்புறுதி பெற்றவர் இறந்த பின்னர் உரியவருக்குத் தரப்படும். காலவரையறைப் பாலிசி மீதான தொகை, குறிப்பிட்ட காலம் முடிவடைந்ததும் தரப்படும், இடையில் காப் புறுதிபெற்ற நபர் இறந்துவிட்டால் தொகை உடனே கொடுக்கப்படும். முடிந்தவரை பிணையாகத் தரப்படுவது காலவரையறைப் பாலிசியாக இருப்பதை வங்கியர் விரும்புவர். முழுஆயுள் பாலிசியாக இருந்தால் பாலிசித் தொகையிலிருந்து தமது கடனைத்திருப்பிப்பெற வங்கியர் நீண்டகாலம் காத்திருக்க வேண்டி வரலாம்.

(iii) முனைமம் (periemium) தவறாது கட்டப்பட்டு வருகின்றதா என வங்கியர் கவனித்துக் கொள்ளவேண்டும்.

(vi) மூன்றும் பேர்வழியொருவர் பாலிசி எடுத்திருந்தால், அவருக்கும் காப்புறுதி செய்யப்பட்டவருக்குமிடையே, காப்புறுதி செய்யத்தக்க நலன் (insurable interest) இருக் கிறதா என்று வங்கியர் கவனிக்க வேண்டும். காப்புறுதி பெறுபவர் உயிருடன் இருத்தல் அந்த மூன்றும் பேர்வழி யின் நலனுக்கு அவசியமாக இருப்பதையே காப்புறுதி செய்யத்தக்க நலன் எனக் குறிப்பிடுவர்.

(v) பாலிசி மீது உண்டான விடுமதிப்பு (Surrender value) எவ்வளவு என்பதைக் காப்புறுதிக் கூட்டுரு (நம் நாட்டில் L. I. C. என்று சுருக்கமாகக் குறிக்கப்படும் Life Insurance Corporation)விடம் கேட்டுத்தெரிந்துகொள்ள வேண்டும். விடுமதிப்பையொட்டியே கடன்தொகை நிருணயிக்கப் படும். விடுமதிப்புக்கும் 10% குறைவான தொகையே கடனாக வழங்கப்படுவது வழக்கம்.

(vi) காப்புறுதி செய்யப்பட்டவரின் வயது. காப்புறுதிக் கூட்டுருவால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும், வயது ஒப்புக் கொள்ளப்படாமல் உள்ள பாலிசி மீது பணம் பெறுவதில் பல சிக்கல்கள் உண்டாகும்.

(vii) பாலிசி வங்கியருக்கு உரிமைமாற்றம் (assignment) செய்யப்பட வேண்டும். உரிமைமாற்றம் பாலிசி மீதே செய்யப்படுவது வழக்கம். சில சமயம் முத்திரைத் தாள் (Stamped paper) மீது உரிமைமாற்றம் செய்து அதைப் பாலிசியுடன் இணைத்து வங்கியரிடம் அளிப்பதுமுண்டு. உரிமைமாற்றம் செய்ததைக் காப்பீடு பெற்றவர் காப் பீட்டுக் கூட்டுருவிற்கு எழுத்தால் அறிவிக்க வேண்டும். முன்னரே பாலிசிதாரர் யாரேனும் ஒருவரைப் பாலிசி மீதான தொகையைப் பெற அமர்த்தியிருந்தால் (nomination) உரிமை மாற்றம் செய்து தந்ததும் அமர்த்தல் செல்லாததாகிவிடும்.

(viii) திருமணமான பெண்டிர் சொத்துச் சட்டத்தின் கீழ் எடுத்துக்கொண்ட பாலிசிமீது வங்கியர் கடன் தரமாட் டார். இதற்குக் காரணம் அச்சட்டப்படி ஒரு மனிதர் தம் உயிர்மீது எடுக்கும் பாலிசி தமது மனைவி குழந்தைகள் நன்மைக்கு மட்டுமேயாகஅமையும். அம்மனிதர் இறந்து பட்டால் பாலிசி அவரது சொத்துக்களில் ஒன்றாகக் கருதப்படமாட்டாது.

(ix) தகைமைநிலை அடைமானம் (equitable mortgage) மூலம் வாடிக்கையர் வெகு எளிதாக காப்பீட்டுப் பாலிசி மீது கடன் வாங்கலாம். பாலிசியை, வங்கியர் வேண்டும் போது உரிமைமாற்றம் செய்துதர உறுதியளிக்கும் கடிதத் துடன், வங்கியரிடம் அடைவு செய்வதன் வழி தகைமை நிலை அடைமானம்ஏற்படுத்தலாம். இவ்வகைப்பிணையை ஏற்றுக் கொண்ட வங்கியர் காப்பீட்டுக் கூட்டுருவுக்குத் தாம் தகைமைநிலை அடைமானம் பெறுபவராக உள்ளார் என்று அறிவிக்க வேண்டும்.

கடன் திருப்பிக் கொடுக்கப்பட்டதும், பாலிசியை காப்பீடு பெறுபவருக்கு உரிமை மறுமாற்றம் செய்து அவரிடம் அதைத் திருப்பித்தரவேண்டும். உரிமை மறுமாற்றம் காப்பீட்டுக் கூட்டுருவின் ஏடுகளில் பதியப்பட வேண்டும். பாலிசியைத் தகைமைநிலே அடைமானம் செய்திருந்தால் உரிமை மறுமாற்றம் தேவையில்லை.

பெற்றக்கடனை வாடிக்கையர் குறித்தபடி அடைக்காவிட்டால் வங்கியர் தாம் பாலிசியைக் காப்பீட்டுக் கூட்டுருவுக்கு வரையுரிமை விடுப்பு (Surrender) செய்ய முடிவெடுத்திருப்பதை அறிவிக்க வேண்டும். அல்லது காப்பீட்டுக் கூட்டுருவிடம் பாலிசி மீது கடன் பெற்று, வங்கியர் தந்துள்ள கடனை அடைக்கும்படிக் கோரலாம். பாலசிதாரர் இறந்துபட்டால், இறந்ததற்குத் தக்கச்சான்றளித்து, காப்பீட்டுக் கூட்டுருவிடமிருந்து உரிமைமாற்றம் பெற்றவர் என்ற முறையில் காப்பீட்டுத் தொகையைக்கோர வேண்டும்.

தவணைவைப்பு ரசிது மீது கடன்

தவணைவைப்பு குறிப்பிட்ட காலங்கழிந்ததும் வாடிக்கையருக்குத் திருப்பித் தரப்படவேண்டும். தவணைக் காலம் முடியுமுன் வாடிக்கையருக்குப் பணம் தேவைப்பட்டால், தவணை வைப்பைப் பிணையாக அளித்து வங்கியரிடம் கடன் கோரலாம். அல்லது தவணைக்காலம் முடியுமுன் தவணைவைப்புத் திருப்பித் தருமாறு வேண்டலாம். ரிசர்வு வங்கியின் நிபந்தனைகட்குட்பட்டு வங்கியர் இந்த இருமுறைகளில் எதை வேண்டுமானாலும் செயல்படுத்தலாம். தவணை வைப்பு ரசீதின்மீது கடன் தருமுன் வங்கியர் பல எச்சரிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

1. தம்மிடம் வைக்கப்பட்டுள்ள தவணை வைப்பின்மீது—அதாவது தவணைவைப்பு ரசீதைப் பிணையாக ஏற்றுக் கடன்தருவது வங்கியருக்கு முழுப்பாதுகாப்பு அளிப்பதாகும். ஆனால் மற்றொரு வங்கி அளித்துள்ள தவணை வைப்பு ரசீதின் மீது கடன் கேட்டால் வங்கியர் கடன் தரக்கூடாது. இதற்குக் காரணம், ஒவ்வொரு வங்கியும் தான் அளித்துள்ள தவணை வைப்பு ரசீதின் மீது முழு பற்றுரிமை கொண்டாடும். கடன்தரும் வங்கியர் தவணை வைப்பைப் பெற்றிருக்கும் வங்கியரிடம் தாம் அவரளித்துள்ள தவணை வைப்பு ரசீதின் பேரில் கடன் அளிப்பதை அறிவித்தாலும் கூட, மற்ற வங்கியர் அந்த பற்றுரிமையைப் பதிவு செய்ய மறுக்கலாம்.

2. ஒரு தவணை வைப்பைப் பலநபர்கள் சேர்ந்து வைத்திருக்கலாம். அவர்களில் ஒருவருக்கோ அல்லது எல்லோருக்கும் சேர்ந்தோ

தவணை வைப்பு திருப்பிச் செலுத்தப்பட வேண்டுமென்று ஏற்பாடிருக்கலாம். ஏற்பாடு எப்படியிருப்பினும் வைப்புத்தாரர்களனைவரும் சேர்ந்து கடன்கோரி விண்ணப்பிக்க வேண்டும். ஆனால் கடன் தொகையை ஒருவரிடம் அல்லது அவர்களில் சிலரிடம் கொடுக்கும்படி வங்கியரைக் கேட்டுக் கொள்ளலாம்.

3. தவணை வைப்பு ரசீதைப் பிணையாக வங்கியருக்குஅளிக்கும் போது எல்லா வைப்புதாரர்களும் அந்த ரசீதின்மீது வருவாய் வில்லை (revenue stamp) ஒன்று ஒட்டி கையொப்பமிட்டு அதைத் தீர்த்தல் (discharge) செய்யவேண்டும். அடகுப்பத்திரம் ஒன்றிலும் கையொப்பமிட்டுத் தரவேண்டும். இவற்றில் காணப்படும் கையொப்பம் மாதிரிக் கையொப்பத்தோடு ஒற்றுமையாகக் காணப்பட வேண்டும். அடகுப் பத்திரத்தில் காணப்படும் வாசகம் கெடு தேதியன்று ரசீதில் குறிக்கப்பட்டத் தொகையைத் தமக்குச் சேரவேண்டிய அசல், வட்டித் தொகைக்கு ஈடுகட்டிக் கொள்ள வங்கியருக்கு அதிகாரம் தரும்.

4. எவர் பெயரில் ரசீது உள்ளதோ அவருக்குத்தான் வங்கியர் கடன் கொடுப்பார். மற்றொருவர் பெயரில் உள்ள ரசீதைப் பிணையாகக் கொண்டு ஒரு நபருக்குக் கடனளிப்பதும் உண்டு. தவணை வைப்பு எவர்பெயரில் உள்ளதோ அவர் இசைவுபெற்று, அவரிடம் அந்த வைப்பைப் பிணையாக அளிக்கும் கடிதமொன்றையும் பெற வேண்டும். தவணைவைப்புதாரர் ரசீதைத் தீர்த்து (discharge) வருவாய்வில்லை ஒட்டிக் கையொப்பமிட்டு வங்கியரிடம் வரையுரிமைவிடுப்பு (Surrender) செய்யவேண்டும்.

5. தவணைவைப்பு ரசீதைப் பிணையாகப் பெறும் வங்கியர் வைப்புத்தொகை மீது 5 முதல் 10 விழுக்காடு இடைவெளி வைத்திருப்பது வழக்கம்.

6. தவணைவைப்பு ரசீதின் பேரில் அளிக்கப்படும்கடன் மீதான வட்டி, அத்தவணை வைப்பின் மீது தரப்படும் வட்டிக்கு ஒரு விழுக்காடு (one percent) அளவேனும் அதிகமாக இருக்க வேண்டும். பொதுவாக வங்கியர் ஒன்று முதல் இரண்டு விழுக்காடு வரை அதிகமாக வட்டி கோருவர். வேறொரு பேர்வழியின் பெயரிலுள்ள தவணை வைப்பு ரசீதின் மீதான கடனாக இருந்தால் சாதாரண கடன்கள்மீது வசூலிக்கும் வட்டியே இக்கடன் மீதும் வசூலிக்கப்படும்.

7. உரிமை வயது வராதோர் (minor) பெயரிலுள்ள தவணை வைப்பு ரசீதின்மீது வங்கியர் கடன் தர ஒப்புவதில்லையென்றாலும்,

தவிர்க்க முடியா நிலையில் அதைப்பிணையாக ஏற்பதுண்டு. அந் நிலையில் காப்பாளரிடம் அப்பணம் தமது தான் என்றும், வசதிக் காக இளவர் (minor) பெயரில் வைக்கப்பட்டிருக்கின்றது என்றும், கடன்தொகை இளவரின் நன்மைக்குப் பயன்படுத்தப்படுகிற தென்றும் உறுதிக்கூற்று எழுதிப்பெற வேண்டும்.

8. தவணை வைப்பு பேரேட்டிலும், தவணை வைப்பு ரசீது, பதிவேடு ஆகியவற்றிலும் குறிப்பிட்ட தவணை வைப்பின் மீது பற்றுரிமை இருப்பதைக் குறித்து வைத்திருக்க வேண்டும்.

9. ஒருகிளைவங்கி அதே வங்கியின் பிறிதொருகிளையில் வைக்கப் பட்டுள்ள தவணைவைப்பின் மீது கடன் கொடுக்க நேரலாம். வைப்புபெற்றுள்ள வங்கிக்குஅவ்வைப்பின்மீது பற்றுரிமையேதும் இருக்கிறதா என்று கடன்கொடுக்கவிருக்கும் கிளை வங்கியர்கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். கடனளிக்கும் கிளை வைப்பு ரசீதைத் தீர்த்தல் (discharge) செய்து, அதை வெளியிட்ட கிளைக்கு அனுப்பிச் சரிபார்க்க வேண்டும். கடன் கோரும் நபர், தவணைவைப்பு வைத்திருக்கும் வங்கியருக்கு, வைப்புத்தொகையை வைப்புமுதிர் வடைந்தவுடன் கடன் தரும் கிளைக்குச் செலுத்துமாறு கடிதம் எழுதித் தரவேண்டும். கடனளிக்குகும் கிளை, தனக்குள்ள பற்றுரிமையைத் தவணைவைப்பை வைத்திருக்கும் கிளையின் தவணை வைப்புப்பதிவேடு, பேரேடுகளில் பதிய ஏற்பாடு செய்ய வேண்டும்.

10. தவணைவைப்பு முதிர்வடைந்ததும் அத்தொகையைக் கொண்டு வங்கியர் தமக்குச் சேரவேண்டிய கடனை அடைத்துக் கொள்வார். ரசீது கெடுவடையும்முன் கடனுளி கடனை அடைத்து விட்டால், தீர்த்தலை நீக்கிவிட்டு வைப்பு ரசீதை வாடிக்கையரிடம் வங்கியர் திருப்பிக் கொடுத்து விடுவார். ரசீது, பேரேடு,பதிவேடு களில் குறித்து வைத்திருக்கும் பற்றுரிமையும் நீக்கிவிடுவார்.

ஏட்டுக் கடன்கள் (Book Debts) மீது கடன் கொடுத்தல்

கடன்களை வசூலிக்கும் பணியை வங்கியர் விரும்பி ஏற்பதில்லை யெனினும் சில நேரங்களில், சூழ்நிலை காரணமாக வியாபாரக் கடன்களைப் பிணையாக ஏற்றுக்கொண்டு கடன் வழங்குவதுண்டு. இந்தியாவில் சொத்து மாற்றச் சட்டப்படி வழக்குரிமை பொருள் (chose in action) எதனையும் சட்டப்படி உரிமை மாற்றம் செய்ய லாம். ஏட்டுக்கடன் ஒரு வழக்குரிமைப் பொருளாகும். உரிமை மாற்றம் எழுத்தால் அமையவேண்டும். உரிமைமாற்றுபவர் கையொப்பம் அப்பத்திரத்திலிருக்க வேண்டும் கடனுளியை, கடன்

தொகையை உரிமைமாற்றிப் பெறுபவருக்குச் செலுத்தும்படி உத்தரவிட்டு கடனாளர் எழுதித்தர வேண்டும். கடனாளியை மாற்றிப்பெறுபவருக்குப் பொறுப்பாவதற்கு, அவருக்கு உரிமை மாற்றம் பற்றிய அறிவிப்பு தர வேண்டும். உரிமை மாற்றிக் கொடுப்பவருக்குள்ள உரிமைகளைமட்டுமே உரிமை மாற்றிப்பெறுபவர் பெறுகிறார்.

16. முந்துமைத் துறைகளுக்கு நிதியுதவி
(Financing of priority sectors)

வணிக வங்கிகள் பெரும்பாலும் பெருந் தொழில்களுக்கே கடன்வசதிகள் அளித்து வருகின்றன; சிறுதொழில்களும், வேளாண்மைத்துறையும் போதிய அளவுக்கு நிதி வசதிகள் பெறுவதில்லை என்ற பொதுவான கருத்து பல காலமாக நிலவி வந்தது. சமுதாய வளர்ச்சிக்கு இன்றியமையாத இத்துறைகளுக்கு வணிக வங்கிகள் கடனுதவி அளித்து வரவேண்டும் என்று அவ்வப்போது வற்புறுத்தப்பட்டு வந்தபோதிலும், வெளிப்படையாக 1967ஆம் ஆண்டில் தான் மத்திய அரசு இச்செய்தியைத் தம் கொள்கையாக அறிவித்தது. அதுமுதல் வணிகவங்கிகள் இவ்விருதுறைகளுக்கும் கடன் தருவதில் ஆர்வம் காட்டி வருகின்றன. பதினான்கு பெரு வணிகவங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டது முதல் (ஜுலை 1969) இத்துறைகளுக்கு நிதிவசதி அளிப்பதில் மேலும் பேரார்வம் காட்டப்பட்டுவருகிறது.

சிறு தொழில்களுக்குக் கடன்வசதி

சிறுதொழில் துறை வேலைவாய்ப்பினை உண்டாக்கித் தரும் திறன் வாய்ந்தது. நாட்டுச்செல்வத்தை அதிகரிக்கவும், மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தவும், நாட்டு வருமானத்தை மேலும் பரவலாக பகிர்ந்தளிக்கவும் சிறுதொழில்கள் பேருதவி புரிகின்றன. எனவே சிறுதொழில்களை நிறுவவும், நிறுவப்பட்ட சிறுதொழில்கள் வளர்ந்து பெருகவும் ஆக்க முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது. இம்முயற்சிகள் வெற்றிபெற வங்கிகள் சிறுதொழில்களின் நிதித்தேவைகளை நிறைவேற்ற வேண்டும்.

முதலீட்டுத் தொகை ஏழரை இலட்ச ரூபாய்க்கு மேற்படாத தொழில்முயற்சி சிறுதொழில் எனப்படும். சிறுதொழில்களுக்குத்

தரப்படும் கடன் திருப்பியளிக்கப்படும் என உறுதி தரும் வகையில் கடன் உத்திரவாதத் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்படி உத்தரவாதம் பெறவங்கியர் தாம் கடனளிக்கும் தொழில் சிறுதொழில் என்ற இலக்கணத்திற்குப் பொருந்துகிறதா என்று கவனிக்க வேண்டும்.

எல்லாத் தொழில்களுக்கும் தேவைப்படுவது போன்று சிறு தொழில் நிலையங்களுக்கும் நிலையான முதல், நடைமுறை முதல் ஆகிய குறித்து பணம் தேவைப்படுகிறது. தம்மிடமுள்ள சொந்த முதலுடன், அரசினரிடம் கடன், வங்கிகளிடம் கடன், நாட்டுச் சிறுதொழில் கூட்டுருவிடம் கடன் போன்று பல வழிகளில் பணந் திரட்டுகின்றனர்.

குறுகிய காலக் கடன்

வணிகவங்கிகள் கொடுக்கும் கடன் வசதிகளைச் சுருக்கமாகக் காண்போம். நடைமுறை முதலுக்குத் தேவைப்படும் பணத்தை வங்கிகள் சிறுதொழிலுக்கு அளிப்பதற்கு இரண்டு வழிகளைக் கையாளுகின்றன. ஒன்று, இறுதிச்சரக்குகள் அல்லது கச்சாப் பொருள்களை அடைமானமாக ஏற்றுக்கொண்டு ரொக்கக்கடன் வசதிகள் அளித்தல்; மற்றொன்று வணிக நடவடிக்கைகள்பற்றி ஏற்பட்ட மாற்றுச்சீட்டு (bill of exchange) களை தள்ளுபடி செய்து அல்லது வாங்கி பணவசதிசெய்து தருதல்.

மத்தியகாலக் கடன்

நிலையியல் சொத்துக்களை அடைமானமாக ஏற்றுக்கொண்டு நிலைமுதல் (Block Capital) தேவைகளுக்கான பணத்தை மத்திய காலக் கடனாக (medium-term loan)அளிப்பதுமுண்டு.

ஏற்றுமதிக் கடன்

சிறுதொழில்கள் ஏற்றுமதி வணிகத்தில் ஈடுபட்டால் அதற்கும் வணிக வங்கிகள் கடன்வசதியளிக்கின்றன. ஏற்றுமதி வியாபாரத்தால் உண்டான அயல்நாட்டு மாற்றுச் சீட்டுகளை வாங்கிக் கொள்வதன் வழியும், ஏற்றுமதிக்கான சரக்குகளை அடகாக ஏற்றுக் கொண்டு அவற்றைக் கட்டியனுப்பக் கடன் (Packing Credit) வசதி அளிப்பதன் வழியும் வணிக வங்கிகள் சிறு தொழில்கள் ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபட பேருதவி புரிகின்றன.

பிணைகள் மீதான இடைவெளி, கடன் மீதான வட்டி முதலியவற்றிலும் சலுகை காட்டப்படுகிறது.

தொழிற் பேட்டை (Industrial Estate)கள் அமைக்கவும் வங்கிகள் கடனளிக்கின்றன. நிலம் வாங்க, தொழிற் கூடம் கட்ட, சாலை, மின்வசதியமைக்க போன்ற தேவைகளுக்குக் கடன் தரப்படுகின்றது. இக்கடன்களுக்கு அரசு உத்தரவாதம் அளிக்கிறது.

தொழில் நுட்பத் தேர்ச்சி பெற்ற நபர்கள் தொழில் முயற்சி ஏதும் மேற் கொண்டால் அவர்களுக்கு வங்கியர் கடன்தந்து உதவுவர். அவர்கள் தயாரித்துள்ள திட்டம் நிறைவேறக் கூடிய வாய்ப்புள்ளதாகத் தோன்றினல், திட்டத்திற்கு வேண்டிய இயந்திரம், துணைக்கருவிகள், விளம்பரம், ஆராய்ச்சி, சந்தை கணிப்பு முதலிய செலவுகளுக்கு ஆகக் கூடிய பணத்தைக் கடனுக அளிப்பர். கடனுகக் கொடுக்கப்பட்ட பணம் சரியான முறையில் பயன்படுத்தப்படுகிறதா என்று கண்காணித்தல் அவசியம்.

கடன் உத்தரவாதத் திட்டம்

வங்கிகள் சிறுபுள்ளிகளுக்கு (Small borrowers)க் கடன் தருவதை ஊக்குவிக்க இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மத்திய அரசின் சார்பாக ரிசர்வு வங்கி இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

திட்டச் செயல்முறை

விவசாயிகள், போக்குவரத்து ஊர்தி வைத்துக் கொண்டு தொழில் நடத்துனர், சில்லறை வணிகர், தாமாகவே தொழில் செய்து வாழ்பவர் போன்ற நபர்களுக்குத் தரப்படும் கடன் உத்தரவாதமளிக்கப்படுகிறது. கடன் மட்டுமல்லாமல், அந்நபர்கள் சார்பாக வாணிக உறுதிக் கடிதம் (letter of credit), மாற்றுச் சீட்டு ஏற்பு, பின் செலுத்து உத்தரவாதம் (deferred payment guarantee) முதலிய நிதிவசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தால் அவை உத்தரவாதத் திட்டத்தின் கீழ்வரும். சிறு தொழில்களுக்கு அளிக்கப்பட்டுள்ள கடன் எல்லை (credit limit)களைக் காலாண்டுக்கு ஒருமுறை ரிசர்வு வங்கிக்கு ஒரு பட்டியல் மூலம் தெரிவிக்க வேண்டும். வங்கிகள் உத்தரவாதக் கழிவுத் தொகையைக் காலாண்டுக் கொருமுறை கட்ட வேண்டும். உத்தரவாதம் செய்யப்படும் தொகைக்கு உச்சவரம்பு நிருணயிக்கப்பட்டிருக்கிறது. கடன்பெற்றவர் செய்யும் தொழிலையொட்டி உச்சவரம்பு நிருணயிக்கப்பட்டுள்ளது. ஒரே தொழிலகம் (industrial unit) பெற்றுள்ள எல்லாக் கடன்களுக்கும் சேர்த்து உத்தரவாதம் குறிப்பிட்ட ஒரு வரம்பிற்கு உட்பட்டதாகும். எனவே கடன் கொடுக்கும் வங்கியர், உத்தரவாதவரம்பு என்ன என்றும், இதுவரை கொடுக்கப்பட்டுள்ள கடனளவு எவ்

வளவு என்றும் கவனிக்க வேண்டும். கொடுக்கப்பட்ட கடன் திரும்பிவராமல் உத்தரவாதம் தந்தவரை அணுகவேண்டிவந்தால், வங்கியின் தலைமை அலுவலகம் ரிசர்வு வங்கிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

கடன் கொடுக்குமுன் வங்கியர் கடன் பெறும் நபரைக் கணக்கு வழக்குகளைச் சரிவர வைத்திருக்கும்படி அறிவுறுத்த வேண்டும். தொழிலின் நிருவாகத்தினர் திறன், நாணயம் முதலியவற்றைச் சரிவர மதிப்பிட வேண்டும். முதல்நிலையில் செய்யப்பட வேண்டிய மூலதனச் செலவுகளுக்கு வேண்டும் பணம் மட்டுமாவது உரிமையாளரது சொந்த பணமாக இருப்பது நல்லது. தொழிலகம் உற்பத்தி செய்யும் சரக்கு விற்பனைக்கு உகந்ததா என்று கவனிக்க வேண்டும் சரக்கு உற்பத்திக்கு வேண்டிய கச்சாப் பொருள் தங்குதடையின்றி கிடைக்கக் கூடியதா என்றும் பார்க்க வேண்டும்.

சிறுதொழில் துறை வெகுவாக முன்னேறிவரும் இந்நாளில் வங்கியர் இத்துறைக்குக் கடன் தருவதன் வழி நாட்டு நலனை மேம்படுத்துவது மட்டுமின்றி பொருளாதார நிலை மேன்மையுறவும் வகை செய்கிறார்.

வேளாண்மைக் கடன்

இந்தியப் பொருளாதாரத்தின் அடித்தளம் வேளாண்மையாகும். நாட்டுவருமானத்தில் பாதி விவசாயத்திலிருந்து கிடைக்கின்றது. மக்களில் 70 விழுக்காடு அளவுக்கு விவசாயத்தைத் தம் வாழ்க்கைக்கு வழியாக மேற்கொண்டுள்ளனர். நமது ஏற்றுமதிச் சரக்குகளில் சற்றேறப்ப 50 விழுக்காடு விவசாய அடிப்படைப் (agriculture based) பொருள்களாக உள்ளன. விவசாயமும் தொழிலும் ஒன்றையொன்று சார்ந்து நிற்பன. எல்லா தொழில்களுக்கும் அடிப்படையாக விளங்குவது விவசாயம்.

> "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
> உழந்தும் உழவே தலை"—என்று திருக்குறள் பேசுகிறது.

உழவுக்கு வேண்டிய இயந்திரங்கள், உரவகைகள், பூச்சிக் கொல்லிமருந்து, பிறநுகர்ச்சிப் பொருள்கள் முதலியவை வேளாண்மைத் தொழிலுக்குத் தேவைப்படுகின்றன. நாட்டுத் தொழில் வளர்ச்சிக்கு வேளாண்மைத்துறை கச்சாப் பொருள் (raw material) களை விளைவித்து அளிக்கின்றது.

உணவுப் பொருள்கள் உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதும், மக்களுக்குச் சத்தான உணவு கிடைக்க வகை செய்வதும் நமது அரசின் முக்கிய நோக்கங்களாகும். உற்பத்தியைப் பெருக்கப் பற்பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் முக்கியமானவை நீர்ப்பாசன வசதிகளை அதிகரித்தல்; உரவகைகள், பூச்சிக் கொல்லி மருந்துகள் முதலியவற்றைப் பேரளவில் பயன்படுத்துதல்; பெருவிளைச்சல்தரும் உயர்ந்தரக விதைகளைப் பயன்படுத்துதல்; குறுகிய காலப் பயிர்வகைகளைப் பயிரிடுவதன் மூலம் பலபோகம் பயிர்செய்தல் என்பன.

விவசாயத் தேவைகள்

மேற்கண்டத் திட்டங்களுக்கு நிறைய பணம் தேவைப்படுகிறது. பலப்பல குழுக்களும் நிபுணர்களும் இத்திட்டங்களுக்குத் தேவைப்படும் பண அளவைக் கணக்கிட்டுள்ளனர். அகில இந்தியக் கிராமக்கடன் மறு ஆய்வுக்குழு (All India Rural Credit Review Committee) வின் தொழில்நுட்பக் குழுவினர் செய்துள்ள மதிப்பீட்டின்படி நான்காம் ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் (1970—74) விவசாயத் தேவைகளுக்கு உற்பத்திக் கடனுக ஆண்டுக்கு ரூபாய் இரண்டாயிரம் கோடியும், முதலீட்டுக் கடனுக ரூபாய் இரண்டாயிரம் கோடியும்—மத்திய காலக்கடன் ரூபாய் ஐநூறுகோடி; நீண்டகாலக் கடன் ரூபாய் ஆயிரத்து ஐநூறுகோடி வேண்டப்படும்.

கடந்த சில ஆண்டுகள் வரை வட்டிக் கடைக்காரர்களும் கூட்டுறவுச் சங்களும் மட்டுமே விவசாயக் கடன்களை அளித்து வந்தன. வளர்ந்து வரும் விவசாயத்துறைக்குத் தேவைப்படும் நிதிவசதி மிகப்பெருமளவாகவுள்ள இன்றைய நிலையில், கூட்டுறவுத்துறையும் பிறவகையினரும் கொடுக்கும் கடன் ஓரளவுக்கு மட்டுமே தேவையை நிறைவு செய்கிறது. உற்பத்தித்திறனைப் பெருக்கவும், புதுத்திட்டங்களைச் செயல்படுத்தவும் விவசாயத் துறைக்கு வணிகவங்கிகளும் பேரளவில் கடன்வசதிகள் அளித்து உதவவேண்டும் என்ற கொள்கை எல்லா வங்கிகளாலும் ஏற்கப்பட்டுவிட்டது. வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டது முதல் அவை விவசாயக்கடன் வழங்குவதில் பெரும் ஈடுபாடுடையனவாகக் காணப்படுகின்றன.

விவசாயிகளுக்குத் தேவைப்படும் கடன்களைக் காலவரையறைப்படி குறுகிய கால, மத்தியகால, நீண்டகாலக் கடன்கள் என்று பிரிப்பது வழக்கம். வணிகவங்கிகள் நீண்டகாலக் கடன்கள், அதாவது ஏழாண்டுகட்கும் அதற்கு மேற்பட்டும் தரப்படும் கடன்கள் நீங்கலாக, மற்ற இருவகைக் கடன்களை அளிக்கின்றனர்.

பயிர்க்கடன் (Crop Loan)

குறுகியக் காலக்கடன்

இக்கடன் ஆறுமுதல் பதினெட்டு மாதங்களுக்குத் தரப்படுவதாகும் விதைகள், உரம், பூச்சிக்கொல்லி மருந்துமுதலியன வாங்கவும், விவசாயக்கருவிகள் — கலப்பை, தெளிப்பு இயந்திரம் போன்றன - வாங்கவும் இக்கடன் பயன்படுத்தப்படும். அறுவடை முடிந்ததும் இக்கடன் திருப்பிச் செலுத்தப் படவேண்டும். தக்க உத்தரவாதத்தின் பேரில் இக்கடன் கொடுக்கப்படும். குறிப்பிட்ட தொகைக்கு மேல் கடன் தேவைப்பட்டால், நிலத்தை அடைமானமாக வங்கியர் பெற்றுக் கொள்ளவேண்டும். எவ்வளவு கடன் கொடுப்பது என்பது விவசாயி பயிர் செய்யவிருக்கும் நிலத்தின் பரப்பு, நிலத்தில் இடப்போகும் உர அளவு, பயிரின் தன்மை போன்ற செய்திகளைப் பொறுத்திருக்கிறது. கடனுக்குப் பிணையாக வளரும் பயிரை ஏற்றுக் கொள்ளுவதே தற்கால வங்கிகள் கடைப் பிடிக்கும் முறையாகும்.

கடனைத் திருப்பிச் செலுத்தும் திறன் (repaying capacity) விவசாயிக்கு எந்த அளவில் உள்ளது என்பதை ஆராய்ந்து அந்த அடிப்படையில் கடன் வழங்கப்படுகிறது. பயிர் விதைக்கும் காலத்திலிருந்து கடன் வழங்கப்படும். கடனில் ஒருபகுதி பணமாகவும், ஒருபகுதி பொருளாகவும் உரம், விதை, பூச்சிக்கொல்லி மருந்து முதலியன—கொடுக்கப்படுவதுண்டு. எந்தப் பயிரிடுவதற்குக் கடனளிக்கப்பட்டதோ அப்பயிர் அறுவடையாகி விற்பனை செய்யப்பட்டதும் கடனை அடைத்துவிடவேண்டும். அறுவடை செய்த நாளிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் கடனை அடைக்கும்படி வங்கியர் வேண்டுவர்.

மத்தியகாலக் கடன்

மூன்று முதல் ஏழு ஆண்டுகள் வரை கொடுக்கப்படும் கடன்களை மத்தியகாலக் கடன் என்பர். மோட்டார் பம்புசெட், தெளிப்புக்கருவி, விசைக்கலப்பை, டிராக்டர் போன்ற விவசாய இயந்திரசாதனங்கள் வாங்கவும், கிணறுகளைத் தோண்டவும் ஆழப்படுத்தவும், குழாய்க்கிணறுகள் அமைக்கவும், நீர்ப்பாசனத்திற்கு வாய்க்கால் வெட்டுதல் நிலத்தைச் சமப்படுத்தல் போன்ற செயல்களை மேற்கொள்ளவும் மத்தியகாலக்கடன் கோரப்படுகிறது.

மத்திய காலக் கடனுக்குப் பிணையாக விவசாயியின் நிலத்தை அடைமானமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். கடன்

விவசாய இயந்திரசாதனங்கள் வாங்குவதற்குத் தரப்பட்டிருந்தால் கடன் தீரும்வரை அவற்றை வங்கியரிடம் அடகு வைத்திருப்பதாகக் கடிதம் எழுதி வாங்கிக் கொள்ள வேண்டும். இந்த சாதனங்களுக்கான விலை நேரடியாக விற்பனையாளருக்கு அனுப்பப்படுவது வழக்கம். வங்கியர் இச்சாதனங்களின் விலை 75 விழுக்காட்டையே கடனாகத்தருவர். மீதி 25 விழுக்காடு கடன்கோரும் விவசாயி முதலீடு செய்யவேண்டும். இயந்திரங்கள் காப்பீடு செய்யப் படவேண்டும். டிராக்டர் வாங்க கடனளித்திருந்தால் வங்கியர் டிராக்டரைத் தம் பெயரைப் பதிவுச்சான்றில் (Registration Certificate) நிதி வசதியளித்தவர் என்றமுறையில் பதிவு செய்து கொள்ளவேண்டும். மண்டல போக்குவரத்து அலுவலகத்தில் டிராக்டரைப் பதிவு செய்ய வேண்டும். பல்வகை நட்டங்களைத் தாங்குமாறு காப்புறுதி செய்யவேண்டும்.

நீர்ப்பாசன வசதியை மிகுதிப்படுத்த கடன் கோரப்பட்டால் வங்கியர் குறிப்பிட்ட இடத்தில் அவ்வசதியை மிகுதிப்படுத்த முடியுமா, இவ்வசதி பெற்றால் விளைச்சல் கூடுதலாகுமா, விளைச்சல் கூடுதலானால் அதைவிற்றுத் தாமளிக்கும் கடனை அடைத்து விடப் போதுமான பணம் கிடைக்குமா என்றெல்லாம் கவனிக்க வேண்டும். குழாய்க் கிணறு தோண்டுவதாக இருந்தால், அத் துறையில் உள்ள தொழில் நுட்ப வல்லுநர்களிடம் அவ்விடத்தில் நீர்மட்டம் காணப்படுகிறது; குழாய் இறக்குவது பயனளிக்கும் என்று சான்றுறுதி வாங்கித் தருமாறு கடன் கேட்பவரைக் கோர வேண்டும்.

குறித்தத் தவணைப்படி கடனை திருப்பிச் செலுத்துபவர்களுக்கு வட்டியில் ½ விழுக்காடு தள்ளுபடியளிப்பது வங்கியர் வழக்கமாகும்.

மறைமுகக் கடன்வசதிகள்

மேற்கூறியவாறு நேரடிக்கடன்கள் விவசாயிகளுக்கு அளிப்பது மட்டுமின்றி மறைமுகமாகவும் வங்கிகள் விவசாயத்துறைக்குக் கடன் கொடுப்பதுண்டு. அவையாவன :

(i) விவசாயக் கருவிகள், இயந்திரங்கள் வாடகைக் கொள் முறையில் விற்க பணவசதியளிப்பது;

(ii) விவசாய வசதிக்காக மின்வசதி ஏற்படுத்தித்தர மின்சார வாரியங்களுக்குக் கடன் வழங்குவது;

(iii) சரக்குகளைப் பாதுகாவலாக வைத்திருக்க பண்டகம், கிடங்கு முதலியன கட்டக்கடன் தருவது.

(iv) விவசாயப் பணிமனை (Agro Services Centre) கள் ஏற்படுத்த கடன் வழங்குவது;

(v) கூட்டுறவு விற்பனைச் சங்கம், விவசாயக் கடன் கூட்டுரு, விவசாய நிதிக் கூட்டுரு போன்ற நிலையங்களுக்குக் கடன் வழங்குவது;

(vi) உரம், விதை முதலியன வழங்குவோர்க்குக் கடன் வசதியளித்தல்.

பயிர்த்தொழிலுக்கு மட்டுமல்லாமல் அதைச் சார்ந்த கால்நடை வளர்ப்பு, பால்பண்ணை போன்ற தொழில்களுக்கும் வணிக வங்கிகள் கடன் தருகின்றன. இக்கடன் ஐந்து முதல் ஏழாண்டுகளில் குறிப்பிட்ட தவணைப்படி திருப்பிச் செலுத்தப் படவேண்டும். பால், முட்டை, மீன் முதலியன விரைவில் கெட்டுவிடக்கூடிய பொருள்களாகையால் அவற்றை உடனுக்குடன் விற்றுவிடக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளனவா என்று வங்கியர் கவனிக்க வேண்டும்.

விவசாய நிதிக் கூட்டுரு (Agricultural Finance Corporotion)

பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகள் சேர்ந்து விவசாயத் துறைக்கு நிதிவசதி அளிக்க விவசாய நிதிக் கூட்டுருவை ஏற்படுத்தியுள்ளன. விவசாயத்தைச் சார்ந்த பல்வேறு தேவைகளுக்கு நிதிவசதி அளிப்பதே இதன் நோக்கமாகும். விதை, உரம், பண்டகங்கள் கட்டுதல், விளைபொருள்களை இடமாற்றம் செய்தல், விவசாயத்தில் புதுமுறைகளைக் கையாளுதல், மீன்வளம், கோழிப்பண்ணை முதலியவற்றிற்குக் கடன் அளிக்கப்படுகிறது. வணிக வங்கிகள் இத்துறைகளுக்குக் கடன் தருவதற்கு வேண்டிய உதவிகளையும் விவசாய நிதிக்கூட்டுரு செய்கிறது.

விவசாயமறுநிதிக் கூட்டுரு (Agricultural Refinance Corporation)

ரிசர்வு வங்கி, மாநில நிலவள வங்கிகள், மாநில கூட்டுறவு வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு, பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகள் ஆகிய நிலையங்கள் சேர்ந்து விவசாய மறுநிதிக் கூட்டுருவை நிறுவியுள்ளன. பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகள், மாநில கூட்டுறவு வங்கிகள், மாநில நிலவள வங்கிகள் ஆகியவை விவசாய வளர்ச்சிக்குக் கொடுக்கும் மத்திய, நீண்டகாலக் கடன்களுக்கு இக்கூட்டுரு மறுநிதி வசதியளிக்கும். நில மீட்பு, நிலப் பாதுகாப்பு, தோட்டக்கால், இயந்திரங்கள் வாங்குதல், கோழிப்பண்ணை, மீன் வளர்ச்சி, கால்நடைப் பெருக்கம் முதலிய நோக்கங்களுக்கு மறுநிதியளிக்கப்படுகிறது,

மறுநிதி பெறும் முறை

முதல் நிலையில் கடனளித்த வங்கிக்குக் கொடுக்கப்பட்ட பிணைகளைக் கூட்டுருவிற்குக் கீழ் அடகு (Sub hypothecation) அல்லது கீழ் அடைமானம் (Sub mortgage) செய்து கொடுக்க வேண்டும்; அல்லது கடன் கொடுக்கும் வங்கிக்கும் கூட்டுருவிற்கும் சேர்ந்து கூட்டாகப் பிணையை அடகு அல்லது அடைமானம் வைக்கலாம். பிணையின் மதிப்பில் 50 விழுக்காடு அளவுக்கு மறுநிதி வசதி கிடைக்கும். கூட்டுரு (Corporation) அரசினர் உத்தரவாதத்தை ஏற்றுக் கொண்டும் மறுநிதி வசதியளிப்பதுண்டு. கூட்டுரு, தொழில் நுட்ப வல்லுநர்கள் துணைகொண்டு திட்டங்களின் கைகூடல் தன்மையையும், பொருளாதாரத் திண்மையையும் பரிசீலித்து பின்னரே மறுநிதி வசதி அளிக்க ஒப்பும். திட்டம் சரிவர செயல்பட்டு வருகிறதா என்றும் கண்காணித்து வரும்.

17. வங்கியரின் பிற பணிகள்

பொதுமக்களிடமிருந்து பணத்தை வைப்புக்களாகப் பெற்று அப்பணத்தைக் கடன் கோரும் நபர்களுக்கு அளிப்பதும், வைப்புத் தொகைமீது வாடிக்கையர் விடுக்கும் காசோலையை மதிப்பதுமே வங்கியரின் முக்கிய பணி என்றாலும் இந்நாளைய வங்கியர் எண்ணிலடங்காப் பிற பணிகளைப் புரிந்து சமுதாயத்துக்கு நன்மை செய்கிறார். பணம் அனுப்புகை, பாதுகாப்புப் பெட்டக வைப்பு, முகமைப்பணி (Agency Service), பொறுப்புரிமையர் நிறைவேற்றாளர் பணி போன்ற பற்பல வசதிகளை மக்களுக்குச் செய்து தம்மை மேலும் பயனுடையவராக ஆக்கிக் கொள்ளுகிறார். வைப்புக்களைத் திரட்டுவதில் கடும் போட்டி நிலவும் இன்றைய உலகில், ஒவ்வொரு வங்கியும் மக்களைத் தம்பால் ஈர்க்க, பற்பல பொதுப் பயன் பணிகளை மேற்கொள்ளுகின்றது.

முதலாவதாக வங்கியர் அளிக்கும் பொதுப்பயன் பணி (General Utility Service)களைக் காண்போம்.

அனுப்புகை வசதிகள் (Remittance facilities)

ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் பணமனுப்ப மிகச் சிக்கனமான எளிய முறை வங்கியர் மூலம் அனுப்புவதேயாகும். பணமனுப்புவதில் வங்கியர் மூன்று முறைகளைக் கையாளுகின்றனர். அவை: கேட்புப் பணவிடை (Demand Draft), அஞ்சல் மாற்றம் (Mail Transfer), தந்திவழி (Telegraphic Transfer) என்பனவாகும்.

கேட்புப் பணவிடை (Demand Draft)

ஆங்கிலத்தில் இதனைச் சுருக்கமாக D. D. என்று குறிப்பிடுவது வழக்கம். கோரியதும் உத்தரவுப்படி பணஞ்செலுத்துமாறு

வங்கியொன்றின் அலுவலகம் அதே வங்கியின் மற்ெருரு அலுவலகத்தின் மீது எழுதும் உத்தரவே கேட்புப் பணவிடை எனப்படும். பணவிடை குறிப்பிட்ட பெறுபவரின் உத்தரவுப்படி தான் செலுத்தப்படும்படி எழுதப்பட வேண்டும்; கொணர்பவருக்குச் செலுத்தும்படி எழுதப்படலாகாது.

வாடிக்கையர் மட்டுமல்லாது பிறரும் வங்கியரிடமிருது பணவிடை வாங்கலாம். பணவிடை வேண்டுபவர் தமது பெயர், முகவரி, தொகை, பெறுவோர் பெயர், எந்த கிளை மீது பணவிடை வேண்டும், என்ற செய்திகளை அதற்கான ஏற்பாட்டை சீட்டில் குறித்துக் கையெழுத்திட்டு, பணவிடைக் கட்டணத்தையும் பணவிடைத் தொகையையும் வங்கியரிடம் கொடுக்கவேண்டும். வங்கியர் அளிக்கும் பணவிடையைப் பாதுகாப்பாக அனுப்பும் பொருட்டு அதை வாங்குபவர் பணவிடையைக் கீறி, (Cross) பெறுபவருக்கு பதிவஞ்சலில் (Registered post) அனுப்பி வைப்பார். பணவிடையை அளித்த வங்கி, எந்தக்கிளையின் மீது எழுதப்பட்டதோ அக்கிளைக்குத் தாம் அளித்த பணவிடை பற்றிய விவரங்களை அறிவிக்கும்.

பணவிடை மீது பணங்கொடுக்கும் வங்கியர் முறைப்படி செலுத்தம் (Payment in due course) செய்தால் சட்டம் அளிக்கும் பாதுகாப்பைப் பெறலாம் என்று முன்னரே கண்டுள்ளோம். எனவே வங்கியர் பணத்தைச் செலுத்துமுன் பெறுபவர் மேலெழுத்து சரியான முறையிலுள்ளதா என்று கவனிக்க வேண்டும். பணவிடை குறிப்பிட்ட காலத்திற்குள் பணமாக மாற்றப்பட வேண்டுமென நிபந்தனையிருபதில்லையெனினும் ஆறுமாதங்கள் கழித்துக் கொடுக்கப்பட்டால் அதைச் செல்லுமென உறுதியளிக்க எழுதிய வங்கியரைக் கோருவது வழக்கம். வெகுகாலத்திற்குப் பணவிடை மாற்றப்படாமலிருப்பின், வங்கியர் பணவிடை வாங்கியவரைக் கண்டு அதை (பணவிடையை) க் கொடுத்து மாற்றிக் கொள்ள வேண்டுவர்.

பணவிடை காணுமற் போனல் அதை வாங்கியவர் எழுதிக் கொடுத்த வங்கியரை அணுகி செய்தி தெரிவிக்க வேண்டும். அவ் வங்கியர் பெயரவர் கிளை (drawee branch) க்குப் பணவிடை காணுமற் போன செய்தியைத் தெரிவித்து அது கொடுக்கப்பட்டால் பணஞ் செலுத்த வேண்டாமென தெரிவிக்க வேண்டும். மாற்றுப் படி (Duplicate) எழுதித் தருமுன், பணவிடை வாங்கியவரை ஈட்டுறுதிப் பத்திரம் (indemnity bond) எழுதித் தருமாறு வேண்டுவர். பணவிடை வாங்கியவர் அதை ரத்து செய்து பணத்தைத் திருப்பிக்

கொடுத்து விடுமாறு கோரினுல், வங்கியர் தக்க எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும். பணவிடையை வங்கியரிடம் வரையுரிமை விடுப்பு (Surrender) செய்ய வேண்டும்; பணவிடை மீது மேலெழுத்து ஏதுமிருக்கலாகாது. வரையுரிமை விடுப்பு செய்ய வேண்டி கொடுக்கப்பட்ட பணவிடை முறைமாற்றம் செய்யப் பட்டது போல் தோன்றினுல் வங்கியர் அதை ரத்து செய்யாது, அதை வாங்கியவரை வங்கிக் கணக்கு மூலம் வசூல் செய்து கொள்ளும்படி அறிவுறுத்த வேண்டும்.

அஞ்சல் மாற்றம் (Mail Transfer) M.T. என்று சுருக்கமாக அறியப்படும் பணஞ் செலுத்து முறை அஞ்சல் வழி செய்யப்படுகிறது. விண்ணப்பதாரரின் வேண்டுகோளின் பேரில் வங்கியின் கிளையொன்று அதே வங்கியின் மற்றொரு கிளைக்குப் பணஞ் செலுத்துகை செய்தமை பற்றிய அறிவித்தலே (advice) அஞ்சல் மாற்றம் என்பர். பணம் செலுத்துபவர் பெயர், செலுத்தப் பெறுபவர் பெயர், முகவரி, கணக்கு விவரங்கள் முதலிய செய்திகளை அஞ்சல் மாற்றச் சீட்டில் காணலாம். வங்கியர் பெயரவர் கிளைக்கு, அஞ்சல் மாற்றம் பற்றி அறிவித்தல் கடிதம் (Letter of advice) அனுப்புவார். இக்கடிதம் போய் சேராவிட்டால், பணம் அனுப்பிய நபர் வங்கியரிடம் தெரிவித்தபின், மறுபடியும் அஞ்சல் மாற்றம் பற்றிய விவரங்களைப் பெயரவர் கிளைக்கு அனுப்பி, தொகையைக் கணக்கில் வரவுவைக்கும்படி அறிவித்தல் செய்வார். பணங்கொடுக்கும் வங்கி மிக உன்னிப்பாகப் பணம் முன்னரே செலுத்தப்பட்டு விட்டதா எனக் கவனித்து, பிறகு அஞ்சல் மாற்ற அறிவித்தல்படி பணம் செலுத்தும்.

தந்திவழி மாற்றம் [Telegraphic Transfer(T.T)]

மிக விரைவாகப் பணத்தை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்ற, தந்திவழி மாற்றம் பயன் படுகிறது. பணமனுப்பும் கிளை, தந்திவழி குறிப்பிட்ட நபருக்கு குறிப்பிட்டத் தொகையை செலுத்துமாறு செய்தியனுப்பும். இச்செய்தி ரகசிய எழுத்துக்கள் மூலம் அனுப்பப்படும். இந்த ரகசிய எழுத்துக்களில் மறைந்துள்ள உண்மைச் செய்தி, வங்கியின் அதிகாரம் பெற்ற அலுவலர்களுக்கு மட்டுமே தெரியும் வகையில், ரகசிய எழுத்துக்களுக்குப் பின்னுள்ள செய்தியைத் தெரிவிக்கும் புத்தகம் அவர்கள் கைவசம் இருக்கும்.

தந்திவழி மாற்றம் செய்தவுடன் வங்கியர் கடிதவழி தாம் அனுப்பிய செய்தியை உறுதிப்படுத்துவார். செய்தி பெறும் வங்கியர், தந்திச்செய்தியைக் கடிதச் செய்தியுடன் ஒப்பிட்டு

மேலும் நடவடிக்கைகளை மேற்கொள்வார். கடிதத் செய்தி கிடைத்தமைக்கு வங்கியர் விடை எழுதுவது மிக அவசியம்.

தந்திவழி மாற்ற விண்ணப்பம் அனுப்புபவர் பெயர், முகவரி, பெறுபவர் பெயர், முகவரி, கணக்கின் விவரங்கள், அனுப்பப்படும் தொகை, சாதாரணத் தந்தி அல்லது விரைவுத் தந்தி போன்ற செய்திகளைக் கொண்டிருக்கும். தந்திவழி மாற்றம் செய்யப்பட்ட பணத்தைப் பெறவேண்டியவர் கணக்கில் வரவுவைப்பர். வாடிக்கையரல்லாத பிற நபருக்குப் பணம் அனுப்பப்பட்டால் தக்க அடையாளங்காட்டல் படி பணம் பெற வேண்டியவருக்கு வங்கியர் பணஞ் செலுத்துவார். தந்திவழி மாற்ற ரசீது இரண்டு நகல்கள் கொண்டிருக்கும். பணம் பெறுபவர் இரண்டிலும் கையொப்பமிட வேண்டும். ஒன்று பணம் கொடுக்கும் கிளையில் வைத்திருக்கப்படும்; மற்றது தந்திவழி மாற்றம் அனுப்பிய கிளைக்கு மாற்றுப்படி (duplicate) அனுப்பி வைக்கப்படும்.

பயணக் காசோலை (Travellers cheque) வெளியிடுதல்

பயணம் செய்பவர்கள் பணத்தைக் கையிலெடுத்துச் செல்வத்தைத் தவிர்க்க வகை செய்வது பயணக் காசோலை. போகுமிடங்களிலெல்லாம் இக்காசோலைகளை அதை வெளியிட்ட வங்கிகளின் கிளைகளிலோ அல்லது ஏற்பாடுகளின்படி பிற வங்கிகளின் கிளைகளிலோ பணமாக மாற்றிக்கொள்வது மிக எளிது, இதை வாங்குபவர், வங்கியரிடம் தனது பெயர், முகவரி, எந்த இனத்தில் (நூறு ரூபாய் அல்லது ஐம்பது அல்லது இருபத்தைந்து அல்லது பத்து ரூபாய்) வேண்டும் என்றெல்லாம் குறித்து விண்ணப்பத்துடன் காசோலைக்கான தொகையையும் செலுத்த வேண்டும்.

பயணக் காசோலையில் அதை வாங்குபவர் கையொப்பமிடுவதற்கு இரண்டு இடங்கள் காணப்படும். அவற்றில் ஒரு இடத்தில் காசோலைகளை வாங்கும் பொழுது வங்கியர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும். மற்றொரு இடத்தில் காசோலையைப் பணமாக மாற்றும் வங்கியர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும். இந்த இருகையொப்பங்களும் ஒற்றுமையாக அமைந்தால் தான் பணம் கொடுக்கும் வங்கியர் காசோலையை மாற்றித்தருவார்.

பயணக் காசோலையை ஒருவர் தொலைத்து விடுகிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் பாடு என்னவது? அதை வாங்கியவர் உடனே அதை வெளியிட்ட வங்கிக்கு எல்லா விவரங்களுடனும் தெரிவிக்க வேண்டும். ஈட்டுறுதிப் பத்திரம் ஒன்று காசோலையை வாங்கியவரிடம் எழுதிப்பெற்றுக் கொண்டு, தொலைந்து போன

காசோலைகளுக்கான தொகையை வெளியிட்ட வங்கி கொடுத்து விடும். தொலைந்து போன காசோலைக்கு மாற்றுப்படி காசோலை வழங்கப்படாது.

நாணய அட்டை

அண்மையில் வங்கிகள் நாணய அட்டை (Credit Card) களை வெளியிட்டு வருகின்றன. அடிக்கடி பயணஞ் செல்லும் வாடிக்கையருக்கு இது பயனளிக்கிறது. குறிப்பிட்டத் தொகைவரை இந் நாணய அட்டை வைத்திருப்பவர் அதை வெளியிட்ட வங்கியின் எந்தக் கிளையிலும் காசோலைகளைப் பணமாக மாற்றிப்பெற முடியும்.

பாதுகாப்பு வைப்பு (Safe Custody Deposit)

விலைமதிப்புள்ள நகை, பிணையங்கள், சொத்துரிமை ஆவணங்கள் முதலியவற்றைப் பாதுகாவலாக வைக்க அவற்றைப் பெட்டியொன்றிலிட்டு வங்கியரிடம் கொடுத்து வைப்பதுண்டு. இங்ஙனம் தரப்படும் பெட்டிகளை உறுதியான இரும்பு அறைகளில் வைத்து அவற்றை மிகவும் பாதுகாப்பாக வங்கியர் வைத்திருந்து, பின்னர் வாடிக்கையர் கேட்கும் போது திருப்பித் தருவார். இந்த இரும்பு அறைகளைப் பாதுகாப்புப் பெட்டகம் (Safe Deposit vault or Safe custody vault) என்று குறிப்பிடுவர். களவு, தீ போன்ற தீங்குகளிலிருந்து தப்ப இந்த ஏற்பாடு மிகவும் பயனுள்ளதாக அமைகிறது.

காவலாக வைக்கப்படும் பொருளை அரக்கு முத்திரையிடப்பட்ட பெட்டியிலோ அல்லது உறையிலோ இட்டு, வெளிப்புறத்தில் வாடிக்கையர் தமது பெயரைக் குறித்து வைப்பார்.

காவல் வைப்புத் தொழில் நடத்தும் வங்கியர் தமது வாடிக்கையருடன் செய்து கொள்ளும் ஒப்பந்தம் ஒப்படைவு (bail ment) எனப்படும். இந்திய ஒப்பந்தச் சட்டப்படி ஒருவர் மற்றொருவருடன் குறித்த நோக்கத்துடன் சில சாமான்களை, அந்நோக்கம் நிறைவேறியவுடன் திரும்பவும் கொடுத்துவிட வேண்டும் அல்லது தாம் ஏவுகின்றபடி தரப்பட வேண்டுமென்ற ஒப்பந்தத்தின்மீது ஒப்படைத்தல் ஒப்படைவு எனப்படும். ஒப்படைவு ஒப்பந்தத்தின் பேரில் சாமான்களை மற்றவரிடம் ஒப்படைக்கும் தரப்பினர் ஒப்படை செய்பவர் (bailor) எனப்படுவர். ஒப்படையாகச் சாமான்கள் ஒப்படைக்கப்பட்டவர் ஒப்படை பெறுபவர் (bailee) எனப்படுவர். காவல் வைப்பு நடவடிக்கையில் வங்கியர் ஒப்படை பெறுபவர் என்ற நிலையிலும், வாடிக்கையர் ஒப்படை செய்பவர் என்ற நிலையிலும் உள்ளனர்.

வங்கியரின் கடமைகள்

சாதாரணமாக ஒருநபர் தம் சாமான்களை எவ்வளவு உன்னிப்பாகக் காவலில் வைத்திருப்பாரோ அவ்வளவு கவனத்துடன் வங்கியர் நடந்துகொள்ள வேண்டும்.

காவல் வைப்புக்குத் தரப்படும் பொருளை வங்கியர் எதற்கும் பயன்படுத்தலாகாது.

காவல் வைப்புக்குத் தரப்பட்ட பொருளை வாடிக்கையர் திருப்பிக்கேட்கும் போதுதான் வங்கியர் தரக்கடமைப்பட்டவர்.

ஒப்படைவு செய்யப்பட்டப் பொருள்கள்மீது கிடைக்கக் கூடிய வருமானம் அல்லது ஆதாயம் உதாரணமாக, பங்குச் சீட்டுகளின்மீது கிடைக்கும் இலாபஈவு; கடன் பத்திரத்தின்மீது கிடைக்கும் வட்டி வாடிக்கையர் உத்தரவுப்படி அவர் கணக்கில் வரவு வைக்கப்படவோ அல்லது அவருக்குச் செலுத்தப்படவோ வேண்டும்.

தக்கமுறையில் அறிமுகம் செய்யப்பட்ட நபர்களுக்கும், வாடிக்கையராகப் பழக்கமுள்ள நபர்களுக்கும் காவல் வைப்பு வசதிகளை வங்கியர் தருகின்றனர். தனி நபர்கள் மட்டுமல்லாமல், கூட்டாகச் சில நபர்களும், கூட்டாண்மை நிறுவனங்களும், நிறுமங்களும் (கம்பெனிகளும்), பொறுப்புரிமை அமைப்புக்களும் (Trusts) காவல் வைப்பு வசதிகளைக் கோருவதுண்டு. இவ்வகை வாடிக்கையருக்குக் காவல் வைப்பு வசதியளிக்குமுன், எவருக்குச் சொத்தைக் காவல் வைப்பில் வைத்திருக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளது, எவரிடம் சொத்துக்களைத் திருப்பித்தருவது போன்ற விவரங்களை விளக்கமாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

பூட்டி முத்திரையிடப்பட்டப் பெட்டிகளை வங்கியர் காவல் வைப்பில் ஏற்றுக்கொள்ளும்போது பெட்டியில் என்ன பொருள் உள்ளதென்பதை அறியார். ஆகவே 'உள்ளிருப்பன அறியோம்' (Contents unknown) என்று பெட்டியின் முகப்பில் எழுத வேண்டும். பெட்டியிலுள்ள பொருள்களை அடிக்கடி எடுத்து மாற்றி வைக்க வங்கியர் வாடிக்கையரை அனுமதிப்பதில்லை. வேண்டுமென்றால் வாடிக்கையர் காவலிலிருந்து பெட்டியைத் திருப்பி எடுத்துக்கொண்டு பின்னர் மறுபடியும் பெட்டியைக் காவல் வைப்பில் வைக்கலாம்.

உயில் (Will) அல்லது முத்திரையிடப்பட்ட உறையில் உயில் ஒன்றை வாடிக்கையர் தாம் இறந்தபின் அது தம் சொத்தைப்

பராமரிக்கும் நிறைவேற்றுளரிடம் தரப்பட வேண்டுமென வங்கியரிடம் காவல் வைப்பாகக் கொடுக்கலாம். வாடிக்கையர் இறந்த பின், உயில் அல்லது உயில் உள்ள உறையை நிறைவேற்றுளர் யார் என்று கண்டுபிடித்து அவரிடம் சேர்க்க வேண்டுவது வங்கியர் கடமையாகும்.

காவல் வைப்பில் பொருள்களை வைக்கும் வாடிக்கையருக்கு வங்கியர் ரசீது ஒன்று தருவார். அந்த ரசீதைக் காட்டியே பொருளைத் திரும்பப்பெற முடியும். ரசீது காணுமற்போனுல் மாற்றுப்படி தரப்படுவதில்லை. தக்க ஈட்டுறுதி பெற்றுக் கொண்டு வங்கியர் பொருளைத் திருப்பிக் கொடுத்து விடுவார்.

பங்குகள், கடன்பத்திரங்கள் போன்ற பிணையங்களைக் காவல் வைப்பில் செலுத்தும் வாடிக்கையர் அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் திருப்பித் தருமாறு கோரலாம். அந்நிலையில், காவல் வைப்பு ரசீதுடன் ஒரு உடைமை ஒப்படைப்பு உத்தரவினையும் (Delivery Order) வங்கியரிடம் கொடுக்க வேண்டும். திருப்பித் தரப்பட்ட பொருள்களை நீக்கிவிட்டு வங்கியர் ரசீதை வாடிக்கையரிடம் திருப்பித் தந்து விடுவார்.

பெரும்பாலும், பொருள்களைக் காவல் வைப்பில் செலுத்திய நபரே அதைத் திரும்பி எடுத்துக் கொள்ளுவார். ஆனுல் அதிகாரம் பெற்ற மூன்ருெம் நபரொருவர் பொருளைத் தம்மிடம் தரும்படி வேண்டினுல் வங்கியர் மிகவும் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும். காவல் வைப்பு ரசீது சரியான முறையில் தீர்த்தல் (discharge) செய்யப்பட வேண்டும்; பொருளை மூன்ருெம் நபருக்குத் தரும்படி வாடிக்கையர் கையொப்பமிட்ட அதிகாரமளிக்கும் கடிதம் தரப்பட்டிருக்க வேண்டும்: பொருளைக் கோரும் நபர் பற்றி வங்கியருக்கு ஐயமேதும் இருக்கக் கூடாது. மூன்ருெம் நபரிடம் பொருளை ஒப்படைத்தச் செய்தியை வாடிக்கையருக்குத் தெரிவிக்க வேண்டும்.

காவல்வைப்பு வைத்தவர் இறந்து போனுல், அவர் சட்டப் பிரதிநிதி (Legal representative) யிடம் பொருள்கள் திருப்பித் தரப்படும். இறந்தவர் சொத்துக்களை நிருவகிக்க நிறைவேற்றுளர் எவரும் நியமிக்கப்பட்டிருந்தால், அவரிடம் காவல்வைப்புப் பொருள்கள் திருப்பித் தரப்படும்.

பாதுகாப்புப் பெட்டகம் (Safe Deposit Vault)

வங்கிகள் தமது வாடிக்கையரின் பொருள்களைப் பாதுகாக்கத் தனி அறைகள் கட்டி வைப்பர். நல்ல இரும்புக் கதவுகளிட்ட

இந்த அறைகள் தீ, திருடு போன்ற நிகழ்ச்சிகளால் தீங்கு நேராமல் காக்க உதவுகின்றன. இந்த அறைகளில் பல அளவுகளில் பெட்டகங்கள் (lockers) அமைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு பெட்டகத்துக்கும் ஒரு தனிச் சாவியிருக்கும். அதை வாடகைக்கு எடுத்துக் கொள்ளும் நபரிடம் அச்சாவி கொடுக்கப்படும். ஒரு பெட்டகத்தைத் திறக்க இரண்டு சாவிகள் தேவைப்படும். ஒரு சாவி வாடகைக்கு எடுத்தவர் வசமிருக்கும். இதற்கு மாற்றுச் சாவி கிடையாது. இரண்டாவது சாவி அந்த வரிசையிலுள்ள எல்லா பெட்டகங்களுக்கும் பொதுவானது. அச்சாவியைக் காப்பாளர் சாவி என்பர். இச் சாவி வங்கியர் வசமிருக்கும். முதலில் காப்பாளர் சாவிபோட வேண்டும். அடுத்து வாடகைக்கு எடுத்தவர் சாவி போட்டுத்தான் பெட்டகத்தைத் திறக்க முடியும். திறந்த பெட்டகத்தைப் பூட்ட வாடகைக்கு எடுத்தவர் சாவியைக் கொண்டு தான் பூட்ட முடியும். எனவே வாடிக்கையர் முழுப் பாதுகாப்புடன் பெட்டகத்தைப் பயன்படுத்தலாம்.

பெட்டகத்தை வாடகைக்கு எடுத்துக் கொள்ள விரும்புபவர் வங்கியருடன் வாடகை ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். முத்திரையிட்ட தாளில் இவ்வொப்பந்தம் எழுதப்பட வேண்டும். பெட்டகத்தையொட்டிய எல்லா விவரங்களும் இதில் காணப்படும். வாடகைக்கு எடுப்பவர் பெயர், முகவரி, கையொப்பம் போன்ற செய்திகளையும் வங்கியர் பெற்றுக் கொள்ளுவார். வாடகைப் பணம் பெட்டகத்தின் அளவைப் பொறுத்தது.

வாடகையாளர் (Hirer) தமக்குத் தரப்பட்ட சாவியைத் தொலைத்துவிட்டால், பெட்டகத்தை அறுத்துத் தான் திறக்க வேண்டும். வாடகையாளர் முன்னிலையில் இதைச் செய்யவேண்டும். இதற்கான செலவை வாடகையாளர் ஏற்க வேண்டும்.

பெட்டகத்தைச் சோதனைபோட அரசு அதிகாரிகள் வந்தால் வங்கியர் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். வாடகையாளரும் சோதனை போடுபவர்களோடு வந்திருப்பின் தொல்லையில்லை. ஆனால் சோதனை போடவந்த அதிகாரிகளுக்கு வாடகையாளரில்லாமலும் பெட்டகத்தைச் சோதனைபோட உத்தரவிடப்பட்டிருந்தால் வங்கியர் தமது வழக்கறிஞர் ஆலோசனைப்படி நடக்க வேண்டும்.

வங்கியர் ஒப்படைவு பெற்றவர் என்ற நிலையிலிருப்பதால், தமது காவல் கடமையைக் கவனமாகச் செய்யவேண்டும். வங்கியர் கவனமின்மையால் நட்டம், இழப்பு அல்லது தீங்கு ஏதும் வாடிக்கையருக்கு ஏற்பட்டால் அதை ஈடுசெய்ய நேரும். தம்மீது

பழிவராமலிருக்க வங்கியர் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். முக்கியமாக, பெட்டகத்தைப் பிறர் கையாளாமலிருப்பது, திருப்பிச் சேர்க்கும் பொழுது பொருளை எவரிடம் கொடுப்பது போன்ற செய்திகளில் விழிப்பாக இருத்தல் நலம்.

வாணிக உறுதிக் கடிதம் (Letter of Credit)

வணிக மேம்பாட்டுக்கு வங்கியர் புரியும் மற்றோர் பெரும் பணி, வாணிக உறுதிக் கடிதம் வெளியிடுவதாகும். இக்கடிதம் வெளியிடும் வங்கியர், அதிற் குறிக்கப்பட்ட நபர் விடுக்கும் காசோலை அல்லது எழுதும் மாற்றுச் சீட்டு, சில நிபந்தனைகட்கு உட்பட்டிருப்பின், மதிக்கப்படும் என்று உறுதியளிப்பார். இக் கடிதம் வாடிக்கையருக்கு வசதி தரும் பொருட்டு எழுதப்படுகிறது. இது வங்கியரின் முகவர் மீது அல்லது கடிதத்தொடர்பாளர் (Correspondent) மீது எழுதப்படுகிறது. எந்த அளவுத் தொகை வரைக்கும் உறுதி செல்லும் என்று கடிதத்தில் குறிக்கப்பட்டிருக்கும். சுருங்கக்கூறின், ஒரு வங்கியர் தமது வாடிக்கையரின் வசதிகருதி மற்றொரு வங்கியரைத் தம் வாடிக்கையர் விடுக்கும் காசோலை, மாற்றுச்சீட்டு முதலியவற்றை மதிக்கும்படி கோருவது வாணிக உறுதிக் கடிதத்தின் நோக்கமாகும். அங்ஙனம் மதிக்கப் பட்டக் காசோலை, மாற்றுச்சீட்டு முதலியவற்றிற்கானத் தொகையைத் தாம் செலுத்துவதாகக் கடிதத்தை வெளியிடும் வங்கியர் உறுதியளிக்கிறார்.

இக்கடிதத்தின் பயன்

அயல்நாட்டு வணிகத்தில், வாணிக உறுதிக் கடிதம் முக்கிய இடம் பெறுகிறது. ஏற்றுமதி, இறக்குமதி வணிகத்தில், சரக்கு குறிப்பிட்ட நபருக்குப் போய்ச் சேர பலவாரங்களாகின்றது. ஏற்றுமதியாளர், சரக்கு தம்மிடமிருந்து வெளிச் சென்றவுடன் பணம் தரப்படவேண்டுமென விரும்புவர். இறக்குமதியாளரோ சரக்கு தம் வசம் வந்து சேர்ந்தபின்னரே பணம்தர விரும்புவார். ஆனால் இவ்விரண்டு பேர்வழிகளுக்கும் மனநிறைவு தரும் வகையில் வாணிக உறுதிக்கடிதம் செயலாற்றுகிறது. உதாரணமாக, இந்தியாவிலுள்ள வணிகர் அமெரிக்காவிலிருந்து சரக்கு இறக்குமதி செய்வதாக வைத்துக் கொள்ளுவோம். இறக்குமதியர் தமது வங்கியரை அணுகி, வாணிக உறுதிக் கடிதம் அளிக்குமாறு வேண்டுவர். அக்கடிதத்தில் குறிக்கப்பட்டுள்ள தொகையளவுக்குள் அமெரிக்க ஏற்றுமதியர் எழுதும் மாற்றுச்சீட்டு (Bills of Exchange) களை ஏற்பதாக உறுதிக் கடிதம் அளிக்கும் வங்கியர் உறுதி கொடுப்

பதால், எவ்விதத் தயக்கமுமின்றி ஏற்றுமதிச் சரக்கைக் கப்பல்வழி அனுப்பலாம். அவர் இறக்குமதியர் மீது எழுதும் மாற்றுச்சீட்டு ஏற்கப்படுவதுதான் வங்கியரால் உறுதிசெய்யப் பட்டுவிட்டதே. எனவே அமெரிக்க வணிகர் தாம் எழுதிய மாற்றுச் சீட்டைத் தள்ளுபடி செய்து பணம் பெறுவார் அல்லது மாற்றுச்சீட்டை வசூல் செய்யும் பொருட்டுத் தம் (அமெரிக்க) வங்கியரிடம் கொடுப்பார். அமெரிக்க வங்கியர் மாற்றுச் சீட்டை இந்தியாவிலுள்ள தம் முகவருக்கு அனுப்பி அதை ஏற்கவோ அல்லது அதன்மீது பணஞ் செலுத்தும்படியோ வேண்டுவர். இப்பணியின் வழி, ஏற்றுமதி யரும் இறக்குமதியரும் தத்தம் பணத்தை வெகுநாட்களுக்கு முடக்கிப் போடாமல் தொழில் நடத்த வங்கியர் வகைசெய்வது தெள்ளிதின் விளங்கும்.

வாணிக உறுதிக் கடிதம் பலவகைப்படும். அவற்றுள் முக்கிய மான சிலவற்றைக் காண்போம்.

ஆவணஞ் சேர்ந்த வாணிக உறுதிக் கடிதம் (Documentary Letter of Credit)

வாணிக உறுதிக் கடிதத்தை வெளியிடும் வங்கியர், குறிப் பிட்டத் தொகைவரைக்கும் எழுதப்பட்ட மாற்றுச் சீட்டுகளை ஏற்க உறுதியளிக்கிறார் என்று படித்தோம். மாற்றுச் சீட்டுடன் சரக்குரிமை ஆவணங்களும் (சரக்குப்பட்டியல், கப்பல் ரசீது, காப்பீட்டுப் பாலிசி போன்றன) இணைக்கப்பட்டால்தான் மாற்றுச் சீட்டு ஏற்கப்படும் என்ற நிபந்தனையுடன் எழுதப்பட்ட கடிதம் ஆவணஞ் சேர்ந்த வாணிக உறுதிக் கடிதம் எனப்படும். அங்ஙனம் ஆவணங்களேதும் சேர்க்கப்படவேண்டும் என்ற நிபந்தனை அல்லது மற்ற எந்த நிபந்தனையும் இல்லாத கடிதம் வெற்று வாணிக உறுதிக் கடிதம் (Clean letter of Credit) எனப்படும்.

பின்னழிக்கக் கூடிய வாணிக உறுதிக் கடிதம் என்பது மற்றொரு வகை. இதை வெளியிடும் வங்கியர் தாம் அளிக்கும் உறுதியைத் தாம் விரும்பும் பொழுது ரத்து செய்துவிடலாம். ரத்து செய் வதற்கு முன்னர் ஏற்பட்ட நடவடிக்கைகளின்வழி உண்டான பொறுப்புக்களை மட்டுமே இவர் மதிப்பார். குறிப்பிட்டக் காலம் வரை வாணிக உறுதிக்கடிதம் ரத்து செய்யக்கூடா வகையில் வெளி யிடப்பட்டால், அதைப் பின்னழிக்கக்கூடா வாணிக உறுதிக்கடிதம் என்பர்.

சுழல் கடன் வசதி (Revolving Credit

கடன்வசதி குறிப்பிட்ட தொகைக்கு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் அளிக்கப்பட்டால் அக்காலம் முடிவடைந்ததும் மீண்டும்

புதியதொரு வாணிக உறுதிக் கடிதம் பெற வேண்டியிருக்கிறது. இதைத் தவிர்க்க வங்கியர் சுழல் கடன் வசதி அடிப்படையில் வாணிக உறுதிக்கடிதம் அளிப்பர். உதாரணமாக, சுழல் கடன் வசதி ரூ. 5,00,000 எனக் கொள்வோம். இதன் அடிப்படையில் ரூ. 1,50,000 மாற்றுச் சீட்டு எழுதப்பட்டு ஏற்கப்பட்டது என்றும் கொள்வோம். இம்மாற்றுச் சீட்டின் மீது பணங் கொடுக்கப்பட்டவுடன் சுழல் கடன் வசதி மறுபடியும் ரூ. 5,00,000 என்ற தொகைக்குக் கிடைக்கும்.

வாணிக உறுதிக் கடிதத்தின் பேரில் மாற்றுச் சீட்டு ஒன்றைப் புழக்கத்தில் கொண்டுவருமுன் வங்கியர் கீழ்க்கண்ட எச்சரிக்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் :

(i) விடுக்கப்பட்டுள்ள வாணிக உறுதிக்கடிதம், உண்மையான ஆவணம் தான் என்று, அதைக் கையொப்பமிட்டுள்ள வங்கியதிகாரியின் கையெழுத்தைச் சரிபார்த்து உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(ii) குறிப்பிட்டக் காலவரையறைக்கு விடுக்கப்பட்ட வாணிக உறுதிக் கடிதமானால், காலம் கடந்து போனதாக இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

(iii) வாணிக உறுதிக் கடிதத்தில் குறிக்கப்பட்ட தொகைக்கு மிகாத அளவுக்கே மாற்றுச் சீட்டுக்கள் எழுதி புழக்கத்தில் கொண்டு வரலாம். கடிதத்தில் குறிக்கப்பட்டத்தொகையில் எவ்வளவு தொகையளவுக்கு முன்னரே வசதிபயன் படுத்தப்பட்டுவிட்டது என்று அக்கடிதத்தின்பின் குறிக்கப் பட்டப் பதிவுகளின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

(iv) எந்த நிபந்தனைகளின் பேரில் வாணிக உறுதிக் கடிதம் விடுக்கப்பட்டது என்று உன்னிப்பாகக் கவனித்து அந் நிபந்தனைகளைச் சரிவர நிறைவேற்றவேண்டும். அப்படிச் செய்தால்தான் கடிதத்தை விடுத்த வங்கியர் பொறுப் பேற்பார்.

(v) வாணிக உறுதிக்கடிதம் எந்த நபர் பெயரில் விடுக்கப் பட்டுள்ளதோ அந்த நபர் பெயரில்தான் மாற்றுச் சீட்டு எழுதப்பட்டுப் புழக்கத்தில் கொண்டு வரப்படவேண்டும்.

வாடிக்கையர் நிதிநிலை பற்றிய மதிப்பீடு

தற்கால வங்கியர் புரியும் பற்பல பணிகளில் அவரது வாடிக்கையர் பற்றிய நிதிநிலை, நாணயம், வணிக உலகில் பெற்றுள்ள

மதிப்பு முதலிய செய்திகளை அளிப்பது மிகவும் முக்கியமான தாகும். இச்செய்திகளைக் கோரிப்பெறும் வணிகர்தாம் எவ்வகை யான நபருடன் தொடர்பு கொள்ளப் போகிறார் என்று அறிந்து கொள்ளமுடிகிறது. விரும்பத்தகாத நபருடன் தொடர்பு கொள்ளுவதைத் தவிர்க்கவும் முடிகிறது.

வரிச்செலுத்தம் பற்றி அறிவுரை

வரிச்சிக்கல்கள் மிகுந்த இந்நாட்களில் வங்கியர் தமது வாடிக் கையருக்கு அளிக்கும் மற்றோர் சிறப்புப் பணி வரிச்செலுத்தம் பற்றிய ஆலோசனையாகும். ஆலோசனை தருவதன் மூலம் வங்கியர் தனிப்பொறுப்பு ஏதும் ஏற்பதில்லை. இதனால் வாடிக்கையருக்கு நட்டமேதும் ஏற்பட்டால் அதற்கு வங்கியர் பொறுப்பாகமாட் டார்.

அயல்நாட்டுச் செலாவணி நடவடிக்கைகள்

ஏற்றுமதி இறக்குமதி வணிகம் ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்து வரும் இக்காலத்தில், வாடிக்கையர் பொருட்டு வங்கியர் பல அயல் நாட்டுச் செலாவணி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது இறக்குமதி வாணிகத்தில் வாணிக உறுதிக் கடிதம் வெளியிடுதல், பின்செலுத்தம் உத்தரவாதம் (Deferred paymant guarantee) வெளியிடுதல், வாணிக உறுதிக் கடிதத்தின் பேரில் அல்லது வசூலிக்கும் பொருட்டு இறக்குமதி மாற்றுச் சீட்டின்மீது நடவடிக்கை மேற்கொள்ளல் போன்ற பணிகளை வங்கியர் செய்கிறார். ஏற்றுமதி வணிகத்தில் அவர் செய்யும் பணிகளாவன : ஏற்றுமதி வாணிக உறுதிக் கடிதத்தை உறுதிப் படுத்தல், கட்டுவதற்குக் கடனளித்தல், வாணிக உறுதிக் கடிதத் தின் பேரில் ஏற்றுமதி மாற்றுச் சீட்டுகளைப் புழக்கத்திற்குக் கொண்டுவரல்; ஏற்றுமதி மாற்றுச் சீட்டுகளை வாங்குதல் அல்லது வசூலிக்க நடவடிக்கை எடுத்தல் என்பன.

அயல் நாட்டிற்குப் பணமனுப்புவது பற்பல கட்டுப்பாடு கட்குட்பட்டன. நம் நாட்டிற்குள் அயல் நாட்டிலிருந்து அனுப்பப் பெறும் பணத்தைப் பெறுவதில் கட்டுப்பாடு ஏதும் கிடையாது. குறிப்பிட்ட சில காரியங்களுக்குக் குறிப்பிட்டச் சட்டச் சடங்கு களைச் செய்து ரிசர்வு வங்கியின் அனுமதி பெறாமலேயே பணஞ் செலுத்தலாம். மற்ற எல்லா காரியங்களுக்கும் ரிசர்வு வங்கியின் அனுமதி பெற்றே செலுத்தம் செய்யலாம்.

அயல் நாட்டுச் செலாவணியிலுள்ள பயணக் காசோலைகளை விடுக்கவும், மாற்றித்தரவும் வங்கிகள் வேண்டப்படுவதுண்டு.

பயணக் காசோலைகளை அயல் நாட்டுச் செலாவணியில் விடுக்க ரிசர்வு வங்கியின் அனுமதி தேவைப்படுகிறது. அவற்றை மாற்றித் தர கட்டுப்பாடுகள் ஏதும் கிடையா. அயல் நாட்டுச் செலாவணி (Foreign Exchange) வாங்க, விற்க அனுமதிபெற்ற செலாவணி மாற்றுநர் (Authorised Money Changers) இருக்கின்றனர். வங்கியர்களும் ரிசர்வு வங்கியின் அனுமதியுடன் அயல்நாட்டுச் செலாவணி தேவைப்படும் அளவுக்கு இறக்குமதி உரிமம் பெற்று வாங்கிக் கொள்ளலாம். இதை அனுமதி பெற்ற வாடிக்கையருக்கு சட்ட திட்டங்கட்குட்பட்டு விற்கலாம்.

அயல்நாட்டுச் செலாவணியைப் பெற்றுக் கொண்டு நம் நாட்டுச் செலாவணியைத்தர கட்டுப்பாடு ஏதும் கிடையாது. அயல்நாட்டுச் செலாவணியைப் பெற்றுக் கொள்ளும் வங்கியர் அங்ஙனம் பெற்றுக்கொள்வதற்கு அதை வெளியிட்ட நாடு தடையேதும் விதித்துள்ளதா என்று கவனிக்க வேண்டும். மற்றும் அச் செலாவணி முறை மாற்றியமைக்கப்படலாம் அல்லது செல்லாத தாக்கப்படலாம். இதனல் வங்கியருக்கு நட்டமேற்படலாம். எனவே வங்கியர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ஒப்புறுதிப் பணி (Underwriting function)

தொழில் வளர்ச்சி மிகுந்து வரும் இந்நாட்களில் வங்கியர் பற்பல வ்கைகளில் தாமும் இவ்வளர்ச்சிக்கு உதவுகிருர். இந்த முறையில் செய்யப்படுவதுதான் ஒப்புறுதிப்பணி. சுருங்கக் கூறின் ஒப்புறுதிப்பணி, வெளியிடப்படும் பங்கு அல்லது கடன்பத்திரம் பொது மக்களால் வாங்கப்படாவிட்டால் தாம் குறிப்பிட்ட அளவு பங்கு அல்லது கடன்பத்திரங்களை வாங்கிக் கொள்ள உறுதியளிப்பதைக் குறிக்கும். நல்ல நிருவாகம், திறமைமிக்க இயக்குநர், சிறந்த எதிர்காலம் முதலிய அமைந்துள்ள நிறுமங்கள் (கம்பெனிகள்), கூட்டுரு (Corporation) வெளியிடும் பிணையங்களை (Securities) மக்கள் விரும்பி வாங்கிக் கொள்வது திண்ணம். அப்படிப்பட்ட நிலையங்களின் வெளியீடுகளை வங்கியர் ஒப்புறுதி செய்வது அந் நிலையங்களின் மதிப்பை மேலும் உயர்த்தும். ஆகவே மக்கள் மிகவும் விருப்புடன் இவ்வகைப்பிணையங்களை வாங்க முன்வருவர். வங்கியருக்கு ஒப்புறுதிக் கழிவு (underwriting commission) கிடைக்கும்.

இனி வங்கியர் ஏற்கும் முகமைப் பணி (Agency Service) களைக் காண்போம்

வாடிக்கையர் சார்பாகக் காசோலைகளை வசூல் செய்வது எல்லா வங்கியர்களும் மேற்கொள்ளும் முகவர் பணி என்று

முன்னரே கண்டோம். மாற்றுச் சீட்டு (Bill of Exchange) களைப் பற்றி வங்கியர் சார்பாக மேற்கொள்ளும் எல்லா நடவடிக்கைகளும், முகவர் என்ற நிலையில்தான் அமைகின்றன. இவையன்றி வங்கியர் கீழ்க்காணும் முக்கிய முகமைப் பணிகளையும் மேற்கொள்ளுவதுண்டு.

(i) காப்புறுதிக் கட்டணம் (insurance premium), வாடகை, சந்தா முதலிய செலுத்தவும், இலாபஈவு, ஊதியம், ஒய்வு ஊதியம், கடனுறுதிச் சீட்டு முதலிய வசூல் செய்யவும் வாடிக்கையரிடம் உத்தரவு பெற்றுப்பணியாற்றுதல்;

(ii) பிணையங்களை வாங்கல், விற்றல்.

(iii) நிறைவேற்றுளர் (Executor), பொறுப்புரிமையர் (Trustee) வக்காலத்தார் (Attorney) போன்ற நிலைகளிலிருந்து செயலாற்றல்.

(vi) வாடிக்கையரின் பிரதிநிதி அல்லது கடிதவழித் தொடர்பாளராகச் செயலாற்றல்.

வாடிக்கையர் சார்பாகப் பணஞ் செலுத்தவும், பணம் வசூல் செய்யவும் வங்கியர் ஒப்புக்கொண்டால் அவைபற்றி எல்லா விவரங்களையும் வாடிக்கையரிடமிருந்து பெறவேண்டும். இந்திய ஒப்பந்தச் சட்டப்படி, முகவர் ஒருவருக்குள்ள உரிமை, கடமை, பொறுப்பு எல்லாம் வங்கியருக்குண்டு. வங்கியர் நல்லெண்ணத்துடனும், கவனமின்மையின்றியும் செயலாற்றி வரவேண்டும்.

பிணையங்களை வாங்கல், விற்றல் பற்றிய வாடிக்கையர் உத்தரவு தெளிவாக இருத்தல் அவசியம். இது குறித்து வாடிக்கையர் தம் கையொப்பமிட்டு அனுப்பும் கடிதத்தில் கீழ்க்காணும் விவரங்கள் தரப்பட வேண்டும்.

(i) வாங்க அல்லது விற்கவிருக்கும் பங்குகள் அல்லது பிணையங்கள் பற்றிய விவரங்கள்.

(ii) எந்த விலைக்கு வாங்குவது அல்லது விற்பது என்ற குறிப்பு கூடியவரை நல்லவிலைக்கு வாங்குக அல்லது விற்க என்னும் உத்தரவு அப்பொழுது சந்தையில் நிலவும் விலைக்கு வாங்குக அல்லது விற்க எனப் பொருள்படும்.

(iii) வாடிக்கையர் தம் உத்தரவு எத்தனை நாட்களுக்குள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று குறித்தலுமுண்டு.

வங்கியர் பங்குமாற்றுத் தரகர் ஒருவர் மூலம் மட்டுமே பங்கு வாங்க, விற்கமுடியும். ஆகவே தரகருக்குத் தரவேண்டிய தரகுத் தொகையுடன் கூட சிறியதொரு கட்டணத்தையும் தம் வாடிக்கையரிடமிருந்து வங்கியர் இப்பணி செய்வதற்குப் பெற்றுக்கொள்ளுவார்.

வாடிக்கையர் சார்பாக பங்குகள் வாங்கல் விற்றலே, வாடிக்கையருக்குப் பங்குகள் வாங்கல் விற்றலேப் பற்றிய ஆலோசனே தருவதிலிருந்து வேறுபடுத்த வேண்டும். ஆலோசனே தரும்போது வங்கியர் முகவர் என்ற நிலேயில் செயல்படுவதில்லே. ஆலோசனே தருவதன் மூலம் பொறுப்பு ஏதும் ஏற்பதற்கில்லே என்பதை வங்கியர் திட்டவட்டமாகத் தெரிவித்துவிடுதல் நன்று.

பொறுப்புரிமையர் நிறைவேற்றுளர் பணிகளே மேற்கொள்ளல்

ஒருநபர் தாம் இறந்தபின் தமது சொத்தை என்ன செய்ய வேண்டுமென்பது பற்றித் தம் கருத்தைச் சட்டப்படி தெரிவித்தலே உயில் அல்லது விருப்புறுதி (Will) என்று குறிப்பிடுவர். எழுத்தால் அமைந்த உயிலில், உயில் இயற்றுபவர் கையொப்பமிடவேண்டும், இரண்டு சாட்சிகள் சான்றுறுதியளிக்க வேண்டும். அதிகாரவரம்பு கொண்ட நீதிமன்றம் விருப்புறுதி (உயில்) மெய்ப்பிதழ் (Probate) அளிப்பதன் மூலம் உயிலேச் செயல்படுத்த ஏற்பாடு செய்கிறது. ஒருவர் எழுதிவைத்த விருப்புறுதி (உயில்) மெய்ப்பிக்கப்பட்டதென்றும், அதில் கண்டவருக்குச் சொத்தை நிருவகிப்பதற்கான அதிகாரம் அளிக்கப்பட்டது என்றும் உரிய நீதிமன்றம் அளிக்கும் சான்றிதழே விருப்புறுதி மெய்ப்பிதழ் (Probate) எனப்படும். விருப்புறுதியில் இறந்தவரின் சொத்தை நிருவகிக்கும் அதிகாரம் தரப்பட்டுள்ள நபரே நிறைவேற்றுளர் (Executor) எனப்படுவார்.

விருப்புறுதியை நிறைவேற்றும்நபர் பொறுப்புரிமையர்(Trustee) போன்ற நிலேயிலுள்ளார். அவர் விருப்புறுதி, இயற்றியவரின் சொத்தைப் பாதுகாத்து உயிலில் கண்டுள்ளவாறு செய்யவேண்டும். ஐயமேற்படுங் செய்திகளில் நீதிமன்றத்தின் உத்தரவு பெற்றுச் செயலாற்ற வேண்டும். சில பயனுளிகளின் (beneficiaries) நலனுக்காகச் சொத்தை ஒரு பொறுப்புரிமை (Trust) அமைப்பாகவும் ஏற்படுத்துவதுண்டு.

பொறுப்புரிமையர் என்ற நிலேயில் செயலாற்றுகையில் வங்கியர் பொறுப்புரிமை ஆவண (Turst deed)த்தில் கண்டுள்ள உத்தரவுப்படி நடக்க வேண்டும். இந்தியப் பொறுப்பமைப்புச் சட்டப்படி வங்கியர் தம் நிருவாகத்திலுள்ள சொத்தை முதலீடு செய்ய வேண்டும். சட்டத்துக்கு அல்லது பொறுப்புரிமை ஆவணத்தில்

காணப்படும் விதிகளுக்கு முரணுக செயலாற்றினுல் வங்கியர் 'பொறுப்புரிமை அமைப்பு மீரல்' (Breach of Trust) என்ற தவறுக்கு ஆளாவார்.

நிருவாக உரிமைப் பத்திரம் (Letters of Administration)

சொத்துள்ள ஒருவர் உயிலின்றியோ. நிறைவேற்ருளர் எவரையும் நியமிக்காமலோ இறந்து விட்டால், அதிகாரவரம் புடைய நீதி மன்றம் தக்க ஆள் ஒருவருக்கு நிர்வாக உரிமைப் பத் திரம் வழங்கும். அவ்வாறு வழங்கப்பட்டவர் நிறைவேற்ருளரைப் போன்று அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் பெறுகின்ருர். எந்த நபர் இறந்தவர் சொத்தின்மீது உரிமை கொண்டாடுகின்ரு ரோ அவர் நிருவாக உரிமைப் பத்திரம் தமக்கு அளிக்கப்பட வேண் டுமென்று கோரி நீதி மன்றத்திற்கு விண்ணப்பிப்பார். இறந்த நபர் எந்த இறங்குரிமைச் சட்ட (Law of succession)த்திற்கு உட்பட்டவ ரோ அச்சட்டப்படி சொத்து நிருவாகம் செல்யப்பட வேண்டும்.

வங்கியர் நிறைவேற்ருளர், நிருவாகர், பொறுப்புரிமையர் ஆகிய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதன் கார்ணங்களைக் காண் போம்.

(i) தனிநபர் போல் அல்லாது வங்கியர் தொடர்ந்து இயங்கி வரும் (continuous existence) தன்மைப் பெற்றுள்ளார். தனி நபர் தகுதி இழந்தாலோ அல்லது இறந்து போனு லோ அவர் வகிக்கும் (நிறைவேற்ருளர் போன்ற) பதவி யில் செயலாற்றுதல் நீங்கிவிடும். மற்றும் தனி நபர் ஒருவருக்கு இதன் பொருட்டு அதிக நேரம் செலவிடுதல் எளிய காரியமன்று.

(ii) வங்கியர் இந்தத்துறையில் — நிறைவேற்ருளர், பொறுப் புரிமையர் போன்ற துறையில் — சிறப்பீடுபாடு பெற்றுச் செயலாற்ற வாய்ப்புள்ளது. பற்பல நபர்களின் சொத் துக்களை நிருவாகம் செய்கையில் நிருவாகச் செலவு எல்லாப் பொறுப்புரிமை அமைப்புக்கள் மீதும் பரப்பப் படுவதால், செலவு குறைவாகவே ஆகிறது. மற்றும் சிறப்புத் தேர்ச்சி பெற்ற அதிகாரிகள் வங்கியில் பணி யாற்றுவதால் நிருவாகம் திறம்பட நடைபெறும்.

(iii) வங்கிகளில் பாதுகாப்பு அறைகளிருப்பதால் முக்கிய ஆவணங்கள், பிணையங்கள் முதலியவற்றை பாதுகாவ லாக வைத்திருப்பது எளிது.

(iv) வங்கிகள் திடமான நிதிநிலையுடைய நிலையங்களாவதால் அவற்றை நம்பி இப்பணிகளை ஒப்படைக்கலாம். தனிப்

பட்ட நபர் பற்பல சூழ்நிலைகள் காரணமாக நேர்வழியில் செல்வதும் நாணயமாக நடப்பதும் கடினமாகப் போக லாம்.

(v) வங்கியர் இப்பணியை மேற்கொள்வதன் மூலம் வாடிக்கையருக்கு மேலும் வசதிகளைச் செய்து தர முடி கிறது.

(vi) வங்கியர் தமது நடவடிக்கைகளைனைத்தையும் ரகசியமாக வைத்திருப்பது போன்றே, சொத்தைப் பற்றிய நட வடிக்கைகளையும் ரகசியமாகவே வைத்திருப்பார்.

(vii) இத்தகைய பணியை கேற்கொள்வதன் வழி மேலும் மக் களைத் தம்பால் வாடிக்கையராக ஈர்க்க முடிகின்றது.

வக்காலத்தார் அல்லது அட்டர்னி (Attorney) யாகச் செயலாற்றல்

வாடிக்கையரின் வக்காலத்தராக வங்கியர் செயலாற்றும் பொழுது அவருக்கு என்ன அதிகாரம் தரப்பட்டுள்ளது என்பதை அவருக்கு அளிக்கப்பட்டுள்ள பகர அதிகாரப் பத்திரம் (Power of Attorney) மூலம் அறியலாம். வாடிக்கையருக்குச் சொந்தமான பிணையங்கள் மீது இலாபஈவு, வட்டி முதலிய பெற்றுக் கொள்ள அல்லது பிணையங்களை வாங்கும்பொழுதும் விற்கும்பொழுதும் வாடிக்கையர் சார்பாகக் கையொப்பமிட அதிகாரம் தரப்பட லாம். இப்பணியைச் செய்வதற்கு வங்கியர் கட்டணம் விதிப்பார். பத்திரத்தில் கண்டவாறு செயலாற்றுவதோடு வங்கியர் கடமை தீர்ந்தது. அச்செயல்களை வாடிக்கையரே செய்ததாகச் சட்டம் கொள்ளும்.

18. வங்கிகளை நாட்டுடைமையாக்கல்

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் வங்கிகளுக்கு மிக முக்கியமான இடமுண்டு. பொருளாதார வளர்ச்சி வங்கித் துறையின் வளர்ச்சிக்குப் பெரிதும் ஆக்கம் தருகிறது. இதே போன்று வங்கித்துறை பொருளாதார வளர்ச்சிக்கு ஆக்கம் தரும் நிலையிலுள்ளது. சுருங்கக் கூறின், பொருளாதார வளர்ச்சியும், வங்கித் துறை வளர்ச்சியும் ஒன்றையொன்று பின்னிப்பிணைந்து நிற்கின்றன. நாட்டுச் செல்வத்தை மக்களிடையே பரவலாக அளிப்பதே நமது அரசின் குறிக்கோள். இக்குறிக்கோளை மக்களாட்சி முறையின் அடிப்படையில் அடைய அரசு பற்பல முயற்சிகளை மேற்கொண்டது. மக்களிடமுள்ள சேமிப்புகளைத் திரட்டி, நாட்டு வளர்ச்சிக்கான திட்டங்களுக்குக் கடனளித்து வருவது வங்கியரின் தொழிலில் முக்கிய பகுதியாகும். வங்கியர் பெரும்பாலும் நடுத்தர அல்லது பேரளவுத் தொழில்கட்கு மட்டுமே கடன் வசதிகள் அளிக்கின்றனர்; வேளாண்மை, சிறுதொழில், ஏற்றுமதி, சிறு வணிகர் முதலியோருக்குக் கடன் வசதிகள் அளிப்பதில் அக்கறை காட்டுவதில்லை என்ற குறை பலகாலமாகக் கூறப்பட்டு வந்தது. மற்றும் வங்கியின் இயக்குநர்கள் பெரும்பாலும் தொழிலதிபர்களாயிருந்ததால், தாம் தொடர்புற்றத் தொழில் நிலையங்களுக்கு மட்டும் பேரளவுக்குக் கடன்வசதி செய்து கொண்டு பிற தொழில்களின் தேவைகளைக் கவனிப்பதில்லை என்றும் பேசப்பட்டு வந்தது. இக்குறைகளைக் களைவதற்கு வங்கிகளை அரசுடைமையாக்க வேண்டும் என்று பலர் கூறினர்.

வங்கிகள் மீது சமுதாயக் கட்டுப்பாடு

அரசு இக்குறைகளைப் போக்க வங்கியின் செயல்முறை மீது பற்பல கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்தது. அவற்றைச் சமுதாயக் கட்டுப்பாடு (Social Control) என்று குறிப்பிட்டு வந்தனர்.

இத்திட்டத்தைச் செயல்படுத்த நாட்டுக் கடன் குழு (National Credit Council) என்ற 25 நபர்களைக் கொண்ட ஒரு குழுவினை அமைத்து, அக்குழுவிற்குச் சில பணிகளை அரசு பணித்தது. அவற்றில் சில: நாட்டுப் பொருளாதாரத்தில் எந்தெந்த துறைகளுக்கு எவ்வளவு வங்கிக் கடன் தேவைப்படுகிறது; கடன் கொடுப்பதில் முந்துமைத்துறை (Priority Sector)களான வேளாண்மை, சிறு தொழில், ஏற்றுமதி முதலியவற்றிற்குத் தேவைப்படும் கடன் வசதிகளை எங்ஙனம் நிறைவேற்றுவது; உள்ள நிதிவசதிகளைத் திறம்படப் பயன்படுத்தும் வகையில் கூட்டுறவு வங்கிகள், சிறப்பாக ஏற்படுத்தப்பட்ட நிதி நிலையங்கள், வணிக வங்கிகள் ஆகியவற்றிடையே எவ்வகையான சேர்ந்து செயல்படும் முறையைக் கடைப்பிடிப்பது என்ற கேள்விகளுக்கு விடைகாணுமாறு குழு பணிக்கப்பட்டது. குழு அமைத்த அதே நேரத்தில் வங்கிய ஒழுங்காற்றுச் சட்டத்தையும் திருத்தம் செய்து அதன்வழி வங்கிக்கு, வங்கித் துறையில், சிறப்புத் தேர்ச்சிபெற்ற வல்லுநர்களை முழு நேரத்தலைவராக நியமித்தல்; நிருவாகத்தில் சிறப்பறிவு பெற்றவர்களை இயக்குநராக நியமித்தல்; கடன் வசதியளிப்பதில் பல கட்டுப்பாடுகளை விதித்தல்; முறைமீறி நடக்கும் வங்கிகளை அரசினர் ஏற்று நடத்துதல் போன்ற ஏற்பாடுகளை அரசு செய்தது.

நாட்டுடைமைத் திட்டம்

வங்கிகள் மீதான சமுதாயக் கட்டுப்பாட்டுத் திட்டம் செயல்பட ஆரம்பித்துச் சில மாதங்கள் கழித்து அரசு பதினான்கு பெரிய வணிக் வங்கிகளை நாட்டுடைமையாக்கியது. 19-7-1969 முதல் கீழ்க்காணும் பதினான்கு வங்கிகளும் அரசு நிறுவனங்களாகச் செயலாற்றி வருகின்றன: சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, பாங்க் ஆப் இந்தியா, பஞ்சாப் நேஷனல் பாங்க், கானரா பாங்க், பரோடா பாங்க், யுனைடெட் கமர்ஷியல் பாங்க், யுனைடெட் பாங்க் ஆப் இந்தியா, தேனு பாங்க், சிண்டிகேட் பாங்க், யூனியன் பாங்க் ஆப் இந்தியா, அலகாபாத் பாங்க், இந்தியன் பாங்க், பாங்க் ஆப் மகாராஷ்டிரா, இந்தியன் ஓவர்சீஸ் பாங்க். இந்த பதினான்கு வங்கிகள் ஒவ்வொன்றும் ரூ. 50 கோடிக்குமேல் வைப்புக்கள் திரட்டியிருந்தன. அயல்நாட்டு வங்கிகளும், வைப்புக்கள் ரூ 50 கோடிக்கு மிகாமல் இருந்த வங்கிகளும் நாட்டுடைமையாக்கப்படவில்லை. அவை தனியார் துறையிலேயே இருந்து வருகின்றன.

பெரும் வங்கிகள் பதினான்கு நாட்டுடைமையாக்கப்படுமுன் இந்திய வங்கிகள் இருந்த நிலையினையும், அயல் நாட்டு வங்கிகள் இருந்த நிலையினையும் அடுத்த பக்கத்திலுள்ள அட்டவணையில்

காணலாம். நாட்டுடைமைக்குப் பின் தனியார் துறையில் இருந்து வரும் வங்கிகளின் எண்ணிக்கை 51 ஆக உள்ளது. இவற்றில் 36 இந்திய வங்கிகள் 15 அயல்நாட்டு வங்கிகள். நாட்டுடைமை யாக்கப்பட்ட நேரத்தில் வங்கித் தொழிலில் 85 விழுக்காட்டளவு, பொதுத்துறை வங்கிகள் பாலிருந்தன.

நாட்டிலுள்ள பணத்தை மக்களிடமிருந்து திரட்டி, அதை மிகச் சீரிய முறையில் நாட்டு வளர்ச்சிக்காகவும், திட்டங்களைத் திறம்பட செயல்படுத்துவதற்காகவும் நாட்டுடைமையாக்கல் மேற் கொள்ளப்பட்டது. மற்றும் முந்துமைத்துறைகளுக்குத் தக்கக் கடன் வசதிகள் அளித்து சமுதாய நீதி காணவும், புறக்கணிக்கப் பட்டத் துறைகளுக்குப் புத்துயிரூட்டி வளர்ச்சியை மேம்படுத்த வும் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

திட்டத்தைச் செயல்படுத்திய முறை

குடியரசுத் தலைவர் அவசரச்சட்டம் (Ordinance) ஒன்று பிறப் பித்து மேற்கண்ட 14 வங்கிகளையும் அதே பெயர் கொண்ட அரசு டைமை நிறுவனங்களாக 19 ஜூலை 1969 முதல் செயல்படும் என்று அறிவித்தார். அரசுடைமையாக்கப்பட்ட வகிங்களின் பங்கு தாரர்களுக்கு நட்டஈடு கணக்கிடப்படும் வகையும் அவசரச் சட் டத்தில் இடம்பெற்றது. இந்த அவசரச் சட்டம் செல்லாநிலையது என்று உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு (Rustom Cawasji Cooper V. Union of India) என அறியப் படுகிறது. இந்த வழக்கில் அவசரச் சட்டம் செல்லாநிலையது என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இதற்குக் காரணம், சில வங்கிகள் தம் தொழிலை நடத்த அனுமதிக்கப்பட்டிருக்கும்போது, குறிப் பிட்ட 14 வங்கிகள் மட்டும் அத்தொழிலை நடத்துவதைத் தடுப்பது நியாயமற்ற வேற்றுமை காட்டலாகும்; இந்த 14 வங்கிகளுடைய எல்லா உடைமைகளும் எடுத்துக் கொள்ளப்படுவதால் வேறு தொழில் ஏதும் செய்ய வகையற்றவனவாகி விட்டது நியாயமற்றக் கட்டுப்பாடாகும்; நட்டஈடு கணக்கிட வகுக்கப்பட்ட முறை சரியான, பொருத்தமானதொன்றல்ல என்பன. இக்குறைகளை நீக்கி மற்றொரு அவசரச் சட்டம் 14-2-1970இல் பிறப்பித்து நாட்டு டைமையாக்கலைச் சட்டப்படி செல்லத் தக்கதாக அரசு செய்தது. இச் சட்டம் வங்கிகளை அரசுக்கு மாற்றித் தரும்முறை, நட்டஈடு செலுத்தும்முறை, வங்கிகளை நிருவகிக்கும்முறை ஆகியவற்றைப் பற்றிப் பேசுகிறது.

நாட்டுடைமைக்குப்பின் வங்கிகளின் வளர்ச்சி

நாட்டுடைமையாக்கப்பட்ட நாளிலிருந்து இப்பதினான்கு வங்கிகளும் இயங்கிவரும் முறையை நோக்கின், பல செய்திகள்

அட்டவணை I

1969 ஜூன் முடிவில் வணிக வங்கிகள் பற்றிய புள்ளி விவரங்கள்

வங்கிகளின் எண்ணிக்கை	...	89
வங்கிகளின் அலுவலங்கள்	...	8,254
வைப்புக்கள் (கோடிக்கணக்கில்)	...ரூ.	4,672
கடன் (கோடிக்கணக்கில்)	...ரூ.	3,614

	அரசினர் துறை			தனியார் துறை		
	ஸ்டேட் பாங்கு	ஸ்டேட் பாங்கின் துணை வங்கிகள்	ரூ. 50 கோடி வைப்புக்கு மேலுள்ள இந்திய வணிக வங்கிகள்	அயல் நாட்டு வங்கிகள்	பிற இந்தியப் பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகள்	பின்னிணைப்புப் பட்டியலில் இடம் பெறாத வங்கிகள்
வங்கிகள் எண்ணிக்கை	1	7	14	15*	36	16
அலுவலகங்கள்	1,566	888	4,130	130	1,324	216
வைப்புக்கள் ரூ. கோடிகளில்	948	291	2,632	478	296	28
கடன் ரூ. கோடிகளில்	967	219	1,829	385	197	16

* இவற்றில் 13 மட்டும் செயலாற்றி வருகின்றன.

புலனாகும். ஜூன் 1969 முதல் மே 1971 வரை நாட்டில் 4,171 வங்கிக் கிளைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் நாட்டுடைமை வங்கிகள் 2,555 கிளைகளைத் திறந்தன. உலகிலேயே இந்த அளவு கிளைப்பெருக்கம் எங்கும் காணப்பட்டதில்லை.

ஜூன் 1969இல் வேளாண்மைக்குப் பின்னிணைப்புப் பட்டியலிலுள்ள வங்கிகள் 2,67,026 கணக்குதாரர்களுக்கு ரூ 188 கோடி கடனளித்திருந்தன. மார்ச்சு 1971இல், இது 10,55,766 கணக்குகளாகவும், கடன் தொகை ரூ 379 கோடியாகவும் உயர்ந்திருந்தது. சிறு தொழில் கடன் ரூ 276 கோடியிலிருந்து ரூ 394 கோடியாக வளர்ந்தது. 65,000 மக்களுக்கு ஓர் வங்கி என்றிருந்தநிலை 46,000 மக்களுக்கு ஓர் வங்கி என்று மே 1971இல் மாறியது. பிரிட்டனில் 4,000 மக்களுக்கு ஒரு வங்கி, அமெரிக்காவில் 7,000; ஜப்பானில் 15,000; ஈரானில் 11,000 மக்களுக்கு ஒரு வங்கியென்பது ஒப்பு நோக்கத் தக்கது. பின்னிணைப்புப் பட்டியிலுள்ள வங்கிகளின் வைப்புத் தொகை ரூ 3,969 கோடியாக ஜூன் 1969இல் இருந்தது மே 1971 இறுதியில் ரூ 6,190 கோடியாக உயர்ந்தது.

கீழே காணப்படும் அட்டவணை வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட நாள் முதல் கண்டுள்ள வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது.

அட்டவணை II

வங்கித்துறையின் வளர்ச்சி

	விவரம்		ஜூன் 1969	மே 1971
I.	வங்கி அலுவலகங்கள் (எண்ணிக்கை)	...	8,262	11,845
	(a) கிராமப்புறம் (Rural)	...	1,832	4,198
	(b) சிறுநகர்ப்புறம் (Semi-urban)	...	3,322	3,995
	(c) நகர்ப்புறம் (urban)	...	1,447	1,740
	(d) மாநகரங்கள் (Metropolitan Centres)	...	1,661	1,912
II.	முந்துமைத்துறைக்குக் கடன்			
	(Lending to priority Sectors) மொத்தக் கடனில் விழுக்காட்டு அளவு	...	14.5	22.8
	(i) வேளாண்மை	...	5.4	8.4
	(ii) சிறுதொழில்	...	8.3	11.2
	(iii) போக்குவரத்துத் தொழில் நடத்துனர் (Roaa Transport operetors)	...	0.2	1.0
	(iv) சில்லறை வியாபாரம், சிறு வியாபாரி	...	0.6	1.9
	(v) தனித்து வேலை செய்யும் தொழில்வல்லோர்	...	—	0.2
	(vi) கல்வி	...	—	0.1

அட்டவணை III

பின்னிணைப்புப்பட்டியலிலுள்ள வங்கிகளைப் பற்றிய முக்கிய புள்ளி விவரங்கள்

	விவரம்	ஜூன் 1968	ஜூன் 1971
1.	அலுவலகங்களின் எண்ணிக்கை	7,044	11,554
2.	மொத்த வைப்புக்கள் (ரூ. கோடிகளில்)	3,969-1	6,189-9
3.	நாட்டு வருமானத்தில் வைப்புக்கள் விழுக்காடு	14-1	18-0
4.	வங்கிகள் அளித்த கடன் (ரூ. கோடிகளில்)	3,102-9	4,775-8
5.	கடன்—வைப்பு விகிதம்	78-2	77-2
6.	அரசினர், பிற அனுமதிக்கப்பட்ட பிணையங்களில் முதலீடு	1,160-7	1,798-9
7.	முதலீடு—வைப்பு விகிதம்	29.2	29.1
8.	கையிருப்பு ரொக்கமும், ரிசர்வு வங்கியிடம் இருப்பும்	269-5	393-5
9.	ரெக்கம்—வைப்பு விகிதம்	6-8	6-4

ஆதாரம் : (Economic Times 4-9-'71 பக்கம் 4.)

இந்த அத்தியாயத்தை முடிக்குமுன் வங்கிகள் நாட்டுடைமை யாக்கப்பட்ட சட்டத்தின் The Banking Companies (Acquisition and Transfer of Undertakings) Act, 1970 (No. 5 of 1970) என்ற சட்டத்தின்—முக்கிய பிரிவுகளைக் காண்போம்.

நாட்டுடைமையாக்கப்பட்ட பதினன்கு வங்கிகளும் அதே பெயர் கொண்ட பதினன்கு வங்கிகளுக்கு உடைமை மாற்றம் செய்யப்படும். பெயரில் "The" "Limited" என்ற சொற்கள் நீக்கப்படும். இவ்வங்கிகளின் செலுத்திய முதல் மத்திய அரசின் உடைமையாக விளங்கும் [பிரிவு 3]

சட்டத்தின் பிரிவு 5 இன்படி ஒவ்வொரு வங்கியின் தொழிலும் —சொத்து, பொறுப்பு, அதிகாரம், உரிமை முதலிய எல்லா முட்பட—புதிய வங்கிக்கு மாற்றித் தரப்படும். குறிப்பிட்ட பதினன்கு வங்கிகள் செய்து வந்த தொழிலனைத்தும் எடுத்துக் கொள்ளப்படும்.

நட்டஈடு எந்த அளவுக்குத் தரப்பட வேண்டுமென்பதையும் சட்டம் குறிக்கிறது.

வங்கியின் பெயர்	நட்டஈடு தொகை (ரூ. இலட்சங்கள்)
The Central Bank of India Ltd.	1,750
The Bank of India Ltd.	1,470
The Punjab National Bank Ltd.	1,020
The Bank of Baroda Ltd.	840
The United Commercial Bank Ltd.	830
Canara Bank Ltd.	360
United Bank of India Ltd.	420
Dena Bank Ltd.	360
Syndicate Bank Ltd.	360
The Union Bank of India Ltd.	310
Allahabad Bank Ltd.	310
The Indian Bank Ltd.	230
The Bank of Maharashtra Ltd.	230
The Indian Overseas Bank Ltd.	230

நட்ட ஈட்டுத் தொகை ரொக்கமாகவேனும், அரசுப் பிணையங்களாகவேனும் அல்லது பகுதி ரொக்கமாகவும் பகுதி அரசுப் பிணையங்களாகவும் தரப்படும். ரொக்கமாகத் தரப்படுவது சம்மான மூன்று ஆண்டுத் தவணைகளில் 19-7-1970 முதல் 4°/₀ வட்டியுடன் கொடுக்கப்படும். அரசுப் பிணையங்கள் (Government Securities) 19-7-1970 இலிருந்து 10 ஆண்டுகளில் முதிர்வடைவனவாக இருப்பின் $4\frac{1}{2}$°/₀ வட்டியுள்ளதாகவும், 19-7-1970 இலிருந்து 30 ஆண்டுகளில் முதிர்வடைவனவாக இருப்பின் $5\frac{1}{2}$°/₀ வட்டியுள்ளதாகவும் தரப்படும். வங்கிக் கம்பெனிகள் தாம் நட்ட ஈட்டைப்பெற விரும்பும் முறையை 14-2-1970 இலிருந்து மூன்று மாதங்களுக்குள் தெரிவிக்க அனுமதிக்கப்பட்டன (பிரிவு 6).

இந்த வங்கிகளை நிருவகிக்க மத்திய அரசு ரிசர்வு வங்கியுடன் கலந்து செயல்பட்டு ஒவ்வொரு வங்கிக்கும் இயக்குநர் அவை ஒன்றை நியமிக்கும். அதுவரை, தற்போது வங்கியின் தலைவராக இருப்பவரே வங்கியின் தலைமை அதிகாரியாகக்காப்பாளர் (Custodian) என்ற பெயரில் செயலாற்றி வருவார். [பிரிவு 7].

மற்ற வங்கிகள் தணிக்கை செய்யப்படுவது போன்றே இப் பதினான்கு வங்கிகளும் ரிசர்வு வங்கியின் முன் ஒப்புதலுடன் வங்கியால் நியமிக்கப்பட்ட தணிக்கையரால் தணிக்கை செய்யப்படும். தணிக்கை அறிக்கை நகல் ரிசர்வு வங்கி, மத்திய அரசு ஆகி

யோருக்கு அனுப்பப்பட வேண்டும். மத்திய அரசு இவ்வறிக்கையை நாட்டின் மக்கள் சபை, இராச்சியசபை முன்னர் வைக்கும். வங்கி சம்பாதிக்கும் இலாபத்தை மத்திய அரசுக்கு மாற்றித் தர வேண்டும்.

இவ்வங்கிகள் ஒருதனிச் சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்டதால், கம்பெனி என்ற தகைமை இவற்றிற்கு இல்லை. எனவே வங்கிய ஒழுங்காற்றுச் சட்டமோ, இந்திய கம்பெனிச் சட்டமோ இவற்றிற்குப் பொருந்தா. எனவே நாட்டுடைமையாக்கிய சட்டம், வங்கிய ஒழுங்காற்றுச் சட்டத்தின் இன்ன இன்ன பிரிவுகள் இவ்வங்கிகளுக்குப் பொருந்தும் என்று குறிப்பிடுகிறது. முக்கியமாக, வங்கிய ஒழுங்காற்றுச் சட்டத்தின் பிரிவுகள் 5, 6 (1) இல் குறிக்கப்பட்ட வங்கியத் தொழிலை இவ்வங்கிகள் மேற்கொள்ளலாம். மற்றும் வங்கிய ஒழுங்காற்றுச் சட்டத்தின் பிரிவு 10, 13, 14, 15, 17, 19, 20, 21, 23, 24, 25, 26, 27, 28, 29 [உட்பிரிவு (3) நீங்கலாக] 31, 34, 34A, 35, 35A, 36, [உட்பிரிவு (1) சரத்து (d) நீங்கலாக] 36AD, 46, 47, 48. 50, 51, 52, 53 முதலியவை இப்பதினன்கு வங்கிகட்கும் பொருந்தும். முன் அத்தியாயமொன்றில் வங்கிய ஒழுங்காற்றுச் சட்டத்தின் பிரிவுகளைப் பற்றி விளக்கமாகக் கண்டிருக்கிறோம்.

முடிவாகக் கூறுமிடத்து நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் பொது மக்கள் நலன்கருதி அரசு வகுக்கும் கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். தொழில் நோக்கைவிட பொதுமக்கள் நலன் பற்றிய நோக்கே முக்கியமென இவ்வங்கிகள் கருதிச் செயல்படும்.

பின் இணைப்பு I

இந்நூல் எழுதத் துணையாகவிருந்த பிற நூல்கள்

Maurice Megrah	—	Paget's Law of Banking (Fifth Edition).
Sheldon, H. P.	—	The Practice and Law of Banking (Ninth Edition).
Tannan, M. L.	—	Banking Law and Practice in India (Thirteenth Edition).
Bedi, H. L. and others	—	Theory and Practice of Banking
Davar	—	Law and Practice of Banking (Tenth Edition).
Sastri, D. S.	—	Bankers Advances Against Goods (Third Edition).
Varshney, P. N.	—	Banking Law and Practice
Basu, A. K.	—	Fundamentals of Banking Theory and Practice (Fourth Edition).
Basu, S. K.	—	A Review of Current Banking Theory and Practice.
Banking Regulation Act		
Reserve Bank of India	—	Functions and Working
	—	Reserve Bank of India Bulletin
	—	State Bank of India MonthlyReview
	—	Journal of the Indian Institute of Bankers
	—	Dailies : Economic Times Financial Express
	—	Weeklies : Commerce Eastern Economist

———

பின் இணைப்பு II

கலைச் சொற்கள்

A

Acceptance — ஏற்பு
Acceptor — ஏற்பவர்
Accommodation Bill — பணவசதி மாற்றுச்சீட்டு
Account — கணக்கு
Action — வழக்கு, நடவடிக்கை
Advance — கடன்
Agency — முகமை
Agent — முகவர்
Agent, commission — கழிவுபெறு முகவர்
Agent, mercantile — வணிக முகவர்
Agent, general — பொது முகவர்
Agent, special — சிறப்பு முகவர்
Agreement — உடன்பாடு
Allonge — ஒட்டுத்தாள்
Alteration — திருத்தம்
Alteration, material — கருநிலைத் திருத்தம்
Ante - dated — முன் தேதியிட்ட
Apex bank — உச்சி வங்கி
Appropriation — ஒதுக்கீடு
Appropriation of Payments — செல் ஒதுக்கல்
Articles of Association — செயல்முறை விதிகள்
Assessment — மதிப்பீடு
Asset — சொத்து
Asset, fixed — நிலையான சொத்து
Asset, floating — உருமாறும் சொத்து
Assignee — உரிமை மாற்றம் பெறுபவர்
Assignor — உரிமை மாற்றம் செய்பவர்
At sight — காட்டியவுடன்
Attorney — வக்காலத்தார்
Audit — தணிக்கை

B

Bad and doubtful debts	—	வரா, ஐயக்கடன்
Bad debt	—	வராக் கடன்
Bad debt Reserve	—	வராக் கடன் ஒதுக்கு
Bailee	—	ஒப்படை பெறுபவர்
Bailment	—	ஒப்படைவு
Bailment, termination of	—	ஒப்படைவு முடிவு
Bailor	—	ஒப்படை செய்பவர்
Balance	—	இருப்பு
Balance, cash	—	ரொக்க இருப்பு
Balance Sheet	—	இருப்பு நிலைக்குறிப்பு
Bank	—	வங்கி; பாங்க் பாங்கு
Bank Account	—	வங்கிக் கணக்கு
Bank charges	—	வங்கிக் கட்டணங்கள்
Bank, Central	—	மைய வங்கி
Bank, Commercial	—	வணிக வங்கி
Bank, industrial	—	தொழில் வங்கி
Bank, Land Development	—	நிலவள வங்கி
Bank, functions of	—	வங்கியின் பணிகள்; வங்கியின் அலுவல்கள்
Bank Draft	—	வங்கிப் பணவிடை
Bank rate	—	(மைய) வங்கி (வட்டி) வீதம்
Bank Pass Book	—	வங்கிச் செல்லேடு
Banker	—	வங்கியர், பாங்கர்
Banking	—	வங்கிய முறை
Banking Law	—	வங்கியச் சட்டம்
Banking Regulation Act	—	வங்கிய ஒழுங்காற்றுச் சட்டம்
Bankruptcy	—	நொடிப்பு நிலை
Bearer	—	கொணர்பவர்
Bearar Securities	—	கொணர்பவர் பிணையங்கள்
Bill of Exchange	—	மாற்றுச் சீட்டு
Bills payable	—	செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு
Bills Receivable	—	வரவுக்குரிய மாற்றுச் சீட்டு
Bonafide	—	நல்லெண்ணத்தில்
Book debts	—	ஏட்டுக் கடன்கள்
Book of Account	—	கணக்கு ஏடுகள்
Branch	—	கிளை
Broker	—	தரகர்

Brokerage	—	தரகு
Business	—	தொழில்

C

Call	—	அழைப்பு
Call Loan	—	அழைப்புக் கடன்
Capacity to conract	—	ஒப்பந்தத் தகுதி
Capital	—	முதல்; முதலீடு; மூலதனம்
Capital isue	—	முதல் வெளியீடு
Capital, authorized	—	அனுமதித்த முதல்
Capital, called up	—	அழைப்பித்த முதல்
Capital, circulating	—	கைமாறும் முதல்
Capital, fixed	—	நிலை முதல்
Capital, isued	—	வெளியிட்ட முதல்
Capital, paid - up	—	செலுத்திய முதல்
Capital, Subscribed	—	ஒப்பிய முதல்
Capital, uncalled	—	அழையா முதல்
Capital, working	—	நடைமுதல்; நடப்பு முதல்
Carrier	—	சரக்கேற்றி
Carrier, common	—	பொதுச் சரக்கேற்றி
Cash Book	—	ரொக்க ஏடு
Cash credit	—	ரொக்கக் கடன்
Cash on hand	—	கையிருப்பு ரொக்கம்
Cash Reserve	—	காப்பு ரொக்கம்
Central Bank	—	மைய வங்கி
Certificate	—	சான்றிதழ்
Certificate of incorporation	—	கூட்டுருவாக்கச் சான்று
Certificat, Share	—	பங்குச் சான்று
Certfied copy	—	உண்மையொப்பு நகல்
Charge	—	பற்றுப் பொறுப்பு; பொருட்பிணைபொறுப்பு
Cheque	—	காசோலை, செக்கு
Cheque, alteration of	—	காசோலைத் திருத்தம்
Cheque, bearer	—	கொணர்பவர் காசோலை
Cheque, crossed	—	கீறிய காசோலை
Cheque, dishonoured	—	மறுத்தக்காசோலை; அவமதிக்கப்பட்டக்காசோலை
Cheque, forged	—	பொய்யாவணம் புனையப் பட்டக் காசோலை

Cheque, mutilated — சிதைந்தக் காசோலை
Cheque, open — கீறுக் காசோலை
Cheque order — உத்தரவுக் காசோலை
Cheque, post - dated — பின்தேதியிட்டக் காசோலை
Cheque, Stale — நாட்பட்டக் காசோலை
Chose in aation — வழக்குரிமைப் பொருள்
Cicular Letter of credit — சுழலும் வாணிக உறுதிக்கடிதம்
Claim — பாத்தியதை; கோருரிமை
Clause — சரத்து
Clean Bill — வெற்று மாற்றுச் சீட்டு
Clearing house — தீர்வகம்
Code — குழூக்குறி
Coercion — வலுக்கட்டாயம்
Collateral Security — துணைப்பிணையம்
Collection — வசூல்
Collecting Agent — வசூலிக்கும் முகவர்
Collecting Banker — வசூலிக்கும் வங்கியர்
Collusion — வஞ்சகக் கூட்டு
Commerce — வாணிகம்; வாணிபம்; வணிகம்
Commercial Law — வாணிகச் சட்டம்
Commission — கழிவு
Commission Agent — கழிவு முகவர்
Commission, underwriting — ஒப்புறுதிக் கழிவு
Common Seal — முத்திரைச் சின்னம்
Company — நிறுமம், கம்பெனி
Company, private — தனிக் கம்பெனி
Company, public — பொதுக் கம்பெனி
Company, Subsidiary — துணைக் கம்பெனி
Compensation — நிறையீடு; சரியீடு
Composition — கடன் தீர்வு உடன் பாடு
Compromise — ஒத்திசைவு
Concealment — மறைவடக்கம்
Condition — நிபந்தனை
Condition, precedent — முன் நிபந்தனை
Condition, subsequent — பின் நிபந்தனை
Confirmation — உறுதியாக்கம்
Consent — இசைவு
Consideration — மறுபயன்; பிரதிபலன்
Consideration, Valuable — மதிப்புடை மறுபயன்

Constructive — கொள்நிலை
Contingent — நிகழ்வுடைவான; வருநிகழ்வு சார்ந்த
Contract — ஒப்பந்தம்
Contract, implied — உட்கிடை ஒப்பந்தம்
Contract, void — இல்லாநிலை ஒப்பந்தம்
Contract, voidable — தவிர்தகு ஒப்பந்தம்
Contract of Guarantee — பொறுப்புறுதி ஒப்பந்தம்; உத்தரவாத ஒப்பந்தம்
Contract of Indemnity — ஈட்டுறுதி ஒப்பந்தம்
Contributories — வழங்கக் கடமைப்பட்டோர்
Conversion — கையாடல் தீங்கு
Cooperative, Agricultural Societies — கூட்டுறவு விவசாயச் சங்கங்கள்
Cooperative Credit Societies — கூட்டுறவுக் கடன் சங்கங்கள் கூட்டுறவு நாணயச் சங்கங்கள்
Cooperative, Nonagricultural Societies — கூட்டுறவு விவசாய மில்லாச் சங்கங்கள்
Cooperative, Primary Societies — பிரதமக் கூட்டுறவுச் சங்கங்கள்
Corporation — கூட்டுரு; கார்ப்பொரேஷன்
Counterfoil — மறுபாதி
Countermand payment of cheque — காசோலைச் செலுத்தத் தடையுத்தரவு
Countersign — துணையொப்பம்
Coupon — கூப்பன் (வெட்டுச் சீட்டு)
Credit — நாணயம்; கடன்; பற்றுவழி
Credit balance — வரவு இருப்பு
Credit Control — கடன் கட்டுப்பாடு
Creditor — கடன் கொடுத்தவர்; கடனுளர்
Crossing — கீறல்; கீறலிடல்
Crossing, General — பொதுக் கீறல்
Crossing, Not Negotiable — ஆவணமாற்றுத் தன்மை இல்லாக் கீறல்
Crossing, Special — சிறப்புக் கீறல்
Current Account — நடப்புக் கணக்கு
Customer — வாடிக்கையர்

D

Damage — சேதம்; இழப்பு; கேடு
Damages — இழப்பீடு; தீங்கீடு

Damages, General	—	பொதுமுறை இழப்பீடு
Damages, Special	—	தனிமுறை இழப்பீடு
Damages, Ordinary	—	சரிநிகர் இழப்பீடு
Damages, Nominal	—	பெயரளவு இழப்பீடு
Days of Grace	—	சலுகை நாட்கள்
Debenture	—	கடனீட்டுப் பத்திரம்; கடன் பத்திரம்
Debenture, bearer	—	கொணர்பவர் கடன் பத்திரம்
Debit	—	பற்று; பற்றெழுதல்
Debit balance	—	பற்று இருப்பு
Debt	—	கடன்
Debtor	—	கடனாளி; கடன் வாங்கியவர்
Deed of Partnership	—	கூட்டாண்மைப் பத்திரம்
Default	—	செய்தக்க செய்யாமை
Delivery	—	உடைமை ஒப்படைப்பு; சேர்ப்பு
Delivery, Constructive	—	அடையாள ஒப்படைப்பு
Delivery Order	—	உடைமை ஒப்படைப்புஉத்தரவு
Demand Draft	—	கேட்புப் பணவிடை
Demand, on	—	கோரியதும்; கேட்டதும்; கேட்கும் பொழுது
Deposit	—	வைப்பு ; வைப்புத் தொகை ; அடைவு
Deposit, current	—	நடப்பு வைப்பு
Deposit, Demand	—	கேட்பு வைப்பு; நடப்பு வைப்பு
Deposit, fixed	—	தவணை வைப்பு
Deposit, time	—	தவணை வைப்பு
Depreciation	—	தேய்மானம்
Director	—	இயக்குநர்
Discharge	—	விடுவிப்பு; தீர்த்தல்
Discount	—	தள்ளுபடி
Dishonour	—	மதிப்பு மறுப்பு: அவமதிப்பு; மறுத்தல்
Dividend	—	இலாப ஈவு; பங்கு ஆதாயம்
Dock Warrant	—	துறைமுகச் சீட்டு
Document	—	ஆவணம்
Document of Title	—	உரிமையாவணம்
Documentary Bill	—	ஆவணஞ் சேர்ந்த மாற்றுச்சீட்டு
Donatio Mortis Causa	—	இறக்கும் தருவாய் நன்கொடை; மரணக் கொடை
Doubtful debt	—	ஐயக் கடன்

Drawee — பெயரவர்; எழுதப்படுபவர்
Drawee in Case of Need — தேவைப் பெயரவர்
Drawer — வரைபவர்: எழுதுபவர்
Due — உரியது
Due Date — தவணைத் தேதி
Duress — உடற் கட்டாயம்

E

Employee — பணியாள்
Employer — பணியாண்மையர்
Encumbrance — வில்லங்கம்
Endorsement — மேலெழுத்து
Endorsement in Blank — வெற்று மேலெத்து
Endorsement Sans recourse — தன் பொறுப்பில்லா மேலெழுத்து
Endorsee — மேலெழுத்துப் பெறுபவர்
Endorser — மேலெழுதுபவர்
Endowment Policy — காலவரைப் பாலிசி
Equity — தகைமை முறை
Equitable Mortgage — தகைமை முறை அடைமானம்
Escrow — நிபந்தனைக் குட்பட்ட ஆவணம்
Estate — செல்வம்; நிலச் சொத்து
Estoppal — முரண் தடை
Evidence — சான்று; சாட்சியம்
Exchange — (நாணய) மாற்று
Exchange Bank — நாணயமாற்று வங்கி
Exchange Control — நாணயமாற்றுக் கட்டுப்பாடு
Exchange Rate — நாணயமாற்று விகிதம்
Executor — நிறைவேற்றுளர்
Exemption — விலக்களிப்பு
Express Authority — அளித்துப் பெற்ற அதிகாரம்

F

Fictitious — கற்பனையான
Fiduciary Relationship — நம்பக உறவு
Finance — நிதி: நிதியம்
Firm — நிறுவனம்

Floating Assets	—	உருமாறும் சொத்துக்கள்
Floating Capital	—	நடை முதல்
Floating Charge	—	இழைவுறு பற்றுப்பொறுப்பு
Foreclosure	—	மீட்புரிமை அடைப்பு
Ferfeiture	—	ஒறுப்பிழப்பு
Forgery	—	பொய்யாவணம் புனைதல்
Fraud	—	மோசடி
Fraudulent Preference	—	ஓரவஞ்சகக் கடனடைப்பு
Fund	—	நிதி
Fund, Reserve	—	காப்பு நிதி

G

Garnishee	—	பற்றுகைப் பொருள் வைத்திருப்பவர்
Gazette	—	அரசிதழ்
General Agent	—	பொது முகவர்
General Average	—	பொதுப் பகிர்மானம்
General Lien	—	பொதுப் பற்றுரிமை
Goods	—	பொருள்; சரக்கு
Good Faith	—	நல்லெண்ணம்
Goodwill	—	வாணிக நற்பெயர்
Government Bonds	—	அரசாங்கக் கடன் பத்திரங்கள்
Government Securities	—	அரசினர் பிணையங்கள்
Guarantee	—	பொறுப்புறுதி; உத்தரவாதம்
Guarantor	—	பொறுப்புறுதி அளிப்பவர்
Guardian	—	காப்பாளர்

H

High Court	—	உயர்நீதி மன்றம்
Hire Purchase System	—	வாடகைக் கொள்முறை
Holder	—	உடையவர்
Holder in due Course	—	முறைப்படி உடையவர்
Hundi	—	உண்டியல்
Hypothecation	—	அடகு

I

Implied Conditions	—	தொக்கிய நிபந்தனைகள்; உட்கிடையான நிபந்தனைகள்

Immovable Property — நிலையியல் சொத்து; தாவர சொத்து
Inchoate Instrument — நிறைவுறுத ஆவணம்
Incorporation — கூட்டுருவாக்கம்
Indemnify — ஈட்டுறுதி செய்
Indemnity — ஈட்டுறுதி
Indigenous Banks — நாட்டு வங்கியர்
Industrial Bank — தொழில் வங்கி
Industrial Estate — தொழிற் பேட்டை
Insanity — பித்து நிலை
Inscribed Stock — பெயர்ப் பதிவுத் தொகுதிப் பங்கு
Insolvency — நொடிப்பு நிலை
Insolvent — நொடித்த நிலையர்; நொடித்தவர்
Instalment System — தவணை முறை
Instrument — முறை ஆவணம்
Instrument, Negotiable — மாற்று முறையாவணம்
Insurance — காப்பீடு
Insured — காப்பீடு பெறுபவர்
Insurer — காப்பீடு அளிப்பவர்
Interlocking directorate — பிணைந்த இயக்குநர் முறை
International Bank — பன்னாட்டு வங்கி
Investment — முதலீடு
Invoice — பட்டியல்
Irrevocable — முறிக்க முடியாத

J

Joint and Several Liability — கூட்டுத் தனித்தனிப் பொறுப்பு
Joint Family, Hindu — இந்துக் கூட்டுக் குடும்பம்
Joint Family Property — கூட்டுக் குடும்பச் சொத்து
Joint Stock Company — கூட்டுப் பங்குக் கம்பெனி
Judgment Debtor — தீர்ப்புக் கடனாளி
Judicial Proceedings — நீதிமுறை நடவடிக்கை

L

Law — சட்டம்; விதி
Lawful — சட்டத்திற்கு உகந்த

Lease — குத்தகை
Legal — சட்ட முறையான
Legal Representative — சட்ட முறையான பிரதிநிதி
Letter of Credit — வாணிக உறுதிக் கடிதம்
Letter of hypothecation — அடைமானக் கடிதம்
Letter of Introduction — அறிமுகக் கடிதம்
Letters of Administration — (நீதிமன்றமளிக்கும்) நிருவாக உரிமைப் பத்திரம்
Liabilities — பொறுப்புக்கள்; கடன்கள்
Licence — உரிமம்
Lien — பற்றுரிமை
Life Insurance (Assurance) — ஆயுள் காப்பீடு
Limited Company — வரையறுத்த கம்பெனி
Liquid Assets — மாற்றியல் சொத்து; எளிவரல் சொத்து
Liquidation — கலைப்பு
Liquidator — கலைப்பதிகாரி
Liquidity — ரொக்க நிலை
Loan — கடன்
Loan Secured — பிணைக் கடன்
Loan, unsecured — பிணையில்லாக் கடன்
Long term — நீண்டகால
Lucid Interval — பித்த இடைத் தெளிவு
Lunacy — பித்து நிலை
Lunatic — பித்தர்

M

Major — உரிமை வயது வந்தவர்; உரிமை வயதினர்
Majority — உரிமை வயது
Mail Transfer — அஞ்சல்வழி மாற்றம்
Manager — நிருவாகர்
Mandate — செயலுரிமை ஆணை
Margin — இடைவெளி
Marked Cheque — உறுதி செய்யப்பட்டக் காசோலை
Market — சந்தை
Material Alteration — கருநிலைத் திருத்தம்
Maturity — முதிர்வுக் காலம்; முதிர்வு

Memorandum of Association	—	அமைப்பு முறையேடு
Mercantile Agent	—	வணிக முகவர்
Merchant	—	வியாபாரி; வணிகன்
Minor	—	உரிமை வயது வராதோர்; இளவர்
Misappropriation]	—	கையாடல்
Misrperesentation	—	திரித்துக் காட்டல்
Mistake	—	தவறு
Mistake of Fact	—	பொருண்மைத் தவறு
Mistake of Law	—	சட்டத் தவறு
Money	—	பணம்
Money at call and short notice	—	அழைப்புக் கடன், குறுந் தவணைக் கடன்
Money market	—	பணச் சந்தை
Money Had and Received	—	பெற்றடை பணம்
Moratorium	—	(கடன் தீர்ப்பு) நிறுத்தி வைப்பு
Morgage	—	அடைமானம்
Mortgage, Simple	—	ஈட்டடைமானம்
Mortgage, By Conditional Sale	—	விற்பனை அடைமானம்
Mortgage, Usufructuary	—	ஒத்தி; சுவாதீன அடைமானம்
Mortgage, By Deposit of Title Deeds	—	பத்திரவைப்பு அடைமானம்; மூல ஆவண அடைமானம்
Movable Property	—	சங்கம சொத்து; அசைவியல் சொத்து
Mutilated cheque	—	சிதைந்த காசோலை

N

National Income	—	நாட்டு வருமானம்
Nationalisation	—	நாட்டுடைமையாக்கல்
Negligence	—	கவனமின்மை
Negotiability	—	ஆவண மாற்றுத் தன்மை
Negotiable Instrument	—	மாற்று முறையாவணம்
Negotiation	—	ஆவண மாற்றுதல்
Nominee	—	நியமிக்கப் பெற்றவர்; அமர்த்தப் பெற்றவர்
Non - negotiable	—	ஆவண மாற்றுத் தன்மையற்ற
Notaray Public	—	சான்றுறுதி அதிகாரி
Notice	—	அறிவிக்கை

Notice, Actual — நேரடி அறிவிக்கை
Notice, constructive — கொள்நிலை அறிவிக்கை
Notice of Dishonour — (மாற்று முறையாவண) மதிப்பு மறுப்பு அறிவிக்கை
Noting — மறுப்புக் குறிப்பு
Not Negotiable — ஆவண மாற்றுத் தன்மையில்லை
Null and Void — இல்லா நிலையது

O

Obligation, Legal — சட்டப் பிணைப்பு
Office — அலுவலகம்
Official Receiver — சொத்தாட்சி அதிகாரி
On Demand — கோரிய உடன்
Open cheque — கீறுக் காசோலை
Openig of Account — கணக்குத் துவங்கல்
Order cheque — உத்தரவுக் காசோலை
Ordinancc — அவசரகாலச் சட்டம்
Overdraft — மேல்வரைப் பற்று
Overdue — கெடுக் கடந்த
Owner — சொத்துரிமையாளர்
Ownership — சொத்துரிமை

P

Packing — கட்டுதல்
Packer — கட்டுனர்
Paid - up capital — செலுத்திய முதல்
Partial Endorsement — அரைகுறை மேலெழுத்து
Particular Lien — தனிப் பற்றுரிமை
Parties — சாரார்; தரப்பினர்
Partners — கூட்டாளிகள்
Partnership — கூட்டு; கூட்டாண்மை; கூட்டு வணிகம்
Partnership Deed — கூட்டு வணிகப் பத்திரம்
Pass Book — செல்லுப் புத்தகம்
Pawn — அடகு
Payee — பெறுபவர்
Paying Banker — செலுத்தும் வங்கியர்
Payment — செலுத்தம்

Paymet in Due Course — முறைப்படி செலுத்தம்
Period of Limitation — காலவரை; காலாவதி
Person — நபர்
Pledge — அடகு
Pledgee — அடகு பெறுபவர்
Pledgor — அடகு வைப்பவர்
Possession — உடைமை
Possession, Actual — நேரடி உடைமை
Possession, Constructive — கொள்நிலை உடைமை
Post - dated — பின் தேதியிட்ட
Power of Attorney — பகர அதிகாரப் பத்திரம்; பவர் பத்திரம்
Practice — நடைமுறை
Premium — முனைமம்
Presentmeut for Payment — செலுத்தக் காட்டல்
Principal — கடன்முதல் தல்வர்
Principal Debtor — தலைக் கடனாளி
Priority Sector — முந்துமைத் துறை
Private Company — தனிக் கம்பெனி
Private Sector — தனியார் துறை
Probate — விருப்புறுதி மெய்ப்பிதழ்: உயில் மெய்ப்பிதழ்
Procedure — நடைமுறை
Proceeding — நடவடிக்கை
Promise — உறுதியுரை
Promissory Note — கடனுறுதிச் சீட்டு
Proof — சான்றுறுதி
Property — சொத்து; சொத்துரிமை
Protest — மறுப்புக் குறிப்பு
Public Company — பொதுக் கம்பெனி
Public Sector — பொதுத் துறை

R

Railway Receipt — ரயில்வே ரசீது
Rate of Exchange — நாணமாற்று விகிதம்
Raw Material — கச்சாப் பொருள்
Regulations — ஒழுங்கு மூறை
Rebase — பொறுப்பு நீக்கம்
Remittance — அனுப்புகை

Reserve — காப்பு
Restrictive Endorsement — வரையறை மேலெழுத்து
Revocation — பின்னழிப்பு
Revocable credit — பின்னழிப்பு செய்யக்கூடிய கடன் வசதி

S

Safe Custody — காவல் வைப்பு
Sans Frais — செலவின்றி
Sans Recourse — தன் பொறுப்பின்றி
Savings Bank — சேமிப்பு வங்கி
Schedule — பின் இணைவு; பின்னிணைப்புப் பட்டி
Scheme — ஏற்பாட்டாவணம்
Secured Creditor — பிணைக் கடனாளர்
Security — பிணையம்
Security, Collateral — துணைப்பிணையம்
Securi ty Personal — ஆட்பிணையம்
Share Capital — பங்கு முதல்
Share Certifica te — பங்குச் சான்று
Share Warrant — பங்குரிமைச் சீட்டு
Shareholder — பங்குநர்; பங்குதாரர்
Short-term — குறுகிய கால
Signature — கையொப்பம்
Solvent — செல்லும் புள்ளி
Stock — பங்குத் தொகுப்பு
Stock broker — பங்குத் தரகர்
Stock Exchange — பங்குமாற்று நிலையம்
Stock Exchange Securities — பங்குமாற்றுப் பிணையங்கள்
Sub-mortgage — கீழ் அடைமானம்
Snbrogation, Right of — மாற்றமர் அடைமானவுரிமை
Subsidiary Company — துணைக் கம்பெனி
Succession — உரிமை இறக்கம்
Sue — வழக்கிடல்
Supreme Court — உச்ச நீதிமன்றம்
Surety — பிணையாள்
Surrender — வரையுரிமை விடுப்பு
Surrender Value — விடு மதிப்பு

Survivorship	—	எஞ்சுநர் உரிமை
Symbolical Delivery	—	அடையாள ஒப்படைப்பு

T

Testator	—	விருப்புறுதியாளர்; உயில் இயற்றுபவர்
Third Party	—	மூன்றுமவர்
Title	—	உரிமை மூலம்
Title Deeds	—	உரிமை மூல ஆவணங்கள்
Transaction	—	நடவடிக்கை
Transfer	—	உரிமை மாற்றம்
Transferee	—	உரிமை மாற்றம் பெறுபவர்
Transferor	—	உரிமை மாற்றம் செய்பவர்
Travellers Cheque	—	பயணக் காசோலை
Treasury Bill	—	கருவூல மாற்றுச் சீட்டு
Trust	—	பொறுப்புரிமை அமைப்பு
Trust Deed	—	பொறுப்புரிமை ஆவணம்
Trustee	—	பொறுப்புரிமையர்

U

Uberrimae Fidei	—	முழுநம்பிக்கையில் எழுகிற
Ultra vires	—	வரம்பிகந்த
Uncalled Capital	—	அழையா முதல்
Unconditioal Order	—	நிபந்தனையற்ற உத்தரவு
Underwriter	—	ஒப்புறுதியாளர்
Undivided Family	—	கூட்டுக் குடும்பம்
Undue Influence	—	தகாநிலை வற்புறுத்தம்
Unlimited Liability	—	வரையறுப் பொறுப்பு
Unsecured Creditor	—	பிணையற்றக் கடனுளர்
Usury	—	வரம்பிகந்த வட்டி; அநியாய வட்டி

V

Valid	—	செல்லு நிலையது; செல்லுடைமை
Valuable consideation	—	மதிப்புடை மறுபயன்
Valuable Security	—	மதிப்பாவணம்

Valuation — மதிப்பீடு
Value — மதிப்பு
Value Received — மறுபயன் பெறு குறிப்பு
Void — இல்லா நிலையது
Voidable — தவிர் தகு
Voluntary Winding up — தன் விருப்பக் கலைப்பு

W

Waiver — உரிமை விடுப்பு
Warehouse — பண்டகம்
Will — உயில்; விருப்புறுதி
Without Recourse — தன் பொறுப்பில்லா
Witness — சாட்சி; சான்றுரையர்
Working Capital — நடைமுறை முதல்

———

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை

1971 ஜூலை ட்டுள்ள நூல்கள்

பொருளாதாரம்

				ரூ.	பை
*1.	பொருளாதாரம்—I	...	சி. வேலாயுதம்	6	50
*1-A.	,, II	...	,,	9	00
*2.	சோவியத் பொருளாதார வளர்ச்சி	...	டாக்டர் எம். ஜே. கே. தவராஜ்	4	25
*3.	அமெரிக்கப் பொருளாதாரம்	...	டாக்டர் எம். ஜே. கே. தவராஜ்	4	50
*4.	பொருளாதாரச் சிந்தனை வரலாறு	...	சோணாசலம்	7	00
*5.	பன்னாட்டு வாணிபம்	...	மு. ஆரோக்கியசாமி	6	00
6.	புதுமைப் பொருளாதாரக் கூறுகள்	...	திருமதி ஆர். தாமரஜாட்சி	12	00
7.	பொருளாதாரம் ஓர் அறிமுகம்—I	...	தி. சி. மோகன்	12	00
8.	,, II	...	எம்.ஏ. அபூர்வசாமி, பி. வி. ஸ்ரீநிவாசன்	10	75
9.	பொருளாதாரக் கோட்பாடு வளர்ந்த வரலாறு	...	க. முத்தையன்	7	00
*10.	பணவியலும் பாங்கியலும்—I	...	சி. வேலாயுதம்	6	75
*11.	,, II	...	சி. வேலாயுதம்	11	50
12.	நவீன பாங்கு இயல்	...	க. வெற்றிவேல்	5	00
*13.	இந்தியச் செலாவணியும் பாங்கு முறையும்	...	பி. வி. ஸ்ரீநிவாசன்	5	50
*14.	அரசாங்க நிதி இயல்	...	அர. சேஷாசலம்	4	75

* மூல நூல் (Original Book)

பொருளாதாரம் —(தொடர்ச்சி)

				ரூ.	பை.
15.	இந்தியப் பொருளியல்—I	...	எம். பாலசுப்பிரமணியன்	... 10	00
16.	,, II	...	எம். லூர்துநாதன்	... 4	25
17.	நமது பொருளாதாரப் பிரச்சினை—I	...	சி. சுந்தரராஜன்	... 10	75
18.	,, II	...	எஸ். குழந்தைநாதன்	... 10	50
19.	இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு—I	...	கி. சீ. இராமசாமி	... 6	00
20.	,, II	...	,,	... 6	00
21.	அமெரிக்காவின் நவீன பொருளாதார வளர்ச்சி	...	தி. இ. மோகன்	... 5	00
22.	அமெரிக்கப் பொருளாதார வரலாறு—I	...	மு. க. சுப்பிரமணியம்	... 11	00
23.	,, II	...	பி. வி. ஸ்ரீநிவாசன்	... 6	00
24.	,, III	...	பி. வி. ஸ்ரீநிவாசன்	... 6	50
25.	அரசாங்க நிதியியலின் பொருளாதாரம்—I	...	மா. குமாரசாமி	... 10	00
26.	,, II	...	அர. சேஷாசலம்	... 8	50
27.	இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி—I	...	தே. வேலப்பன்	... 10	00
28.	,, II	...	ஜி. சிதம்பரம்	... 8	00
29.	பணம்—சிறு விளக்கம்	...	கோ. இராதாகிருஷ்ணன்	... 10	00
*30.	வணிக இயலின் தத்துவங்கள்	...	கு. ஆளுடையபிள்ளை	... 9	50
31.	பத்தொன்பதாம் நூற்றுண்டில் கிரேட் பிரிட்டனில் தொழில்-வாணிகப் புரட்சி	...	கு. ரா. கருப்பண்ணன்	... 11	00
32.	பென்ஹாம் பொருளாதாரம்—I	...	ஏ. குழந்தை	... 11	00
33.	,, II	...	எஸ். குழந்தைநாதன்	... 7	00
*34.	வரவு செலவுத் திட்டம்	...	ஆர். ரங்காச்சாரி	... 6	00

35.	பன்னுட்டுப் பொருளாதாரம்—I	...	ஏ. குழந்தை	... 7	50
36.	,, II	...	கே. எஸ். இராமசாமி	... 9	00
37.	பொருளாதார ஆய்வு நூல்—I	...	கோ. இராதாகிருஷ்ணன்	... 7	75
38.	,, II	...	கோ. இராதாகிருஷ்ணன்	... 7	00
39.	வளர்ச்சியுறுத நாடுகளின் அரசாங்க நிதியியல்	...	க. வெற்றிவேல்	... 4	25
40.	வளர்ச்சி குறைந்த நாடுகளின் முதலாக்கம் பற்றிய சிக்கல்கள்	...	மா. குமாரசாமி	... 5	50
41.	1639 முதல் இந்தியாவில் பணவீக்க விலைப் போக்குகள்	...	சி. சுந்தரராஜன்	... 7	50
42.	பொருளாதார வளர்ச்சிபற்றிய கட்டுரைகள்	...	எம். கே. சுப்பிரமணியம்	... 7	75
43.	இந்தியப் பொருளாதார வரலாறு (1857—1956)—I	...	ம. திருநாவுக்கரசு	... 7	00
44.	பொருளாதாரம்—ஓர் அறிமுகம்	...	பு. வி. சீனிவாசன்	... 6	25

வரலாறு

*45.	பிரிட்டன் வரலாறு—I	...	கி. ர. அனுமந்தன்	... 4	50
*46.	,, II	...	கி. ர. அனுமந்தன்	... 3	50
*47.	,, III	...	கி. ர. அனுமந்தன்	... 7	25
*48.	ஐரோப்பிய வரலாறு—I (கி.பி.395—1500)	...	டி. வி. சொக்கப்பா	... 3	75
*49.	,, II (கி.பி. 1500முதல்)	...	என். ஜே. இராஜகோபால்	... 5	50
50.	ஐரோப்பா—கடந்த ஐந்து நூற்றுண்டு காலச் சரித்திரம்	...	வை. விருத்தகிரீசன்	... 15	00

* மூல நூல் (Original Book)

வரலாறு—(தொடர்ச்சி)

			ரூ.	பை
51.	இங்கிலாந்து வரலாறு—I	இரா. அண்ணுமலை	13	00
52.	,, II	பா. மாணிக்கவேலு	13	00
53.	,, —III	என். ஜே. இராஜகோபால்	8	00
54.	,, IV	,,	8	00
55.	இங்கிலாந்தின் வரலாறு—I	க. த. திருநாவுக்கரசு	15	00
56.	,, II	எம். எக்ஸ். மிராண்டா	8	00
57.	,, III	,,	5	00
58.	இந்தியாவின் சிறப்பு வரலாறு—I	தி. வே. குப்புசாமி	5	00
59.	,, II	ஏ. உஸ்மான் ஷெரீப்	6	00
60.	,, III	அ. பாண்டுரங்கன்	7	25
61.	கிரேக்க நாட்டு வ்ரலாறு—I	சைமன் ஐ. எஸ். பாக்கியநாதன்	7	50
62.	,, II	,,	7	00
63.	,, III	பி. இராமாநுஜம் தேவதாஸ்	7	75
64.	ஆக்ஸ்ஃபோர்டின் வரலாறு—I	தி. வெ. குப்புசாமி	8	25
65.	,, II	ஏ. உஸ்மான் ஷெரீப்	7	50
66.	,, III	க. த. திருநாவுக்கரசு	10	50
67.	முகலாயப் பேரரசு—I	ஏ. உஸ்மான் ஷெரீப், எம். எக்ஸ். மிராண்டா	7	50
68.	,, II	எம். எக்ஸ். மிராண்டா, பா. மாணிக்கவேலு	7	75
69.	ஆங்கில அரசியலமைப்பின் வரலாறு—I	வை. விருத்தகிரீசன்	7	50
70.	,, II	வை. விருத்தகிரீசன், இரா. அண்ணுமலை	6	75

71.	,, III	...	இரா. அண்ணாமலை, பா. மாணிக்கவேலு	...	6 50
72.	,, IV	...	பா. மாணிக்கவேலு	...	7 00
73.	ஆங்கிலேயரின் சமுதாய வரலாறு—I	...	சி. ஈ. இராமச்சந்திரன்	...	6 50
74.	,, II	...	சி. ஈ. இராமச்சந்திரன், இர. ஆலாலசுந்தரம்	...	6 75
75.	,, III	...	ஆர். ஆலாலசுந்தரம்	...	6 50
76.	இந்தியாவில் முகலாயரின் ஆட்சி—I	...	பா. மாணிக்கவேலு	...	5 00
77.	,, II	...	ஏ. உஸ்மான் ஷெரீப்	...	6 00

அரசியல்

* 78.	அரசியல் அமைப்புகள்	...	ஜே. இராமச்சந்திரன்	...	4 62
* 79.	அரசாங்கத்தின் வரலாறு	...	மோ. கிளாரன்சு, டி. டி. பெலிக்சு	...	7 50
* 80.	இந்திய அரசியலமைப்பு	...	வீ. கண்ணையா	...	4 75
81.	அரசியலுக் கு ஓர் அறிமுகம்	...	டி. செல்லப்பா	...	8 50
82.	தற்கால அரசியல் அமைப்புகள்	...	மோ. வள்ளுவன் கிளாரன்ஸ்	...	8 50
83.	பன்னாட்டு அரசியல்—I	...	திருமதி நூர்ஜஹான் பாவா	...	16 00
84.	,, II	...	திருமதி நூர்ஜஹான் பாவா	...	13 25
85.	பொதுத்துறை ஆட்சி இயல்—I	...	வீ. கண்ணையா	...	9 00
86.	,, II	...	இ. ஜெகதீசன்	...	7 25
87.	பொதுத்துறை ஆட்சியியலுக்கு ஓர் அறிமுகம்—I	...	வீ. கண்ணையா	...	7 50
88.	,, II	...	டி. செல்லப்பா	...	7 50

* மூல நூல் (Original Book)

			ரூ.	பை.
அரசியல்—(தொடர்ச்சி)				
89.	இந்திய அரசியலமைப்புத் திட்டம்	தி. வெ. குப்புசாமி, எஸ். சுப்பிரமணியன்	9	25
90.	இந்திய ஆட்சி அமைப்புமுறை வளர்ச்சி—I	வீ. கண்ணையா	6	25
91.	,, II	வீ. கண்ணையா, கி. ர. அனுமந்தன்	5	75
92.	,, III	கி. ர. அனுமந்தன்	7	25
* 93.	மக்கள் ஆட்சி	க. சந்தானம்	4	25
94.	1919 முதல் சர்வதேச உறவுகளும் உலக அரசியலும்—I	என்.ஜே. இராஜகோபால்	7	75
95.	சமூக, அரசியல் கொள்கையின் அடிப்படைகள்	மோ. வள்ளுவன் கிளாரன்சு	7	00
96.	அரசியலமைப்புச் சட்ட ஆய்வுக்கு ஓர் அறிமுகம்—I	பா. சூரியநாராயணன்	5	75
97.	,, II	பா. சூரியநாராயணன், கி. ர. அனுமந்தன்	6	00
98.	,, III	கி. ர. அனுமந்தன்	5	75
உளவியல்				
99.	குழந்தை உளவியல்—I	கி. ர. அப்புள்ளாச்சாரி	8	00
100.	,, II	,,	7	00
101.	உட்கவர் மனம்	சி. ந. வைத்தீஸ்வரன்	7	00
102.	இளையோர் உளவியல்—I	தி. இரா. அரங்கராசன்	12	00
103.	,,	,,	9	00
104.	சமூக உளவியல்	என். வேதமணி மானுவேல்	9	25
105.	பிறழ்நிலை உளவியல்	அ. பெசன்ட் கிரீப்பர் ராஜ்	11	00

106.	பித்தரின் உள்ளம்	அ. பெசன்ட் கிரீப்பர் ராஜ்	3	00
*107.	குமர உள்ளம்	டாக்டர் மு. அறம்	6	25
*108.	உளநலவியல்	டாக்டர் தா. ஏ. சண்முகம்	6	00

தத்துவம்

109.	இந்து சமயத் தத்துவம்	ஞா. ராஜாபகதூர்	5	0
*110.	அறிவு ஆராய்ச்சி இயல்	ஆர். இராமானுஜாச்சாரி	3	50
*111.	மேலைநாட்டுத் தத்துவம்	ஆர். எஸ். தேசிகன்	3	50
112.	அத்துவித தத்துவம்	கோ. மோ. காந்தி	6	50
113.	ஆங்கிலேயப் பயன்வழிக் கொள்கையினர்	மோ. வள்ளுவன் கிளாரன்சு	5	50
114.	இந்தியத் தத்துவம்—I	வ. ஆ. தேவசேனபதி, ப. நா. ஷண்முகசுந்தரம்	3	50
115.	,, II	வ. ஆ. தேவசேனபதி, ப. நா. ஷண்முகசுந்தரம்	6	00
116.	மெய்ப்பொருளியல்-ஓர் அறிமுகம்—I	சி. இராமலிங்கம்	6	00

அறவியல்

117.	அறவியல்-ஓர்-அறிமுகம்	கோ. மோ. காந்தி	8	50

அளவையியல்

118.	அளவை இயல்—தொடக்க நூல்	கி. ர. அப்புள்ளாச்சாரி	2	50

மானிடவியல்

*119.	மானிடவியல்	ம. சு. கோபாலகிருஷ்ணன்	4	75

* மூல நூல் (Original Book)

			ரூ.	பை.
மானிடவியல் (தொடர்ச்சி)				
120.	பண்பாட்டுக் கோலங்கள்	கி. பூ. சுப்பிரமணியன்	5	50
121.	இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை	எஸ். இலட்சுமி	3	50
சமூகவியல்				
122.	சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்	ஜெ. நாராயணன்	10	50
புவியியல்				
*123.	ஆசியா—I	கொ. சேஷ. நரசிம்மன்	9	50
*124.	,, II	,,	8	75
*125.	ஐரோப்பாக் கண்டத்தின் புவியியல்	எ. எஸ். நாராயணன்	8	50
*126.	தென்கிழக்கு ஆசியா	ஜி. கிருஷ்ணமூர்த்தி	8	50
*126.	வட அமெரிக்கா	குமாரி இரா. அலமேலு	6	50
*128.	தென் அமெரிக்கா	எம். என். பத்மநாபன்	9	00
*129.	தென் கண்டங்கள்—ஆஸ்திரேலியா	திருமதி எச். நியூமன்	3	00
*130.	தென் கண்டங்கள்—ஆஃப்ரிக்கா	எஸ். முத்துக்கிருஷ்ணக் கரையாளர்	3	25
*131.	புவிப்புறவியல்—II	நா. அனந்தபத்மநாபன்	6	00
*132.	செய்முறைப் புவியியல்	சு. ஜெயச்சந்திரன்	5	50
*133.	மக்கட் பரப்பியல்	வி. எஸ். அனந்தபத்மனாபன்	4	75
*134.	சமுத்திரவியல்	கோ. இராமசாமி	6	50
135.	காலநிலை இயல்—I	கொ. சேஷ. நரசிம்மன்	10	00
136.	,, II	,,	5	00
*137.	காலநிலை இயல்—I	திருமதி இராதா	9	50
*138.	காலநிலை இயல்—II	,,	8	00

139.	வளியியலுக்கு ஓர் அறிமுகம்	கோ. இராமசாமி	5	50
*140.	புவி அமைப்பு இயல்	சி. விசுவநாதன்	4	75
புவியியல்				
141.	பௌதிகப் புவியியலும் புவியமைப்பியலும்	கோ. இராமசுவாமி	6	00
142.	சிஷோமின் வாணிகப் புவியியல்—I	எஸ். மாணிக்கம்	9	50
143.	,, II	ம. கார்த்திகேயன்	12	00
144.	,, III	கொ. சேஷ. நரசிம்மன்	5	75
புள்ளியியல்				
*145.	புள்ளியியல்—அறிமுகம்	சு. வைத்தியநாதன்	10	75
146.	புள்ளியியல் முறைகள்—I	கோ. சண்முகசுந்தரம்	10	00
147.	,, II	கே. ஆர். இராஜகோபாலன்	14	00
148.	நம்மைச் சுற்றியுள்ள பேரண்டம்	தி. வி. லட்சுமிநரசிம்மன்	6	50
உயர் கணிதம்				
*149.	ஆயத்தொலை வடிவகணிதம்	டி. கே. மாணிக்கவாசகம் பிள்ளை	4	25
*150.	வகை நுண்கணிதம்	டி. கே. மாணிக்கவாசகம் பிள்ளை	3	00
*151.	தொகை நுண்கணிதம்	தி. கோவிந்தராசன்	3	25
விலங்கியல்				
*162.	விலங்கியல்	பெ. மா. அண்ணாமலை, இரா. முருகேசன்	12	00
பௌதிகவியல்				
153.	ஒளி நூல்	ச. சம்பத்து	10	00
விஞ்ஞானம்				
*154.	வான்வெளி வெற்றி	டாக்டர் எம். ஏ. தங்கராஜ்	6	00

* மூல நூல் (Original Book)

விஞ்ஞானம் (தொடர்ச்சி)

எண்	நூல்	ஆசிரியர்	ரூ.	பை.
*155.	ரேடியோ	டாக்டர் பி. திருஞானசம்பந்தம்	4	75
*156.	எக்ஸ்-கதிர்கள்	பெ. நா. அப்புசாமி, ஜே. பி. மாணிக்கம்	4	50
*157.	பாம்புகள்	பெ. மா. அண்ணாமலை	3	50
*158.	தாவரம்-வாழ்வும் வரலாறும்—I	டாக்டர் கு. சீனிவாசன்	8	00
*159.	கரும்பு	டாக்டர் கு. பெரியசாமி	4	00
*160.	தாவரங்களின் வாழ்வியல்	எஸ். சுந்தரம்	6	50

மருத்துவம்

எண்	நூல்	ஆசிரியர்	ரூ.	பை.
*161.	நீரிழிவு—க்ஷயரோகம்	டாக்டர் ஜி. வேங்கடசாமி, டாக்டர் ஏ. கதிரேசன்	2	50
162.	மகப்பேறும் மாதர்நோயும்	டாக்டர் (குமாரி) ந. மணிமேகலை	8	25
*163.	பாக்டீரியா	சு. சுந்தரம்	2	50
164.	புற்றுநோய்	அ. கதிரேசன்	3	50
165.	உடலியங்கியல்—I	டாக்டர்கள் ஜி. வேங்கடசாமி, டி. சரோஜினி, எஸ். கே. துரைராஜ், ஆர். சேது	6	75
166.	உடலியங்கியல்—II	டாக்டர்கள் ஜி. வேங்கடசாமி, டி. சரோஜினி, எஸ். கே. துரைராஜ், ஆர். சேது	5	50
167.	என்புருக்கி நோய்	டாக்டர் அ. கதிரேசன்	7	25

பொறியியல்

எண்	நூல்	ஆசிரியர்	ரூ.	பை.
168.	நீங்களே உங்கள் வீட்டைக் கட்டலாம்	கே. வி. கிருஷ்ணராஜ், சி. ஆர். சுப்பிரமணியம், கே. வேணுகோபால், ஆர். இராமசுவாமி	8	50

கூட்டுறவு				
169.	உலகக் கூட்டுறவு இயக்கம்	அ. வேல்மணி	5	50
சட்டம்				
*170.	குற்றவியல் சட்டம்	மா. சண்முகசுப்பிரமணியம்	10	00
பொது நூல்கள்				
171.	மகாத்மா காந்தி	சரஸ்வதி தங்கையன்	3	25
172.	விவசாயப் புரட்சி	வி. கார்த்திகேயன்	8	00
173.	சேமக் கை-நூல்	ஆ. சுப்பிரமணியன்	2	50
*174.	முற்காலச் சோழர் கலையும் சிற்பமும்	எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்	9	00
*175.	உணவும் ஊட்டமும்	தி. வேங்கடகிருஷ்ண அய்யங்கார்	4	50
*176.	பள்ளி நிருவாக அமைப்பு—அடிப்படைக் கருத்துகள்	எஸ். சந்தானம், எஸ். ஏ. துரைசிங்	6	25
புகுமுக (P.U.C.) வகுப்புகளுக்குரியவை				
*177.	உலக வரலாறு	டி. ஆர். இராமச்சந்திரன்	4	00
*178.	பொருளாதாரம்	ஜி. சிதம்பரம்	2	75
*179.	வணிகவியலுக்கு ஓர் அறிமுகம்—I	கு. ஆளுடையபிள்ளை	2	50
*180.	,, II	,,	2	25
*181.	பௌதிகம்	டாக்டர் பி. திருஞானசம்பந்தம், ஆர். நாகராஜன்	6	00
*182.	புகுமுக பௌதிகம்	டாக்டர் எம். ஏ. தங்கராஜ்	5	75
*183.	பௌதிகம்—ஓர் அறிமுகம்	எஸ். சம்பத்	7	00
*184.	புகுமுக வகுப்புக் கணிதம்—I	கே. இராஜகோபாலன்	7	00
*185.	,, II	,,	3	00

* மூல நூல் (Original Book)

புகுமுக (P.U.C.) வகுப்புகளுக்குரியவை — (தொடர்ச்சி)

			ரூ.	பை.
*186.	புகுமுக வகுப்புக் கணித நூல்—I	டி. கோவிந்தராஜன், முத்துசாமி	7	00
*287.	,, II	,,	4	50
*188.	கணிதம்—ஓர் அறிமுகம்—I	ஆர். மகாதேவன்	3	25
*189.	,, II	,,		
*190.	வேதியியல்	பி. டி. முனியப்பா, ஆர். முத்துலட்சுமி	7	00
*191.	புகுமுக வேதியியல்	சி. ஏ. பத்மநாபன்	5	50
*192.	விலங்கியல்	எஸ். ஆப்ரகாம்	4	00
*193.	புகுமுக விலங்கியல்	பெ. மா. அண்ணுமலை	7	25
*194.	புகுமுக வகுப்புத் தாவரவியல்	எஸ். சுந்தரம்	4	00

பட்டப்படிப்பிற்குரிய (பி. எஸ்ஸி.) நூல்கள்

(அடக்கவிலைப் பதிப்புகள் — கழிவு இல்லை)

பௌதிகம்

			ரூ.	பை.
*195.	எந்திரவியல்—சிறப்புப் பாடம்—I	ஆர். நாகராசன்	6	25
*196.	,, II	,,	5	50
*197.	வெப்பவியல்—சிறப்புப் பாடம்	கே. நாச்சிமுத்து	5	25
*198.	செய்முறை பௌதிகம்—சிறப்புப் பாடம்—I	டி. கமலக்கண்ணன், ஆர். கிருட்டிணசாமி	4	50
*199.	,, II	,,	3	25
*200.	பௌதிகம்—துணைப் பாடம்—I	பி. தங்கராஜன்	4	00
*201.	,, II	,,	3	00
*202.	செய்முறை பௌதிகம்—துணைப் பாடம்	கே. பாசுகரன், இரா. செயராம்	4	50

*203.	மின்னியல்-காந்தவியல்—சிறப்புப்பாடம்—I ...	டி. ஏ. கருப்பண்ணன் ...	4	75
*204.	,, II ...	,, ...	4	50
*205.	,, III ...	,, ...	4	25
*206	ஒளியியல்—சிறப்புப் பாடம் ...	டாக்டர் வி. சண்முகசுந்தரம், டாக்டர் ஆர். சபேசன் ...	7	75
*207.	பௌதிகம்—துணைப் பாடம் (பகுதி II) (முதல் புத்தகம்) ...	கா. வே. சுப்பிரமணியன் ...	6	00
*208.	பௌதிகம்—துணைப் பாடம் (பகுதி II) (இரண்டாம் புத்தகம்) ...	,, ...	4	50
*209.	பொது பௌதிகம்—சிறப்புப் பாடம் ...	கே. பி. கந்தசாமி, எம். தியாகசுந்தரம் ...	4	50
*210.	இன்றைய பௌதிகம்—சிறப்புப் பாடம் ...	எம். ஏ. தங்கராஜ் ...	6	75
*211.	ஒலி நூல்—சிறப்புப்பாடம் ...	டி. முருகையன் ...	5	00
வேதியியல்				
*212.	செய்முறைக் கனிமவேதியியல்-துணைப்பாடம் ...	டாக்டர் என். முத்துக்குமாரசுவாமி ...	2	00
*213.	செய்முறைக் கனிம வேதியியல்—சிறப்புப் பாடம் ...	டி. இராமலிங்கம் ...	2	25
*214.	பௌதிக வேதியியல்—சிறப்புப் பாடம்—I ..	டி. சக்திவேலு ...	4	00
*215.	பௌதிக வேதியியல்—சிறப்புப் பாடம்—II ...	,, ...	3	50
*216.	கனிம வேதியியல்—துணைப் பாடம் ...	சி. ஏ. பத்மநாபன் ...	6	50
*217.	கனிம வேதியியல்—சிறப்புப் பாடம்—I ...	பி. டி. முனியப்பா ...	4	00
*218.	,, II ...	,, ...	4	25
*219.	பொது பௌதிக வேதியியல்—துணைப் பாடம் ...	ஆர். துளசிதாஸ் ...	4	75
*220.	அறிமுறை வேதியியல்—சிறப்புப் பாடம்—I ...	ஓ. ஆர். சூரியநாராயணன் ...	4	50

* மூல நூல் (Original Book)

வேதியியல்—(தொடர்ச்சி)

			ரூ.	பை.
*221.	அறிமுறை வேதியியல்—சிறப்புப் பாடம்—II...	ஓ. ஆர். சூரியநாராயணன்	3	75
*222	செய்முறைக் கரிம வேதியியல்-சிறப்புப்பாடம்...	என். ஆறுமுகம்	3	50
*223.	அங்கக வேதியியல்—துணைப் பாடம் ...	பி. எல். இராமசாமி	5	00
*224.	அங்கக வேதியியல்—I ...	எம். ஆட்கொண்டான்	3	00
*225.	கரிம வேதியியல்—பகுதி—I (இரண்டாம் புத்தகம்) ...	கி. கண்ணபிரான்	4	75
*226.	கரிம வேதியியல்-பகுதி-I (மூன்றும் புத்தகம்)...	,,	3	75
*227.	,, II (முதல் புத்தகம்) ...	,,	5	75
*228.	,, II (இரண்டாம் புத்தகம்) ...	,,	6	00

கணிதம்

*229.	இயற்கணிதம்—சிறப்புப் பாடம்—I ...	டி. கோவிந்தராஜன்; கே. முத்துசாமி	4	75
*230.	,, II ...	,,	3	25
*231.	தொகுமுறை வரைகணிதம்—சிறப்புப்பாடம்...	ஆர். மகாதேவன்	2	00
*232.	எண்சார் கணிதம்—சிறப்புப் பாடம் ...	எம். எம். இராமசாமி	5	50
*233.	திரிகோண கணிதம்—சிறப்புப் பாடம் ...	வி. அரங்கநாதன்	3	25
*234.	கணிதம்—துணைப் பாடம் ...	ஆர். அனுமந்தராவ்	6	00
*235.	நிலையியல்—சிறப்புப் பாடம் ...	கே. இராஜகோபாலன்	5	00
*236.	முப்பரிமாணப் பகுமுறை வடிவ கணிதம்—சிறப்புப் பாடம் ...	கே. சிவசுப்ரமணியன்	2	75
*237.	வெக்டர் கணிதமும் அதன் பயன்பாடுகளும்-சிறப்புப் பாடம் ...	ஆர். மகாதேவன்	2	00
*238.	கணிதம்—துணைப் பாடம்—பகுதி-2 ...	ஆர். அய்யாசாமி	5	75

*239.	வானியல்—சிறப்புப் பாடம்—(முதல்புத்தகம்)...	தி. கோவிந்தராசன், கோ. முத்துசாமி...	5	50
*240.	,, (2–ம் புத்தகம்)...	,, ...	3	75
*241.	இயக்கவியல்—சிறப்புப் பாடம்	ஆர். மகாதேவன், கே. சிவசுப்பிரமணியம், பி. ஆர். சுப்பிரமணியம் ...	7	00

புள்ளியியல்

*242.	புள்ளியியல்—துணைப் பாடம் ...	எஸ். கருப்பையா ...	3	50

விலங்கியல்

*243.	முதுகெலும்பற்றவை-1—சிறப்புப் பாடம் ...	ஆர். முருகேசன் ...	6	00
*244.	,, 2—சிறப்புப் பாடம் ...	திருமதி எஸ். கே. வள்ளி ...	6	00
*245.	முதுகுநாணுள்ளவை-1—சிறப்புப் பாடம் ...	திருமதி ராணி கந்தசாமி ...	5	00
*246.	,, 2—சிறப்புப் பாடம் ...	,, ...	9	75
*247.	முதுகுத் தண்டுள்ளவை-2—சிறப்புப் பாடம் ...	திருமதி கிருஷ்ணவேணி நாராயணன் ...	11	75
*248.	முதுகெலும்பிகளது கருவியல்-சிறப்புப்பாடம்...	எஸ். ஆப்ரகாம் ...	9	00
*249.	முதுகெலும்பற்றவை—துணைப் பாடம் ...	என். இராமலிங்கம் ...	9	00
*250.	முதுகு நாணுள்ளவை—துணைப் பாடம் ...	வி. சேது ...	6	00
*251.	செல்லியல்—சிறப்புப் பாடம் ...	என். இராமலிங்கம் ...	5	50
*252.	மரபியல்—சிறப்புப் பாடம் ...	பெ. மா. அண்ணாமலை ...	5	25
*253.	சூழ்நிலையியல்-உடற் செயலியல்-சிறப்புப் பாடம்—I ...	டி. ஆர். கிருஷ்ணன் ...	4	75
*254.	சூழ்நிலையியல்—உடற் செயலியல்—சிறப்புப் பாடம்—II ...	டி. ஆர். கிருஷ்ணன் ...	6	50
*255.	பரிணமம் ...	எஸ். ஆப்ரகாம் ...	6	25

தாவரவியல்

*256.	தாவர வெளி, உள்ளமைப்பியல்களும் வகைப்பாட்டியலும்—சிறப்புப் பாடம் ...	கே. இராஜசேகரன் ...	11	00

* மூல நூல் (Original Book)

தாவரவியல்—(தொடர்ச்சி)

			ரூ.	பை.
*257.	தாவரப் புற அமைப்பியல்—சிறப்புப் பாடம் ...	கே. பாலச்சந்திரகணேசன் ...	9	25
*258.	தாவர உள்ளமைப்பியல்—சிறப்புப் பாடம் ...	டாக்டர் ஏ. கோவிந்தராஜுலு ...	7	25
*259.	தாவரங்களின் வாழ்க்கை—சிறப்புப் பாடம் ...	எஸ். சுந்தரம் ...	9	50
*260.	தாவரவியல்—துணைப் பாடம் ...	பா. இராசாராம் ...	4	50
*261.	தாவரச் சூழ்நிலையியல், மரபியல், உயிர்மரூஉ இயல், இயங்கியல்—துணைப் பாடம் ...	கே. பெரியசாமி ...	4	00
*262.	சூழ்நிலையியல், பரிணாமம், மரபியல்—சிறப்புப் பாடம் ...	கே. ஆர். பாலச்சந்திரகணேசன் ...	8	25
*263.	டெரிடோஃபைட்டா, ஜிம்னோஸ்பெர்மே—சிறப்புப் பாடம் ...	கே. இராஜசேகரன் ...	10	25
*264.	தாலோஃபைட்டா (பாசிகளும் பூஞ்சைகளும்)—சிறப்புப் பாடம் ...	டாக்டர் வே. சோ. சுந்தரலிங்கம் ...	9	00
*265.	தாவர வகைப்பாட்டியல்—சிறப்புப் பாடம் ...	ஆ. சம்பத்குமார் ...	10	50
*266.	பிரையோஃபைட்டா—சிறப்புப் பாடம் ...	கே. இராஜசேகரன் ...	6	00

* மூல நூல் Original Book)